ISBN 978-93-343-7954-9
9 789334 379549
E-ISSN : 2584-1238

பல்துறைசார் நவீன ஆய்வுகள்
E-ISSN : 2584-1238
அக்டோபர் - 2025

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
(மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, ஆற்றல்சால் கல்லூரி,
தேசியத் தர நிர்ணயக் குழுவின் மறுமதிப்பீட்டில் 'A+' தரம் பெற்றது.
யுஜிசி பரமார்ஷ் திட்டத்தின் கீழ் வழிகாட்டும் நிறுவனமாகத் தகுதி பெற்றது)
சிவகாசி — 626 123. விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா

முத்தரசி-கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,
மதுரை - 625016, தமிழ்நாடு, இந்தியா

SPECIAL EDITION: VI VOLUME - I

பல்துறைசார் நவீன ஆய்வுகள்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப.மீனாட்சி,
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி

முனைவர் நா.கவிதா,
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி

கருத்தரங்க ஆலோசகர்கள்

முனைவர் பா.பொன்னி
துறைத்தலைவர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி

முனைவர் செ. ஞானேஸ்வரன்,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம்,
பல்கலைக்கழகக் கல்லூரி, பாளையம்,
திருவனந்தபுரம்

அக்டோபர் - 2025

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

(மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது, ஆற்றல்சால் கல்லூரி,

தேசியத் தர நிர்ணயக்குழுவின் மறுமதிப்பீட்டில் 'A+' தரம் பெற்றது.

யுஜிசி பரமார்ஷ் திட்டத்தின் கீழ் வழிகாட்டும் நிறுவனமாகத் தகுதி பெற்றது)

சிவகாசி – 626 123, விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா

&

முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,

மதுரை-625016, தமிழ்நாடு, இந்தியா

SPECIAL EDITION: VI VOLUME - I

பல்துறைசார் நவீன ஆய்வுகள்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

<u>பதிப்பாசிரியர்கள்</u>

முனைவர் ப.மீனாட்சி

உதவிப்பேராசிரியர்,

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்

மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

முனைவர் நா.கவிதா

உதவிப்பேராசிரியர்,

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்

மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

<u>கருத்தரங்க ஆலோசகர்கள்</u>

முனைவர் பா. பொன்னி

துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர்,

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்

மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

முனைவர் செ.ஞானேஸ்வரன்

உதவிப்பேராசிரியர்,

தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம்,

பல்கலைக்கழகக் கல்லூரி, பாளையம்.

திருவனந்தபுரம்.

அக்டோபர் - 2025

பதிப்புக்குழு

- முனைவர் மா.பத்மபிரியா - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் ர.விஜயப்ரியா - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் ச.தனலெட்சுமி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் கு.வளர்மதி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் வி.அன்னபாக்கியம் - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் இரா.செண்பகவள்ளி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் வீ.முத்துலட்சுமி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் மா.முத்துச்செல்வி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் பெ.ஆனந்தி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி மு.பூங்கோதை - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் சி.தேவி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் கு.செல்வ ஈஸ்வரி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் ச.மீனாட்சி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி இர.கிருஷ்ணவேணி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி வீ.வெள்ளைத்துரைச்சி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி மா.முத்துகாயத்ரி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி செ.வித்யா - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	பல்துறைசார் நவீன ஆய்வுகள் (பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)
முதற்பதிப்பு	:	அக்டோபர், 2025
பதிப்புரிமை & வெளியீடு	:	தங்கமாரி சுடலை, 12/6, மேலப்பொன்னகரம் 8 வது தெரு, 4வது குறுக்கு, ஆரப்பாளையம், மதுரை – 625016.
மின்னஞ்சல் முகவரி	:	laks@muththarasi.org
வலைதளம்	:	https://muththarasi.org/
ISBN No	:	978-93-343-7954-9
E.ISSN No	:	2584 – 1238
புத்தக அளவு	:	A4
பக்கங்கள்	:	257
விலை	:	400/-
அச்சிட்டோர்	:	லேசர் பாயிண்ட், வசந்த நகர் முதன்மைச் சாலை, மதுரை – 625003

<u>பதிப்புரை</u>

கரிசல் பூமியில் பெண் கல்விக்காக 1968-ஆம் ஆண்டு தோன்றிய, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, நிறுவனத் தலைவர் திருமதி.திலகவதி இரவீந்திரன் அவர்கள், கல்லூரிச் செயலர் திருமதி.அருணா அசோக் அவர்கள், முதல்வர் டாக்டர்.இரா. சுதா பெரியதாய் அவர்கள் ஆகியோரின் வழித் துணையோடு மிளிர்கின்றது. எம் கல்லூரியானது பல்துறை ஆய்வுக்கு வழிகாட்டும் உயராய்வு மையங்களுடன் ஆய்வுத் தளத்தில் உலக தரத்தைப் பெற்றுப் பல பன்னாட்டுக் கருத்தரங்குகளையும் நிகழ்த்தி வருகின்றது. இத்தகு சீர்மிகு ஆய்வுத் தடத்தின் தொடர்ச்சியாக எம் கல்லூரியின் முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறையும் முத்தரசி இணைய இதழும் இணைந்து நடத்துகின்ற '**பல்துறை சார் நவீன ஆய்வுகள்**' என்னும் தலைப்பிலான ஒரு நாள் பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கு தமிழ் கூறும் நல்லுலகில் வெற்றித்தடம்பதிக்கும் மணி மகுடம்.

"விருந்தேதானும் புதுவது கிளந்தயாப்பின் மேற்றே" என்னும் தொல்காப்பியர் கூற்று திறனாய்வுலகிற்கு ஏற்புடையது. "பல்துறை சார் நவீன ஆய்வுகள்" என்ற ஆய்வுத் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள படைப்புகள், காலத்தின் தேவைக்கு ஏற்ப பரிணமித்தது போன்ற ஆய்வுத் தடங்களுடன் பலவாக விரிவடைந்துள்ளன. சமூக அறிவியல், இயற்பியல், உயிரியல், தகவல் தொழில்நுட்பம், மேலாண்மை, சுற்றுச்சூழல், வணிகவியல் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் இடம் பெற்றுள்ள நவீன ஆய்வுகளை ஒருங்கிணைத்து ஆய்வாளர்களுக்குப் புதிய பார்வையையும், பரந்த சிந்தனையையும் அளிப்பதாக இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் அமைகிறது.

‘ஆய்வாளர்களின் அறிவை ஒரு துறையில் மட்டுப்படுத்தாமல், பலதுறைகளிலும் செயல்படுவதன் வழி தான் உண்மையான முன்னேற்றம் ஏற்படும்’ என்ற கருத்தை இந்த ஆய்வுத் தொகுப்பு நூல் முன்னிறுத்துகிறது. பல்துறை சார்ந்த ஆய்வுக்கட்டுரையாளர்களின் ஆழ்ந்த ஆராய்ச்சிதிறன், தெளிவான வெளிப்பாடு, மற்றும் புதுமையான அணுகுமுறை இந்நூலின் தனித்துவம்.

நவீன ஆராய்ச்சித் துறைகளில் ஆர்வமுள்ள மாணவர்கள், ஆய்வாளர்கள், மற்றும் கல்வியாளர்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய நூலாக இந்நூல் அமைகிறது. மேலும் எதிர்கால ஆராய்ச்சிக்கான திசைகளை சுட்டிக்காட்டும் வழி காட்டி நூலாகவும் விளங்குகிறது.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கப் பணியினை எமக்கு வழங்கிய எம் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் கல்லூரி முதல்வர் டாக்டர்.இரா. சுதா பெரியதாய் அவர்களுக்கும் முத்தரசி கலை இலக்கிய பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழுக்கும் ஆய்வுக் கட்டுரைகளைச் சேகரிக்க உறுதுணையாகத் திகழ்ந்த முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறையின் பேராசிரியர்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகளோடு இந்நூலை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

சிவகாசி,

08.10.2025

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர். ப.மீனாட்சி

முனைவர்நா.கவிதா

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்

மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

THE STANDARD FIREWORKS RAJARATNAM COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)

(Affiliated to Madurai Kamaraj University, Re-accredited with 'A+' GRADE by NAAC,
College with Potential for Excellence by UGC and Mentor Institution under UGC PARAMARSH)

SIVAKASI - 626 123

Mrs. A.Aruna, B.Sc.,
Secretary

Dr.(Mrs.)R. Sudha Periathai, M.Sc.,M.Phil.,Ph.D.
Principal

10.10.2025

வாழ்த்துரை

'தீபம் எரிகின்றது
ஜோதி தெரிகின்றது
காலம் மலர்கின்றது
கனவு பலிக்கின்றது"

காலம் ஒருநாள் மாறும் என்று நம்மை வாழ்வில் நம்பிக்கை கொள்ள வைத்த கவிஞர் கண்ணதாசனின் கவிதை வரிகள் இவை. உலகின் மூத்த மொழியாகவும், இலக்கிய வளமிக்க மொழியாகவும், நம் உயிர் மூச்சாகவும் திகழும் நம் தமிழ் அணங்கிற்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக "பல்துறைசார் நவீன ஆய்வுகள்" என்ற தலைப்பில் நடைபெறும் பன்னாட்டுக் கருத்தரங்கில் நூற்றுக்கும் மேலான பூமாலைகள் கட்டுரைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

'கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்' என்ற கட்டளைக்கு ஏற்ப நடைபெறும் இந்த பன்னாட்டுக் கருத்தரங்கில் பல துறை சார்ந்த நவீன ஆய்வுகள் குறித்து எடுத்துரைக்கப்பட உள்ளன. உலகத்தின் எல்லா மூலைகளிலும் உள்ள அனைவரையும் இணைக்கும் பட்டு நூலாகத் திகழும் தமிழ் மொழியை இப்பன்னாட்டு கருத்தரங்கு மேலும் பலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இந்நிகழ்வு சீருடனும் சிறப்புடனும் நடைபெற வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இக்கருத்தரங்கு நடைபெற அனுமதி அளித்து ஆதரவளித்த எம் கல்லூரி நிர்வாகத்தினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இப் பன்னாட்டுக் கருத்தரங்கினை நேர்த்தியாக ஒருங்கிணைத்த கருத்தரங்க ஆலோசகர், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பு குழுவினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளை உரித்தாக்குகின்றேன். இக்கருத்தரங்கில் பங்கு பெற்று சிறப்புரை ஆற்ற இருக்கும் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் கட்டுரை நல்கிய தமிழ் ஆர்வலர்கள், ஆசிரியப் பெருமக்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இரா. சுதா பெரியதாய்

வாழ்த்துக்களுடன்
முதல்வர்
தி ஸ்டாண்டர்டு பயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,
சிவகாசி

Phone : 04562 - 220389
Fax : 04562 - 226695
E-Mail : sfrc@sfrcollege.edu.in
Website : www.sfrcollege.edu.in

இதழ் ஆசிரியர்குழு

முனைவர் சு.தங்கமாரி, முதன்மை ஆசிரியர், முத்தரசி ஆய்விதழ், மதுரை, தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் : laks@muththarasi.org கைப்பேசி: (+91)98941 02130	**Dr.S.THANGAMARI,** Editor-in-Chief, Muththarasi journal, Madurai, tamilnadu, india. E-Mail: laks@muththarasi.org Mobile : (+91)98941 02130
முனைவர் கா.ஸ்ரீதர், தலைவர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதி), வி.இ. நா. செந்திக்குமார நாடார் கல்லூரி, விருதுநகர்,தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் : sridhar@vhnsnc.edu.in கைப்பேசி: (+91) 94434 49595	**Dr K. SRIDHAR,** Head & Asst. Professor of Tamil (SF), V.H.N.Senthikumara Nadar college, Virudhunagar, Tamil Nadu, India. E-Mail: sridhar@vhnsnc.edu.in Mobile : (+91) 94434 49595
ADVISORY EDITORIAL BOARD	
முனைவர் பாரதி சங்கர ராஜுலு, விரிவுரையாளர், தமிழ் & தெலுங்கு, கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்கிலி, அமெரிக்கா மின்னஞ்சல் : bharathy57@gmail.com கைப்பேசி : 650-430-2473	**Dr.Bharathy Sankara Rajulu** Lecturer – Tamil & Telugu University of California, Berkeley. USA. E.Mail : bharathy57@gmail.com Mobile : 650-430-2473
முனைவர் சீதாலட்சுமி, இணைப்பேராசிரியர், ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள் தேசியக் கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், 1,நன்யாங் வாக், சிங்கப்பூர்.637616 மின்னஞ்சல் : seetha.lakshmi@nie.edu.sg கைப்பேசி : +65 9451 0735	**Dr.SEETHA LAKSHMI,** Associate Professor, Asian languages and cultures, National institute of education, Nanyang technological university, 1, nanyang walk, Singapore.637616 E-Mail: seetha.lakshmi@nie.edu.sg
பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன், தலைவர், தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை. கைப்பேசி : +94 77 305 3241 மின்னஞ்சல் : spirashanthan01@gmail.com	**Prof. Sri.PIRASAANTHAN,** HOD, Dept.of. Tamil, University of Peradeniya Peradeniya. 20400 Sri Lanka Cell : +94 77 305 3241 E.Mail : spirashanthan01@gmail.com
முனைவர் பா.பொன்னி, இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி,தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் : ponni-tam@ sfrcollege.edu.in கைப்பேசி : (+91)9787800804	**Dr.B.PONNI** Associate professor and Head PG and Research Department of Tamil The Standard Fireworks Rajaratnam College for women (Autonomous) Sivakasi, Tamilnadu, India. E.Mail : ponni-tam@sfrcollege.edu.in Mobile : (+91)9787800804
முனைவர் ரா. ராஜராஜன் உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை பிஷப் ஹீபர் கல்லூரி திருச்சிராப்பள்ளி – 620 017 தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் – thanivairams@gmail.com கைப்பேசி : (+91) 94427 40363	**Dr. R. RAJARAJAN** Assistant Professor in Tamil Bishop Heber College Tiruchirappalli – 620 017, Tamilnadu, India. E.mail : thanivairams@gmail.com Mobile : (+91) 94427 40363
முனைவர் மு.செந்தில்குமார், உதவிப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-625001, தமிழ்நாடு,இந்தியா. மின்னஞ்சல் : mpputhiyavan@gmail.com கைப்பேசி: +91 99420 80277	**Dr.M.SENTHILKUMAR,** Asst. Professor, Senthamil College, Madurai- 625001, Tamilnadu, India. *மின்னஞ்சல்* : mpputhiyavan@gmail.com *கைபேசி: +91 99420 80277*

சந்திரகௌரி சிவபாலன்(கௌசி), வயோதிபர் பராமரிப்பு ஃபெல்ட்ர்ஸ்ர் – 56, சொலிங்கன்,, ஜெர்மனி. மின்னஞ்சல்: c.gowry@yahoo.de கைப்பேசி : +49 1520 9419269	**CHANDRA KOWRI SIVABALAN(KOWSI),** Alttags Betreuung Felderstr – 56 Solingen Germany E.Mail : c.gowry@yahoo.de Mobile : +49 1520 9419269
REVIEW MEMBERS	
முனைவர் செ.ஞானேஸ்வரன் உதவிப் பேராசிரியர் முதுகலைத்தமிழ்த்துறை அரசுக் கல்லூரி மூணாறு – 685612 கேரளா மாநிலம், இந்தியா. மின்னஞ்சல் : gnaneswaran11@gmail.com கைப்பேசி:9943814293	**Dr.GNANESWARAN.S** Assistant Professor PG Department of Tamil Government College Munnar-685612 Kerala State, India. E.mail : gnaneswaran11@gmail.com Mobile-9943814293
முனைவர் ஜ. ஜான்சிராணி, ஆய்வு வளமையர், உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை, மருத்துவர் தங்கராசு சாலை, சட்டக் கல்லூரி அருகில், மதுரை – 625020 தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் : jansiraniwts1981@gmail.com கைப்பேசி: +91 81100 16911	**Dr. J. JANSIRANI,** Resource Person, World Tamil Sangam Madurai, Dr. Thangaraj Road, Near by Law College, Madurai – 625020, Tamilnadu, India E.Mail : jansiraniwts1981@gmail.com Mobile : +91 81100 16911
CONSULTANT	
திருமதி ஆ.இலட்சுமி, இதழ் ஆலோசகர், முத்தரசி ஆய்விதழ், மதுரை, தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் : gandhilakshmi361@gmail.com கைப்பேசி: (+91)9789186545	**Mrs. A.LAKSHMI,** Consultant, Muththarasi Journal, Madurai, Tamilnadu, India. E-mail: gandhilakshmi361@gmail.com Mobile : (+91)9789186545

பொருளடக்கம்

கட்டுரை எண்	தலைப்பு மற்றும் ஆசிரியர் பெயர்	பக்க எண்
1.	பண்பாட்டு மானிடவியல் நோக்கில் முல்லைக்கலி A Cultural Anthropological Analysis of Mullai Kalai இ.செந்தில்	1
2.	கணவனை இழந்த பெண்களின் உளவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் ஓர் ஆய்வு சயந்தினி.ஆ	7
3.	இராவணகாவியத்தில் வணிகம் ஆ.ஹரிதாபேபி, முனைவர் ச.தனலெட்சுமி	12
4.	வில்லிசை வேந்தர் வாழ்வும் வில்லிசைப் பணியும் க.மணிகண்டன், முனைவர் பா.பொன்னுராஜன்	16
5.	புழங்குபொருட் பண்பாட்டு நிலையில் மூங்கில் முனைவர் பா.பொன்னி	20
6.	"சைவ சித்தாந்த தத்துவங்களும் கோவில் சிற்ப கலையில் அவை கொண்டுள்ள பங்களிப்புகளும்" - ஓர் பார்வை ப.பிரபு, முனைவர் சா.லதா	25
7.	சிற்றிலக்கியங்களில் விலங்குகள் குறித்த பதிவுகள் சா.ஜான் பீட்டர்	30
8.	சித்தர் பாடல்களில் வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும் திருமதி இரா .இந்திரா, திரு ஆ கோவிந்தசாமி	34
9.	அஞ்ஞாடி நாவலில் பண்பாட்டு மானுடவியல் அர .எழிலரசி	40
10.	அழகிய பெரியவனின் யாம் சில அரிசி வேண்டினோம் நாவல் காட்டும் தலித் வாழ்வியல் செல்வி க.லாவண்யா	45
11.	செய்யறிவும் சாட் ஜிபிடி யின் மேம்பாடுகளும் ச .தமீம் அன்சாரி	51
12.	கவிஞர் இரா.காமராசு கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள் நீ.சுமதி	55
13.	திணைமாலை நூற்றைம்பதில் வாள் என்னும் உரிச்சொல் மு.விஜயலட்சுமி	60
14.	விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகளில் வணிகச் செய்திகள் ர.நாகலட்சுமி, முனைவர் ந.அருள்மொழி	66
15.	மெல்ல மலரும் மாணவச் செல்வங்கள் - ஒரு பார்வை திருமதி.அ.கேத்தரின், முனைவர் எம்.சம்பத்குமார்	70

கட்டுரை எண்	தலைப்பு மற்றும் ஆசிரியர் பெயர்	பக்க எண்
16.	காகித வடிவ அகராதிக்கும் மின் அகராதிக்கும் உள்ள ஓர் ஒப்பீட்டு ஆராய்ச்சிக் கட்டுரை Prof.Thalinjan Murugaiya	75
17.	சிலம்பு காட்டும் வரிப்பாட்டும் குரவைக் கூத்தும் முனைவர் க.பிரீதா	80
18.	திருப்பூவணநாதர் நாதர் உலாவில் தீர்த்தங்களின் சிறப்புகள் முனைவர் கா.சந்தானலெட்சுமி	85
19.	சங்கப்பாடல்களின் வழி வேளாண்மை வளர்ச்சிப் படிநிலைகள் முனைவர் கு. செல்வாஃஸ்வரி	89
20.	'சூல்' நாவல் புலப்படுத்தும் வேளாண்குடிமக்களின் வாழ்வியல் அறம் முனைவர் கோ.பாலமுருகன்	95
21.	ஆனைமலை நாவல் காட்டும் பழங்குடிச் சமூகமும் அதிகார மீறல்களும் - மானிடவியல் நோக்கு முனைவர் செ.ஞானேஸ்வரன்	100
22.	கவிஞர் சுகிர்தராணியின் படைப்புகளில் சமூக நீதியும் - பெண்ணடிமை விலங்கு உடைப்புகளும் முனைவர் ப.தேவராஜ்	107
23.	பண்டைத் தமிழரின் மண்வளத்தைப் பண்படுத்தும் வேளாண் தொழில்நுட்பக் காரணிகள் முனைவர் பி.பன்னீர்செல்வம்	117
24.	வரலாற்று நோக்கில் வ. வே. சு ஐயரின் சிறுகதை முனைவர் ரா. நாகேந்திரன்	130
25.	அகவொழுக்கத்தில் தோள்கள் முனைவர் இரா.சந்திரசேகர்	135
26.	செம்மூதாய் சதாசிவத்தின் புதினங்களில் பெண்ணியச்சிந்தனை திருமதி செ.பிரியதர்ஷினி, முனைவர் பா.பொன்னி	140
27.	கம்பராமாயணத்தில் தொல்காப்பிய உரிச்சொற்களுள் மெய்ப்பாட்டுகள் திருமதி. N.P.விமலானந்தி, முனைவர்.செ.ரெஜினா	144
28.	‘பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்…’ ந. தட்சணாமூர்த்தி	152
29.	விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் - ‘அழுக்கு’ புதினத்தை முன்வைத்து த. இரமேஷ், முனைவர் பா. தமிழரசி	161
30.	சங்க இலக்கியத் தொழில்முறையில் நெசவுப்பயன்பாடு க.கவிதா	170

கட்டுரை எண்	தலைப்பு மற்றும் ஆசிரியர் பெயர்	பக்க எண்
31.	கே.எஸ். மணியம் சிறுகதைகளில் புலம் பெயர்ந்த தமிழர்களின் அவலங்கள் - ஓர் வரலாற்றியல் ஆய்வு ஞா.விஜயலட்சுமி, முனைவர் பா.தமிழரசி	175
32.	ஹேலோகிராமின் பல்துறைசார் பயன்பாடுகள் திருமதி பா. மோகனப்பிரியா, முனைவர் வி. அன்னபாக்கியம்	180
33.	மகாபாரத மறுவாசிப்பில் உபபாண்டவம் சிவசங்கரி.வி	184
34.	சக்தி ஜோதியின் கவிதைத் தொகுப்புகளில் சூழலியற் பெண்ணியக் கோட்பாடு வெ.வளர்மதி, முனைவர் ச. தனலட்சுமி	190
35.	ஆண்டாள் பிரியதர்ஷினியின் “தகனம்” காட்டும் பெண் சமூகம் திருமதி.மோ.பத்மப்பிரியா	197
36.	உளவியல் பார்வையில் நா. முத்துக்குமார் கவிதைகள் முனைவர் அ. நஸ்ரின்	202
37.	வைரமுத்துவின் தண்ணீர்தேசம் நாவலில் உயிரியல் சிந்தனைகள் முனைவர் இரா.உஷாராணி	206
38.	கடந்தைக்கூடும் கேயாஸ் தியரியும் - ஒரு பார்வை முனைவர் சி.தேவி	211
39.	மானிடவியல் பார்வையில் யுகபாரதி கவிதைகள் முனைவர் ப. கற்பகராமன்	215
40.	பளியர் இன பழங்குடி மக்களின் வாழ்வியல் (குறிஞ்சாம்பூ புதினத்தை முன்வைத்து) முனைவர் பா.தமிழரசி	221
41.	‘யாத்திரை’ நாவல் காட்டும் தலித்துகளின் வாழ்வியல் போராட்டங்கள் முனைவர் ஜே.மார்க்ரெட்	229
42.	கைவிலங்கு (சாமுண்டி) - ஓர் உளவியல் பார்வை திருமதி பா.செண்பகா, முனைவர் பா.பொன்னி	232
43.	சமூக நோக்கில் பாண்மகளிர் வாழ்வியல் ஜெ.ஆனந்தி	237
44.	தமிழ் இலக்கியங்களில் பெண்களின் நிலைப்பாடு முனைவர் த. பிரபாகரன்	241

01. பண்பாட்டு மானிடவியல் நோக்கில் முல்லைக்கலி

A Cultural Anthropological Analysis of Mullai Kalai

இ.செந்தில்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
எக்ஸல் வணிகவியல் மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம், நாமக்கல் *637303*
senthilema@gmail.com - 9790460776

DOI 10.5281/zenodo.17193338.

Abstract :

This scholarly inquiry undertakes a rigorous examination of Mullai Kalai, an ancient Tamil literary work, through the lens of cultural anthropology. By meticulously analyzing the cultural practices, social structures, and lived experiences of the Aayar community as depicted in the text, this study seeks to contribute to a nuanced understanding of the community's cultural dynamics and traditional ways of life. Through a critical engagement with the literature, this research aims to illuminate the complexities of the Aayar community's cultural identity and its significance within the broader context of Tamil cultural heritage.

Keywords: *Mullai Kalai, Aayar, Cultural anthropology, Sangam literature, Materialistic Components, Cognitive Components, Normative Components*

முன்னுரை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலத்தினை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்ட தமிழர் வாழ்வியலில் ஒவ்வொரு நில மக்களும் தனித்த பண்பாட்டினையும் மரபு தொடர்ச்சியினையும் கொண்டு விளங்கினர். முல்லை நிலத்தினை வாழ்வாதாரமாய் கொண்டவர்கள் ஆயர் இன மக்கள் அந்நிலத்தினுடைய சூழலுக்குத் தக்கனவாறு வாழ்வினை அமைத்துக் கொண்டனர் என்பதை சங்க இலக்கிய பாடல்கள் வழி அறியலாம். பண்பாட்டு மானிடவியல் நோக்கில் ஆயர் இன மக்களின் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் ஆராய்கின்ற பொழுது அவர்களது இயற்கை சார் வாழ்வியலையும் கட்டுக்கோப்பினையும் ஆழ்ந்துணரமுடியும். முல்லைக் கலியில் காணலாகும் ஆயர் இன மக்களின் பண்பாட்டினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

முல்லைக் கலியில் ஆயர் வாழ்வியல்

ஆயரின மக்கள் தம்முள் மூன்று பிரிவினர்களாக வாழ்ந்து வந்தனர் என்பதை முல்லைக்கலி உணர்த்துகிறது.

- கோட்டினத்து ஆயர் - எருமையினைக் கொண்டவர்கள்
- புல்லினத்து ஆயர் - ஆட்டினைக்; கொண்டவர்கள்
- கோவினத்து ஆயர் - மாட்டினைக் கொண்டவர்கள்

இவ்வாறு சிறு குழுக்கள் இடையேயும் அவர்கள் மணமுறை கொண்டிருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது. ஆயிரின மக்களின் திருமணத்திற்குத் தோற்றுவாயாக அமைவது ஏறு தழுவுதல் ஆகும். களவில் தலைவன் தலைவி இருவரும் காதல் கொண்டிருந்தாலும் ஏறுதழுவிய பின்னரே அவர்களுடைய மணம் கற்பாக உருப்பெறுகிறது. இதனால் தலைவியர் அனைவரும் தலைவன் ஏறுதழுவி வெற்றி பெறுவதையே விரும்புகின்றனர். ஆயர் இனத்து தலைவன் பொதுவன் என்று அழைக்கப்படுகிறான். ஆயரின மக்கள் காயம்பூவினைத் தொடுத்து தலையில் சூடியும் மாலையாக அணிந்தும் ஏறு தழுவினர் என்ற செய்தியும் முல்லைக்கலியின் மூலம் பெறப்படுகிறது. முல்லை

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

நிலத்து ஆயர் மகளிர் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு இருந்தனர் என்பதையும் முல்லைக்கலி புலப்படுத்துகிறது. தலையில் சும்மாடு கட்டி மோர் விற்று வந்த பெண்களை முல்லைக்கலிக் காட்சிப்படுத்துகிறது.

அகல் ஆண்கள் அலைமாரி அலமந்து (முல்லைக்கலி, பா.*108-5)*

பேரூரும் சிற்றூருமாக சென்று மோர் விட்டு வந்த தலைவியானவள் மோருக்கு பதிலாக நெல்லை பண்டமாற்று முறையில் பெற்றுக்கொண்ட செய்தியும் முல்லைக் கலியில் இடம்பெறுகிறது.

இவள்தான் திருத்தாச் சுமட்டினள்,
ஏனைத் தோள்வீசி
வரிக்கூழ வட்டி தழீஇ அரிக்குழை (முல்லைக்கலி, ப.*109:14-15)*

பண்டமாற்றின் மூலம் நிலங்களுக்கு இடையே பொருட்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன என்ற செய்தி இதனால் பெறப்படுகிறது. ஐவகை நிலத்தில் வாழுகின்ற மக்கள் தனித்து அன்றி பிற இனக்குழுக்களுடனும் தொடர்பு வைத்துக்கொண்டு வாழ்ந்தனர் என்பதும் இதன் மூலம் புலப்படுகிறது.

பண்பாட்டு மானிடவியல்

மானிடவியல் என்ற மனிதனை அறிவியல் முறையில் அணுகும் துறையில் பண்பாடு எல்லாவற்றுக்கும் அடித்தளமாக அமைகிறது. மனிதன் தன்னுடைய அறிவில் இருந்தும் அனுபவத்திலிருந்தும் கற்று உணர்த்து வாழ்வில் பின்பற்றும் விடயங்களைப் பண்பாடு என்று கூறலாம். பண்பாடு என்பதனைக் கருத்தியல் ரீதியாக மட்டுமின்றி மனதளவிலும் புரிந்துகொள்ள வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாக அமைகிறது. ஒவ்வொரு பண்பாடும் பல தன்மைகளில் அமைந்தாலும் மூன்று கூறுகளையே பின்பற்றி அமைவதாக பக்தவச்சல பாரதி குறிப்பிடுகிறார்.

- பொருள் சார் கூறுகள் *(Materialistic Components)*
- அறிதல் சார் கூறுகள் *(Cognitive Components)*
- நெறியில் சார் கூறுகள் *(Normative Components)*

பொருள் சார் கூறு

பொருள் சார் கூறுகள் என்பவை மனிதனால் உருவாக்கப்பட்டு பண்பாடோடு ஒன்றறக் கலந்த பொருட்களைக் குறிப்பதாகும். **“இக்கூறுகள் மக்களின் சிந்தனை முறை, உணர்வுகள், அறிவு அழகு போன்ற பல பொருள் சாரா கூறுகளின் தன்மைகளைப்பெற்றுள்ளதால் இவை மக்களின் பொருள் சாராப் பண்பாட்டையும் வெளிப்படுத்துபவையாகத் திகழ்கின்றன”** *(*பக்தவத்சலபாரதி,சி. *1990,*ப.*167)* இப்பொருட்கள் கால வெள்ளத்தில் மனிதனால் உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்குள்ளும் பண்பாட்டிற்குள்ளும் தன்னைப் புகுத்திக் கொண்டதாகக் காண முடிகிறது. திணைப்புனம் காக்கப் பயன்படும் பரணை ஆயர் குல மகளிர் ஏறுதழுவுதல் காண பயன்படுத்துகின்றனர். நிலத்திற்கு நிலம் பொருள்களினுடைய பண்பாடும் பயன்பாடும் மாறுவதை இதன் மூலம் அறிய முடிகிறது.

மோர் விற்கச் செல்லும் தலைவி தலையில் சும்மாடு அணிவதும் பண்டமாற்றாக கிடைக்கின்ற நெல்லைப் பெறுவதற்கு வட்டியை ஒரு கையில் சுமந்து செல்வதும் மோரினை உறியில் ஊற்றி தலையில் வைத்து செல்வது என வட்டி, உறி, சும்மாடு ஆகியன மோர் விற்கச்செல்லும் பெண்கள் பயன்படுத்தக்கூடிய பொருட்களாக அமைகின்றன. கார்காலத்தில் மழை தொடங்கும் முன்னர் ஆநிரைகளை மேய்ப்பதற்காக அழைத்துச் செல்லும் ஆயரின மக்கள் சுருக்கி விரிப்பதாக அமைந்த சுருக்கு பையினைத்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தோளில் மாட்டிக்கொண்டு அதனுள் கழு, சூட்டுக்கோல் ஆகியவற்றோடு உண் கலன்களையும் எடுத்துச் சென்றனர். ஆநிரைகளை மேய்ப்பதற்காகக் கொன்றை பழத்தால் ஆன குழல் ஒன்றையும் வைத்திருந்ததாக முல்லைக்கலி வெளிப்படுத்துகிறது. பெருமாளை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் ஆயரின மக்களிடம் குழல் பண்பாடு சார்ந்த பொருளாகத் தொடர்ந்து வழக்கிலிருந்து வருகிறது. நீண்ட பயணம் மேற்கொள்ளும் ஆயரின மக்கள் தோள் பையினைப் பயன்படுத்தியது பண்பாடோடு அவர்தம் அறிவையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

குலக்குறியீடு

குலக்குறியீடு குறித்து பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றனர். குறிப்பிட்ட இனக்குழுவினரால் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருள் குலத்தைக் காப்பதாகவும் முன்னோர்களின் வடிவமாகவும் கருதப்படக் கூடியதாக அமையும் எனில் அதனைக் குலக்குறி எனலாம். ஒவ்வொரு மக்களிடையேயும் ஒவ்வொரு விதமான குலக்கூறி காணப்படுகிறது. இது அவர்களது வாழ்வியலை ஒத்ததாகவும் பண்பாட்டை வெளிப்படுத்தும் விதமாகவும் அமைவதை மானிடவியல் ஆய்வுகள் வெளிக்கொணருகின்றன. குலக்குறியின் பொதுமை பண்புகளைக் குறிப்பிடும் பக்தவத்சல பாரதி, **“குலக்குறி பொதுவாக விலங்காகவோ தாவரமாகவோ இயற்கை பொருளாகவோ இருக்கும்”** என்கிறார். (பக்தவத்சலபாரதி,சி. *1990,* ப.*520)* முல்லைக்கலியில் காட்சிப்படுத்தப்பட்ட ஆயர் இன மக்கள் திருமணத்தின் பொழுது எருமை கொம்பினை வைத்து வழிபடும் செய்தி இடம்பெறுகிறது.

> **தருமணல் தாழப்பெய்து, இல்பூவல் ஊட்டி**
> **எருமைப் பெடையோடு எமர்ஈங்கு அயரும்**
> **பெருமணம் எல்லாம் தனித்தே ஒழிய (முல்லைக்கலி.*114:12-15)***

திருமண ஏற்பாட்டின் பொழுது முற்றத்தில் மணல் பரப்பி சுவர்களுக்குச் செம்மண் பூசி பெண் எருமையின் கொம்பை வைத்து வழிபாடு செய்யும் முறையினை இப்பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன. தொன்மை குடியினர் தங்கள் உயிரானது இறந்த பின்னர் விலங்குகளிடமோ தாவரத்திடமோ சென்று விடும் என்று நம்பிய காரணத்தினாலேயே விலங்குகளையும் தாவரங்களையும் குலக்குறிகளாகக் கொண்டிருந்தனர் என்று மானிடவியல் அறிஞர்கள் விளக்குகின்றனர். பெண் எருமையினுடைய கொம்பினைக் குலக்குறியாக ஆயிரின மக்கள் சங்க காலத்தில் கொண்டு இருந்தனர் என்ற செய்தி இதன் மூலம் பெறப்படுகிறது. இதன் தொன்மையும் நம்பிக்கையும் மேலாய்விற்குரியது.

அறிதல் சார் கூறு

அறிதல் சார் கூறு என்பது மனிதனுடைய அறிவாற்றலை வெளிப்படுத்துவதாக அமைகிறது. மனிதன் உலகத்தை உணர்ந்து இருக்கக்கூடிய தன்மையை அறிவதற்கு இக்கூறானது பயன்படுகிறது. **“உலகத்தைப் பற்றியும் உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் மக்கள் என்னென்ன அறிந்து கொண்டுள்ளனர். அவற்றை எவ்வாறு அறிந்து கொள்கின்றனர் என்பதே அறிதல் சார் கூறுகள் ஆகும்.”** (பக்தவத்சலபாரதி,சி. *1990,*ப.*168)* மனிதன் அன்றாட வாழ்வில் கடந்து வருகின்ற பருப்பொருட்களைத் தன்னுடைய அறிவிற்கும் திறனிற்கும் எட்டியவாறு அறிந்து கொள்வதையே அறிதல் சார் கூறு என அறிஞர்கள் கூறுகின்றனர். ஆயர் இன மக்களின் வாழ்வியலில் மிக முக்கியப் பங்கு வகிப்பது கால்நடைகள். கால்நடைகள் சார்ந்த புரிதலை மிகுதியாகக் கொண்டிருக்கின்றனர். இதனாலேயே கால்நடைகளைத் தங்களுடைய வாழ்வாதாரமாகக் கொண்டு ஆயர் இன மக்களால் வாழ முடிகிறது. ஏறு தழுவுவதற்காக

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வந்து நின்ற காளைக் கூட்டத்தைக் கண்ட தலைவி கூறுவதாக அமையும் பாடலில் காளைகளின் தோற்றம், வடிவம், வீரம் ஆகியவை வெளிப்படுகின்றன.

மணிவரை மருங்கின் அருவி போல
அணிவரம்பு அறுத்த வெண்காற் காரியும்
மீன்பூத்து அவிர்வரும் அந்திவான் விசும்புபோல்
வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையும்
கொலைவன் சூடிய குழவித் திங்கள்போல்
வளையுபு மலிந்த கோடு அணி சேயும் (முல்லைக்கலி.பா.*103:11-17)*

வெள்ளை நிற கால்களையும் கரிய உடம்பினையும் பெற்ற கரிய நிறக் காளை, சிவந்த உடலில் வெண்ணிற புள்ளிகளுடன் விளங்கும் செவலைக் காளை, வளைந்த கொம்புகளை உடைய செவலைக் காளை என காளைகளின் நிறத்தைக் கொண்டும் கொம்பினைக் கொண்டும் வேறுபடுத்திக் காண்கின்ற ஆயர் இன மக்களின் அறிவை காண முடிகிறது. அதேபோல் சாம்பல் நிறக் காளை, நெற்றியில் சந்திரனைப் போன்ற சுழியை உடைய கருநிறத்துக் காளை (சுரி நெற்றிக்காளை), காதுக்குப் பின்புறம் செம்புள்ளிகளை உடைய வெள்ளைக் காளை (நுண் பொறி வெள்ளைக் கதன்) போன்ற காளை வகைகளையும் முல்லைக்கலி வெளிப்படுத்துகிறது. ஆயரின மக்கள் தங்களுடைய கால்நடைகளை அடையாளம் காணும் பொருட்டு நிறம், உடலில் ஏற்படுகின்ற குறியீடுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி இருக்கின்றனர் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. வகைப்படுத்தி காணும் மக்களின் அறிவை புலப்படுத்துவதாக இஃது அமைகிறது எனலாம்.

நெறியியல் கூறு

இனக்குழு வாழ்க்கை என்பது பல்வேறு விதிகளையும் கட்டுப்பாடுகளையும் கொண்டதாக அமைகிறது. அவ்வாறு அமைகிறபோதே இனக்குழுவானது தொடர்ந்து பயணிக்க இயலும். தங்களுக்குள் வகுத்துக் கொண்ட நீதிகளையும் விதிகளையும் இனக்குழுவின் ஒவ்வொரு தனிமனிதனும் பின்பற்றும் போதே அவ்வினக் குழுவானது நிலைத்தன்மை பெறுகிறது. ஒரு பண்பாட்டின் நெறியியல் கூறுகள் எனப்படுபவை அம்மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் கூறுகளைக் குறிக்கும். சமுதாயத்தில் ஒருவர் எவ்வாறு வாழ வேண்டும் எவற்றைச் செய்யக்கூடாது, ஏன் செய்யக்கூடாது போன்ற விதி முறைகளோடு தொடர்புடைய கூறுகளேநெறியியல் கூறுகளாகும். அகவாழ்வில் பல்வேறு நன்னெறிகளைக் கொண்டு வாழ்ந்தவர்களாகவே தமிழ் நில இனக்குழு மக்களைச் சுட்ட முடிகிறது. களவு, கற்பு என இரண்டு நிலையிலும் சுற்றத்தை மதித்து ஒழுகுகின்ற பண்புகளைக் களவு வாழ்க்கையில் தலைவன் தலைவி இருவரும் மேற்கொண்டவராய் காணப்படுகின்றனர்.

வரைவதற்கு காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிற தலைவனுக்குத் தோழி மூலமாகச் செய்தி அனுப்புகிறாள் தலைவி. அவ்விடத்துக் கற்புடைய பெண்களின் நெறி வாழ்க்கையினை எடுத்துக் கூறுகிறாள்.

திருநுதல் ஆயத்தர் தம்முள் புணர்ந்த
ஒருமணம் தான் அறியு மாயின் எனைத்தும்
தெருமரல் கைவிட்டு இருக்கோ*? (முல்லைக்கலி*,பா.*114:16-18)*

தலைவியின் களவு வாழ்வினை அறியாத அவளது பெற்றோர் வேறொரு திருமணத்திற்கு ஏற்பாடு செய்துவருகின்றனர். தலைவன் தலைவியை வந்து மணம் செய்து கொள்ளாவிட்டால் வேறொருவரை மணம் செய்து கொள்ள இயலாது எனவும் ஆயர் இன

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மகளிர் இரு மணம் கொண்டவர் அல்லர் எனவும் தன் நிலையை தலைவியானவள் விளக்குகிறாள். களவு வாழ்வு ஒருவருடனும் கற்பு வாழ்வினை ஒருவருடனும் வாழ்கின்ற நெறியற்ற வாழ்வினை உடையவர் அன்று ஆயர் மகளிர் என்ற செய்தி இதன் மூலம் புலப்படுகிறது.

பொன், பரிசு போன்றவற்றைக் கொடுத்து ஆயரின மகளிரை மணம் செய்து கொள்ள இயலாது. வீரத்தை வெளிப்படுத்துகின்ற ஆண்மகனையே இவ்வின மகளிர் மணந்து கொள்ளுகின்ற மாண்புடையவர்களாக திகழ்கின்றனர் என்பதை முல்லைக்கலியின் மூலம் அறியலாம். தலைவன் எத்தகைய செயல் புரிந்தாலும் தன்னை மணம் புரிவதற்கு முன் ஏறுதழுவி தன் வீட்டாரின் சம்மதத்தைப் பெற வேண்டும் என்பதனைத் தலைவி வலியுறுத்துகிறாள்.

ஆயர் மகளிரின் இயல்புரைத்து எந்தையும்

யாயும் அறிய உரைத்தீயின் யானுற்ற

நோயும் கலைக்குவை மண் (முல்லைக்கலி.பா.*111:23-25)*

களவில் தனித்து ஈடுபட்டாலும் பெற்றோரின் சம்மதத்தின் பெயரிலும் ஆயர் குல வழக்கப்படி ஏறு தழுவியுமே தன்னை ஒரு ஆண் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தன் இனக் குழுவின் நெறி தவறாமல் நடந்து கொள்ளும் பண்பாட்டு மரபைச் சிதையாமல் காக்கிறாள். ஆயர் இன மக்கள் அகமண முறை கொண்டு இருந்தனர் என்பதை முல்லைக்கலிமூலம் அறிய முடிகிறது.

ஆயர் மகனாயின் ஆயமகள் நீயாயின்

நின்வெய்யை னாயின் அவன்வெய்யை நீயாயின்,

என்னை நோக்கி தக்கதோ இல்லை மன் (முல்லைக்கலி பா.*107:20-22)*

இருவரும் ஆயர் குடியைச் சேர்ந்து காதல் கொண்டவராய் இருந்தால் அவரைப்பிரிப்பார் யாரும் இல்லை என்று தோழி தலைவிக்கு அறிவுறுத்துகிறாள். ஆயரின மக்கள் அவருள்ளேயே திருமணம் செய்து கொண்ட முறை வெளிப்படுகிறது. மூவகை ஆயர் இனத்துள் பசு கூட்டத்து ஆயர் புல்லினத்து ஆயருடன் மணமுறை கொண்டு இருந்தனர். எருமைக் கூட்டத்து ஆயர் மகனை விரும்பியதால் தலைவி ஊரின் அலருக்கு ஆளானால் என்ற செய்தியும் புலப்படுகிறது.

கோட்டினத்து ஆயர் மகனோடு யாம் பாட்டதற்கு

எங்கள் எமரோ பொறுப்பர்

பொறாதார் தம்கண் பொடிவது எவன் (முல்லைக்கலி ப.*105:58-60)*

ஆயரின மக்கள் திருமண முறையில் பல்வேறு நெறிமுறைகளைப் பின்பற்றி வந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம். அகவாழ்வில் இவ்வாறான நெறிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம்சமூகக் கட்டுக்கோப்புடன் வாழ முடியும். பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல் படும்போது உண்டாகும் நடத்தை முறை என்பதால் ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுடைய நடத்தையில் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். இல்லையேல் சமூக அமைப்பானது சீர்குலைந்துவிடும். அவ்வகையில் ஆயர்மகன் ஒருவன் ஆயர் மகள் ஒருத்தியைத் தனித்து நின்று பேசுதல் முறையாகாது என்று அவளைப் போக விடுகிறான். களவு வாழ்வாய் இருந்தாலும் யாருமற்ற இடத்தில் இருவரும் தனித்திருத்தல் கூடாது என்ற நெறியினை ஆயரின மக்கள் பின்பற்றி இருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

முடிவுரை

சீரிய ஒழுகலாறுகளையும் பண்பாட்டு நெறிகளையும் முல்லை நிலத்து ஆயரின மக்கள் கொண்டிருந்தனர் என்று கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது. பெண் எருமை கொம்பினைத் திருமணத்தின் போது வைத்து வழிபாடு செய்கின்றனர். இதன் மூலம் அம்மக்கள் வழிபாட்டு முறையில் எருமை கொம்பினைக் குலக்குறியாக கொண்டிருந்தனர் என்ற செய்தி பெறப்படுகிறது. ஆயரின மகளிர் மோர் விற்பதற்கு பண்டமாற்றாக நெல்லினைப் பெற்று வந்த செய்தியும் நிலங்களுக்கு இடையே பண்டமாற்றின் மூலம் உறவு நடைபெற்று இருந்த செய்தியும் அறிய முடிகிறது. ஆநிரைகளை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த ஆயரின மக்கள் அவற்றைச் சார்ந்த முழுமையான அறிவை பெற்றிருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது. தங்களுக்குள் மிகவும் சீரிய கட்டுப்பாட்டினையும் ஒழுக்க நெறிகளையும் ஆயர் இன மக்கள் கொண்டு இருந்தனர் என்பது முல்லைக் கலி முழுமைக்கும் காணமுடிகிறது. களவு வாழ்வில் ஈடுபட்டிருந்த தலைவி ஏறுதழுவி தன்னை மணந்து கொள்ளுமாறு தலைவனை வற்புறுத்துதலும் வரைவு செய்ய மறுத்து காலம் தாழ்த்திய தலைவனிடத்தில் தான் வேறொருவரை மணந்து கொள்வது மாண்பாகாது என்று அறிவுறுத்துவதும் தனித்து வழியில் செல்லக்கூடிய பெண்ணை மறித்துப் பேசுவது ஆயரின மகனுக்கு ஒழுங்கு ஆகாது போன்ற பண்புகள் முல்லைக் கலியின் வழியே பெறப்படுகிறது. பண்பாடு என்ற கூட்டு இயக்க சேர்மம் ஆனது சிறப்பாக இயங்குவதற்கு தனிமனிதன் மிக முக்கியப் பங்காற்ற வேண்டிய தேவை ஏற்படுகிறது. பண்பாட்டின் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்ற ஆயரின மக்களின் வாழ்வியலை உற்றுநோக்கும் பொழுது அவர்களது இயற்கை சார்ந்த ஒன்றிணைந்த வாழ்க்கை முறைப் பற்றிய அறிவு வியக்கத்தக்கதாக அமைவதை ஆய்வின் வழி கட்டுரை வெளிப்படுத்துகிறது.

துணைநூற்பட்டியல்

1. அண்ணாமலை,சுப. (உ.ஆ) கலித்தொகை மக்கள் பதிப்பு, கோவிலூர் மடாலயம், கோவிலூர் *630307,2003*
2. பக்தவத்சலபாரதி,சி. பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை *600001,1990*
3. பக்தவத்சலபாரதி,சி. மானிடவியல் கோட்பாடுகள், அடையாளம் பதிப்பகம், திருச்சி *621310, 2012*
4. பக்தவத்சலபாரதி,சி.(ப.ஆ), தமிழகத்தில் நாடோடிகள், அடையாளம் பதிப்பகம், திருச்சி *621310, 2017*
5. முத்துச்சாமி,அ. சங்க இலக்கியத்தில் ஆயர்,ராணி பதிப்பகம், சென்னை,*1993.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

02. கணவனை இழந்த பெண்களின் உளவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் ஓர் ஆய்வு

சயந்தினி. ஆ
உளவியல் சிறப்புக்கலை மாணவி,
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை.
sayanthinyananth2001@gmail.com

DOI 10.5281/zenodo.17193712.

Abstract:

Widows, especially in war-affected communities, face various psychological, social and economic problems. These problems create major challenges in their daily lives and social integration. In this context, the main objective of this study is to examine in detail the life challenges of widows. This study seeks to understand their psychological impacts, social exclusion and challenges in depth. The study was conducted using a sample of 15 widows selected randomly in a village in the northern part of Sri Lanka. Data were collected through a structured questionnaire consisting of 12 questions prepared by the researcher. The study was conducted using quantitative and qualitative approaches. The findings of the study showed that most of the widows, especially those in the age group of 36-45, were under severe psychological stress. They had symptoms such as depression, low self-esteem, guilt and low self-confidence. Those above 65 years of age reported that they were grieving for their husbands and were unable to make a decision. Socially, they were reluctant to participate in social events and felt ignored. Economic problems, especially among young widows, increased negative thoughts and feelings of insecurity. Health problems such as menstrual disorders were also observed. Some women were also found to be involved in prostitution as a result of social pressure. As a result, widowed women face severe psychological and social challenges. It is the duty of every segment of society to protect them and provide them with the necessary support, rights and facilities. They should not be isolated by society, but their health and safety should be prioritized and they should be reintegrated into society.

Keywords: Widows, psychological problems, social challenges, mental health, support.

ஆய்வுச் சுருக்கம்

கணவனை இழந்த பெண்கள் குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் பல்வேறு உளவியல், சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இத்தகைய பிரச்சினைகள் அவர்களது அன்றாட வாழ்விலும், சமூக ஒருங்கிணைப்பிலும் பெரும் சவால்களை உருவாக்குகின்றன. இந்தப் பின்னணியில் கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் சவால்களை விரிவாக ஆராய்வதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும். இந்த ஆய்வு அவர்களின் உளவியல் பாதிப்புகள், சமூக ரீதியான புறக்கணிப்புகள் மற்றும் சவால்களை ஆழமாகப் புரிந்துகொள்ள முற்படுகிறது. ஆய்வானது இலங்கையின் வடபகுதியில் உள்ள ஓர் கிராமத்தில் எழுமாற்று முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 கணவனை இழந்த பெண்களை மாதிரிகளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வாளரால் தயாரிக்கப்பட்ட 12 கேள்விகள் கொண்ட கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இந்த ஆய்வு அளவியல் மற்றும் பண்பியல் ரீதியான அணுகுமுறைகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் கண்டுபிடிப்புகள், கணவனை இழந்த பெண்களில் பெரும்பாலானோர் குறிப்பாக 36-45 வயதிற்குட்பட்டோர் கடுமையான உளவியல் அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. இவர்களுக்கு மனச்சோர்வு, தாழ்வு மனப்பான்மை, குற்ற உணர்வு மற்றும் தன்னம்பிக்கை குறைபாடு போன்ற பாதிப்புகள் இருந்தன. 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் தங்கள் கணவரை நினைத்து துக்கப்படுவதாகவும், ஒரு முடிவையும் எடுக்க முடியாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டனர். சமூக ரீதியாக இவர்கள் சமூக நிகழ்வுகளில் பங்கேற்பதில்

http://Creativecommons.org//license/by/4.0/.

தயக்கம் காட்டியதுடன், புறக்கணிக்கப்படுவதாகவும் உணர்ந்தனர். பொருளாதாரப் பிரச்சினைகள், குறிப்பாக இளவயது கணவனை இழந்த பெண்களிடையே எதிர்மறையான சிந்தனைகளையும், பாதுகாப்பற்ற உணர்வுகளையும் அதிகரித்தன. மேலும் மாதவிடாய் கோளாறுகள் போன்ற உடல்நலப் பிரச்சினைகளும் அவதானிக்கப்பட்டன. சில பெண்கள் சமூக அழுத்தத்தின் விளைவாக விபச்சாரத்தில் ஈடுபட்டதாகவும் கண்டறியப்பட்டது. முடிவாக கணவனை இழந்த பெண்கள் உளவியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் கடுமையான சவால்களை எதிர்கொள்கின்றனர். இவர்களைப் பாதுகாப்பதும், அவர்களுக்குத் தேவையான ஆதரவையும், உரிமைகளையும், வசதிகளையும் வழங்குவதும் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தின் கடமையாகும். இவர்கள் சமூகத்தால் தனிமைப்படுத்தப்படாமல், அவர்களது உடல்நலம் மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, சமூகத்துடன் மீண்டும் இணைக்கப்பட வேண்டும்.

திறவுச் சொற்கள்: கணவனை இழந்த பெண்கள், உளவியல் பிரச்சினைகள், சமூக சவால்கள், மனநலம், ஆதரவு.

ஆய்வு அறிமுகம்

உலகளாவிய ரீதியிலும் குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும், கணவனை இழந்த பெண்கள் எதிர்நோக்கும் உளவியல், சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் ஒரு பாரிய சமூக அக்கறையை ஏற்படுத்தும் விடயமாகும். கணவனை இழந்தவர்கள், தங்கள் துணைவர் இல்லாத வெற்றிடத்தை உணர்வதுடன், சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இத்தகைய பிரச்சினைகள் அவர்களது அன்றாட வாழ்விலும், சமூக ஒருங்கிணைப்பிலும் பெரும் இடர்பாடுகளை உருவாக்குகின்றன. போரினால் ஏற்பட்ட உயிரிழப்புகள், குடும்ப அமைப்புக்களில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தி, குறிப்பாகப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. இலங்கையின் வடபகுதியிலுள்ள சமூகங்களில், இத்தகைய பெண்கள் குறித்துப் போதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையில், அவர்களது வாழ்வியல் சவால்கள் குறித்த ஆழமான புரிதல் அவசியமாகிறது. கணவனை இழந்தவர்கள் எதிர்கொள்ளும் தனிமை, மனச்சோர்வு, பதட்டம், சமூகப் புறக்கணிப்பு, வறுமை, மற்றும் குழந்தைகளைப் பராமரிப்பதில் உள்ள சிரமங்கள் போன்ற பல அம்சங்கள் விரிவாக ஆராயப்பட வேண்டியவை. அத்துடன், இவர்களுக்கான சமூக ஆதரவுப் பொறிமுறைகள் மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகளும் இவ் ஆய்வின் அவசியத்தை மேலும் வலியுறுத்துகின்றன. இந்த ஆய்வானது, கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் சவால்களை ஆழமாகப் புரிந்துகொண்டு, அவர்களுக்கான பொருத்தமான ஆதரவு வழிமுறைகளை முன்மொழிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆய்வின் நோக்கங்கள்

இந்த ஆய்வின் பிரதான நோக்கமானது இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள ஈச்சங்குளம் கிராமத்தில் வாழும் கணவனை இழந்த பெண்களின் உளவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை விரிவாக ஆராய்ந்து வெளிப்படுத்துவதாகும். இந்த பிரதான நோக்கத்தை அடைவதற்காக பின்வரும் துணை நோக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன:

- கணவனை இழந்த பெண்கள் எதிர்கொள்ளும் பிரதான உளவியல் சவால்களை அடையாளம் காணுதல்.
- சமூக ரீதியான புறக்கணிப்பு, களங்கம் மற்றும் அழுத்தங்கள் எவ்வாறு அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்றன என்பதை கண்டறிதல்.
- கணவனை இழந்த பெண்களின் வயது, பொருளாதார நிலை மற்றும் பிற சமூக-சனத்தொகைக் காரணிகளுக்கும் அவர்களின் பிரச்சினைகளுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்தல்.
- கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் சவால்களைக் குறைப்பதற்கான நடைமுறைப் பரிந்துரைகளை வழங்குதல்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஆய்வுக் கருதுகோள்கள்

H1 கணவனை இழந்த பெண்கள் உளவியல் சமூக ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றார்கள்.

H2 கணவனை இழந்த பெண்கள் சமூக ரீதியான அழுத்தத்துக்கு உட்படுகின்றனர்.

H3 கணவனை இழந்த பெண்களே அதிக அளவில் உளவியல் ரீதியான தாக்கத்துக்கு உட்படுகின்றனர்.

H4 வயதான கணவனை இழந்த பெண்கள் குறைந்த அளவே உளவியல் ரீதியான தாக்கத்திற்கு உட்படுகின்றனர்

ஆய்வு முறையியல்

இந்த ஆய்வு இலங்கை வடமாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் உள்ள ஈச்சங்குளம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்காக 25 முதல் 65 வயதிற்குட்பட்ட 15 கணவனை இழந்த பெண்கள் தன்னிச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தரவு சேகரிப்பிற்காக ஆய்வாளரால் தயாரிக்கப்பட்ட 12 கேள்விகள் கொண்ட கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. இந்த வினாக்கொத்து உளவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் என இரண்டு முக்கிய பிரிவுகளைக் கொண்டிருந்தது. தரவுகள் நேரடி நேர்காணல் மூலம் சேகரிக்கப்பட்டன. இந்த ஆய்வு அளவியல் (ஞரயவெவையவளைந) மற்றும் பண்பியல் (ஞரயடவையவளைந) ரீதியான அணுகுமுறைகளைக் கொண்டது. சேகரிக்கப்பட்ட தரவுகள் வயதுப் பிரிவுகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன.

தரவு பகுப்பாய்வு

கணவனை இழந்த பெண்கள் எதிர் கொள்கின்ற சமூக உளவியல் சவால்கள் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது 15 கணவனை இழந்த பெண்களிடம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் 25 தொடக்கம் 65 வயதுக்கு மேற்பட்ட கணவனை இழந்த 15 பெண்களில் மேற்கொள்ளப்பட்டது. 15 பெண்களிடமும் ஒவ்வொரு வயது பிரிவினரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு பின்வருமாறு

வயது	தொகை
25 - 35	02
36 - 45	02
46 - 65	05
65	06

இப் 15 பெண்களிடம் பெறப்பட்ட தகவலின் படி அதிகளவான பெண்கள் அதிகமாக உளரீதியான பாதிப்பை விடவும் சமூக ரீதியான பாதிப்புகளுக்கு அதிகம் உட்படுகின்றார்கள் என குறிப்பிட்டிருந்தனர். அதிலும் குறிப்பாக சமூக சுபநிகழ்வுகளுக்கு தம்மை ஒதுக்கி வைக்கும் போது மிகவும் மன வேதனை அடைவதாக குறிப்பிட்டு இருந்தனர். திருமண நிகழ்வு ,சுப காரியங்கள் ,கோயில் திருவிழாக்கள் போன்ற நிகழ்வுகளில் தாமாகவே ஒதுங்குவதாகவும் குறிப்பிட்டு இருந்தனர். அதற்கான காரணத்தினை வினாவிய போது தம்மைப் பற்றி ஊர்மக்கள் ஏதும் விமர்சித்து விடுவார்களோ என்ற பயத்தினால் தாமே ஒதுங்கி விடுவதாக குறிப்பிட்டு இருந்தனர். மேலும் 25 வயது தொடக்கம் 35 வயதுக்கு மேற்பட்ட இளவயது கணவனை இழந்த பெண்கள் உடலில் மற்றும் உளவியல் ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றனர் என குறிப்பிட்டு இருந்தனர். இவ்வாறானவர்கள் பாதுகாப்பு தொடர்பாக அதிக சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், பாலியல் இடர்பாடுகள், மாதவிடாய் கோளாறுகள் போன்றவை தமக்கு பாரிய சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.02 பெண்கள் ஒரே விதமான பிரச்சனைகளை குறிப்பிட்டு இருந்தனர். 36 தொடக்கம் 45 வயதிற்கு உட்பட்ட கணவனை இழந்த பெண்கள் பொருளாதாரம், பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அதிக கவலை கொள்பவர்களாகவும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்பவர்களாகவும் குறிப்பிட்டு இருந்தனர். இவ் வயது பெண்கள் சுயதொழில் செய்பவர்களாக காணப்பட்டனர். குறிப்பாக வீட்டுத்தோட்டம் ,மாடு வளர்த்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான பெண்கள் வேற்று

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஆணுடன் சாதாரணமாக பேசும் போது கூட அதனை தப்பான கண்ணோட்டத்தில் பார்ப்பதாக இவ்வயது பெண்கள் குறிப்பிட்டிருந்தனர். இதனால் சமூக உணர்வு சிக்கல்கள் அதிகம் எதிர்கொள்வதாக குறிப்பிட்டு இருந்தனர். 45 வயதுக்கும் 65 வயதுக்கும் உட்பட்ட 05 கணவனை இழந்த பெண்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி அவர்கள் சமூக ரீதியான தாக்கத்தை விட அறிகை ரீதியாக பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்குவதாக குறிப்பிட்டு இருந்தனர். இவர்கள் குறிப்பிட்டதற்கு இணங்க குழப்பமான உணர்வுகள், தனிமை உணர்வு, பிறரிடம் நம்பிக்கை அற்ற தன்மை போன்றவை காணப்படுவதாக குறிப்பிட்டிருந்தனர். 65 வயதுக்கு மேற்பட்ட கணவனை இழந்த 06 பெண்களிடம் பெறப்பட்ட தகவல்களின்படி நித்திரையின்மை, அன்புக்கான விரக்தி உணர்வு, ஒதுங்கியிருத்தல், உணவுப்பிரச்சனை போன்ற பல்வேறுபட்ட சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தனர். இதிலிருந்து இவ்வயது பெண்கள் உளவியல் ரீதியான சவால்களை அதிகம் எதிர்கொள்வதாக குறிப்பிட்டிருந்தனர். தாம் தனியாக இருப்பது போன்று உணர்வு அடிக்கடி ஏற்படுவதாக குறிப்பிட்டிருந்தனர். மனதில் அடிக்கடி குழப்பமான எண்ணங்கள் தோன்றுவதால் மனதை ஒருமுகப்படுத்தி செயல்பட முடியாமல் உள்ளதாக குறிப்பிட்டு இருந்தனர். இப் 15 பெண்களிடமும் வினவப்பட்டதன் அடிப்படையில் கணவனின் இறப்பின் கால அளவிற்கும் இவர்களின் உளவியல் தாக்கத்துக்கும் தொடர்பு இருப்பதாக கண்டு கொண்டேன். 03 வருடத்திற்குள் கணவனை இழந்த பெண்கள் அதிக உணர்ச்சிவசப்பட்டு பேசுபவர்களாகவும் ஏனைய பெண்கள் சாதாரணமாக பேசுவார்களாகவும் காணப்பட்டனர். வருட இடைவெளி அதிகமாக மனப்பக்குவம் ஏற்பட்டு விட்டதாகவும் சில பெண்கள் குறிப்பிட்டு இருந்தனர். இளவயது கணவனை இழந்த பெண்கள் தமது பிள்ளையின் எதிர்காலம் ,வருமானம் சுயதொழில் என வெவ்வேறுபட்ட காரியங்களில் நேரத்தைச் செலவிடுவதாக குறிப்பிட்டு இருந்தனர். ஆனால் 65 வயதுக்கு மேற்பட்ட கணவனை இழந்த பெண்கள் வீட்டிலேயே அதிகம் இருப்பதால் இழப்பு துயர அடிக்கடி நினைவுக்கு வருவதாகவும் குறிப்பிட்டு இருந்தனர்.

முடிவுகள்

இந்த ஆய்வின் மூலம், கணவனை இழந்த பெண்கள் சமூகப் புறக்கணிப்பு, கடுமையான உளவியல் மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர் என்பது தெளிவாகிறது. அவர்களிடையே மனச்சோர்வு, தாழ்வு மனப்பான்மை, பாதுகாப்பற்ற உணர்வு, குற்ற உணர்வு, சமூக நிகழ்வுகளில் இருந்து விலகி இருத்தல் மற்றும் உடல்நலக் குறைபாடுகள் போன்ற பல சவால்கள் காணப்படுகின்றன. பொருளாதாரச் சுமை மற்றும் சமூக ஆதரவின்மை இந்த பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கின்றன. இந்த கண்டுபிடிப்புகள், ஆய்வின் கருதுகோள்களை உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக இளம் மற்றும் மத்திய வயதுப் பெண்கள் அதிக பாதிப்புக்குள்ளாவதும், சமூக ஆதரவின்மை இந்த நிலையை மோசமாக்குவதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

பரிந்துரைகள்

கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் சவால்களைக் கருத்தில் கொண்டு, அவர்களின் நலனை மேம்படுத்துவதற்குப் பல்துறை அணுகுமுறை அவசியம்.

- உளவியல் ஆதரவு: மனநல ஆலோசனை சேவைகள், குழு சிகிச்சை அமர்வுகள் மற்றும் உளவியல் ரீதியான ஆதரவு நிகழ்ச்சிகளை எளிதில் அணுகக்கூடிய வகையில் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு மன அழுத்தத்தைக் கையாளும் பயிற்சிகளும், தன்னம்பிக்கையை வளர்க்கும் செயல் திட்டங்களும் உருவாக்கப்பட வேண்டும். உளவியல் ரீதியான ஆலோசனைகள் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- சமூக விழிப்புணர்வு மற்றும் ஏற்றுக்கொள்ளல்: சமூகப் புறக்கணிப்பைத் தவிர்ப்பதற்கும், கணவனை இழந்த பெண்களை சமூகத்தில் முழுமையாக ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கும் விரிவான சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். சமூக நிகழ்வுகளில் அவர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். சமூகத்தில் நிலவும் தவறான கருத்துக்களை மாற்றுவதற்கு ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு பரப்புரைகள் மேற்கொள்ளப்படலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

- பொருளாதார வலுவூட்டல்: அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகள், நுண் கடன் திட்டங்கள், நிதியுதவிகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, சந்தைத் தேவைக்கு ஏற்ப புதிய திறன்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதனால் அவர்கள் பொருளாதார ரீதியாகச் சுதந்திரமடைந்து, தங்கள் குடும்பத்தைப் பராமரிக்க முடியும்.
- சுகாதாரப் பாதுகாப்பு: இவர்களுக்கு ஏற்படும் உடல்நலப் பிரச்சினைகள், குறிப்பாக மாதவிடாய் கோளாறுகள் மற்றும் பிற உடல் ரீதியான சிக்கல்களுக்கு மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் இலவசமாக வழங்கப்பட வேண்டும். அவ்வப்போது மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- சட்ட மற்றும் பாதுகாப்பு வசதிகள்: கணவனை இழந்த பெண்கள், குறிப்பாக இளம் வயதுப் பெண்கள், எந்தவிதமான துஷ்பிரயோகத்திலிருந்தும் பாதுகாப்படுவதை உறுதி செய்ய சட்ட மற்றும் பாதுகாப்புப் பொறிமுறைகள் பலப்படுத்தப்பட வேண்டும். இவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டங்கள் கடுமையான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.
- அரசு மற்றும் தன்னார்வ நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு: அரசு நிறுவனங்கள், உள்ளூர் சமூக அமைப்புகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைந்து, கணவனை இழந்த பெண்களுக்கான ஆதரவு சேவைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். இவர்களுக்கு நீண்டகால ஆதரவுத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.
- சமூக ஆதரவு வலையமைப்பு: சமூகத்தில் வலுவான ஆதரவு வலையமைப்புகளை உருவாக்குவதன் மூலம், அவர்கள் தனிமை உணர்வில் இருந்து விடுபடவும், சமூகத்துடன் மீண்டும் ஒன்றிணையவும் உதவலாம். அண்டை வீட்டார், உறவினர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் இவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட ஊக்குவிக்கப்பட வேண்டும். சமூக அளவில் சுய உதவி குழுக்களை உருவாக்குவது இவர்களுக்குப் பெரிய அளவில் உதவும்.

இத்தகைய ஒருங்கிணைந்த மற்றும் தொடர்ச்சியான முயற்சிகள் மூலம் கணவனை இழந்த பெண்கள் கண்ணியமான மற்றும் பாதுகாப்பான வாழ்க்கையை வாழ முடியும் என்பதுடன், சமூகத்திலும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முடியும். எதிர்கால ஆய்வுகள், இவர்களின் நீண்டகால உளவியல் மீட்பு மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக்குத் தேவையான காரணிகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்தலாம்.

உசாத்துணைகள்

- Jayawickreme, N. & Miller, E. (2010). Triumphalism, fear and humiliation: The psychological legacy of Sri Lanka's civil war. Dynamics of Asymmetric Conflict, 3(3), 208-222. doi:10.1080/17467586.2010.531031
- Ozer, E. J., Best, S. R., Lipsey, T. L., Weiss, D. S. (2003). Predictors of posttraumatic stress disorder and symptoms in adults: A meta-analysis. Psychological Bulletin, 129(1), 52-73. doi:10.1037/0033-2909.129.1.52
- Rivara, F. P. et al. (2014). Parental injury and psychological health of children. Pediatrics
- Silva, K. T. (2012). Demographic impact of the war: Changes in sex ratio and their possible effects on vulnerability and psychosocial stress in civilian populations in Northeast Sri Lanka.
- Silva, K. T., Sivakanthan, S. & Wickramasinghe, W. M. K. B. (2012). Post-portem community consultations on underlying causes of displacement in selected conflict-affected areas in Sri Lanka. CARE International, Colombo.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

03. இராவணகாவியத்தில் வணிகம்

ஆ.ஹரிதாபேபி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி - 626 123.
haritababy-phdtam@sfrcollege.edu.in,
9843828694, ORCID ID:0009-0003-6247-8069.

முனைவர் ச.தனலெட்சுமி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி, சிவகாசி - 626 123,
ORCID ID:0000-0003-351-2865.

DOI 10.5281/zenodo.17193841.

Abstract:

"Raavana Kaaviyam" is an epic that follows the traditions of classical Tamil literature. Based on the story of the Ramayana, it presents Raavana as the central heroic figure. This epic highlights both the cultural richness of the Tamil people and the greatness of Raavana. The development of a nation is often determined by its key sectors, such as agriculture and trade, which are regarded as its 'eyes'. In Raavana Kaaviyam, the city of Lanka is portrayed as having textile factories, cloth shops, ornament stores, workshops for crafting gold and clay artifacts, carpentry workshops, and various trading centers. The barter system was also carried out through maritime routes with the help of ships. Through the barter system, they acquired gold and many other invaluable items. They exported a wide range of goods such as garments, peacock feathers, various gems, conch shells, pearls, and pepper. The merchants conducted their trade with honesty, ensuring that they did not charge excessively for what they sold and did not underpay for what they purchased. By conducting trade ethically, they led lives based on righteousness. In this way, this research article aims to explore the trade-related aspects found within Raavana Kaaviyam.

Key Words : *Tags: Ravana epic, trade, merchant, sales stalls, export, barter system.*

முன்னுரை

தொடக்கக் காலத்தில் மனிதன் இனக்குழு சமூகமாக வாழ்ந்த போது தன்னிடமுள்ள பொருளைக் கொடுத்து விட்டுத் தனக்கு தேவையான பொருட்களைப் பெற்றுக் கொண்டான். இவற்றின் வளர்ச்சி பண்டமாற்று வணிகமாகப் பரிமாற்றம் அடைந்தது. அதுவே பின்னர் நாணயமுறை வணிகமாக வளர்ச்சியடைந்தது. இராவணகாவியம் இராமாயண கதையை அடிப்படையாய், இராவணனைக் காவியத்தலைவனாகக் கொண்டு அமைக்கப்பட்ட நூல் ஆகும். இராவணகாவியத்தின் ஆசிரியர் புலவர் குழந்தை. அவ்வகையிலேயே நாட்டின் வளர்ச்சிக்குக் காரணமான வணிகம் குறித்த செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

வணிகம்

உற்பத்திப் பொருட்களை வாங்கி விற்கும் தொழிலைக் குறிக்க வணிகம், வாணிகம் மற்றும் வியாபாரம் ஆகிய சொற்கள் கையாளப்படுகின்றன.

வணிகம் என்ற சொல்லுக்கு **'பொருட்களை வாங்கி விற்றல்'**[1] என்று ச.வே.சுப்பிரமணியனின் தமிழ் அகராதியும், **(தமிழ் அகராதி, ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், ப**-*1031),* **'செட்டு, வியாபாரம்'**[2] என்று கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதியும், **(தமிழ்மொழிஅகராதி, நா.கதிரைவேற்பிள்ளை, சாரதா பதிப்பகம், ப**-*1225)* பொருள் தருகின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

விற்பனைக் கூடங்கள்

வணிகம் செய்யும் கடைத்தெரு ஆவணம், அங்காடி, கடை ஆகிய சொற்களால் குறிப்பிடுகின்றது. இராவணகாவியத்தில் இலங்கை நகரில் நெசவுத் தொழிற்சாலை, துணிக்கடைகள், அணிகலன்கள் விற்கும் நிலையங்கள், கலங்கள் செய்யும் தொழிற்கூடம், தச்சுப்பட்டறைகள் போன்ற வணிக விற்பனைக் கூடங்கள் காணப்படுகின்றன.

"விரவுற விரும்பல் வண்ணம் விளிம்பையோ வியங்கள் நண்ண
நிரலுற விழைகொள்ளாடை நெய் தொழிற்சாலை யோங்கும்"

(இராவணகாவியம், இலங்கைப்படலம், பா.,*115)*

என்ற அடிகளில், பாம்பு உரித்த தோல் போல் மென்மையானதாய் பல வண்ணங்கள் கலந்து ஆடை முன்றானை விளிம்பில் ஓவியங்கள் தீட்டி, வரிசைப்பட நூலிழை கொண்ட ஆடை நெய்யும் நெசவுத் தொழிற்சாலை குறித்து கூறப்பட்டுள்ளது. மேலும்,

"துய்யுறை மடியுந்தொக்க துணிக்கடை தோறுந் தைத்த
மெய்யுறை வடிவங்காட்டி விழைவுற வழைக்கு மாதோ"

(இராவணகாவியம், இலங்கைப்படலம், பா.,*116)*

என்ற அடிகளில், தாமரைப்பூவை போன்ற மென்மையான அழகிய பொன் பட்டாடை, மெல்லிய மயிரினால் நெய்த ஆடை, தூய்மை பொருந்தும் சீலை முதலியவை இருக்கும் துணிக்கடை, தைக்கப்பட்ட சட்டைகள் பலவகை வடிவங்களில் காணப்பட்டுக் காண்பவர் விரும்புமாறு அவரை அழைக்கும் என்று துணிக்கடை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்பது வகை மணிகளும், செம்பொன்னை உருக்கி அவற்றை முறையாக இழைத்து, செய்யப்பட்ட அணிகலன்களைக் கொண்ட நிலையங்கள் காணப்படுகின்றன. இதனை,

"ஒன்பது மணியும் செம்பொன் னுருக்கடாக் குலங்கள் வாரித்
தின்பது போல ஆழ்ழ் சிறந்திடப் பதித்துச் சீர்சால்
மன்பதை யுறுப்புக் கெல்லாம் மறைப்பென வனப்புக் காலும்
மின்புதியது வந்தென்ன விளங்கணிக் கொட்டில் தோன்றும்"

(இராவணகாவியம், இலங்கைப் படலம், பா.,*117)*

என்ற பாடல்வரிகள், அணிகலன் கொண்ட நிலையங்கள் பற்றி எடுத்துக்காட்டுகிறது.
மேலும்,

"துளைவன துளைந்து தீட்டித் தொடுகுழை யாழி பீலி
வளையொடு பிறவுஞ் செய்யும் வளையணிக் கூட மோங்கும்"

(இராவணகாவியம், இலங்கைப் படலம், பா.,*118)*

என்ற அடிகளில், சங்குகளிலே மிகுதியான நெய் தடவி தேய்த்து, அறுத்தெடுத்து, துளையிட்டு, நன்கு தீட்டிப் பளபளப்பாக்கி காதணி, மோதிரம், கால் பீலி, வளையல் மற்றும் பிற அணிகலன் செய்யும் சங்கணிக் கூடங்கள் எங்கும் காணப்படுகிறது. மேலும்,

"இல்லிடைப் புழங்கற்கான விருவகைக் கலங்கள் செய்யும்
மல்லுடைக் களரிக் கூடம் வகைவகை வடிவங்காட்டும்"

(இராவணகாவியம், இலங்கைப் படலம், பா.,*119)*

என்ற அடிகளில், செம்பு மற்றும் பித்தளையால் செய்யப்பட்ட பொற்கலம், மட்கலம் ஆகிய இருவகைக் கலங்கள் செய்யும் தொழிற்கூடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பெட்டிகள், கட்டில் மற்றும் பிறப்பொருட்கள் செய்யும் தச்சுப்பட்டறைகள் இருந்தமையை,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"கால் பிடித்தமைந்த கச்சுக் கட்டிலுந்தட்டு முட்டும்
பால் பிடித்தியற்றுந் தச்சம் பட்டறை நெட்டிலேயக்கும்"

(இராவணகாவியம், இலங்கைப் படலம், பா.,*120*)

என்ற அடிகள் விளக்குகிறது.

பண்டமாற்று முறை

மக்களின் தொடக்க கால வணிகம் பண்டமாற்று முறைகளின் அடிப்படையிலேயே நடைபெற்றது. இதனை,

"கந்தெறி களிறு மானக் கலம்பல செலுத்திக் கொண்டு
வந்தய னாடர்பண்ட மாற்றியும் மதித்த செம்பொன்"

(இராவணகாவியம், இலங்கைப் படலம், பா.,*114*)

என்ற அடிகளில், கட்டுத்தறியை உடைத்தெரியும் ஆண்யானைப் போன்ற கப்பல்கள் பலவற்றைக் கடலில் செலுத்திக் கொண்டு அயல்நாட்டவர் பண்டமாற்று செய்து, செம்பொன் தந்தும், விலைமதிக்க முடியாத பலப்பொருட்களைப் பெற்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டமாற்றுமுறை கடல் வணிகம் பொருட்டு இருந்ததையும் அறிய முடிகிறது.

ஏற்றுமதி

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற கணியன்பூங்குன்றனாரின் கூற்றுக்கிணங்க, நம் நாட்டு வணிகர்கள் பல்வேறு மேலை நாட்டுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர்,

"பட்டினும் பஞ்சி னுமயிர் செய்யாடை பீலி
பன்மணிசங் கணிபன்மணப் பண்ட மேற்றி
முட்டிலய னாடிறக்கி நிறைபொன் கொண்டு
முத்தமிழின் கொடி நுடங்கக் கரையை நோக்கி"

(இராவணகாவியம், தமிழகப் படலம், பா.,*81*)

என்ற அடிகளில், பட்டினாலும் பஞ்சினாலும் மயிரினாலும் செய்யப்பட்ட ஆடைகள், மயில்தோகைகள், பல மணிகள், சங்குகள், சிப்பிகளில் விளையும் முத்துகள், மிளகு முதலான நறுமணப் பொருள்கள் இவற்றை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். ஏற்றுமதி ஒரு நாட்டின் செல்வ செழிப்பை வளர்க்க உதவுகிறது.

வணிகர்களின் நடுவுநிலைமை

வணிகர் என்பவர் வெறும் பொருட்களை வாங்கி விற்கும் மனிதர் மட்டுமல்ல, சமூக வளர்ச்சிக்கும் பண்பாட்டு பரிமாற்றத்திற்கும் காரணமாக அமைந்தவர்கள். திருவள்ளுவர்,

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம போற் செயின்"[3] (குறள்.*120*)

என்ற குறளில், பிறர் பொருளையும் தம் பொருள் போல எண்ணிக் கொடுக்கல் வாங்கல் செய்வதே சிறந்த வாணிபம் என்கிறார். வணிகர்கள் இந்த மரபினைப் பின்பற்றி வாங்கிக் கொள்ளும் பொருள்களில் கூடுதலாக இல்லாமலும், விற்றுக் கொடுக்கும் பொருள்களில் குறைவு இல்லாமலும், ஊதியம் குறைவு பட நேர்ந்தாலும் இகழத்தக்க செயல்கள் புரியாது, இயன்ற அளவு உண்மையைக் கடைப்பிடித்து, நேர்மையிலிருந்து சிறிதும் நீங்காது வாழ்ந்தனர் என்பதை,

"கொள்வது மிகைகொளாது கொடுப்பதுங் குறை கொடாதே
உள்வது செயலதாக ஊதியங்குறையு மேனும்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எள்வது புரியாதென்று மியல்வது புரிந்து நேர்மை
விள்வதில் வணிகர் வாழ்வு மிகுந்ததவ் விலங்கை நாடே"

(இராவணகாவியம், இலங்கைப்படலம், பா.,16)

என்ற அடிகளில், வணிகர்கள் நேர்மையான முறையில் வணிகத்தினை மேற்கொண்டு அறத்துடன் வாழ்ந்து வந்தனர் என்பதை அறியமுடிகிறது. மேலும்,

"நீரினுந்நன்னிலத்தினும்
கூரு கொண்டு கொடுத்துமே
ஈரிரும் பொருளீட்டுவோர்
மாரி வண்கை வணிகரே"

(இராவணகாவியம், மக்கட்படலம், பா.,5)

என்ற அடிகளில், கடல்வழி, நிலவழி இரண்டினும் மிகுதியாகக் கொண்டு வாணிகம் செய்து மாபெரும் பொருள் ஈட்டுவோர் வணிகர்கள் ஆவர். அவர்கள் மழைப்போலும் வாரி வழங்கும் வள்ளல் தன்மையுடைவர். வணிகர்கள் ஈட்டியப் பொருளினை பிறர்க்குக் கொடுத்து உதவும் குணம் கொண்டவர்களாக இருந்தனர் என்று மேற்கண்ட பாடல் எடுத்துக்காட்டுகிறது.

தொகுப்புரை

நாட்டின் செல்வச் செழிப்பிற்கு வணிகம் மிகச்சிறந்த காரணமாக விளங்கிற்று. இலங்கை நகரில் நெசவுத் தொழிற்சாலை, துணிக்கடைகள், அணிகலன்கள் விற்கும் நிலையங்கள், பொற்கலங்கள் மற்றும் மட்கலங்கள் செய்யும் தொழிற்கூடங்கள், தச்சுப்பட்டறைகள் போன்ற விற்பனைக் கூடங்கள் காணப்படுகின்றன. பண்டமாற்றுமுறை கப்பலின் துணை கொண்டு கடல் வழியாகவும் மேற்கொள்ளப்பட்டது. நம் நாட்டார், பண்டமாற்றுமுறையினை மேற்கொண்டு, செம்பொன் மற்றும் விலைமதிக்க முடியாதப் பலப் பொருட்களைப் பெற்றனர். ஆடைகள், மயில்தோகை, பல மணிகள், சங்குகள், முத்துக்கள், மிளகு எனப் பலப்பொருட்களை ஏற்றுமதி செய்தனர். வணிகர்கள் வாங்கிக் கொள்ளும் பொருள்களில் கூடுதலாக இல்லாமலும் விற்றுக்கொடுக்கும் பொருள்களில் குறைவு இல்லாமலும் நேர்மையான முறையில் வணிகத்தினை மேற்கொண்டனர். வணிகர்கள் ஈட்டிய பொருள்களை மழை போல் வாரி வழங்கினர். இராவணகாவியத்தில் வணிகர்கள் நேர்மையான முறையில் வணிகத்தினை மேற்கொண்டு அறவழியில் வாழ்ந்துவந்தனர் என்பதை அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. கதிரைவேற்பிள்ளை.நா, தமிழ்மொழி அகராதி, முதல் பதிப்பு-2011, சாரதா பதிப்பகம், சென்னை.
2. சுப்பிரமணியன்.ச.வே, தமிழ் அகராதி, முதற்பதிப்பு-திசம்பர், 2005, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.
3. புலியூர்கேசிகன் உரை, எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும், ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை-2020.
4. மணிமாறன்,திருக்குறள் இனிய தெளிவுரை, முதற்பதிப்பு-2005, சாரதா பதிப்பகம், சென்னை.
5. வெற்றியழகன்.ந, புலவர் குழந்தையின் இராவணகாவியம் மூலமும் உரையும், முதல் பதிப்பு-2006, சாரதா பதிப்பகம், சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

04. வில்லிசை வேந்தர் வாழ்வும் வில்லிசைப் பணியும்

க.மணிகண்டன்,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி

முனைவர் பா.பொன்னுராஜன்
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள்
கல்லூரி,சிவகாசி

DOI 10.5281/zenodo.17201243.

Abstract

The life and work of Villisai Vendar Pichaikutty is the topic of the study. Born in an ordinary family, Pichaikutty learned every basic text through villupattu, and explained the Silappadhikaram, Thirunavukkarasar Thondu and Kannan Dhuthu in a way that even the ordinary layman could understand, and also recorded what was song orally for political reform.

Key Words: *Bow singing, bow, pitcher, wooden stick, salarah, bat, bells, stringed instrument, stories.*

முன்னுரை

உலகில் பல்வேறு மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். தமிழ் மொழி பேசும் மக்கள் தங்களுக்கென்று தனிச்சிறப்பையும் பெருமையும் கொண்டுள்ளனர். பண்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. அதிலும் கலைப்பண்பாடு ஏனைய மக்களைக் காட்டிலும் சிறப்புடைய ஒன்று. அவ் வில்லிசை வேந்தர்களையும் அவ்வில்லிசையின் பணியினையும் இவ் ஆய்வுக்கட்டுரையில் பின்வருமாறு காண்போம்.

வில்லிசை வேந்தரும் பணியும்

இசைக்கலையில் வில்லுப்பாட்டு தனித்த இடத்தைப் பெற்றுள்ளது. 17ஆம் நூற்றாண்டில் வில்லுப்பாட்டு, தொடக்க காலம் முன்பே இருந்திருக்கலாம் என சோமலே என்னும் அறிஞர் கூறுகிறார். இது ஒரு நிகழ்த்துக்கலையாகும். இக்குழுவில் 6 முதல் 8 நபர் வரை இடம் பெறுவர். தென் பகுதிகளான நெல்லை, குமரி இதன் பிறப்பிடமாக விளங்குகிறது. நாட்டுப்புறவியலாளர் நா.வானமாமலை கூற்று. வில்லிசை கருவிகள் வில், குடம், உடுக்கு, கட்டை, சாலரா, மட்டை, சொட்டிக்கட்டை, கயிறு மணிகள் கொப்பி, விசுகோல், ஆர்மோனியம,; டோலக் ஆகியவை இசைக்கருவிகள். காலந்தோறும் கலைமகள் தனக்கென்று ஒரு தலைமகனை ஈன்றாள் அந்த பாக்கியம் பிச்சைக்குட்டிக்குக் கிட்டியது. மக்களை மகிழ்வித்து கலை உணர்வை ஊட்டி கலைஞனின் வாழ்வினையும் பணியினையும் ஆராயும் வகையில் அமைந்தது.

பிறப்பும் கல்வியும்

1922 கோவில்பட்டி அடுத்த கரிசல் குளத்தில் பிச்சைக்குட்டி பிறந்தார். தொடக்கப்பள்ளி முதல் உயர் நிலைப்பள்ளி வரை கோவில்பட்டியில் உள்ள அரசு பள்ளியில் பயின்றார். கல்வியியல் கல்லூரியில் ஆசிரியர் பட்டம் பெற்றார். பின்நாளில் ஹோமியோபதி மருத்துவம் பயின்று பட்டம் பெற்றார்.

பணியும் வில்லிசையும்

முதலாவதாக கோவில்பட்டி அருகில் உள்ள ஜெகநாதபுரத்தில் இரண்டு ஆண்டுகள். ஆசிரியர் பணி, அதனைத் தொடர்ந்து மேலக் கரந்தையில் உள்ள ஆரிய வைசிய நடுநிலைப்பள்ளி ஆசிரியராக ஐந்தாண்டுகள் பணியாற்றினர். ஆசிரியர் பணியின் போதே மாணவர்களை வில்லிசை கலைஞனாக உருவாக்கி, பரிசுப் பொருளையும் வாங்க வைத்தது மட்டுமல்லாமல், வானொலியில் பாடவும் வைத்தார். இரவு நேரங்களில் ஹோமியோபதி

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மருத்துவராகவும் பணியாற்றினர். தன் வருமானத்தில் ஈட்டிய வில்லிசை வருமானத்தை வைத்து ஆரிய வைசிய நடுநிலைப்பள்ளியை தரம் உயர்த்தினார்.

குடும்பம்

1939-இல் பிச்சைக்குட்டியின் திருமணம் கோவில்பட்டியில் நடைபெற்றது. ஆறு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். மூன்றாவது மகனான பார்வதி நாதன் தந்தையைப் போலவே வில்லிசைக் கலைஞராக வாழ்ந்து காலம் சென்றார்.

வில்லுப்பாட்டு ஆர்வம்

*1948*இல் கோவில்பட்டியில் நெல்லை அய்யன் பிள்ளை வில்லிசையைக் கண்டு அதிலே இலயித்து பின்னாளில் தலை சிறந்த கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்கு சொந்தக்காரர் செவக்குளம் தங்கையா நாடார். தோவளை சுந்தரம் போன்றோர்கள் ஆரம்ப காலத்தில் பகுதிநேர வில்லிசைக் கலைஞராக வலம் வந்தார்கள். *1953* தேர்தல் பரப்புரையில் இருந்து தான் பார்த்த ஆசிரியப் பணி மற்றும் ஹோமியோபதியை விட்டு விட்டு முழுநேர வில்லிசைக் கலைஞராக மாறினார்.

வில்லிசை நிகழ்த்துதல்

வில் - வைரம் பாய்ந்த அடி பனைமரத்தில் செய்யப்படும். வில்லை இரண்டு பாகமாக மடித்துக் கொண்டாடி வந்து புதுமை செய்தார்.

குடம் - நீண்ட நெடுவமாக அடிப்பகுதி பொருத்தே வாய்ப்பகுதி சுருக்கமாகவும் இருக்கும். காரகை முட்கள் கலந்து குடம் செய்யப்படும்.

உடுக்கை - இரண்டு பக்கமும் வாய்ப்பகுதி கொண்டு முனையில் துளையிட்டு கயிறுகளால் கட்டப்பட்டவை. மரத்துண்டினால் ஆனவை. வெங்கலத்திலும் இருந்தவை

சாலரா - வெங்கலம் அல்லது இரும்பினால் ஆனவை. பாடும் பாட்டிற்கேற்ப வாசிக்கப்படும்.

வீசுகோல் - முதல் வரை வீசுகோல் இரண்டு மாணிக்க பறல்கள் நிரப்பபட்டவை.

கட்டை - வேம்பு மரத்தினால் செய்யப்பட்டவை

மணிகள் - ஒற்றைப்படை எண்களால் தொங்கவிடப்படும் இரும்பினாலும் செம்பினாலும் ஆனவை.

ஆர்மோனியம்

பிச்சைக்குட்டி செய்த பணியில் மிக முக்கியமான தொன்று பாடலின் போது வாசிக்கும் ஆர்மோனியம் அந்த வில்லிசை கேட்க இனிமையை கொடுத்தது.

டோலக்

கர்நாடக சங்கீதத்தையும் கற்றவராக பிச்சைக்குட்டி இருந்தார். மேலும் மற்றொரு புதுமையை படைக்க எண்ணி டோலக் இசையும் சேர்ந்து வாசிக்க வைத்தார்.

வில்லிசைக் கலைக்கும் கலைஞர்களுக்கும் பெருமை தேடித் தந்தவர். வில்லிசை என்றால் தொடர்ந்து இரவு பகலாக நடக்கும். பழமொழியும் வில்லை போற்றுகிறது. “வில்லடிச்சான் கோவிலிலே விளக்கேத்த யாருமில்லை” என்று நேரத்தை குறைத்து. புதுமையான கதைகளை எடுத்து பாடி மக்களை மகிழ்வித்தார்.

சமய அடிப்படை - அப்பர் கதை, சுந்தரர் கதை, ஆதி சங்கரர் கதை

கற்பு நெறி அடிப்படை - கண்ணகி கதை, ரேணுகாதேவி சரிதம்

தொன்ம அடிப்படை - கண்ணன் தூது, வள்ளி திருமணம், தருமிக்கு பொற்கிழியளித்த கதை, சீதா கல்யாணம், மந்தரை சூழ்ச்சி, அனுமன் தூது, வாலி மோட்சம்

அரசியல் சீர்திருத்தம் - கடவுள் முன் காந்தி, சுதந்திர உதயம்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அப்பர் கதை

திருநாவுக்கரசர் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தமிழ்நாட்டில் பக்தி இலக்கியத்தை வளர்த்தவர்.

"உழவாரப் படைகொண்டு தொண்டு செய்து
உலகுய்யப் பதிகங்கள் பாடி வைத்த" **(வி.வே.பிச்சைக்குட்டி, ப.168)**

உழவாரப் பணியை தொடங்கிக் தொண்டு செய்து உலகிற்காக பதிகங்கள் பாடி தமிழ் அருளிய இறைவனை திருநாவுக்கரசு கதைபாட காத்தருள்வாய் தமிழ்த்தாயே என்று இப்பாலடி உணர்த்துகின்றது.

கண்ணகி கதை

சிலப்பதிகாரத்தின் மூலம் வீரத்தையும் பத்தினித் தன்மையையையும்,

"தித்திக்கும் செந்தமிழே தெய்வக் கனிமொழியே
(உன்) வண்ணத் திருமார்பில் மணியாரம் எனத்திகழுமே
கண்ணகியின் கதைபாடக் காத்தருள வேண்டுமம்மா"

(வி.வே.பிச்சைக்குட்டி, ப.165)

எடுத்துக்கூறுவதோடு மட்டுமல்லாமல் பின் கண்ணகி தெய்வ வழிபாடாக மாறியது என்பதனை இப்பாலடியின் வழியாக அறியமுடிகின்றது.

கண்ணன் தூது

துதிப்பாடல் மூலம் வில்லிபுத்தூராரின் பாடலைத் தூதுப்பாடலாக,

"நீடாழி உலகத்து மறை நாலோ டைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்ன நாள்"

(வி.வே.பிச்சைக்குட்டி, ப.165)

கண்ணன் தூதுப்பாடலாக அமைக்கப்பெற்றுள்ளது.

அரசியல் சீர்திருத்தம்

1952-ஆம் ஆண்டில் பொதுத்தேர்தலின் போது நிகழ்ந்த தேர்தல் விழிப்புணர்வையும் இறைவன் முன் காந்தி சோர்வுற்று அமர்ந்திருக்கிறார். பொருளாதார ஏற்றத்தாழ்வு மதச்சார்பின்மை, கையூட்டு, ஊழ் போன்றவை அன்றைய அரசியல் சூழலுக்கேற்ற நிலையை பாடலாய் பாடினர்,

"நாளெலாம் ஓரை ஏய்த்து நாணயப் பேச்சுப்பேசி
பாழ்படும் ஏழை வாழ்வைப் பரிகசித்து இழித்துக்கூறி
ஆள்கிறோம் என்னும் அந்த அகந்தை கொண்டலைத்தேர் எண்ணம்"

(வி.வே.பிச்சைக்குட்டி, ப.164)

இத்தைகையான கதைகளை தேர்வு செய்து தொண்டையும் இறைவனையும் அடையும் வழியும் அப்பர் கதை மூலம் விளக்கினர். குடிமக்கள் காப்பியம் என்றதுக்கு ஏற்ப கண்ணகி உடைய கதைகளையும் மக்கள் இடத்தில் சேர்த்தார். நம்முடைய தொன்ம நூல்களை அறிந்து பாமரனுக்கும் புரியும் வடிவில் கண்ணன்தூது, வாலி மோட்சம் போன்ற கதைகளை பாடியும் மக்களை மகிழ்வித்தார். நெறியான வாழ்வை வாழும்படி எடுத்துரைத்தார். முன்னே சொன்னது போல் இன்றைய காலச் சூழலில், அரசியல,; கையூட்டு, லஞ்சம், ஊழல் போன்றவற்றைத் தெளிவாக எடுத்து உரைக்கின்றார்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஆய்வுப்பயன்

வாழ்ந்து காலம் சென்றாலும் கதைகளையும் அழியாப்புகழையும் பெற்று இருக்கின்ற பிச்சைக்குட்டி அவரின் ஆசிரியப்பணி, மருத்துவப்பணி, வில்லிசைப்பணி ஆகியவற்றை விளக்கும் வகையில் இவ்ஆய்வு உள்ளது.

முடிவுரை

வில்லுப்பாடல் குறித்தும் வில்லிசை பிச்சைக்குட்டி குறித்தும் அவர் புராணத்தையும் இதிகாசங்களையும் பாமரனுக்கு எடுத்துரைத்து விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

துணை நின்றவை

1. வில்லிசை வேந்தர் கலைமாமணி பிச்சைக்குட்டி, வி.கே.துரை, மிதுன் குரு பதிப்பகம், 1999
2. தமிழக நாட்டுப்புறக் கலைகள், வ.ஜெயா, வானதி பதிப்பகம், 2003.
3. வல்லிக்கண்ணன் வாழ்வும் பணியும், சு.நயினார், நியூ செஞ்சுரி பதிப்பகம்,2005.
4. மாரிமுத்தன் (குடத்தூர் பிச்சைக்குட்டி குழுவினர்) நேர்காணல்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

05. புழங்குபொருட் பண்பாட்டு நிலையில் மூங்கில்

முனைவர் பா.பொன்னி
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறைத் தலைவர்
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி),சிவகாசி.
DOI 10.5281/zenodo.17201406.

Abstract:

Humanity has been changing at various levels since the beginning of the world. The basis of the development of humanity can be said to be the ability of man to think. Man has been struggling with nature to this day to face the struggles of life and fulfill his needs. Researchers say that the products he invented not only fulfill his needs but also explain the culture of his life in a particular area. The way in which man used naturally grown products can help us understand his culture. In this way, this article examines the use of bamboo on the basis of folk culture.

***Key Words**: Humanity - Nature - bamboo - Culture*

மனிதகுலம் உலகம் தோன்றிய காலம் தொட்டு பல்வேறு நிலைகளில் மாற்றம் அடைந்து வருகின்றது. மனித குலத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது மனிதனின் சிந்திக்கும் திறன் எனலாம். வாழ்க்கைப் போராட்டங்களை எதிர்கொள்ள, தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள மனிதன் இன்று வரை இயற்கையுடன் போராடிக் கொண்டு இருக்கிறான்.அவனால் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் அவனது தேவையைப் பூர்த்தி செய்வதாக மட்டும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்த அவனது பண்பாட்டினையும் விளக்குவதாக அமையும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.மனிதன் இயற்கையாக விளைந்த பொருட்களை என்னென்ன வகைகளில் பயன்படுத்தினான் என்பதன் வழி அவனது பண்பாட்டினை அறிந்து கொள்ள முடியும்.அந்த வகையில் மூங்கிலின் பயன்பாட்டினை புழங்குபொருட்பண்பாட்டின் அடிப்படையில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

புழங்கு பொருட்பண்பாடு

புழங்குதல் என்பதற்குக் "கையாளுதல், பழகுதல்" (திருமகள் தமிழகராதி ,ப.721) என்று திருமகள் தமிழகராதி பொருள் தருகிறது. பொருட்கள் பண்பாடு இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. பழங்கால மக்கள் தங்களின் அன்றாடத் தேவைகளுக்காக உருவாக்கிக் கொண்ட பொருள்கள் அனைத்தும் பண்பாட்டின் அடிப்படையில் காணமுடிகிறது. பொருளும் பண்பாடும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று கருதப்படுகிறது. மனிதன் உருவாக்கிய ஒவ்வொரு பொருளும் அம்மனிதனின் காலம் மற்றும் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாக அமைகிறது"(அ.கிருட்டினன், தமிழர் பண்பாட்டியல், ப.5) என்பர். "பண்பாட்டின் கண்ணாடி புழங்கு பொருட்கள்" (பக்தவத்சல பாரதி , தமிழர் மானிடவியல., ப.309) என்று குறிப்பிடுவார் பக்தவத்சல பாரதி.

"புழங்கு பொருட்பண்பாட்டைப் பொருத்த வரை பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன? எவ்வாறு? எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன? என்ற இரண்டு நிலைகளைப் புரிந்து கொண்டால் புழங்கு பொருட் பண்பாட்டை முழுவதுமாகப் புரிந்து கொள்ளலாம் என்பார் ஜேம்ஸ்டீட்ஸ்" (பக்தவத்சலபாரதி, தமிழர் மானிடவியல், ப.325)

"இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும் கலைப் படைப்புகளாகவும் (Artitacts) மாற்றிக்கொள்வதையே புழங்கு பொருள்சார் பண்பாடு என்றும் மானுடக் குழு ஒன்றின் தொழில் நுட்பத்திறனும் புழங்கு பொருள் சார்ந்த கலைத்தொழில்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வேலைப்பாடமைந்த பொருட்களும் புழங்கு பொருள் பண்பாட்டில் அடங்குகின்றன" (ரெஜித்குமார். புழங்கு பொருள் பண்பாடு, ப. 2) என்றும் குறிப்பிடுவர். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டினை மற்றொரு குழுவினரோ அல்லது காலம் கடந்த பின்னர் அதே குழுவினரோ அறிந்து கொள்வதற்கு இப்புழங்கு பொருட்கள் துணைபுரிகின்றன எனலாம்.

மூங்கில்

மூங்கில் சங்ககாலமக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ளது எனலாம். உணவுப்பொருளாக, கட்டுமானப் பொருளாக, பயன்பாட்டுப் பொருளாக என்று பல்வேறு நிலைகளில் மூங்கில் சங்ககாலமக்களால் பயன்படுத்தப் பட்டுள்ளதை அறியலாகிறது.

மூங்கில் குழாய்கள்

சங்ககாலத்தில் மூங்கில் குழாய்களில் கள் போன்ற மதுப்பொருட்களை ஊற்றிப் பாதுகாத்துள்ளனர்.

"திருந்து அமை விளைந்த தேக்கள்
தேறல் காநிலை எருமைக் கழைபெய தீம்தயிர்"

(மலைபடுகடாம். *522-523)*

என்ற அடிகளும்,

"நெடுங்கண் ஆடு அமைப் பழுநி, கடுந்திறல் பாப்புக்
கடுப்ப அன்ன தோப்பி வான் கோட்டு"!! ***(அகம் 346. 6-7)***

என்ற அடிகளும் இதனை விளக்குவதாக அமைகின்றன.மூங்கில் நீர் கசிவதைத் தடுக்கும் தன்மை கொண்டதாக இருந்ததால் அதனை நீர்மப்பொருட்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தியுள்ளனர் எனலாம்.

நீர்மப்பொருட்களைப் பாதுகாக்க மட்டும் அல்லாமல் பூக்களை அதனுள் இட்டுக் கொண்டு சென்று விற்றதையும் இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

"பைங்குழைத் தழையர் பழையர் மகளிர் கண்திறல் நீள்
அமை கடிப்பின் தொகுத்து" ***(அகம்.331.6)***

என்ற அடிகளால் பழையர் மகளிர் நீண்ட மூங்கில் குழாய்களில் பூக்களை விற்கக் கொண்டு சென்றதை அறியலாகிறது.

மூங்கில் வீடு

மூங்கில்கள் கூரை வேயவும், பந்தல் போடவும் தற்காலத்திலும் பயன்படுத்தப் பட்டு வருகின்றன எனலாம். சங்ககாலத்தில் மூங்கிற்கழிகளைக் கொண்டு அவற்றின் குறுக்காக வெள்ளிய கோடுகளை நிரைத்துத் தாழை நார் கொண்டு பிணித்துத் தருப்பைப் புல்லால் வேயப்பட்ட குறுகிய வீடுகளை அமைத்தனர் என்பதனை,

"வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பை"

(பெரும்பாண் *263:65)*

என்ற பாடலடிகளின் வழி அறியலாகிறது.இன்றும் பல்வேறு தங்கும் விடுதிகளில் அழகிற்காக மூங்கில் வீடு போன்ற அமைப்பினை உடைய தங்கம் இடங்களைக் காணமுடிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மூங்கில் வேலி

வீடுகளின் பாதுகாப்பிற்காக வீட்டைச் சுற்றி வேலி அமைப்பது மரபு. சங்க காலத்திலும் மூங்கில் முள்ளினைக் கொண்டு வேலிகள் அமைத்திருப்பதனை இலக்கியங்கள் வழி அறியலாகிறது.இயற்கையாக அமையும் வேலியை வாழ்வேலி என்றும், செயற்கையாக அமையும் வேலியை இடுமுள்வேலி என்றும் அழைத்துள்ளனர்.

தொடர் நாய் யாத்த துன்னருங் கடிநகர்;
வாழ் முள் வேலிச் சூழ் மிளைப் படப்பை

(பெரும்பாணாற்றுப்படை - *125,126)*

என்ற அடிகளால் வாழ்வேலியைப் பெரும்பாணாற்றுப்படை வாழ்முள்வேலி என்று சுட்டியிருப்பதனை அறியலாகிறது.

வேரல்வேலி வேர்க்கோட்பலவின்
சாரல்நாட செவ்வியை ஆகுமதி (குறுந். *18 1-2)*

என்ற அடிகளின் வாயிலாக வேரல் பலா மரங்களுக்கு வேலியாகப் பயன்படுத்தப் பட்டமையை அறிந்து கொள்ளமுடிகிறது.

வேரல் வேலி சிறுகுடி அலற *(நற் 232-4)*

என்ற அடி வாயிலாக வாழைத்தோப்பில் மேய்ந்த யானை ஊரில் போடப்பட்டிருந்த வேரல் வேலியை மிதித்துக்கொண்டு நுழைந்து பலாப்பழங்களைத் தின்றமையை அறியலாகிறது. இவற்றின் வாயிலாக மூங்கில் முள் வேலியாக சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டமையை அறியலாகிறது.

மூங்கில் ஏணிகள்

ஏணிகளில் கண்ணேணி என்றொரு வகை உண்டு. இந்த வகை ஏணிகள் மூங்கில் கணுக்களிடையே கால் வைத்து ஏறுவது போல் வடிவமைக்கப்பட்டிருக்கும். இன்றும் இத்தகைய ஏணிகள் பயன்பாட்டில் இருப்பதை நாம் காணமுடியும்.இது சங்க இலககியங்களில் மால்பு என்று சுட்டப்படுகிறது.

உயரமான மலைகளில் தேனெடுக்க மால்பினைப் பயன்படுத்துவர் என்பதனை,

'பெருந்தேன் கண்படு வரையில் முது மால்
பறியாது ஏறிய மடவோன் போல' - (குறுந்தொகை *273)*

என்றும்,

மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்' - (புறம் *105)*

என்றும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இம்மால்பு நிலையாக இருக்கும் என்பதனை,

'நெடுவரை, நிலைபெய்து இட்ட மால்பு நெறியாக
பெரும் பயன் தொகுத்த தேங்கொள் கொள்ளை'

- (மலை படுகடாம் *315 - 316)*

என்ற அடிகள் விளக்குகின்றன. தினைப்புனத்தின் புகையால், ஒளிமங்கிய நிலவினை தேனடை எனக்கருதி, அதனை எடுக்க வேங்கை மரப்பரணிலிருந்து ஏணி அமைந்திருப்பர் என்பதனை,

'வானூர் மதியம் வரைசேரினவ்வனரைத்,
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்கும்' - (கலித்தொகை *39)*

என்று கலித்தொகை குறிப்பிடுகின்றது. இன்றும் மலைவாழ்மக்கள் இம்மால்பைப் பயன்படுத்தித் தேனெடுப்பதனைக் காணமுடிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மூங்கில் கோல்

மூங்கிலினை சங்ககால மக்கள் கோலாகவும் பயன்படுத்தியுள்ளார்கள்.

முழு நெறி அணங்கிய நுண் கோல் வேரலோடு
எருவை மென் கோல் கொண்டனிர் கழி-மின் (மலை *223, 224)*

என்ற பாடலடிகளின் வழி சிறுமூங்கிலுடன் எருவை என்னும் நாணலின் மெல்லிய கோலினையும் கொண்டு சென்றமையை அறியலாகிறது.

விளையாட்டுக்கருவி

மூங்கில் கொம்புகள் சிறுவர்களின் விளையாட்டுக் கருவிகளாக சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஊன்றித்தாண்டல்*(polevault)*இது இக்கால உலக விளையாட்டுகளில் சிறந்துவிளங்கும் விளையாட்டு. சங்ககாலத்தில் குன்றக் குறவர்களின் சிறுவர்கள் இந்த விளையாட்டைவிளையாடியிருக்கின்றார்கள்.மந்தி தன் வயிற்றில் குட்டியைப் பற்றிக்கொண்டு, மூங்கில் நுனியைப் பற்றி வளைந்தாடித் தவ்வுவது கண்ட குன்றத்துக் குறவரின் புதல்வர் தாமும் மூங்கில் கொம்பைப் பற்றி வளைந்து ஆடி, வெற்றி கண்டு, அந்த வெற்றியை வெளிப்படுத்தக் கைகொட்டி மகிழ்ந்தனர் என நற்றிணை *(95)* கூறுகின்றது.

செம்முகத் துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்
கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத்தெழுந்து
குறக்குறு மாக்கள் தாளம் கொட்டும் குன்றகம் - நற் *-95*

என்ற பாடலடிகளால் இதனை அறியமுடிகிறது.

மூங்கில்தூண்டில்

சங்ககாலத்தில் மக்கள் மீன்களைப் பிடிக்க மூங்கிலால் ஆன தூண்டிலைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

நெடுங்கழைத் துண்டில் விடுமீன் நொடுத்து
கிணைமகள் அட்ட பாவற் புளிங்கூழ்" - புறம் *399*

என்ற பாடலடிகள் மூங்கில் குச்சியால் தூண்டில் செய்யப் பெற்று, மீன் பிடிக்கப் பெற்றது என்ப தையும், அது நொடுத்து என்பதால் விற்கப் பெற்றது.

என்பதையும் விளக்குகின்றன.

மூங்கில் முரசு

சங்ககாலத்தில் மூங்கிலால் முரசு செய்யப் பெற்றமையை கலித்தொகை விளக்குகிறது.

ஆய் நுதல், அணி கூந்தல், அம் பணைத் தட மென் தோள்,
தேன் நாறு கதுப்பினாய்/யானும் ஒன்று ஏத்துகு
வேய் நரல் விடரகம் நீ ஒன்று பாடித்தை (கலித்தொகை *40 - 7 -10)*

என்ற பாடலடிகளால் மூங்கிலால் முரசு செய்யப்பட்டமையை அறிந்து கொள்ள முடிகிறது.

புல்லாங்குழல்

இசைக்கருவிகளை விளக்குமிடத்து மூங்கிலால் கணுக்களை உடைய இசைக்கருவிகள் எனப் பதிற்றுப்பத்து விளக்கம் தருகிறது.

"கண் அறுத்து இயற்றிய தூம்பொடு சுருக்கி" (பதிற்றுப்பத்து *- 41.4)*

என்ற அடிகளில் மூங்கிலின் கணுக்களை அறுத்து செய்யப்பட்ட நெடுந்தும்பை எனும் இசைக்கருவி எனப் பதிற்றுப்பத்து சுட்டுவது புல்லாங்குழலினையே எனலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மூங்கில்களின் இப்பயன்பாடுகளின் வழியே சங்ககால மக்களின் பண்பட்ட பண்பாட்டினை அறியமுடிகிறது. நீர்மப்பொருட்களை கெட்டுப் போகாதவாறு பயன்படுத்த மூங்கில் உதவும் என்பதனை சங்ககால மக்கள் அறிந்து இருந்திருக்கின்றனர். உறைவிடத்தை பாதுகாப்போடு அமைத்துக் கொள்ள வேலியிட்டு பயன்படுத்தி இருந்திருக்கின்றனர். ஏணிகள், முரசு, தூண்டில் முள், இசைக்கருவிகள், கோல், விளையாட்டுக் கருவி என்று பல்வேறு பொருட்களை மூங்கில்களால் செய்ததன் வழி அவர்களின் பண்பட்ட அறிவுத்திறனை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

துணைமை நின்றவை:

1. பத்துப்பாட்டு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,, அம்பத்தூர், மெட்ராஸ், அம்பத்தூர், சென்னை.
2. கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், மெட்ராஸ், அம்பத்தூர், சென்னை.
3. நற்றிணை(மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,, அம்பத்தூர், சென்னை.
4. புறநானூறு(மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,, அம்பத்தூர், சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

06. "சைவ சித்தாந்த தத்துவங்களும் கோவில் சிற்ப கலையில் அவை கொண்டுள்ள பங்களிப்புகளும்"- ஓர் பார்வை

ப.பிரபு
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இந்தியப் பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் துறை,
அரசினர் கலைக் கல்லூரி, (தன்னாட்சி),
கும்பகோணம்.
செல் 7373375114. Prabhu1997mp@gmail.com

முனைவர் சா.லதா,(ஆய்வு நெறியாளர்)
உதவிப் பேராசிரியர்,
இந்தியப் பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் துறை,
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
கும்பகோணம்.
செல் 9786791054 - lathasrinivasan1979@gmail.com

DOI 10.5281/zenodo.17201590.

Abstract

Saiva Siddhanta, the philosophical core of the Tamil Saiva tradition, guides the soul toward liberation through Pati (Lord Siva), Pasu (Soul), and Pasa (Bonds - Anava, Karma, Maya). These concepts are vividly expressed in temple sculptures, with Nataraja portraying the Panchakritya (Five Divine Acts) and Dakshinamurti symbolizing yoga and liberation through the Chin Mudra. Works like Chakradana Murti and Harihara highlight both rivalry and harmony between Saivism and Vaishnavism, reflecting Tamil Nadu's religious tolerance. This fusion of philosophy and art spreads spiritual ideas to the masses and stands as an enduring testament to Tamil culture's spiritual and artistic richness.

Keywords: *Saiva ideology - Godhood in Saiva - Sculptures that elevate Saiva - Sin Mudra philosophy - Saiva and Vaishnavism unity sculptures.*

முன்னுரை:

உலகில் எத்தனையோ சமயங்கள் இருந்தாலும் சில சமயங்கள் மட்டுமே மக்களை இறை நிலைக்கு உயர்த்த வல்லதாக திகழ்கின்றன. பிறவி எனும் பெருங்கடலை நீந்தி "முத்தி" எனப்படும் கரையை அடைவதே மனித வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் என்பதை எல்லா சமயங்களும் உடன்படுகின்றன[1]. ஆனால் இந்த முக்தி நிலை இப்படிப்பட்டது என்று விளக்கி கூறுவதில் தான் சமயங்களுக்குள்ளே பேதங்கள் காணப்படுகின்றன. மிகவும் எளிமையான முயற்சிகளால் உன்னதமான முக்தி பேற்றை அடைய வழி வகுத்து கொடுப்பதே சைவ சித்தாந்தம் ஆகும். இக்கட்டுரையில் சைவ சித்தாந்த தத்துவங்களும், கோவில் சிற்பக்கலையில் அவை கொண்டுள்ள பங்களிப்பும் பற்றி காண்போம்.

சைவ சித்தாந்த தத்துவங்களின் தோற்றம்:

சைவ சித்தாந்தம் என்பது தமிழ்ச் சைவ சமயத்தின் முக்கியமான தத்துவ முறையாகும். இதன் தோற்றம் சங்ககாலத்திற்கும் அதற்கு முற்பட்ட தமிழகச் சைவ மரபுகளுக்கும் தொடர்புடையது. ஆரம்பத்தில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் தேவாரத் திருமுறைகளில் (திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்) பாடல்களாக வெளிப்பட்டன. பின்னர் 12ஆம்-14ஆம் நூற்றாண்டுகளில் மெய்கண்டார் மற்றும் பிற சைவ சித்தாந்த ஆழ்வார்கள் இத்தத்துவங்களை முறையாக நூல்களாக அமைத்தனர்[2].

இத்தத்துவம் பதி-பசு-பாசம் என்ற மூன்று அடிப்படைக் கருத்துகளை மையமாகக் கொண்டு உருவானது.

- பதி - இறைவன் (சிவன்)
- பசு - ஆன்மா
- பாசம் - பந்தங்கள் (ஆணவம், கன்மம், மாயை)

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சைவ சித்தாந்தத்தின் தோற்றம் என்பது சங்ககாலச் சைவ வழிபாடுகள், தேவாரத் திருமுறைகள், நாயன்மார்களின் பக்திப் பரம்பரை, பின்னர் ஏற்பட்ட ஆழமான தத்துவ விளக்க நூல்கள் ஆகியவற்றின் வளர்ச்சியால் உருவானது ஆகும்[3].

சைவ சித்தாந்தம் எனப்படுவது:

"சித்தாந்தம் என்பது முடிந்த முடிவு என்றும் நன்கு நிறுவப்பட்ட முடிவு என்றும் பொருள் தரும்". கௌதம நியாய சூத்திரம் என்னும் நூல் பல குணங்களில் இருந்தும் ஆராய்ச்சி செய்யப்பட்டு தர்க்க ரீதியாக எது நிறுவப்படுகிறதோ அதுவே சித்தாந்தம் என்பது என்று கூறுகிறது. சித்தாந்த சைவத்தின் பிறப்பிடம் தென்னாடு என்பது தத்துவ நூல் அறிஞர்கள் பலரின் ஒருமித்த கோட்பாடு ஆகும்[4].

"சிவப்பரம் பொருளால் உருவாக்கப்பட்டதாகவும் சிவப்பரம் பொருளை உணர்த்துவதாகவும் விளங்குவது சைவ சமயம்" என்று காரணமகமம் தெளிவுபடுத்தி கூறுகிறது. காமிகம் முதல் வாதுளம் ஈராக உள்ள *28* சிவாகமங்களும் இவற்றின் வழி தோன்றிய உபாகமங்களும் சித்தாந்தம் என்பதில் அடங்கும்.

இறை உருவங்களில் வெளிப்படுத்தி காட்டப்படும் சைவதத்துவங்கள்:

சைவத்தில் இறைநிலை

கடவுள் இரண்டு நிலைகளை உடையவராக கருதப்படுகிறார் மனம் வாக்குகளுக்கு அப்பாற்பட்ட கடந்த நிலை முதல் நிலையாகும். இரண்டாவது நிலை உலகத்தில் காணப்படும் எல்லா பொருள்களிலும் நிறைந்து காணப்படும் நிலை. இது கலந்த நிலை ஆகும். அறிவுப்பொருளை சிவமென்றும் சடப்பொருளானஇயற்கையை சக்தி என்றும் நம் முன்னோர் பெயரிட்டு அமைத்தனர் . எனவே சிவமும் சக்தியும் பிணைவதால்பிரபஞ்சம் இயங்குகிறது. தனித்த சிவம் தானாகவும் இயங்கும், இயற்கையோடு கலந்தும் இயங்கும். தனித்த இயற்கை அல்லது சக்தி தானாக இயங்க இயலாது. சிவத்தோடு சேர்ந்தே இயங்க முடியும் இத்தகைய இயக்கங்களை கருத்தில் கொண்டே நமது கடவுள் உருவங்கள் அனைத்தும் இயக்கத் தன்மை பெற்றவர்களாக காட்டப்படுகின்றனர்.

நடராஜமூர்த்தி சிற்பவமைதி வெளிப்படுத்தும் தத்துவம்:

கடவுள் உயிர்கள் மீது இரக்கம் கொண்டு அவை மீது படிந்துள்ள மாசுக்களை நீக்கி தூய்மைப்படுத்துகிறார். கருமுகிலால் மறையப் பெற்ற சூரியன் எங்கனம் காற்றால் முகில் அகற்றப்பட்டு ஒளிமயமாய் விளங்குகின்றதோ அங்கனமே 'மலத்தால் கட்டுண்ட ஆன்மா இறைவனால் மலநீக்கம் பெறும்". அதன்பின்னே அவ் உயிர்களை இன்ப நிலை அடைய செய்கிறான். இதனை கடவுள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கின்ற ஐந்த தொழில்களால் செய்கிறார் என்பர் சித்தாந்திகள்.நடராஜர் சிற்ப அமைதி இறைவனின் இந்த ஐந்தொழில்களையே விளக்குகிறது.

"உயிர்கள் மீது படிந்துள்ளமாசு என்பது "ஆணவம், மாயை, கன்மம்" என்ற மும்மலங்கள்ஆகும்".

படைத்தல் தொழில்-உயிர்களிடத்து தனு, கரண, புவன போகங்களை ஏற்படுத்தி தருதலை குறிக்கும்.

காத்தல் தொழில் - உயிர்கள் தனு, கரண, புவன போகங்களை அனுபவிக்கும் காலத்தை குறிப்பதாகும்.

அழித்தல் தொழில் - உயிர்கள் வினைப்பயனை அனுபவித்து முடித்தபின் தனு, கரண, புவன போகங்களை உயிர்களிடத்திலிருந்து கடவுள் நீக்கி விடுவதாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மறைத்தல் தொழில்- உயிர்கள் நல்வினைகளையும் தீவினைகளையும் செய்யக்கூடும் ஒரு பிறவியில் செய்யும் நல்வினை தீவினைக்கு ஏற்றவாறு மறுபிறவியில் உயிர்கள் மீண்டும் தனு, கரண, புவன போகங்களை பெற்று மீண்டும், மீண்டும் இங்கனமே பிறந்து, பிறந்து பாசங்களை போக்கிக் கொள்கின்றன. ஒவ்வொரு பிறவியிலும் மாசு கொள்கின்றன. இங்கனம் மீண்டும் பிறப்பதனால் அடையும் துன்பங்களை கண்டு வெறுப்படையாமல் அதிலேயே அழுந்துமாறு கடவுள் வாழ்த்துகிறார். வினைப்பயினை துய்ப்பதற்காக உயிர்களை அழுந்தி இருக்குமாறு கடவுள் செய்யும் தொழிலே மறைத்தல் தொழிலாகும்.

அருளல் தொழில் - மாசு நீங்கி தூய்மை அடைந்த உயிருக்கு கடவுள் இன்பத்தை தருகிறார் அதற்கு அருளல் என்று பெயர். கடவுளின் இத்தகைய பஞ்சகிருத்தியங்களையும் அதனை சார்ந்துள்ள தத்துவங்களையும் உள்ளடக்கிய உருவமே ஆனந்த நடராஜப் பெருமானின் திரு உருவமாகும்[5].

தட்சிணாமூர்த்தி சிற்பவமைதி வெளிப்படுத்தும் தத்துவங்கள்:

தொல்காப்பியர் வரையறுத்த எண்வகை மெய்ப்பாட்டில் ஆறாவதாக பெருமித சுவையை குறிப்பிடுகிறார். இதற்கு "எல்லோரோடும் ஒப்பநில்லாது பேரல்லையாக நிற்றல்" என பொருளாகும். தட்சணாமூர்த்தி திருக்கோலம் என்பது இறைவனை அடைய பெரும் யோகத்தினை எவ்வாறு செய்ய வேண்டும் என்று இறைவனே தன் திருவாயால் உணர்த்தியும் யோகம் செய்து காட்டியும் அருளிய திருக்கோலம் என்றும், பிரம்மனது மகன்களான சனகர், சனர்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வருக்கும் சின்முத்திரை தத்துவத்தை உபதேசித்து, பின் யோகத்தை உபதேசித்து அருளிய சிற்பமாகும்[6].

சின் முத்திரை தத்துவம்:

பெருவிரல் கைத்தலத்தை விட்டு பிரிந்து முன்னோக்கி நீண்டு நிற்க, சுட்டு விரலானது வணங்கி பெருவிரலின் நுனியை தொட்டு வளையம் போன்று அமையும்.நடுவிரல், அணி விரல், சிறுவிரல் ஆகியன அவ்விரு விரல்களை விட்டு பிரிந்து மேல் நோக்கியதாய் பின்னியில் அடுக்கடுக்காய் நிற்கும். ஞான ஆசிரியர் மேலான தத்துவ விளக்கம் செய்யும்குறிப்பை இது உணர்த்தும்.

பெருவிரல் பதியாக்கிய பரமாத்மாவையும், சுட்டுவிரல் பசுவாகிய ஜீவாத்மாவையும், நடுவிரல் ஆணவ மலத்தையும், அணிவிரல் மாயா மலத்தையும், சிறு விரல் கன்ம மலத்தையும் குறிக்கும்.

"ஆணவம், கண்மம், மாயை என்கின்றஇந்த மலங்களில் இருந்து விடுபட்டு சுட்டு விரலான ஜீவாத்மா, பெருவிரலான பரமாத்மாவை பற்றும் பொழுது முக்தி பேற்றை அடையலாம்" என்கின்ற உயர்ந்த தத்துவ நிலையை இந்த சின் முத்திரை விளக்குகிறது[7].

சைவத்தை உயர்த்தும் சிற்பங்கள்:

இரு பெரும் சமயங்களாக திகழ்ந்த சைவமும், வைணமும் தங்களுக்குள்ளாக உயர்ந்தவை எவை என்பதை காட்ட முயன்றனர். அவற்றைசிற்பங்களில் வெளிப்படுத்த தொடங்கினர். இரணியனை கொன்ற நரசிம்மரின் சினம் தனியாமல் அவரை அழிக்க சிவன் சரபமூர்த்தி வடிவம் கொண்டார் எனவும், பெருமாளின் மச்ச அவதாரத்தை அழிக்க சிவன் கொக்கு வடிவம் கொண்டார் எனவும் புராணங்கள் எழுதப்பட்டன[8].

சக்கரதான மூர்த்தி சிற்பம் ஆய்வு பரப்பில் மதுரை மீனாட்சியம்மன் கோவில் கம்பத்தடிமண்டபத்தில் சிவபெருமான் திருமாலுக்கு சக்கராயுதத்தை தானமாக கொடுப்பதாக படைக்கப்பட்டுள்ள சிற்பமாகும்.வைணவத்தை விட சைவம் உயர்ந்தது எனும் குறிப்பு பொருளை தருகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சைவ, வைணவ ஒற்றுமை சிற்பங்கள்:

சைவ, வைணவ பூசல்கள் காணப்பட்டாலும் இரண்டு மதத்தையும் சரிநிகராக பாவிக்கும் மனப்பான்மையும் தமிழகத்தில் காணப்பட்டன இதற்கு ஹரிஹரன் சிற்பம்சிறந்த உதாரணமாகும். அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தில் பார்வதிக்கு பதில் திருமால் சிவனின் சரிபாதியாக இருக்கும் படிவம் ஹரிஹர மூர்த்தி ஆகும். இச்சிற்பத்தில்சிவன் வலப்புறமும் திருமால் இடப்புறமும் சரி நிகராக படைக்கப்படுவர். தலைக்கு மேல் ஒரு பக்கம் ஜடாமுடியும் மறுபக்கம் கிரீடமும், காதுகளில் ஒரு புறம் மகர குண்டலமும் மறுபுறம் குழையும், கைகளில் வலதுபுறம் தமருகமும் இடதுபுறம் சங்கும், கால் பகுதியில் வலதுபுறம் புலித்தோலும் இடதுபுறம் கணுக்கால் வரை ஆடையும் என இவ்வடிவம் சிவனையும் திருமாலையும் சரி நிகராய்க் கொண்டிருக்கும்.

ஆய்வுப் பயன்கள்:

1. சைவ சித்தாந்தத் தத்துவம் - பதி, பசு, பாசம் என்ற மூலக் கருத்துகளை தெளிவாக விளக்குகிறது.
2. கலை-தத்துவ இணைவு - நடராஜர், தட்சிணாமூர்த்தி சிற்பங்களில் பஞ்சகிருத்தியம் மற்றும் யோகக் கோட்பாடுகள் பற்றி விளக்குகிறது.
3. சமய வரலாறு மற்றும் ஒற்றுமை - சக்கரதான மூர்த்தி, ஹரிஹரன் மூலம் சைவ-வைணவ போட்டியும் ஒற்றுமையும் காட்டப்படுகிறது.
4. ஆராய்ச்சி பங்களிப்பு - தத்துவங்களை சிற்பங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சென்ற விதம் கலை, தத்துவம், சமூகவியல் ஆய்வுக்கு ஆதாரம்என்பதை வலியுறுத்துகிறது.
5. பண்பாட்டு பாரம்பரிய பாதுகாப்பு - தமிழ்ச் சைவ கலை மற்றும் தத்துவச் செல்வத்தை பதிவு செய்து, எதிர்காலதலைமுறையிடம் கொண்டு சேர்ப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

முடிவுரை:

சைவ சித்தாந்தம் என்பது தமிழ்ச் சைவ மரபின் ஆழ்ந்த தத்துவ அடித்தளமாக விளங்குகிறது. பதி-பசு-பாசம் என்ற மூன்று மையக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கும், முக்தி அடைவதற்குமான தெளிவான பாதையை இது வகுத்துக் காட்டுகிறது. இத்தத்துவங்கள் கோவில் சிற்பங்களில் அழகாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நடராஜர், தட்சிணாமூர்த்தி போன்ற தெய்வ உருவங்கள் பஞ்சகிருத்தியங்களையும் முக்தி நிலைக்கான யோக வழிமுறைகளையும் சின்னங்களாகக் காட்டுகின்றன. மேலும், சைவ-வைணவ ஒற்றுமையை வெளிப்படுத்தும் ஹரிஹரன் சிற்பங்கள், சமயங்களுக்கிடையேயான ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றன. இவ்வாறு, கோவில் சிற்பக் கலை சைவ சித்தாந்தத்தின் ஆழ்ந்த தத்துவங்களை கண்ணுக்குத் தெளிவாகவும் மனத்திற்கு நிலைத்துப் பதியவும் செய்கிறது. இக்கலைபாரம்பரியமும், தத்துவமும், சிற்பமும் இணைந்து தமிழின் ஆன்மிகச் செல்வத்தை உலகிற்கு எடுத்துச் செல்லும் காலத்தால் அழியாத சான்றாக திகழ்கிறது.

துணைநூற் பட்டியல்:

1. கி.லஷ்மணன், இந்திய தத்துவ ஞானம், - *2010, ISBN 978-81-8379-458-9.*
2. மெய்கண்டார், சிவஞானபோதம், சைவ சித்தாந்தப் புலவர்கள் குழு விளக்கத்துடன், கல்கி பதிப்பகம், சென்னை, *2006.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

3. முனைவர் எஸ்.பி. சபாரத்தினம்,சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்,சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை *1994.*
4. முனைவர் எஸ்.பி. சபாரத்தினம்,சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்,சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை *1994.*
5. சிற்ப கலாநிதிவை கணபதி ஸ்தபதி , சிற்ப செந்நூல், பக்கம் *158-159.*
6. முனைவர் அம்பை மணிவண்ணன், சிற்பக்கலை ஆய்வு அணுகுமுறைகள், பக்கம் *25-26.*
7. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் பழனி, சைவமும் வைணவமும், *2019.*
8. முனைவர் அம்பை மணிவண்ணன், சிற்பக்கலை ஆய்வு அணுகுமுறைகள், பக்கம் *82-83.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

07. சிற்றிலக்கியங்களில் விலங்குகள் குறித்த பதிவுகள்

சா.ஜான் பீட்டர்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சைவபானு சத்திரியக் கல்லூரி, அருப்புக்கோட்டை.
8220835612

DOI 10.5281/zenodo.17201747.

Abstract:

There is a need for the life of animals to work together with human life. Throughout time, Tamil literature has highlighted the fact that humans have used animals for many needs such as food, labor, and protection. In this way, this article examines the records of animals in the literature. Through the three-legged pallu, we can see that the social bond between animals and humans is revealed by the contribution of animals to food production, one of the basic needs of the human race. In Kalingathupbarani, the fact that animals were an army for the king ruling the country can be seen as a contribution to the country. The life of animals in the court of Kuravanji amazes humans. Through this study, we can see that humans have been dependent on animals for some reason throughout time.

Keywords: *Animal life, Kuravanji, Pallu, Barani*

முன்னுரை

தொன்மையான இலக்கண இலக்கியங்களைத் தன்னுள்ளே கொண்டு பீடுநடை போட்டுக் கொண்டிருக்கும் இயல்பை உடையது தமிழ்மொழி. தமிழ் மொழியில் இதுவரை தோன்றிய இலக்கியங்களில் மனித வாழ்வையும் அவர்களோடு வாழ்ந்து வருகிற அஃறிணை உயிர்களையும் பற்றி எவ்விதம் சித்திரிக்கப்பட்டிருப்பதுஎன்பதை நோக்குவது அவசியமானதாகும். இவ்விலக்கியங்களில் பெரும்பாலும் மனித வாழ்வின் அங்கங்களாகவோ அதற்குத் துணையாகவோ அஃறிணை உயிர்கள் பற்றிய அவதானிப்புகள் இடம்பெறுகின்றன. இவ்விதத்தில் சிற்றிலக்கியங்களில் காணப்படும் விலங்குகள் பற்றிய பதிவுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

சிற்றிலக்கியங்கள்:

பக்தியிலக்கியக் காலகட்டத்தை அடுத்துத் தழைத்த இலக்கியமாக அறியப்படுவது உலா கலம்பகம் கோவை குறவஞ்சி சதகம் தாது பரணி பள்ளு பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களாகும். சிற்றிலக்கியங்கள் நன்கு கட்டப்பட்ட பிரபந்தம,; சிறு இலக்கியம் என்றும் அழைக்கப்படுகின்றன. சிற்றிலக்கிய வகைமைகளில் விலங்குகள் பற்றிய பதிவுகள் காணப்படுவதை ஒரு சில சிற்றிலக்கிய பனுவல்களின் வழி இங்கு ஆராயப்படுகிறது. ஆய்வு எல்லையைக் கருத்தில் கொண்டு பள்ளு வகை இலக்கியங்களில் முக்கூடற்பள்ளு, பரணி வகை இலக்கியங்களில் கலிங்கத்துப்பரணி, குறவஞ்சி வகை இலக்கியங்களில் குற்றாலக் குறவஞ்சி என இம்மூன்று சிற்றிலக்கியங்களிலும் உள்ள விலங்குகள் குறித்த பதிவுகள் குறித்த பதிவுகள் மட்டும் இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

முக்கூடற்பள்ளுவில் விலங்குகள்:

உழவர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு இயற்றப்படும் பள்ளுவகை சிற்றிலக்கியங்களில் சிறந்த நூலாக காணப்படுவது முக்கூடற்பள்ளு ஆகும். இப்பனுவலில் பலியிடுதல் எனும் சடங்கில் கடாய் பற்றி பாடல் வரியாக

“கங்கணங் கட்டியே ஏழுசெங் கடாயும்
கரையச் சாத்தா முன்னே
விரைய வெட்டும்”*1*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற பாடலடிகளில் கரையடிச் சாத்தாவின் விழாவுக்குக் காப்பு கட்டி ஏழு செங்கிடாய்களையும் அவர்முன்னே விரைவாக வெட்டிப் பலியிடுங்கள் என்று கடாய் எனும் ஆட்டின் ஆணினம் பலியாடாகக் கூறப்படுவதை அறிய முடிகிறது.

தெய்வ வழிபாட்டின் விளைவாக மாதம் மும்மாரி மழை பெய்ததால் வெள்ளம் ஒவ்வொரு நிலப்பகுதியையும் சென்றடைந்ததைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அப்போது மருத நிலத்தில் வெள்ளம் வந்தது பற்றி

'பகட்டுக் கமலை வட்டத்தில் - புனல்
தகட்டுக் கமலக்க குட்டத்தில்
போயும் எருமை பதறவே - உற
மீயும் எருமை சிதறவே'2

என்ற பாடலடிகளில் மருதநிலம் செழிப்பதற்கு வந்த மழை வெள்ளத்தில் எருமைக் கடாக்கள் பூட்டி கமலை இறைத்து நீர் பாய்ச்சும் நிலப்பகுதிகளிலும், நீர்ப் பெருக்கினையுடைய அகன்ற தாமரை மலர்கள் நிரம்பிய குட்டங்களிலும் சென்று வெள்ளம் பாய்கிறது. அந்த வெள்ளத்தில் நீந்த முடியாமல் தண்ணீரை விரும்பும் எருமைகளும் கூடப் பதறின. எருவாக வயல்களிலே போடப்பட்டிருந்த எருமைச் சாணங்கள் சிதறி வெள்ளத்தோடு எங்கும் பரந்தன என்று மருதநில கருப்பொருளான உழுவதற்கு பயன்படும் எருமைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

முல்லை நிலத்தோழி மாலைநேரத்தில் தலைவி படும் துன்பத்தை நினைத்து வருந்தியதாக

"கன்றைக் கழுத்தணைத்துக் கற்றாவைக் கூவுமண்டர்
கொன்றைக் குழம்பூங் குழலிசெவிக் காகாதே"3

இவ்வடிகளில் கன்றுகளைத் தம் கழுத்தோடு அணைத்துத் தூக்கிக் கொண்டு அந்தக் கன்றுகளின் தாய்ப்பசுக்களைப் கூவி அழைக்கின்ற ஆயர்கள் கொன்றைப் பழத்தால் செய்த குழலினை ஊதி வருகின்றனர். அந்தக் குரல்தான் அழகிய கூந்தலினையுடையவளான இவளுடைய காதுகளுக்கு ஆகாதாயிற்றே என்று முல்லைநிலக் கருப்பொருளான பசு, கன்று ஆகியவை இங்கு கூறப்பட்டுள்ளது.

கலிங்கத்துப்பரணியில் விலங்குகள்:

பரணி இலக்கிய வகைகளில் ஒட்டக்கூத்தரின் கலிங்கத்துப் பரணி முதல் பரணியாக திகழ்கிறது. போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடுவது பரணி என்ற இலக்கிய வகையாகும். முதலாம் குலோத்துங்கன், யானையேற்றம், குதிரையேற்றம் பயின்றது பற்றிக் கூறுவதாக

"ஈர்இரு மருப்புடைய வாரணம் உகத்தே
இந்திரன் எதிர்த்தவரை வென்று வருமே : யான்
ஓர் இரு மருப்புடைய வாரணம் உகைத்தே
ஒன்னலரே வெல்வன் என அன்னது பயின்றே"4

என்ற பாடலடிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு தந்தங்களையுடைய இந்திரனின் யானையைச் செலுத்திப் பகைவரை வெல்வேன் என்று குலோத்துங்கன் கூறி யானையேற்றம் பயின்றான். குதிரையேற்றம் பயின்றது பற்றி

"இற்றைவரையும் செல அருக்கன் ஒருநாள் போல்
ஏழ்பரி உகைத்து இருள் அகற்றி வருமே யான்
ஒன்றை வயமான் நடவி இத்தரை வளாகத்து
உற்ற இருள் தீர்ப்பன் என மற்று அது பயின்றே"5

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எனும் பாடலடிகளில் வானத்தைச் சுற்றிச் செல்லும் ஞாயிறு ஏழு குதிரைகளைச் செலுத்தி ஒவ்வொரு நாளும் உலக இருளைப் போக்கி வருகிறான். ஆனால் நானோ வெற்றியையுடைய ஒரே குதிரையைச் செலுத்தி இவ்வுலகத்துப் பொருந்திய துன்ப இருளைப் போக்குவேன் என்று கூறி குலோத்துங்கன் குதிரையேற்றம் பயின்றான். குலோத்துங்கனின் கொடியான புலிக்கொடியின் சிறப்பு பற்றிக் கூறும்

"கெண்டை,மாசுணம்,உவணம், வாரணம்,
கேழல், ஆளி, மாமேழி, கோழி, வில்
கொண்ட ஆயிரம் கொடி நுடங்கவே
குமுறுவெம் புலிக்கொடி இலங்கவே"*6*

எனும் பாடலடிகளின் மூலம் கெண்டை மீன், பாம்பு, கருடன், யானை, பன்றி, சிங்கம், சிறந்த கலப்பை, கோழி, வில் ஆகிய சின்னங்கள் பொறித்த ஆயிரக்கணக்கான கொடிகள் அசையவும், முதற் குலோத்துங்கனுடைய கொடிய புலிக்கொடி ஏனைய கொடிகள் எல்லாவற்றிலும் மேலாகச் சிறந்து விளங்கிற்று என்று, விலங்குகளின் உருவம் மன்னர்களின் கொடிகளில் இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

குற்றாலக் குறவஞ்சியில் விலங்குகள் பற்றிய பதிவுகள்:

குறவஞ்சி இலக்கிய வகைகளில் திரிகூடராசப்பக் கவிராயரின் குற்றாலக் குறவஞ்சி நூலில் விலங்குகள் பற்றிய பதிவானது

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்"*7*

என்ற பாடலடிகளில் குறத்தி, வசந்தவல்லியிடம் மலைவளம் கூறும் பகுதியில் அமைந்துள்ளது. ஆண் குரங்குகள் பல வகையான பழங்களையும் பறித்துக்கொண்டு வந்து கொடுத்துத் தம் மந்திகளோடு கொஞ்சிக் கொண்டிருக்கும். அப்பொது அம் மந்திகள் கீழே சிந்துகின்ற கனிகளுக்காக எதிர்ப்பாத்துத் தேவர்களும் கெஞ்சிக் கொண்டிருக்கும் மலை எங்கள் மலை என்று குறத்தி குரங்கின் செயல்பாட்டைக் கூறுகின்றாள்.

வரையாடுகள் எங்கள் மலையில் உள்ள காட்டின் எம்மருங்கும் துள்ளிக் குதித்துப் பாய்ந்து ஓடிக் கொண்டிருப்பதை

"காடுதொறும் ஓடிவரை ஆடுகுதி பாயும்"*8*

எனும் இவ்வடிகள் உணர்த்துகிறது. திருக்குற்றால நாதரின் தென்ஆரிய நாட்டின் சிறப்பைக் குறத்தியிடம் கேட்கும்போதும், பல்வேறு விதமான வளங்களைக் கூறும் போதும், எருமை மாட்டினைப் பற்றி,

"சூழ மேதிஇலங்குந் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை"*9*

என்று எருமை மாடுகள் கூட்டங் கூட்டமாக இறங்குகின்ற நீர்த் துறையில் அவை சொரிகின்ற பாலை வாளை மீன்களும் பருகும் என்று கூறப்பட்டுள்ளது. திரிகூட மலையின் சிறப்பைப் பற்றிக் கூறும்போது,

"கரிகூடப் பிடிதிரியுஞ் சாரலிலே
ஒரு வேடன் கைவில் ஏந்தி
நரிகூடக் கயிலை சென்ற திரிகூடத்
தலமகிமை நவிலக் கேள்"*10*

எனும் இவ்வடிகளின் வாயிலாக ஆண் களிறுகளுடன் பெண் பிடிகள் கலந்து கூடித்திருகின்ற மலைச் சாரலில் ஒரு வேடனானவன் தன் கையிலே வில்லினை ஏந்தியவனாக நரியினைத் துரத்தியவாறே கயிலை மலையைச் சென்றடைந்து முக்தி பெற்றான், என்று கூறப்பட்டுள்ளது. இதில் களிறு, பிடி, நரி ஆகிய விலங்குகள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

முடிவுரை:

சிற்றிலக்கிய வகைகளில் முக்கூடற்பள்ளு, மருத நில வாழ்வியலைக் கூறும்போது, ஒருபுறம் பலியிட கடாவையும், மற்றொருபுறம் உழவுத் தொழிலின் முதன்மையாக விளங்கும் உழவுக்கு எருமை பற்றியும் அதன் கழிவுகள் நிலங்களில் உரமாக பயன்படுவதை காணும்போது விலங்குகள் மனித வாழ்வில் ஒரு அங்கம் என்பதை தகர்த்து, வாழ்வின் ஆதாரமாக விளங்குவதைக் காண முடிகிறது. கலிங்கத்துப்பரணியில், குலோத்துங்கனின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த யானைப்படை, குதிரைப்படை, பற்றிய பதிவுகள் மனிதனின் வீரத்தைப் பறைசாற்றுவதற்கு விலங்குகள் உறுதுணையாக இருந்ததை அறிய முடிகிறது. குற்றாலக் குறவஞ்சியில் குறிஞ்சி நிலத்தின் அழகு, இயல்பு, மலைகள், காடுகள் அதில் காணப்படும் குரங்கினங்கள், நீர் அருந்தச் செல்லும் எருமைக்கூட்டம் மற்றும் துள்ளிக் குதித்து விளையாடும் வரையாடுகள் இவை மனித கண்களுக்கு விருந்தளித்து, மனதை இலகுவாக்கும் குறிஞ்சியாக திகழ்வதை உணரும் போது, விலங்குகளின் செயல்கள் நம்மிடையே ஒரு வியப்பை ஏற்படுத்தி,மன அமைதியைத் தருகிறது என்பதை நிரூபிக்கிறது.

துணைநூற்பட்டியல்:

1. புலியூர்க்கேசிகன் (தெ.உ.), முக்கூடற்பள்ளு,ப.*52*
2. மேலது.,ப.*67*
3. மேலது.,ப.*66*
4. புலியூர்க்கேசிகன் (தெ.உ) கலிங்கத்துப்பரணி ப*129*
5. மேலது., ப.*130*
6. மேலது.,ப.*148*
7. திரிகூட ராசப்பக் கவிராயார் (நூ.ஆ) புலியூர்க்கேசிகன் (உரை.ஆ)
8. திருக்குற்றாலக் குறவஞ்சி., ப *70*
9. மேலது.,ப.*71*
10. மேலது.,ப.*75*
11. மேலது.,ப.*79*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

08. சித்தர் பாடல்களில் வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும்

திருமதி இரா. இந்திரா
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி
திண்டிவனம் 604 307
Indiramurugaiyan1@gmail.c - 8608364658

திரு ஆ கோவிந்தசாமி,
அரசு கலைக் கல்லூரி
திண்டிவனம் 604 307
விழுப்புரம் மாவட்டம்
தமிழ்நாடு.

DOI 10.5281/zenodo.17201956

Abstract:

In order to guide the economic consumer society, some educational institutions and industrial companies, which are functioning as a group today, operate with the field of 'guidance and counselling' as a section. This field is considered essential not only for the institutions but also for individual life. The individual causes obstacles to the society and the society causes obstacles to the individual. For example, caste differences, untouchability, gender discrimination, gambling, theft, drug consumption, and materialism can be mentioned as immoral activities. This research article takes up "guidance and counselling in Siddhar songs" as a way to eliminate and regulate such troubles.

Keywords: Siddhas, guidance, imparting advice, the superiority of existence, positive thinking, non-gluttony, abolition of caste, humanity.

முன்னுரை:

இன்றைய சமூகம் தகவல் தொழில் நுட்பத்தாலும் பல அறிவியல் கண்டுபிடிப்புகளாலும் பலவேறு மாற்றங்களைக் கண்டுள்ளது. இச்சூழல் மக்களைப் பொருளாதார மேம்பாட்டை நோக்கி நகர்த்துவதுடன் ஆடம்பரமான வாழ்வை நோக்கியும் பயணிக்கச் செய்கிறது. இதனால் அவர்கள் நடத்தையில் ஒழுங்கீனச் செயல்களும் அவநம்பிக்கையும் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது. இச்செயல், மற்றவர்களுக்குத் துன்பத்தை அளிப்பதுடன் சமூகக் கேடாகவும் வளர்ந்து நிற்கிறது.

"இளையதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து"[1]

என்ற வள்ளுவனாரின் வாக்கை வழித்துணையாய் ஏற்று கேட்டினைக் களைய முயல்வதே நன்று. இத்தகைய தீய அல்லது தவறான மனநிலையைப் போக்கி நெறிப்படுத்த தோன்றியதே வழிகாட்டலும்*(Guidance)* அறிவுரை பகர்தலும்*(Counselling)* என்ற துறையாகும். அவ்வடிப்படையில் சித்தர் பாடல்களில் அறியலாகும் வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை பகர்தல் குறித்த செய்திகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும்:

இத்துறை மனிதனின் தேவையையும் இயலாமையையும் புரிந்துகொண்டு அவற்றை நிறைவேற்றித்தரும் துறையாக, உலகலாவிய நிலையில் சிறந்து விளங்குகிறது. தமிழ் இலக்கியங்களில் 'வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும்'என்ற செயல்பாடு இருப்பினும், இவை பற்றிய கொள்கைகள், கருத்துகள் இல்லாதது போலவும், புதிது போலவும் தோன்றினாலும் சங்ககால ஆற்றுப்படை நூல்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை பண்பாட்டு நிகழ்வாகவும் ஓர் அறச்செயலாகவும் இருப்பதை, அறியமுடிகிறது.

வழிகாட்டுதல்:

"வழிகாட்டுதல் என்பது தனிநபர்களது பிரச்சனைகளைத் தீர்ப்பதல்ல, மாறாக பிரச்சனைகளைத் தானே தீர்த்துக்கொள்ள உதவிடுதல் ஆகும்"[2] என்று கி.நாகராஜன்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கருத்துரைக்கிறார். தமிழ் இலக்கியங்களில் வழிகாட்டுதல் என்பது ‘ஆற்றுப்படுத்துதல்’ என்ற சொல்லில் வழங்கப்படுகிறது. தொல்காப்பியத்தில்,

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்”

என்று, இதற்கான இலக்கணம் கூறப்பட்டுள்ளது.அறிவில் சிறந்த சான்றோர்கள் தாம் பெற்ற இன்பத்தை (பொருளை) பெறாதவர்களும் பெற்று பயனடையும்படி கூறி வழிகாட்டியுள்ளனர். எனவே வழிகாட்டுதல் என்பது அறிவில் சிறந்த அல்லது அனுபவமிக்கவர்களால் சொல்லப்படுவதாகும்.

அறிவுரை பகர்தல்:

கார்ல்ரோஜர்ஸின் (*Rogers Carl.R*) கருத்துபடி, “அறிவுரை பகர்தல் என்பது தொடர்ச்சியான நேர்முகத் தொடர்புகள் மூலம் ஒருவரது மனப்பான்மைகளையும் நடத்தையையும் மாற்றியமைத்தலாகும்”[4] என்கிறார். தமிழ் இலக்கியங்களில் இப்பொருண்மையானது புறப்பொருள் வெண்பாவில் உள்ள ‘செவியறிவுறூஉத் துறை’ என்னும் தொடரால் அறியப்படுகிறது.

சித்தர் பாடல்களில் வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும்:

பண்டைய சமூகவாழ்க்கையில் குடும்ப அமைப்பில் மூத்தோரின் அறிவுரையை அனைவரும் கேட்டு பின்பற்றினர்.. ஆனால் இன்றோ, பெருகிவரும் மக்கள்தொகை, தொலைத் தொடர்பு சாதனங்களால் ஏற்படும் நுகர்வுக் கலாச்சார மோகம் காரணமாக அறிவுரையை ஏற்கும் மனநிலை மாறிவருகிறது. இதனால் தனிமனித ஒழுக்கக்கேடு, கையூட்டு பெறுதல், சுயநலம், பொறாமை, உழைப்பின்மை, பிறன்பொருள் பறிப்பு, போதை, அரசியல்வாதிகளின் சுயநலப்போக்கு எனப் பல சமூகச்சீர்கேடுகள் மிகுந்துவருகின்றன. மேலும் அரசியல், கல்வி, வேலைவாய்ப்பு, செய்தித்தொடர்பு, மருத்துவம் ஆகிய அனைத்தும் பணத்தை மையமிட்டதாகவும் கௌரவத்தை மையமிட்டதாகவும் மாறிவருகின்றன. எனவே இவற்றை களைந்து சரியான வழியில் செயல்பட சமூகத்திற்கு சித்தர்களின் வழிகாட்டல் அவசியமாகிறது.

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்:

மனித மனம் அலைபாயக்கூடியது. ஆசை கொள்ளக்கூடியது. ஏமாற்றத்தைத் தாங்கும் சக்தி அற்றது. அதனால் மனித மனம் பக்குவப்படவும் நம்பிக்கை கொள்ளவும் நேர்மறை எண்ணங்களையே நாட வேண்டும் என்கிறார் சிவவாக்கியார். இதனை,

“நல்லதல்ல கெட்டதல்ல நடுவில்நிற்ப தொன்றுதான்
நல்லதென்ற போதது நல்லதாகி நின்றபின்
நல்லதல்ல கெட்டதென்றால் கெட்டதாகும் ஆதலால்
நல்லதென்று நாடிநின்று நாமம்சொல்ல வேண்டுமே”[5]

என்ற பாடல்வழி, நல்லது நினைத்தால் நல்லது நடக்கும்; கெட்டது நினைத்தால் கெட்டது நடக்கும். எனவே, நல்லதை எண்ணுங்கள் என்கிறார். இன்றைய அறிவியல் உலகமும் இதனையே வலியுறுத்துகிறது.

இல்வாழ்வின் மேன்மை:

சமூகக் கட்டமைப்பிற்கு முதன்மை ஆதாரம் குடும்பமே. குடும்பம் திருமண உறவால் தழைக்கிறது. இத்திருமண உறவு சிதைவுறுமேயானால் பல இன்னல்களைச்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

சமூகம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இன்று பல தவறுகள் நடைபெற இதுவே காரணமாவதைக் கண்கூடாகக் காணலாம், அத்திருமண உறவை போற்றும் விதமாக வள்ளுவரும்,

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து"[6]

என்று தவம் செய்பவரைக் காட்டிலும் வலிமையுடையவன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்கிறார். புரட்சி சித்தர் சிவவாக்கியரும்,

"மாதர்தோள் சேராததேவர் மாநிலத்தில் இல்லையே
மாதர்தோள் புணர்ந்தபோது மனிதர்வாழ்வு சிறக்குமே"[7]

என்ற பாடல்வழி திருமணம் புரிந்து நன்மக்களைப் பெற்று வாழ்வதால் மனிதர் வாழ்வு சிறக்கும் என்கிறார்.

இல்லறத்தின் சிறப்பும் கடமையும்:

உறவு போற்றாது குடும்பப் பிணைப்பு நெகிழ்வதையும் கணவன் மனைவி கருத்து மாறுபாட்டால் விவாகரத்துப் பெருகுவதையும் காணமுடிகிறது. இச்சூழலைத் தவிர்க்கும் முகமாக காடு மேடு அலைந்து உடல் வருந்தும் துறவு வாழ்வைவிட வரு விருந்து போற்றி தானும் உண்டு குடும்பத்தாரோடு மகிழ்ந்திருக்கும் இல்லறமே சிறந்தது என்றும் இறைவன் விரும்புவதும் இல்லறத்தையே என்பதை,

"வருவிருந்தோடு உண்டுடுத்தி வளர்மனை சுகிப்பிரேல்
வருவிருந்தோன் ஈசனாகி வாழ்வளிக்கும் சிவாயமே"[8]

என்ற அடிகளால் இல்வாழ்வின் அவசியத்தை சிவவாக்கியர் வலியுறுத்துகிறார். கொங்கணரும்,

"தன்வீடு இருக்க அசல்வீடு போகாதே
தாயார் தகப்பனை வையாதே"[9]

என்ற அடிகளால் பிறனில் விழையாமை பற்றியும் தாயைப் போற்றும் உயர்ந்த பண்பையும் எடுத்துரைக்கிறார். மேலும்,

"மாதாவாய் வந்தே அமுதம் தந்தாள்மனை
யாட்டியாய் வந்து சுகம் கொடுத்தாள்
ஆதரவாகிய தங்கையானாள் நமக்கு
ஆசைக் கொழுந்தியும் மாமியானாள்"[10]

என்று இல்வாழ்வு நல்கும் அனைத்துப் பெண் உறவுகளையும் போற்றுகின்றார். அவரே,

"கற்புள்ள மாதர் குலம் வாழ்க நின்ற
கற்பை யளித்தவரே வாழ்க"[11]

என இல்லாளை வாழ்த்தும் இல்லற மாட்சியும் இல்லறத்தை நல்கிய இறைவனையும் போற்றுகின்றார்.

சமூக அறம் போற்றல்:

இன்றைய சூழலில் நிலவும் சாதிய வேறுபாடு, தீண்டாமை, ஆண் பெண் பேதம், சூது, களவு, போதைப்பொருள் நுகர்வு, பொருளாசை போன்ற அறமற்ற செயல்களால் மக்கள் பல இன்னல்கள் அடைவதைக் காணமுடிகிறது. இந்நிலை சித்தர்கள் காலத்திலும்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இருந்திருக்கிறது என்பதையும் அன்றேஅவர்கள் எதிர்ப்புக்குரல் கொடுத்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

சூது, பொய், மோசம் செய்யாதே:

சூது, பொய், மோசம் ஆகிய மூன்றும் சுற்றத்தை விலகச் செய்யும். எனவே அவற்றைத் தவிர்த்து இறைவனிடம் பக்தி கொண்டு மனிதர்களிடம் அன்பு செலுத்து என்பதை கடுவெளி சித்தர்,

"சொல்லரும் சூதுபொய் மோசம் - செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத்திவிசுவாசம் - எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாய் நேசம்"[12]

என்று உரைப்பதன்மூலம் அறிவுறுத்துகிறார்.

கஞ்சா புகை பிடியாதே:

கஞ்சா, அபின், புகை போன்றவற்றால் உடல் ஆரோக்கியம் கெடுவதுடன் மனமும் பாதிப்படைகிறது. குடும்பமும் தடுமாறிப்போகிறது. சமூகமும் இன்னலை எதிர்கொள்கிறது. அதைத் தவிர்க்க வேண்டியே,

"கஞ்சா புகை பிடியாதே - வெறி
காட்டி மயங்கியே கட்குடியாதே
அஞ்ச உயிர் மடியாதே - புத்தி
அற்ற அஞ்ஞானத்தின் உள்படியாதே"[13]

என்று கஞ்சா, பீடி, கள் போன்றவற்றைத் தவிர்க்குமாறு கடுவெளியாரும்,

"கஞ்சா அடித்து நேரபினைத் தின்பதால்
நாயதாக நக்கிமுக்கி நாட்டினில் அலைவரே"[14]

என்று கஞ்சா, அபின் அடிப்பவரை நாட்டில் நாயாக அலைவர் என்று சிவவாக்கியர் நிந்தனை செய்வதையும் காணமுடிகிறது..

சாதி ஒழிப்பு:

மக்களிடையே நிலவும் சாதிய உணர்வால் மனவுளைச்சலும் உயிர் இழப்பும் ஏற்படுவதுடன் சில நேரங்களில் கலவரமாகவும் மாறிவிடுகிறது. இத்தகைய பேதத்தை ஒழித்து ஒற்றுமையை வலியுறுத்த விரும்பிய சிவவாக்கியர்,

"பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா
இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டு இருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்தி போகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பாரும் உம்முளே"[15]

என்று சாதி வேறுபாட்டினைச் சாடுகிறார்.

சமத்துவம் உரைத்தல்:

அணியும் ஆபரணம் பலவாயினும் அவை பொன்னால் செய்யப்பட்டதுபோல் நாம் அனைவரும் பஞ்ச பூதங்களால் ஆனவர்களே. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய வாசல்களும் அனைவருக்கும் ஒன்றே, எனவே அனைவரும் சமமே என்பதை சிவவாக்கியர்,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"சாதியாவது ஏதடா சலம் திரண்ட நீரலோ
பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ
காதில்வாளி காரைகம்பி பாடகப் பொன்ஒன்றலோ
சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே"[16]

என்று சாதியைச்சாடி சமத்துவத்தை வலியுறுத்துகிறார்.தனிமனித முன்னேற்றமே ஒரு நாட்டின் உயர்வாகும். ஒவ்வொருவரும் தத்தம் ஆற்றல்களை முழுமையாக உணர்ந்து செயலாற்றிட தனிமனித வழிகாட்டல் தேவைப்படுகிறது. தனிமனித ஒழுக்கக் கெட்டால் சமூகமும் நாட்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது.. இதனை உணர்ந்த கொங்கணர்,ஏழை, எளியவர்களுக்கு உதவவேண்டும். தஞ்சம் என வந்தவர்களுக்கு வஞ்சகம் செய்யக்கூடாது. பெரியோர்களை மனதளவிலும் வையக்கூடாது. மனம்நோக எச்செயலும் செய்யக்கூடாது என்கிறார். இதனை,

"ஏழைபனாதிக ளில்லையென்றால் அவர்க்கு
இருந்தால்அன்னங் கொடுக்க வேண்டும்"[17]
" .....மவுனமாகவும் வையா தேயவர்
மனத்தை நோகவும் செய்யாதே"[18]

என்று சித்தர்கள் தங்கள் வழிகாட்டலை கண்டிப்புடன் கூறுகிறார்கள்.

அன்பே முக்திக்கு வழி:

தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் அடிப்படைத் தேவை மனிதநேயம் ஆகும். ஒருவர் மீது ஒருவர் அன்பு காட்டினாலே இறைவனை அடையலாம் என்பதை,

"எள்ளளவும் அன்பகத்தில் இல்லாதார் முக்தி
எய்துவதும் தொல்லுலகில் இல்லை"[19]

என்ற பாடலில் பாம்பாட்டிச்சித்தர் அன்பின் அவசியத்தை வலியுறுத்துகின்றார். இதனை,

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்ந் தற்று"[20]

என்ற குறளோடு ஒப்பு நோக்கத்தக்கதாய் அமைகிறது.

ஆய்வுப் பயன்கள்:

சித்தர்கள் மனித சமுதாயத்திற்குக் காட்டிய வழிகாட்டலில் மிக முக்கியமானதாக முயற்சியுடன் கூடிய நம்பிக்கை, சமயப்பொறை, பிற உயிர்களை வருத்தாமை, இல்வாழ்வின் மேன்மை, பிறன்மனை நயத்தல், பசிதீர்த்தல், அன்பே முக்திக்கு வழி, கள்ளுண்ணாமை போன்ற தனிமனித மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான வழிமுறைகளாகச் கூறியுள்ளனர்.சித்தர்கள் பாடல்களை இன்றைய சூழலுக்கு ஏற்ப இசைத்தொகுப்பாக்கி இன்றைய சமூகத்தினரிடையே கொண்டு சேர்ப்பதன்வழி விழிப்புணர்வு ஏற்படுத்தினால் நற்பயன் விளையலாம்.

முடிவுரை:

தமிழ் இலக்கியங்களுள் ஒன்றான சித்தர் இலக்கியம் வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும் பணியினைச் செம்மையாகப் பதிவு செய்துள்ளது.மெய்ஞ்ஞானிகளாகிய சித்தர்கள் தனிமனித உயர்வே நாட்டுயர்வு என்பதை அறிந்து, தனிமனிதனுக்குரிய ஒழுகலாறுகளை அறிவுறுத்தி வழிகாட்டியுள்ளனர்.கணவன் மனைவி சேர்ந்து வாழும் இல்லற வாழ்க்கையே சிறப்பானது என்ற அறிவுரையைச் சிவவாக்கியர் பாடலின் வழி அறியமுடிகிறது. தனிமனித

http://Creativecommons.org//license/by/4.0/. ISBN: 978-93-343-7954-9

ஒழுக்கத்துடன் குடும்பம், நாடு, சமூகம் என அனைத்துக்குமான வழிகாட்டலை சித்தர்பாடல்களின் வழி காணமுடிகிறது.

துணைநூற் பட்டியல்:

1. திருக்குறள்- பரமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை-*14, 2004*
2. சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், இளமுனைவர் தமிழ்ப்பிரியன், கற்பகம் புத்தகாலயம், தியாகராய நகர் சென்னை - 600 017, 2023
3. வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும்கி.நாகராஜன் மற்றும் ச.நடராஜன், இராம் பதிப்பகம், சென்னை-*93, 2011.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

09. அஞ்ஞாடி நாவலில் பண்பாட்டு மானுடவியல்

அர. எழிலரசி,
முதுகலை ஆசிரியர் (தமிழ்),
ச. ரெ. அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, வளவனூர், விழுப்புரம்.605602
தமிழ்நாடு, ezhilvalli26@gmail.com - 8428526144
DOI 10.5281/zenodo.17202058.

Abstract:

This paper aims to critically analyze the cultural anthropology found in the Sahitya Academy Award winning novel AGNAADI by Poomani who occupies a unique place for himself in the literary world.

Key Words: Occupations, friendship, caste discrimination, taxation system, customs, drought, austerity, Nadar community, beliefs, modernity, idioms.

முன்னுரை

எழுத்துலகில் தனக்கென தனிஇடம் பிடித்து சாகித்திய அகாதமி விருது பெற்றவர் பூமணி. அவர் எழுதிய அஞ்ஞாடி நாவலில் காணப்படும் மனிதர்களின் வாழ்வியல் கூறுகளுள் ஒன்றான பண்பாட்டு மானுடத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் நட்புறவையும், இருபெரும் சாதிக் கலவரங்களையும், இன்றைய சமூகத்தில் மண்ணிற்கும் மனிதருக்கும்இடையே உள்ள பிணைப்புகளையும், வாழ்வியலையும் ,சடங்கு மற்றும் நம்பிக்கைகளையும்நன்கு ஆராய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொழில்கள்

வேளாண்மை

"சுழன்றும் ஏர்பின்னது உலகம்" என்றார்வள்ளுவர். நாட்டின் முதுகெலும்பான வேளாண்மை பொருளாதாரத்திற்கும் மக்களின் உணவுத்தேவைக்கும் முக்கிய தொழிலாக கருதப்படுகிறது. கலிங்கலூரில் உள்ள ஆண்டிக்குடும்பனும் மற்றவர்களும் வேளாண்மைத் தொழிலை செய்துவந்தனர். **"தோகையாடும் பயிர்களையும் கொழுந்துக் குஞ்சம் வீசும் செடிகளையும் பார்த்துப் பூரித்துப்போனார்கள்.ஆண்டி நிதமும் காடுகளை சுற்றிப் பார்த்தான்.தரிசு நிலங்களில் கூடஅவன் மனசு விதவிதமாக முளைத்து குதியாளம் போட்டது. சொந்த நிலத்தையும் தாண்டிக் கலிங்கல் காடுகளை எல்லாம் காலால் அளந்து விதைக்கணும். எங்கேப் பார்த்தாலும் விதைத்த வெள்ளாமைகள் வளமாக வளர்ந்து விளையணும்" (அஞ்ஞாடி பக்- 58)** என்ற வரிகள் ஆண்டியின் மனதில் விவசாயத்தின் மேல் அவனுக்குள்ள பற்றை பறைசாற்றுகிறது.

வண்ணார் தொழில்

மாரியும் அவன் குடும்பமும் துணிவெளுக்கும் தொழிலை செய்தனர்.

> **"அடிவானம் வெளுத்துருச்சு அடஞ்சபொழுது மொளச்சிருச்சி**
> **வெயிலேறிக் காயுமுன்னே வெள்ளாவி துணியெடுத்து**
> **கழுதையிலே பொதியேத்தி கம்மாய்க்குப் போகவேணும்:"**

(அஞ் பக் 45)

என்ற வரிகள் மாரியும் அவன் மகன் மருதனும் அலுப்புத் தெரியாமல் இருக்க பாடல் பாடிக் கொண்டே துணிகளை வெளுத்தனர் என்பதை விளக்குகின்றது..கழுதையிலே பொதியேத்தி உவர்மண்ணால் துணி வெளுத்து வெள்ளாமை பிரித்து ஊருக்குள் கொடுத்தனர்.பிறகு ஊருக்குள் சென்று கஞ்சி வாங்கிக் குடித்து தங்கள் வாழ்க்கையை ஓட்டினர். ஊரில்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

நடக்கும் சிலசடங்குகளையும் இவர்கள் செய்வது வந்தனர். கருத்தையன் மனைவி வீரம்மாள் இறந்தபோது மருதன் கருத்தையனுக்கு மொட்டையடிக்கிறான்.அவனை சடங்கு செய்ய விடாமல் மனைவியை நினைத்து அழுதுகொண்டே பலமாக அடிக்கிறான். ஆனால் மருதன் **"கொடலறிஞ்சு செஞ்ச மகராசிக்கு எத்தனை அடின்னாலும் தாங்கிக்கிருவென்" (அஞ் பக்- 321)** என்றான். இதுதான் இவர்களின் உயர்ந்த மனநிலை.துணிகளை மட்டும் வெள்ளையாக்காமல் தம் மனதையும் தூய்மையாக வைத்துக் கொண்டு, உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கும் வண்ணார்கள் தம் தொழிலை உண்மையாக செய்துள்ளனர் என்பதை நம்மால் அறிய முடிகிறது.

பனைத்தொழில்

பனையிலிருந்துக் கிடைக்கும் நுங்கு, பதநீர் விற்றதோடு பதநீரிலிருந்து, பனங்கற்கண்டு, கருப்பட்டி தயாரித்து மதிப்புக்கூட்டுப் பொருளாக்கி அதனை சந்தையில் விற்று தங்கள் தொழிலை நடத்தி வந்தனர்.இதேபோல் நாவிதர் தொழில்,பல்லக்குத் தூக்கும் தொழில், கைத்தொழில், நெசவுத்தொழில், மண்பாண்டங்கள் செய்தல் போன்ற தொழில்களும் இந்நாவலில் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது..

நட்பு

எப்பொழுதும் மாறாமல் முடியும் போதெல்லாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து தாங்கிக் கொள்ளும் சிறந்த நட்பை வள்ளுவர்,

> **"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொப்பின்றி**
> **ஒல்லும்வாய் ஊன்றும் நிலை."**(குறள் 789)

என்ற குறட்பாவில் கூறுகிறார் .இக்குறளுக்கேற்ப சிறுவயது முதலே ஆண்டிக்கும் மாரிக்குமிடையேயான நட்புணர்வு அமைந்திருந்தது. இவர்களின் திருமணத்திற்கு பிறகுகுடும்ப உறவாக மாறியது. இருவேறு சாதியை சார்ந்தவர்களாக இருந்தாலும் உள்ள உணர்வினால் ஒன்றுபட்டு வாழ்ந்த இவர்கள் நட்பானது இங்கு போற்றத்தக்கது.மேலும் ஆண்டிக்கும் கழுகுமலை நாடாருக்கும் உள்ள நட்புறவு, கருத்தனுக்கும் நொண்டியனுக்கும் உள்ள நட்புறவு மற்றும் இன்னும் பல நட்புறவுகள் இந்நாவலில் இடம்பெற்றுள்ளன.

சாதிபாகுபாடு

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்றார் பாரதி. ஆனால் அன்று சாதிக்கொடுமை தலைவிரித்து ஆடியுள்ளது. மேல்சாதிக்காரர்கள் வருகிறார்கள் என்றால் கீழ்சாதிக்காரர்கள் பன்னிரெண்டு எட்டு விலகணும். அதிலும் நம்பூதிரி வந்தால் முப்பத்தாறு எட்டு தள்ளி நிற்கணும்.பாலம் வழியாக போகக் கூடாது. பால்தரும் பசுவிடம் போனால் தீட்டு, கோவிலின் உள்ளே போகக் கூடாது.தூரத்திலிருந்துதான் கும்பிட வேண்டும்,பெண்கள் தோளில் சீலை போடாமல் மீடாத மார்புடன்தான் நடக்கணும்." என்று மேல்சாதிக்காரர்கள்மக்களை ஆட்டி வைத்திருந்தனர். **"ஓடும் உதிரத்தில் வடிந்தொழுகும் கண்ணீரில் தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோஅப்பா" (ஆசிய ஜோதி -புத்தரும் ஏழைசிறுவனும் பக் 49)** என்ற வரிகளில் புத்தர்,எல்லோர் குருதியும் சிவப்பு நிறம்தான் எல்லோர் கண்ணீரும் உப்பு சுவைதான் இதில் சாதி எங்குள்ளது அனைவரும் சமம் என்கிறார் .ஆனால் எத்தனை பெரிய மாற்றங்கள் வந்தாலும் சாதிகள் மட்டும் சமுதாயத்தில் மாறாமல் மிகுந்து கிடப்பதை இந்நாவல் வழியே நம்மால் காணமுடிகிறது.

வரி போடும் முறை

"அக்காலக்கட்டங்களில் எதற்கெடுத்தாலும் வரி விதித்தனர்." கலியாணத்திற்கு வரி,தீபாவளி வருசபிறப்பு என்று எதற்கெடுத்தாலும் வரி.பெண்களின் மார்புக்குக்கூட வரி விதித்திருக்கிறார்கள். ஒரு ஈழவப் பெண்ணால் வரிகொடுக்க முடியவில்லை. அவள்

http://Creativecommons.org//license/by/4.0/. ISBN: 978-93-343-7954-9

கத்தியால் ஒருமார்பை அறுத்து அவர்கள் மூஞ்சியில் எறிந்துவிட்டு இதுதான் என்னோட வரி என்று அலட்சியமாக சென்றாள்" (அஞ்ஞாடி பக்- 272).இது வரியின் மீது அவளுக்கிருந்த தீராத கோபத்தின் வெளிப்பாடு ஆகும்.மேலும், வரிக் கொடுக்காததால் கர்ப்பிணிப்பெண்ணை ஒரு மாட்டுடன் ஏர்ப்பூட்டி உழவைத்திருக்கிறார்கள். இத்தகைய வரிக்கொடுமைகளை மக்கள் அன்று அனுபவித்துள்ளனர் என்பதை இவ்வாய்வுக் இக்கட்டுரை நமக்கு விளக்குகின்றது.

பழக்கவழக்கங்கள்

பெண்கள் தங்களை ஒப்பனை செய்துக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். அதிலும் கூந்தலை பராமரித்து விதவிதமாக பின்னலிடுவதில் அளவில்லா ஆனந்தம் கொண்டனர். ஆனால் கூந்தல் குறைவாக உள்ளோர் நீளமாக பின்னலிட சவரிமுடியை பயன்படுத்தியுள்ளனர். மேலும் பெண்களுக்கு அழகுக்கு அழகு சேர்ப்பது அணிகலன்கள். இந்நாவலில் வரும் ஆண்டியின் மனைவி குலதெய்வ கோவிலுக்கு செல்லும்போது **"பாம்படம், முடிச்சு, கொப்பு முருகு, கொன்னப்புத்தட்டு, பச்சைக்கல்பேசிறி, பதக்கம், சங்கிலி, காசுமாலை, கடலைக்காய்மாலை,காப்பு, தண்டை, மிஞ்சி" (அஞ் பக்**-86) என இத்தனை வகை அணிகலன்களை அணிந்து சென்றாள் என்ற செய்தி அறிய முடிகிறது.

உண்ணும் உணவுப் பொருட்களில் குறிப்பாக **கீரை வகைகளி**ல் பலவகைகளை பயன்படுத்தியுள்ளனர். **"தொயில், சாரணத்தி, வெற்றிலைத்துடுப்பு, சிறுதுடுப்பு, கோழிக்கீரை, அங்களவாளக்கீரை , முருங்கை, பசலி, பூசணி, வெள்ளைச்சாரணத்தி, அரைக்கீரை, சிறுகீரை, தண்டு, அகத்தி, புளிச்சி, வெங்காயத்தாள், பிரண்டை" (அஞ் பக்-**984) இவற்றில் எதைஎதையெல்லாம் அவிக்கவேண்டும்,கடையவேண்டும், வதக்கவேண்டும், ,பொரிக்க வேண்டுமென்று கணக்கு வைத்திருக்கிறார்கள்.

திருமணம் முடிந்து மாப்பிள்ளைக்கு விருந்து வைக்கும் உணவு முறையில் சோறுகறியில் பலவகை விருந்தளித்துள்ளனர்.கருப்பி, **நாங்கல் நெரித்து, கோழியடித்துக் குரங்கு நட்டி வாய்க்கு ருசியாக சமைத்துக் கொடுத்தாள்." பிடிக்கொழுக்கட்டை, ஓலைக்கொழுக்கட்டை, பால்கொழுக்கட்டை, பச்சரிசி பணையாரம், தினைமாவு (அஞ் பக்**- 158) என்று தினமும் மாப்பிள்ளை ஊருக்கு போகும்வரை விருந்தளித்த பண்பாடு இங்கு காணமுடிகிறது.

"நம்ம வீட்ல எத்தனை குடும்பங்க கொடிவீசிப் படர்ந்தாலும் ஒரே ஒலதான் வேகணும்"(அஞ் பக்-1063) என்ற கருப்பியின் எளிய வார்த்தை இங்கே கூட்டுக் குடும்ப பண்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது.

வறட்சியின் கொடுமை

தாம் வாழ்வதற்கான சூழலைத்தேடி மக்கள் இடம் பெயர்ந்ததை வால்காவிலிருந்து கங்கை வரை என்னும் நூலில் ஆசிரியர் ராகுல சாங்கிருத்தியாயன் கூறியுள்ளார் .கலிங்கலூரில் வறட்சி தலைவிரித்து ஆடியதால் உணவின்றி மக்கள் கொத்துக்கொத்தாக மடிந்தனர். ஊரில்தொழில்கள் ஏதும் செய்ய முடியாமல் வேறு இடத்திற்கு புலம்பெயர்ந்தனர். **"ஊரோர மரங்களில் குருவிக் கெச்சட்டமில்லை. ராத்திரி தங்குமிடத்திற்காக ஏசலும் வசவுமாக நிறைய சங்கதி நடக்கும் அத்தனையும் எங்கே போய்விட்டன." (அஞ் பக்**- 219) இக்கருத்தையே **"வான் பொய்த்தது மறுகியது மண்ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின" (ஏதிலிக்குருவிகள்) என்ற அழகிய பெரியவன்**கவிதை வரிகள் வறட்சியால் புலம்பெயர்தலை வெளிப்படுத்துகின்றன.மேலும் கருத்தையனும், துப்பனும் இரயிலில் அரிசியை திருடிமக்களின் பசியைப் போக்கிய

நிகழ்வும், மேலூரில் கஞ்சித் தொட்டி வைத்திருப்பதை கேள்விப்பட்டு அங்கு சென்று பசியாறிய நிகழ்வும் நம்மால் இங்கே அறிய முடிகிறது.

தவசம்(தானியம்) கொடுக்கும் முறை

பஞ்சத்தின் போது விதைக்க தானியங்கள் இருக்காது. அப்போது கோவில் கோபுர கலசத்தில் உள்ள தானியங்கள் பயன்படுவது போல ஆண்டியும் கருப்பியும் சிறுக சிறுக சேமித்து வைத்த தானியங்கள் பஞ்சத்தில் மற்றவர்களுக்கு பயன்பட்டன.. தம் மகள் வீரம்மா கணவன் வீட்டில் வறுமையில் வாடுவதை அறிந்து அவளை வரவழைத்து தானியம் கொடுக்க மகள் அதனை வாங்க மறுத்து விடுகின்றாள்.**"அடுத்த வீட்டுக்குப் போனப் பெறகு பொறந்த வீட்டுல எத்தன நாளைக்குக் கையேந்தறது**"என்ற வரிகள் கணவன் வீட்டில் இருப்பதை உண்டு வாழ்வதே இல்லறத்தின் சிறப்பு என்ற பண்பாடு இதில் வெளிப்பட்டு நிற்கின்றது.இக்கருத்தானது,

"அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகு நீர் நுணங்கறல் போல
பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே" **(நற்றிணை** 110)

என்ற போதனாரின் பாடலுடன் ஒப்பு நோக்கத்தக்கது..

நாடார் சமூகம்

நாடார் சமூகத்தினர் பல போராட்டங்களுக்குப் பிறகு ஒற்றுமையால் முன்னேறிய போதிலும் தாழ்நிலைக்குத் தள்ளப்படுவதை உணர்ந்தார்கள்."தம்மிடம் பண்டம் வாங்குறான் ஆனா அவன் கும்புற கோயிலுக்குள்ள மட்டும் மொழைய வுட மாட்டங்கான்"(அஞ் பக் - 294)என்று வருந்தினர். பின் அவர்களை போல தங்களை மாற்றிக் கொண்டனர் .முதலில் கறி தின்பதை நிறுத்தி சைவ சாப்பாடு சாப்பிட ஆரம்பித்தார்கள்.பிராமிணர்கள் போல் குடுமி வைத்து பூணூல் போட்டுக்கொண்டார்கள்.சடங்குகளையும் மாற்றிக் கொண்டார்கள் என்ற செய்தி இந்நாவல் வழியே அறிய முடிகிறது.

நம்பிக்கைகள்

கருப்பிக்கு பதினாறு வருடம் கழித்து இரண்டாவது குழந்தை பிறந்தது."வருசா வருசம் கும்புடாறது குத்தம். அதனாலதான் சாமி இம்புட்டு நாளா சோதனையைக் குடுத்துது" என்ற வரிகள் குலதெய்வ வழிபாட்டில் நம்பிக்கைக் கொண்டதை காட்டுகின்றது. "முந்தியெல்லாம் பெண்கள் காது வளர்த்து ஈயத்தில் குணுக்குப் போட்டிருப்பார்கள்.காதுதண்டு கொஞ்சம் கொஞ்சமாக வளரும். எவ்வளவுக்கெவ்வளவு வளர்கிறதோ அவ்வளவுக்கு குடும்பம் விருத்தியடையும்"(அஞ் பக்-294)என்பது அவர்கள் நம்பிக்கை. காக்காக் குஞ்சிக் கறித் தின்னா மாலைக்கண்ணு போகும் என்று நம்பினர். இறந்தவர்கள் ஆவியாக வந்து வெளியுலகைக் கண்டு முன்னேற்றம் அடைந்துள்ளதாக பேசிவிட்டு மீண்டும் குழிக்குள் செல்லும் செய்திகள் இந்நாவல் வழியே அறிய முடிகிறது.

நவீனத்துவம்

நாகரீகம் மாற மாற மக்களும் தங்களை மாற்றிக் கொண்டார்கள்.முடிவெட்டிக் கொள்வது உள்ஆடை அணிந்துக் கொள்வது (குப்பாயம் அணிதல்), வளர்ந்த காதை அறுத்து ஒட்ட வைத்துக்கூட அணிவது, பம்ப்செட் வருவது, சினிமா, கரண்ட்வருவது, ஒன்றுமில்லாத இடத்தில் வீடு வருவது (அஞ் பக்-1063) என்று தங்கள் வாழ்வை நவீனப்படுத்திக் கொண்டார்கள்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

சொலவடைகள்

இந்நாவலில் சொலவடைகள் நிறைந்து காணப்படுகின்றன.அவற்றுள்," "ஒழக்கு நெல்லுக்கு ஒழைக்கப் போனா பதக்கு நெல்லு பாழ்"(பக்-14), "திங்கறதுக்கு தவிடில்லையாம் தங்கச் சரப்புளி தொங்கு தொங்குனு ஆடுதாம்"(பக் -16)"அக்குத் தொக்கில்லாவதவனுக்கு துக்கமில்ல"(பக்-55)

"பங்குனின்னு பருக்கிறதுமில்ல சித்ரன்னு சிறுக்கறதுமில்ல"(பக் -75)

"ஒதடு பழஞ்சொரிய உள்ள வகுறெரிய கோபம் வருது"(பக் -128)

இது போன்று பல சொலவடைகள் நாவலில் விரவி காணப்படுகின்றன.

முடிவுரை

இவ்வாறாக வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த மக்களின் நட்புணர்வு, சாதிபாகுபாடு, வாழ்வியல்முறைகள், நம்பிக்கைகள் என பல்முனை கூராய்வாக தடம் பதித்து பண்பாட்டு மானுடத்தை இக்கட்டுரை நமக்கு விளக்கியுள்ளது.

துணைநூற் பட்டியல்

1. இராமசுப்பிரமணியம். வ.த, நற்றிணை, சங்க இலக்கியம் மூலமும் உரையும், திருமகள் பதிப்பகம், தி.நகர்,சென்னை17.
2. ஏதிலிக்குருவிகள், அழகிய பெரியவன், 11 -ம் வகுப்புதமிழ் பாடப்புத்தகம்,திருத்திய பதிப்பு-2022.
3. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை . சி, ஆசியஜோதி, பாரிநிலையம், 184,பிராட்வே,சென்னை-18.
4. சுந்தரமூர்த்தி.இ, பாரதியார் கவிதைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானிஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை-14
5. திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம்,சென்னை 14
6. பூமணி, அஞ்ஞாடி,க்ரியா பதிப்பகம், 17, காமராசர் நகர், திருவான்மியூர், சென்னை 41.
7. ராகுலசாங்கிருத்தியாயன்- வால்காவிலிருந்து கங்கை வரை, புலம் வெளியீடு, 178அனுதீப் அப்பார்ட்மெண்ட்ஸ், 3 வது பிரதான சாலை, நடேசன்நகர், சென்னை 92.

.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

10. அழகிய பெரியவனின் யாம் சில அரிசி வேண்டினோம் நாவல் காட்டும் தலித் வாழ்வியல்

செல்வி க.லாவண்யா
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஈரோடு - 4, தமிழ்நாடு, இந்தியா.
lavanyak1707@gmail.com - Phone :8220982594
DOI 10.5281/zenodo.17202137.

Abstract

Azhagi Periyavan is a critical and creative writer who has a deep awareness of current events. The purpose of her book Yam Sil Arisik Vendinom is to shed light on Dalit existence. Due to unemployment and caste-based economic disparity, the issues that Kavasinathan, the primary character, faces are perceived as issues that relatively educated Dalit youth suffer. This article's goal is to analyse how Kavasinathan's childhood experiences depict Dalit people's lives, Dalit children's mindsets, and the oppression these youngsters experience.

Keywords: Awareness, Dalit, Dalit people's

முன்னுரை

நாவலிலக்கியங்களில் தலித்திய நாவல்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் பிரச்சனையையும், தலித் மக்களின் வாழ்க்கையும் பிரதிபலிக்கும் இலக்கியமாக விளங்குகிறது. தலித் எழுத்தாளர்களால் எழுதப்படும் இலக்கியங்கள் மற்றும் தலித் மக்களின் வாழ்வியலை கதைக்கருவாகக் கொண்ட மற்ற எழுத்தாளர்களால் எழுதப்படும் இலக்கியங்கள் தலித் இலக்கியங்கள் என்று வரையறை செய்யப்படுகிறது. தலித் இலக்கியங்கள் பெரும்பாலும் ஆசிரியரின் தன் வரலாற்று பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. தமிழ் மொழியில் தலித் இலக்கியமானது சிறுகதை, நாவல், கவிதை வடிவங்களாகவும், சுயசரிதையாகவும் படைக்கப்படுகிறது. அநீதி, அடிமைத்தனம், இனவெறி போன்ற தலித் இலக்கியங்களில் கூறப்படும் சிக்கல்கள் ஆப்பிரிக்க, அமெரிக்க இலக்கியத்துடன் ஒப்பிடப்படுகிறது.

அழகிய பெரியவன்

அழகிய பெரியவன் ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும், அவர்கள் வாழ்வில் உள்ள கொண்டாட்டங்களையும் தம் படைப்பின் வாயிலாக சிறப்புற கூறும் படைப்பாளிகளில் முக்கியமானவராவார். இவரின் படைப்புகள் வேலூர் முதல் வட ஆற்காடு பகுதிகளில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களை கதாபாத்திரமாகக் கொண்டு கதைகளும் அமைகிறது. இப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் தொழிலான தோல் பதனீடும் தொழில் பற்றி அழகிய பெரியவனின் புதினங்களில் பல இடங்களில் கூறப்படுகிறது. அழகிய பெரியவனின் இயற்பெயர் அரவிந்தன். இருப்பினும் அவர் படைப்புலகில் அழகிய பெரியவன் என்ற புனைப்பெயருடனே அனைவராலும் அறியப்படுகிறார். இப்பெயர் சோழர் கால கல்வெட்டில் இருந்து எடுத்ததாகவும் மேலும் சூத்திரர்கள் அழகிய பெயர்கள் வைக்கக்கூடாது என்ற வழக்கத்தை (மரபை) உடைப்பதற்கான பெயராக இப்பெயரை வைத்ததாகவும் அவரே குறிப்பிடுகிறார். (மறைத்தப் பேச என்ன இருக்கிறது என்ற நூலில் இருந்து, பக்கம் 10) இக்கருத்தாக்கம் அவருடைய படைப்புகளில் உள்ள கதாபாத்திரங்களிலும் பிரதிபலிக்கிறது. அழகிய பெரியவனின் கதைகளில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்கள் கம்பீரம் நிறைந்ததாகவும், மரபை உடைப்பதாகவும் உள்ளது. உதாரணமாக திருவேங்கடம், இராவணேசன், பொன்னரசு,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சித்தார்த்தன், சமநீதியரசு போன்ற பெயர்களின் மூலம் ஒடுக்கப்பட்டவர்கள் அழகற்ற பெயர்களையே வைக்க வேண்டும் என்ற கட்டாயம் அல்ல என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துவதாய் உள்ளது.

யாம் சில அரிசி வேண்டினோம்

அழகிய பெரியவனின் வல்லிசை என்ற புதினத்திற்கு பிறகு 2020 ஆம் ஆண்டு நற்றிணை பதிப்பகத்தால் வெளியான நூல் யாம் சில அரிசி வேண்டினோம்' ஆகும். இந்நூலின் பெயர் புறநானூற்றில் 140 ஆவது பாடலான ஔவையார் கடையெழு வள்ளல்களில் ஒருவரான ஆய் அண்டிரனுக்கு பாடிய பாடலில்,

"வளைக்கை விரலியர் படப்பை கொய்த
அடகின் கண்ணுறை ஆக யாம் சில
அரிசி வேண்டினேன்க" **(புறநானூறு பா. 140)**

என்ற அடி இடம்பெறுகிறது. இப்பாடலின் அவ்வையார் நாஞ்சில் நாட்டு அரசனை ஒரு மூடன் என்றும்,நானும் விரலியரும் தோட்டத்தில் பறித்த கீரையை சமைத்துக் கொண்டு இருந்தபோது அந்த கீரையின் மீது தூவுவதற்கு சிறிது அரிசி தேவைப்பட்டது. அதை நாஞ்சில் நாட்டு அரசனிடம் கேட்டபோது அவன் எங்களுக்கு அரிசியை தராமல் ஒரு யானையை கொடையாக அளித்தான் என்று அந்த பாடலின் பொருள் உள்ளது. ஒருவருக்கு எது தேவையோ அதை அளிப்பதே கொடையாகும் ஆனால் நாஞ்சில் நாட்டு அரசனோ அவன் கொடைத்தன்மையை நிரூபிப்பதற்காக அவர்களுக்கு தேவையே படாத யானையை பரிசாக அளிக்கிறான். இப்பாடலின் பொருளும் இந்நூலின் கதை கருவும் ஒன்று தான். தலித் மக்கள் தங்களுக்கு நடக்கும் அநீதிகளுக்கு எதிராக அரசிடமோ, நீதிமன்றத்திடமோ சென்றால் அங்கு அவர்களையே குற்றவாளிகளாக சித்தரிக்கின்றனர். பிறகு அவர்கள் தங்கள் மேல் சுமத்தப்பட்ட குற்றங்களை மறுத்து நீதி கேட்டு போராடும் போக்கு நிலவுகிறது. அதன் பிறகு நாம் எதற்கு வழக்கு தொடுத்தோம் என்பதை விட்டு தன்னை குற்றமற்றவர் என நிரூபிக்கும் நிலைக்கு தலித் மக்கள் தள்ளப்படுகின்றனர். எனவே இதன் பொருட்டு அழகிய பெரியவன் இந்நூலுக்கு யான் சில அரிசி வேண்டினோம் என்று பெயரிட்டுள்ளார் என அறிய முடிகிறது.

கதைச்சுருக்கம்

மனதுக்கு மகிழ்ச்சி தராத, நினைத்தாலே மனம் குன்றி அவமானமாக உணர வைக்கும் கசப்பான அனுபவங்களை கதை கருவாகக் கொண்டு எழுதுவது ஒரு சவாலான செயல் ஆகும். அழகிய பெரியவனின் யாம் சில அரிசி வேண்டினோம் என்ற நாவலும் சவாலான கதைக்களத்தை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.ஆயிரம் கண்களுக்கு முன் ஒருவர் அவமதிக்கப்படுதலும், அதை எவரும் கேள்வி கேட்காமல் வேடிக்கை பார்ப்பதும், சமூகத்தின் அவல நிலையாக கருதப்படுகிறது. ஏழ்மையும், இயலாமையும் கொண்ட விளிம்பு நிலை மனிதர்கள் ஏதோ ஒரு சின்ன கேள்வியை எழுப்புவதும் அதிகார வர்க்கத்திற்கு கோபத்தையும், வெறுப்பையும் உண்டாக்குகிறது. இவர்கள் எல்லாம் நம்மை கேள்வி கேட்பதா? என்ற கோபம், அதிகாரம் நம்மிடம் உள்ளது என்ற கருவம் அவர்களை எந்த நிலைக்கும் யோசிக்க வைக்கிறது. அதில் கவசிநாதன் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களே பாதிப்படைகின்றனர். அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்லும் அரசு ஊழியர்கள் சுயசாதிபற்றாளராக இருந்தால் அவரிடத்தில் ஒரு ஒடுக்கப்பட்டவரை பற்றிய கண்ணோட்டம் என்னவாக இருக்கும், எப்படி அந்த அதிகாரி அந்த ஒடுக்கப்பட்ட நபரை அணுகுவார் என்பது இந்நாவலில் கூறப்படுகிறது. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காலை 6:00 மணியிலிருந்து மதியம் 12 மணி வரை கால் கடுக்க நின்றும். சரிவர பதில் கூறாத

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அதிகாரியிடம் தான் காலை முதலே இங்கு காத்திருக்கிறேன். எனக்கு உரிய பதிலளியுங்கள் என்று கூறியதற்காக அவமதிக்கப்படும் கவசிநாதன். தன்னை எதிர்த்துக் கேள்வி கேட்டதற்காக யூஸ்லெஸ்! யூஸ்லெஸ்' என்று திட்டி கீழே தள்ளும் அதிகாரி, அதிகாரியிடம் குடித்துவிட்டு தகராறு செய்ததாக பொய் வழக்கு தொடுக்கும் காவல்துறையினர், ஒரு சாதாரண குடும்பத்தில் பீடி சுத்தும் குடிசைத்தொழில் செய்து வாழ்க்கை நடத்தும் சூழலில் தன் மகன் மீது பொய் வழக்கு பதிந்ததைக் கேட்டு அழுது புலமும் கவசிநாதனின் தாய், இந்த வழக்கிலிருந்து வெளியே வர எவ்வளவு செலவாகும் என்ற யோசனையில் அமைதியாக இருக்கும் கவசிநாதனின் தந்தை. காசிநாதனின் நிலையை புரிந்து கொண்டு அவனின் ஆயிரம் ரூபாய் வருமானத்தை எதிர்பார்க்காமல் தன் தாய் வீட்டிலும், பாட்டி வீட்டிலும் அவ்வப்போது கொடுக்கும் பணத்தை முடிந்து வைத்து கவசிநாதனுக்கு செலவு வரும்போதெல்லாம் அதை எடுத்துக் கொடுத்தும், இந்த பொய் வழக்கு பிரச்சனையில் சிக்கியது தெரிந்து தனக்குள் பயம் இருந்தாலும்கூட தன் கணவன் மனம் தளரக்கூடாது என்று தைரியம் கூறும் கவசிநாதனின் மனைவி பூரணி. இந்த பொய் வழக்கு போடப்பட்டது தெரிந்ததிலிருந்து கவசிநாதன் உடனேயே இருந்து உதவும் நண்பன் முனியரத்தினமும், தமக்கு யார் என்றே தெரியாத கவசநாதனின் பிரச்சனைகளை அறிந்து உடனிருந்து கடைசிவரை கவசிநாதனுக்கு உறுதுணையாக பல போராட்டங்களை நடத்து வெற்றியும் பெற்று தரும் பெரியவர் என்று பல கதாபாத்திரங்களை கொண்டதே யாம் சில அரிசி வேண்டினோம் நாவல்.அழகிய பெரியவன் தன்னுடைய கதைகளையும் கதாபாத்திரங்களையும் சமூகத்தில் இருந்தும் வாழ்க்கையில் இருந்தும் தான் உருவாக்குகிறேன். படைப்புகளையும் சிந்தனைகளையும் காட்டிலும் மக்களை சென்றடையும் உத்திகளைக் கொண்டு மக்களிடம் இருந்தும் என் வாழ்க்கையில் இருந்துமே கதைகளை உருவாக்குகிறேன் என்று குறிப்பிடுவது போல தன்னுடைய நிகழ்வாழ்வின் சில அங்கங்களையும் அவரைச் சுற்றியுள்ள மனிதர்களையும் கொண்டே யாம் சில அரிசி வேண்டினோம் நாவலைப் படைத்துள்ளார்.

கவசி நாதனின் பாத்திரப்படைப்பு

யாம் சில அரிசி வேண்டினோம் நாவலின் முக்கிய கதாபாத்திரமாக வரும் கவசிநாதன் *38* வயது மதிக்கத்தக்கவர். நிரந்தர வேலை கிடைக்காமல் ஒரு தனியார் பள்ளியில் ரூபாய் ஆயிரம் சம்பளத்திற்கு வேலை பார்ப்பவர். கவசிநாதனின் கதாபாத்திரம் மிகவும் அமைதியான, அப்பாவித்தன்மை கொண்ட, தனக்குத் தேவையான ஒன்றை கூட கேட்க தயங்கி நிற்பவராக அமைக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தான் துணிந்து கேள்வி கேட்கிறார். அதுவும் காலை ஆறு மணியிலிருந்து மதியம் பன்னிரண்டு மணி வரை கால் கடுக்க நின்றும் எந்த ஒரு பதிலும் கூறாமல் அடுத்த வாரம் வர சொல்லும் உயர் அதிகாரியிடம் தன் நிலையைக் கூறி நியாயம் கேட்கவே வாய் திறந்து பேசுகிறார்.ஆனால் அதற்கே அந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தின் உயர் அதிகாரி மிகுந்த கோபம் கொண்டு கவசிநாதனை இருக்கையின் மீது தள்ளுகிறார். கவசிநாதன் செய்வதறியாது பித்து பிடித்தார் போல முழிக்கிறான். அந்த சம்பவம் கவசிநாதனை வெட்கமுறவும் நினைத்தாலே அவமான உணர்வை ஏற்படுத்துவதுமாக துன்புறுத்துகிறது.

'நடந்ததை நினைக்கும் போதெல்லாம் மனம் அசைப்பது ஒன்று தான்! அப்போது தன்னை கண்ணாடி தடுப்பின் வழியாக வேடிக்கை பார்த்த அந்த கண்கள்! படித்த கண்கள் உதவி செய்வதற்கு ஓடி வராத, ஏன் என்று ஒரு வார்த்தையும் கேட்காத கண்கள்! இந்த சமூகமும் என்னை திரும்பிப் பார்க்க என்ன செய்திருக்க வேண்டும் அதன் முகத்தில் ஓங்கி குத்தி இருக்க வேண்டுமா?" (அழகிய பெரியவன், யாம் சில அரிசி வேண்டினோம், ப.18)

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற கவசிநாதனின் கேள்வி படித்தவர்கள் தானே சமூகத்தில் நிகழும் தவறுகளை கேள்வி கேட்க வேண்டும்.மாறாக அவர்கள் ஒன்றும் கேட்காமல் அமைதியாக இருந்தது கவசி நாதனுக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது.கவசிநாதன் நாவலின் பல இடங்களில் ஒடுக்கப்பட்ட சாதியினை சேர்ந்தவன் என்பதற்காக அவமதிக்கப்படுகிறான். தன்மீது குடித்துவிட்டு தகராறு செய்வதாக வேலைவாய்ப்பு அலுவலகத்தின் உயர் அதிகாரி தொடுத்த வழக்கை மறுத்தும், தன்னை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அவமதித்ததாக வழக்குப் பதிவு செய்யும் கவசிநாதனுக்கு பல இடங்களில் இருந்து மிரட்டல் வருகிறது. கவசிநாதன் தற்காலிகமாக வேலை செய்யும் பள்ளியின் தலைமை ஆசிரியர் கவசிநாதனின் சாதியை குறிப்பிட்டு வழக்கு பதிந்திருக்கும் அதிகாரியும் உங்கள் சாதிதான் எனவே வழக்கை திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கிறார். பிறகு தன் மனநிலையில் பின்வாங்காத கவசிநாதனிடம் அவர் உங்கள் சாதி இல்லை என்னுடைய சாதிதான் அப்படி கூறினால் வழக்கை திரும்ப பெறுவீர்கள் என்பதற்காக கூறினேன் என்று அந்த தலைமை ஆசிரியர் கூறுகிறார். இந்த நிகழ்வில் ஒரு பேச்சுக்காக கூட தன்னுடைய சாதியை சேர்ந்த ஒருவரை கவசிநாதனிடம் இணைத்து பேசுவதை ஒரு அவமானத்திற்குரிய செயலாக பள்ளி தலைமையாசிரியர் கருதுகிறார்.

கவசிநாதன் உயர் அதிகாரி மீது அளித்த வழக்கு தொடர்பாக விசாரிப்பதற்காக மாவட்ட ஆட்சியர் கவசிநாதனை அழைக்கிறார். கவசிநாதனும் பெரியவருடன் மாவட்ட ஆட்சியரை சந்திப்பதற்காக செல்கிறான். மாவட்ட ஆட்சியருடனான உரையாடலில் கவசிநாதன் மிகவும் அவமதிக்கப்படுகிறான். கவசிநாதனின் குடும்ப சூழலும், வறுமையும் அவன் மேற்படிப்பு படிக்கவும், போட்டி தேர்வுகளுக்கு தயாராகவும் இடம் கொடுக்கவில்லை. வேலை கிடைப்பதற்கு முன்பே கவசிநாதனுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டதால் வேறு வழியின்றி கவசிநாதன் தற்காலிக பணிக்கு செல்லும் நிலை உருவாகிறது. கவசிநாதன் அறிவியல் பாடத்தில் விலங்கியல் பிரிவில் படித்ததால் அவனுக்கான வேலை வாய்ப்பு குறைவாகவே இருந்தது. சமூகத்தில் பெரும்பாலான மக்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைச் சூழலை புரிந்து கொள்ளாமல் பொதுப்படையாக அவர்கள் அரசின் சலுகைகளில் தான் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர் என்ற கண்ணோட்டத்திலேயே ஒடுக்கப்பட்ட மக்களை அணுகுகின்றனர்.அந்த கண்ணோட்டத்தில் தான் மாவட்ட ஆட்சியரும் கவசிநாதனை அணுகுகிறார். ஆனால் உண்மையில் எந்த ஒரு கல்வி பின்புலமும் இன்றி, படிப்பதற்கு எந்த வசதியும் இன்றி இதுவரை படிப்பின் நிழல் கூட படாத குடும்பத்தில் இருந்து வரும் மாணவர்களுக்கு அரசால் ஏற்படுத்தித் தரப்படும் சிறு சிறு சலுகைகளும் பிற அரசு ஊழியர்கள் அந்த மாணவர்களுக்கு போய் சேர்வதை தடுக்கின்றனர். அதில் பாதிக்கப்படும் ஒரு நபராக கவசிநாதன் இருக்கிறான்.

கவசிநாதனின் குழந்தைப்பருவம்

நாவலில் கவசிநாதனின் குழந்தைப் பருவம் சிறப்பும், மகிழ்வும் கொண்டதாக அமையவில்லை. தலித் சிறுவர்கள் தங்கள் வாழ்க்கையில் சந்திக்கும் சிக்கல்களையும் சவால்களையும் கவசிநாதனும் தனது சிறுவயதில் சந்திக்கிறான். வறுமையும், பசியும் நிறைந்ததாகவே அந்த சிறுவனின் வாழ்க்கை கட்டமைக்கப்பட்டுள்ளது. கவசிநாதனின் குடும்பம் லஷ்மியாபுரம், நல்லசேரி, கோலப்பேட்டை ஆகிய மூன்று ஊருக்களுக்கும் வேலை காரணமாக மாறிக்கொண்டே இருந்ததால் கவசி நாதனின் கல்வி பாதிக்கப்படும் என கவசிநாதனை தனது தாய் வீட்டில் தங்க வைக்கிறார் கவசிநாதனின் அம்மா. கவசிநாதனின் பாட்டி அன்பானவர். ஆனால் இன்ஜினியர் மாமா என்று குறிப்பிடப்படும் கவசிநாதனின் கடைசி மாமாவால் கவசிநாதன் பல கொடுமைகளை அனுபவிக்கிறான். மது போதைக்கு அடிமையாகும் அவனின் கடைசி மாமா கவசிநாதனை பல நேரங்களில்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பக்கத்து ஊருக்கு சென்று மதுவாங்கி வருமாறு வற்புறுத்துவதும் இரவு நேரத்தில் தனியாக பயத்துடன் சென்று அந்த சிறுவன் மது வாங்குதலும், மாமாவின் எல்லா வேலைகளையும் எடுத்து செய்வதும் அந்த சிறுவனின் அன்றாட வேலையாக இருந்தது. கவசிநாதனின் மாமாவை சந்திக்க வரும் நண்பர் ஒருவரின் பாலியல் சீண்டல் அந்த சிறுவனுக்கு சொல்ல முடியாத ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. தன்னை சந்திக்க வரும் அம்மாவிடம் இவற்றைக் கூறி வேறு விடுதியில் சேரும் கவசிநாதனுக்கு அங்கும் நிம்மதி கிடைக்கவில்லை. சாதிய பாகுபாடும் ஏற்றத்தாழ்வும் கவசிநாதனை துரத்திக் கொண்டே வந்தது.மாணவர்களுடன் பல முரண்பாடுகள் எழுகிறது.விடுதி கழிவறையை கவசிநாதன் உள்ளிட்ட சில ஒடுக்கப்பட்ட மாணவர்களை மட்டும் சுத்தம் செய்யமாறு கூறுகின்றனர்.பல நேரங்களில் விடுதி வாழ்க்கை கசப்பு நிறைந்ததாக உள்ளது. சாதியையும் ஏற்றத்தாழ்வையும் பற்றி உணராத வயதில் தலித் சிறுவர்கள் சாதியை ஏற்றத்தாழ்வினை சந்திக்கின்றனர்.இந்த ஏற்றத்தாழ்வு மனதளவில் அச்சிறுவர்களை பாதிக்க செய்கிறது. கவசிநாதனும் தனது சிறுவயதில் இந்த பிரச்சனைகளை எதிர்கொள்ளும் நிலை அமைகிறது. கவசிநாதன் பள்ளி முடிந்து வீடு திரும்பும் போது தண்ணீர் தாகத்தால் ஒரு வீட்டில் தண்ணீர் கேட்டதற்கு,

"அவ்வீட்டுப் பெண் என் ஊரை விசாரித்துவிட்டு உள்ளே சென்று பாத்திரம் ஒன்றில் நீரை எடுத்து வந்து கைகளை ஏந்த சொல்லி ஊற்றினார்." (அழகிய பெரியவன், யாம் சில அரிசி வேண்டினோம், ப.*78)*

இந்த செயல் கவசிநாதனின் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கவசிநாதன் வழக்கு தொடர்பாக நீதிமன்ற செல்லும் போது எல்லாம் ஒரு இளைஞனை பார்க்க நேர்கிறது. அவன் மீது என்ன வழக்கிருக்கிறது என்று அறியாமல் பழகும் கவசிநாதனுக்கு பிறகு ஒருநாள் அந்த இளைஞன் மீது போடப்பட்ட வழக்கு பற்றியும், அவன் இலங்கையை சேர்ந்த அகதி என்பதும் தெரிய வருகிறது. கவசிநாதன் அந்த இளைஞனிடம் படிக்கவில்லையா என்று கேட்டதற்கு அந்த இளைஞன்

"இங்க பிழைச்சிருக்க வேண்டுமென்றால் வேலைக்கு போகணுமில்ல! பிறகு எங்கன்னா படிக்கிறது." (அழகிய பெரியவன், யாம் சில அரிசி வேண்டினோம், ப.*147)*

என்று கூறியதும் கவசிநாதனால் வேறு எதுவும் பேச முடியவில்லை. உண்மையில் கவசநாதனின் வாழ்க்கையும் அப்படித்தான் இருந்தது. அகதி சிறுவனின் வாழ்க்கையை பற்றி கவசிநாதன் யோசிக்கும் போது தன்னுடைய சிறுவயது இடப்பெயர்வும் நினைவிற்கு வருகிறது. படிப்பதற்காகவும், மாமாவின் கொடுமையாலும் கவசிநாதன் பல இடப்பெயர்வுகளை சந்தித்திருக்கிறான். அவை எல்லாம் கவசி நாதனின் குழந்தைப் பருவ கொடுமையான அனுபவங்களாக அமைகிறது. படிப்பு எல்லாவற்றையும் மாற்றும் என்றாலும் தனக்கான ஒரு வேலை இல்லாத மனிதன் எவ்வாறு சமூகத்தை எதிர்கொள்ள முடியும். ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்க்கையை வெல்லுவதற்கு முன்பு பசியை வெல்ல வேண்டிய அவல நிலை இருக்கிறது. படிப்பு என்பது அவர்களின் வாழ்வில் வெகு தொலைவிற்கு சென்று விடுகிறது. இதில் கவசிநாதன் போன்று வெகு சிலர் படித்து பட்டம் பெற்றாலும் கூட அவர்களும் வறுமையின் காரணமாக ஏதேனும் ஒரு தற்காலிக வேலையை தேர்ந்தெடுத்து அந்த சூழலுக்கு தன்னை பழக்கப்படுத்திக் கொள்ளும் நிலை ஏற்படுவதை கவசி நாதனின் கதாபாத்திரம் வழி அறிய முடிகிறது.

நிறைவாக

அழகிய பெரியவனின் படைப்புகள் அனைத்தும் சாதிய பொருளாதார ஆதிக்க பின்புலம் அற்ற எதார்த்த மக்களின் வாழ்க்கையை மையப்படுத்தி எழுதும் படைப்புகளாக உள்ளது. இதில் யாம் சில அரிசி வேண்டினோம்' நாவலும் அவ்வாறே ஒடுக்கப்பட்ட

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை முன்னிறுத்தி எழுதப்பட்டுள்ளது. அழகிய பெரியவனின் படைப்புகள் மக்களின் வாழ்க்கையில் இருந்து எடுக்கப்பட்ட கதையாக கட்டமைக்கப்பட்டுள்ளது.யாம் சில அரிசி வேண்டினோம் நாவலில் இடம்பெறும் முக்கிய கதாபாத்திரமான கவசிநாதனின் பாத்திரமானது எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் கவசி நாதனின் குழந்தைப் பருவத்தை கொண்டு தலித் சிறுவர்களின் குழந்தை பருவம் எவ்வாறு உள்ளது என்பதையும் இவ்வாய்வின் வழி அறியப்படுகிறது.

மூல நூல்

- யாம் சில அரிசி வேண்டினோம், நற்றிணைப் பதிப்பகம், முதல் பதிப்பு - *2021*

துணை நின்றவை

1. மறைத்து பேச என்ன இருக்கு (அழகிய பெரியவன் நேர்காணல்கள்) பதிப்பு *2017*
2. புறநானூறு, புலியூர்க்கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், முதல் பதிப்பு டிசம்பர்-*2010*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

11. செய்யறிவும் சாட் ஜிபிடி யின் மேம்பாடுகளும்

ச. தமீம் அன்சாரி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு - *613010*
Email: thameemansarimay@gmail.com

DOI 10.5281/zenodo.17208823.

Abstract:

Today's world has changed to such an extent that it cannot function without technology. Artificial Intelligence represents the pinnacle of scientific advancement and technological progress. It is a branch of computer science. Among such innovations, AI-powered conversational tools like ChatGPT are explored here in terms of how they benefit people, their strengths and limitations, as well as their future developments and improvements.

Key Words: Chat GPT 1- 4o - Chat GPT - 5 - Chat GPT Go

முன்னுரை:

அறிவியலில் நாம் வளர்ந்து வந்தாலும் அதன் வேகம் சற்று குறைவாகவே இருக்கிறது. இருப்பினும், கணினியின் கிளைகளில் ஒன்றுதான் செயற்கை நுண்ணறிவு. அத்தகைய செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி வியப்பளிக்கிறது. அதன் வகையில் செயற்கை நுண்ணறிவான சாட் ஜிபிடியின் வளர்ச்சிநிலை குறித்தும் அவற்றின் மேம்பாடுகள் பற்றியும் மக்களுக்கு எவ்வாறு பயனுள்ளதாக அமைகிறது என்பதனைப் பற்றி விளக்குவதே இவ் ஆய்வுக் கட்டுரையாக அமைகிறது.

செயற்கை நுண்ணறிவு:

- செயற்கை நுண்ணறிவு சுருக்கம் செ. நு என்றும் ஆங்கிலத்தில் "ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ்" ஏ.ஐ என்றும் அழைக்கப்படும்.
- மேலும், செயற்கை நுண்ணறிவை அறிதிறன் என்றும் செய்யறிவு என்றும் கூறுவர்.
- செயற்கை நுண்ணறிவு என்பது தானாக சிந்தித்து செயல்படும் தொழில்நுட்பமாகும்.
- இவற்றில், மனிதனுக்கும் இயந்திரத்துக்கும் இடையில் காணப்படும் வேறுபாடே "படைப்பாக்க திறன் " மட்டும்தான்.
- இயந்திரத்தின் மூலம் கூட படைப்பாக்கத் திறன் செய்ய முடியுமானால் அதுவும் செயற்கை நுண்ணறிவு தான்.
- கணினியின் பல கிளைகளில் செயற்கை நுண்ணறிவும் ஒன்று.
- மனிதனைப் போன்று பணிகளை மேற்கொள்ள செயற்கை நுண்ணறிவிற்கு மனித நுண்ணறிவும் தேவைப்படுகிறது.
- அவ்வாறு மனித நுண்ணறிவும் இயந்திரத்திற்கு கிடைத்துவிட்டால் அவையும் மனிதனைப் போன்று அனைத்து வேலைகளும் செய்ய முடியும்.
- இது போன்ற செயற்கை நுண்ணறிவுகள் திட்டமிடல், சிந்தித்தல், எண்ணங்களை கற்றுக் கொள்ளுதல் என பல்வேறு நுண்ணறிவு திறன்களை உள்ளடக்கியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு வகைகள்:

1. செயற்கை குறுகிய நுண்ணறிவு (Narrow AI)

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

2. செயற்கை பொது நுண்ணறிவு (Generative AI)

3. செயற்கை சூப்பர் நுண்ணறிவு (super AI) (blog.techliance.com)

இதுபோன்ற படிநிலைகளில் செயற்கை நுண்ணறிவு வகைப்படுத்தலாம்.

சாட் ஜிபிடி (ChatGPT):

ChatGPT என்பது அடிப்படையில் ஒரு மெய்நிகர் ரோபோ (சாட்போட்) ஆகும். இது பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்கிறது, எழுதிக் கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்கிறது, சரளமாக உரையாடுகிறது, மேலும் தனிப்பட்ட பிரச்னைகள் பற்றிய ஆலோசனைகளையும் வழங்குகிறது.

சாட் ஜிபிடியின்படிநிலைகள்:

சாட் ஜிபிடி ஓபன் ஏஐ (Open AI) நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு ஆகும்.ஜிபிடி - ஜெனரேட்டிவ் ஃப்ரீ - ட்ரயின்டு டிரான்ஸ்பார்மர். (GPT - Generative Pre-trained Transformer) (நன்றி: புதிய தலைமுறை)

கூகிள் அசிஸ்டன்ட் (google assistant) என்பது சாட் ஜிபிடி வருகையால் கூகுள் பார்டு (Google bard) ஆக மாற்றி அமைத்தது. பிறகு, ஆறே மாதத்தில் புதுப்பித்தும் தன் பெயரை ஜெமினி (Gemini) என்றும் மாற்றியமைத்துக் கொண்டது.சாட் ஜிபிடி அறிமுகமான இரண்டே மாதத்தில் 10 கோடி பயனாளர்களை ஈர்த்தது.சர்ச் இஞ்சின் ஆப்டிமைசேஷன் எனப்படும் SEO.ai வழங்கும் தகவல்கள்படி, சுமார் 100 மொழிகளில் சாட்ஜிபிடி கிடைக்கிறது. ஆங்கிலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படும் இதன் திறன் மற்ற மொழிகளைப் பொருத்து மாறுபடலாம். தமிழிலும் முழுமையாக தரவுகளை கொடுப்பதில்லை. பிழைகளும் இருக்கின்றன. இருப்பினும் தமிழை மேம்படுத்த அதிகப்படியான உள்ளீடுகளை நாம் கொடுக்க வேண்டும். அதற்கு புரியும் விதத்தில் நாம் பயிற்ச்சியும் அளிக்க வேண்டும். தமிழ் அடுத்தக் கட்ட வளர்ச்சியை நோக்கியும் செல்லும்.சாட் ஜிபிடி பல பதிப்புகள் உள்ளன; அவை,

- சாட் ஜிபிடி -1 (2018)
- சாட் ஜிபிடி -2 (2019)
- சாட் ஜிபிடி -3 (2020)
- சாட் ஜிபிடி -3.5 (2022)
- சாட் ஜிபிடி -4 (2023)
- சாட் ஜிபிடி -4o (2024)

வரைபயன்படுத்தினோம்.தற்போது, சாட் ஜிபிடி-5 (2025) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சாட் ஜிபிடி - 5:

சாட் ஜிபிடி - 5 என்பது பெரிய மொழி மாதிரியாகும்.இது ஆகத்து 7, 2025 அன்று முதன்மை ஏஐ மாதிரியாக அறிமுகப்படுத்தப்பட்ட து.இந்த ஜிபிடி -5 பைத்தான் , சி ++ மூலம் எழுதப்பட்டு புதுப்பிக்கப்பட்டது.

ஜிபிடி -5 யின் முன்னோடி,

- ஜிபிடி-4.
- ஜிபிடி-4o
- ஜிபிடி-4.1
- ஜிபிடி-4.5

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

- ஓபன்ஏஜ *o3*
- ஓபன்ஏஜ *o4*-மினி

இதன் வகைமல்டிமாடல். பெரிய மொழி மாதிரி,முன் பயிற்சி பெற்ற மின்மாற்றி உருவாக்கும்,அடித்தள மாதிரி-ஜிபிடி *-5* இலவச மற்றும் கட்டண வசதிகளும் உள்ளன.

GPT-5 யை அதன் முன்னோடி மாதிரிகளுடன் ஒப்பிடும்போது மிகவும் முக்கியமான, "குறைவான வெளிப்படையான" பதில்களை வழங்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்று ஓபன் ஏஜ மேம்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சாட் ஜிபிடி கோ:

- ஓபன் ஏஜ நிறுவனம் ஆகத்து *20, 2025* அன்று " சாட் ஜிபிடி கோ " (ChatGPT Go) என்ற மேம்பட்ட தேடலாக இருக்க வேண்டும் என எண்ணி புதுப்பித்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இது இந்தியாவிற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட "சாட் ஜிபிடி கோ" மாதாந்திர சந்தா கட்டி பயன்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.
- இதன் கட்டணம் மாதத்திற்கு ரூ.*399/-* ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தேவைப்படும் பயனர்கள் இந்தப் பணத்தை யுபிஜ மூலம் நேரடியாக செலுத்தி மேம்பட்ட தேடலை பயன்படுத்திக் கொள்ளலாம் (நன்றி: இந்து தமிழ் திசை, *20/08/2025)* என ஓபன் ஏஜ மேம்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.
- இலவச உரையாடியான சாட் ஜிபிடி யைக் காட்டிலும் சந்தா கட்டணத்தின் மூலம் *10* மடங்கு கூடுதலாக சாட்ஜிபிடி தங்கு தடையின்றி பயன்படுத்த முடியும் என மேம்பாட்டானவர்கள் தெரிவிக்கின்றனர்.
- மெசேஜ் மற்றும் இமேஜ் ஜெனரேஷன் போன்றவற்றை கூடுதலாகவும் தங்கு தடையின்றி பயன்படுத்த முடியும்.
- இலவசமாக பயன்படும் சாட் ஜிபிடிகென வரம்புகள் , வரையறைகள் உள்ளது. இதனை கடக்கும்போது தொடர்ச்சியாக சாட் செய்ய முடியாது. ஆனால் சந்தாவின் மூலம் தங்குத்தடையின்றி பயன்படுத்த முடியும்.
- உலக அளவில் சாட்ஜிபிடி-யை பயன்படுத்துபவர்களில் இந்தியா தங்களது *2*-வது பெரிய சந்தையாக அமைந்துள்ளது என ஓபன் ஏஜ கூறியுள்ளது. அதை கருத்தில் கொண்டே இந்த நகர்வை அந்நிறுவனம் கையில் எடுத்துள்ளது.

ஏஜ யில் சாட் ஜிபிடி மைல்கல்:

ஆற்றல் மிக்க உரை (Text) அடிப்படையிலான ஏஜ செயலிகள், மிகப் பெருமளவிலான தரவுகளைச் சேமித்து வைத்தும், வாக்கியத்தின் சிறப்புகளைக் கண்டறிய அல்காரிதம்களைப் பயன்படுத்தியும் செயலாற்றுகின்றன.இவை லார்ஜ் லேங்க்வேஜ் மாடல்ஸ் (*LLMs)* அதாவது, பெரிய மொழி மாதிரிகள் என்றழைக்கப்படுகின்றன.

சாட் ஜிபிடியின் நிறைகள்:

- சாட் ஜிபிடியில் மனிதன் கணினியிடமும் கணினி மனிதனிடமும் உரையாடுவது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.
- முக்கிய தகவல்களை சேமித்து வைத்து உரிய நேரத்தில் கொடுக்கிறது.
- தேவையான தகவல்களை நொடிப் பொழுதில் கொடுக்கிறது.
- என்ன கேள்வி கேட்டாலும் பதில் பெறலாம்.
- எத்தனை முறை கேட்டாலும் சலிக்காமல் பதில் கூறும்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

- பிழைகள் இருப்பின் அதை சுட்டிக் காண்பித்தால் அதை மாற்றிக் கொள்ளவும் தயாராக இருக்கிறது.
- எவ்வளவு கடுமையான வினாக்களாக இருந்தாலும் தெளிவாகவும் நேர்த்தியாகவும் விளக்கமாகவும் கொடுக்கிறது.
- தகவல்கள் கூட நாம் எந்த நிலையில் கேட்கிறோம், அதாவது குழந்தைகளுக்காக? ஆசிரியர்களுக்காக? ஆய்வாளர்களுக்காக? எந்த நிலையில் கேட்கிறோமோ அந்த நிலைக்கு தன்னை மாற்றிக் கொண்டு தகவல்களை கொடுக்கிறது.
- ஸ்கிரிப்டை எத்தனை முறை மாற்றி கேட்டாலும் மாற்றிக் கொடுக்கிறது.

சாட் ஜிபிடியின் குறைகள்:

- மனிதனின் சிந்தனை திறன் பாதிக்கப்படும்.
- கூகுளில் பலரின் பரிந்துரைகள், அறிவுரைகள், சிந்தனைகள் கிடைக்கும். ஆனால், இதனிடம் அதனுடைய பரிந்துரை மட்டுமே கிடைக்கும்.
- இவை பயிற்சியில் இருப்பதால் தவறான தகவல்களும் எழுத்துப் பிழைகளும் தருகின்றன.
- தகவல் பாதுகாப்பு (*Security*) மற்றும் தனியுரிமை (*Privacy*) குறைகள். *ChatGPT*-யைப் பயன்படுத்தும் போது *IT* பாதுகாப்பு குறைகள் மற்றும் தரவு திருட்டு வாய்ப்பு உள்ளது

முடிவுரை:

செயற்கை நுண்ணறிவு தளங்கள் பிரபலமாகி வருகின்றன. அதில் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது ஓபன் ஏஐ நிறுவனத்தின் சாட் ஜிபிடி. சாட் ஜிபிடி யின் வருகையால் பிற ஏஐ நிறுவனமான கூகுள் ஜெமினி ஏஐ, எக்ஸ் க்ரோக் ஏஐ, டீப் சீக் ஏஐ, பெர்ஃபிளக்ஸ் சிட்டி ஏஐ பிரபலமாக இருந்தாலும் சாட் ஜிபிடியை மக்கள் பெரிய அளவில் பயன்படுத்துகின்றனர். இதன் வகையில் போட்டிக்கு போட்டியாக ஏஐ நிறுவனங்கள் களம் இறங்கினாலும் மக்களுக்கு ஏற்றவாறு தன்னை புதுப்பித்துக் கொண்டே நிறுவனங்கள் வலம் வருகின்றன.

துணைநூற்பட்டியல்:

1. ப. சரவணன், *2023*, செயற்கை நுண்ணறிவு, சுவாசம் பதிப்பகம்.
2. *blog.techliance.com,*
3. *Vikatan.com*
4. நன்றி: இந்து தமிழ் திசை, *20/08/2025*
5. *Oneindia, 21-07-2025*
6. சன்நியூஸ், *09.03.2023*
7. *giriblog.com*
8. *en.m.wikipedia.org*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

12. கவிஞர் இரா.காமராசு கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

நீ.சுமதி
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை
சைவபானு சத்திரியக் கல்லூரி,அருப்புக்கோட்டை
8148797387

Abstract:

Although each author has written in different ways and with different strategies, women's liberation is the goal, women's freedom is the purpose, women's rights are the demand, women's equality is the need. Feminism is a problem that has been ongoing since time immemorial, including the injustices and cruelty inflicted on women, the exploitation of their labor, and the conditions in which they are enslaved by patriarchal tactics. Although women's rights have been talked about since the beginning of literature, it is also talked about in modern literature. Thus, this article proposes that the need for the struggle of feminism still exists in the poetic lines of R. Kamarasu.

Keywords: Women's equality, feminism, women's social justice, feminist concept, female personality, women's freedom.

முன்னுரை:

ஒவ்வொரு படைப்பாளியும் ஒவ்வொரு விதமாய் ஒவ்வொரு யுக்தியுடன் எழுதியிருந்தாலும் பெண் விடுதலையே இலக்கு, பெண் சுகந்திரமே நோக்கம் பெண் உரிமையே கோரிக்கை, பெண் சமத்துவமே தேவை. பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளையும் கொடுமைகளையும் அவர்களின் மீதான உழைப்புச் சுரண்டல்களையும் ஆணாதிக்க தந்திரங்களினால் அடிமைகளாக ஆக்கப்படுகின்ற நிலைகளையும் பெண்ணியம் என்பது தொன்றுதொட்டு தொடரும் ஒரு பிரச்சனை. இலக்கியம் தொடங்கிய காலத்திலிருந்து பெண்ணுரிமை பேசப்பட்டாலும் நவீன இலக்கியத்திலும் பேசப்படுகின்றது. அவ்வாறாக இரா.காமராசுவின் கவிதை வரிகளில் பெண்ணியத்தின் போரட்டத்தின் தேவை இன்னும் இருக்கிறது என்பதை இக்கட்டுரையானது முன்மொழிகிறது.

பெண்ணியம் விளக்கம்:

பெண்ணியம் என்பது ஆதிக்கத்தை எதிர்ப்பதே ஆகும். ஆண்களை எதிர்ப்பதன்று. இருபாலருக்கும் சம உரிமை, சமநீதி, சமமதிப்பு கிடைக்கும்படிச் செய்வதே இதன் நோக்கமாகும். பிறப்பு முதல் இறப்பு வரை ஆண்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வரும் சலுகைகளை இழக்க விரும்பாத ஆண்களே பெண்ணியம் ஆண்களுக்கு எதிரானது எனக் கருதுவர். ஆணும் பெண்ணும் சம உரிமை பெற்று வாழும் வாழ்க்கையே முழுமையான வாழ்க்கையாகும். பெண் தாழ்ந்து ஆண் உயர்ந்துள்ள உறவு நிலைகளோ ஊனமுற்ற சமுதாயத்தையே உருவாக்க முடியும். இருபாலருக்கும் சம உரிமை வேண்டுவதே மானுடத்தின் நோக்கமாகும். பெண்ணியத்தின் அடிப்படை மானுடமே.

பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்

Feminism என்ற ஆங்கில சொல்லானது *Femina* என்ற இலத்தீன் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். உமனிசம் *(womanism)* என்ற சொல்தான் *1889* வரை பெண்களின் உரிமை பிரச்சனைகளை அதன் அடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்தப் பயன்பட்ட நிலையில் *1980* ஆம் ஆண்டு *'Feminism'* என்று மாற்றம் பெற்றது. (பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண்ணிய எழுத்தும் ப.*2)1*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

1894-ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன்முதலில் இச்சொல் எழுதப்பட்டிருக்கின்றது. அந்த அந்த கால கட்டங்களில் உருவாகிய இலக்கியங்கள் நமக்கு விட்டுச் சென்றிருக்கின்ற மரபுகள், கட்டுப்பாடுகள், விழுமியங்கள் எல்லாமே ஆண்வழிச் சிந்தனை உடையதாகவும் சமுதாயம் ஆட்சி,கலாச்சாரம், காலம் என மாறிய கால கட்டங்களிலும் அந்த இலக்கியங்களை இன்றைய கால கட்டங்களுடன் ஒப்பீடு செய்து சிந்திக்க துவங்கியிருக்கிறோமா அல்லது நமது இன்றைய இலக்கியங்கள் ஆணாதிக்க சிந்தனை மரபிலிருந்து விடுபட்டு நின்று பெண்ணை பார்க்கத் துவங்கியிருக்கிறதா என்பதும் சிந்திக்க வேண்டிய விஷயமாகும்.

பூவானவள் பூமியை ஆளும் வல்லமை படைத்தவள் பெண். இவ்வுலகில் பல விதமான பரிணாமங்களை ஒரு பெண் அடைகிறாள். பிறந்ததிலிருந்து இறக்கும் வரை பல வேடங்களை அணிந்து கொண்டேதான் இருக்கிறாள். எல்லாத் துறைகளிலும் தங்களை திறமைகளை நிரூபித்துக் கொண்டே இருக்கிறாள். ஆனாலும் ஆணாதிக்க வர்க்கத்தின் அடக்கு முறையின் கீழ் பெண் ஒடுக்கப்பட்டு கொண்டிருக்கும் நிலை வருத்தத்திற்குரியது. அசுர வேகத்தில் இவ்வுலகம் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பல்வேறு முன்னேற்றங்களை கண்டிருந்தாலும் இன்றளவும் பெண்ணை சார்ந்த மூடநம்பிக்கைகள் பெண்களுக்கு கல்வி மறுக்கப்படுதல் குழந்தை திருமணம் ஆண்பெண் பாலின பாகுபாடு அடக்குமுறைகள், பெண்களின் உழைப்பு மீதான சுரண்டல், பெண்ணுக்குப் பெண்ணே எதிரியாக இருத்தல் போன்றவற்றை இரா.காமராசு கவிதைகள் சுட்டிக் காட்டுகின்றன.

பெண்ணை சார்ந்த மூடநம்பிக்கைகள்:

பல சாதனைகள் புரிந்து கொண்டிருக்கும் இன்றளவிலும், எவ்வளவோ கல்வியறிவும் மாற்றங்களும் பெற்றுவிட்ட பின்னரும் பெண்கள் மூடநம்பிக்கையின்பால் செல்லுகின்ற ஈடுபாடு அவர்களுக்கான விடியலைக் காலம் தராமல் பின் தள்ளுகிறது.

தங்களைத் தாங்களே சிறைப்படுத்தும் நிலையை ஒரு நிகழ்ச்சியின் மூலம் கவிதையாக மூதேவிகள் என்னும் தலைப்பில்,

மகள் திருமணத்தின் மறுநாளே
கணபதி காலமானார்
அவருக்கிருந்த மாரடைப்பு நோயும்
அன்று தின்ற ஆட்டுக்கறியும்
காலன் வீசிய பாசக்கயிறுகள்

எல்லா வாய்களும் கடித்துக் கடித்துத்
துரத்தி துப்புகின்றன அவளை

(**இரா.காமராசு கணவனான போதும்:மூதேவிகள் பக்**.31)2

இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகள் வறுமையிலும், துயரங்களிலும் மேலும் மேலும் பெண்களை அழ வைத்து கொண்டே இருக்கிறது என்பதை கவிஞர் அழகியல் உணர்வோடு எடுத்துயம்புகிறார்.

பெண்களுக்கு கல்வி மறுக்கப்படல்:

பெண்கள் எல்லா விதங்களிலும் தன்னுடைய உரிமைகளை உணர்ந்தவர்களாக மேலோங்கி இருக்க வேண்டும். சிந்தனை அறிவில் சிறந்து விளங்கிட பெண்களுக்கு கல்வி மிக அவசியம். கல்வி கற்றோர் பண்பாளராக வாழ ஆண்களுக்கு சமமாக பெண்கள் கல்வி கற்க வேண்டும். ஆனால்,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கிராம புறத்தில் வசிக்கும் பெண் குழந்தைகள் இன்றும் கூட பள்ளிக்கு சரிவர செல்லவில்லை. குறிப்பிட்ட வயது வரை கல்வி கற்றால் போதும் என்ற மனநிலை இச்சமூகத்தில் இருப்பதனை இரா.காமராசுவின் கவிதைகளின் வழி காணலாம். சான்று,

அகரவரிசை அறிமுகம் ஆகாத
பொட்டை முகங்கள்
நிறைந்து கிடக்கும் கிராமங்கள்
இந்த நிலையில்

கஞ்சியைத் தேடும் கிராமத்து தேவதைகள்

(இரா.காமராசு க.போ.கிராமத்து தேவதைகள் பக்.*57)3*

என்று கிராமப்புறங்களின் பெண் குழந்தைகளின் நிலையினை நினைத்து வருத்தப்படுகின்ற வகையில் இக்கவிதை காணப்படுகின்றது.

குழந்தைத் திருமணம்:

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் குடும்பம் என்ற அமைப்பில் பெண்களே முக்கிய கதை மாந்தர்களாக இருந்துள்ளனர்.

ஒரு பெண்ணிற்கு பதினெட்டு வயதிற்கு முன் திருமணம் என்பது அவளுடைய சுய ஆளுமை,வளர்ச்சித் தடைப்படுவதும், குடும்பச்சுமையையும் தாங்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறார்கள். இதனால் குறிப்பாக கிராமத்து பெண்கள் தங்களுடைய மணவாழ்க்கை சார்ந்த மன உணர்வுகளை வெளிப்படுத்த இயலாதவர்களாக அவர்களை கருதுவதால் அவர்களுக்கு கல்வி மறுக்கப்படுகின்ற சூழல் ஏற்படுகிறது என்பதை,

ஏழாவது படிக்கும்போது
பெரிய மனுசியா
பள்ளியிலிருந்து நின்று போனாய்
நான் பத்தாவது பாஸாசி
தந்த சாக்லெட்டை
உன் மகளுக்கு நீ ஊட்டிய போது
வெட்கம் பிடுங்கித்தின்றது
நம் இருவரையும்

(இரா.காமராசு ஙப்போல் வளை, பிள்ளை பிராயத்திலே,பக்.*65)4*

என்று இளம் வயதில் கல்வி கற்காமல் திருமணம் செய்யும் அவலங்களை ஆசிரியர் சுட்டுகிறார். பெண்கள் கல்விகற்க வேண்டும் என்று பெண்ணுரிமைக்கு கல்வியும், அறிவு வளமும் அவசியம் என்று தன் கருத்தை முன் வைக்கிறார்.

ஆண் பெண் பாலினப் பாகுபாடு:

இச்சமுதாயம் பெண்களைப் பெண்ணாக மாறு பெண்ணாகவே இரு. பெண்ணாகவே வாழ் என்று சொல்லி அவர்களை அடிமை வாழ்விற்கு உட்படுத்திவிட்டது. எனவே பாலியல் அடிப்படையில் இச்சமுதாயம் உயர்நிலையை அடைய வேண்டும் என்றால் பால்வகை, என்பது அழிக்கப்பட வேண்டும் என்று பெண்ணியவாதிகள் கருதுகின்றனர். (இரா.பிரேமா பெண்ணியம் அணுகுமுறைகள் பக்.*116)5*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஆண் இப்படித்தான் இருப்பான் பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற மனோபாவத்தை உருவாக்கிக் கொண்டு வருகின்ற தலைமுறையும் அதன்படி உருவாக்குவதே ஆகும்.

ஏழாம் வகுப்பில்
பக்கத்து பெஞ்சு சித்ராவுடன்
ஏதோ பேசியதைப் பார்த்துவிட்ட
கணக்கு வாத்தியார்
பயலும் செருக்கியும் சோடி சேர்ந்தாச்சு
போட்ட கூச்சல்
வகுப்பே கூடி நிற்க
விசாரணையின்றியே கொடுத்த தண்டனை
இந்த நாற்பத்திரண்டிலும்
மனைவி,மகள்,சக ஊழியை
எந்த பெண்களோடு பேசும்போதும்
ஆவி உருவங்களாய்
மனசை மிரட்டும் பயங்கரமாய்,

(இரா.காமராசு நப்போல் வளை பக்.*74)6*

என்ற கவிதையின் மூலம் பாலின பாகுபாட்டைச் சுட்டுக் காட்டிகிறார்.

பெண்களின் மீதான உழைப்புச் சுரண்டல்:

உண்மையில் பெண்களின் பொருளாதாரமும் அவர்களின் உழைப்பும் சுரண்டப்படுகிறது என்ற உண்மையை கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது. படித்த,பணியாற்றுகின்ற பெண்ணை மணக்க விரும்பும் இக்கால ஆண்கள் வீட்டு வேலைகளை பகிர்ந்து கொள்ள ஆர்வம் காட்டுவதில்லை. இதை ஆணாதிக்க கொடுமை என்கிறார், இரா.காமராசு

ஆண் செய்யும் குடும்ப வேலை
அனைத்து இதழ்களிலும்
ஜோக்காகவே ஜொலிக்கிறது
மகாத்மாக்களும் மகாகவிகளும்
பார்க்க விரும்பியது சுகந்திரப் பெண்கள்
இன்று சுமைதாங்கிகளாய்
பெண்களின் தோள்கள்

(இரா.காமராசு, நப்போல் வளை பக்.*43)7*

என்று பெண்களை உழைக்கும் இயந்திரமாகச் சுட்டுகிறார் இரா.காமராசு

பெண்ணுக்கு பெண்ணே எதிரி: விதவை, வாழ்வு, மாமியார் கொடுமைகள், ஆண்களின் அடக்குமுறையின் கீழ் பெண்களுக்குப் பெண்களே எதிரியாக மாறும் நிலையையும், பெண் கொடுமைகளையும் பற்றி இரா. காமராசுவின் கவிதைகளில் காண முடிகிறது. இதனை,

பெண்களுக்கு மட்டுமே பெருமை சேர்க்கும்
விதவை வாழ்வு விரட்டப்படவில்லை
அடுப்புப் புகை கக்கிய இருள்

(இரா.காமராசு கணவனான போதும் பக் *73)8*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

என்ற கவிதை வரிகளில் பெண்களின் உணர்வுகளைப் பெண்களே மதிக்காமல் பெண் கொடுமைகளைச் செய்யும் நிலையை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முடிவுரை:

இரா.காமராசு தன்னுடைய கவிதைகளின் வாயிலாக பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளையும்,கொடுமைகளையும், அவர்களின் மீதான உழைப்புச் சுரண்டல்களையும் ஆணாதிக்கத் தந்திரங்களினால் அடிமைகளாக ஆக்கப்படுகின்ற நிலைகளையும் எடுத்தியம்பியுள்ளார்.

ஆணாதிக்க சமுதாயத்தை தோலுரித்துக் காட்டவும் தயங்கவில்லை எதிர்க்கவும் அஞ்சவில்லை. பெண்ணுக்கான விடுதலை, உரிமை, சுகந்திரம், சமத்துவம் வெகுதூரத்தில் இல்லை என்பதையே கவிஞர்களின் கவிதைப்படைப்புகள் கூறுகின்றன. ஆயினும், அவைகளை பெண் சமூகம் விரைவில் பெற பெண்ணியம் சார்ந்த படைப்புகள் அவசியம் ஆகிறது. அத்தகைய பெண்ணியப் படைப்புகளுக்கு இலக்கியமே களமாக உள்ளது,

துணைநூற்பட்டியல்:

1. செ.சாரதாம்பாள், பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண்ணிய எழுத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-*2005*
2. இரா.காமராசு, கணவனான போதும், மூதேவிகள் ப.*31*
3. இரா.காமராசு, கணவனான போதும், கிராமத்து தேவதைகள் ப.*57*
4. இரா.காமராசு, ஙப்போல் வளை, (பிள்ளைப் பிராயத்திலே) ப.*65*
5. இரா.பிரேமா பெண்ணியம் அணுகுமுறைகள் ப.*116*
6. இரா.காமராசு, ஙப்போல் வளை ப.*74*
7. இரா.காமராசு, ஙப்போல் வளை ப.*43*
8. இரா.காமராசு, கணவனான போதும் ப.*73*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

13. திணைமாலை நூற்றைம்பதில் வாள் என்னும் உரிச்சொல்

மு.விஜயலட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி - 626 123.
மின்னஞ்சல் முகவரி -vijayalakshmisfr@gmail.com , ORCID ID: 0009-0000-2415-8118.
DOI 10.5281/zenodo.17209011.

Abstract:

Of the four types of words–noun, verb, particle, and urichol . urichchol is one. It originates from sound, hint, and quality. An urichol can convey multiple meanings, and multiple urichols can express a single meaning. It is used to make unfamiliar concepts understandable through familiar words. These words are primarily considered to belong to poetry. In the work Thinaimalai Nurraimbathu, the urichol "val" appears in five poems, indicating the quality of brightness. The poems in Thinaimalai Nurraimbathu serve as an excellent example of how urichols are used to create poetic beauty. It is also evident from these poems that urichols are mostly structured as modifiers.

Key Words: Adjective grammar - adjectives - vaal in Tolkappiya - Vaal in Thinaimalai

முன்னுரை:

காலந்தோறும் புதிது புதிதாய் சொற்கள் தோன்றிய வண்ணமும் பழைய சொற்கள் பொருள் மாற்றம் அடைந்தவாறும் இருக்கின்றன. சொற்களின் பயன்பாடே ஒரு மொழி நிலைத்து நிற்க பேருதவி புரிகின்றன. சொற்கள் பண்பாட்டைப் புலப்படுத்துகின்றன என்பது மொழியியலாளர்கள் மற்றும் ஆய்வறிஞர்களின் கருத்தாகவும் விளங்குகின்றது. ஒரு மொழியை ஆக்குவதிலும் அழிப்பதிலும் சொல் முக்கிய பங்காற்றுகிறது. நாம் அதிகமாக நம் மொழிச் சொற்களை பயன்படுத்தும் போது நம் மொழி வாழுகிறது. நம் மொழிச் சொற்களை பயன்படுத்தாத போது அம்மொழியானது அழியும் நிலைக்குத் தள்ளப்படுகிறது. திணைமாலை நூற்றைம்பதில் வாள் என்னும் உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தினையும் அச்சொல் உணர்த்தும் பொருளினையும் அச்சொல் வருமிடங்களையும் ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியத்தில் உரிச்சொற்களுக்கான இலக்கணம்:

அகத்தியரின் மாணவரான தொல்காப்பியரால் இயற்றப்பட்டது தொல்காப்பியம். தமிழில் கிடைத்த மிகப் பழமையான இலக்கண நூலாக தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியம் எழுத்து, சொல் மற்றும் பொருளிற்கான இலக்கணங்களைக் கூறுகின்றது.

உரிச்சொல் குறித்து ,

“உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்”[1]

(தொல்(சொல்);சேனாவரையர்,ப-185)

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்னும் நூற்பாவின் வாயிலாக,

1) உரிச்சொல்லானது இசை, குறிப்பு, பண்பெனும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றும்.
2) பெயர் போலவும் வினை போலவும் தம் உருபு தடுமாறும்.
3) ஒரு சொல் பல பொருளைப் பெற்று வரும்.
4) பல சொல் ஒரு பொருளைப் பெற்றும் வரும்.
5) கேட்பவரால் பயிலப்படாத சொல்லைப் பயின்றப் பொருளோடு சார்த்திப் பொருளை உணர்த்தும்.
6) தமக்குரிய இயல்பில் நின்றும் தாம் பொருந்தி நிற்கும் பெயரும் வினையுமாகிய நிலைக்களன்களால் வேறுவேறு பொருள்களை உணர்த்தும் என்பதை அறிய முடிகிறது. முத்து வீரியமும் தொல்காப்பியமும் உரிச்சொல் குறித்து ஒரே விதமான கருத்துக்களைத் தெரிவிக்கிறது.

"தமக்கியல்பில்லாத இடைச்சொற் போலாது இசை குறிப்புப் பண்பெனும் பொருட்குத் தாமே உரியவாகலின் உரிச்சொல்லாயிற்று"[2] (தொல்(சொல்);கி.ராசா,ப-*102)* என்று சேனாவரையர் உரிச்சொல்லுக்கு விளக்கம் அளிக்கிறார்.

'நால்வகைச் சொற்களுள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வரும் சொற்கள் உரிச்சொற்கள். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள் உணர்த்துவதற்குத் தாமே உரியன ஆதலின் உரிச்சொல் என்று பெயர் பெற்றது"[3] (நன்னூல்(சொல்); ச.திருஞானசம்பந்தன்,ப-*128)* என்றும் கூறலாம் என தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு உரையெழுதிய முனைவர் ச.திருஞானசம்பந்தம் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர் பலரறிய வழங்கப்படும் உரிச்சொற்களை எடுத்துரைக்காமல், யாருக்கும் தெரியாத உரிச்சொற்களையும் அவற்றிற்குரிய பொருளினையும் மட்டுமே தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பதை,

"வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன"[4]

(தொல்(சொல்);சேனாவரையர்,ப-*156)*

என்னும் நூற்பாவின் வழி அறிய முடிகின்றது. வழக்கில் பயன்படுத்தாத பலருக்குத் தெரியாத உரிச்சொற்களை மட்டுமே தொல்காப்பியர் விளக்குகின்றார்.

தொல்காப்பியத்தில் உரிச்சொற்கள்:

தொல்காப்பியத்தில் மொத்தம் *120* உரிச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. அதில் வாள் என்னும் சொல் ஒளி என்னும் பண்பைக் குறிக்கும் பண்பு உரிச்சொல்லாக இடம்பெற்றுள்ளது. சொல் குறித்து எழுந்துள்ள இலக்கண நூல்களில் தொல்காப்பியமும் நேமிநாதமும் மட்டுமே வாள் என்னும் உரிச்சொல்லைக் குறிப்பிட்டுள்ளன.

வாள்:

திணைமாலை நூற்றைம்பதில் வாள் என்னும் உரிச்சொல் ஐந்து பாடல்களில் காணப்படுகின்றது. தொல்காப்பியர் காலத்தில் வாள் என்னும் சொல்லுக்கு ஒளி என்னும் பொருள் வழங்கப்பட்டுள்ளதை,

"வாளொளி யாகும்"[5]

(தொல்(சொல்); சேனாவரையர்; ப - *136)*

என்னும் நூற்பாவின் வழி அறியலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

திணைமாலை நூற்றைம்பதில் வாள்:

மணமுள்ள சந்தன மரங்களை வேரோடு வெட்டி, நல்ல மழை நாளில் விதைக்கின்றனர். இரவு நேரத்தில், அம்முதிர்ந்த தினைப்புனத்தைக் காவல் செய்யும், நிலவின் ஒளியினை உள்வாங்கிய தாமரையின் முகத்தைப் போன்று ஒளி பொருந்திய முகத்தினையும் தாழ்ந்த கூந்தலினையும் உடைய பெண்களை விளித்து, எம்முடைய வில்லினின்று புறப்பட்ட அம்பு பாய்ந்த மான்களைக் கண்டீரோ? என்று தலைவன் வினவுவதாக,

"நறைபடர் சாந்தம் அறஎறிந்து நாளால்
உறை எதிர்ந்து வித்தியஊழ் ஏனல் - பிறைஎதிர்ந்த
தாமரைபோல் வாள்முகத்துத் தாம்குழலீர்! காணீரோ
ஏமரை போந்தன ஈண்டு."[6]

(திணைமாலை நூற்றைம்பது; பா-1)

என்னும் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலிலுள்ள வாள் என்னும் சொல் பெயரடையாக அமைந்து ஒளி என்னும் பொருளைத் தருகின்றது.

அழகிய திங்கள் போன்று, ஒளிமிக்க முகத்தினையும் ஆராய்ந்தறிந்த அணிகலன்களையும் உடைய தலைவியும் எதிரிலாத ஒளிமிக்க நீண்ட வேலினை உடைய தலைவனும் சுரத்தின் வழியே செல்வதைக் கண்டு, அச்சப்பட்டு, சந்திரனும் சூரியனும் அச்சுரத்தின் கண்ணே போயின என்று அவர்களைக் கண்டவர்கள் கூறியதாக அச்செய்தியைக் கேள்விப்பட்டவர்கள் செவிலியிடம் எதிர்பட்டுச் சொன்னதாக,

"அஞ்சுடர்நீள் வாள்முகத்து ஆயிழையும் மாறிலா
வெஞ்சுடர் நீள்வேலானும் போதரக்கண்டு - அஞ்சி
ஒருசுடரும் இன்றி உலகுபாழ் ஆக
இருசுடரும் போந்தன என்றார்."[7]

(திணைமாலை நூற்றைம்பது; பா-71)

என்னும் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலிலுள்ள வாள் என்னும் சொல் பெயரடையாக வந்து ஒளி என்னும் பொருளைக் குறிக்கின்றது.

அகன்ற கண்களையுடைய தோழியே! வீட்டிலுள்ள விளக்கானது, மழுங்கி எரியும் பொழுது, அதைத் தூண்டிவிட்டு நன்றாக ஒளிவிடச் செய்யும் பெண்களின் விரல் போன்று காந்தள் அரும்புகள் கார்த்திகைப் பூக்களின் மீது பொருந்தி மலர்ந்தன. மழை பெய்வதால் முல்லை நிலம் எங்கும் நீர் நிரம்பப்பெற்று, தனக்குரிய கார்ப்பருவத்தினை மேற்கொண்டது. இவ்வாறிருக்க நீ எதனால் இப்பருவம் கார்ப்பருவம் இல்லை என்கிறாய் என்று தலைவி தோழியிடம் வினவுவதாக,

"கார்தோன்றிப் பூவுற்ற காந்தள் முகைவிளக்குப்
பீர்தோன்றித் தூண்டுவாள் மெல்விரல்போல் - நீர்தோன்றித்
தண்பருவம் செய்தது கானம் தடங்கண்ணாய்!
என்பருவம் அன்றுஎன்றி இன்று."[8]

(திணைமாலை நூற்றைம்பது; பா-118)

என்னும் பாடல் விளக்குகிறது. இப்பாடலிலுள்ள வாள் என்னும் சொல் ஒளியினைக் குறிக்கிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

விளங்குகின்ற பற்களையுடைய தோழியே! பொன் போன்ற வெயில் ஒளியால் வெந்து, வெறுந்தரையாகக் காணப்பட்ட காடுகள், இன்று மழை மிகுதியால் மரம், செடி, கொடிகள் மிகுந்து மலர்கள் மூடப்பட்டிருந்தாலும் என்ன பலன்? இது கார்காலம் அன்று, என்று நீ சொல்கிறாய். என் மேனி ஒளியிழந்தது போல என் கண்களும் ஒளியிழந்தன. தலைவனைப் பிரிந்த நலமில்லா நாட்களின் எண்ணிக்கையும் மிகுதியாகி எனக்கு துன்பத்தைத் தருகின்றன என்று தலைவி உரைப்பதாக,

"பொன்வாளால் காடில் கருவரை போர்த்தாலும்
என்வாளா என்றி இலங்கெயிற்றாய்! - என்வாள்போல்
வாள்இழந்த கண்தோள் வனப்பிழந்த மெல்விரலும்
நாள்இழந்த எண்மிக்கு நைந்து."[9]

(திணைமாலை நூற்றைம்பது; பா-99)

என்னும் பாடல் இடம்பெற்றுள்ளது. இப்பாடலில் வாள் என்னும் சொற்கள் மும்முறை அமைந்து மூன்று முறையும் ஒளி என்னும் பொருளைக் கொடுக்கின்றது.

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ அல்லது பொருளோ மீண்டும் மீண்டும் வருவது பின்வருநிலையணி ஆகும் என்பதை,

"முன்வரும் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரும் என்னிற் பின்வரு நிலையே"[10]

(தண்டியலங்காரம்; நூற்பா-41)

என்னும் நூற்பா குறிப்பிடுகிறது. பின்வருநிலையணியை சொற்பின்வருநிலையணி, பொருள் பின்வருநிவையணி, சொற்பொருள் பின்வருநிலையணி என மூன்று வகைகளாகப் பிரிப்பர்.

- செய்யுளில் முன்னர் வந்த சொல் பின்னர் பல இடத்தும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது - சொற்பின்வருநிலையணி.
- செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது - பின்வருநிலையணி.
- செய்யுளில் முன்னர் வந்த சொல் அதே பொருளில் பலமுறை வருவது - சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

நயங்களின் பொருட்டும் உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு மேற்கண்ட பாடல் ஒரு நல்ல சான்றாதாரமாக விளங்குகின்றது. திணைமாலை நூற்றைம்பதில் நாற்பத்தி ஒன்றாவது பாடலில் வாள் என்னும் சொல் நான்கு முறை இடம்பெற்று நான்கு முறையும் ஒளி என்னும் பொருளை உணர்த்துகின்றது.

வாள் போன்ற ஒளிமிக்க கண்களையுடைய தோழியே! முல்லை நிலம் சிறந்த நாடக சாலையாகவும் மேகக் கூட்டமானது, இடிக்குரலாகிய பாட்டைப் பாடவும் வண்டினங்கள் யாழ் ஆகச் சுருதி கூட்டவும் வேனிற்காலத்தில், தோகை விரித்து மகிழ்ந்து ஆடாத மயில்கள் நடனம் ஆடவும் வெண்காந்தள் மலர்களாகிய வேடிக்கைப் பார்ப்போர் வியப்புடன் கைகளைத் தூக்கி அசைக்கவும் நேர்ந்த இக்கார்காலத்தில் தலைவனைப் பிரிந்த தலைவியர் இறப்பினைப் பெறாது உய்யும் வழி இருப்பின் எடுத்துச் சொல்வாயாக என்று கார்ப்பருவம் கண்டு ஆற்றாத தலைவி தோழியிடம் கூறினாள் என்பதை,

"கானம் கடியரங்காக் கைம்மறிப்பக் கோடலார்
வானம் விளிப்பவண்டு யாழாக - வேனல்
வளரா மயிலாட வாட்கண்ணாய்! சொல்லாய்
உளராகி உய்யும் வகை".[11] **(திணைமாலை நூற்றைம்பது; பா-111)**

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்னும் பாடல் விளக்குகிறது. இப்பாடலிலுள்ள வாள் என்னும் சொல் பெயரடையாக வந்து ஒளி என்னும் பொருளைத் தருகின்றது.

வ.எண்	உரிச்சொல்	பாடல் வரி	பொருள்	வருமிடம்
1.	வாள்	"தாமரைபோல் **வாள்**முகத்துத் தாம்குழலீர்! காணீரோ" (பா-1)	ஒளி	பெயரடை
2.		"அஞ்சுடர்நீள் **வாள்**முகத்து ஆயிழையும் மாறிலா" (பா-71)		பெயரடை
3.		"பீர்தோன்றித் தூண்டு**வாள்** மெல்விரல்போல் - நீர்தோன்றித்" (பா-118)		பெயரடை
4.		"பொன்**வாளால்** காடில் கருவரை போர்த்தாலும் என்**வாளா** என்றி இலங்கெயிற்றாய்! - என்**வாள்**போல **வாள்**இழந்த கண்தோள் வனப்பிழந்த மெல்விரலும்" (பா-99)		பொன்வாளால் - பெயரடை, என்வாள் - பெயரடை, வாள் இழந்த - வினையெச்சம்
5.		"வளரா மயிலாட **வாட்**கண்ணாய்! சொல்லாய்" (பா-111)		பெயரடை

திணைமாலை நூற்றைம்பதில் வாள் என்னும் உரிச்சொல் இடம்பெற்றுள்ள விதத்தினையும் அச்சொல் உணர்த்தும் பொருளினையும் மேற்கண்ட அட்டவணை வழி அறிய முடிகிறது.

தற்காலத்தில் வாள் என்னும் சொல்:

நர்மதாவின் தமிழ் அகராதி, "வாள் என்னும் சொல்லுக்கு கைப்பிடியுடன் நீளமாகவும் கூர்மையான முனையும் உடைய கத்தி ; ஒளி, புகழ், கொல்லுதல், ரம்பம், கத்தரிக்கோல்; *sword, luster; fame; to kill; saw; scissors*"[12] ஆகிய பொருளினை உணர்த்துவதாக குறிப்பிட்டுள்ளது. (**நர்மதாவின் தமிழ் அகராதி; நர்மதா பதிப்பகம்**; ப-802)

தற்காலத்தில் வாள் என்னும் சொல் ஆயுதத்தினைக் குறிக்கும் பெயர்ச்சொல்லாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

முடிவுரை:

- இசை, குறிப்பு, பண்பினை அடிப்படையாகக் கொண்டு ஒரு சொல் பல பொருளைப் பெற்றும் பலசொல் ஒரு பொருளைப் பெற்றும் பெயர், வினைகளைச் சார்ந்து செய்யுளுக்கு உரியவையாய் வருவது உரிச்சொல்லாகும்.
- தொல்காப்பியத்தில் மொத்தம் 120 உரிச்சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் வாள் என்னும் உரிச்சொல் ஒளி என்னும் பொருளினை உணர்த்தும் பண்புரிச்சொல்லாக அமைந்துள்ளது.
- திணைமாலை நூற்றைம்பதில் வாள் என்னும் உரிச்சொல் ஐந்து பாடல்களில் தொல்காப்பியர் கூறிய ஒளி (முகவொளி, விளக்கின் ஒளி, வெயில் ஒளி, உடல் ஒளி, கண் ஒளி) என்னும் பொருளிலேயே இடம்பெற்றுள்ளது. திணைமாலை நூற்றைம்பதில் நாற்பத்தி ஓராவது பாடலில் வாள் என்னும் உரிச்சொல் நான்கு முறை இடம்பெற்று நான்கு முறையும் ஒளி என்னும் பொருளினை உணர்த்தி

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சொற்பொருள் பின்வருநிலையணியில் அமைந்துள்ளது. உரிச்சொல் பா நயங்களின் பொருட்டும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

- தற்காலத்தில் வாள் என்னும் சொல் ஆயுதத்தினைக் குறிக்கும் பெயர்ச்சொல்லாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

துணைநூற்பட்டியல்

1) ஆசிரியர் குழு, நர்மதாவின் தமிழ் அகராதி, நர்மதா பதிப்பகம், சென்னை - *600 017.*

2) இராசாராம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும் (இரண்டாம் பகுதி), முதற் பதிப்பு : *1995,* முல்லை நிலையம், பாரதிநகர் முதல் தெரு,தியாகராய நகர், சென்னை - *600 017.*

3) இராமசுப்பிரமணியம்.வ.த, தண்டியலங்காரம் மூலமும் தெளிவுரையும், முதற் பதிப்பு : ஏப்ரல் *1998,* முல்லை நிலையம், பாரதிநகர் முதல் தெரு, தியாகராய நகர், சென்னை - *600 017.*

4) சுப்பிரமணியன். ச.வே., பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும், முதற்பதிப்பு: *21,* ஜீன் *2010,* மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,சென்னை - *600 021.*

5) சேனாவரையர் உரை,தொல்காப்பியம் (சொல்லதிகாரம்), முதற்பதிப்பு : *2005,*சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை - *600 014*

6) திருஞானசம்பந்தம்.ச., பவணந்தி முனிவரின் நன்னூல் - சொல்லதிகாரம், முதற்பதிப்பு - நவம்பர் *2009,* ராஜா பப்ளிகேஷன், நெ.*10,* முதல் தளம், இப்ராஹிம் நகர், காஜாமலை, திருச்சி - *23.*

7) ராசா.கி.,தொல்காப்பியம் (சொல்),முதற் பதிப்பு : டிசம்பர் *2007.*பாவை பப்ளிகேஷன்ஸ், *142,*ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - *600 014.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

14. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகளில் வணிகச் செய்திகள்

ர.நாகலட்சுமி
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி

முனைவர் ந.அருள்மொழி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி

DOI 10.5281/zenodo.17209094.

Abstract

Since ancient times, those who supported international trade worked together as merchant groups. Their activities led to economic development and interaction with neighbouring countries. This study aims to study the merchant groups in Virudhunagr district inscriptions, the generosity of the groups, the high character of the merchant leader, the sacrifice of life for the leader, and the rise of the economic environment of the merchant settlements through commercial news in Virudhunagr district inscriptions.

Keywords: Business, Inscriptions, Iriyali Nilam, Surgery, Donation, Culture, Mandapashalai.

முன்னுரை

சங்க காலம் முதல் தமிழகத்தில்வணிகம் முக்கியப் பங்கு வகித்தது. வணிகமே மக்களின்பெருளாதாரப் பண்பாடு உயர்விற்குக் காரணம், கல்வெட்டுகளில், வணிகக் குழுக்கள் மற்றும் வணிகர்கள் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன.வணிகக் குழுக்கள் கூடி, தங்கள் குழுவின் செயல்பாடுகள் மற்றும் முடிவுகளைக் கல்வெட்டுகளில் பொறித்து வைத்தனர்.இ∴து அவர்களின் நடவடிக்கைகளை முறைப்படுத்தவும் பதிவு செய்யவும் உதவியது. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள்வழியாக வணிகர்களின் வாழ்விடங்கள், வணிகக் குழுக்களின் செயல்பாடுகள் வணிகத்தலைவனுக்காகஉயிர்த்தியாகம், வணிகர்களின் கொடை, வணிக வரி பற்றிய செய்திகளை ஆய்ந்தறிவதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

கல்வெட்டுகள் குறிப்பிடும் வணிகக் குழு

சங்ககாலம் முதல் வணிகம் வாழ்வியல் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி முதலான நிலைகளில் முதன்மை பெறுகின்றன. பல வணிகக் குழுக்கள் இணைந்து வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் கூடி எடுத்த முடிவுகளைப் பொது இடங்களில் கல்வெட்டுகளாகப் பொறித்தனர். **கல்வெட்டுகளில் பல்வேறு வணிகக் குழுவினர் பெயர்கள் காணப்படுகின்றன.நானாதேசி, திசையாயிரத்து ஐந்நூற்றுவர், மணிக்கிராமத்தார், ஆயிரவர், பன்னிரண்டார், இருபத்து நான்கு, மனையார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சுவண்ணம், சித்திரமேழிப் பெரியநாடு என அவர்கள் அழைக்கப்பட்டனர். (காசும் கல்வெட்டும், காட்டும் பண்பாடும், பக்.91)** விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் வழியாகத்தென்னிலங்கை வளஞ்சியர்,துணி வணிகர் (அறுவை வணிகர்) ஐந்நூற்றுவர், நாற்பத்தெண்ணாயிரவர் வணிகக் குழு முதலான குழுக்கள் இணைந்து கோயில்களுக்குக் கொடை வழங்கியமை, சுங்கம் வசூலித்தமை. சமணர்களுக்குக் குகைத்தளங்களை ஏற்படுத்திக் கொடுத்தமை முதலான நடவடிக்கைகளை மேற்கொண்டதை விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் மூலமாக அறியமுடிகின்றது. **தென்னிலங்கை வளஞ்சியர் எனும் வணிகர் கடல் கடந்து வணிகத்தில் சிறந்து விளங்கியவர்கள். வளஞ்சியர் என்பது தற்கால பலிஜா என்ற வணிக மக்களைக் குறிப்பதாகும் (வணிகக்குழு கல்வெட்டுகள், 1961, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை)** மேலும் அரசர்களும் அயல்நாடுகளுடன் வணிக உறவில் சிறக்க உதவியுள்ளனர் என்பதைக் கல்வெட்டுகள் வழியாகக்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

காணமுடிகின்றது.**"……சுனைக்குடி படாரற்க்கு திரு (நொற்தாவிள).·.க்கொன்று க்கு இவ்வூர் அறுவை வாணிய (ச்சேரி)" (2009: 108)**விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் வழியாகஅறுவை வணியஞ்சேரி என்ற பெயரில் ஆடை வணிகம் செய்யும் வணிகர் குழுஇருந்துள்ளதை அறியமுடிகின்றது.

கல்வெட்டுகள் குறிப்பிடும் அயல் நாட்டு வணிகத் தொடர்பு

பன்னாட்டு வணிகத்தில்இன்றைய விருதுநகர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகள் முக்கியப் பங்காற்றியுள்ளன. இருக்கன்குடி கைலாசநாதர் கோயில் பகுதியிலும், கூடக்கோயில் வெம்பக்கோட்டை பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ள ரோமானிய நாட்டுப் பானை ஓடுகளும், நத்தம்பட்டியில் கண்டறியப்பட்ட ரோமானிய நாணயங்களும் சங்ககாலத்தில் தமிழ்நாடு ரோம்நாட்டுப் பகுதிகளுடன் கொண்டிருந்த பன்னாட்டுவணிகம், விருதுநகர் மாவட்டத்தின் பழமையான பொருளாதார நிலையையும், சமுதாய உயர்வையும் பதிவுபெற்றுள்ளது. **"வெம்பக்கோட்டை தொல்மேட்டில்மேற்பரப்புஆய்வில் கிடைத்த ஒரு ரோமானிய பானை ஓட்டத்துண்டு ஆய்வுக்கு உரியது. ரோமானிய மண்பாண்டங்கள் அரிட்டைன், ரௌலட்டடு அம்போரா என பல வகைப்பட்டவையாகும். வெம்பக்கோட்டையில் கிடைத்தது அரிட்டைன் வகையைச் சார்ந்தது ஆகும். சங்க காலத்தில் வெம்பக்கோட்டை சிறந்து விளங்கியதற்கு இவை சான்றாக விளங்குகின்றன(2022:61)**சங்க காலம் முதலே விருதுநகர் மாவட்டம் அயல்நாட்டு வாணிகத்தில் சிறந்து விளங்கியதை அறிய முடிகின்றன.

கல்வெட்டுகள் குறிப்பிடும் வணிக நகரங்கள்

வணிகர்கள் பற்றிய நேரடிக் குறிப்பு கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவர்கள் குழுவாக ஓர் இடத்தில் தங்கி, வணிகம் செய்துள்ளனர்.விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகளில் செங்குன்றாபுரம் எனும்ஊரில் உள்ள சைவ வைணவக் கோயில் கல்வெட்டுகள் கி.பி13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளாகும். கல்வெட்டுக்கள் வழி இவ்வூரின் அபிமானமேருபுரம்என்ற பெயரில் மிகச் சிறந்த வணிக நகரம் இருந்துள்ளதை அறிய முடிகின்றது, நாயனார் மணிதந்த பெருமாள் என்பவரது ஆசிரியமாக (பாதுகாப்பு) இருந்தது என்பதை,**"… செங்குடிநா/ட்டுஅபிமானமே/ரு புரமான செங்(குடி) /நகரம் நாயனார்/மணிதந்த பெருமா/ளுக்கு ஆசிரியம்" (2008:265)** எனும் சான்று புலப்படுத்துகின்றது. இவ்வூர் 'நகரத்தார்' என்றழைக்கப்பட்ட வணிக ஊரவையின் நிர்வாகத்தில் இருந்துள்ளதை இவ்வூர்க் கோயில்களில் உள்ளபிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் வழியாக அறியமுடிகின்றது. மேலும் பாண்டிய நாட்டின் முக்கிய நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்த வெண்பைக்குடி நாடு பருத்தி விளைவதற்கு ஏற்ற கரிசல் நிலத்தைப் பெற்ற நாட்டுப்பகுதியாகும். இப்பகுதியில் பருத்தியைக் கொண்டு ஆடை நெய்யும் நெசவுத்தொழில் பத்தாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கியுள்ளது. இந்நாட்டைச் சேர்ந்த கூத்தன்குடியில் (எதிர்க்கோட்டை) அறுவை வாணியஞ்சேரி என்ற பெயரில் ஆடை வணிகர் இருந்ததை, துணி வணிகர் என்பவர்கள் துணிகளை வெட்டி விற்கும் வணிகர்கள் ஆவார்கள். இவர்கள் துணிகளை விற்பனை செய்யும் போது அவற்றை தேவையான நீளத்திற்கு வெட்டி விற்பனை செய்தார்கள். இதனால் அறுவை வணிகர்கள் என்று அழைக்கப்பட்டனர்.விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகளில் அறுவை வணிகர் குடியிருப்பு ஒன்று இருந்திருக்கிறது. **"……சுனைக்குடி படாரற்கு திரு(நொந்தாவிள) /க்கொ ன்று க்கு இவ்வூர் அறுவை வணிக(ச்சேரி)" (2008:108)** என்று விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் ஆடை வணிகர் குடியிருப்பு இருந்த செய்தியைப் பதிவுசெய்கின்றது. இது மேலும் மல்லிநாட்டு குலசேகரத்து வணிக நகரத்தார், வெண்பு நாட்டார், கருநிலக்குடி நாட்டார் முதலானவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்த பதிவும், தென்னிலங்கை வளஞ்சியர் எனும் வணிக நகரத்தார், பாண்டியசேர நாட்டிற்கும் இடையிலான

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வணிகவழித்தடத்தில் நத்தம்பட்டி முக்கிய வணிகமையமாகத் திகழ்ந்துள்ள செய்திகளையும் விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் மூலமாக அறியமுடிகின்றது.

வணிகப் பெருவழி, வணிக வரிகள்

வணிகர்கள் தங்களது வணிகத்தின் காரணமாக செல்லும் வழித்தடங்களுக்குப் பெருவழி, வணிகர் வாழ்விடப் பகுதிகளுக்குப் பெருந்தெரு என்று கல்வெட்டுகள் பதிவு செய்துள்ளனர். வணிகர்கள், விருதுநகர் மாவட்டத்தில்அமைந்துள்ள சிற்றூர் மண்டபசாலை, இன்றைய திருச்சுழி வட்டத்தில் அமைந்துள்ள இவ்வூர் முன்பு ஒரு வணிகப்பெருவழியில் அமைந்திருந்தது. அருப்புக்கோட்டையிலிருந்து இலங்கைக்குச் செல்லும் வணிகர்கள் பயன்படுத்திய பெருவழியில் மண்டபசாலை அமைந்திருக்கின்றது. மேலும், வணிக மையங்களாக வீரபாண்டியன் பெருந்தெரு, பழிவிலங்கிப் பெருந்தெரு, விக்கிரமப் பாண்டியன் பெருந்தெரு, ஸ்ரீவல்லபப் பெருந்தெரு எனப் பல பெருந்தெருக்கள் இடத்துவளி எனும் இன்றைய அருப்புக்கோட்டை பகுதி கல்வெட்டுகள் மூலமாக அறிய முடிகின்றது. **“....../இடத்துவளி விக்கிரம பாண்டியப் / பெருந்தெருவில்......” (2008:111)** விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் மூலமாக வணிகர்களின் வணிக வழித்தடங்களையும், வணிக மையங்களையும் அறியமுடிகின்றது. மேலும் வணிகர்கள் வணிகம் செய்யும் பொருட்கள் மீது வரிகள் விதிக்கப்பட்டு வரிப்பணம் தானமாக அளிக்கப்பட்டுள்ளதை முதலாம் சடையவர்மன் விக்கிரமபாண்டியன் கல்வெட்டு தெரிவிக்கின்றது. விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி வட்டம் ஆவியூர் எனும் பகுதியில் பிற்காலப் பாண்டியர் சிவன் கோயில் வடக்குச்சுவர் கல்வெட்டில் வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்படும் புறவாயம், ஊராயம் எனும் வரிகள் கோயில் திருப்பணிக்குப் பயன்படுத்திய செய்தியை, **“....தலைச் சுமைக்குமுள்ள புறவாயமும் / இவ்வூருக்குள் எடுத்துத் தூக்கும்தலைச் சுமைக்குமுள்ள ஊராயமும் இந்நாயனார்க்கு/திருப்பணிக்குடலாக/திருக்களிற்றுப் படியி” (2008: 182)** எனும் பதிவு விளக்கி நிற்கின்றது. இதன்வழிவணிக வரி, கோயில் திருப்பணிக்குப் பயன்பட்ட விதம் குறித்து அறியமுடிகின்றது.

கல்வெட்டுகள் குறிப்பிடும் வணிகர்களின் கொடை

கல்வெட்டுகளில் கொடைகள் பெரும்பாலும் கோயில்கள், மடங்கள், மற்றும் பொது இடங்களின் பராமரிப்பு மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டன. வணிகர்கள் கோயில்களுக்கு நிலம்,பொன் மற்றும்பிற சொத்தைக் கொடையாக வழங்கியுள்ளனர். இந்தக் கொடைகள் கோயில்களின் பராமரிப்பு, பூஜைகள் மற்றும் பிற சடங்குகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகளில் வணிகர் குழுவாகவும்,தனியாகவும் கொடைகள் கொடுத்துள்ளனர். சிவகாசியிலிருந்து வெம்பக்கோட்டைக்குச் செல்லும் சாலையில் அமைந்துள்ள எதிர்கோட்டை எனும் ஊர் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் துணி வணிகர்கள் வாழ்ந்த பகுதியாகவும் இவ் அறுவை வாணியச்சேரியைச் சேர்ந்த ஆச்சன் என்பவர் சுனைக்குடி படாரற்க்கு திருநெந்தா விளக்கொன்றெரித்துவர வேண்டி ஐம்பத்தைந்து ஆடுகளைக் கொடையாக வழங்கிய செய்தியை, **“....../வெண்பைக்குடி நாட்டு கூத்(த) / ன்குடி சுனைக்குடி படாரற்க்கு திரு(நாந்தாவிள) /க்கொன்று க்கு இவ்வூர் அறுவை வாணிப (ச்சேரி) / குடி ஆச்சான் அட்டின ஆடு ஐம்(பத்) தை (ஞ்)சு” (2008:108)** எனும் சான்று குறிப்பிடுகிறது.விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுக்கள் வழியாக காணமுடிகின்றது. மேலும் வெண்பைக்குடி நாட்டு வணிகர் சபை கோயிலுக்கு இறையிலியாக நிலம் அளித்த செய்தியையும், தென்னிலங்கை வளஞ்சியரிற் சேகல் சேவகத் தேவனான இலுப்பையூர் கிழவன் இலிங்கோத்பவரை எழுந்தருளிவித்தச் செய்தியையும், **“....**

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தென்னிலங்கை வளஞ்சியரிற் / சேகல் சேவகத் தேவனான இலுப்பை/ யூர் கிழவன் இலிங்கபுராண /தேவரை எழுந்தருள வித்தான்" (2008:9) எனும் கல்வெட்டு பதிவு சுட்டுகின்றது.விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் பிற்காலப் பாண்டியர் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் மீனாட்சி சொக்கநாதர் கருவறை மேற்குச் சுவரில இச்செய்தியைக் காணமுடிகின்றது. சாத்தூருக்கு தென் மேற்கில் ஏழாயிரம் பண்ணையில் 'நகரம்' என்ற வணிகத்தார் அமைப்பு செயல்பாட்டில் இருந்துள்ளது. இறையிலி நிலம் போன்றவற்றைக் கோயிலுக்கு வழங்கி பெருமாள் கோயில்செயல்பாட்டிற்கு உதவி வந்துள்ளதை இவ்வூர்க் கல்வெட்டுகள் மூலமாக அறியமுடிகின்றது. மேலும் விருதுநகரிலிருந்து செங்குன்றாபுரம் செல்லும் சாலையில் விருதுநகருக்கு மேற்கில் பாவாலி கிராமம் அமைந்துள்ளது. பிற்காலப் பாண்டியர் காலத்தில் இவ்வூரில் ஐநூற்றுவர் என்ற வணிகக்குழு செயல்பாட்டிலிருந்துள்ளது. **இக்குழு கடல் மற்றும் நில வழிகளில் வணிகம் செய்த வணிகர்களின் சங்கமாக அறியப்படுகின்றன. இவர்கள் அய்யாவோல் (ஐகோலே) நகரத்தை தலைமை இடமாகக் கொண்டு தமிழகம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் போன்ற பகுதியில் வணிகம் செய்ததாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.** கி.பி 12, 13ஆம் நூற்றாண்டுபாண்டியன் சடையவர்மன் காலத்தில்இவ்வணிகர்கள் சிவாலயத்திற்குக் கொடையளித்து சிவாலயம் சிறப்பாகச் செயல்பட உதவி வந்துள்ளமையை, கிணற்றில் காணப்படும் துண்டுக் கல்வெட்டு மூலமாக அறியமுடிகின்றது.**செங்குடி நாட்டு ப்பாவாலியில்/ திருவாலீஸ்வரமுடையார் சிவபிராமணரோம்/ அஞ்நூற்றுவான் வியாபாரி.......(2022:154)** வணிகர்களும், வணிகர் குழுவும் மக்களுக்கும் கோயில்களுக்குக் கொடைகொடுத்து ஒருங்கிணைந்து செயல்பட்டதை அறியமுடிகின்றது.

ஆய்வுப்பயன்

விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுக்களில் கொடை, வீரம், நம்பிக்கை, மக்கள் வாழ்வியல், பொருளாதார நிலை, சமயம் முதலான அரிய செய்திகள் காணப்படினும், விருதுநகர் மாவட்டத்தில் பொருளாதார உயர்விற்கும், அயல் நாட்டுத் தொடர்பிற்கும் இன்றியமையாத பயனை நல்கியவணிகர்கள் பற்றிய செய்திகளை அறிந்து கொள்வது ஆய்வுப் பயனாக அமைகின்றது.

தொகுப்புரை

விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகளில் நான்கு நிலை வணிகக் குழுக்கள் காணப்படினும் இவ்வணிகர்கள் இணைந்து செயலாற்றிய ஒற்றுமையுணர்வும், கைம்மாறு கருதாது கொடுத்த கொடைப்பண்பும், தன்னொத்தமனிதர்களை மதித்து வாழ்ந்த பண்பாட்டு மரபும்,காணப்பட்டதை இக்கட்டுரை புலப்படுத்தியுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி ஐ, பொ.இராசேந்திரன், வெ.வேதாசலம், சொ.சாந்தலிங்கம், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை 2008.
2. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி ஐஐ, பொ.இராசேந்திரன், முனைவர் சொ.சாந்தலிங்கம், சொ.சந்திரவாணன், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை 2009.
3. திருத்தங்கல் பகுதியில் தொல்லியல் ஆய்வுகள், ரா.பாலச்சந்திரன், பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம், 2022.
4. வரலாற்று நோக்கில் விருதுநகர் மாவட்டம், பொ.இராசேந்திரன், சொ.சாந்தலிங்கம், பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம்,2022.
5. காசும் கல்வெட்டும், காட்டும் பண்பாடும், புலவர் சு.இராசு
6. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, வணிகக்குழு கல்வெட்டுகள், 1961

15. மெல்ல மலரும் மாணவச் செல்வங்கள் - ஒரு பார்வை

ஆய்வாளர்
திருமதி.அ.கேத்தரின்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி,
கோயமுத்தூர் 641 048.

நெறியாளர்
முனைவர் எம்.சம்பத்குமார்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி,
கோயமுத்தூர் 641 048.

DOI 10.5281/zenodo.17209275.

Abstract:

"Education is a valuable asset for one person, but a valuable asset for the other" is a saying of Valluvar. Education, which is an indestructible asset, is being provided to students in various forms today. The teaching method is also being improved according to today's environment.

There are students who are unable to read or write basic letters despite following improved teaching methods. Some students are found to lack language skills according to their class. In this research article, I present a view on students who are struggling to learn Tamil in Tamil Nadu.

KeyWords: Learning, Students, Teachers, Projects

முன்னுரை

கல்வி என்பது, ‘‘உண்மைக்கான ஒரு தேடலே அறிவு ஞானத்தின் வழியிலான முடிவற்ற பயணம் அது’’ என்கிறார் அப்துல்கலாம். அன்னை மடி தவழ்ந்து அரும்பாய் மலர்ந்து மணம் வீசிடத் துவங்கும் மழலைச் செல்வங்களாய் அடியெடுத்து வைக்கும் குழந்தைகளை பாடசாலையில் பக்குவமாய் கரம்பிடித்து வழிநடத்தும் ஆசான்களுக்கு வாழ்த்துகளுடன் முகப்புரைதனைத் துவங்குகிறேன்.

இனிதாய் கற்பித்திட விழைந்திடும் ஆசான்கள், இன்பமாய் கற்கும் மாணவர்கள் என கற்றல் செல்கின்ற வேளையில் ‘‘தினம் என்னைக் கவனி’’ என்பது போல் மெல்ல மலரும் மாணவர்கள் உதயமாகிவிட்டனர். வளரும் பருவத்தில் பெற்றோரின் கவனிப்பின்மை, குடும்பச்சூழல், பேச்சுப் பரிமாற்றக் குறைவு, பிற குழந்தைகளோடு ஒப்பிடுதல், குடும்ப வறுமை, பள்ளிச்சூழல், கற்றல் ஆர்வமின்மை போன்ற காரணங்களால், தொழில் நுட்பத் துறையில் விண்ணை தொட்டிடும் சாதனைகள் புரிந்தாலும் அடிப்படைக் கல்வியில் சவால்களை கல்வித்துறை சந்தித்து வருகிறது.

தாய்மொழித்திறன் குறைவு என்பது அரசிற்கே ஒரு பெரும் சவால் என்றே கூறலாம். மொழித்திறனை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை நம் அரசு செயல்படுத்தி கற்றல் அடைவுத்திறனை மேம்படுத்திவருகிறது.

ஆய்வுரை உருவாக காரணம்

ஒரு தலைமுறைக்கு பள்ளியில் என்ன கற்பிக்கிறமோ அதுவே அடுத்த தலைமுறை சமூகத்தில் பிரதிபலிக்கும் என்கிறார் ஆபிரகாம்லிங்கன். தனித்திறன் ஆற்றல்கள் பலவற்றைப் பெற்ற மாணவர்கள் மொழித்திறனில் குறைவு ஏற்படும்போது அவர்களது திறமைகளும் சில நேரங்களில் வெளிப்படுத்த வாய்ப்புகளே சூழ்நிலைகளோ அமைவதில்லை. படிப்பிற்கு மட்டுமே முன்னேற வேண்டும் என நினைக்கும் பெற்றோர்கள் அவர்களது ஆற்றல்களை திறமைகளை வெளிக்கொணர விரும்புவதில்லை. ஆசிரியர்கள் வெளிக்கொணர முனைந்திடினும் பெற்றோர்கள் ஒத்துழைப்பதில்லை. பள்ளிச் செல்லா பல சான்றோர்கள் தமது அனுபவ அறிவாலும், சொல் வீச்சாலும் பல சாதனைகனைப் புரிந்து சரித்திரக் காவியம் படைத்துள்ளனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இக்குழந்தைகள் வளரும் சூழ்நிலையே அடிப்படைக் காரணம் என்பது என் கருத்து. குழந்தை வளரும் நிலையில் வறுமை, வேலைப்பளு போன்ற காரணங்களால் குழந்தைகளோடு பேசுகின்ற நேரம் குறைகிறது. பேச்சுப் பரிமாற்ற பற்றாக்குறையினால் அடிப்படை மொழித்திறனின்றி பள்ளியில் சேர்க்கப்படுகிறது. மேலும் சமுதாயத்தில் பிற குழந்தைகளோடு ஒப்பீடு செய்து தன் குழந்தைகளிடம் அவர்களின் செயலாற்றலை விட அதிகமாக எதிர்பார்த்து குழந்தைகள் மீது திணிக்கும்போது அக்குழந்தை ஏற்கனவே செய்த செயலை செய்ய விரும்புவதில்லை.

உதாரணமாக, அண்டை வீட்டுக் குழந்தைகள் பாடல்களை “அம்மா இங்கே வா வா” போன்று பாடும் போது ஒப்பீடு செய்து தம் குழந்தையும் அவ்வயதிற்குரிய பக்குவம் அடையாமல் இருக்கும்போது அதை புரியச் செய்வது குழந்தைகளுக்கு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது.

கல்வியறிவு இல்லா பெற்றோர்கள் வீட்டில் வாசிப்புப் பயிற்சி எழுத்துப்பேச்சு அளிக்க இயலாத நிலை ஏற்படுகிறது. சில நேரங்களில் வட்டார மொழிக் கலாச்சாரத்தாலும் குழந்தை சில நேரத்தில் சிரமமப்படுகிறது. வட்டார மொழிச் சொற்கள் பாடநூலில் காணப்படாத போது சில சொற்களில் குழற்தைகள் குழப்பமடைவது உண்டு. எடுத்துக்காட்டு காத்தால, குந்து, கால முற.

கற்றலில் குழந்தை ஆர்வமோ, முயற்சியோ காட்டாத போது இக்குறைபாடு தோன்றுகிறது. அவ்வாறான குழந்தைகளுக்கு கற்றலின் முக்கியத்துமுவத்தை கூற வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரின் கடமை. கற்றல் அறிவுத்திறன் குறைபாடுடைய குழந்தைகளும் இச்சூழ்நிலையை மேற்கொள்கின்றனர். அவர்களது வளர்ப்பிலும் பெற்றோர்கள் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். பள்ளிகளில் கற்பித்தல் வளங்கள் குறைவாக காணப்பட்டாலும் மெல்ல மலரும் மாணவர்கள் உருவாவார்கள்.

ஒழுக்கம் உண்டாகாமல் இலக்கியக் கல்வியால் ஒரு வித உபயோகமும் கிடைக்காது என்கிறார் காந்தி. தற்போது குழந்தைகள் ஆறாம் விரலாய் இருக்கும் அலைபேசியினால் உண்டாகும் தாக்கம், கவனச்சிதறல் போன்றவைக்கு ஆளாக்கி மெல்ல மலரும் மாணவர்களாய் உருவாக வழிவகை செய்கிறது.

உளவியல் பண்புகள் :

> **“வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
> **மற்றைய எல்லாம் பிற”**

மெல்ல மலரும் மாணவர்கள் பிற மாணவர்களை போல் அல்லாமல் தங்கள் வாசிப்புத்திறன், எழுதும்வேகம் ஆகியவற்றை குறைவாகவே வெளிப்படுத்துகின்றனர். அவர்களின் எழுத்து வடிவம் பிற மாணவர்களை போல் அல்லாமல் சில நேரங்களில் பிழைகளோடு காணப்படுகிறது. இக்குழந்தைகள் விளையாட்டு, பாடல், நடனம் போன்ற திறமைகளால் சில நேரங்களில் மேம்பட்டாலும் தொழில்திறன், கற்றல் குறைவால் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்றனர் என்பது என் கருத்து.

குறைவான நுண்ணறிவு, நினைவாற்றல் இன்மை, தாமாகவே செயலாற்றும் பண்பின்மை, கவன வீச்சு குறைவு போன்ற குறைபாடுகளால் சில நேரங்களில் உளவியல் ரீதியாக சக மாணவர்களிடம் சகஜமாக பழகி உரையாடுவதில்லை. இம்மாணவர்களை மருத்துவரின் உதவியாலும், தன்னம்பிக்கை உரையாடல்கள் செயல்பாடுகளினால் மனஉறுதியை ஏற்படுத்தவும், தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபடவும் செய்ய இயலும்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அரசின் திட்டங்கள்:

கல்வித்துறையில் கற்பித்தல் முறையில் மேன்மையுற அரசு பல்வேறு பயிற்சித் திட்டங்களை மற்றும் பாடத்திட்டங்களை செயல்படுத்திவருகிறது. கொரோனா போன்றவையின் தாக்கம் ஏற்பட்ட நிலையிலும் தொலைக்காட்சி மூலம் கற்பித்தல் பணிகளை சிறப்புற நடத்தியது. நல்லாடசி நடத்தும் அரசானது செங்கோல் ஆட்சியின் கீழ் உலகத்திலுள்ள உயிர்களுக்கு எட்டாதது என்று எதுவுமில்லை. அதாவது எல்லா நன்மைகளும் கிடைக்கும் கல்வியில் சீரமைப்பையும் வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்கான இலக்குகளை அடைய ''திறன்'' என்னும் திட்டம், மொழித்திறன் கற்றலை மேம்படுத்த வழிவகை செய்கிறது.

- எழுத்தும் சொல்லும் - உயிர், மெய், உயிர்மெய் வரிசை
- எழுத்தும் தொடரும் - உயிர்மெய் வரிசை
- படிக்கப் பழகுதல்
- சொல் உருவாக்கம்
- தொடர் உருவாக்கம்
- பாடல்
- உரைப்பகுதி
- வினா
- உரையாடல்
- கதை
- நாட்குறிப்பு
- கடிதம்

போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கி உள்ளது. மேலும் மழலைச் சிறார்களுக்கு ''அரும்பு, மொட்டு, மலர்'' என்னும் திட்டம் செயல்படுகிறது.

- கதை கதையாம்
- எழில் கொஞ:சும் இயற்கை
- சொல்லலாமா
- விட்டுச் செல்லாதே
- சரியான முடிவு
- கதையும் கருத்தும்

போன்ற செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டம் முதன்மைக் கல்வி அலுவலராக இருந்த திரு.முருகன் அவர்கள் தமிழ்மொழத் திறனை வளர்க்க ''நாளும் தமிழ் நாவில் தமிழ்'' என்ற செயல்பாடு பள்ளி மாணவர்களுக்கு உறுதுணையாகவும், வழிகாட்டுதலாகவும் இருந்தது. மேலும் படைப்பாற்றல் கல்வி, திறன்வளர் வெயல்பாடுகள் மெல்ல மலரும் மாணவர்களை தனிப்பட்ட முறையில் தனிக்கவனம்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

செலுததிட ஆசிரியர்களை நியமித்து தொடர்ச்சியான மதிப்பீடு செய்வதன் மூலம் கற்றல், கற்பித்தல் திறனை வளர்த்து வருகிறது.

கற்றல் திறனை அதிகரிக்க மேற்கொள்ள முயற்சிகள்

- மெல்ல மலரும் மாணவர்களை தனிக்கவனம் செலுத்துதல்
- அவர்களின் கற்கும் திறனுக்கேற்ப எளிய முறையிவல் கற்பித்தல், கற்பித்தலில் எளிய முறைகளைப் பயன்படுத்துதல்
- மாணவர்களை ஊக்குவித்து கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்
- பள்ளியில் செயல்பாடுகளைத் தொடர்ந்து பெற்றோர்களும் வீட்டில் குழந்தைகளோடு அமர்ந்து அவர்களின் படிக்கும் முறை சரிதானா? என உடனிருந்து கவனித்து படிக்க சிரமப்படும் எழுத்துகளை, சொற்களை வாசித்து எழுதிக் காட்டுதல் நலம் பயக்கும்.
- தொடர்ச்சியான மதிப்பீடு மாணவர்களின் கற்றல் திறன் வளர்ச்சியை கண்டறிய உதவும்.
- வகுப்பறையில் புதுமையான கற்பித்தல் முறையை கையாளுதல், தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் போன்றவற்றையும் அவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கும்.

ஆய்வுப் பயன்

“தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு”

மணலில் தோன்றிய கேணியில் தோண்டிய அளவிற்கே நீர் ஊறும். அது போல மனிதர்களுக்கு கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு வளரும். கற்கும் கல்வியை இளம்வயதிலேயே ஆழமுற கற்பதன் மூலம் சமுதாயத்தில் நன்மை பெற இயலும். மிளிரும் மாணவர்களை கருத்தில் கொண்டு தனிக்கவனம் செலுத்திடும்போது தேர்ச்சி மதிப்பெண் அதிகமுறும். நடுத்தரக் கற்றல் திறனை உடைய மாணவர்களை தனிக்கவனம் செலுத்தும்போது தேர்ச்சி விகிதம் அதிகமாகும். ஆனால் கற்றலில் சிரமப்படும் மாணவர்களை தனிக்கவனம் செலுத்தும் போது மட்டுமே கற்றல் நிறைவு பெறும். நான் அரசு உதவிப்பெறும் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக இருபது வருடங்களாக பணியாற்றி வருகிறேன். விளையாட்டிற்காக மாணவர்களை தேர்ந்தெடுக்கும்போது மெல்ல மலரும் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்பதை காணுகின்றேன். சில மாணவியர் தனித்திறனுடனும் பல விளையாட்டில் பங்கேற்று சான்றிதழும் பெற்றுள்ளனர்.

என் பள்ளியில் தற்போது ஏழாம் வகுப்பு பயிலும் மாணவி கேட்கும் திறன் குறைந்து பேச இயலாமல் மெல்ல கற்கும் மாணவியாக உள்ளார். அந்த மாணவிக்கு உடற்பயிற்சி பாட வேளைகளில் கற்பிக்கும் விளையாட்டில் ஆர்வமுடன் பங்கேற்பாள். நான் கூறுவதை ஆழ்ந்து கவனிப்பதையும் காண்கின்றேன். அம்மாணவி 600 மீட்டர் ஓட்டம், குண்டு எறிதல் இவ்விரண்டிலும் பிற மாணவியை விட சிறப்பாக தன் திறமையை வெளிக்காட்டுகிறாள்.

ஆகவே மெல்ல மலரும் மாணவியனை தனித்திறனில் ஊக்குவித்து சாதனை புரிய வைக்க வேண்டும் என்பதே என் ஆவல். மேலும் கற்றல் அடைவுத்திறனை அடைய கால அவகாசம் அளிப்பதன் மூலம் அவர்களது செயல்பாடுகள் அந்தந்த தலைப்பிற்குரிய பாடத்திற்கு தொடர்புடையனவாக அமைதல் நலம் பயக்கும்.

அவர்கள் கற்றல் அடைவுத்திறனை சுட்டிக்காட்டி (எடுத்துக்காட்டு மனனம் செய்ய தடுமாறும் குழந்தையை ஒரு திருக்குறள் கூறச் செய்தல்), அவர்களுக்கு இறைவணக்கக் கூட்டத்தில் பாராட்டுத்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தெரிவிப்பதன் மூலம் உற்சாகமடைந்து கற்றலில் ஆர்வம் அடையலாம். வலைத்தளம், படவரி, போன்ற அலைபேசி செயலிகளால் பள்ளி மாணவர்கள் பயன்படுத்தாத வண்ணம் வயது கட்டுப்பாடு அமைத்தல் கற்றல் திறனை மேம்படுத்த வழி வகுக்கும்.

முடிவுரை

'கல்வியானது அறிவு மற்றும் திறமையையே அளித்து ஒருரு புதிய சமூகத்தை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் பண்பாடு, நற்பண்புகள் போன்றவற்றை அளித்து மனிதனை ஒரு முழுமையான ஆற்றலுள்ள மனிதனாக மாற்றம் அடையச் செய்கிறது'. (வலைதள தேடல்) ஆகவே நற்பண்புகளுடன் பெறப்பட்ட கல்வியே சமுதாயத்தில் நாளைய தலைவர்களை உருவாக்கும். சமுதாயத்தில் நெறிப்பிறழ் செயல்பாடுகளில் தடுக்கும் ஆயுதம் கல்வி ஒன்றே.

"மின்னிடும் நட்சத்திரங்களாய்
மிளிர்ந்திடும் அவா கொண்டு
மனதில் எல்லையில்லா ஆசையுடன் - பள்ளி
மண்மிதித்திடும் மழலை காலடிகள் - நாளை
வரலாற்று தடமாக மாறிட
விழைவோம்! விழைந்திடுவோம்!"

ஆய்வுக்குத் துணை நின்றவை

1. திருக்குறள்
2. தலைவர்களின் பொன்மொழிகள்
3. தமிழக அரசின் திட்டங்கள்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

16. காகித வடிவ அகராதிக்கும் மின் அகராதிக்கும் உள்ள ஓர் ஒப்பீட்டு ஆராய்ச்சிக் கட்டுரை

Prof.Thalinjan Murugaiya
University of Sorbonne Paris cité INALCO,France
M.A. B.ED (University of India) MS(finance) ;MS (Lingustic) University of Sorbonne,Paris
விருதாளர் : தமிழக அரசின் மொழியியல் விருது பெற்றவர்
Email Id :thalinjan@free.fr Tel : 33-0678558821
DOI 10.5281/zenodo.17209381.

Abstract:

We know that dictionaries and lexicons are growing in accordance with the development of the language and the nature of the language of the respective period. Although it is said that dictionaries are essential for the language, they realized the time and compiled new rhetoric and published it in books. It helped the development of the Tamil language greatly. We are in an environment where Tamil grammar and literature are taught to students in a scientific manner with modern facilities suitable for today's times. For this, students, researchers and linguistic scholars should use today's electronic media.

Key Words: Dictionaries - Lexicons - Language - Tamil grammar

மொழியின் வளர்ச்சிக்கும் அந்தந்த காலகட்ட மொழியின் இயல்பிற்கு ஏற்ற வகையில் அகராதிகள், கலைச்சொற்கள் வளர்ந்து வருவது நாம் அறிந்த ஒன்றே.மொழிக்கு இன்றியமையாதது அகராதிகள் என்று கூறினாலும், அதன் காலத்தை உணர்ந்து புதிய புதிய சொல்லாட்சிகளை தொகுத்து நூலாக வெளியிட்டனர். அது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. இன்றைய காலத்திற்கு ஏற்ற நவீன வசதிகளுடன் அறிவியல் முறையில் தமிழ் இலக்கண இலக்கியங்களை மாணவர்களுக்கு கற்றுத்தருகின்ற சூழலில் நாம் உள்ளோம். அதற்கு இன்றைய மின் ஊடகங்களை, மாணவர்கள், ஆராய்ச்சியாளகள், மொழியியல் அறிஞர்கள் பயன் படுத்த வேண்டும். இன்றைய உலகில் இயங்கும் மொழிகளில் பெரும்பான்மையானவை மின் ஊடகங்களை பயன்படுத்தத் தொடங்கி அதில் வெற்றியும் கண்டுள்ளனர். அதன் பயனாக அந்த மொழியின் பயன்பாடுகள் உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்று மின் ஊடகங்களில் தமிழ் மொழிக்கான அடிப்படை இடம் கிடைத்தாலும் இன்னும் நாம் முழுமையாக தமிழை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்ல வேண்டும். மின் உலகில் தமிழ்மொழி சார்ந்த மின் அகராதிகள் எழுபத்தைந்து உள்ளன.

அகராதி தொடங்கிய காலம் பதினாறாம் நூற்றாண்டு முதல் இன்றுவரை பல கட்டங்களில் வளர்ச்சியடைந்திருக்கிறது. அப்போதிருந்து காகிதம், குறுந்தகடு, பிறகு வலைதளம் போன்ற பல்வேறு வகையான அகராதிகள் தோன்றின. குறிப்பாக 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாக்கட் மின்னணு அகராதி தோன்றியது. 2003 ஆண்டிலிருந்து இந்த மின்னணு அகராதிகள் மிக வேகமாக பழமையான காகித அகராதிகளுக்குப் பதிலாக மாணவர்களால் பல்கலைகழகம், கல்லூரி மட்டத்தில் உபயோகத்தில் வந்தது. மின்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அகராதிகளுக்கான தேவை சமீப காலமாக அதிகரித்து வருகிறது. தற்பொது 2013 ஆண்டு முதல் ஸ்மார்ட் தொலைப்பேசி பிரபலமானது. ஆனால் இந்த ஸ்மார்ட் தொலைபேசி தகவல்தொடர்பு கருவி இதுவரை போதுமான அளவிற்கு கல்வித் திட்டங்களுக்கு பயன் படுத்த படாததின் விளைவாக கல்லூரி மாணவர்கள் மத்தியில் மின்னணு அகராதி எதிர்பார்த்த அளவில் பிரபலயம் அடையவில்லை.

தொடர்ச்சியான ஆய்வுகளின் அடிபடையில், காகித அகராதிகள் மற்றும் மின் அகராதிகளுக்கு இடையிலான வேறுபாட்டையும் கற்பவர்களின் பின்னூட்டத்துடன் கற்றலில் ஏற்படும் விளைவையும் தெரிவித்துள்ளன. ஒப்பீட்டு ஆய்வுகள் இரண்டு அகராதி வகைக்களுக்கிடையேயான இடைமுகத்தில் ஒரு முக்கிய வேறுபாடுகளை மையமாகக்கொண்டுள்ளன.காகித வடிவ அகராதி பயன்பாட்டாளரை இரண்டு பக்கங்களை ஒரெ பார்வையில் பார்ப்பதற்கு அனுமதிக்கிறது. ஆனால் மின்னணு அகராதியில் சிறிய திரைகாட்சிகள் காரணமாக இரண்டாம் மொழி சமநிலைகள் தொடர்பான தகவல்களை சிறு சிறு பகுதிகளை மட்டுமே மின்னணு அகராதி கற்பவர்களுக்கு வழங்குகிறது. இலக்கு சொற்களைச் சுற்றி போதுமான தகவல்களை வழங்ககூடிய காகித அகராதியுடன் மின்னணு அகராதி முற்றிலும் மாறுபட்டது. மின்னணு அகராதி கற்பவர்களின் பார்வை அதிர்வெண்ணை மேம்படுத்தலாம். மற்றும் முன்னோடி மொழிவாசிப்புக்கான நேரத்தைக் குறைக்க முடியும் என்றாலும், காகித அகராதி பதிப்பைபோலவே தேடிய சொற்களைத் தக்கவைத்துக்கொள்வது அல்லது உரையை புரிந்து கொள்வது போன்ற அதே அளவிற்கு உத்தரவாதம் அளிக்காது என்பது இந்த ஆய்வின் முடிவில் உணரமுடிந்தது..

ஷிசுக் என்ற ஜப்பானிய மொழியியல் அறிஞர் ஒரு ஒப்பிட்டு ஆய்வை ஜப்பானில் 77 பல்கலைகழங்களுடன் மேற்கொண்டார். அதாவது தெரியாத சொற்களைத் தேடுவதற்கும் அந்தச் சொற்களைச் சரியாக புரிந்து கொள்வதற்கும் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் மாணவர்களுக்கு மின் அகராதிகளும் காகித அகராதிகளும் எந்த அளவிற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்ற கேள்வியை நிவர்த்தி செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகக் கொண்டது.அறியப்படாத சொற்களைப் புரிந்துகொள்வதற்கும் நூல்களைப் புரிந்துகொள்வதற்கும் மற்றும் பார்த்த சொற்களைத் தக்கவைத்தல் ஆகியவற்றில் உள்ள வேறு பாட்டை மின் அகராதி மற்றும் காகித அகராதி ஒப்பீட்டு ஆய்வின் முடிவில் மின் அகராதியின் பயன்பாடுதாய்மொழி அல்லாத பிற இரண்டாவது மொழி கற்பவர்களுக்கு பொருத்தமான அர்த்தங்களைக் கண்டறிய உதவக்கூடும் என்றும் இதனால் ஒரு குறிபிட்ட கால எல்லைக்குள் பல அறிமுகம் இல்லாத சொற்களைக்கொண்ட நூல்களைப் படிக்கும்போது ஒரு சிறந்த உரை புரிதலை எளிதாக்கும் என்றும் கண்டறிந்தார். இரண்டு அகராதிகளையும் பயன்படுத்தும் மாணவர்களின் வேக சோதனையில் 77 பல்கலைக்கழகங்கள் கலந்து கொண்டன. அதன் முடிவுகளின் அடிபடையில் காகித அகராதிகளைவிட மின் அகராதிகளே மேன்மையானவை என்று கண்டறியப்பட்டது.

பிரான்சு பல்கலைக்கழகத்தில் தமிழ் தாய்மொழி அல்லாத தமிழை இரண்டாம் மொழியாக கற்கும் மாணவர்களுக்கு மின் அகராதி அல்லது காகித அகராதி இதில் எது மிகவும் பயனுள்ளாதாக இருக்கும் என்பதனை அறிந்து கொள்ள மாணவர்களுடன் ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டேன். தமிழை இரண்டாம் மொழியாக கற்கும் மாணவர்களுக்கு ஆரம்பத்தில் காகித அகராதியைவிட மின் அகராதியைப் பயன்படுத்துவதில் விருப்பம் காட்டிருந்தாலும் அவர்களால் இரண்டு வகையான அகராதியையும் பயன்படுத்த முடிந்தது. ஆராய்ச்சிக்குட்பட்ட எட்டு மாணவர்களில் ஆறு மாணவர்கள் மின் அகராதியைப் பயன்படுத்துவதை விட காகித அகராதியில் சில நன்மைகள் இருப்பதாக உணர்ந்தனர். அதாவது காகித அகராதியில் அவர்கள் தேடும் ஒரு சொல்லிற்கு பல பொருள்கள் அடங்கிய

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சொற்கள் இருக்கும் அதனால் சுழ்நிலைக்கு ஏற்ப வாக்கியமைப்பிற்கு சொல்லைப் பயபடுத்துவது எளிமையாக இருக்கும். மேலும் சொல்லிற்கான உச்சரிப்பு குறியீடு காட்டப்பட்டிருக்கும். இவைகளெல்லாம் மின் அகராதியில் இடம்பெற வாய்ப்பு இல்லை. மேலும் மின் அகராதியைப் பயன்படுத்திய மாணவர்கள் அவர்கள் கற்பதற்கு ஏதுவான மின் அகராதிகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. கற்பவர்கள் தங்களுக்கு கிடைக்கும் கருவிகளை முழுமையாகப் பயன்படுத்திகொள்ளாமல் இருந்திருக்கலாம் என்பதையும் காட்டுகிறது. தாய்மொழி அல்லாத மொழியை இரண்டாம் பாடமாக கற்கும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் வழி காட்டுதல் இல்லாமல் அவர்களால் அவர்களுக்குப் பொருத்தமான ஒரு அகராதியைத் தேர்வு செய்து பயன்படுத்த முடியாது என்பதை இந்த ஆய்வின் மூலம் நிருபணமானது.காகித அகராதியில் அவர்களுக்குத் தேவையான அர்த்தை தேடுவதற்கும் உதவி தேவைப்பட்டது. ஆனால் மின் அகராதியில் அவர்களுக்குத் தேவையான அர்த்தம் எளிதல் கண்டுபிடித்தனர். ஆனால் தமிழ்ச் சொல்லை புரிந்து கொள்வத்ற்கும் அதனை வாக்கிய அமைப்பில் பயன்படுத்துவதற்கும் கற்பவர்க்கு பயனுள்ள ஒரு சிறந்த பயன்பாட்டுக் கருவியாக மின் அகராதி இருக்கிறதா என்றால் நூறு சதவீதம் இல்லை என்பது தான், அந்த ஆராய்ச்சி மூலம் நிரூபணமானது. ஆனால் இது மிகவும் சக்தி வாய்ந்த கற்றல் உபகரணம் என்பதில் அய்யம் இல்லை. ஆனால், மாணவர்கள் தங்களின் தாய்மொழிப் பற்றிய ஆழ்ந்த அறிவைக் கொண்டிருந்தால், இந்த இரண்டாவது மொழி கற்றலில் எப்படி மின் அகராதியைப் பயன் படுத்துவது என்ற புரிதலின் காரணமாக முந்திய அறிவிற்கும் புதிய அறிவிற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க இது உதவும். இரண்டாவது மொழியாகத் தமிழைக் கற்பவர்களுக்கு மின் அகராதியைப் பயன்படுத்துவது ஒரு எதார்த்தம்.

இரண்டாவது மொழி கற்பிக்கும் ஆசிரியரகளுக்கு தங்கள் மாணவர்கள் மின் அகராதியை எப்படி பயன்படுத்துவது என்பதை அறிந்து, அவர்களை வழி நடத்துவது ஒரு சிக்கலான விழயம்தான். இந்த சிக்கலைத் தவிர்க்க கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி மூலம் சமாளிக்க முடியும் என்று நம்புகிறேன். உதாரணமாக

1.வினைச்சொல்லின் அடிப்படை வடிவங்கள்

2.மின் அகராதியின் வெவேறு செயல்பாடுகள் மற்றும் அவை எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும்

3.ஒரு சொல் பல்வேறு அர்த்தங்கள் உணர்வுகளைக் குறிக்கும் சொற்களை எப்படி தேர்வு செய்வது என்பதற்கான பயிற்சி மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்.

4. சொற்கலின் வழித்தோன்றல்களை எங்கே தேடுவது

5.கூட்டுச்சொற்களை எங்கே தேடுவது

6.பேச்சில் வழக்கில் வழங்கப்படும் சொற்களை தேட அகராதியை எப்படி பயன் படுத்துவது என்பதற்கான பயிற்சி அளிக்க வேண்டும்.

இரண்டாவது பரிந்துரை என்னவென்றால் மின் அகராதியின் பயன்பாடு குறித்து இரண்டாம் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள்,அகராதி திறன்களைக் கற்பித்தல் மற்றும் மின் அகராதியின் அம்சங்கள் மற்றும் சாத்தியகூறுகள் பற்றி மேலும் அறிய, இரண்டாம் மொழி கற்கும் மாணவர்களுடன் சேர்ந்து ஆராய்தல் வேண்டும். அப்போதுதான் அந்த மாணவர்கள் வகுப்பறையில் மின் அகராதியைப் பயன்படுத்தும்போது எவ்வாறு அதைக் கையாள்கிறார்கள் என்பதை இரண்டாம் மொழி கற்பிக்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் புரிந்து கொள்ள வகை செய்யும். இரண்டாம் மொழி கற்பித்தலின் திறனும் பெருகும்.

நான் மேலெ குறிப்பிட்ட ஆய்வரிக்கையானது ஆங்கிலமோ வேறு எந்த அந்நியமொழியையோஇரண்டாவது மொழியாக கற்பிக்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் கற்கும் மாணவர்களுக்கும் மின் அகராதியைப் பயன்படுத்துவதற்கான பயனுள்ள ஒரு கற்பித்தல் முறையாகும்.

தமிழ்வளர்ச்சிக்குக் கணினி இணைய தொழில்நுட்பம் பெரிதும் பயன்படுகிறது. இணையம் வந்த பிறகுதான், தமிழ்த் தகவல்கள், கடல் கடந்த நாடுகளுக்கு உடனுக்குடன் பரவின. இணையம், உலகத்தை ஒரு சிற்றூராக்கியது.தொடக்கத்தில், எழுத்துருச்சிக்கல், தட்டச்சுப் பலகைச் சிக்கல் இருந்தன. இதனால் பல தமிழ் மென்பொருள்கள் உலகம் முழுவதும் தமிழர்களாலும் , தமிழ் ஆர்வலர்களாலும் உருவாக்கப்பட்டன. தமிழ்த் தட்டச்சுப் பலகை குறித்த சிக்கல் ஓரளவு தீர்ந்த பிறகு எழுத்துருச் சிக்கல் இருந்தது . முகுந்து உள்ளிட்ட பொறியாளர்களின் முயற்சியால் ஒருங்குகுறிநுட்பத்தில் தமிழ்த் தட்டச்சுக்கு 2003 ஆண்டு வழிபிறந்ததால், தமிழில் செய்தி பரவுவதில் இருந்த தடை நீங்கியது. இணையத்தின் வரவால், மின் அகராதிகள் மிக வேகமாககாகித வடிவ அகராதிகள் காணாமல் போகும் அளவிற்கு உருவாயின.

மின் அகராதி என்பது பொதுவாக உருவாக்கபட்ட ஒர் அகராதியை இணையத்துடன் இணைத்துக் கணினியின் மூலம் தரவுகளைப் பெறுவதாகும். தென் ஆசிய மின் அகராதியில் தமிழ்,அசாமி,பலுசி, பெங்காலி,ஆங்கிலம்,குஜராத்தி, இந்தி,காசுமீரிம் மலையாளம், மராத்தி, நேபாளி, ஒரியா,பாலி, பஞ்சாபி,பெர்சியன்,இராசத்தானி, வடமொழி, சிந்தி, தெலுங்கு, உருது,பர்ரொம் எமனொவின் திராவிட வேர்சொல் அகராதி என 26 மொழி அகராதிகள் இடம் பெற்றுள்ளன. இந்த தென் ஆசிய மின் அகராதியில் தமிழ் மொழி அகராதி, மின் அகராதியில் முதன்மையிடம் பிடித்திருக்கிறது. பெப்ரியசு அகராதி, கதிரைவேற்பிள்ளை அகராதி, சென்னைப் பல்கலைக்கழக அகராதி, வின்சுலொ அகராதி என் ஐந்து தொகுதிகள் இடம் பெற்றுள்ளன. தமிழை இரண்டாம் மொழியாக கற்கும் மாணவர்களுக்கு இன்றைய காலத்திற்கு ஏற்ற நவீன வசதிகளுடன் அறிவியல் முறையில் தமிழ் இலக்கிய இலக்கணங்களை கற்றுத்தர வேண்டும்.அதற்கு மின் ஊடகங்களில் நமது சங்க இலக்கிய சொல்லாடல்களைச் சேர்க்கவேண்டும். சங்க இலக்கியத்தில் மின் அகராதிகள் என்ற தலைப்பில் முனைவர் க..உமராஜ் இணையத்தில் வெளியிட்டு வருகிறார். சென்னை அண்ணாப் பல்கலைக்கழகம் சார்பாக ஒரு லட்சம் சொல்லடைவுகள் தொகுக்கப் பட்டு வெளிவந்துள்ளன.இதில் ஒரு சொல்லுக்கான முழு விபரமும் தமிழ், ஆங்கிலம் என கொடுக்கப்பட்டிருக்கும். சங்க இலக்கிய சொல்லடைவுகள் நூல் வழியில் அதிகம் உள்ளன. அவற்றை மின் ஊடகங்களுக்கு கொண்டு வரவேண்டும்..சிக்காக்கோ பல்கலைகழத்தின் தெற்காசிய மொழிகள் கல்வி மையம்,, கொலம்பியா பல்கலைக்கழகம், வடகரொலினாவில் உள்ள டரையாங்கல் தெற்கு ஆசியா கன்சொர்டியம் ஆகிய மூன்று அமெரிக்க நிறுவனங்களும் இணைந்து மின் அகராதிகளை இணையத்தில் கொடுத்து வருகின்றன. இவ்வளவு இருந்தும், இவைகள் இன்னும் முறையான பயன் பாட்டிற்கு வரவில்லை. ஒரு சிலர் தரமான சொல்லடைவுகளை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் மின் ஊடகங்களில் வெளியிட மறுக்கின்றனர். காரணம், இது தன்னுடையது, அதை ஏன் பிறருக்கு இலவசமாகத் தரவேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளனர். அடுத்து, சொல்லடைவுகள் தயாரித்து வைத்திருப்பவர்களுக்கு கணினி அறிவு போதுமானதாக இல்லை என்றும் கூறலாம். ஆகையால் இவை கணினியில் பதிவேற்றம் செய்வதில் சிக்கல் உள்ளது.

மின் ஊடகங்களில் சொல்லடைவுகள், அகராதி தொகுத்தல் பணியை விரிவாக்கம் செய்ய, விரைந்து முடிக்க, தனியார் நிறுவனங்கள், பல அயல்நாட்டு நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் முன்வந்து நிதி உதவி செய்ய முன் வரவேண்டும். பலர் விருப்பத்தோடு

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இப்பணியை மேற்கொள்ள வேண்டும். தமிழ் மொழியியல், கணினியியல் துறை சார்ந்த மாணவர்கள், மாணவிகள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும் சேர்ந்து உலக மொழிகளுக்கு இணையான மின் அகராதி தொகுத்தலின் பங்களிப்பில் இணையவேண்டும். இன்று பல அகராதிகள் மின் ஊடகங்களில் வெளிவருகின்றன. அவைகளை ஒன்று திரட்டி அவற்றிலிருந்து ஒரு நிரந்தரமான மின் அகராதியை உருவாக்க முன்வரவேண்டும். இதனை ஒரு சிலர் சேர்ந்து கூட செய்யலாம். அப்போதுதான் நாம், மின் ஊடகத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு செல்லமுடியும். இது போன்ற சங்க இலக்கிய சொல்லடைவுகள் மற்றும் அகராதி தொகுத்தல் பணிகளை மின் ஊடகங்களில் செய்வோமானால் நாம் நினைத்த மின் ஊடகத்தில் உலகமொழிகளுக்கு ஏற்ற தரமான மொழிபெயர்ப்பு சாத்தியம் ஆகும். இவை மட்டுமன்றி பேச்சை எழுத்தாக மாற்றவும் எழுத்துருவை பேச்சாக மாற்றவும் இது பயன்படும் என்கிறார் முனைவர் துரைமாணிக்கம்.

பல்வேறு இணைய தளங்களில் இருக்கும் மின் அகராதிகளை ஒரு தலமைசார்ந்த வலைதளத்தில் தொகுத்து வெளியிட வேண்டும். உலகமுழுவதும் உள்ள பயன்பாட்டாளர்கள் எளிதாக பயன் படுத்த முடியும். இப்படி செய்தோமானால் கணினியில் பிறமொழிகள் வளர்ந்துள்ள அத்தனை கூறுகளையும் நாமும் மிக எளிதாக அடையமுடியும்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

17. சிலம்பு காட்டும் வரிப்பாட்டும் குரவைக் கூத்தும்

முனைவர் க.பிரீதா
தமிழ்த்துறைத் தலைவர்
சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி,பெரம்பூர், சென்னை-11.
9444777441 - Preethailamaran@gmail.com
https://orcid.org/0009-0000-0371-3506
DOI 10.5281/zenodo.17209567.

Abstract

This paper examines the portrayal of Tamil folk arts in Silappathikaram, focusing on three traditions–Vettuva Vari, Aaychiyar Kuravai, and Kundrak Kuravai–which originated from the ancient Tamil thinai (land divisions) of Palai, Mullai, and Kurinji. Each art form reflects the lifestyle, environment, and religious beliefs of its community: Vettuva Vari depicts the Palai region's hunting tribes worshipping the goddess Korravai; Aaychiyar Kuravai showcases Mullai's pastoral women performing circular dances in praise of Krishna alongside bull-taming customs; and Kundrak Kuravai highlights Kurinji's mountain dwellers praising Murugan and honoring Kannagi through song and dance. The study reveals how these localized cultural expressions evolved into widely celebrated traditions across Tamil Nadu and India, linking community life with spirituality, and stresses the importance of preserving such heritage amidst modern changes.

Keywords: Tamil folk arts, Silappathikaram, Vettuva Vari, Aaychiyar Kuravai, Kundrak Kuravai, five thinai, cultural heritage, religious traditions.

முன்னுரை:

மக்கள் குழுவின் பழக்க வழக்கங்களால் உருவாகும் விழுமியங்களே அவர்தம் வாழ்வியல் ஒழுக்கங்களாக மாறுகின்றன. அவ்வாறே அவர்தம் எண்ணச் செழுமைகளே கலைகளாக முகிழ்க்கின்றன. ஆடல், பாடல், ஓவியம், சிற்பம், விளையாட்டு முதலிய கலைகளனைத்தும் அந்தந்தப் பகுதி வாழ் மக்களின் வாழ்வியல் வழங்கியவையாகும். பண்டைத் தமிழர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நில அடிப்படையில் ஐந்து பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்தனர். அவர்களுடைய கலைகளும் அவர்தம் வாழ்க்கைக்கேற்ப மாறுபட்டு விளங்கின. சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் நில அடிப்படையிலான சீரிய வாழ்வியலை விளக்குகின்றன. அதிலிருந்து தோன்றிய நாட்டுப்புறக் கலைகளையும் விளக்குபவையாக உள்ளன. சங்க இலக்கியங்களின் தாக்கமே அவற்றுக்குப் பின் வந்த இலக்கியங்களிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. சிலப்பதிகாரத்தில் வரும் வேட்டுவரி பாலை நில மக்களின் வழிபாட்டையும் அவர்களின் இசையறிவையும் புலப்படுத்துவதாய் உள்ளது. 'வரி என்னும் சொல் இசைப் பாடலைக் குறிப்பதாகும்.

ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை ஆகிய பகுதிகள் முல்லை, குறிஞ்சி நில மக்கள் குழுவாக ஆடிப்பாடும் கூத்து முறையினைக் கூறுகின்றன. சிலம்பில் வரும் இந்த நாட்டுப்புறக் கலைகள் பற்றியும் இக்கலைகள் பேரிலக்கியங்களில் வைத்துப் போற்றப்படும் மதிப்பீடு குறித்தும் இவ்வாய்வுக் கட்டுரை ஆராயத் தலைப்படுகின்றது.

வேட்டுவ வரி:

பாலை நிலம் என்பது தமிழகத்தைப் பொறுத்த வரையில் வேனிற் பருவத்தில் வளமை குன்றிப்போய் வறண்டு கிடக்கும் பொட்டல் நிலத்தைக் குறிப்பதாகும். இதனை நம் முன்னோர்கள் சுரமும் சுரம் சார்ந்த இடமும் என அழைத்தனர். சுரம் என்பது வெப்பத்தால் 'சுர்' ரென்று சுடுகின்ற தரைப்பரப்பைச் சுட்டும் பெயராகும். வறண்ட இப்பாலைநில மக்கள் வேட்டையாடி வாழ்ந்ததால் வேட்டுவர் எனப்பட்டனர். பசுக்களைக் கவர்வதும் வழிப்பறி

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

செய்வதும் இவர்களின் தொழிகளாய் இருந்தன. இத்தொழில்களில் வெற்றி பெறும் பொருட்டு வெற்றித் தெய்வமாகிய கொற்றவையைக் (காளி) வழிபாடு செய்தனர்.

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள வேட்டுவ வரியிலும் பாலை நில மக்கள் சோம்பிக் கிடக்காமல் பகைப் புலத்தின் மீது சென்று வீரம் விளைத்துப் பசுக்களைக் கவர்ந்து வர வேண்டுமானால் வீர மாகாளிக்குப் படையலிட்டு வழிபாடு செய்ய வேண்டும் என்று சாலினி என்னும் பெண்மணி தெய்வ ஆவேசம் வந்து உரைக்கின்றாள். சாலினியின் தெய்வ வாக்கைக் கேட்டுக் கொண்ட வேடர் குலத்து மக்கள் ஒன்று கூடி ஓர் இளங்கன்னிப் பெண்ணுக்குக் கொற்றவையாகிய பார்வதி தேவியைப் போலக் கோலம் புனைகின்றனர். அப்பெண்ணின் குறுகிய நெளிந்த கூந்தலைத் தூக்கித் தலை உச்சியில் கொண்டையாக முடிந்தனர். காட்டுப் பன்றியின் வெள்ளையான வளைந்த கொம்பை எடுத்து அக்கொண்டையில் பிறை நிலவைப் போல வைத்தனர். பார்வதித் தேவியின் தலையில் பிறைநிலா உள்ளதற்கு அடையாளமாக இவ்வாறு செய்யப்பட்டது. புலியின் பற்களைப் பிடுங்கி மாலையாகக் கோர்த்து பெண்ணின் கழுத்தில் புலிப்பல் தாலி அணிவித்தனர். புலித்தோலை அப்பெண்ணின் இடையில் மேகலையாகக் கட்டினர். அப்பெண்ணின் கையில் கரிய நிறமுடைய வில்லைக் கொடுத்தனர். அதன் பிறகு முறுக்கேறிய கொம்பையுடைய ஒரு கலை மானைக் கொண்டு வந்து நிறுத்தி அதன் மீது கொற்றவையாக வேடம் புனைந்த அப்பெண்ணை அமர வைத்தனர். அவளிடம் பாவையும், கிளியும் காட்டிக் கோழியும் நீலநிற மயிலும் பந்தும் கழங்கும் கொடுத்தனர். அப்பெண்ணைக் கொற்றவையாகக் கருதித் துதித்தனர். பின்னர் பாலை நிலப் பெண்கள் வண்ணப்பொடி, சுண்ணப்பொடி, சந்தனக் குழம்பு, அவரை, துவரை,எள்ளுருண்டை, இறைச்சிச் சோறு, பூக்கள், நறுமணப் புகை ஆகியவற்றை ஏந்திக் கொண்டு அக்கொற்றவையின் பின்னால் வந்தனர். அக்குமரியின் முன்னால் பறையடிக்கப்பட்டது. சின்னம் ஒலிக்கப்பட்டது. ஊதுகுழல், புல்லாங்குழல், இசைக்கப்பட்டது. மணியோசை எழுப்பப்பட்டது. இவ்வாறு வாழ்த்தாயங்கள் ஒருங்கே முழங்கின. அதன் பிறகு கலைமானை ஊர்தியாகக் கொண்ட காளியைத் துதித்துத் தங்களுக்கு வெற்றியை வரமாக அருளுமாறு பாடினர். இவ்வாறு பாடிய பாடல் வேட்டுவ வரி' யென இளங்கோவடிகளால் குறிக்கப்படுகின்றது.

துண்என் துடியொடு துஞ்சுஊர் எறிதரு
கண்இல் எயினர் இடுகடன் உண்குவாய்
விண்ணோர் அமுது உண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுஉண்டு இருந்துஅருள் செய்குவாய்

என இவ்வாறு வரிப்பாடல்கள் பலவற்றைப் பாடிக் கொற்றவையை வழிபட்டனர். புகாரை விட்டு மதுரையை நோக்கி வந்த கோவலனும் கண்ணகியும் இப்பாலை நில வேட்டுவரின் இவ்வழிபாட்டுக் காட்சியைக் கண்டதாகச் சிலம்பு இசைக்கின்றது. பாலை நிலத்து இனகுழுக் மக்களின் வழிபாடாக இருந்த கொற்றவை வணக்கமானது காலம் செல்லச் செல்லத் தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் கிராம தேவதை வழிபாடாக பரவலாக்கம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. கிராமங்கள் மட்டுமல்லாமல் நகரப் பகுதிகளிலும் பல்வேறு பெயர்களால் வழங்கி வந்த காளி கோயில்கள் ஆங்காங்கே அருள் பாலித்து வருகின்றன. இந்தியா முழுவதும் இக்கொற்றவை வழிபாடு பல்வேறு பெயர்களில் நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. காஷ்மீரத்தில் பால் பவானியாகவும் பஞ்சாபில் ஜீவாலா முகியாகவும் வட இந்தியாவில் துர்க்கையாகவும் மராட்டியத்தில் பவானியாகவும் கேரளத்தில் பகவதி அம்மனாகவும் கர்நாடகத்தில் சாமுண்டியாகவும் கொற்றவைத் தாய் இருந்தருள் செய்து வருகின்றாள். வேட்டுவ வரியில் பாலை நில மக்கள் கொற்றவைக்கு இட்ட படையலையே இன்றும் கிராம தேவதைகளுக்குப் படையலாகப் பெரும்பாலும் இட்டு

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வணங்குகின்றோம். அன்று ஒலித்த இசைக் கருவிகளே இன்றும் அம்மன் கோவில்களில் ஒலிக்கின்றன. தொடக்கக் காலத்தில் பாலைத்திணை வழிபாடாக இருந்த நாட்டுப்புற மக்களின் வாழ்வியல், பாரதம் முழுவதற்குமான வெகுமக்கள் வழிபாடாகி வாழ்வியல் மாற்றத்தை வழங்கியிருப்பது சிறப்புக் குரியதாகும். இதை நாட்டுப்புறக் கலையின் வெற்றி என்று கூறினாலும் மிகையாகாது.

ஆய்ச்சியர் குரவை:

காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை என்றழைக்கப்பட்டது. இந்நிலத்து மக்கள் பசுக்களை மேய்த்துண்ணும் வாழ்க்கையை உடையவர்கள். இவர்தம் தொழில்கள் வாழ்க்கையின் அடிப்படையில் கண்ணனைக் கடவுளாக வணங்கத் தலைப்பட்டனர். ஆயர் குலக் கன்னிப் பெண்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஒரு காளை மாட்டைச் சிறப்புக் கவனம் செலுத்தி வளர்த்து வந்தனர். 'மைந்து விரட்டு' என்னும் போட்டியின் போது காளையை அடக்கும் ஆடவனுக்கு ஆயர் குல மங்கையை மணம் முடிக்கும் வழக்கம் பண்டைய நாளில் இருந்தது. சிலப்பதிகாரத்தில் வரும் ஆய்ச்சியர் குரவை என்னும் செய்யுளில் இச்செய்தி கூறப்பட்டுள்ளது. மதுரையை நோக்கிச் செல்லும் கண்ணகியைக் கவுந்தியடிகள் ஆயர்பாடியில் வாழ்ந்த இடைக்குல மடந்தை மாதரியிடத்தில் அடைக்கலப்படுத்திச் சென்றார். கோவலனும் கண்ணகியும் அங்கு தங்கிய காலத்தில் சில தீய சக்திகளைக் கண்ட மாதரி தன் மகள் ஐயை என்பவளை அழைத்துத் கண்ணனுக்கு நேர்ந்து கொண்டு குரவைத் கூத்து ஆடுமாறு கூறுகின்றாள். அப்போது ஏழு காளைகலை வளர்த்த ஏழு கன்னிப் பெண்கள் அங்கே வந்து கூடுகின்றார்கள். மத வரிசையாக நிறுத்திக் குரல், துத்தம், கைக்கிளை உழை, விளரி, இளி, தாரம் என்னும் ஏழிசையும் பெயர்களாத அப்பெண்கள் கலுக்குக் கூறுகின்றாள். குரவைக் கூத்தின் போது அப்பெண்களின் இயற்பெயர் வழங்காமல் இசைப்பெயர் தான் வழங்கப் பெறும். வரிசையில் நிற்கும் முதல் மூன்றும் முறையே கண்ணன், பலதேவன், நப்பின்னையாகக் கருதப் பெறுவர். வரிசையாக நின்ற எழுவரும் கைகோர்த்துக் கொண்டு வட்டமாக நிற்கத் தொடங்குவர். அதன் பிறகு மாயவனாகிய கண்ணனின் பெருமைகளைப் பாடி ஆடுவர். இதுவே குரவைக் கூத்து எனப்படுகின்றது. குரவை என்னும் சொல்லுக்கு ஒலிஎழுப்புதல் என்று பொருள். குரல் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது குரவை என்னும் சொல்லாகும். அந்த ஏழு பெண்களும் பாடத் தொடங்கும் முன் ஒருங்கே கூவும் ஓசையை எழுப்புவர். இந்தக் குரவையிடுதலையே 'குலவையிடுதல்' என்று கூறுவர். ஆய்ச்சியர் குரவையில் அப்பெண்கள் பாடிய கண்ணனைப் பற்றிய பாடல்கள் இன்பம் பயப்பனவாய் உள்ளன.

கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றைஅம் தீங்குழல் கேளாமோ தோழீ
பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ
கொல்லை அம் சாரல் குருந்துஒசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல், அவன்வாயில்
முல்லைநம் தீங்குழல் கேளாமோ தோழீ!

என மூன்றடுக்கு வந்த தழிசைப் பாக்கள் குரவைக் கூத்து பாடுவதில் அமைந்தன. அக்காலத்தில் குரவைக் கூத்து ஆடும் பழக்கம் இருந்து வந்தது. குரவைக் கூத்து நடத்தும்

முறையை ஆய்ச்சியர் குரவையில் இளங்கோவடிகள் விளக்கமாகப் பாடி வைத்துள்ளார். சிலப்பதிகாரம் கூறும் இதே மதுரைப் பகுதியில் தான் ஆயர்களின் ஏறுதழுவுதல் விளையாட்டு நிகழ்ந்ததாக எட்டுத்தொகைச் சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றாகிய கலித்தொகையின் முல்லைக்கலிப் பாடல்கள் அனைத்தும் உரைக்கின்றன. முல்லைக்கலியின் ஆயர் பெருமக்கள் தாங்கள் வளர்த்த காளைக்குக் கண்ணன் என்றும் வெள்ளை வண்ண எருதுக்கு பலதேவன் என்றும் பெயரிட்டனர் என அவ்விலக்கியம் உரைக்கின்றது. அன்று மதுரைப் பகுதியில் நடந்த ஏறுதழுவுதல் விளையாட்டு இன்று வரையிலும் அலங்காநல்லூர், பாலமேடு போன்ற மதுரையைச் சுற்றிய ஊர்களில் நிகழ்ந்து வருவது கண்கூடு. இவ்விளையாட்டின் தாக்கமானது தென்தமிழ் நாட்டின் பகுதிகள் அனைத்திலும் இன்றும் பரவியுள்ளதைக் காணமுடிகின்றது. மாயோன் மேய காடுறை உலகமும்' என்று முல்லை நிலத்தின் தெய்வமாக மாயவனைத் தொல்காப்பியர் குறித்தார். அந்த மாயோன் என்கிற கண்ணன் வழிபாடு தமிழ்நாடு உள்ளிட்ட பாரத நாடு முழுவதும் பொது வழிபாடாக இன்றும் போற்றப்பட்டு வருகின்றது. உறியில் வைக்கப்பட்டிருந்த வெண்ணெய்ப் பானையைக் கண்ணன் உடைத்துத் திருடித் தின்றதாகப் புராணம் உரைக்கின்றது. அந்த நிகழ்வைப் போற்றும் வகையில் திருமால் கோயில்களில் அன்று தொட்டு உறியடித் திருவிழா நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. தொடக்கக் காலத்தில் சிறிய புள்ளியாக ஆரம்பித்த மாயோன் வழிபாடும் அது சார்ந்த நிகழ்வுகளும் மக்கள் சமுதாயத்தையே வளைத்துக் கொண்டு நிற்கும் பெரிய வட்டமாக மாறியிருப்பது நாட்டுப்புற வாழ்வியலின் பெருவெற்றி எனக் கருதலாம்.

குன்றக்குரவை:

நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறிய கண்ணகி தேவர் சூழ வானவூர்தியில் வந்த கோவலனுடன் சேர்ந்து வானகம் சென்றாள். இதைக் கண்ட குன்றக் குரவர்கள் கண்ணகியைத் தெய்வமாகப் போற்றினர். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. குறிஞ்சியின் கடவுள் குமரன் அல்லது முருகன் ஆவான். குறிஞ்சி என்னும் குன்றப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மிகப் பழங்காலத்தில் குன்றவர், குன்றத்தியர் என இடப்பெயரால் சுட்டப்பட்டனர். காலப்போக்கில் அப்பெயர்களில் உள்ள இரண்டாம் எழுத்தாகிய னகர' ஒற்று கெட்டு குறவர், குறத்தியர் என மாறின. தற்போது இவை சாதிப் பெயராக மாறிவிட்டனர். நெடுவேள் குன்றத்து குறத்தியர் குருகு ஒட்டியும் கிளி கடிந்தும் தினைப்புனம் காத்தனர். மகிழ்ந்து நீராடினர். அவ்வாறு ஆடிய பிறகு குன்றத்து குறத்தியர் குன்றக் குரவை ஆடுவதற்கு ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்கின்றனர். இதனைச் சிலம்பின் ஆசான்,

உரவுநீர் மாகொன்ற வேல்ஏந்தி ஏத்திக்
குரவை தொடுத்து ஒன்று பாடுகம்வா தோழி

எனப் பாடுகின்றார். குறத்தியர் கைகோத்து குரவைக் கூத்தாடுகின்றனர். முதலில் முருகனைப் புகழ்ந்து பாடுகின்றனர்.

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேல்அன்றே
பார்இரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டுஒருநாள்
சூர்மா தடிந்த சுடர்இலைய வெள்வேலே

எனப் பாடல் இசைத்தவாறு குரவைக் கூத்து நிகழ்கின்றது. முருகனைப் பாடிய குறத்தியர் தங்கள் மலைக்கு வந்து வானகம் சென்ற பத்தினித் தெய்வம் கண்ணகியையும் வாழ்த்திப் பாடிக் கூத்து நிகழ்த்துகின்றனர்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலத்
தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுகம்

எனக் கண்ணகியைப் பாடி வாழ்த்தி நின்றனர். குன்றக்குரவையின் இறுதியில் சேர மன்னனை வாழ்த்தி மங்கல வாழ்த்துப் பாடல் இசைக்கின்றனர். முருகனை வாழ்த்திப் பாடி ஆடுதலாகிய நிகழ்வு மலையிலிருந்து அருவி போல் குதித்து ஆறாகப் பெருகி நிலப்பரப்பு முழுவதும் நின்று தெய்வமணம் கமழ்த்தி வருகின்றது. பின்பு காவடியாட்டம், வள்ளிக்கும்மி ஆட்டம் எனப் பலவாறாகப் பெருகி வரும் நாட்டுப்புறக் கலைக்கு ஊற்றுச்சுனையாக விளங்குவது குன்றக் குரவையே என்பது வெள்ளிடை மலை.

முடிவுரை:

பழந்தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை நிலவியல் மாந்தரின் வாழ்வியல், நாட்டுப்புறக் கலை இலக்கியங்களை வளர்த்தெடுத்த தொட்டிலாக இருந்தது எனலாம். மருத நிலத்து உழவர் பெருமக்களின் வாழ்க்கையானது ஏர்பாட்டு, ஏற்றப்பாட்டு, கமலைப்பாட்டு என உழவர்களைச் சார்ந்து வளர்ந்து வந்தது. உழத்தியர்களைப் பொருத்த வரையில் நடவுப்பாட்டு, களையெடுத்தல், அறுவடை சார்ந்த பாடல்கள் என மொழியோடு சேர்ந்து இசைக்கலையும் வளர்ச்சி உற்றன. நெய்தல் திணை மக்கள் ஏலேலோப் பாட்டு, ஐலேசாப் பாட்டு எனத் தொழில் சார்ந்த நாட்டுப்புறக் கலைகளுக்கு நீர் வார்த்து வந்தனர். பாலைத் திணை மக்கள் தொழிலையும் இறையியலையும் ஒன்று சேர்த்து கலைவடிவம் கொடுத்து வளர்த்தனர். இதனைச் சிலம்பில் வரும் வேட்டுவ வரி அழகாகச் சித்திரித்துக் காட்டுகின்றது. பாலை நிலக் கொற்றவை வழிபாடு அடுத்தடுத்த காலங்களில் பாரத நாடு முழுவதும் வெவ்வேறு பெயர்களில் காளி வழிபாடாக மலர்ந்துள்ளது என்பதை இக்கட்டுரையின் ஆய்வு புலப்படுத்துகின்றது. முல்லை நிலத்து கண்ணன் வழிபாடும் 7 பெண்கள் கைகோர்த்து வட்டமாக நின்று ஆடிப்பாடும் ஆய்ச்சியர் குரவையும் வாலிபர்கள் காளைகளை அடக்கும் ஏறுதழுவுதலும் தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றன என்பதையும் அறிய முடிகின்றது. சிலப்பதிகாரத்தில் வரும் குன்றக்குரவைக் காதையின் மூலம் குறத்தியர் முருகனை வேண்டி ஆடிப்பாடும் குரவைக் கூத்து பற்றியும் அப்பெண்கள் கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடியது பற்றியும் இந்த ஆய்வுக்கட்டுரை விளக்கிச் செல்கின்றது. மொத்தத்தில் கூத்து இசை முதலிய நாட்டுப்புற கலைகள் மக்களையும் இறையியலையும் பிணைத்து வைத்திருப்பதை அறிய முடிகின்றது. தொடக்கத்தில் குறுகிய நிலம் சார்ந்து வழங்கி வந்த இக்கலைகள் பின்னர் பரந்த நிலப்பரப்பு முழுவதும் பரவி தெய்வ விழாக்களோடு கைகோர்த்து நடை போடுவதை இன்றும் காண முடிகின்றது. தொடர்ந்து பழக்கத்தில் இருந்து வரும் இத்தகைய கலைகள் அறிவியல், நவீன நாகரிக வளர்ச்சிகள் என்னும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாமல் இனிவரும் தலைமுறைகளுக்குக் காப்பாற்றிக் கொடுப்பது வழிவழியாக வரும் சந்ததியாரின் தலையாய கடமையாகும்.

துணை நூற்பட்டியல்:

1. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியாருக்கு நல்லாருரையும், உ. வே. சாமிநாதய்யர்., உ. வே. சாமிநாதய்யர் நூல்நிலையம், 2021, சென்னை.
2. சிலப்பதிகாரம் தெளிவுரை, உரையாசிரியர், சிலம்பொலி சு. செல்லப்பன், முதல் பதிப்பு 2016, பாரதி நிலையம், தியாகராய நகர், சென்னை 17
3. தொல்காப்பியம், உரையாசிரியர் இளம்பூரணர், முதல் பதிப்பு 2017, கௌரா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

18. திருப்பூவணநாதர் நாதர் உலாவில் தீர்த்தங்களின் சிறப்புகள்

முனைவர் கா.சந்தானலெட்சுமி,
இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர் தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர்
lakshmisanthana617@gmail.com ph no: 7708394749 ORCID: 0009-0009-4031-9490
DOI 10.5281/zenodo.17209701.

Abstract:

Thiruppuvanam is also known as the place where the Thevarapadal was sung and the 36th Thiruvilayadal Puranam of Shivanar was performed. Among the Thevara temples of the Pandya country, it is considered as the Thiruppuvana Kashi, having the special feature of 'more than Kashi'. This study aims to examine the thertha specialities of the Thiruppuvanam temple, which is a temple that has various theerthas together, using a descriptive research approach.

Key Words: Thevaram - Thirupuvanam - Kashi - Temple - Theerdham

முன்னுரை

தேவாரபாடல் பெற்ற தலமாகவும் சிவனாரின் 36வது திருவிளையாடல் புராணம் நடைபெற்ற இடமாகவும் திருப்பூவணம் விளங்குகின்றது. பாண்டிய நாட்டுத் தேவார திருத்தலங்களில் காசியைவிட கால் வீசும் கூடுதல்' என்ற சிறப்பு பெற்று திருப்பூவணக் காசி ஆக திகழ்கிறது. பல்வேறு தீர்த்தங்களை ஒருங்கே பெற்ற திருத்தலமாக விளங்கும் திருப்பூவணம் திருக்கோயிலின் தீர்த்தச் சிறப்புகளை விளக்க முறை ஆய்வு அணுகு முறையில் இந்த ஆய்வு காண விழைகின்றது.

சிற்றிலக்கியங்களில் உலா

சங்க இலக்கியங்கள் தொட்டே எல்லா வகை இலக்கியங்களிலும் சிற்றிலக்கிய கூறுகள் இடம் பெற்றுள்ளன. சான்றாக ஆற்றுப்படை நூல்கள், தாண்டகவகைப் பாடல்கள் போன்றவைகளைக் கூறலாம். கி.பி 15ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை சிற்றிலக்கிய வகைகள் மேலோங்கி நின்றன. 96 வகையான சிற்றிலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன.[1] இவை வட்டார சார்புடையனவாக திகழ்கின்றன. பல சிற்றிலக்கியங்கள் தமிழ் பண்பாடு தமிழ்மரபு சார்ந்த கருத்துக்களோடு அமைகின்றன.[2] உலா பற்றிய இலக்கண வரையறையை தொல்காப்பியம்,

ஊரோடு தோற்றமும் உரித்தெனமொழிய (தொல் - 1031)

என்று கூறுகிறது. 'முத்தொள்ளாயிரம் என்னும் இலக்கியம் உலா இலக்கியத்தின் தோற்றத்தினை அழகாகக் காட்டுகிறது.[3] இறைவன் அரசர்கள் மற்றும் பெருந்தலைவர்கள் உலா வரும் பொழுது அக்காட்சி கண்டு தம் உள மகிழ்வினை அன்பு வெளிப்பாட்டினை பேதை முதல் பேரிளம் பெண்கள் வரை உணர்த்துவது உலாவின் தனிச்சிறப்பாகும். பெண்களின் உளப்பாட்டினை வெளிப்படையாக பேசுவன நாட்டார் இலக்கியங்களே ஆகும். அந்தவகையில் உலாவிற்கும் அவையே காரணமாகின்றன. உலா வரும்போது தேவதாசியார் பலர் தெய்வத்தைக்கண்டு காதல் கொள்வது பற்றி எடுத்துரைப்பதும் முற்காலத்தில் நாட்டுப் பாடல்களாக வழக்கத்தில் இருந்தன.[4] இப்பாடல்களை நூலாக்கும் முயற்சியே உலா இலக்கியங்கள் ஆகும்.

தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் மற்றும் பக்தி இலக்கியங்களின் வாயிலாக உயிர் பெற்ற உலா இலக்கியங்கள் சிற்றிலக்கிய காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தன. திருக்கயிலாய ஞான உலாவில் சிவனார் உலா வருதலே பாடுபொருளாகிறது. அதனைப்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

பின்பற்றியே கி.பி 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட திருப்பூவணநாதர் உலாவும் அமைகிறது எனலாம். கால அடிப்படையில் தொன்று தொட்டு தமிழ் இலக்கிய மரபுகள் எடுத்துச் செல்வதை சிற்றிலக்கிய வளர்ச்சிப்பாடுகள் உணர்த்துகின்றன.

திருப்பூணவநாதருலா

இந்நூலுக்கு பாட்டுடைத்தலைவன் திருப்பூவணநாதராவர். உலா காணச் செல்வோர் எழுவகை பருவத்தைச் சார்ந்த உருத்திரகணிகையர் ஆவார்கள். இந்நூலாசிரியர் கந்தசாமிப்புலவர். உருத்திரகணிகையாகிய பொன்னனையாள் புதல்வரென்பதை இந்நூற் சிறப்புப்பாயிரம் பொன்னனையாள் பெற்றெடுத்த புத்திரனோர் கந்தசாமி என்று கூறப்பெற்றிருத்தலாலும் அறியமுடிகிறது.[5]

பலருடைய நெஞ்சங்களைக் கவரும் ஒப்பற்ற அழகனாய்த் தலைவன் உலா வருவதாகப் பாடுவதே உலா நூலின் மரபு ஆகும்.[6] திருப்பூவணநாதர் உலாவின் பாட்டுடைத்தலைவன் அச்சோ அழகிய பிரானாகிய சிவனார். திருப்பூவண நகரில் பங்குனி உத்திரத்தில் உலா வருகின்றார். அவரின் திருவருளும் அழகும் ஒருங்கே காணப்பெற்ற மக்கள் அவரின் அருளில் தம்மை இணைக்கவே விரும்புகின்றனர். தெய்வங்கள் மீது அமைந்த சிற்றிலக்கியங்கள் மூலம் ஊர் வரலாறு புராணக்கதைகள் மக்களின் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை அறியலாம்.[7]

திருப்பூவணநாதருலா வாயிலாக அத்திருத்தலச்சிறப்புகள் அழகுற எடுத்துரைக்கப்படுகின்றன. எக்காலத்திலும் மனித முக்திக்கான திருத்தலமாக திருப்பூவணம் விளங்குவதை இன்றும் கண் கூடாக காண முடிகிறது.

திருப்பூவணத் திருத்தலம்

இங்குள்ள சிவனார் சுயம்பு வடிவமாக உள்ளார். இதனை வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும் வளர் சடை மேல் இளமதியம் தோன்றும் தோன்றும்' என்ற அப்பரின் திருத்தாண்டக வரிகள் விவரிக்கின்றது. சிவனாரின் லிங்கத் திருஉருவில் வடிவான திரிசூலம் தோன்றுகின்றது. வளர்கின்ற சடையை உடைய அவரின் சடையின் மேல் இளமதியம் தோன்றுகின்றது. பொலில்திகழும் இடத்தில் புனிதர்களுக்கு அருள் பாலிக்கும் புனிதராக திருப்பூவணநாதர் இத்தலத்தில் வீற்றிருக்கிறார். ஊண் சாம்பலும் இங்கே மலராகிறது. இதனால் நீத்தார் வழிபாடு சிறப்புடையதாக இத்தலத்தில் கருதப்படுகிறது.

திருப்புவனத்தில் வழிபாடு செய்தோர்

ஓரறிவு முதல் ஆறறிவு வரை சிவனாரை சிந்திக்கும் இடமாக திருப்பூவணம் திகழ்கிறது. உமையம்மை இங்கு வந்து தவம் இயற்றிய காலத்தில் இங்கே நடப்பட்ட தருவானது

ஒருகத்திலே தருவாய் ஒருகத்திலே வில்லுவாய்
ஒருகத்திலே வன்னியாய்' **(திரு. உலா பாடல் *28)***

திகழ்ந்து இன்று கலியுகத்தில் பலா மரம் ஆகியது. அப்பலா மரத்தினடியில் ஈசனார் அருள் பாலிக்கிறார். அறிந்து செய்யும் பாவங்களை மன்னிக்கும் திருத்தலமாக சாப விமோசனத் தலமாக திருப்பூவணம் திகழ்கிறது. அத்தலத்தில் அல்லால் அறிந்து செய்யும் பாவம் எத்தலத்தும் தீராதங்கே கென்னக (திரு. உலா பாடல் *13)*என்ற பாடல் வரிகள் திருப்பூவண திருத்தலத்தின் சிறப்பினை காட்டுகிறது. இதனால் தான் முக்தி தலமாக மோட்சபுரியாக திருப்பூவணம் விளங்குகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

விநாயக பெருமாள் உமையம்மை. திருமால் திருமகள். பிரம்மதேவர். அகத்தியர் காளி சூரியன் சந்திரன் திரனாசனர் தருமஞ்ஞன் சுசோதி மன்னன் மார்க்கண்டேயன் வசிட்டர், இந்திரன் நளவேந்தன் சாகாசனர் பொன்னனையாள் ஆகியோர் திருப்பூவண திருத்தலத்தில் நற்பேறு பெற்றவர்களாக திருப்பூவணநாதர் உலா சுட்டுகிறது.[8]

இறைவன் இறைவியின் திருநாமங்கள்

அம்மை அப்பராக தாயுமானவராக விளங்கும் சிவனாரும் உமையம்மையும் பல்வேறு திருப்பெயர்களால் இத்தலத்தில் வழிபடப்படுகிறார்கள். புட்பவனநாதர் பிரம்மபுரீஸர் இரகசிய சிதம்பரேசர் திருப்பூவணநாதர் அழகிய பிரான் என்பன எல்லாம் வல்ல சிவனாரின் திருப்பெயர்கள் ஆகும்.

உமையம்மை சுந்தர நாயகி அழகிய மின்னனையாள் அழகிய நாயகி சுவர்ணவள்ளி அன்னபூரணி என்றெல்லாம் திருப்பெயர் கொண்டு சக்தி அருள் பாலிக்கிறார்

திருப்புவன தீர்த்தங்கள்

சாபமும் பாவமும் நீங்குவதற்கு உரிய தீர்த்தங்கள் இங்கே உள்ளன. சாபமும் பாவமும் நீங்கி சிவனின் அருள் பெற்றோர் உண்டாக்கிய தீர்த்தங்களே இங்கு உள்ளன. எண்ணற்ற தீர்த்தங்களை உடைய திருத்தலம் என்ற சிறப்புடையதாக திருப்பூவணம் விளங்குகிறது. வையை மணிகர்ணிகா பாவநாசம் பிரம்ம தீர்த்தம் இலக்குமி தீர்த்தம் மார்க்கண்டேயே தீர்த்தம் நலதீர்த்தம் விட்டுனு தீர்த்தம் வசிட்ட தீர்த்தம் என்பவை திருப்பூவண திருத்தலத்தில் பல்வேறு யுகங்களாக திகழ்ந்துள்ளன.[9]

வையை

மதுரையின் மீனாட்சி திருமணத்தில் உணவருந்திய குண்டோதரனின் தாகத்தை தீர்க்க சிவனார் கையை வைத்ததால் உண்டாகிய நதியே வையை நதியாகும். காசியில் கங்கை எவ்வளவு புனிதமானதோ அதைப்போல் திருப்பூவணத்தில் வையை புனிதமானது. இருநதிகளும் சிவனாரின் மேனிபட்டு வந்தவை ஆகும் என்பதால் காசியும், திருப்பூவணமும் நீத்தார் வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன. வையையில் ஊண் சாம்பல் கரைக்கப்படும் பொழு மலராகி இறையோடு கரைகின்றது. அதனாலே இங்குள்ள இறைவன் பூவணநாதர் என போற்றப்படுகிறார்.

மணிகர்ணிகா தீர்த்தம்

உமையின் காது குழை விழுந்த இடமாக மணிகர்ணிகா தீர்த்தம் கூறப்படுகிறது. இத்தீர்த்தம் காசியில் உள்ளது போலவே திருப்பூவணத்திலும் உள்ளது. உமையம்மை தங்கியிருந்து தவமிருந்தார். மின்னம்மைக்கு அழகிய பிரான் தனது ஆனந்த கூத்தினை ஆடிக்காட்டினான். இறைவனின் திருநடனமும் ரசவாதமும் நடைபெற்ற இடம் என்பதால் இரகசிய சிதம்பரம் என்றொரு திருப்பெயரும் இத்தலத்திற்கு உண்டு. சிதம்பரத்தில் உமையம்மை சிவகாமியாகவும் தில்லைகாளியாகவும் அருள் தருகிறார். திருப்பூவணத்தில் உமையம்மை மின்னம்மையாகவும் மடப்புரம் காளியாகவும் காட்சியளிக்கிறார். மதுரைக்கு வந்த தீங்கு அகன்று மதுரையின் எல்லையைக் காட்டிய பொழுது எல்லைக்காளியாக சக்தியே மடப்புரம் காளியாகினாள். பச்சை நிறக் காளியை இங்கு மட்டுமே காணலாம். சிதம்பரத்திற்கும் திருப்பூவணத்திற்கும் தொடர்பு இருப்பதாலே இரகசிய சிதம்பரம் என இத்தலம் அழைக்கப்படுகிறது. வையை ஆற்றின் இருபுறமும் தெய்வங்கள் அருளாட்சி புரிவதால் வைகை நதியெங்கும் சிவலிங்கமாக காட்சியளித்தது. இதனால் தேவாரம் பாடிய மூவரும் அக்கரையிலே நின்று பாடினர். நந்தி விலகி காட்சியளித்த திருத்தலமாகும் என்று கூறப்படுகிறது.

சிவனாரின் அருளால் தேவாரம் பாடியோர் வான் மாக்கமாக சென்று இறைவனை வழிபட்டதாக தலபுராணம் கூறுகிறது. இத்தகைய சிறப்புடைய வையை ஆற்றின் கரையிலே திருப்பூவணநாதர் கோயில் கொண்டுள்ளார் என்பதை திருப்பூவணநாதர் உலா எடுத்துரைக்கிறது.

மணிகர்ணிகா தீர்த்தமும் பாஸ்கர தீர்த்தமும்

துருவாச முனிவரால் சாபம்பெற்ற சூரிய பகவான் தன் ஒளி குறைந்து இருளாகிறார். அவரது சாபம் நீங்க இங்கு வந்து மணிகர்ணிகா தீர்த்தத்தில் நீராட இழந்ததை தன் ஒளியை மீண்டும் பெற்றார். சூரியனார் இத்தலத்தில் உண்டாக்கிய தீர்த்தமே பாஸ்கர தீர்த்தமாகும். இதனால் பாஸ்கரபுரீசர் என்ற திருநாமமும் இங்குள்ள ஈசர் பெற்றார்.

பிரம்ம தீர்த்தம்

நூறு இதழ்கள் உடைய தாமரை மலரில் எழுந்தருளி இருக்கும் பிரமன் தனது இறை வழிபாட்டின் போது கவனம் ஊர்வசியின்பால் சென்றதால் சாபத்திற்கு உள்ளாகினார். அச்சாபம் நீங்க திருப்பூவணதிருத்தலத்தில் வந்து தவம் இருந்து நற்பேறு பெற்றார். பிரம்மாவால் இங்கு ஏற்படுத்தப்பட்ட தீர்த்தமும் பிரம்மதீர்த்தம் என திருப்பூவணநாதருலா விவரிக்கிறது.

லட்சுமி தீர்த்தமும் விட்டுனு தீர்த்தமும்

வாலகில்லிய முனிவரை அவமதித்த காரணத்தால் திருமகள் திருமாலைப் பிரிய நேர்ந்தது. அச்சாபம் நீங்கி இங்கு வந்து தவமியற்றி திருமாலோடு இணைந்தார். விட்டுனு நற்பேறு பெற்று உண்டாக்கிய தீர்த்தமே விட்டுனு தீர்த்தமாகும்.

மும்மூர்த்திகளும் உண்டாக்கிய தீர்த்தங்கள் உள்ள இடமாக திருப்பூவணம் திகழ்வதை திருப்பூவணநாதர் உலா வாயிலாக அறிய முடிகிறது.

நளதீர்த்தம்

நளன் தனது கர்மா தீர இங்கு வந்து நற்பேறு பெற்று உண்டாக்கிய தீர்த்தமே நள தீர்த்தமாகும். இவ்வாறு இங்குவந்து நற்பேறு பெற்றோர் உண்டாக்கிய தீர்த்தங்கள் அவர்களின் பெயர்களாலே அறியப்படுகிறது. எல்லா காலங்களிலும் அனைத்து உயிர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கிலே இத்தீர்த்தங்கள் திருப்பூவண திருத்தலக் கோயிலில் உண்டாக்கப்பட்டுள்ளன. அதனாலே மோட்சபுரியாக பூவண பூமியாக இத்தலம் திகழ்கிறது.

முடிவுரை

தலம், தீர்த்தம், மூர்த்தி, விருட்சம் என அனைத்து நிலைகளிலும் தனிச்சிறப்புடையதாக திருப்பூவணத்திருத்தலம் விளங்குகின்றது. நீர் நிலைகளே மனித வாழ்வியலுக்கான அடிப்படை என்பதையும் திருப்பூவணநாதர் உலா வெளிப்படுத்துகிறது. நீர்நிலைகள் போற்றப்படுதல் பஞ்சபூதங்களாகிய இயற்கை வழிபாடு ஆதித்தமிழர்களின் பண்பட்ட பண்பாடு உணர்வினையும் காட்டுகின்றன என்பதை திருத்தல தீர்த்தங்களின் சிறப்பு மூலம் விண்ணுலகம் மண்ணில் இருந்ததை உணர முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. கந்தசாமிப்புலவர்,திருப்பூவணநாதருலா,செ.ரெ இராமசாமிப்பிள்ளை உரையுடன், கழக வெளியீடு - திருநெல்வேலி.
2. மு. வரதராசனார்,தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதமி, புதுதில்லி.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

19. சங்கப்பாடல்களின் வழி வேளாண்மை வளர்ச்சிப் படிநிலைகள்

முனைவர் கு. செல்வாஈஸ்வரி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
எஸ்.எஃப்.ஆர். மகளிர் கல்லூரி, சிவகாசி.
DOI 10.5281/zenodo.17209756.

Abstract:

The people of the Sangam age demonstrated remarkable expertise in agriculture, describing their technologies in songs that richly detailed everything from soil nature to crop sales. By grasping the characteristics of water resources, they developed effective water management plans. Their ability to utilize nature's gifts and excel in professions led to the creation of enduring literary works. The combination of experiential and learned knowledge enabled experts to rise to prominence in various fields. Drawing inspiration from the Sangam age's multifaceted talents, we can surely achieve success by following their example.

Key Words: Sangam Literature - Sangam age's - Agriculture - Technology

முன்னுரை

மனிதன் தேவைகள் அதிகரிக்க நாட்டின் பொருளாதாரம் விரிவுபடுத்தப்படுகின்றது. கல்வியறிவில் முன்னேற்றம் பெருகப்பெருக புதுப்புது அரிய கண்டுபிடிப்புகள் தோன்றலாயின. குடும்ப வருவாயினைப் பெருக்கிக் கொள்ளல், இல்லற தேவைகளை நிறைவேற்றல் போன்றவையே ஆண், பெண் பொருள் ஈட்டுவதற்கு அடிப்படைக் காரணிகள் ஆகின்றன. மண்ணின் தன்மை அறியும் கருவிகள் தொடங்கி பயிர்கள் விற்பனை செய்வது ஈறாக உள்ள அனைத்து உழவுநுட்பங்கள் பழந்தமிழர் தம் பாடல்களில் பல்கி கிடக்கின்றன. சுற்றுச்சூழல் பிரச்சனைக்கு முதற்காரணமாய் விளங்கும் நீர்வளத்தின் தன்மைஅறிந்து தான் நீர்மேலாண்மைத் திட்டத்தைப் பாதுகாத்துள்ளனர். இயற்கை வழங்கும் கொடையினை ஏற்று தத்தம் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கியமையால் அழியாபுகழாக இலக்கியங்கள் இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. சங்கமாந்தர் தம் வாழ்வில் காணப்படும் தன்னிறைவு சார்ந்த வேளாண்மை வளர்ச்சி அடையும் விதம்; குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

கிடைகட்டுதல்

'ஆட்டெரு அவ்வருடம் மாட்டெரு மறுவருடம்' என்கிறது பழமொழி. முன்பு, வேனிற்காலத்தில் நிலத்திற்கு உரம்ஊட்டும் வகையில் இரவுப்பொழுதில் வயல்களில் ஆடுகளைச் செலுத்துவர். இவ்வாடுகளின் எச்சங்கள் வயலுக்கு நல்ல உரமாகும். இதற்கு 'கிடைகட்டுதல்' என்ற பெயருமுண்டு. இவ்வாட்டு உரத்தில் நைட்ரஜன் பாஸ்ஃபரின் என்ற அமிலத்தன்மைகள் காணக்கிடக்கின்றன. எனவே தான் கிடைகட்டும் நுட்பத்தை அன்றே பழந்தமிழர் அறிந்துள்ளனர். இக்கருத்தினை,

"புன்புலந் தழீஇய வங்குடிச் சீறூர்க்
குமிழுண் வெள்ளை மறுவாய் பெயர்த்த
வெண்காழ் தாய வண்காற் பந்தர்" **(புறம். 324)**

என்ற பாடலடிகள் வழி எடுத்துரைக்கின்றன. இங்கு நிலத்தில் குமிழம் பழங்கொட்டையைப் போன்று வெள்ளாட்டுப் புழுக்கைகள் எருவாய் கிடந்தமையை அறியமுடிகின்றது. இவையே எருஇடல் முறைக்கு நல்ல சான்றாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எருதின் பயனும் நாற்றுநடலும்

பழந்தமிழர் கோரையைப் பிடுங்கி மண்ணைக்கிளறும் படி ஆனேறு கொண்டு வேளாண்மை செய்வர். இவ்வாறு உழுவர். பண்படுத்திய பின்னர், சேற்றைச் சமம்பட மிதித்து நீர்ப்பாய்ச்சி நாற்றுகளை நடவதற்கான தன்மைகளைப் பெறமுடியும். இவ்வாறு நாற்றுநட்ட பயிர்கள் நன்கு செழித்து வளருகின்றது. அக்காலத்தில் உழவர்கள் எருது கொண்டு நிலத்தைக் கீழ் மேலாகப் புரட்டி மண்ணின் தழைச்சத்துப் பெறும்படி பயிரிட்டுள்ளனர். இதனை,

“பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பிற்
காரேறு பொருத கண்ணகன் செறுவின்
உழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்
முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவிற்” (**பெரும்.**, : 209-212)

என்ற ஆற்றுப்படைவழி அறியலாம். இவ்வடிகள் மூலம் வயலில் நாற்று நட்டு பயிரிடும் வேளாண்நுட்பத்தை அறியமுடிகின்றது. இருப்பினும் முற்காலத்தில் பன்றி தோண்டிய நிலத்தில் உழவுத்தொழில் செய்துள்ளமை தற்போது நடைமுறைக்கு மாறாக உள்ளதைக் காணலாம்.

பொதுவாக, நிலத்தின் அடியில் கிடக்கும் கிழங்கினைப் பன்றிமருப்பால் தோண்டுவது இயல்பு. இதனால் தான் உழவர்கள் உழாது அப்படியே விதை விதைத்து பயிர்செய்துள்ளமையைப் பதிற்றுப்பத்து பதிவுசெய்கின்றது. இக்கருத்தினை,

“ஏறு பொருத செறு வுழாது வித்துரவும்” (**பதிற்றுப்பத்து**. *23)*

என்பதில் விலங்கினங்கள் வழி நிலத்தைக் கிண்டிப் புழுதி படர உழவுசெய்யும்நுட்பம் காணமுடிகின்றது. இதே போன்று பன்றி உழுத நிலத்தைக் குறவர்கள் உழாமல் தினைப்பயிர்களை விதைத்துள்ளமையை புறநானூறு. *168* வழி அறியலாம். இங்கு நல்ல நாள் பார்த்து உழவு செய்யும் வேளாண் நுட்பம் பதிவு செய்துள்ளமையினை அறியமுடிகிறது.

கலப்புப்பயிர்

வன்புலமானது மண்வளமும், நீர்வளமும் குறைந்து காணப்பெறும் பகுதியாகும். இவ்வன்புலமாகிய நிலத்தில் தினைப்பயிருடன் கடுகும் அவரையும் கலந்து விளைவித்துள்ளனர் நமதுமுன்னோர்கள். இம்முறையினை கலப்புப்பயிர்’ என்றும் அழைப்பதுண்டு. அதோடு மென்புலமாகிய நிலத்திலும் அவரை, உழுந்து, பயிறு போன்ற தானியங்கள் ஊடுபயிராக விளைவிக்கப்பெறுகின்றன. இத்தகுப் பயிரிடல் முறையினை இலக்கியங்கள் பலபாடல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. உதாரணமாக ஐங்குறுநூற்றில் தினைக்கதிரைக் கொய்தபின்னர் அதே நிலத்தில் மீண்டும் அவரை விளைவிக்கும் நுட்பத்தைக் காணமுடிகின்றது. சான்றாக,

“சிறுதினை கொய்த விருவி வெண்காற்
காய்த்த வவரை……….” (**ஐங்குறுநூறு**. *286)*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

மலைபடுகடாமில் நெல் அறுவடைக்குப்பிறகு உழாது வெண்சிறுகடுகு விதை விதைத்தமையை,

“தொய்யாது வித்திய துளர்படு துடவை
ஐயவி மன்ற வெண்காற் செறுவின்…” (**மலைபடுகடாம்** *122-123)*

http://Creativecommons.org//license/by/4.0/. ISBN: 978-93-343-7954-9

என்ற அடிகள் விளம்புகின்றன. இவையே வன்புல நிலப்பயிரீட்டு முறைக்கு நல்ல சான்றாகும்.

நெல் அறுவடை செய்த பின்னர் பயிறு வகைகள் சுழற்சிமுறையில் பயிரிட முடியும் வேளாண்நுணுக்கத்தை ஐங்குறுநூறு வழி காணலாம். இதனை,

“......மனையோ

ளரிகாற் பெரும்பயிறு நிறைக்கு மூர” **(ஐங்குறுநூறு**. *47)*

என்பதில் கோடிட்டுக்காட்டப்பெறுகின்றது. இதுவும் ஒரு கலப்பு பயிரிடல் முறைக்குச் சான்றாக ஏற்கலாம். பருவமறிந்து பயிர் செய்யும் நுட்பம் இன்றளவும் நடைமுறையில் கையாளப்பெறுகின்றது. நெல் அறுவடைக்குப் பின்னர் உழுந்து பயிரிடுவது வழக்கம். இவ்உழுந்தின் காயை அடித்து அதில் உள்ள பருப்பினை எடுக்க தடி' என்னும் கருவியைப் பழந்தமிழர் பயன்படுத்தும் காட்சி இதோ,

“உழுந்துடைக் கழுந்தின்.........” **(குறுந்தொகை**. *384)*

என்னும் பாடலடியின்வழி கோடிட்டுக் காட்டுகின்றது. இதன் வழி நிலத்தின் தன்மையை அறிந்து உழும் வேளாண்நுட்பம் புலப்படுகின்றது.

மறுதாம்புப் பயிர்

முற்காலத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலத்தைத் தரிசு நிலமாக விட்டுவிடாது மீண்டும் பயிர்செய்து விளைவிப்பர். ஒருமுறை உழுத நிலத்தில் விளையும் பயிராகிய கரும்பு, சோளம், வாழை போன்றவை வளர்ந்து வெட்டிய பிறகு அதன் அடிக்கட்டையில் மறுபயிர் வளருகின்றது. இத்தகு முறைமையினை மறுதாம்புப் பயிர்' என்று வேளாண்மையாளர் அழைப்பர். பதிற்றுப்பத்தில் கரும்பு அறுத்த கட்டையில் மீண்டும் பயிரிடும் செயலைக் காணமுடிகின்றது. இக்கூற்றை,

“கால மன்றியுங் கரும்பறுத் தொழியா

தரிகா லவித்துப் பலபூ விழவிற்” **(பதிற்றுப்பத்து**. *3: 10)*

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. இத்தகு மறுதாம்பு முறையினை ரட்டூன்' என்று நிலையியல் ஆய்வாளர் கருதுவர்.

பெரும்பாலும் கரும்பு, நெல் போன்ற பயிர்வகைகள் அறுவடை செய்த பின்னர் பூமியை உழுது மீண்டும் அதில் பயிரை நடுவதுண்டு. குறிப்பாக, மாசி, பங்குனி, சித்திரை வரை நடவுமுறை அமைகின்றது. இப்பாடலின் வாயிலாகக் கரும்பு பூவாகி காய்ந்து கனியும் இயல்புடையதாகலின் அதன் சாற்றிலுள்ள சுக்ரோஸ் அளவு குறைந்து விடுமோ என்பதை அறிவியல் கண்ணோட்டத்துடன் கணிக்கும் பண்டையோர் தொழில்வளர்ச்சி மேம்பாடு நம்மை வியக்க வைக்கின்றது. இதன்வழி விவசாயிகள் செலவினைக் குறைத்து கூடுதல், மகசூல் பெற மறுதாம்புப்பயிர்த் திட்டம் வலுசேர்க்கின்றது எனலாம். இத்திட்டத்தின்வழி மண்வளத்தைப் பாதுகாப்பதோடு மண்ணரிப்பைத் தடுக்க உதவுகின்றது.

மதகு

மழைக்காலத்தில் வரும் மிகுதியான நீரைப் பள்ளங்களில் தேக்கி பாசனம் செய்கிறோம். அக்காலத்தில் நீர்ப்பாசனமாக மதகு, புதவு, மடை போன்றவை பயன்படுத்தி உள்ளனர். இதில் மதகுகள் வழியாக வெளியேறும் தண்ணீர் கற்களால் வளைவாக அமைக்கப்பட்டிருக்கும். சுண்ணாம்புக் காரையால் தண்ணீர் வேகம் குறைக்கும் படி மதகு அமைப்பதுண்டு. மதகுகள் தானியங்கி இயந்திரத்தின் மூலம் திறந்து தண்ணீர் வெளியேற்றப்படுவதுண்டு. வெள்ளஅபாயத்தின் காரணமாக நீரை வெளியேற்ற அணைக்கட்டுகள் பயன்படுகின்றது. மதகு பற்றி அறிஞர் கருத்தாக,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

“மதகு என்பது மடை போன்றே அமைக்கப்படுவது. ஆனால் இதன் கதவைச் சிறுகச் சிறுகத் திறக்கலாம். வெளியேறும் தண்ணீர் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ முடியும். இது தற்காலத் திருகு மதகு அடைப்பான் என்பதற்கு ஒப்பாகும்.”[7]

(பழ.கோமதிநாயகம்., தமிழக பாசன வரலாறு, ப.39.)

என்ற அறிஞர்கள் கருத்து ஈண்டு நோக்கத்தக்கது. அக்காலத்தில் வையை நீர் மதகுதோறும் புனல்கரை அழிக்குமாறு சென்றதாகப் பரிபாடலில் சுட்டுகின்றது. இச்செய்தியினை,

“கரையொடு கடலிடை வரையொடு கடலிடை
நிரைநிரை நீர்தரு நுரை
நுரையுடன் மதகு கொ றிழிதரு புனல்கரை புரளிய”

(பரிபாடல்திரட்டு. 2: 65-67)

என்பதில் மதகுநீர் சேமித்து வெள்ள அபாயத்தைத் தடுக்கும் பண்டைய நீர் மேலாண்மை நம்மை நெகிழ்வடையச் செய்கின்றது. இதுவும்ஓர் சூழலியல் பாதுகாப்பு நடவடிக்கை எனலாம்.

ஆழ்துளைக்கிணறு

ஆழ்துளைக்கிணறு என்பது நிலத்தின் அடிமட்டத்திலிருந்து ஆழமாக நீரை இறைக்கும் முறைமையாகும். இக்கிணறுகளில் பெறப்படும் நீரினைத் தொட்டிகளாகவே அமைத்து உழவிற்குப் பயன்படுத்துவர். கொங்குநாட்டார் பாறைப்பாங்கான நிலத்தடியில் தோண்டத் தோண்ட நீர்ஊறும் என்பதை உணர்ந்து இவ்வாழ்குழாய்க்கிணற்று முறையினைக் கையாண்டுள்ளனர் எனலாம். இரும்பினாற் செய்த கோடாரியால் வன்நிலத்தை உடைத்துச் செம்மைப்படுத்த முடியும் என்பதை நமது முன்னோர்கள் அறிந்துள்ளனர். இத்தன்மை குறித்து பதிற்றுப்பத்தில்,

“பொன்செய் கணிச்சித் திண்பிணி யுடைத்துச்
சிரறுசில ஆறிய நீர்வியப் பத்தற்
கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த” **(பதிற்றுப்பத்து -3:2)**

என்னும் பாடலடிகள் வலியுறுத்தும். ஈண்டு ‘கயிறுகுறுமுகவை’ கொண்டு நீர் இறைத்தமையை அறியலாம். அதாவது பத்தல் ‘உட்கிணறு’ என்றும், மேலே அகலமாக அகழ்வது ‘கூவல்’ என்றும் அதனுள்ளே குறுகிய வாயுடைத்தாய் ஆழமாய்த் தோண்டப்படும் பத்தலைப் ‘பிள்ளைக்கிணறு’ என்றும் அழைக்கின்றனர்.

இம்முகவை நீரை முகக்கும் கருவி மரத்தாலானது. நீரின் சின்மை குறித்தும், நீரும் மிக்க ஆழத்திலிருப்பது பற்றியும் கூறவே ‘குறுமுகவை’ என்ற சொல்லை கொங்கு நாட்டார் பயன்படுத்தியுள்ளனர். இப்பத்தல் இயல்பாகவே மிக ஆழமாக இருப்பதால் நீண்ட கயிறு கொண்டு முகந்து நீரை இறைக்கலாம். எனவேதான் இம்முறைக்கு பழந்தமிழர் ‘கயிறுகுறு முகவை’ என்றும் பெயரிட்டனர் என்பது புலனாகிறது. இதே கருத்தினை,

“கணிச்சியிற் குழித்த கூவல் நண்ணி
ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்
யானை இனநிரை வெளவும்” **(நற்றிணை. 240)**

என்னும் பாடலடிகள் வாயிலாக ஆனிரை மற்றும் யானைகள் நீரை உண்ண வேண்டி ஆழ்துளைக் கிணறு பயன்படுத்தியமை நற்றிணையில் புலனாகிறது. இவ்வாறு நீர்ஊறும்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பகுதியைத் தேர்ந்தெடுத்து கிணற்றை வெட்டுவதும், நீரைப் பெருக்குவதுமான சிந்தனை எதிர்கால சூழலியல் பாதுகாப்பு நுட்பத்திற்குச் சான்றாக அமைகின்றது எனலாம். இன்னும் பழமொழியில் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீரை இறைத்தலும் அவை மீண்டும் மீண்டும் நீர்சுரக்கும் என்ற அறிவியல் கூற்றினை (பழமொழி. *344)* என்ற பாடல் வழி அறியலாம். இதுவும் ஓர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறையாகும்.

மரமும் நீரும்

தொன்றுதொட்டு குடிநீர் பெற நிலத்தடி நீரைத் தோண்டிக் குழாய்கள் மூலமாக உபயோகம் செய்கிறோம். நீரின் மகத்துவம் பற்றி வள்ளுவர் பகர்கையில்,

“நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு.”[2] **(குறள்** *.20)*

என்ற குறள் வழி நீரின் அவசியம் குறித்து எடுத்தியம்புகிறார். உயிர்வளம் காக்கும் உயிர்நாடியாக நீர் அமைகின்றது.

உவர்நீரைக் கூட நன்னீராக மாற்றுமளவில் நவீன அறிவியல் சாதனங்கள் உதவுகின்றன. இரும்பு, பிளாஸ்டிக், ரப்பர் உள்ளிட்ட அனைத்துக் குழாய்களும் தண்ணீர் பெற உதவுகிறது. இதனால் மண்பாண்டங்கள் உள்ளிட்ட கைத்தொழில் வளர்ச்சி நலிவடைகின்றது. தூய்மை நலன்கருதி மூங்கிலால் ஆன குழாய்கள் கொண்டு நிலத்தடி நீரைப் பழந்தமிழர் பயன்படுத்தியமை,

“வினையமை வரனீர் விழுத்தொடி தத்தக்
கமஞ்சூல் பெருநிறை தயங்க முகந்து கொண்டு….” **(அகம்**. *383)*

என்பதில் தூம்பாகச் செய்யப்பட்ட மூங்கில் குழாய்கள் வழியாகத் தண்ணீர் விழும்படி பெரிய சீரால்ஆகக் கட்டப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது. இங்ஙனம் உலோகக்குழாய் மூலம் நுண்துகள் உடலைப் பாதிக்கும் என்பதனைத் தடுக்கவே மூங்கிலைப் பயன்படுத்தும் சூழலியல் பாதுகாப்புமுறை நன்கு புலனாகிறது.

நீர்இறைக்கும் கருவி

தொன்றுதொட்டு நீர் இறைப்பதற்குரிய கருவியாகப் பத்தரும், முகவையும் உழவர் பயன்படுத்துகின்றனர். முன்பு ஆனிரைகளைப் பாதுகாக்கும் பொருட்டு நீர்ப்பத்தர் அமைத்து சேமிக்கும் வழக்கத்தைபத்தராகிய கேணி நீரைப் பக்கத்துள்ள விடாவில் இட்டுப் பிறவுண்ணாதபடி (விலங்குகள்) ஒருவில் வைத்து மூடிபோட்டுப் பாதுகாத்துள்ளனர். கிணற்றின் மூலமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை யானை போன்ற பெரிய விலங்குகள் அறிந்து கொண்ட நுட்பத்தை,

“பயநிரைக்க எடுத்த மணிநீர்ப் பத்தர்
புன்தலை மடப்பிடி கன்றோடு ஆர
வில்கடித்து ஊட்டின பெயரும்” **(நற்றிணை**. *92)*

என்ற பாடல் வாயிலாக வில்லை இழுத்தால் மூடி திறந்து கொள்ளும் அளவிற்குப் பத்தரின் பொறி அமைப்பு இருந்தமை நற்றிணைவழி அறியப்பெறுகின்றது. இங்கு யானை தனது பிடியும் கன்றும் நீருண்ணுதற் பொருட்டு வில்லையே முறித்து விடுவதாக எடுத்தாளப்பெறுகின்றது. பத்தல் ஆன நீர்த்தொட்டிகள் ஆக்கள் பருகுவதற்கும் தோண்டப்பட்டுள்ளன. இதனை,

“கல்லாக் கோவலர் கோலிற் றோண்டிய
வானீர்ப் பத்தல் யானை வெளவும்” **(ஐங்குறுநூறு**. *304)*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற பாடல் வழி நீர்ப்பத்தலைக் கோல் கொண்டு தோண்டியமை ஈண்டு புலனாகிறது. இதுவும் ஒரு கால்நடை பராமரிப்பிற்கு சான்றாகும். சூழல்நன்னெறி ஆகிய கால்நடைப் பராமரிப்பு தற்கால சூழலியல் சார் பல்லுயிரினப் பாதுகாப்பு எனக் கருதலாம். மேலும் வெப்பமுற்ற பரற்கற்கள் மிகுந்த பகுதியில் ஒரு பக்கம் குந்தாலியால் கிணறு தோண்டுவர். அவை யாழின் உறுப்பு போலச் சிறிதாகத் தோண்டப்படுவதால் இதுவும் பத்தல்' என அழைக்கின்றோம். இப்பத்தலின் நீரை யானை வௌவியதாகநற்றிணையில் நப்பாலத்தனார் *240*ஆம் பாடலில் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

உழவு நுட்பத்தில் எருஇடல் பயிருக்கு நல்லதாகும். எருவாகிய சாணத்திலுள்ள மீத்தேன் வாயு மட்க வைத்துப் போடுவதால் கரிமப்பொருட்களில் உள்ள நுண்ணுயிரிகளை அழித்து மண்ணிற்கு வளமூட்டும் என்ற அறிவியல் நுட்பத்தை சங்கப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது. நெல் அறுவடை செய்த பின்னர் பயிறு வகைகள் சுழற்சி முறையில் பயிரிட முடியும் வேளாண் நுணுக்கத்தைச் சங்க மாந்தர் அறிந்து இருப்பது தற்போதைய தொழில்நுட்பமேம்பாட்டிற்கான வளர்ச்சியாக ஏற்கலாம். விவசாயிகள் செலவினைக் குறைத்து கூடுதல் மகசூல் பெற மறுதாம்புப்பயிர்த் திட்டம் வலுசேர்க்கப்படுகின்றது நீரைக் கூட்டிக் குறைக்கவும், கதவுகொண்டு நீர் வெளியேற்றவும் வலிமை வாய்ந்த மதகு, புதவு போன்ற கருவிகள் பயிர்ப்பாசனத்திற்கு உறுதுணையாக உதவுகின்றது. இங்ஙனம் இயற்கையை விடுத்து மனிதவாழ்வு தனித்து இயங்கியதாகச் சான்றுகள் பகரப்படவில்லை.

துணைநூற்பட்டியல்

1. பழ.கோமதிநாயகம்., தமிழக பாசன வரலாறு, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, *2010.*
2. மு. வரதராசனார்., திருக்குறள் தெளிவுரை, பாரிநிலையம், சென்னை, *2014.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

20. சூல்' நாவல் புலப்படுத்தும் வேளாண்குடிமக்களின் வாழ்வியல் அறம்

முனைவர் கோ.பாலமுருகன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விவேகானந்த கல்லூரி,
திருவேடகம் மேற்கு, மதுரை - 625 234.
gbalamurugan@vivekananadacollege.ac.in
DOI 10.5281/zenodo.17209806.

Abstract:

Morality refers to the principles that define how a human being who travels in this world should live, how he should interact with others, what actions should be taken, what should be taken, and what should be given up. It is noteworthy that this moral code encompasses all levels, starting from individual morality to family life, social relations, and professional activities. In this regard, the purpose of this article is to examine and explain the morals related to the life of the agricultural community depicted in the novel 'Shool' based on the characteristics recorded by the author S. Dharman.

Keywords: Novel - Shool - S.Dharman

முன்னுரை

வாழ்வியல் அறம் என்பது இவ்வுலகினில் பயணம் மேற்கொள்ளும் மனிதன் எவ்வாறு வாழவேண்டும், மற்றவர்களுடன் எப்படிப் பழக வேண்டும், எந்தச் செயல்களைச் செய்ய வேண்டும், எவற்றையெல்லாம் கொள்ள வேண்டும், எவற்றையெல்லாம் விடுக்க வேண்டும் என்பன போன்ற வரையறை நெறிமுறைகளைக் குறிப்பதாக அமைந்துள்ளன. இவ்வரையறை நெறிமுறையானது தனி மனித ஒழுக்கம் தொடங்கி குடும்ப வாழ்க்கை, சமூக உறவுகள், தொழில் நடவடிக்கைகள் என அனைத்து நிலைகளன்களையும் உள்ளடக்கியதாக உள்ளமைக் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் 'சூல்' நாவல் புலப்படுத்தும் வேளாண்குடிமக்களின் வாழ்வியல் சார்ந்த அறங்களை ஆசிரியர் சோ.தர்மன் பதிவு செய்துள்ள தன்மைகளின் அடிப்படையில் ஆராய்ந்து மொழிவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

வேளாண் தொழிலும் அறமும்

உழவர்' என்ற சொல் வேளாண் தொழில் புரியும் மக்களைக் குறிக்கும் சிறப்புச் சொல்லாகும். உழவுத்தொழிலைத் தவிர்த்துப் பிற தொழில்களைச் செய்பவர்களுக்கு எல்லாம் உணவுப் பொருளைத் தந்து தாங்குவதால் உழுதொழில் செய்வாரே உலகத்தார்க்கு அச்சாணி என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இதனை,

> **"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**
> **எழுவாரை எல்லாம் பொறுத்து"** (குறள்: *1032)*

என்ற குறள்வழி வளப்படுத்திக் காட்டியுள்ளார். தலைமுறை தலைமுறையாக வேளாண் தொழில் செய்யது வாழக்கூடியவர்கள், தான் மட்டுமல்லாது தன்னைச்சார்ந்து, தன்னுடைய நிலத்தில் வேலை செய்பவர்களும் நலமுடன் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாய் இருப்பதனை குப்பாண்டிக் குடும்பனுடைய உரையாடல்களின் வழி அறிய இயலுகிறது. "குப்பாண்டிக் குடும்பனுக்குக் காணியாக இருக்க சக்கிலியக் குடியில் பெரிய போட்டியே நடக்கும். களத்தில் பொழி எடுக்கும் போது மற்ற சம்சாரிகள் மூட்டைகளில் அள்ளிக் கட்டிய பிறகு காணிக்காரனுக்குத் தானியம் அளப்பார்கள். ஆனால், குப்பாண்டிக்குடும்பன் காணிக்காரனைக் கூப்பிட்டு ஒனக்கு வேண்டியதை அள்ளிக்கொள்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்று சொல்லிவிட்டு, காணிக்காரன் அள்ளுவதை சந்தோஷமாக சிரித்தபடியே பார்த்துக் கொண்டு நிற்பான்.

'என்னடா அள்ளிட்டியா, போதுமா இன்னியும் வேணமாடா? '

'சாமி, போதும் சாமி. எனக்கும் மனசாட்சி இருக்கு சாமி, நீங்க அள்ளிக்கோனு சொன்னாப்ள, ரொம்ப அள்ளுனா அது ஞாயமில்ல சாமி. ஒழப்புக்குத் தக்கன கூலி, நாஞ் சொல்றதுசரியா சாமி?'

வேற யார்டா வந்திருக்காங்கா, அவங்களையும் வரச்சொல்லு'

களத்தோரமாய்க் கூட்டமாய் நிற்கும் வண்ணார்கள், நாவிதர்கள், ஒட்டுக்காணிகாரரர்கள் எல்லோரும் ஓடிவருவார்கள். குப்பாண்டிக்குடும்பன் தானியத்தைத் தொடவே மாட்டான். கூடியிருக்கும் அத்தனை பேருக்கும் காணிக்காரனே பிச்சை போடுவான்.

'அடே, இன்னுங் கொஞ்சம் போடுறா, நம்மள நம்பி இருக்கிறவங்க. நம்ம தானடா அவங்களையும் தாமரிக்கணும்'." (சோ.தர்மன், சூல் (நாவல்)ப.135-136)

"வாய் நிறைந்த வெற்றிலையை சாவகாசமாக மென்று கொண்டே குப்பாண்டி பேசுவான்.

இங்கே கேளுடா, வெளைஞ்சாத்தானடா குடுக்கப் போறம். குடுக்கிறதுனால ஒன்னும் கொறஞ்சு போகாதுடா. அள்ள அள்ளக் கொறையாது பள்ளனோட களம், பாங்களத்த பாக்காது பள்ளனோட கண்ணு. அப்பிடினு சொலவடை. இன்னிக்கி நேத்தாடா பரம்பரை பரம்பரையா வஞ்சகமில்லாம வெளையுது, குடுக்கோம்'" (ப.137) என்பன போன்ற சொல்லாடல்கள் அவர்களின் மனநிலையினையும் வேளாண் தொழிலில் அவர்கள் வைத்திருக்கக் கூடிய நம்பிக்கையினையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

ஒருமைப்பாட்டு உணர்வு

வேளாண் குடிமக்கள் சாதியத்தைத் தாண்டி அனைவரும் ஒருமைப்பாட்டு உணர்வோடு வாழவேண்டும். தம்மைப்போன்று பிற உயிரினங்களையும் மதிக்க வேண்டும் என்ற மனப்பான்மை கொணடவர்களாய் வாழ்ந்திருக்கிறார்கள்.

"காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்,
நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை..."

(தெய்வப் பாடல்கள், ஜய பேரிகை :2)

என்ற பாரதியின் சிந்தைகளுக்குக் காட்சி வடிவம் கொடுப்பவர்களாய் வாழ்ந்துள்ளார்கள். தான் மட்டும் உண்டு உயிர் வாழ்ந்தால் போதாது, தம்மைப் போன்று பிற பறவையினங்களும் பசிப்பிணி நீங்கி உயிர் வாழ வேண்டும் என்ற அவா கொண்டவர்களாய்த் திகழ்ந்துள்ளார்கள்.

"உருளைக்குடியை ஒட்டி கொஞ்ச தூரத்திலேயே மொட்டைப் பாறை. எந்நேரமும் அவித்த நெல்லும், குருதவாலியும் தானியங்களும் காய்ந்து கொண்டிருக்கும். பறவைகளுக்குத் தன் கைவிரித்து உணவளிக்கும் மொட்டப்பாறை, காவலுக்கு யாருமே இருக்க மாட்டார்கள். எவ்வளவு பறவைகள் வந்து காயும் தானியங்களைத் தின்றாலும், யாரும் பறவைகளை விரட்டக் கூடாது. தலைமுறை தலைமுறையாய்த் தொடரும் இப்பழக்கம், அவ்வூரில் பயமின்றிப் பறவைகள் வாசம் செய்ய வழிவகுத்துவிட்டது. சில சமயங்களில் யாருமே தானியங்கள் காயப்போடவில்லை யென்றால் பறவைக் கூட்டம், சுற்றியுள்ள மரங்களில் பசியோடு உட்கார்ந்து காத்துக் கொண்டிருக்கும்...

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மினுத்தாக்குடும்பனின் மனசு இலேசாகியது. கொழுத்தும் கோடை வெய்யில் அவனுக்கு குளுமையாய் மாறியது. சிட்டுக்குருவியைப் போல் வீட்டுக்குப் பறந்தான். குலுக்கைக்குள் இறங்கி குத்திக்காய்ச்சிகிற பெட்டி நிறைய்ய தானியத்தை அள்ளினான். அவன் பொண்டாட்டி எவ்வளவோ கேட்டுப் பார்த்தாள். அவன் வாய் திறக்கவே இல்லை.

'எதுக்கு இப்பிடி வந்ததும் வராததுமா குலுக்கைக்குள்ள எறங்கி தவசத்த அள்ளுற'?

'.....................................'

'ஓன்னயத்தான கேக்கன், காது அவிஞ்சா போச்சு. வாயி தொறந்து பதில் சொல்லு.'

'...................................'

'கிறுக்குப் புடிச்சிருச்சா, இல்ல பேய் புடிச்சிருச்சா'?

'.................................'

மினுத்தாக்குடும்பன் யார் பேச்சுக்கும் பதில் பேசவில்லை. அவன் பொண்டாட்டி மாடத்தி போட்ட கூப்பாட்டில் கூட்டமும் கூடிவிட்டது. அவன் தானியப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வேக வேகமாக மொட்டப் பாறையை நோக்கி நடந்தான். மாடத்தியும் இன்னும் சில இளவட்டங்களும் என்னதான் செய்கிறான். தானியத்தை எங்கேதான் கொண்டு போகிறான் என்று பார்ப்பதற்காகப் பின்னாலயே வந்தார்கள். மொட்டப் பாறை வந்ததும் இரு கைகளாலும் தானியத்தை அள்ளி வீசினான். பாறை முழுக்க சிதறி விழுந்தன தானியங்கள். பார்த்துக்கொண்டிருந்த பறவைக் கூட்டம் பசியொடு பறந்து வந்து பாறையை நிறைத்து கூட்டமாய் உட்கார்ந்து தானியங்களைக் கொத்திப் பிறக்கின. விலகி நின்று வேடிக்கை பார்த்தான் மினுத்தாக்குடும்பன்". (சோ.தர்மன், சூல் (நாவல்), ப.153-154) என்பன போன்ற பதிவுகள் வேளாண்குடி மக்கள் பறவைகளின் மீது கொண்டிருந்த இரக்க உணர்வையும், தம்மைப் போன்று அவ்வுயிரினங்களை மதிக்கின்ற ஒருமைப்பாட்டு உயர்வையும்வெளிப்படுத்தி நிற்கின்றன.

நீரும் அறமும்

ஓர் ஊரின் வளம் அல்லது நாட்டின் வளம் என்பது அங்குள்ள நீர்நிலைகளின் எண்ணிக்கையினைப் பொறுத்தே அமையும் எனலாம். அப்படிப்பட்ட நீர்நிலைகளில் சேமித்த நீரை சரியான முறையில் பங்கீடு செய்து பயன்படுத்துதல் என்பது மிகவும் இன்றியமையாத செயலாகும். "உணவெனப்படுவது நிலத்தொடு நீரே" (புறம்.18) என்ற வரிகள் நிலமும் நீரும் இணைந்தால் தான் உணவினை நாம் பெற முடியும் என்பதை புலப்படுத்தி நிற்கின்றது. பல சமூக இனத்தவர்கள் வாழும் ஊரில் வேளாண் தொழிலுக்குத் தேவையான நீரினைப் பாரபட்சம் பாராமல் அனைவருக்கும் பங்கீடு செய்து கொடுப்பது நீர்ப்பாய்ச்சி அல்லது மடைக்குடும்பனின் செயலாகும். அப்படிப்பட்ட பணியினை சீரும் சிறப்புமாக மடைக்குடும்பன் செய்து வந்துள்ள தன்மையினை சூல் நாவல் காட்சிப்படுத்தியுள்ளது. "டேய் மடைக்குடும்பா, ஒரு சொட்டுத் தண்ணீரையும் சரி சமமாய் பங்கு வைக்கும் உன் மடைக்குடும்ப வம்சம் எனக்குத் தெரியும். தண்ணீரைப் பங்கு வைப்பதில் ஓரவஞ்சன செய்பவனின் வம்சம் தழைக்காது. தண்ணீரை வைத்துக் கொண்டு இல்லை யென்று வம்பு பண்ணுகிறவன் வம்சத்தை தண்ணீரே அழிக்கும். உன் வம்சத்தின் நீதி, நேர்மை, கண்மாயைக் காக்கும் கடமை, கர்வமற்ற பணிவு எல்லாவற்றையும் நானறிவேன். என்னால் தனியாக காவல் காக்க இயலவில்லை. மடைக்குடும்பா நான் சொல்வதைக் கவனமாகக் கேள். என்னருகில் உன்னை வைத்துக்காள்ளப் பிரியப்படுகிறேன். மறுத்துவிடாதே..." (சோ.தர்மன், சூல் (நாவல்), ப.58) என்பன போன்ற பதிவுகள் மடைக்குடும்பனின் நீதிநெறி தவறாத நேர்மையான கடமை உணர்வினையும், நீரினைப்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பகிர்ந்தளிக்கும் அறத்தினையும் புலப்படுத்தும் பாங்கில் பதிவு செய்யப்பெற்றுள்ளமை குறிக்கத்தக்கது.

பசிப்பிணி போக்கும் அறம்

பசி என்று வருபவர்களுக்கு உணவு கொடுத்து அவர்களின் பசிப்பிணியினை நீக்குபவர்களை புறநானூறு(*18*) உண்டிகொடுத்தோரை உயிர் கொடுத்ததாகக் கருதுவதையும், ஆபுத்திரனும், மணிமேகலையும் பசிப்பிணி நீக்கும் அறத்தில் ஈடுபட்டதை மணிமேகலைக் காப்பியமும் நமக்கு வலியுறுத்திச் செல்கின்றன. வள்ளுவப் பெருந்தகை இத்தகைய உணவினை உற்பத்தி செய்து தரக்கூடிய வேளாண் மக்களின் உயர்வினை,

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் பார்க்கும் நிலை" **(குறள் :** *1036*)

என்று, உழவர்கள் தனது தொழிலை விட்டொழித்தால், யாவரும் உணவு உண்பதை கைவிட நேரிடும் என்பதையும், துறவறம் மேற்கொள்ளும் துறவிகள் அத்துறவற அறத்தில் நிலைத்து நிற்க முடியாது என்பதையும் தெளிவுறுத்திக்காட்டுகின்றார். அந்த வகையில் இவ்வூரில் உள்ள இளைஞர்கள், தங்கள் ஊரில் வந்து தங்கும் துறவிகள், பண்டாரங்கள், வயதானோர் என எவர் வரினும் அவர்களுக்குத் தேவையான உணவினைத் தாங்களே ஊருக்குள் சென்று வாங்கி வந்து கொடுத்து அவர்களின் பசி தீர்ந்திட உதவுகின்றனர்.

'பெரும்பாலும் ஊருக்கு வரும் பண்டாரங்கள், பரதேசிகள் தங்கினால் ஊர் இளவட்டங்களே தெருவில் போய் வீடுவீடாக சோறு வாங்கி வந்து கொடுப்பது வழக்கம். எக்காரணம் கொண்டும் சோற்றுக்காகத் தெருவில் வந்து கையேந்தவிடக் கூடாது என்பது பள்ளக்குடித் தெருவில் பரம்பரையாய் வரும் பழக்கம். வித்தைக்காரர்கள் வரலாம். தானியப்பிச்சை மட்டும் வாங்க வேண்டும். சோற்றுப்பிச்சை கிடையாது. உள்ளூர் இளவட்டங்கள் வாங்கிக் கொடுத்தால் ஒழிய யாருக்கும் சோற்றுப் பிச்சை கிடையாது. புளியமரத்தடியில் வேற்றாள் யாரைக் கண்டாலும் பள்ளக்குடி இளவட்டங்கள் கேட்கும் முதல் கேள்வி சாப்பிட்டாச்சா? என்பதுதான்.

'கல்லுலயும் சோறு கத்தாழையிலயும் சோறு, தொண்டைக்கு அங்கிட்டுப் போனா நரகலு. நம்ம தெருவுக்கு வேத்தாள் யாரு வந்தாலும், அது தெரிஞ்ச ஆளோ இல்ல தெரியாத ஆளோ, பசின்னு போகக் கூடாது. பெரியவர்களின் இந்த வாக்கு இன்னும் அழிந்து போய்விடவில்லை'" (சோ.தர்மன், சூல் (நாவல்), ப.*138-139*) என்பன போன்ற உரையாடல் பதிவுகள் பசிப்பிணி நீக்கும் அறம் படைத்தவர்களாக வேளாண்குடி மக்கள் வாழ்ந்துள்ளமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.

மடம் அமைத்து அறப்பணி செய்தல்

வேற்று ஊரில் இருந்து வரும் பிச்சைக்காரர்கள், நாடோடிகள், வயதானவர்கள் போன்ற இன்னபிற பாதசாரிகள் என யாராக இருந்தாலும், இந்த ஊரில் தங்குவதற்கு மடம் அமைத்துக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் அவர்களின் வயிற்றுப் பசியினைத் தீர்த்து வைக்கும் பொறுப்பினையும் இந்த ஊர் இளவட்டங்கள் ஏற்றுக்கொண்டனர். அதே போன்று தங்குமிடத்தை அசுத்தம் செய்பவர்களுக்குத் தண்டனையும் அபதாரமும் விதிக்கப்பட்டுள்ளன. இப்படி வேளாண் சமூக மக்களின் வாழ்க்கை நடைமுறைகள் அனைத்தும் ஒழுக்க நெறிமுறைகளுக்கு உட்பட்டதாகவே இருந்துள்ளன. இதனை, 'மடத்திற்கு முன்னாலும், மடத்தைச் சுற்றிலும் இருந்த காலி இடத்தில் காட்டுப்பூச்சி வேப்ப மரக்கன்றுகளையும், அரச மரக்கன்றுகளையும் நட்டு முள் வேலி கட்டினான். ஊர்க்கிணற்றில் தண்ணீர் இறைக்கும் பெண்கள் குடம்குடுமாய்த் தண்ணீர் ஊற்றினார்கள். இது போக வடகோடியில் ஏழெட்டு செவ்வரளிச் செடிகளைப் பதியம் போட்டு வைத்தான்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பக்கத்து ஊர்க்காரார்கள் பலபேர் வந்து புதியதாக கட்டிய மடத்தைப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். ஊருக்கு வரும் நாடோடிகள், அனாதைகள், பிச்சைக்காரர்கள், பைத்தியங்கள் எல்லாருக்கும் மடத்தில் தங்க இடம் கொடுத்ததோடு, அவர்களுக்குத் தேவையான சோற்றை ஊர் இளவட்டங்களே, தெருவில் வீடுவீடாகப் போய் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார்கள். தெருவுக்குள் வந்து வேற்றாள் யாரும் பிச்சை எடுத்தால் அது ஊருக்கே கேவலம் என்று பெரியவர்கள் சொன்ன சொல்லை இளைஞர்கள் வேத வாக்காக எடுத்துக்கொண்டார்கள்" (சோ.தர்மன், சூல் (நாவல்), ப.*266)* என்ற பதிவுகள் புலப்படுத்தி நிற்கின்றன.

நிறைவுரை

இயற்கையோடு இயைந்த வாழ்வினை வாழக்கூடிய வேளாண்குடி மக்கள், தங்கள் வாழ்க்கை நிகழ்வுகளை அறநெறிச் செயல்களோடு நகர்த்திச் செல்வதை சூல் நாவல் காட்சிப்படுத்திக் காட்டியுள்ளது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல வேளாண்குடி மக்களின் வாழ்வியலில் அறம் என்பது 'சூல்' நாவல் முழுவதும் பரவிக்கிடப்பினும் சில நிகழ்வுகளை மட்டுமே மேற்கண்ட கருத்துக்களின் வாயிலாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. எந்தச் சூழல் வந்தாலும், தன்னுடைய வாழ்க்கை நெறியிலிருந்து பிறழாது, தன்னுடைய கடமைகளை ஆற்றக் கூடிய வலிமை படைத்தவர்கள் வேளாண்குடி மக்கள் என்பதற்கு இக்கட்டுரையின் கருத்துக்கள் வலுவூட்டுவதாக உள்ளன.

துணைமை நின்றவை

1. திருக்குறள், *(*மு.வ*(*உ.ஆ*),* முல்லை நிலையம், சென்னை.
2. சோ.தர்மன், சூல், நற்றிணைப் பதிப்பகம், சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

21. ஆனைமலை நாவல் காட்டும் பழங்குடிச் சமூகமும் அதிகார மீறல்களும் - மானிடவியல் நோக்கு

முனைவர் செ.ஞானேஸ்வரன்
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம்
பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்
DOI 10.5281/zenodo.17212160.

Abstract:

Studies on tribals in the Tamil social context are being carried out with great enthusiasm. In recent times, there has been a proliferation of literary records about them. Due to this, studies and criticisms are being conducted with great enthusiasm. Today's writers create very realistic works with the field research data they have collected. In this way, the novel Anaimalai by writer Prashanthve talks about a century-old tribal people living in the geographical environment between Pollachi and Valparai. This article attempts to examine this tribal community and the abuses of power that have occurred against them.

Key Words: Novel - Tamil society - Environment - Tribal

தொடக்கமாக

தமிழ்ச்சமூகச் சூழலில் பழங்குடிகள் குறித்த ஆய்வுகள் பண்டு தொட்டு நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அண்மைக் காலத்தில் இவர்கள் குறித்தான இலக்கியப் பதிவுகள் மிகுதியாக வந்து கொண்டிருக்கின்றன. இதனால் ஆய்வுகளும் விமர்சனங்களும் மிக காத்திரமாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன.இன்றைய எழுத்தாளர்கள் தாங்கள் சேகரித்த களஆய்வு தரவுகளைக் கொண்டு மிக எதார்த்தமான உண்மைத்துவம் நிறைந்த படைப்புகளை உருவாக்குகின்றனர்.அந்த வகையில் எழுத்தாளர் பிரசாந்த்வேயின் ஆனைமலை நாவல் பொள்ளாச்சி, வால்பாறை முதலிய பகுதிகளுக்கு இடைப்பட்ட புவியியல் சூழலில் வாழும் ஒரு நூற்றாண்டு கால பழங்குடி மக்கள் குறித்து பேசுகின்றது. இப்பழங்குடிச் சமூகம் குறித்தும் அவர்களுக்கு நிகழ்ந்த அதிகார மீறல்கள் குறித்தும் இக்கட்டுரை ஆராயமுயல்கிறது.

மானிடவியல் நோக்கு

மானிடவியல் என்பது மனிதனைப் படிக்கும் துறையாகும். மனிதனைச் சமூகம் மற்றும் பண்பாட்டு ரீதியாக இத்துறை அணுகுகிறது. அவனது வாழ்க்கையை உற்று நோக்கி அவர்களுக்கான ஒவ்வொரு நகர்வையும் கவனப்படுத்துகின்றன. இவ் ஆய்வு முறையியல் என்பது களஆய்வு மூலம் மனித சமூகத்தையும் பண்பாட்டையும் ஆராய்வதாகும். இக் களஆய்வு முறையை இன்றைய நாட்டுப்புறவியல், சமூகவியல், தொல்லியல் என இன்னபிற துறைகளும் நிகழ்த்தி வருகின்றன.வெள்ளையர்கள்(பிரிட்டிஷ்காரர்கள்) இவ் ஆய்வு முறையிலே இந்திய சமூகம் மற்றும் பண்பாட்டை அறிந்ததோடு இங்குள்ள கனிம வளங்களையும் அறிந்து சுரண்டிவிட்டனர். இதனை ஆய்வுக்கு உட்படுத்தும் போது மானிடவியல் ஆய்வாளர் பக்தவச்சலபாரதி 'புவியியல் காலனியம் போய் கலாச்சார காலனியம், பொருளியல் காலனியம், அறிவு காலனியம்(இன்டெலெக்சுவல் கலொனியலிசம்) நம்மை ஆட்டிப் படைக்கின்றன. இந்த நவ காலனியம் பாரதூரமான விளைவுகளை நிகழ்த்தி வருகிறது." என்பர். (பக்தவத்சல பாரதி, ப. *1)* இந்த வகையில் மானிடவியல் ஆய்வு முறையை தமிழ்ச் சூழலில் தனது பல்வேறுபட்ட நூல்கள் வாயிலாக பரவலாக்கியவர் பக்தவச்சலபாரதி ஆவர். எழுத்தாளர் பிரசாந்த்வேயின் ஆனைமலை நாவல் இவ்வாய்வு முறைக்கு ஏற்றதொரு படைப்பாகும்.ஏனெனில் இந்நாவல்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கற்பனையால் விளைந்தது அன்று.களஆய்வு வழி தரவுகள் சேகரிக்கப்பட்டு உருவாகி இருக்க வேண்டும். இந்நாவலில் மானிடவியலுக்கானக் கூறுகள் சமூகம் மற்றும் பண்பாட்டு ரீதியாக பரவிக் கிடக்கின்றன.

பழங்குடிச் சமூகம்

தமிழ்ச் சமூகத்தில் சங்ககால வாழ்வியலின் அறுபடாதத் தொடர்ச்சியை உடையவர்கள் இன்றைய பழங்குடியினர் .இச்சமூகம் இந்தியா முழுவதும் பரவலாக வாழ்ந்து வருகின்றன.”சிறுசிறு இனக்குழுக்களாக ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியில் தமக்கெனத் தனித்தனி மொழியைக் கொண்டவர்களாக, பொதுவான ஒரு பண்பாட்டைக் கொண்டவர்களாக வாழ்பவர்கள் பழங்குடி என்று அழைக்கப்படுகிறார்கள்.” (அ.மரியசூசை ப.*19)*குறிப்பாக தமிழகப் பழங்குடிகளின் எண்ணிக்கையை *36* என பக்தவத்சலபாரதி தனது நூலில் பதிவு செய்துள்ளார். மொழியாலும் தனித்துவமான பழக்கவழக்க பண்பாட்டாலும் மரபு சார் அறிவாலும் பழங்குடிகளை அடையாளம் காணமுடிகிறது. இந்த வகையில் ஆனைமலை நாவலில் மலசர், காடர், புலையர், இடையர் ஆகிய பழங்குடிகள் குறித்த பதிவுகள் இந்நாவலில் இடம்பெற்றுள்ளன பெரும்பாலும் மலசர் மற்றும் காடர் குறித்த பதிவுகள் அதிகமாக இந்நாவலில் காணப்படுகின்றன.இவர்கள் மலையாள மொழியைப் பேசுகின்றனர். இம்மொழி பண்டைய காலத்தில் இருந்த தமிழ்ச் சாயலின் கூடிய மலையாளமாக இனம் காணமுடிகிறது. “ஆனைமலையில் வாழும் மக்கள் காடர் எனப்படுவார்கள் ஆண்களும் பெண்களும் பற்களின் முனைகளை அராவிக் கூராக்குவார். பெண்கள் கூந்தலில் மூங்கிற்சீப்பு அணிவர். இவர்கள் பேசும் மொழியில் தமிழ் மலையாளச் சிதைவுகள் காணப்படுகின்றன. இவர்கள் ஆளை ஆளி என்பர். இராக் காலங்களில் இவர்கள் தமது குடிசைகளின் முன் விளக்கெரிப்பர்” (ந.சி.கந்தையா பிள்ளை, ப.*32)* இந்நாவல் காடர்கள் குறித்து பரவலாக பதிவு செய்துள்ளது.

பழங்குடிகளைச் சமவெளி மனிதர்களும் பிறரும் அவரின் தேவைகளுக்கு பயன்படுத்தும்போது இப் பழங்குடி மக்கள் அவர்களுக்கான மரபுசார் அறிவையும் பழக்க வழக்கத்தையும் இழக்கின்றனர் என்பதை காடர்கள் வழி இந்நாவல் உணர்த்த முற்படுகிறது. “முருகனும் பரமனும் காலங்காலமாக ஆனைமலை காடுகளையே நம்பி வாழும் காடர்கள். பிரிட்டிஷ் காலத்தில் தேக்கு காடுகளை அழிக்கவும் உருவாக்கவும் கால்நடைகள் போல அழைத்துச் செல்லப்பட்டதால் தங்களது சொந்தக் கிராமம் எது என்பதையே அவர்கள் மறந்திருந்தனர்.”(பிரசாந்த் வே , ப. *108)*இதுதான் இன்றைய பழங்குடிகள் நிலையாக உள்ளது.

இந்நாவலில் மற்றும் ஒரு பழங்குடியாக மலசல்கள் குறித்து பதிவுகள் அதிகமாக காணப்படுகிறது. ‘மலசர் கோயம்புத்தூர், கொச்சி முதலிய இடங்களில் காணப்படுவர். காணியாளருக்கு அடிமைகள் போல வேலைகள் புரிவர் தமிழும் மலையாளமும் கலந்த மொழி பேசுவர். இவர்களின் குடிசைகள் பதி எனப்படும். காளி, மணக்காடாத்தா, மாரியம்மா முதலியன இவர்களின் தெய்வங்களாகும். இவர்களின் வீதிகள் சாலைகள் எனப்படும்.” (ந.சி.கந்தையாபிள்ளை, ப.*94)* இந்நாவலில் மலசர்கள் வாழும் பகுதி வேங்கைப்பதி என்று அழைக்கப்படுகிறது. அவர்கள் வாழும் வீடுகள் சாளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது செவ்வக வடிவில் மூங்கில்களை கொண்டு கட்டப்பட்டு மேற்கூரை புற்களால் வேயப்பட்டுள்ளது. இவர்கள் வன தேவதையை வணங்குகின்றனர். இவர்கள் தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், தோட்ட வேலைக்கு செல்லுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றனர். இவர்கள் சங்ககாலச் சமூகத்தினர் செய்த காட்டெரிப்பு வேளாண்மையையும் செய்துள்ளனர். இதனால் காட்டிற்குள்ளேயே இடம்பெயர்ந்து வாழ்ந்துள்ளனர். இதற்கு எந்தவித கட்டுப்பாடும் அன்று இல்லை.”வலசை போகும் காட்டு யானைகளைப் போல ஆனைமலை காடு எங்கும் ஓரிடத்தில் நிற்காமல் உலாவிக் கொண்டிருப்பது அவர்களின்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வழக்கம்.பருவ காலத்திற்கு ஏற்ப உணவு இருக்கும் இடத்தை உறைவிடமாக்கிக் கொள்வார்கள். அப்படி இந்த மலையில் ஆறு மாதம் அந்த மலையில் ஒரு வருடம் என பதியினர் இடம் பெயர்ந்து சென்று கொண்டே இருப்பார்கள்."(பிரசாந்த் வே, ப.49) இவர்களை வழிநடத்த மூப்பன் ஒருவர் இருப்பார். இவரை அவர்களின் குடியிலிருந்தே தேர்ந்தெடுப்பர்.இவரே அக்குடி மக்களை வழி நடத்துவார்.இவ்விரு பழங்குடிகள் குறித்து இந் நாவல் விரிவாக பேசுகிறது.

பழங்குடிகளின் மரபுசார் அறிவு

பழங்குடிகள் காட்டையும் விலங்கையும் நன்கு அறிந்தவர்கள். இவர்களின் உதவி கொண்டே வனத்துறை அதிகாரிகள் செயல்படுகின்றனர். இவர்களின் உதவி இல்லாமல் அவர்களால் செயல்படுவது இயலாத ஒன்றாகும். வனஅதிகாரிகள் காட்டையும் விலங்கையும் படித்தவர்கள். ஆனால் பழங்குடிகள் இவற்றுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.அவற்றின் ஒவ்வொரு அசைவையும் நன்கு அறிந்தவர்கள். ஒரு முறை வன அதிகாரி இளனை யானை தாக்க முற்பட்டபோது பழங்குடியில் ஒருவர் "யானை மிரட்டி இலைகளை இரண்டு கைகளிலும் தேய்த்து மக்னவை நோக்கி தூக்கி போட்டான். மக்னா ஆக்ரோசம் அடங்கி அமைதியாக நின்றது. போ… அப்பாத்தி போ… என உரக்க கத்திய படி காட்டான் மக்னாவை விரட்டினான்.அவனையே பார்த்தவாறு இடது பக்கமாக சற்று தூரம் சென்ற மக்னா பிளிறியபடி மீண்டும் முன்னால் வந்தது. சற்று பின்னால் வந்த அவன் ஒரு செடியைப் பிடுங்கி முன் நகர்ந்தவாறு நிலத்தில் தட்டியபடி போ…போ… என கத்தினான் மக்னா திரும்பி வனத்துக்குள் சென்றது"(பிரசாந்த் வே, பக். 23-24)மக்னா என்பது தந்தங்கள் இல்லாத ஆண் யானை ஆகும். எந்த மிருகத்தை எப்படி அணுக வேண்டும் என்று அறிந்தவர்கள் பழங்குடிகள்.

காகம் கூடு கட்டும் முறையை வைத்து பருவ மழையை இவர்கள் கணக்கிடுகின்றனர். காகம் மரத்தின் உட்புறத்தில் கூடு கட்டி இருந்தால் நல்ல பருவமழை பெய்யும் என்கிறார் வேங்கையன். ஆனால் இப்பொழுது காகம் மரத்தின் நுனியில் கட்டி உள்ளது இது வறட்சிக்கு அறிகுறியாக உள்ளது என்று கூறுவர். மனிதனும் விலங்கும் சேர்ந்து ஒரு இடத்தில் இருக்க முடியாது என்பது வனத்துறையின் வாதமாக இருந்தது. ஆனால் பழங்குடியினாலே விலங்குகள் வாழ்கிறது. இவர்கள் விலங்குகளை நன்கு புரிந்தவர்கள் என்பதற்கு "சார் மூங்கில்க நாப்பது வருசத்துக்கு ஒருக்கா பூக்கும். அரிசிய கொடுத்திட்டு காய்ச்சு போயிடும். இத லோக்கல் டிரைபல்ஸ் கணிச்சு முன்கூட்டியே வெட்டியிருந்தா மழைக்குத் தழைச்சு வர மூங்கில் குருத்துக ஆனெகளுக்குத் தீவனமாயிருக்கும். மூங்கில் வெட்ட தடை போட்டதால காட்டுல மூங்கில் எல்லாம் செத்து போயிருச்சு. அது கிடைக்காததால ஆனெக ஊருக்குள்ள வரது அதிகமாயிருச்சு." (பிரசாந்த்வே, ப.105) என்ற செய்தி சான்றாக அமைந்துள்ளது. இது போன்ற மரபுசார் அறிவு காட்டையும் விலங்கையும் உற்று நோக்கி புரிந்தவர்களால் மட்டுமே பெற முடியும். இது போன்ற செயல்களால் தான் உணவுக்கு தட்டுப்பாடான விலங்குகள் மனித குடியிருப்பை நோக்கி வருகின்றன.

இன்றையச் சூழலில் தேயிலைத் தோட்டத்தை விரிவு செய்வதற்காக விலங்குகளுக்கான வனப்பகுதியை படிப்படியாக சுருக்குகின்றனர். இதுபோல இடம்பெயர்வு செயல் மூலம் பழங்குடிகளையும் படிப்படியாக மலையிலிருந்து செட்டில்மெண்ட் பகுதிகளுக்கு மாற்றுகின்றனர். "வனவிலங்கு சரணாலயம் அமைத்தல், அணை கட்டுதல், மின்சார உற்பத்தி ஆலைகளுக்கென காட்டை அழித்து ஓரின மரப்பயிர் வளர்த்தல், கனிமம் வெட்டல் என வனத்தை ஆக்கிரமித்து, அழிக்கிறபோது வனத்தின் வாழ்விடத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பழங்குடிகளுக்கு வழங்கப்பட்ட மறுவாழ்வு என்ன? நகரத்தை ஒட்டிய

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பொட்டல் காட்டில் குடியமர்த்தப்பட்டு வாழ்விழந்து நிற்கிறார்கள். இசைந்து வராத இடத்திற்கு இடப்பெயர்ச்சி செய்வது மூலம் பழங்குடிகளின் அறிவு முறைமை(*Knowledge system*)பெரும் பாதிப்படைகிறது. இது பேரிழப்பாகும். (அ. மரிய சூசை, ப. 24)இதனால் அவர்களுக்கான மரபுசார் அறிவும் அவர்களின் மொழியும் அடுத்து வரும் சந்ததியினருக்கு கிடைப்பது அரிதாகிவிட்டது. பல கல்வி நிலையங்களில் அவர்களின் தாய் மொழி அல்லாத பிற மொழியில் கல்வி கற்கின்றனர். இதனால் அவர்களுக்கான மொழி சிதைவிற்கு உள்ளாக்குகிறது. ஏனெனில் பேசுவது ஒரு மொழி படிப்பது இன்னொரு மொழி என்ற சூழலில் அவர்களது தாய்மொழி குடி அளவிலே நின்று விடுகிறது. பொதுவெளியில் அதன் பயன்பாடு குறையும்போது மொழி அழிவுக்கு உள்ளாகிறது.

பழங்குடியினரின் தொழில்கள்

பழங்குடி மக்கள் பெரும்பாலும் காடுபடு பொருள்களை சேகரிப்பர்.தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், சீமார் சேகரித்தல் ஆகிய தொழில் முறையால் தங்களுக்கு வருமானத்தை ஈட்டுகின்றனர். இதில் ஒரு விதமான மரபு பின்பற்றப்படுகிறது. தேன், கிழங்கு, சீமார் சேகரிக்கும் போது எதையும் முழுமையாக எடுத்து விடாமல் ஒரு பகுதியை அடுத்து வரும் சந்ததியினருக்கு விட்டு வைக்கின்றனர். இம்முறையை இவர்களிடமிருந்து இன்றைய சமவெளி சமூகத்தினர் கற்றுக்கொள்ள வேண்டியதாக உள்ளது.ஏனென்றால் எதையும் முழுமையாக சுரண்டுகின்ற போக்கு இன்று நிறைந்து காணப்படுகின்றது. இத்தொழில்கள் வழியாக இவர்களுக்கு மிக குறைந்த வருமானமே ஈட்டுகின்றனர். ஆனால் இத்தொழிலில் ஈடுபடும் போது அதிகமானசிரமங்களைச்சந்திக்கின்றனர் என்பதை இந்நாவல் பதிவு செய்துள்ளது.

தொழிலில் ரீதியாக காடுகளுக்குள் பயணிக்கும் போது விலங்குகள் இவர்களை தாக்க முற்படும், அவற்றிடம் இருந்து தங்களை காத்துக் கொள்ள அறிந்தவர்கள். அதே நேரத்தில் ஒருபோதும் அவ்விலக்குகளைத் துன்புறுத்தமாட்டார்கள். அதன் இயல்புகளை அறிந்தவர்கள். இந்த பூமியானது அனைத்து உயிரினங்களுக்குமானது என்ற சிந்தனையை போற்றுகின்றவர்கள் பழங்குடிகள். ஆனால் வனத்துறையினர் இவர்களால் விலங்குகளுக்கு தொந்தரவு என்று கூறி இவர்களை அவ்விடத்தில் இருந்து இடமாற்றம் செய்வதையே குறியாக உள்ளனர்.

அதிகார மீறல்

சமவெளிச் சமூகத்தினர் பழங்குடி மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் போல அவர்களிடம் கல்வி, பொருளாதார வளர்ச்சிக்காகவே மலையிலிருந்து நீங்கள் இடம்பெயர்வு செய்யப்படுகிறீர்கள். இதற்கு உடன் படுகிறவர்களுக்கு வளமான வாழ்வு காத்திருப்பதாக கூறுகின்றனர். ஆனால் உண்மையான காரணம் இதுவன்று இதற்கு உடன்பட மறுப்பவர்கள் மீது அதிகார மீறல் நடத்தப்பட்டது."பழங்குடியினர் வாழும் பகுதியில் கிடைக்கும் கனிம வளங்களைச் சுரண்டவே முதலாளித்துவம் ஆர்வம் காட்டியதே தவிர, பழங்குடியினர் மீது இவர்களுக்கு எந்த அக்கறையுமில்லை. இப்போக்கு வெற்றி பெற்றால் பழங்குடியினர் மெல்ல மெல்ல இல்லாமல் போய்விடுவர் என்பதை உண்மை. இப்பகுதியில் எஞ்சியிருப்போர் நிலமற்ற விவசாயக் கூலிகளாக வாழ வேண்டிய நிலை உருவாகும் என்பர் ஸ்டேன் சுவாமி" (தேவசகாயம், ப.25)

வனத்துறை அதிகாரிகள் குறிப்பிட்ட பகுதியில் வேலைக்கு வருவதற்கு பல லட்சம் ரூபாய் பணம் கொடுத்து பணிக்கு வருகின்றனர்."சும்மா இல்ல அஞ்சு லட்ச ரூபாய் கொடுத்து இந்த இடத்துக்கு வந்திருக்கேன்."(பிரசாந்த்வே,ப.117).என கிருஷ்ணன் கூறுவதில் இருந்து இதனை உறுதிப்படுத்த முடிகிறது.இதற்கு அரசு ஒரு காரணமாக இருக்கிறது. இதனால் அதிகாரிகள் தாங்கள் கொடுத்து வந்த பணத்தை எடுப்பதற்காக பல நியாயமற்ற

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

செயல்களை செய்து சுரண்டலில் ஈடுபடுகின்றனர்.வனங்களில் தீர்த்தடுப்புக் கோடுகள் அமைப்பதில் அதிகாரிகள் சுரண்டுகின்றனர். அதே நேரத்தில் இச்செயல் பழங்குடிகளுக்கான வேலையையும் சுரண்டுகிறது என்பதை கவனத்தில் கொள்ளத்தக்கது.

பழங்குடிகளை விரட்டுவதற்காகவே அவர்கள் வாழும் பகுதிகளை ரிசர்வ் பாரஸ்ட் (புலிகள் காப்பகம்) என்று அரசு அறிவிக்கின்றது. இதனை வன அதிகாரிகள் நிரூபனம் செய்வதற்காக, அரசுக்கு ஏற்றார் போல பல அறிக்கைகளை உருவாக்குகின்றனர். காடுகளுக்குள் செல்லாமலே சென்றதாகவும், விலங்குகளை பார்த்ததாகவும் அதன் எண்ணிக்கையை அறிக்கையாக எழுதி அரசுக்கு சமர்ப்பிக்கின்றனர். இது பழங்குடிகளுக்கு செய்யும் அநீதியாகும். இவ் அதிகாரம் மீறல் வெள்ளையர் ஆட்சி காலத்தில் இருந்தே நடந்து வருகிறது. வெள்ளையர்கள் செய்த ஆய்வில் ஆனைமலைப் பகுதியில் தேக்கு மரங்கள் நிறைந்தது என்பதை அறிந்து கொள்கின்றனர். இம் மரங்களை எல்லாம் தங்கள் தேவைகளுக்காக வெட்டி எடுத்து செல்கின்றனர்.இதனைப் பழங்குடிகள் எதிர்த்து கேட்க திராணி அற்றவர்களாகவே உள்ளனர் என்று எழுத்தாளர் பதிவு செய்துள்ளார்.

"ஆனைமலை ஒரு தாயைப் போல பெருங்காட்டையும் விலங்குகளையும் தன்னகத்தை அரவணைத்துக் கொண்டிருந்தது. ஆனால் பிரிட்டிஷ்காரர்கள் கண்களுக்கு வளம் கொழிக்கும் ஆனைமலைக் காடுகள் பணத்தை கொட்டிக் கொடுக்கும் புதையலாகத் தெரிந்தது. மரங்கள் பலகைகளாகவும், விறகுகளாகவும் காட்சியளித்தன. பழங்குடிகள் கூலிகளாகத் தெரிந்தனர். யானைகள் சுமை தூக்கும் அடிமைகளாகத் தெரிந்தன. அப்பார்வையில் இருந்து காட்டின் கோரமான அழிவு துவங்கியிருந்தது." (பிரசாந்து வே, ப.*57)*

வெள்ளையரின் அரை நூற்றாண்டு காலச் சுரண்டலால் ஆனைமலையின் பெரும்பகுதி காடு கட்டாந்தரையாக காட்சியளித்தது. இவர்களின் செயல்களை இன்றைய ஆட்சியாளர்களும் செய்து வருகின்றனர். இதனை "இம்மண்ணின் பூர்வ குடிகள் அநீதியாகவே நடத்தப்பட்டு வருகின்றனர். இந்திய நாடு சுதந்திரம் அடைந்தபோதும் இந்திய ஆளும் வர்க்கம் காலனி ஆட்சியின் ஆதிக்கக் கொள்கையையே கடைபிடித்தனர். காட்டுமரங்கள் வெட்டப்பட்டன. மர மாபியாக்கள் ஆடிய ஆட்டத்தில் பூர்வீகக் குடிகளின் காட்டு நிலங்கள் கொள்ளை போயின என்பர் ஸ்டேன் சுவாமி" (தேவசகாயம் , ப *56)*இதற்கு தடையாக இருக்கும் பழங்குடிகளை அரசு வன அதிகாரிகளை கொண்டு அப்புறப்படுத்த நினைத்தது."ஆனெ மலை காடு வன சரணாலயம் ஆகிடுச்சு. இது ரிசர்வ் பாரெஸ்ட். இனி உங்க இஷ்டத்துக்குக் காட்டுக்குள்ள சுத்தக் கூடாது. உங்க இஷ்டத்துக்கு எல்லா ஆறு மாசத்து ஒருக்கா எடம் மாத்தி, மாத்தி போகக் கூடாது. ஒரே எடத்துல இருங்க. உங்களுக்கு வேணும்கிற வசதியை சர்க்காரு பண்ணித்தரும் மத்த பதிக்காரங்க எல்லா ஒரே எடத்துல இருக்க சம்மதிச்சுட்டாங்க. என்பதுதான் வனத்துறையின் பேச்சாக இருந்தது."(பிரசாந்த் வே, ப.*81)*பதியினருக்கான சுதந்திரம் படிப்படியாக பறிக்கப்பட்டது. இதனால் இவர்களுக்கான இடம் பெயர் வாழ்வுத் தடுக்கப்பட்டது. அதே நேரத்தில் காடுபடுபொருள் சேகரிப்பதற்கு தடை ஏற்பட்டதால் இவர்களுக்கான பொருளாதாரம் முடக்கப்பட்டது. "புலிகள் காப்பகமா ஆனதும் தானாச்சு ரொம்பக் கெடுபிடி பண்ணுறானுங்க.இந்த பாரஸ்ட் காரங்களுக்குப் புதுசா கொம்பு முளைச்சிடுச்சு போல.ஒரு ஆடு மாட்ட காட்டுப்பக்கம் மேய்ச்சலுக்கு ஓட்டிட்டு போக முடியல. சுள்ளி, விறகு கூட காட்டுக்குள்ள பொறுக்கக் கூட விடுறது இல்ல. காட்டுக்குள்ள போகக்கூடாது. டாப்சிலிப்புக்கு டூவீலர்ல போகக்கூடாது மீறுனா அபராதம் போடுவோம் என்று மெரட்டறானுங்க என சலித்துக் கொண்டனர் பழங்குடிகள்"(பிரசாந்த் வே, ப.*172)*

விலங்குகள் மீது கொண்ட அக்கறை மனித சமூகத்தின் மீது இல்லை. பழங்குடிகளின் வாழ்வாதாரம் காடுபடுப் பொருள்களை சேகரிப்பதாகும். இன்று இந்நிலை மாறுபட்டு பல்வேறு தொழில்களுக்கு சென்று வருகின்றனர். இதைத்தான் இன்றைய அரசு

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

விரும்புகிறது. இவர்கள் காடுபடு பொருள்களைச் சேகரிப்பதால் விலங்குகளுக்கு உணவு இல்லாமல் போகிறது. அதாவது"அடர் வனங்களில் பழங்குடி மக்கள் நெல்லிக்காய்களை மூட்டை மூட்டையாக விற்பனை செய்வதற்கு கொண்டு செல்கிறார்கள். இதனால் புலிக்கு இரையாகக் கூடிய விலங்குகளுக்கு நெல்லிக்காய் கிடைப்பதில்லை. எனவே அந்த விலங்குகள் அழிகின்றன. கூடவே புலியும் அழிகின்றன"(பிரசாந்து வே, ப.*12)* என்று பழங்குடிகள் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.இதனால் பழங்குடிகளின் ஊடுருவலை தடுக்க ஆனைமலை பகுதியை அரசு புலிகள் காப்பமாக அறிவித்தது.

இப்பகுதிவாழ் பழங்குடி மக்களை இடம் மாற்றம் செய்வதற்கு இது போன்ற பழிச் சொற்களை அவ்வப்போது அவர்கள் மீது திணிக்கப்பட்டு வந்தன.இதனால் பழங்குடிகளுக்கான வருமானம் பாதிக்கப்பட்டது எனவே அவர்கள் தங்களின் மரபு சார் தொழிலில் இருந்து மாறுபட்டு கூலி வேலையான அணை கட்டுதல், தோட்ட பராமரிப்பு ஆகிய வேலைகளுக்கு செல்லும் சூழலுக்குத் தள்ளப்பட்டனர். இது மட்டும் அல்ல பிறர் செய்த குற்றத்தை வன அதிகாரிகள் பழங்குடி மக்கள் மீது திணித்து அவர்களை நிர்வானமாக்கி அடித்து துன்புறுத்தி சித்தர்வதையும் செய்தனர். மழைக்காலங்களில் மண் சரிவு ஏற்பட்டு சாளைகள் பல சிதைந்தன.அவ்விடத்தில் இருந்து வேறு இடத்திற்குச் சென்று சாளை அமைப்பதற்கு வனத்துறையினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.இதனால் இருக்கிற குடும்பங்களை அழிவிலிருந்து காப்பாற்றுவோம் என்று இடம்பெயர்ந்து மலை அடிவாரத்து பகுதிக்கு சென்று விடலாம் என்ற நெருக்கடிக்கு வேங்கைப்பதி மக்கள் தள்ளப்பட்டனர்.

பழங்குடிகளிடம் ஏற்பட்ட மாற்றம்

பழங்குடிகள் அந்த காலத்திலிருந்தது போல இல்லாமல் அடுத்த கட்டத்தை நோக்கி வந்துள்ளனர். பிற சமூகத்தைப் போல பழங்குடிச் சமூகமும் வளர்ச்சிப் பெற வேண்டியது அவசியமானது. அதே நேரத்தில் இவர்களின் வளர்ச்சி பூர்வீகத்தை இழக்க வேண்டிய சூழலுக்கு இச்சமூகத்தைத் தள்ளியது."புதுசா வந்திருக்கிற வனநில உரிமைச் சட்டத்தை கொண்டு ஆதிவாசிகள் காட்டை விட்டு வெளிய கொண்டுவர சில பேரு கடுமையாக ஆட்சேபிக்கிறாங்க. அதுக்கான காரணம் ஓரளவு நியாயமானது தான். ஆனா இங்க இருக்கிற ஆதிவாசிகளுக்கும் நமக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. அவங்களும் நம்மோடு சேர்ந்து காலகாலமாக சினிமா பாக்குறாங்க. தேர்த்திருவிழாவுக்கு வராங்க. ஓட்டு போடுறாங்க. வாரச் சந்தைக்கு வந்து எல்லாம் வாங்கிட்டு போறாங்க. அப்படி இருக்கிறவங்கள காடுகளுக்குள்ளேயே ஒடுக்கி உலகமறியாமச் செய்யுறது மனிதநேயம் மல்ல"(பிரசாந்து வே, ப.*13)*இவர்களின் இத்தகு மாற்றத்திற்கு சமவெளி மனிதர்களும் அரசும்தான் காரணம். ஆனால் மாற்றத்தினால் அவர்களின் பூர்வீக இடமான காட்டை அரசு அபகரித்துக் கொண்டு அடிப்படை வசதி கூட இல்லாத பகுதிகளை இவர்களுக்குத் தருகின்றது. இதற்கு பெயர் சமூக வளர்ச்சி என்று புறவெளிகளில் பேசிவருகின்றனர்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி என்பது அவர்களின் பூர்வீகத்திலிருந்து மேம்படுத்துவதாகும். வளர்ச்சி என்ற பெயரில் இவர்களை இடம் மாற்றம் செய்வதே முதன்மையாக நோக்கமாக உள்ளது. இடமாற்றம் செய்யப்பட்ட பழங்குடிகளுக்கான வாழிடம் பெயரளவில் மட்டுமே உள்ளதே தவிர அம்மக்களின் வாழ்விற்கு உகந்ததாக இல்லை. ஆக ஆனைமலை பகுதியில் புலிகளை காப்பதைக் காட்டிலும் புலிகள் காக்கப்படும் என்ற திட்டத்தின் மூலம் நிதியைப் பெறுவதும் அதை அபகரிப்பதும் தான் முதன்மையாக இருப்பதை இவர்கள் செயல் வழி தெரிகிறது. "இவ்வளவு பெரிய காட்டுக்குள்ள எத்தன புலி இருக்கு*?* எத்தன மானு இருக்கு*?* எப்படி கண்டுபிடிக்க முடியும்*?* குத்துமதிப்பா ஒரு நம்பரைப் போட்டு ரிப்போர்ட் அனுப்ப வேண்டியது தான்" (பிரசாந்த் வே, ப.*19)* இவ்வாறு தான் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதை யாரும் சரி பார்ப்பதும்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இல்லை. கேள்வி கேட்பதும் இல்லை அரசைப் பொறுத்தவரை தாங்கள் கொண்டு வந்த திட்டத்திற்கு அதிகாரப்பூர்வ அறிக்கை இருப்பதை உறுதிப்படுத்தி நிதியை பெறுவதாகும். இதனால் பாதிக்கப்படுவது பழங்குடி மக்கள் மட்டுமே என்பது உணரத்தக்கதாகும்.

முடிவுகள்

பழங்குடி மக்கள் குறித்த பதிவுகள் அண்மைக்காலமாக புனைகதை இலக்கியத்தில் வெகுவாக பதிவு செய்யப்பட்டு வருகின்றன.அந்த வகையில் பிரசாந்த்வேயின் ஆனைமலை நாவல் குறிப்பிடதக்கதாகும். எந்த ஒரு மனிதனையும் அவனது பூர்வீகத்தில் இருந்து விரட்டுவது என்பது சரியானதன்று. அவரவர்க்கு தேவையான வசதிகளைச் செய்து தருவதற்கு அரசு இருக்கிறது. ஆனால் இன்றைய அரசு அதிகாரிகள் மீதும் விலங்குகள் மீதும் காட்டுகின்ற அக்கறையைச் சாதாரண மனிதர்கள் மீது காட்டுவதில்லை. அதாவது எந்தவித வசதியும் இல்லை என்று கூறி காடுகளிலிருந்து பழங்குடிகளை இடம் மாற்றம் செய்ய முனைகிறது. ஆனால் காடுகளுக்குள் புதிதாக வேலையின் பொருட்டும் பொழுதுபோக்கிற்காகவும் வருபவர்களுக்கு சாலை ,மின்சாரம், தங்குமிடம் ,உணவு இன்னும் பல வசதிகளை அரசு செய்து தருகிறது அல்லது செய்வதற்கு பிறருக்கு அனுமதி வழங்குகிறது.அதே நேரத்தில் காடுகளுக்குள் நுழைய பழங்குடி மக்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. ஆனால் மற்றவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. இது சமூக நீதியன்று.

பழங்குடிகளின் கல்வி ,சமுதாய வளர்ச்சி என்று கூறி அவர்களை இடமாற்றம் செய்வது என்பது ஒரு ஏமாற்று வேலை என்பதை இந் நாவல் மிக காத்திரமாக பதிவு செய்துள்ளது. பண பொருளாதாரத்தை முதன்மையாக கருதுவரிடம் பண்பாடு குறித்த சிந்தனையை எதிர்பார்ப்பது தவறாகும். இத்தகைய பழங்குடியின் மரபு காக்க பல்வேறு இயக்கங்கள் போராடி வருகின்றன.எந்தவித மாற்றமானாலும் வளர்ச்சியானாலும் அவர்களுக்குரிய பூர்வீகம் சார்ந்த பகுதிகளிலிருந்து நிகழ்வது என்பது ஏற்புடையதாகும். இதுவே இயற்கையோடு இயந்த அவர்கள் வாழ்வை எந்தவித சிதைவும் இன்றி செம்மைப்படுத்த வல்லதாகும்.

பயன்பட்ட நூல்கள்

1. பிரசாந்த், வே. 2024. ஆனைமலை. பொள்ளாச்சி: எதிர் வெளியீடு.
2. கந்தையாபிள்ளை,ந.சி.2015. தென்னிந்திய குலங்களும் குடிகளும். சென்னை:சந்தியா பதிப்பகம்.
3. பக்தவச்சல பாரதி, 2023. மானிடவியல் பேசுவோம். திருச்சி: அடையாளம்.
4. மரிய சூசை,அ.(தொ.ஆ) 2024. இந்திய பழங்குடிப் பண்பாடும் தமிழ்ப் பண்பாடும். சென்னை: போதி வனம்.
5. ஸ்டேன்சுவாமி,தேவசகாயம் (தமிழாக்கம்)2021. நான்ஒரு மௌன சாட்சி அல்லன். திண்டுக்கல்: வைகறை பதிப்பகம்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

22. கவிஞர் சுகிர்தராணியின் படைப்புகளில் சமூக நீதியும் - பெண்ணடிமை விலங்கு உடைப்புகளும்

முனைவர் ப.தேவராஜ் *M.A.,M.A.,M.Phil.,Ph.D.,PGDCA.,*
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை- உயராய்வு மையம்
உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி (த), பொன்னேரி- 601 204.
திருவள்ளூர் மாவட்டம்,தமிழ்நாடு, இந்தியா
rajdevcbe @gmail.com - 7550159764
DOI 10.5281/zenodo.17212292.

Abstract:

This abstract discusses Poet Sukirtharani's work, which focuses on the Dalit people and feminism. Her poems aim to create a casteless society with equality and brotherhood, advocating for women's liberty. The paper explores how Sukirtharani's poems, similar to those of Bharathiyar. express social justice and feminism by uplifting marginalized communities.

Keywords: A man's touch, Dalitism, lust, snake venom, feminism, poetic ice, poetic constant.

நோக்கம்

காலங்காலமாய் மேல்சாதி எனத் தங்களை அழைத்துக்கொள்ளும் ஆதிக்கச் சாதியினரால் ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டுச் சமூகப்பொருளாதாரத்தில் எந்தவித முன்னேற்றமும் கண்டிராத தாழ்ந்த நிலையில் உள்ள மக்களை நாம் என்னவென்று அழைப்பது. தாழ்த்தப்பட்டவர்களிலும் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கும் இனக்குழுவினரின் நிலை இதைவிட வருத்தத்திற்குரியதே. இப்பெல்லாம் யாருங்க சாதி பார்க்கிறாங்க என்ற உரையாடல்தான் இந்த நூற்றாண்டில் அதிகம் பேர் பேசிய சொற்களாக இருக்கும். விரைவு உலகில் சாதிய எண்ணத்தோடு இருப்பவர்களைப் பார்த்தால், நாம் எங்கு வாழ்கிறோம் என்ற கேள்வி நம்மில் எழத்தான் செய்கிறது. படித்தவர்கள், படிக்காதவர்கள், அறிஞர்கள், அறிஞர்களாக இல்லாதவர், பக்திமான்கள், புத்தியில்லாத மான்கள் என ஒட்டு மொத்த மக்களே இத்தகைய மனநிலையில்தான் இருக்கிறார்கள். அமெரிக்காவிற்குப் போனாலும், ஆசுதிரேலியாவிற்குப் போனாலும் சாதியைச் சுமந்துகொண்டுதான் செல்கிறார்கள். வாழ வழியில்லாதவர்களை, முன்னேற விடாமல், முன்னேறுவதற்கு வாய்ப்புத் தராமல், கடைநிலையில் உள்ள மக்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் தீண்டத்தகாதோர் என்றும் அழைக்கும் வழக்கினை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இன்று இம்மக்களைத் தலித்துக்கள் என்று அழைப்பதையும் பார்க்கிறோம். தந்தைபெரியார், சாதி இந்துவாகப் பிறந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் குரல் கொடுத்தார், போராடினார். அண்ணல் அம்பேத்கர் தலித்தாகப் பிறந்து தலித்துகளின் சுதந்திரத்திற்காகப் பேசினார், போராடினார். இன்று தலித்துகளுக்குப் போராட பல்வேறு அமைப்புகள், சங்கங்கள் தோன்றியவண்ணம் உள்ளன. என்றாலும் கருத்தியல் களத்தில் முன்னிற்பவர்களாக ஒரு சிலரைக் கூறலாம். அவர்களில் முன் வரிசையில் நிற்பவர் கவிஞர் சுகிர்தராணி ஆவார். கவிஞர் சுகிர்தராணி அவர்களின் கவிதைகள் சாதியற்ற சமூகச் சூழலை உருவாக்கவும், பெண்ணடிமைத் தனத்தின் விலங்குகளைக் கட்டுடைக்கவும், சாதி என்னும் மதயானையை விரட்டவும் துணை செய்கின்றன. சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் சக மனிதரை, மகளிரை வாழவிடுங்கள் என்ற அறைகூவலுடன் இவரின் கவிதைகள் படைக்கப்படுகின்றன என்பதனின் அடிப்படையில் கவிஞர் சுகர்தராணியின் கவிதைகளில் மிளிரும் கருத்துகளை மையப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் தலித் மக்களைப் பற்றி எண்ணவோ, பேசவோ, சிந்திக்கவோ, அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குக் குரல் கொடுக்கவோ இந்தியாவில் யாரும் இல்லை. தமிழ் நாட்டில் அருளாளர் அருட்பிரகாச வள்ளலார் 17-ஆம் நூற்றாண்டில் தோன்றினார். அவர் அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்தினார். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுத்தார், போராடினார் எனச் சொல்லிவிட முடியாது. இந்திய வரலாற்றில் விரல் விட்டு எண்ணுமளவிற்குக் கூட தலித் மக்களுக்காக யாரும் குரல் கொடுத்ததில்லை. போராடியதில்லை. இன்று எண்ணற்ற அமைப்புகளும், கவிஞர்களும், படைப்பாளர்களும் உள்ளனர். அந்த வரிசையில் இன்றைய நவீன உலகில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தலித்தாகப் பிறந்து தலித் மக்களுக்காக எழுதிவரும் படைப்பாளர்களில் ராஜ்கௌதம், இமயம், பாமா, ப.சிவகாமி, மதிவண்ணன், மீனாகந்தசாமி, சுகிர்தராணி, எழில் இளங்கோவன் போன்றோர்களைக் குறிப்பிடலாம். தலித் அல்லாத ஆனால் தலித் மக்கள் பற்றிப் பேசிவரும், எழுதிவரும், படைத்துவரும் சமத்துவப் போராளிகளாகப் பெருமாள்முருகன், சுப.வீரபாண்டியன் போன்றோர்களைக் குறிப்பிடலாம். தலித் மக்களில் பெண்களின் நிலை இன்னும் சிக்கல் வாய்ந்ததாகவே உள்ளது. ஆணாதிக்கம் தலித் மக்களையும் விடவில்லை. பெண் எங்குப் பிறந்தாலும் அவள் அடிமையாகத் தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஆணாகப் பிறந்தவனுக்கு வந்து விடுகிறது. இதனால் பெண் எந்தச் சாதியில் பிறந்தாலும் அவள் அடிமைதான் என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறாள் என்ற தந்தை பெரியாரின் கருத்து இங்குக் குறிப்பிடத்தகுந்தது. இன்றைய நவீன உலகில் தலித்துகளைப் பற்றிப் பேச கவிஞர்கள், படைப்பாளர்கள், சமூக சீர்திருத்தவாதிகள் என உள்ளனர். ஆனால் தலித் பெண்களைப் பற்றிப் பேச யாரும் இல்லாத நிலையில் பாமா, ப.சிவகாமி போன்ற பெண் படைப்பாளர்களின் வரிசையில் கவிஞர் சுகிர்தராணி அவர்கள், தலித் பெண்ணியம் பற்றிச் சிந்திக்கிறார், எழுதுகிறார். எழுதி வருகிறார். தலித் பெண்ணியம் பற்றிப் பேச கவிஞர் சுகிர்தராணியை விட சிறந்தவர் யாரும் இருக்க முடியாது. ஆகவே கவிஞர் சுகிர்தராணியின் எழுத்துகள் தலித் பெண்ணியப் பாதையில் ஒரு மைல்கல் எனலாம். இதனை மையமாகக் கொண்டு **கவிஞர் சுகிர்தராணியின் படைப்புகளில் சமூக நீதியும் - பெண்ணடிமை விலங்கு உடைப்புகளும்** என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆய்கிறது.

கவிஞர் சுகிர்தராணியும், கவிதைகளும்

கவிஞர் சுகிர்தராணி, இராணிப்பேட்டை மாவட்டம், இலாலாப்பேட்டையில் பிறந்தவர். பட்டதாரி ஆசிரியாராகப் பணியாற்றி வருகிறார். தமிழ் மற்றும் பொருளாதாரம் படித்தவர். ஆரம்பக்காலம்தொட்டே கவிதைகளில் தலித் மக்களின் வாழ்வியலை எடுத்துரைத்து வந்தவர். பெண்ணின் நிலையை எண்ணித் தன்னுடைய கவிதைகளைப் பெண்ணியம் சார்ந்த கவிதைகளாக மாற்றிக்கொண்டார். குறிப்பாகத் தலித் மக்களின் அவல நிலையைக் கண்டு வெதும்பி அவற்றை உள்ளது உள்ளவாறே கவிதை மொழிகளில் பேசத் தொடங்கியவர், பின்பு தலித் மக்களில் பெண்ணின் நிலையைக் கண்டு மனம் வெதும்பித் தலித் பெண்கள் பற்றி எழுதத் தொடங்கினார். **கைபற்றி என் கனவு கேள், இரவு மிருகம், காமத்தீப்பூ, தீண்டப்படாத முத்தம், அவளை மொழிபெயர்த்தல், இப்படிக்கு ஏவாள், நீர் வளர் ஆம்பல்** போன்ற கவிதைத் தொகுப்புகளை வெளிட்டார். இவை அனைத்தும் தலித் பெண்ணியம் சார்ந்தது.

'தலித்' என்ற சொல்லின் பொருள்

'தலித்' என்ற சொல்லாடலை முதன்முதலில் அறிமுகம் செய்தவர் அம்பேத்கரின் அரசியல் குரு எனக் கருத்தப்பட்ட மகாத்மா பூலே ஆவார். இவர் தலித்துகள் என்பதற்கு

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஒடுக்கப்பட்டவர்"[1] என்று பொருள் கூறுகிறார். தலித்தியம் என்ற சொல்லுக்குப் பலபேர் பல்வேறு விளக்கங்களை வழங்கியிருப்பினும் மகாத்மாபூலே தலித் என்ற சொல்லுக்கு வழங்கும் விளக்கம் சிறப்பிற்குரியது எனலாம். "தலித் என்ற மராட்டிய சொல்லிற்கு உடைந்து போனவர்கள்" என்று பொருள் தருகிறது தமிழ் இணையக் கல்விக்கழகம். "இந்திய வரலாற்றில் சாதி முறையில் ஒடுக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த மக்களில் சிலரும், தங்களைத் தலித் என அழைத்துக் கொள்ளத்தொடங்கினர். பின்னர், இந்தப் பெயர் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலைத்துவிட்டது" என்று பிரிட்டானிக்கா கலைக் களஞ்சியம் கூறுகிறது. (தமிழ் இணையக் கல்விக்கழகம்-தலித் இலக்கியம்)

மும்பையிலும், கருநாடகாவிலும் பரவலாகப் பேசப்பட்டு வந்த தலித் என்ற சொல்லாடல் இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழகத்திற்கு அறிமுகமானது. தலித்தியம் என்பதற்குச் "சமூகத்தால், ஆதிக்கச் சக்திகளால் குரல்வளை நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்டவர்களின் குரலே தலித்தியம் அல்லது தலித் இலக்கியம் எனப் பொருள் கொள்ளலாம்" எனப் பேராசிரியர் தே.ஞானசேகரன் கூறுகிறார்.

"அடக்கப்பட்ட, அமுக்கப்பட்ட, ஓரங்கட்டப் பட்ட மக்களின் அனுபவங்களின் துயரக்குரலே, புரட்சிக்குரலே தலித்தியம் என்றும், சமூக, அரசியல் பொருளாதார சாதிய அடக்கு முறைகளில் இருந்து மீறி வெளி வரத்துடிக்கும் உணர்வை, முனைப்பை, தேவையை வெளிப்படுத்துவதே தலித்தியம்"[2] என்று பாமா கூறுகிறார். தன் உரிமைக்காகப் போராடும் வர்க்கம், சராசரியாய் அனைவருக்கும் கிடைக்கும் நியாயங்கள், உரிமைகள், சலுகைகள் தங்களுக்கும் வேண்டும் என்று நீதிக்காகப் போராடுபவர்களைக் "கலகவுணர்வும், எதிர்ப்புணர்வுமிக்கவர்கள்"[3] என்று சித்தரிப்பது வேதனையிலும் வேதனை என்று எழுத்தாளர் திலகவதி பதிவு செய்கிறார்.

தலித் பெண்ணியம்

ஒரு தலித் மனிதனின் வாழ்க்கை என்பது அவன் பிறந்தது முதல் இறக்கும் தருவாயில் வரை போராட்டமே. அவனது வாழ்க்கையே இப்படியென்றால், தலித் பெண்ணின் நிலை எத்தகையது? அவை வார்த்தைகளால் சொல்ல முடியாதது. ஒடுக்கப்பட்டோரிலும் ஒடுக்கப்பட்டவர்களாய் விளங்கும், தலித் பெண்களின் அவலநிலை குறித்தே கவிஞர் சுகிர்தராணி தன்னுடைய படைப்புகளில் அதிகமாகப் பதிவுசெய்து காட்டுகிறார்.

தலித்பெண்கள் எல்லா வகையிலும் ஒடுக்கப்படுகிறார்கள். குடும்பம், சமூகம், பொருளாதாரம் என்றில்லாமல் "ஆதிக்கச் சாதியினரின் சாதிவெறிக்கும் கட்டுப்பட்டு வாழ்கின்றனர். உழைக்கும் பெண்கள் என்ற வகையில் நிலவுடைமையாளர்களின் கொடுமைகளுக்கும், முதலாளிகளின் சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகிறார்கள். முடிவாக எல்லா ஆண்களின் அதிகாரமும் பெண்ணின் மீதே காட்டப்படுகிறது. ஒரு தலித் குடும்பத்திலும் ஆண்கள் அதிகாரம் செலுத்தும் இடமாகப் பெண் இருக்கிறாள். சாதி இந்துவாகப் பிறந்த பெண்களுக்கு, இத்தகைய நிர்ப்பந்தங்கள் இல்லை. குறிப்பாக உயர்சாதிப் பெண்கள் சாதிரீதியான ஒடுக்கமுறையை அனுபவிப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர்கள் சார்ந்திருக்கும் சாதிக்குரிய அதிகாரங்களும் சலுகைகளும் அவர்களுக்குமே வாய்ந்துள்ளன. அவற்றை அவர்களுமே அனுபவிக்கின்றனர்."[4] எனவே, உயர்சாதிப் பெண்களையும் தலித்பெண்களையும் ஒரே தராசில் வைத்து அளவிடமுடியாது என்கிறார் கவிஞர் சுகிர்தராணி. தலித்பெண்களை உயர்சாதிக்காரர்கள் காலங்காலமாக ஒடுக்கி வருகிறார்கள் என்ற போகிறப் போக்கில் மேம்போக்காகச் சொல்லிவிட முடியாது. தலித் பெண்கள், "உயர்சாதிஆண்கள், உயர்சாதி பெண்கள், இடைநிலைச்சாதிஆண்கள்,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இடைநிலைச்சாதி பெண்கள், கீழ்நிலைச் சாதி ஆண்கள்”[5] என ஐவகையினராலும் ஒடுக்கப்பட்டு இழிவு படுத்தப்படுகிறவர்கள் தலித்பெண்கள் என அ.மார்க்ஸ் கூறுவது போல், “தலித்பெண்களின் அனுபவங்கள் தனித்துவமானவை. உயர்சாதி ஆணாதிக்கச் சமூகத்தின் வன்கொடுமைக்குப் பலியான வரலாறு அவர்களுடையது. இந்திய வரலாற்றில் அடிமைகளாக விற்கப்பட்டப் பெண்கள், தேர்க்கால்களில் பலியிடப்பட்டப் பெண்கள், விபச்சாரிகளாக்கப்பட்டப் பெண்கள் என்றெல்லாம் பார்த்தோமேயானால் இவர்களில் பெரும்பாலானோர் தலித்பெண்களாகத்தான் இருப்பார்கள். இன்றளவும் காவல் நிலையப் பாலியல் வன்முறைகளைக் கணக்கெடுத்துப் பார்த்தோமானால் அதில் தலித்பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டோர் என்பது புலப்படும்.”[6] என்ற திலகவதியின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இத்தகைய நிலையில்தான் தலித்பெண்ணியம் அவசியமாகிறது. கவிஞர் சுகிர்தராணி உயர்சாதி ஆணாதிக்கக் கொடுமைகளைப் படைப்புகளில் நேரடியாகச் சித்தரிக்கவில்லை என்றாலும் ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் உள்ள வக்கிரங்களைத் துல்லியமாகப் பதிவு செய்து காட்டுகிறார். பெண் தனது அடையாளத்தைப் பற்றிச் சொல்லுகையில் ஒளிவு மறைவற்ற வார்த்தைகளால் திறந்த மனதோடு பின்வருமாறு குறிப்பிடுகிறார்,

“செத்துப் போன மாட்டைத்
தோலுரிக்கும் போது
காகம் விரட்டுவேன்...
வெகுநேரம் நின்று வாங்கிய
ஊர்ச்சோற்றைத் தின்றுவிட்டு
சுடுசோறெனப் பெருமைப்படுவேன்...
தப்பட்டை மாட்டிய அப்பா
தெருவில் எதிர்ப்படும் போது
முகம் மறைத்து கடந்து விடுவேன்..
அப்பாவின் தொழிலும் ஆண்டு வருமானமும்
சொல்ல முடியாமல்
வாத்தியாரிடமும் அடிவாங்குவேன்..
தோழிகளற்ற
பின் வரிசையில் அமர்ந்து
தெரியாமல் அழுவேன்..
இப்போது
யாரேனும் கேட்க நேர்ந்தால்
பளிச்சென்று சொல்லிவிடுகிறேன்
பறச்சி என்று”[7]

இப்படியான ஒரு கவிதையை முதன்முதலில் தமிழ்நாட்டில் படைத்துக் காட்டிப் புரட்சி செய்த முதல் பெண்கவிஞர் சுகிர்தராணியாகத்தான் இருக்க முடியும். கவிதையைத் திரும்பத்திரும்ப வாசித்தால் தலித் மக்களில் குறிப்பாக, தலித் பெண்களின் அவல வாழ்வின் நெருடலானப் பக்கங்களில் புழு ஊறுவதைப் போல உணரலாம். இப்படியான ஒரு வாழ்க்கையை மற்றக் கவிஞர்கள் அனுபவித்திருக்க மாட்டார்கள். சொல்லக் கேட்டிருப்பார்கள். ஆனால் சுகிர்தராணியோ இரட்டை அனுபவத்தை, இரட்டைத் துன்பத்தை

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அனுபவித்தவர். ஒரு தலித் சிறுமியின் வலி, வேதனை, அந்த வேதனையைச் சொல்லிய விதம் இவையனைத்தும் அம்மக்களின் அவலங்களைச் சொல்லிய கல்வெட்டு எனலாம். நான் ஒரு பறைச்சி என்று சொல்லி வளர்ந்த விதம் பற்றி இப்படிப்பட்ட அனுபவத்தை யாரும் பெற்றிருக்கமாட்டார்கள். இன்று எத்தனையோ பேர், தான் ஒரு தலித் என்ற அடையாளத்தை மறைக்க போராடுகின்றனர். நடிகர் திலகம் சிவாஜியைப் போல நடிக்கின்றனர். பிற சாதி இந்துக்களைப் போல வேசம் போடுகின்றனர். ஆனால் நேரடியாகத் தன் சாதியைப் பற்றிக் கூறி, தான் இன்ன சாதியைச் சார்ந்தவன் என்று வெளிப்படையாகப் பேசுவது, இன்றைய இளைஞர்களின் நடுவே கவிஞர் ஒரு கவிதை மாறிலி எனலாம்.

கவிதைக் கணக்குகள்

வெட்கப்படுவது போலவும்
உச்சத்தில் முனகுவது போலவும்
நான் பாவனை செய்தாக வேண்டும்
கன்றிச் சிவந்த பற்காயங்களில்
அவர்களின் நுரைத்துப் பொங்கும் விந்துவை
உறைய வைக்கிறார்கள் - *(காமத்தீபூ, ப-17)*

என்ற இக்கவிதையில், மனைவிகள் சொல்ல முடியாத வலிகளை, வேதனைகளைக் கவிதைக் கணக்குகளில் கழிக்காமல், வகுக்காமல், கூட்டாமல் உள்ளது உள்ளதாகவே கூறியிருப்பது இக்கவிதையின் விடை எனலாம். வேர்களின் போராட்டத்தை யார் அறிவார். இந்த வலியை மனைவிகளின் சார்பில் உரைத்திருப்பது புதுமை எனலாம். இக்கவிதை ஆணாதிக்கத்தின் முகத்திரையைக் கிழித்துத் தொங்கப்போட்டிருக்கிறது. ஆணின் தொடுதலை, "ஆண் ஒருவன் வன்புணர்வு செய்கையில் உடைகிறது என் பனிக்குடம், கண் விழித்துப்பார்க்கிறேன் கவிதைக்குள்ளிருந்து கழிவுகளோடு வெளிப்படுகிறது என்தலை" (காமத்தீபூ, ப-17) என்ற இக்கவிதையில் பெண்ணின் அச்சம், பயம் போன்ற துன்பநிலை, அவலநிலை வெளிப்படுகிறது. காம இச்சைக்காகப் பெண்களை வன்புணர்வு செய்யும் ஆண்களின் அட்டுழியத்தைப் பற்றிக்கூறியிருக்கும் இக்கவிதையைப் படிக்கும் வாசகனின் கண்களில் கண்ணீரை வரவைக்கிறது. இது ஒரு கழிர் படர் காமம் என்கிறார். இரவு மிருகம் என்னும் கவிதையில் இன்னும் ஒருபடி மேலே சென்று ஆணின் வக்கிர எண்ணங்களின் வெளிச்சமிட்டுக்காட்டுகிறார். "துள்ளும் வலியும், மின்னலென வெட்டும் வேதனையும், உச்சமாய் எரிகிற...உயிரை அசைத்து இரத்த சகதியில் மீண்டழுத குழந்தையின் துணி விலகிப் பெண்ணென முகம் சுழிப்பவனே" என வரும் இக்கவிதையில், பாம்பின் விஷம் போல ஆண்களின் கொச்சைத் தனத்திற்குச் சவுக்கடி கொடுத்தது போல மின்னலென வெட்டும் கவிதையின் கருத்தாழம் இந்தியப் புராண இதிகாசங்களில் நம்பிக்கொண்டிருக்கும் மூடத்தனத்தை வெளிப்படுத்துகிறது. பெண் காமத்திற்கு, காதலுக்கு, வீட்டு வேலைக்கு, தனக்குச் சேவகம் செய்ய, துணி துவைக்க, சோறு ஆக்க பெண் தேவை. ஆனால் தனக்குப் பிறப்பவள் பெண்ணாக மட்டும் இருக்கக்கூடாது என்கிற போது பெண் ஏன் அடிமையானாள் என்ற பெரியாரின் புத்தகம் நினைவுக்கு வருகிறது. பெண் என்றால் கைப்பாவையல்ல. பெண் என்றால் ஆணின் கிள்ளிக்கீரை அல்ல. வேலியில் சுற்றித்திரியும் ஓணானைப் பிடித்து விளையாடிக் கொல்லும் வக்கிரம் போன்றது பெண்ணடிமைத்தனம். 'மயிர்கள் சிரைக்காத என் நிர்வாணம், அழிக்கப்படாத காடுகளைப் போல்..." என வரும் கவிதை வரிகள், பெண்ணின் உடல் இயற்கையின் கொடை. அது உன் பிறப்பின் இரகசியத்தைத் தாங்கி நிற்கும் இயற்கை ஏடு என்று நினைவு படுத்துவது போல அமைந்திருக்கிறது. பெண் விளையாடலல்ல. அது ஓர் உயிர் என்பதைச் சுகிர்தராணியின் கவிதை உணர்த்துகிறது.

தணியாத பசலை நோய், பெண்ணின் ஏக்கம், நதியில் நீராடும் கருமுட்டைகள், பொரிந்த சிசு, கவிதைப்பனிக்குடம், மலட்டு முலைகள், வெட்கத்தின் குஞ்சுகள் இவைகளெல்லாம் சுகிர்தராணி அவர்கள் தன்னுடைய கவிதையில் வெளிப்படுத்தும் வார்த்தை ஜாலங்கள் அல்ல. பெண்ணின் மன வேதனையை எடுத்துரைக்கும் கவிதைக்கண்ணீர் நீர்த் திவலைகள்.

கவிஞரின் தார்மீகக் கோபம்

சேரிகள் என்பது கேவலமான சொல் அல்ல. ஆனால் ஏளனச் சொல். அதனால்தான் உங்க வீடு சேரியலா இருக்கு என்கிற போது அந்தப் பேச்சில், பல நூற்றாண்டுகளாகத் தூக்கிச் சுமக்கும் சாதியின் கொடுமை ஒளிந்திருக்கிறது.

"மெல்லிய
புலால் நாற்றம் வீசுகின்ற
நானும்...
தசைகளை முற்றாகப்
பிய்த்தெடுத்த எலும்புகள் தொங்கும்
என்வீடும்..
கொட்டாங்கச்சியில் தோலைக்கட்டி
பறையொலி பழகும்
விடலைகள் நிறைந்த
என் தெருவும்..
ஊரின் கடைசியில் இருப்பதாக
நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்..
நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்
முதலில் இருப்பதாக"[8]

என்கிறார். பறைத்தெரு, சக்கிலித்தெரு ஆகிய தெருக்களெல்லாம் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்திருக்கும் என்பதை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். இன்றும் அப்படித்தான் இருக்கிறது. கொஞ்சம் தெரசு பில்டிங்குகள், சிமெண்டு போட்ட தெருக்கள். அவ்வளவுதான் வித்தியாசம். மாற்றம் இல்லை. தலித்துகளின் வாழ்வியல்பை அப்பட்டமாகக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். பேச அச்சப்பட்ட, வெட்கப்பட்ட ஓர் இனக்குழுவின் வாழ்வியலை மேகமற்ற நிலவினைப் போலத் தனது கவிதைக்குள் கொண்டுவந்து கொடுத்திருக்கும் கவிதையின் திறத்தை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

இந்த வாழ்க்கையில் பெருமைப்பட என்ன இருக்கிறது என்று மற்றவர் நினைப்பதற்கு முன், சிறுமைப்பட எதுவுமில்லை; பெருமைப்பட எல்லாமும் இருக்கிறதென்று, உள்ளுறையாய் பதில் தந்து வியக்கச் செய்கிறார். பறக்கடவுள்' என்னும் பிறிதொரு கவிதையில் சுகிர்தராணியின் தார்மீகக்கோபம் அனலாய் வெடிப்பதைக் காணலாம்.

"சொல்லுகிறீர்கள்
முதுகு விரியக் காய்ந்தால்
அதன் பெயர் பறவெயில்..
உலரும் புழுத்த தானியத்தை

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அலகில் கொத்தி விரைந்தால்
அது பறக்காகம்..
கையிலிருப்பதை
மணிக் கட்டோடு
பறித்துச் சென்றால்
அது பறநாய்...
நிலத்தை உழுது
வியர்வை விதைத்தால்
அது பறப்பாடு...
சகலத்திற்கும் இப்படியே
பெயர் என்றால்
இரத்த வெறியில் திளைக்கும்
எது அந்தப் பறக்கடவுள்"

என்று வெடிக்கிறார். தமிழரின் பண்பாட்டு வரலாற்றின் அடிச்சுவட்டில் தனித்துவம் பெற்ற தலித் மக்களின் நிலையைச் சாதி இந்துக்களால் ஏசப்படும் வசைகள், உலராத இரத்தக் கரைகளாகக் காட்சி அளிக்கின்றன. ஒருவனைக் கத்திகொண்டு குத்திக்கொல்வதற்குச் சமமான ஒரு வசையினை ஓர் இனத்தின்மீது திணித்திருப்பது காலத்தின் கொடுமையல்ல. ஆரியத்தைப் பின்பற்றும் மக்களின் முட்டாள் தனம். இவ்வாறு வரலாறு நெடுக ஆதிக்கச் சாதியினரின் மனதில் ஊறிப் போன பிம்பங்களை உடைத்தெறிய முயற்சிக்கிறார் கவிஞர் சுகிர்தராணி. கவிஞரின் சீற்றம் ஓர் அறச்சீற்றம். அவர் மனதுள் எழுவது அலை அல்ல, சுனாமி. அவர் சுவாசித்தது தென்றல் காற்றின் இனிமையை அல்ல. நாற்றம் சுழற்றும் கொடுமைக் காற்றை. இதுபோல எதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் வேறொரு கவிதையில்,

"கல்யாணக் காட்சிகளில்
கடைப்பந்தி காத்திருக்கும்..
கிழிசல் இலைகளோடு
காப்புக்கட்டி கொடியேற்றும் போது
எட்ட நின்று பார்க்கவும்
இடமிருக்காது...
தலையாட்ட விளிக்கும்
பஞ்சாயத்துக் கூட்டத்தால்
நைந்து போகும் மனசு..
தூரெடுத்த கிணறு விடுத்து
வாய்க்கால் தண்ணீர்
தாகம் தீர்க்கும்..
உருண்டோடும் தேர்ச்சக்கரத்திற்கும்
இனம் தெரியும்
எங்களூர் தெருக்கள்.,
ஆயினும்

அழைக்கப்படுவோம்
முதல்ஆளாய்
இழவுக்குப் பறையடிக்க"[10]

என்ற இந்தக் கவிதையில் சாடியிருப்பது சாதியின் வக்கிரத்தை. தலித் மக்களை நிராகரிப்பது சுலபம் என்பதும், நிகழ்கால எதார்த்தங்களில் இவர்கள் சாதி இந்துக்களால் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதும், வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பதும் இக்கவிதையில் வெளிப்படுத்துகிறார். காலங்காலமாகத் தலித் மக்கள் ஏமாறுவது என்பதின் விளைவே தலித்துகள் புறக்கணிக்கப் படுகிறார்கள். வாழவே தகுதியற்றவர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தலித் மக்களின் வாழ்க்கை அவலத்தை, அவர்களுக்கு நடக்கும் கொடுமைகளை, மறுக்கப்பட்ட உரிமைகளை, மறைக்கப்பட்ட புறக்கணிப்பை மிகையாகவோ, வரலாறாகவோ சொல்லவில்லை. ஆனால் அவற்றைக் கவிதையாகத் தரும்போது படிக்கும் வாசகரின் இதயம் கணக்கிறது. இது மாதிரியான பிரச்சனைகளைச் சொல்லும் போது, கவிஞரின் உணர்ச்சி மேலீட்டால் கவிதை வெறும் செய்திகளாக நின்று விடவில்லை. வடுவாக மாறிவிடுகிறது.

'மயிர் நீக்கிய தோலிருந்து
திருகு முடுக்கிய
பிளாஸ்டிக் டிரம்ஸ்களுக்கு
இடம் பெயர்ந்துவிட்டது ஒலி...
இடுப்பு இறக்கத்தில்
வலியை மீறி ஒலித்தவை
வார்அறுந்து
சில பரணிலும்
கறி தீய்ச்சலுக்குச்
சட்டியாய் சில அடுப்பிலும்....
இழவுக்கு ஏங்கும் பறையோ
பரிகசிக்கும் டிரம்ஸோ...
அதிர்ந்து கொண்டிருப்பது
எங்கள் சதை"[11]

என்ற இக்கவிதையில் மாற்றங்களைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். தலித்துகளின் விளிம்புநிலை வாழ்க்கையை, இதைவிடவும் நேர்த்தியாய் யாராலும் பதிவு செய்ய முடியாது. இதயம் கணக்க, துயரம் நிரம்ப, மூச்சு முட்ட, இனிமேல் தாக்குப்பிடிக்க முடியாது என்று நீரை வெளித் தள்ளும் அணையைப் போல கொடுந்துயரத்துடன் அவலங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

குலத்தொழிலுக்கான கருவியில் ஏற்பட்ட மாற்றத்தையும், இழவுக்கு ஏங்கும் பறை, பரிகசிக்கும் டிரம்ஸ் என்று நகைப்புடன் வெளிப்படுத்தும் இவரின் நடை தனித்துவமானது. இக்கவிதையின் முடிவில் அதிர்ந்து கொண்டிருப்பது எங்கள் சதை என்று முடிக்கும் போது, உண்மை, நெருப்பாய் சுடுவதை உணர முடிகின்றது. சுதந்திர பெற்ற பிறகும்கூட இந்நாட்டிலே இந்த நிலை என்றால். சுதந்திரத்திற்கு முன்பு எப்படி இருந்திருக்கும் என்ற சிந்தனையை இக்கவிதை நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இப்படித் தலித்பெண்ணியம்' பேசுவனவாகவும் தலித்தியம்' பேசுவனவாகவும் அமைந்துள்ளன சுகிர்தராணியின் கவிதைகள். விளிம்புநிலையில் வாழும் மக்களான பறையர், சக்கிலியர் ஆகியோரின் வாழ்வியலை மையப்படுத்தியே இவரது கவிதைகள் இருக்கின்றன. எது மாறினாலும் சாதி மாறவில்லையே என்பதையே இவரின் கவிதைகள் பதிவு செய்கின்றன. தலித்தியம் பேசும் இவரின் கவிதைகள் அனைத்தும் பெண்களின் பிரச்சினைகளையும் பேசுகின்றன. பெண்கவிஞர்களில் இவர் தனித்துவம் வாய்ந்தவர். இவரின் அடையாளமே விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை உள்ளது உள்ளபடி கவிதையாக்கித் தருவதுதான்.

முடிவுரை

இன்றைய அதிநவீன காலத்தில் தலித்துகளின் வாழ்க்கை மேம்பட்டிருக்கிறது. பண்பாட்டு அரசியல் நிலையில் மாற்றங்கள் ஏதும் இல்லை. தீண்டாமையின் தீ இன்னும் நீறுபூத்த நெருப்பாகத் தகித்துக் கொண்டுதான் இருக்கிறது. சாதியம்' துடைக்கப்பட்டுவிட்டது என்பது வெறும் வெற்றுச்செய்திகள். சாணிப்பால், சாட்டையடி என்கிற வடிவங்கள் காணாமல் போய், இன்று புதிய வடிவங்களை எட்டியிருக்கிறது. தீண்டாமை ஒழிக்கப்பட்டிருப்பதாக இருந்தால் ஏன் இன்னும் தனிச்சுடுகாடு, தனிப்பாதை. குளங்களில் தனித்துறைகள், தனி டீ டம்பளர், செத்தவற்றையும், அசுத்தங்களையும்(மலம், குப்பை) நீக்குதல், பறையடித்தல் போன்ற தொழில்கள். ஆலய நுழைவு மறுப்பு, போன்ற வடிவங்களில் எவ்வித மாற்றமும் இல்லை. தற்காலத்தில் குடிநீர்த்தொட்டியில் மலத்தைக் கலக்குதல், நன்றாகப் படிக்கும் தலித் பள்ளி மாணவர்களின் வன்முறைத் தாக்குதல், ஆணவக்கொலைகள் இன்னும் சொல்லப்போனால் கௌரவக் கொலைகளில் மகிழ்ந்து கொள்ளும் உயர்சாதி எனத் தங்களைச் சொல்லிக் கொள்ளும் மானிடர் வாழும் கிராமங்களில் எவ்வாறு தீண்டாமை நீங்கும். நகரங்களில் சில மாற்றங்கள் இருந்த போதிலும்கூட, நகரப் பகுதிகளில் தலித்துகள் வெளிப்படையாகத் தன் சாதியின் பெயரைச் சொல்லி வீடு கேட்டால் தலித்துகளுக்கு வீடுகள் கிடைப்பதிலுள்ள சிரமங்கள். சாதி இந்துக்கள் வெளிப்படையாவே சாதியத் தீண்டாமையைப் பேசிவருவதை இன்றைய நாட்களில் வலையொளியில் காணமுடிகிறது. எனவே. எங்கள் பகுதியில் தீண்டாமைக் கொடுமைகளே இல்லை என ஒருவர் சொன்னால், அங்கே இந்தக் கொடுமைகளே இல்லை எனப்பொருளில்லை. இந்தக் கொடுமைகளுக்கு எதிர்ப்பில்லை என்று பொருள். இருதரப்பினரும் மேற்குறித்த ஒதுக்கல்களை ஏற்று ஒத்திசைந்து வாழ்வதால் பிரச்சினை உருவாகவில்லை என்பதுதான் பொருள். எதிர்ப்புக்காட்டப்படும் இடங்களில்தான் அது பிரச்சினையாகி வெளியுலகிற்குத் தெரிய வருகின்றது. அத்துமீறலும், தலித்துகள் கொல்லப்படுதலும், தலித்பெண்கள் பாலியல் வன்முறைக்களுக்கு உள்ளாக்கப்படுதல் என்பதெல்லாம்கூட ஆங்காங்கு அவ்வப்போது நடந்துக் கொண்டுதான் இருக்கின்றன. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பெரிதாக இருக்கும் போதும், அமைப்பாகத் திரட்டப்பட்ட விழிப்புணர்வுமிக்க இயக்கங்கள் பிரச்சினையை எடுக்கும்போது மட்டுமே அது வெளியுலகிற்குத் தெரியவருகிறது. ஆனால் வெளியுலகிற்குத் தெரியவராத எத்தனையோ கொடுமைகள் இப்பொழுதும் நடந்தவண்ணம்தான் இருக்கின்றன என்பது உண்மை. மேற்கூறிய எதார்த்தங்களைப் பாடுபொருளாகக் கொண்டு தலித்தியம், தலித் பெண்ணியத்தைத் தன் கவிதைகளில் வழியே வெளிப்படுத்துவது சுகிர்தராணியின் சிறப்பாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அடிக்குறிப்புகள்

1. திலகவதி., *(*தொ.ஆ*)*, கோடை உமிழும் குரல், *(*பேரா.அ.அந்தோணிகுரு கட்டுரை*)*, ப.*273.*
2. தி.முருகரத்தினம் - இரா.காஞ்சனா, *(*ப.ஆ*)* தமிழிலக்கியத்தில் பெண்ணியமும் தலித்தியமும், *(*முனைவர் இரா.காஞ்சனா கட்டுரை*)*, ப.*139.*
3. திலகவதி., *(*தொ.ஆ*)*, கோடை உமிழும் குரல், *(*கோ.கேசவன்கட்டுரை*)*, ப.*231.*
4. உமாசக்கரவர்த்தி *(*தமிழாக்கம் வ.கீதா*)* பெண்ணியப் பார்வையில் சாதியும் பால்நிலைப்பாடும்., பக். *93-94.*
5. திலகவதி., *(*தொ.ஆ*)*, கோடை உமிழும் குரல், *(*அ.மார்க்ஸ்கட்டுரை*)*, ப.*336.*
6. மேலது., ப.*235.*
7. சுகிர்தராணி., இரவு மிருகம்., ப.*32.*
8. மேலது., *31.*
9. மேலது., *33.*
10. சுகிர்தராணி., கைப் பற்றி கனவுகேள்., ப.*62.,*
11. மேலது., ப.*67.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

23. பண்டைத் தமிழரின் மண்வளத்தைப் பண்படுத்தும் வேளாண் தொழில்நுட்பக் காரணிகள்

முனைவர் பி.பன்னீர்செல்வம்,
உதவியாளர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மாவட்ட ஆட்சியரகம், விருதுநகர்.
panneer849@gmail.com

DOI 10.5281/zenodo.17212333.

Abstract:

The poets of the Naturalistic Era have understood, investigated and described nature clearly. Since they lived in the natural environment, the natural background is often included in the subject matter. Among them, they also highlight socio-ecological records. Only a human society that preserves the ecology will prosper. The chronicles have recorded how the people of that time preserved the ecology and how they lived by destroying it. The people of the Sangam literary era, who lived in the 'Naturalistic Era', played an important role in preserving the ecology. It can be seen that they adapted their lifestyle according to the ecology. They carried out various ecological activities such as soil conservation, water conservation, development of ecosystems, cleanliness of the place, and personal cleanliness. This article aims to examine the agricultural technological factors that cultivated the soil resources of ancient Tamils.

Key Words: Poet - Naturalistic - Ecology - Agriculture - Ancient Tamil

இயற்கை நெறிக்காலத்துப் புலவர்கள் இயற்கையை உற்றுணர்ந்து, ஆராய்ந்து தெளிவுபடக் கூறியுள்ளனர். அவர்கள் இயற்கைச் சூழலிலேயே வாழ்ந்தமையால் இயற்கைப் பின்புலமே பாடுபொருளில் பெரும்பாலும் இடம்பெறுகின்றது. அவற்றினிடையே சமூகவாழ்வியல் பதிவுகளையும் எடுத்தியம்புகின்றனர். சூழலியலைப் பேணிப்பாதுகாக்கும் மனித சமூகமே வளம்பெறும். அன்றையச் சமூக மக்கள் சூழலியலைப் பேணிக்காத்ததையும், சிதைத்து வாழ்ந்ததையும் இலக்கிங்கள் பதிவுசெய்துள்ளன.

இயற்கை நெறிக்காலத்து' வாழ்ந்த சங்க இலக்கியக் காலப் பொதுமக்கள் சூழலியலைப் பேணுவதில் முக்கியப் பங்காற்றியுள்ளனர். நிலச்சூழலியலுக்கு ஏற்பத் தங்கள் வாழ்வியலைத் தகவமைத்துக் கொண்டதைக் காணமுடிகின்றது. மண்வளப் பாதுகாப்பு, நீர்வளப்பாதுகாப்பு, நிலையியலுயிர்களை வளர்த்தல், இருப்பிடத் தூய்மை, தனிமனிதத் தூய்மை என்று பல்வேறு மேலான சூழலியல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். பண்டைத் தமிழரின் மண்வளத்தைப் பண்படுத்தும் வேளாண் தொழில்நுட்பக் காரணிகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.



மண்வளப் பாதுகாப்பு

வளமார்ந்த இயற்கைச் சூழலியலுக்கு மண்வளம் முக்கியக் காரணியாக விளங்குகிறது. மண், உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் உதவுகின்றது. உழவர்களுக்கு வாழ்வளிக்கும் விளைநிலமாக விளங்குகின்றது. வீடுகட்ட, தொழிற்சாலை அமைக்க, விளையாட, கனிமச்சுரங்கம் அமைக்க, மேய்ச்சல் நிலமாக,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஆறாக, ஏரியாக, ஓடையாக, ஊற்றாக, வாழ்வின் ஜீவாதாரமாக மண் விளங்குகின்றது. இறைவனின் மிக அரிய படைப்புத்தான் மண். அது உழவர்களுக்கு வாழ்வு கொடுக்கும் பொற்குவியல்"1 என்று கூறுவர். பண்டைத் தமிழரிடம் நிலத்தை உழுது பண்டுத்துதல் மரபுசார்ந்த தன்மையில் இடம்பெறுதலைக் காணமுடிகின்றது. உழுதல் என்பது நிலத்தின் மேற்பரப்பில் காணப்படும் கடினத்தன்மை கொண்ட மண்ணை மென்மைத் தன்மை உடையதாக மாற்றுகின்ற வகையில் மேலும் கீழுமாக புரட்டுவது. நன்செய், புன்செய் நிலங்களில் நன்கு ஆழமாக உழவு செய்து, மண்ணை மேலும் கீழுமாக புரட்டி உலரவிட வேண்டும். அப்பொழுதுதான் மண்ணுக்கு நல்ல காற்றோட்டம் கிடைக்கும். கோடைப்புழுதி உழவு செய்வதன் மூலம் மண்ணின் தன்மை காத்தல், நீர்ச்சிக்கனம் உள்ளிட்ட பல நன்மைகள் கிட்டும். இதனை வேளாண் துறையினர் குறிப்பிடுவதை, நிலங்களைக் கோடைக்காலத்தில் சரிவுக்குக் குறுக்கே உழவுசெய்து தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வரும் நடைமுறையாக உள்ளது. கோடை உழவு செய்யும்போது, மண்ணிலிருந்து வேர்ப்புழுக்கள், கூட்டுப்புழுக்கள் மேலே புரட்டிவிடப்படுகின்றன. அப்போது பறவைகள் அவற்றைத் தின்று அழித்து விடுகின்றன"2 என்பர்.

நிலத்தைப் பண்படுத்தும் வழிமுறைகள் பலவகைப்படும். பண்டைத்தமிழர் மண்வளம் காக்க மரக்கலப்பை கொண்டு நிலத்தைத் திருத்தினர். மண்வளம் சிறப்புற்றிருக்க 1. உழுதல் 2. சமன்செய்தல் 3. விதைத்தல் 4. நடுதல் 5. நீர்பாய்ச்சுதல் 6. எருவிடுதல் 7. களை எடுத்தல் 8. பயிர்ப்பாதுகாப்பு 9. அறுவடை 10. தூய்மை செய்தல் 11. பதப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளைக் கையாண்டனர். மண்வளம் காக்கும் தொழில்நுட்ப நோக்கோடு 1. கலப்புப் பயிர் முறை 3. தொடர் பயிர் முறை 3. மறுதாம்புப் பயிர் முறை 4. தீவிரப் பயிர்ச் சாகுபடி போன்றவற்றையும் மேற்கொண்டனர். உணவுத் தேவைக்கேற்பவும், பருவச் சூழலியலுக்கு ஏற்பவும் பண்டைத் தமிழரின் வேளாண்மைத் தொழில்நுட்பம் இடம்பெற்றிருந்தது. இதனை அறிவியலார் நான்குவகைக் கோட்பாடுகளுக்குள் உள்ளடக்கிக் கூறுகின்றனர். மண்வளத்தில் உயிர்ச்சூழல் அமைப்பு நலமுடன் இருந்தால்தான் விளைச்சல் பெருகும்.

'அ) ஒரே தோட்டத்தில் பலவகையான பயிர்களைச் சேர்த்தே பயிரிட்டனர். பயிர்ச் சுழற்சி முறையைப் பின்பற்றினர்.

ஆ) மண்ணின் மேல் மூடாக்குப் போட்டு, மண்ணைப் பாதுகாத்து விவசாயம் செய்தனர்.

இ) கால்நடைகளைக் காட்டில் மேயவிட்டு விவசாயக் கழிவுகளை உணவாகக் கொடுத்து, மாட்டுச் சாணத்தை மண்ணில் சேர்த்து, ஊட்டச்சத்துக்களை ஓயாமல் சுழற்சி செய்து வந்தனர். 'அடி காட்டுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு' எனும் பழமொழி இதற்கு ஆதாரம்.

ஈ) ஒவ்வொரு சூழலுக்கும் ஏற்ற பயிர்வகைகளைக் கண்டறிந்து அவற்றைப் பயிரிட்டனர்."3

மேற்கண்ட மரபு வேளாண் முறை இலக்கியத்திலும் இடம்பெறுகின்றது.

மண்ணின் அங்ககப் பொருள்கள்

மண் என்பது உயிர்ச் சூழல்' அமைப்பின் முக்கியக் காரணியாக உள்ளது. இதில் பல்திறப்பட்ட அங்ககப் பொருட்கள் காணப்படுகின்றன. வேளாண்மையின் ஆணிவேரான மண், பயிர் வளர்வதற்குத் தேவையான ஊட்டச் சத்துக்களைச் சேமித்து வைக்கும் ஆதாரமாகவும், பயிர்களுக்குத் தேவையான நீரைச் சேகரித்து வைத்துக் கொள்ளும் நீர்த்தேக்கமாகவும் பயன்படுகிறது. இயற்கையில் கிடைக்கும் மண், உயிர் சிதைந்த

http://Creativecommons.org//license/by/4.0/. ISBN: 978-93-343-7954-9

அங்ககப் பொருள்கள் (அதாவது மட்கும் பொருட்கள்), காற்று, நீர் ஆகியவற்றின் கலப்பேயாகும். அதில் பல்வேறு உயிர்ப்பொருள்கள் சேர்ந்துள்ளன."4 இத்தகைய அங்ககப் பொருட்கள் குறித்த செய்தி இலக்கியத்தில் இடம்பெறுகின்றது. மண்ணின் செம்மைத் தன்மையால் நீரின்றியும் தாவரம் வளரும் தன்மை உடையது. பல தாவரங்கள், மரங்கள் எரிந்த கரித்துகள் (குறுந். 291: 1), உதிர்ந்து மட்கும் இலைகள் (ஐங். 203), மழைநீரால் கொண்டுவரப்படும் சருகுகள் (நற். 53: 4-5), உதிர்ந்த மலர்கள் (நற். 272: 33-6), பெருங்காற்றில் உதிர்க்கப்பட்ட காம்பு கழிந்த தேக்கின் இலைகள் (அகம். 299) முதலிய தாவர உறுப்புகள் நிலத்தின் அங்ககப் பொருட்களாக அமைகின்றன. இறந்த நிலையியலுயிர்கள், இயங்குயிர்கள் மற்றும் அவற்றின் கழிவுகள் நுண்ணுயிரிகளால் முழுமையாகச் சிதைக்கப்படாத போது, கரியமிலத்தன்மை கொண்ட பொருள் தோன்றி அது தாதுப்பொருட்களுடன் கலக்கும் பொழுது இலைமட்கு' தோன்றுகிறது. மேல்மண் என்பது, இலைமட்குகளின் கணக்கற்ற படிவங்களும், நன்கு நுண்துகள்களான இயற்கைத் தாவர அங்ககப் பொருட்களும் மண்ணுடன் கலந்து சேர்ந்த கலவையே ஆகும். இத்தகைய மேல்மண் படிவம் புதிதாக ஒரு அங்குலம் கனத்துக்கு உண்டாக ஆகும் காலம் 500 முதல் 1000 ஆண்டுகள் வரை ஆகும்"5 என்பர். மண்வளத்தால் நிலையியலுயிர்களின் பெருக்கம் அதிகமாகக் காணப்பட்டது. குளத்தில் நீரற்ற காலத்தும் இடப்பட்ட விதையானது செழிப்புற்று வளர்ந்தது. இதனை, இன்றையக் காலகட்டத்தில் குளங்களில் நீர்வற்றிய காலங்களில் வெள்ளரி போன்ற செடிகளைப் பயிர் செய்வதன்வழி உணரமுடிகின்றது. வரகும் பிற பயிரினங்களும்கூடச் செழிப்பாக வளர்ந்தன (புறம். 120: 13).

மண்வளத்தைப் பண்படுத்தும் வேளாண் தொழில்நுட்பக் காரணிகள்

1.உழுதல்

உழுதல்' என்ற தொழிற்பாடு மண்வளத்தைப் பண்படுத்த ஏற்படுத்தப்பட்ட செயற்பாடு ஆகும். ஆனால், தொடக்கத்திலேயே இவ்வரிய பணி நடந்திடவில்லை. உணவுத் தேவையின் பொருட்டுக் காடுகளை அழித்தும், மலைச்சரிவுகளிலும் உழவுப் பணியைத் தொடங்கியுள்ளனர். பயிர்த்தொழிலை மேற்கொண்ட மனிதன் நிலத்தை உழவுக்கு ஏற்றது, ஏற்றதல்லது எனப் பிரித்து உணர்ந்தான். உழவுக்கேற்ற நிலங்களில் நெல்லையும், பிற இடங்களில் கொள் முதலிய சிறுதானியப் பயறுகளையும் பயிரிட்டான். பின் நீர்வளச் சூழலியல் மிகுந்த நாகரிக வாழ்வியலை மேற்கொண்டபோது நீர்ப்பாசன அடிப்படையில் நன்செய் நிலம், கிணறு பாசனமுள்ள தோட்டம் (பழனம்), மழையை மட்டுமே நம்பி விளையும் மானாவாரி நிலம், புன்செய் நிலம், மலைத்தோட்ட நிலம் என்று பகுத்தான். அதற்கேற்ற பயிரினங்களைப் பயிர்செய்யக் கற்றுக்கொண்டான். சங்ககால மக்கள் புவியியல் அடிப்படையிலான ஐவகை நிலச் சூழலியலுக்கு ஏற்ப விளைபொருட்களை விளைவித்து உண்டனர். ஆனால், இன்றைய அறிவியலார் நம் நாட்டின் மண்வகைகளை எட்டுப் பிரிவுகளாகப் பிரித்துக் கூறுகின்றனர். அவை,

'1. கரிசல் மண் (Black soil) 2. வண்டல் மண் (Allurial soil) 3. செம்மண் (Red soil) 4. செம்புறை மண் (Laterite soil) 5. காடு மற்றும் மலை மண் (Forest and Hill soils) 6. பாலைவன மண் (Desert soil) 7. உவர் மற்றும் களர் மண் (Sailne and alleailne soil) 8. மக்கு மண் அல்லது சதுப்பு மண் (Peaty and maistey sill)"6 என்பவையாகும். மேற்கண்ட மண்படிவுகள் அனைத்தும் இலக்கியங்களிலும் சித்திரிக்கப்படுதலைக் காணமுடிகின்றது. வண்டல் மண், மருதநிலத்தில் ஆற்றுப்படுகைகளில் மிகுதியாக அமைந்திருக்கும். செம்புறை மண் மலைப்பாங்கான குறிஞ்சிநிலப் பகுதியில் அமைந்திருக்கும். மணற்பாங்கான மண் கடல்பகுதியான நெய்தலிலும், செம்மண் அமைப்பு முல்லைப் பகுதியிலும்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அமைந்திருக்கும். கரிசல் மண் பெரும்பான்மை நன்செய் நிலத்திற்கும், சிறுபான்மை புன்செய் நிலத்திற்கும் உரியது.

குறிஞ்சி நிலக் கானவன் புதுக்கொல்லையினை உருவாக்குவதற்காகக் காட்டை அழித்த விவரத்தினை,

இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்" **(அகம்.** *140)*

கரும்பு மருள் முதல் பைந்தாட் செந்தினை" **(குறுந்.** *198)*

மரம்கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய
தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம்" **(அகம்.** *368)*

என்ற பாடலடிகள்வழி அறிய முடிகின்றது. மரங்களை எரித்துப் பண்படுத்த வேண்டி மலைநிலத்து உழவு செய்தனர். உழவு, வேளாண் நாகரிகத்திற்கு வித்திட்டதாகக் க.ப. அறவாணன் குறிப்பிடுகின்றார். இரும்பின் அறிமுகத்தால் கால்நடை நாகரிகத்திலிருந்து வேளாண் நாகரிகத்திற்கு மக்கள் வளர்ச்சி பெற்றனர். தினை, வரகு தானியங்கள் இரும்பின் வரவிற்கு முன்பும், நெல் இரும்பின் வரவிற்குப் பின்னும் செல்வாக்குப் பெற்றன. ஆற்றுநீரை வேளாண்மைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் அறிவு உலோகக் காலத்தில் வந்தது. கொம்புள்ள விலங்குகளை வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்தி உள்ளனர். வேளாண்மை நாகரிகம், நகர நாகரிகம் தோன்ற வழி கோலியது. வேட்டையும் ஒருபுறம் இருந்துள்ளது."7

நிலத்தை உழுவதற்குக் கலப்பை என்ற உழவுக் கருவியைப் பழந்தமிழர் பயன்படுத்தினர். இன்றும் பயன்படுத்தி வருகின்றனர். தொடக்கக் காலத்தில் மரக் கலப்பையும் பின்னர் இரும்புக் கொழு பொருத்தப்பட்ட கலப்பையும் பயன்பாட்டில் இருந்துள்ளது. உழவுத்தொழில் செய்வோர் செஞ்சால் உழவர்' என்று அடைமொழியிட்டு அழைக்கப்பட்டனர். உழவு செய்யப்பட்டதை,

'. . . . . **உறுவயல்**
தண்துளிக்கு ஏற்ற பலஉழு செஞ்செய்
மண்போல் நெகிழ்ந்து" **(அகம்.** *26)*

வள்ளுவர் நிலத்தைப் பண்படுத்த உழவு மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தை,

தொடிப்புழுதி கஃசாஉணக்கின் பிடித்து எருவும்
வேண்டாது சாலப் படும்" **(குறள்.** *1037)*

என்ற குறளடிகள்வழி விளக்குகின்றார். இதன்வழி மண்வளத்தை மேம்படுத்துவதில் உழவின்; அவசியத்தை உணர முடிகின்றது. சங்கப் புலவர்கள் வேளாண்மை சார்ந்த அறிவியல் அறிவு பெற்றவர்களாகத் திகழ்ந்துள்ளனர். சங்கத் தமிழர் சுற்றுப்புறச் சூழல் கெடாமல், மண்தாயின் மடி சேதாரமாகாமல் இயற்கை முறையில் விவசாயம் செய்திருக்கின்றனர். விவசாயத்திற்குத் துணையாக ஆடு, மாடு, கோழிகளை வளர்த்தனர். நிலத்தைப் போற்றினர். சிறுநிலத்தில் மிகுதியான அளவு விளைச்சலையும் செய்து காண்பித்தனர்."8 இதற்குச் சான்றாகப் புறப்பாடலில் காணப்படும்

'ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே?" **(புறம்.** *40)*

என்ற பாடலடிகள் விளங்குகின்றன. தேர்,ந்தெடுத்த எருதுகளைக் கொண்ட உழவர்கள் மண்பிறழும்படி உழவு செய்தனர். இதனை,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

நெடுநெல் அடைச்சிய கழனி ஏர்புகுத்து,
குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர,
அரிகால் போழ்ந்த தெரிபகட்டு உழவர்
ஓதைத் தெள,விளி புலம்தொறும் பரப்ப” (அகம். 41)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. நிலத்தில் கலப்பை ஆழமாக ஊன்றி உழுவதால் நெல்லின் விளைச்சல் மிகுதியாக இருந்தது (புறம். 35: 25-26).

2.இருவகை உழவு

பண்டைத் தமிழர் நன்செய் மற்றும் புன்செய் நிலங்களில் மாறுபட்ட உழவு முறையைக் கையாண்டனர். 1. நன்செய் - சேற்று உழவு - மரக்கலப்பை 2. புன்செய் - புழுதி உழவு - இரும்புக்கலப்பை கொண்டு உழவு செய்தனர். கொல்லை நிலத்தை உழுதலை,

கொல்லை உழுகொழு” (பொருநர். 117)

என்ற பாடலடியும், செம்மண் நிலத்தில் மண், மேல் கீழாகப் புரளுமாறு புழுதி உழவு செய்யப்பட்டதை,

ஊன் கிழித்தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்
வித்திய மருங்கின் விதைபல நாறி” (அகம். 194)

என்ற பாடலடிகளும், அறுவடை செய்த வயல்களில் அரிதாள் பிளவுபடும்படி சேற்று உழவு செய்ததை,

‘அரிகால் போழ்ந்த தெரிபகட்டு உழவர்” (அகம். 41)

என்ற பாடலடியும் விவரிக்கின்றன.

3.சமன் செய்தல்

நிலத்தை நன்றாக உழவு செய்த பிறகு அதனைச் சமன் செய்வர். அதாவது நிலத்தின் மேற்பரப்பை மேடு பள்ளங்கள் இல்லாதவாறு இயன்றவரை சரி செய்வர். மேடான பகுதிகளை மண்வெட்டியால் வெட்டித் தாழ்வான பள்ளங்களில் இட்டு உயர்த்துவர். இதனால் நிலத்தில் உள்ள ஒழுங்கற்ற மேடு பள்ளங்கள் சரி செய்யப் படுவதுண்டு. இதனால், நிலம் சமநிலையடையும். இவ்வாறு செய்வதால் நிலத்தின் நீர்ப்பாசனம் ஒரே சீராக இருக்கும். சேற்று நிலத்தில் இவ்வாறு செய்து பரம்பு வைத்த பிறகு விதை விதைப்பதோ நடவு செய்வதோ நடைபெறும். நன்றாக உழவு செய்த பிறகு சேற்றினை உழவர்கள் கால்களால் நன்கு மிதித்துச் சமப்படுத்தினர் என்பதை,

‘. . . . . **செறுவின்**
உழாஅ நுண்தொளி நிரவிய வினைஞர்” (பெரும். 210-211)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

4.விதைத்தல்

நிலத்தை உழவு செய்து பண்படுத்திய பிறகு விதை விதைப்பர். நெல் விதைத்தல், வரகு விதைத்தல், சாமை விதைத்தல் முதலியவை முல்லை மற்றும் மருதநில மக்களின் தொழில்கள் ஆகும். விதைத்தல் பற்றிய செய்தியை,

பல்விதை உழவின சில்ஏராளர்” (பதிற். 76: 11)
வெண்ணெய் வித்தின் அறைமிசை உணங்கும்” (அகம். 211)

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற பாடலடிகளும், எருதுகள் பூட்டிய ஏர்கொண்டு உழுது நீர்பாய்ச்சி பயற்றங் கொல்லையினை வளர்த்ததை,

'முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கி
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி, ஆகுவினைக் கலித்து" (அகம். *262)*

என்ற பாடலடிகளும் குறிப்பிடுகின்றன.

இருவகை விதைப்பு முறைகளைப் பண்டைத் தமிழர் கையாண்டனர். புழுதிவிதை பயிர் செய்யும் முறையானது கோடைக்காலங்களில் நடைபெறும். நிலத்தை நன்கு உழுது, உலரவிட்டு அதன்பிறகு நீர்பாய்ச்சி விதைகளைத் தெளிப்பர். நீர்த்தட்டுப்பாடு உள்ள காலங்களில் இவ்விதை முறை கையாளப்பட்டது. இதனை,

'ஊன்கிழித்தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்
வித்திய மருங்கின் விதைபல நாறி" (அகம். *194)*

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

சேற்றுவிதை முறை என்பது நிலத்தில் நீர் பாய்ச்சி, நன்கு உழுது சேறாக்கி, தண்ணீர் நிரப்பிய பிறகு விதைகளைத் தெளிப்பதாகும். இது பெரும்பாலும் மழைக் காலங்களில் நடைபெறும்.

'. . . .. கான்உழு குறவர்
சிலவித்து அகல இட்டெனபல விளைந்து" (நற். *209)*

மேற்கண்ட பாடலடிகளில் குறவர் மலைப்பகுதியை அகலப்படுத்தி, மழைபெய்த காலத்துப் பதமாக உழுது விதைத்த செய்தியினை அறியமுடிகின்றது. பயன்மிக்க நிலம் பல வகையான உணவுத் தானியங்களை விளைவித்தது என்பதை (கலி. *20)* பாடலடிகள் உணர்த்துகின்றன. வரகு, தினை போன்ற தானியங்களை உழுது விதைத்ததை,

'வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்
கார்ப்பெயல் கலித்த பெரும்பாட்டு ஈரத்து
பூழிமயங்கப் பலஉழுது வித்தி,
. . . .
வாலிதின் விளைந்த புதுவரகு அரிய
தினைகொய்ய கலவை கறுப்ப கோட்பதம் ஆக" (புறம். *120)*

என்ற பாடலடிகள் விவரிக்கின்றன. நீர் நிறைந்த பள்ளத்தில் விதைத்த வித்து நீரின் செழிப்பினால் கரும்பு போல் தழைத்து வளர்ந்ததை,

'கயத்து இட்ட வித்து வறத்தின் சாவாது
கழைக் கரும்பின் ஒலிக்குத்து" (புறம். *137)*

என்ற பாடலடிகள்தெளிவுறுத்துகின்றன. ஏர் உழுத வயல்களும் நீர்நிறைந்த கழனிகளும் பல இருந்தன (புறம். *338: 1)*. மேற்கண்ட செய்திகளின்வழி விதை விதைத்தலுக்கு உரிய நிலத்தைத் தேர்வு செய்து தயார் செய்தல், புழுதி மற்றும் சேற்றில் விதை தெளித்தல், விதைகள் சேதப்படுதல் உள்ளிட்ட செய்திகளை இலக்கியங்கள்வழி அறியமுடிகின்றது.

5.பருவம் அறிந்து பயிர் செய்தல்

பண்டைத் தமிழர்கள் பருவம் அறிந்து அதற்கேற்றவாறு பயிர்த்தொழிலை மேற்கொண்டனர். இதனை,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பன்மர உயர்சினை மின்மினி விளக்கத்துச்
செல்மழை இயக்கங் காணும்" **(நற்.** *44)*

என்ற பாடலடிகள் தெரிவிக்கின்றன. மழவர்கள் காட்டில் பலாவைப் பக்குவமாய் வளரும் சூழலுக்கேற்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து விளைவித்தனர். மண்வளத்தால் மரங்கள் செறிந்து வளர்ந்திருந்தன. இதனை,

"கடுங்கண் மழவர் களவு உழவு எழுந்த
நெடுங்கால் ஆசினி ஒழுங்காட்டு உம்பர்" *(அகம். 91: 11-12)*

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

*6.*நடுதல்

சேற்று நிலத்தில் நாற்றுகளைப் பரவலாக ஊன்றும் செயலை 'நடுதல்' என்பர். நடுதல் பற்றிய செய்தியை,

"முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில்" **(பெரும்பாண்.** *212)*

நீர்உறு செறுவின் நாறுமுடி அழுத்தநின்
நடுநரொடு சேறி ஆயின்" **(நற்.***60)*

என்ற பாடலடிகள் தெரிவிக்கின்றன. நடவு நெருக்கமாக அமைந்து இருந்தால் விளைச்சல் பெருகும். இரு நாற்றுக்களுக்கான இடைவெளி அளவை 'நண்டு ஊர நடவு' என்ற பழமொழியின் வாயிலாக உணரமுடிகின்றது. நண்டு ஊர்ந்து செல்லுமளவிற்கு இடைவெளி இருப்பின் நல்ல காற்றோட்டம் பயிர்களுக்குக் கிடைக்கும். தற்காலத்தில் நடவுசெய்ய எந்திரங்களும், களையெடுப்பு எந்திரங்களும் பயன்படுத்தப் படுகின்றன.

*7.***நீர் பாய்ச்சுதல்**

வேளாண்மைத் தொழிலில் முக்கியப் பங்கு வகிப்பது நீர் பாய்ச்சுதல் ஆகும். சங்ககால மக்கள் வேளாண்மைக்கு ஆற்றுப்பாசனம், ஏரிப்பாசனம், குளத்துப்பாசனம், கிணற்றுப்பாசனம் ஆகிய பாசன முறைகளைப் பயன்படுத்தினர். இதனை,

"காடு கொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி" **(பட்டி.** *283-284)*

என்ற பாடலடிகள் தெளிவாக்குகின்றன. குளம் வெட்டி நீரைத் தேக்கிப் பயிர்த் தொழிலுக்கு உரிய முறையில் அமைத்துத் தருவது மன்னனின் கடமையாகும். அருவிகளும் சுனைகளும் பயிர்த்தொழிலுக்குப் பயன்பட்டன. இதனை,

"மைபடு சிலம்பின் ஐவனம்
வித்தி அருவிமன விளைக்கும்" **(குறுந்.** *37)*

என்ற பாடலடிகள் விவரிக்கின்றன. பண்டைத் தமிழர் மழை வளத்தால், நீர்வளம் பெற்றுப் பயிர்களைக் காத்தனர். நீரைத் தேக்கி வைத்து தேவையான பொழுது பயன்படுத்தவும், வாரி, மதகு, மடை, மடு போன்றவற்றைக் கட்டியுள்ளனர். இதனை,

"*. . . . .* கலிமகிழ் உழவர்
காஞ்சிஅம் குறுந்தறி குத்தி, தீம்சுவை
மென்கழைக் கரும்பின் நன்பல மிடைந்து
பெருஞ்செய் நெல்லின் பாசவல் பொத்தி
வருத்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை
மீதுஅழழி கழுநீர் நோக்கி" **(அகம்.** *346)*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன. இன்றையக் காலகட்டத்தில் மிகப்பெரிய அணைக்கட்டுகள் அமைத்து நீரைத் தேக்கி வைக்கும் தன்மையைக் காணமுடிகின்றது.

8.எருவிடுதல்

விளைச்சலைப் பெருக்கும் வகையிலும் மண்வளத்தைக் காக்கும் வகையிலும் எருவிடுதல் பழங்காலந்தொட்டே நடந்து வருகின்றது. மண்வளத்தைக் காத்தலில் எருவிடுதல் என்பது இரண்டு நிலைகளில் நடைபெறுகின்றது. சேற்று உழவில் தழை உரங்களை இடுவதும், பயிர் செய்த பின்பு எருவிடுதல் (உரம் சேர்த்தல்) என்பதும் ஆகும். எருவிடுதலின் இன்றியமையாமையை வள்ளுவரின்,

"ஏரினும் நன்றால் எருஇடுதல் நட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு" (குறள். 1038)

என்ற குறளடிகள்வழி அறியமுடிகின்றது.

இலை, தழைகளை வயலில் இட்டு உழவு செய்யும் இயற்கை விவசாய முறை மருதநில உழவர்களால் பின்பற்றப்பட்டது. பண்டைத் தமிழர்கள் கால்நடைகளின் கழிவுப் பொருள்களான தொழு உரத்தையும் இலை, தழைகளாகிய பசுந்தாள் உரத்தையும் பயன்படுத்தினர். இவற்றை உரமாகப் பயன்படுத்தும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது. அறிவியலார் இயற்கை உரங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை 1. தொழு உரம் 2. பசுந்தாளுரம் 3. தென்னைநார் மக்கல் 4. உயிர் உரங்கள் என்பனவாகும்.

9.தொழுவுரமும் பசுந்தாளுரமும்

இயற்கையில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி மண்வளத்தைப் பேணிக் காத்தனர். தொழுவுரமும், பசுந்தாள் (எ) தழையுரமும் பயன்படுத்திப் பழந்தமிழர் மண்ணின் வளம் காத்தனர். "விவசாயிகளின் வீட்டில் வளர்க்கப்படும் ஆடு, மாடுகளுக்கு உணவாகக் கொடுக்கப்படும் இலை, தழை, வைக்கோல், பொட்டு, தவிடு, பிண்ணாக்கு போன்ற தீனிகள் தின்றது போக மீதிக் கழிவுகளை அவற்றின் கழிவுப் பொருட்,களுடன் சேகரித்துத் தினசரி குப்பைக் குழியில் கொட்டி, வண்டல் மண்ணால் மூடி, மக்கவைக்கப்படுகின்றன. விதைப்புக்கு முன் இத்தொழி உரமானது நெல், கரும்பு, சோளம் பயிர்களுக்கு உரமாக இடப்பட்டுப் பயிரிடப்படுகிறது. இதனால் விளைச்சல் போதுமான அளவு அதிகரிக்க ஏதுவாகிறது. இதற்குத்தான் தொழுவுரம் என்று பெயர்."9 பழந்தமிழர் ஆடு, மாடுகளை இரவு நேரத்தில் வயல்களில் மந்தையாகத் தங்கச் செய்வர். இவ்வாறு செய்வதை, 'கிடைகட்டுதல்' என்பர். கிடை கட்டுகின்ற செயலை,

"மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற இடையன்" (அகம். 94)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன. 'தொறுத்த வயல்' என்பதற்கு ஆட்டுக்கிடை கட்டப்பட்ட வயல் என்று உரையாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர். குப்பைக் கூளங்கள் உரமாகப் பயன்படுத்தப்பட்ட செய்தியும் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. உதிர்ந்த இலைகளும் தழைகளும் மலர்களும் குப்பையாகி எருவாகும் என்பதைப் பல பாடல்கள் விளக்குகின்றன. இவை நல்ல இயற்கை உரமாக மண்வளத்தை மேம்படுத்த உதவுகின்றன.

"தாதுஎரு மறுகின் பாசறை பொலிய" (புறம். 33: 11)
"தாதுஎரு மறுகின் மூதூர்" (அகம். 165)

என்ற பாடலடிகள் எருவாதலைக் குறிப்பிடுகின்றன.

இலை, தழைகளை வயலில் இட்டு உழவு செய்யும் 'பசுந்தாளுர மேம்பாடு' பண்டைத் தமிழரால் பின்பற்றப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. மருதநில வயல்களில் காஞ்சி மரங்களின் தழைகளையும், மலர்களையும் சேற்றில் இட்டு உழவு செய்ததை அறிய

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

முடிகின்றது. 'வயல், நிலங்களை நீர் பாய்ச்சிக் கலப்பையால் உழுது, சேறாக்கிப் பசுந்தழைகளான சங்பேனியா, கிளைசீடியா, நிலவேம்பு, பூவரசு, வாதநாராயணன், ஆவாரை, வாகை, புங்கள் போன்ற பசுந்தழைகளைப் பரப்பி, ஆட்களைக் கொண்டு சேற்றில் மிதித்து, அமிழ்த்தி, நெற்பயிர் நட்டால் நல்ல பலன் கிடைக்கும்."10 அறிவியலார் பசுந்தாளுரத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் கூறுகின்றனர். இவ்வுரமானது பயறுவகைச் செடி, பயறுவகை மரப்பயிர்கள் என்பதாகும். பசுந்தாளுரத்தை மண்ணில் இடும்போது கோடிக்கணக்கான நுண்ணுயிர்களால் தழை சிதைக்கப்பட்டு மக்கி உரமாக மாற்றப்படுகின்றது. இவை தாவரங்களுக்கு நல்ல ஊட்டச்சத்தை வழங்கி மண்ணிற்குக் காற்றோட்டமும், நீரோட்டமும் கிடைக்கின்றது.

பயறுவகைச் செடி: செஸ்பேனியா எனப்படும் சீமை அகத்தி, சணப்பு, தக்கைப் பூண்டு, நரிப்பயறு, தட்டைப்பயறு

பயறுவகை மரப்பயிர்கள்: அகத்தி, கிளசிரிடியா, சுபாபுல் என்பவையாகும்

இவை தவிர, தானாக வளரும் கொளுஞ்சி, ஆவாரை, எருக்கு, ஆதாளை ஆகிய செடிகளும் பசுந்தாள் உரமாகப் பயன்படுத்தப்படுகின்றன."11 இலக்கியத்தில் காஞ்சி மரத்தின் தழைகளை உழவுத்தொழிலுக்குப் பயன்படுத்தியதை,

பயறுபோல் இணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி" (குறுந். 10)

'காஞ்சித் தாது உக்கன்ன தாதுஎரு மன்றத்து" (கலி. 8)

என்ற பாடலடிகள் விவரிக்கின்றன.

10.களையெடுத்தல்

பயிரிட்டபின்பு பயிர்களுக்கிடையே காணப்படும் பிற இலை, தழைகளை களையெனக் கருதி நீக்குவர். இவ்வாறு செய்வதால் பயிர் நன்கு வளரும். நன்செய் நிலத்தில் கோரை, நெய்தல் மற்றும் பிற செடிகள் களைகளாக வளரும். அவற்றைக் களைக்கொட்டு எனும் கருவி கொண்டு நீக்குவர். களையெடுப்பின் போது கொம்புடைய ஓலைக்குடையைத் தலையில் கவிழ்த்திக் கொள்வர். இதனை,

'கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்
கறங் குபறைச் சீறின் இறங்க வாங்கி
களைகளால் கழீஇய பெரும்புன வரகின்" (அகம். 194)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

11.பயிர்ப் பாதுகாப்பு

களைகளிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பது போலப் பூச்சிகள், கால்நடைகள், பறவைகள், வனஉயிரிகள் போன்றவற்றிடமிருந்தும் பயிர்களைக் காப்பது மனிதனின் செயல்பாடாக இருந்துள்ளது. ஆண்கள் தீப்பந்தம் ஏந்தி இரவிலும், பெண்கள் பரண்மேல் அமர்ந்து பகலிலும் விளைநிலங்களைப் பாதுகாத்தனர். பகல் நேரங்களில் கிளி, குருவி, மயில், செம்பூழ்,ப்பறவை போன்றவற்றிடமும், யானை, பன்றி, மான், குரங்கு போன்றவற்றிடமிருந்தும் விளைநிலங்களைக் காக்கக் காவல்புரிந்தனர். பறவைகளை விரட்ட உதவும் தழல், தட்டை, குளிர் ஆகிய கருவிகள் மகளிரே பயன்படுத்தும் அளவுக்கு மென்மையான கருவிகளாக இருந்தன. இதனை,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"காவல் கண்ணினம் தினையே" *(அகம். 92)*

"சிறுதினைப் படுகிளி கடீஇயர்" *(அகம். 32)*

புருவைப் பன்றி வருதிறம் நோக்கி,
முதைப்புனம் காவலர் நினைந்திருந்து ஊதும்" *(அகம். 94)*

"கல்லென் புள்ளின் காலைத்

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. தினைப்புனத்தை அழிக்க வரும் மான் முதலிய இயங்குயிர்களை அச்சமுறச் செய்து விரட்டுவதற்கு பெண்புலிப் பொம்மையை, கானவர் செய்து வைத்தனர். இதனை மெய்யென்று கருதி ஆண்புலி கூடியதை,

"கல்முகை வயப்புலி கழங்கு மெய்ப்படூஉ
புன்புலம் வித்திய புனவர் புணர்த்த
மெய்மை அன்ன பெண்பாற் புணர்ந்து
மன்றில் பையுள் தீரும்" *(ஐங். 246)*

என்ற பாடலடிகள் வழி அறியமுடிகின்றது. இன்றைய வேளாண் விஞ்ஞானிகள் வயல் நிலங்களில் உருவ பொம்மைகள் வைப்பது பயிரை அழிக்கும் எலி, பூச்சி இனங்களை உண்ணவரும் பறவை இனங்கள் அமரும் இடமாக உள்ளது. ஆகையால் தீமை செய்யும் உயிர்களை அழிப்பதற்கும் மறைமுகமாக உருவபொம்மைகள் அமைகின்றன.

பயிர்களை அறுவடை செய்தபின் அவற்றைக் காயவைத்து அடித்தோ, மாடுகள் ஓட்டியோ தானியம் பிரிப்பது வழக்கமாக இருந்தது. ஆனால், இன்றைய அறிவியல் படைப்புகளாக நெல்அறுவடை இயந்திரம், அறுத்த நெற்கதிரிலிருந்து மணிகளைப் பிரித்தெடுக்கும் கருவிகள், பதர்களைப் பிரித்தெடுக்கும் கருவிகள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், பழந்தமிழர் நெல்மணிகளைத் தூற்றும்பொழுது எழுந்த தூசுக்கள் நெய்தல்நில உப்பங்கழிகளில் சென்று படிந்து மாசுபடுத்தியதை,

"நீர் சூழ் வியன்களம் பொலிய, போர்பு அழித்து
கள்ஆர் களமர் பகடுதலை மாற்றி

இருநீர்ப் பரப்பின் பனித்துறைப் பரதர்
தீம்பொழி வெள் உப்புச் சிதைதலின் சினைஇ,
கழனி உழவரொடு மாறு எதிர்த்து" *(அகம். 366)*

என்ற பாடலடிகள் எடுத்தியம்புகின்றன. நெல்லைத் தூற்றிச் சுத்தம் செய்தபின் அவற்றை உணவிற்காகவும், பின்னாளில் பயிர்செய்யவும் பக்குவப்படுத்தி வைத்தனர்.

12.பயிர்ச் சுழற்சிமுறை

மண்ணின் வளத்தைப் பாதுகாக்கப் பயிர்ச்சுழற்சி முறை இன்றியமையாதது ஆகும். சுழற்சி முறையில் பயிர் செய்வதால் மண்ணில் பல்வகைச் சத்துக்களும் நிலைநிறுத்தப்படுகின்றன. பயறு வகைகளின் வேர்முடிச்சுக்கள் நைட்ரஜன் சத்தைச் சேமித்து வைக்கக் கூடியவை ஆகும். பழங்குடியினரின் விவசாய நடைமுறைகள் குறிப்பாக சுழற்சி முறையில் மாறிமாறிப் பயிரிடும் முறை சுற்றுச்சூழலுக்கு மிகவும் பாதுகாப்பானதாகவும், அவர்களுடைய உணவுத்தேவையை, வேலைவாய்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்துள்ளது. சுழற்சி முறையில் மாறி மாறிப் பயிரிடுதல் என்பது காடுகளுக்கும், இயற்கைத் தாவரங்களுக்கும் புத்துயிரூட்டியது. பன்முகத் தன்மைக்கு வழி வகுத்தது."12

நெல், தினை போன்ற பயிர்களை அறுவடை செய்தபின் நிலத்தில் நைட்ரஜன் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதனை நீக்குவதற்கு, நைட்ரஜன் உற்பத்தியைத் தானே செய்யும் வேர்முடிச்சுகள் உள்ள நிலையியலுயிர்களைப் பயிர் செய்தனர். வேர்முடிச்சுகளில் நைட்ரஜனை ஈர்க்கக்கூடிய நுண்ணுயிர்கள் உள்ளன. மறுசுழற்சி செய்வதற்கான அறிவியல் அறிவை மக்கள் பெற்றிருந்தனர் என்பதை,

'அரிகால் மாறிய அம்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர" *(நற். 210)*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

13.மறுதாம்புப் பயிர் முறை

தினைக்கதிர் அரிந்த பின்னர் அதன் அடியில் மீண்டும் கிளைத்து வளரும். அது மறுகால்' என்று அழைக்கப்படுகிறது. குறுங்கரும்பின் அடிக்கட்டை மறுகாலாக விடப்பெறும். அவை விளைந்தபின் அறுவடை செய்வர். முற்றிய கரும்பு நிலத்தின்மீது சாய்ந்தும், அதன் அடிப்பகுதி மிக்க சுவையுடன் இருப்பதையும்,

'கழனிக் கரும்பின் சாய்ப் புறம்" *(அகம். 360)*

'. . . . . கரும்பின்
கால்எறிக் கடிகைக்கண் அயிற்றன்ன" *(குறுந். 267)*

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

14.கலப்புப்பயிர் முறை (அ) ஊடுபயிரிடும் முறை

ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பயிர்களையும் பயறுவகைகளையும் ஒரே நேரத்தில் பயிர்செய்யும் முறைக்கு 'கலப்புப் பயிர் முறை' என்று பெயர். ஒரு பயிர் விளைந்த பின் அதனையடுத்து மற்றொன்றும் விளைந்து பயன்தரும். இதனைப் பல்பயிர் சாகுபடி' என்றும் குறிப்பிடுவர். தினையுடன், பருத்தியும் அவரையும் கலந்து விதைக்கப்பட்ட செய்தியை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தினையை அறுவடை செய்தபின், தினைத்தாளின் தட்டைகளின் மீது அவரைக் கொடி படர்ந்து, காய்த்துப் புதிய வருவாயைத் தரும். இதனை,

'சிறுதினை கொய்த இருவி வெண்கால்
யாணர் ஆகிய நல்மலை நாடன்
காய்த்த அவரை படுகிளி கடியும்" *(ஐங். 286)*

என்ற பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன.

15.தீவிரப் பயிர்ச் சாகுபடி

வளர்ந்துவரும் மக்கள்தொகைக்கேற்ப உணவு உற்பத்தி முறைகளில் புதிய உத்திகளைக் கையாளுதல் அவசியமான ஒன்றாக உள்ளது. உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் நிலத்தில் தீவிர முறைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து உணவுப் பொருள் பெருக்கத்தைக் கையாளுவதற்கு, தீவிர பயிர்ச் சாகுபடி' என்று பெயர். இதனை வலியுறுத்தும் விதமாக புறநானூற்றுப் பாடலில்

'ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடு கிழவோயே" *(புறம். 40)*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. ஒருபெண் யானை படுத்திருக்கும் சிறிய இடத்தில் ஏழுஆண் யானைகளைப் பாதுகாக்கும் அளவிற்கு உணவு உற்பத்தி செய்யும் வளமுடைய நாடு என்பது பாடலின் விளக்கமாக உணரமுடிகின்றது. சிறிய இடத்தில் மிகுந்த அளவு உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் தீவிரப் பயிர்ச் சாகுபடி முறை சிறந்ததாக இருந்ததை உணரமுடிகின்றது.

நிறைவுரை

உழவுத்தொழிலுக்கு நிலத்தைப் பண்படுத்துதல் பழங்காலந்தொட்டு இன்றளவும் நடைபெற்று வருகிறது. அதனால் நிலங்களைப் பண்படுத்துதல், நீடித்த மற்றும் சூழலுக்குகந்த வகையில் பயன்படுத்துதல் அவசியமாகிறது. நீடித்திருக்கக்கூடிய, மண்ணிற்குக் கேடு விளைவிக்காத உணவுப்பயிர்களின் வளரிடச்சூழல், பருவகாலச் சூழல், பயிர்களின் தோற்றம், வளர்ச்சிநிலை ஆகியவற்றை அக்காலத்தே மக்கள் அறிந்திருந்தனர். முல்லைத்திணையில் வரகு, சாமை போன்றவற்றையும், மருதத் திணையில் நெல், கரும்பு, வாழை போன்றவற்றையும் பயிர்ச்சுழற்சி' முறையிலான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உழவுத்தொழில் செய்தனர். மருதநில வயல்வெளிகள் நன்னீர் மிகுந்தும், வயல், பழனம், கழனி, செறு என்று பல பெயர்களில் வழங்கப்படுவதையும் காணமுடிகின்றது.

பல்பயிர்ச் சாகுபடித் திட்டத்தின்கீழ் ஒரே நேரத்தில் பல்வேறு பயிர்களை உற்பத்தி செய்வதன் மூலம் தனிமனித வருவாய்ப் பெருக்கம், ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு, சமுதாயத் தேவையை நிறைவு செய்தல் எனப் பல கோணங்களில் பயன்தரும் விவசாய முறையாக இம்முறை கையாளப்படுகின்றது. மண்வளம் காக்கப்படுகின்றது.

நீடித்திருக்கக்கூடிய மண்ணிற்குக் கேடுவிளைவிக்காத விவசாய முறையாகப் பண்டைத் தமிழர் மேற்கொண்ட பயிர்ச்சுழற்சி முறையிலான தொழில்நுட்பம் விளங்குகிறது. பழந்தமிழரின் உழவுத்தொழில் நடைமுறைகளில் படிப்படியாக ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில்தான் இந்தப் பயிர்ச்சுழற்சி முறையிலான வளர்ச்சி நிகழ்ந்துள்ளதைக் காணமுடிகின்றது. இலக்கியங்களில் குறிப்பிடப்படும் சிறுதானிய வகைகள் வறட்சியைத் தாங்கி வளரக் கூடியவையாக உள்ளன. மரபுசார்ந்த உழவுத்தொழிலால் பின்வரும் நன்மைகள் விளைகின்றன.

- இயற்கை உரங்களைப் பயன்படுத்துவது செலவு குறைந்ததாக உள்ளது.
- இயற்கை உரங்களில் பயிர்களுக்கு வேண்டிய எல்லாச் சத்துக்களும் இருக்கின்றன.
- மண்ணில் வாழும் பலவகையான நுண்ணுயிர்களுக்கு உரங்கள் உணவாக அமைகின்றன.
- மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் குணங்களை மேம்படுத்துகின்றன. நல்ல காற்றோட்டமும் வடிகால் வசதியும் ஏற்படுகின்றது. ஆகவே, பயிர் நன்கு செழித்து வளர வாய்ப்பு ஏற்படுகின்றது.
- ஈரப்பிடிப்புத் தன்மையை அதிகரிக்கிறது. ஆகையால் பயிர்கள் நன்கு வளர ஏதுவாகின்றது.
- இயற்கை உரங்கள் நிலத்தில் போர்வையாக அமைந்து மண்ணில் நீர் ஊடுருவும் தன்மையை அதிகரிக்கின்றது.
- இயற்கை உரங்கள் மண் இறுக்கத்தைக் குறைக்கும்.
- இயற்கை உரங்கள் நிலப்போர்வையாகப் பயன்பட்டு நிலத்திலிருந்து நீர் ஆவியாகி வீணாவதைத் தடுக்கிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

சான்றெண் விளக்கம்

1. ஊரோடி வீரகுமார், வயலும் வாழ்வும், ப. *15.*
2. மேலது, ப. *73.*
3. சங்கீதா ஸ்ரீராம், பாரம்பரிய மற்றும் நவீன வேளாண் அறிவியல் வித்தியாசங்களும் விபரீதங்களும் *(*கட்டுரை*)*, ப. *101.*
4. ஊரோடி வீரகுமார், மு.நூ., ப. *15.*
5. எஸ். விநாயகம், *(*தமிழ்*)*, நமது சுற்றுப்புறச் சூழல், ப. *27.*
6. ஊரோடி வீரகுமார், மு.நூ., ப. *17.*
7. க.ப. அறவாணன், தமிழ் மக்கள் வரலாறு, ப. *168.*
8. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல், ப. *49.*
9. இராம. சுந்தரம், வேளாண் அறிவியல் வளர்ச்சி, ப. *103.*
10. மேலது, ப. *103.*
11. அன்புள்ள ஆசிரியருக்கு, தினத்தந்தி, ப. *14.*
12. அர்ச்சனா பிரசாத், சுற்றுச்சூழலும் வாழ்வுரிமையும், ப. *42.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

24. வரலாற்று நோக்கில் வ. வே. சு ஐயரின் சிறுகதை

முனைவர் ரா. நாகேந்திரன்
கௌரவ விரிவுரையாளர், தமிழ் துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,அருப்புக்கோட்டை.விருதுநகர் மாவட்டம்
rrnagendran 62@gmail.com

முன்னுரை

தமிழ் இலக்கியம் சங்க காலம் தொடங்கி இன்று வரை பல்வேறுபட்ட வகைமைகளைக் கொண்ட நீண்டதொரு நெடும்பரப்பினைக் கொண்டு விலங்குகின்றது. நவீன கால இலக்கியங்கள் என்று குறிப்பிடப்படுகின்ற தற்கால இலக்கியங்களான கவிதை சிறுகதை புதினம் எனப்படுகின்ற நாவல் நாடகம் கட்டுரை உரைநடை போன்ற இலக்கிய வகைகள் முதன்மையான பேசு பொருளாக அமைந்துள்ளன

தமிழ்ச் சிறுகதை என்பது பழங்காலம் தொட்டே பாரம்பரியமான கதை சொல்லுதல் என்பதில் தொடங்கி இன்று வரை பல்வேறு கட்டமைப்புகளை கொண்டு விளங்குகின்றது. தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் சிறுகதைக்கான இலக்கணத்தை வரையறை செய்து உள்ளது. அந்த வகையில் சிறுகதை என்பது பழங்காலம் தொட்டு மக்களிடையே வழங்கி வருகின்றதைக் காண முடிகின்றது.

பாரதியார் தொடங்கி வ.வே.சு ஐயர் முதலான நபர்கள் சிறுகதைக்கு முக்கிய பங்களிப்பை செய்து உள்ளனர். இங்கு வரலாற்று நோக்கில் வவேசு ஐயர் அவர்களின் சிறுகதைகளை மட்டும் ஆய்வுக்களமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.

தமிழ் சிறுகதையும் நவீன இலக்கியமும்

நவீன கால இலக்கியங்களான கவிதை சிறுகதை புதினம் என அழைக்கப்படக்கூடிய நாவல் ஆகியவற்றில் கவிதைக்கு அடுத்தபடியாக அமையக்கூடிய இலக்கிய வகை வகையாக உள்ளது சிறுகதையாகும். கதை சொல்வதும் கேட்பதும் தொல்குடி சமூகத்தின் பொழுதுபோக்கு அம்சமாக இருந்த நிலையில் தொடக்க காலத்தில் இருந்தே கதைகள் என்பது அனைவரிடத்திலும் காணப்படக்கூடிய ஒன்றாகவே இருந்துள்ளது. கதை சொல்பவனின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப கதையினுடைய வடிவமானது குறைவாகவும் நீளமாகவும் அமைய இடம் உண்டு.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பிறகு குறிப்பாக அச்சு ஊடகத்தின் வருகை காரணமாக அதுவரை சொல்லப்பட்டு வந்த கதைகள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு பிறகு நூலாக்கம் செய்யப்பட்டன பரமார்த்த குருவின் கதை பஞ்சதந்திர கதைகள் கதா சாகரம் கதா மஞ்சரி ஈசா பின் நீதிக்கதைகள் மதன காமராஜன் கதைகள் மயில் ராவணன் கதை *32* பதுமை கதை தமிழறியும் பெருமாள் கதை போன்ற பல்வேறு கதை தொகுப்புகள் அச்சு ஊடகத்தின் வருகையின் காரணமாக தொகுக்கப்பட்ட கதைகளாக அறியப்படுகின்றன

சிறுகதையின் வடிவத்தினை குறித்து மேல்நாட்டு அறிஞர்கள் கூறிய கருத்தினை இங்கு எடுத்துக்காட்டுவது என்பது அவசியமாகின்றது

சிறுகதை என்பது அரைமணியில் இருந்து ஒரு மணி அல்லது இரண்டு மணி அவகாசத்துக்குள் ஒரே மூச்சில் படித்து முடிக்க கூடியதாக இருக்க வேண்டும்

அது தன்னளவில் முழுமை பெற்றதாய் இருக்க வேண்டும்

அது தரும் விளைவு ஒரு தனி மெய்ப்பாட்டாய் இருக்க வேண்டும்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கதையைப் படித்து முடிப்பதற்குள் புறத்தே இருந்து எவ்வித குறுக்கீடுகளும் பாதிக்காமல் வாசகனின் புலன் முழுவதும் கதாசிரியனின் ஆதிக்கத்தில் கட்டுப்பட்டதாய் இருக்க வேண்டும் என்று எக்கர் ஆலன்போ என்பவர் சிறுகதையின் இலக்கணத்தை வரையறை செய்கின்றார்.

சிறுகதை என்பது ஒரே ஒரு பாத்திரத்தின் நடவடிக்கைகளை பற்றியோ ஒரு தனி சம்பவத்தை பற்றியோ அல்லது ஒரு தனி உணர்ச்சி தரும் விளைவையோ எடுத்துக் கூறும் இலக்கிய வடிவம் என்று பிராண்டட் மேத்யூஸ் என்பவர் குறிப்பிடுகின்றார்

மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் சிறுகதை ஒரு தனித்த இலக்கிய வடிவமாக இன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது பல்வேறு சிறுகதைகளை ஆராய்ந்த அனைவரும் கதைகள் அனைத்தையும் ஒரே ஒரு வரையறைக்குள் கொண்டு வருகின்றனர்

குறிப்பிட்ட நேரத்தில் சிறுகதையை படித்து முடிக்கும் அளவிற்கு இருக்க வேண்டும் மற்றும் குறிப்பிட்ட சில கதை மாந்தர்களை கொண்டு சிறுகதைகள் அமைய வேண்டும் என்பது இங்கு பெறப்படுகின்றது.

தமிழில் சிறுகதை என்னும் இலக்கிய வகை வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குருவின் கதை என்பதாக சொல்லப்படுகிறது இத்தாலியைச் சார்ந்த வீரமாமுனிவர் கிறிஸ்தவ மதத்தை பரப்பு நோக்கில் தமிழகம் வந்து தமிழ் இலக்கண இலக்கியத்திற்கு பல்வேறு பங்களிப்புகளை செய்ய முற்பட்டபோது அக்காலத்தில் இருந்த மடாதிபதிகளின் அவலத்தை நகைச்சுவையாக சுட்டிக் காட்டும் துணியில் பரமார்த்த குருவும் அவரது சீடர்களும் செய்யும் நகைப்பிற்கு இடமான செயல்களை சீரிய கதைகளாக எழுதினார் இது பரமார்த்த குரு கதை என்று வழங்கப்பட்டது இதனுடைய தொடர்ச்சியாக வீராசாமி செட்டியாரின் வினோதரச மஞ்சள் தாண்டவராய முதலியாரின் மொழிபெயர்ப்பில் உருவான பஞ்சதந்திர கதைகள் போன்ற கதை தொகுப்புகள் தொடர்ச்சியாக வெளிவந்த கதைகளாக அமைந்துள்ளன

தமிழ்ச் சூழலில் அனைவராலும் அறியப்பட்ட பாரதியார் அவர்கள் சந்திரிகையின் கதை ஆறில் ஒரு பங்கு ஸ்வர்ணகுமாரி நவ தந்திர கதைகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் கதைகளை எழுதியுள்ளார் என்பதை அறிந்து கொள்கின்றோம். அதேபோன்று வ வே சு என்று அழைக்கப்படக்கூடிய வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர் என்பவர் சிறுகதைகளை எழுதியுள்ளார் என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆ மாதவையா என்பவரும் *27* கதைகளை எழுதியுள்ளார் என்றும் குறிப்பிடப்படுகின்றது *1924* ஆம் ஆண்டு *16* கதைகளை மட்டும் மொழிபெயர்த்து குசிகர் குட்டி கதைகள் என்ற பெயரில் இரண்டு நூல்களாக வெளியிட்டு உள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது

மாதவய்யாவினது கதைகளை வாசிக்கும் போது அவை சமூக இன்னல்களை கண்டு ஆற்றாத உணர்ச்சி நிகழ்வுடன் எழுதப்பட்டவை என்பது புலனாகும் என்று காசி தம்பி அவர்கள் தம்முடைய நூலான தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்

மேற்கண்ட எழுத்தாளர்களின் சிறுகதைகள் நவீன இலக்கிய சிறுகதையின் வடிவங்களுக்கு பொருந்தாத சிறுகதைகளாக அமைந்துள்ளன என்ற கருத்து வழங்கப்படுகின்ற வேளையில் வவேசு ஐயர் என்று அழைக்கப்படும் வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர் தான் தமிழ் சிறுகதையின் முதல்வர் என்று ஆய்வாளர்களிடையே கருத்து நிலவுகின்றது

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

வாவேசு ஐயர் புதுச்சேரியில் தங்கியிருந்த காலத்தில் மொழிபெயர்ப்பு பணியும் ஆங்கில அறிவும் சிறுகதை எழுத தூண்டிய நிலையில் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது கம்ப நிலையம் என்ற பதிப்பகத்தின் மூலமாக மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் என்ற ஐந்து சிறுகதைகளை மட்டுமே அடங்கிய தொகுப்பை *1917* ஆம் ஆண்டு வெளியிட்டார் இத்தொகுப்பில் மங்கையர்க்கரசியின் காதல் காங்கேயன் கமல விஜயம் அழேன் ழக்கே குளத்தங்கரை அரசமரம் ஆகிய ஐந்து கதைகள் இடம் பெற்றிருந்தன ஐயரின் மறைவுக்குப் பிறகு *1927*ல் அவர் மனைவியின் முயற்சியின் காரணமாக வெளியிடப்பட்ட இரண்டாம் வகுப்பில் எதிரொலியால் லைலில் மஜ்னு அனார்கலி ஆகிய மூன்று கதைகளும் சேர்க்கப்பட்டு வெளியிடப்பட்டதாக அறிகின்றோம்

ஐயர் எழுதிய எட்டு சிறுகதைகளும் மிகச் சிறந்த கதையாக அனைவராலும் அடையாளப்படுத்தப்படும் கதையாக குளத்தங்கரை அரசமரம் அமைகின்றது இதனை தமிழில் முதல் சிறுகதை என்று பாடநூல்கள் தெரிவிக்கின்றன என்ற கருத்தும் இங்கு எடுத்துக்காட்ட போகின்றது பஞ்சதந்திர கதைகளின் தொடர்ச்சியாக மரம் கதை சொல்வதாக கதை எழுதப்பட்டுள்ளது *15* வருடங்களுக்கு முன்பு நடந்த ருக்மணியின் கதையை அரசமரம் நினைவு கூறுவதாக பின்னோக்கி உத்தியில் அதாவது பிளாஷ் பேக் இக்கதை அமையப்பெற்றுள்ளது.

தமிழ் சிறுகதையும் வ வேசு ஐயரும்

மங்கையர்கரசியின் காதல் என்னும் தலைப்பில் வெளிவந்த இரண்டாம் பதிப்பு சிறுகதை தொகுப்பில் எட்டு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.

மக்களின் சீலக்குறைகளே நம் மக்கள் வாழும் நாட்டின் பொது வாழ்வில் உள்ள குறைகளுக்கும் உண்மையான காரணமாகும் நமது நாட்டின் தற்கால பொதுநிலையின் சீர்கேடுகளுக்கு காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தாலும் இவ் உண்மையே வெளியாகும். நமது பொது வாழ்வு நல்ல நிலையை அடைந்து நாடு சுகமும் கௌரவமும் பெற வேண்டி மக்களுடைய நடை குணங்கள் உயர்வழிப்பட நாம் முயற்சி செய்ய வேண்டும் வாலிப பருவத்தில் எண்ணமும் ஒழுக்கமும் நல்வழியில் அமைய செய்ய வாவி செய்கிறவர்கள் எழுதியுள்ள சிறுகதைகள் போன்ற புத்தகங்களை படித்தல் நல்ல சாதனமாகும் இக்கதைகளை ஒருவன் படித்து புத்தகத்தை கீழே வைக்கும் காலத்தில் அவன் மனதில் பரிசுத்தமான உணர்ச்சிகளும் உன்னதமான எண்ணங்களும் ததும்பும் என்ற குறிப்பு ராஜாஜி அவர்களால் வழங்கப்பட்டதை இங்கு எடுத்துக்காட்டுவது அவசியமாகின்றது

புதுச்சேரி கம்ப நிலையத்தில் இருந்து ஐந்து கதைகளுடன் வெளிவந்த முதல் தொகுப்பிற்கு வ.வே சு ஐயர் தம்முடைய முன்னுரையில்

கதைகள் கவிதை நிரம்பியவையாய் ரசபாவோ மேகமாய் இருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். இக்கதைகளை இவ்வாறு செய்ய முயன்று இருக்கிறேன் முயற்சி பூர்த்தியான பயனை தரவில்லை ஆனாலும் முயற்சி மாத்துறதுக்காகவாவது இவைகளில் உள்ள குற்றங்களை மன்னித்துக் கொள்ளும்படி ரசிகர்களை வேண்டுகிறேன் என்று குறிப்பிடுகின்றார்

தொ மு சி ரகுநாதன் அவர்கள் இக்கதைகள் குறித்து மதிப்பீடு செய்துள்ளார் என்பதையும் இங்கு அறிந்து கொள்கின்றோம்.

குளத்தங்கரை அரசமரம்

இக்கதை *1915* செப்டம்பரில் விவேக பூதினி என்னும் மாத இதழில் வெளிவந்த கதையாக அமைகின்றது இக்கதையை வரலாற்று நோக்கத்தோடு ஆய்வுக்கு உட்படுத்தும் போது வங்காளத்தில் இருந்த தாகூர் அவர்களின் படித்துறையின் கதையைப் படித்த

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தாக்கத்தினால் அக்கதையின் புத்தியை பின்பற்றி குளத்தங்கரை அரசமரம் என்னும் கதை அமைக்கப்பட்டுள்ளது என்று பெ சு மணி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

தாகூரின் படித்துறை கதையில் குருமா

குளத்தங்கரை அரச மரத்தின் ருக்மணி இருவர் பாத்திரப்படைப்பு முறையே படித்துறை அரசமரம் இவற்றின் பதிவு பாசத்துடன் மனநிகழ்ச்சி நனிவிலர்ந்த படைக்கப்பட்டு உள்ளன இருவரது முடிவுகளும் சோகத்தில் தோன்றுகிறது என்று வாரிசு ஐயர் அரசியல் இலக்கியப் பணிகள் என்னும் நூலில் கருத்து குறிப்பிடப்படுகின்றது.

குளத்தங்கரை அரசமரம் என்னும் கதை துன்ப இயலில் முடிந்த நிலையை குறித்து யதுகிரி அம்மாள் என்பவர் ஐயர் அப்பொழுது மங்கையர்க்கரசியின் காதல் குலத்தங்கரை அரசமரம் இரண்டு கதைகளை எழுதி முடித்து இருந்தார் இரண்டும் துக்கமயமான கதைகள் நான் நாகராஜனை நன்றாக வைத்தேன் ஐயர் எல்லாம் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதால் இதிலும் ஒரு புது ருசி இருக்கிறதம்மா என்றார்.

வ வே சு ஐயர் துன்பவியல் கதைகளை அமைப்பதில் வல்லவர் என்பதை செல்லம்மாள் பாரதி அவர்கள் தம்முடைய பாரதியார் சரித்திரத்தில் வ வே சு ஐயர் சோக ரசமாக கதைகள் எழுதுவதிலேயே பிரியம் கொண்டவர் குளத்தங்கரை அரசமரம் என்ற கதையை பாதி எழுதியவுடன் எங்களிடம் படித்துக் காண்பித்தார் மறுநாள் பாரதியார் மட்டும் அவர் வீட்டுக்கு போயிருந்தார் திரும்ப வீடு வந்ததும் அப்பா ஐயர் கதையை எவ்விதம் முடித்திருக்கிறார் என்று தங்கம்மாள் கேட்பானே அந்தப் பேதைப் பெண் ருக்மணியை குலத்தில் தள்ளி ஆயிற்று என்று சிறிது வருத்தத்தோடு சொன்னார்.

திருவல்லிக்கேணி கடலுக்கு வா.சேயரின் குளத்தங்கரை அரச மரத்தை போல் பேசும் சக்தி இருந்தால் அன்றிலிருந்து இன்று வரை கடற்கரை நிகழ்ச்சிகளை என்ன ரசமாய் கூறியிருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

ஒரு அரச மரம் தன்னுடைய நிழலில் நிகழ்ந்த நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளில் அதாவது தன்னுடைய *90* ஆண்டு கால வாழ்வில் ருக்மணி நாகராஜன் கதையை தானே சொல்லுமாறு இக்கதை அமைந்துள்ளது இதில் ருக்மணியின் தந்தையார் காமேஸ்வர ஐயர் வணிகத்தில் நொடித்து அவருடைய மனைவி மீனாட்சி அம்மாள் பொறுமைசாலியாக இருக்கின்றார்.

காமேஸ்வர ஐயர் கை நொடிந்ததும் அவருடைய தந்தை ராமசாமி ஐயருக்கு பிடிப்பு விட்டது அவருடைய மனைவியாகிய ஜானகியும் அவரோடு சேர்ந்து கொண்டு ருக்மணியை வாழாவெட்டி ஆக்கி நாகராஜனுக்கு வேறு திருமண ஏற்பாடு செய்யும் சூழலில் நாகராஜன் தன் நண்பன் ஸ்ரீனிவாசனுக்கு கல்நெஞ்சனைப் போல் தோன்றுகிறான் ஆனால் நாகராஜன் தன் பெற்றோருடைய ஏற்பாட்டுக்கு இணங்குவது போல் நடித்து அவர்களை கடைசி நேரத்தில் ஏமாற்றப் போவதாக கூறுகிறான் ருக்மணியை கைவிடப் போவது இல்லை என்று உறுதி கூறி அந்தத் திட்டத்தை யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று ஸ்ரீனிவாசனிடம் கேட்டுக்கொள்கிறான் ருக்மணியை நாகராஜன் சந்திக்க அவள் அழ தான் அவளை கைவிடமாட்டேன் என்று உறுதி கூற மறுநாள் காலையில் அரச எ மஞ்சள் அவரிடத்தில் தான் மனதில் மறைத்து வைத்திருந்த ரகசியத்தை கூறுதலால் அவள் மாண்டு விட்டதை நினைத்து கண்ணீர் வடிக்கின்றான்.

என் அருமை குழந்தைகளே பெண்கள் மனசு நோகும்படி ஏதாவது செய்யத் தோன்றும் போது இனிமேல் இந்த கதையை நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள் விளையாட்டுக்காக கூட பெண்களை பிறந்தவர்களின் மனதை கசக்க வேண்டாம் எந்த

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

விளையாட்டு என்ன வினைக்கு கொண்டு போய் வந்து விடும் என்று யாரால் சொல்ல முடியும் என்ற நீதி போதனை குறிப்புடன் வா.சி ஐயர் தமது கதையை முடித்துள்ளார்

பார்வையிலும் தான் எத்தனை அன்பு எத்தனை பரிவு என்னை பிரதக்ஷனை செய்வார் அப்போது அவள் சோமவார அமாவாசைகளில் பரமாத்மாவை பூஜைக்கு என்னை பார்க்கும் பார்வையில் இருக்கும் அன்பை என்னவென்று சொல்வேன் என்னுடைய காய்ந்து போன கப்புகளும் கூட அவருடைய பிரேமையான பார்வை பட்டதும் துளிர்ந்து விடுமே என் ருக்குமணி தங்கமே எப்போ காண்பேன் இனிமேல் உன்னை போல குழந்தைகளை என்று மரம் சொல்வதாக இந்தக் கதையின் குறிப்புகள் ஆங்காங்கே இடம்பெறுகின்றன

அதற்கான வரிகள் பேசியவை அன்று அரச மரம் பேசியது உயிராக நின்று பேசியது நம் உயிரை தொடும்படி பேசியது

புதுமைப்பித்தன் அவருடைய கதைகளை பற்றி கூறும்பொழுது அவருடைய கதைகளில் பாளையின் வெக்கை நம்மை பொசுக்கும் முகலாய நந்தவனத்து அந்தப்புரங்களின் வைபவம் நம்மை கழிப்பூட்டும் கிரேக்க தேசத்து கடவுளர் நம்முடன் உறவாடுவார் பிரஞ்சு போர்க்கள இரத்த பயங்கரம் நம்மை மிரட்டும் பிற நாட்டு மரபுகளையும் பெயர்களையும் நம்மால் ரசிக்க முடியாது என இன்றைய விமர்சகர்கள் சிலர் சொல்லிக் கொண்டிருப்பதற்கு தகுந்த பதில் அவர் கதைகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

25. அகவொழுக்கத்தில் தோள்கள்

முனைவர் இரா.சந்திரசேகர்
உதவிப்பேராசிரியர், முதுகலைத்தமிழ்த்துறை
விருதுநகர் இந்துநாடார் செந்திக்குமாரநாடார் கல்லூரி (தன்னாட்சி),விருதுநகர்.
DOI 10.5281/zenodo.17212445.

Abstract:

Sangam literature can be said to have a special image of the dignity of women. It is natural for women's shoulders to be seen in a state of bliss when the leader is near. Moreover, the leader himself would write on the shoulders of the leader and make her happy. It was customary in Sangam literature to call these shoulders of the leader as perundhol, panaithol, and thadamenthol. This article aims to examine the position of the shoulders in expressing feelings in the love life of the leader and the leader.

Key Words: Sangam Literature - Women's Shoulder - Ethics

சங்கஇலக்கியங்கள் மாந்தர்களின் அகவுணர்வுகளை சிறப்புற படம்பிடித்துக் காட்டுகின்றன எனலாம். தலைவன் அருகிலிருக்கும் போது மகளிரின் தோள்கள் பூரித்துக் காணப்படுதல் இயல்பு . மேலும் தலைவன் தலைவியரின் தோளில் தொய்யில் எழுதி அவளை மகிழ்வித்துத் தானும் மகிழ்தல் உண்டு. தலைவியரின் இத்தோள்களைப் பெருந்தோள், பணைத்தோள். தடமென்தோள் எனக் கூறுதல் சங்கஅக இலக்கியங்களில் வழக்கமாக இருந்தது. தலைவன் தலைவியரின் காதல் ஒழுக்கத்தில் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் தோள்கள் இன்றியமையாத இடத்தைப் பெறும் நிலையினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தோள்களின் அழகு

தலைவியின் தோள்களின் இயல்புகள் சுட்டப்படும் போது அவற்றின் அழகும் சுட்டப்படுகின்றது. தலைவியின் தோள்கள்மலையிடத்தே செழித்து வளர்ந்த மூங்கிலின் அழகை ஒத்திருந்தன என்பதை.

> **மாணெழில் வேய்வென்ற தோளாய்நீ வரிற்றாங்கும்** (கலி.*20:15)*

என்றும்,

> **வேய்வனப் புற்ற தோளை நீயேநற்.***82:2)*

என்றும் சுட்டுவதிலிருந்து அறியமுடிகின்றது.

பெருந்தோள்

தலைவனின் செல்பாடுகளால் பூரிப்படைந்த தலைவியின் தோள்களைப் பெருந்தோள் எனக் குறிப்பிடுதல் இயல்பு இதனை,

> **சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்** (குறுந்.*95:3)*

என்றும்.

> **பாவையின் மடவந் தனளே**
> **மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே** (குறுந்.*100:6-7)*

என்றும்,

> **பெருந்தோட் குறுமக ளல்லது** (நற்.*80-8)*

என்றும்.

> **நல்ல பெருந்தோ ளோயே கொல்லன்** (நற்.*13:5)*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்றும் கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது.தலைவியின் தோளிலே தலைவன் துயில்கொள்ளும் வழக்கம் உடையவன் என்பதும் வெளிப்படுத்தப்படுகிறது.இதனை,

வேயுறழ் மென்றோட் டுயில்பெறும் வெந்துப்பிற்*(கலி.104:24)*

எனச் சுட்டுவதிலிருந்து அறியமுடிகின்றது.

பணைத்தோள்

தலைவன் அருகில் இருக்கும் பொழுது பருத்துக் காணப்படும் தலைவியினது தோள்களைப் பணைத்தோள் என்று மூங்கிலுடன் உவமைப்படுத்திக் கூறுவது இயல்பு இதனை,

புனற்புனை யன்ன சாயிறைப் பணைத்தோள் *(குறுந்.168.5)*

என்றும்.

சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே *(அகம்.32.18)*

என்றும்.

நலமென் பணைத்தோள் எய்தின மாகலின் *(நற்.9.4)*

என்றும் கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது.

தடமென்தோள்

தலைவியின் தோள்கள் பூரிப்படைந்து இருந்தாலும், தலைவனுக்கு மென்மைத் தன்மை உடையனவாக இருக்கின்றன. மென்மைத் தன்மை உடைய தலைவியின் தோள்களை மென்தோள், தடமென்தோள் எனச் சங்க அக இலக்கியங்கள் சுட்டுவதை,

கோலினுந் தண்ணிய தடமென் றோறே *(பட்டினப். 301)*

என்றும்.

அணைமரு ளின்றுயில் அம்பணைத் தடமென்றோள் *(கலி.14:1)*

என்றும்,

மடமா அரிவை தடமென் தோளே *(நற்.346:11)*

என்றும்,

முனிவு செய்தவிவள் தடமென் றோளே *(ஐங்.143:3)*

என்றும் குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகின்றது. தலைவன் அருகில் இருப்பதால் ஏற்படும் இன்பத்தால் உள்ளம் மென்மைத் தன்மை அடைகின்றது. உள்ளம் மென்மை அடையும்போது தோள்களும் மென்மை அடைதல் இயல்பு தடமென்தோள் எனத் தலைவியின் தோளைச் சுட்டுவது அவளது இன்ப உணர்வினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது எனலாம்.

தலைவனின் எண்ணம்

தலைவியின் இனிய தோள்களைத் தழுவுதலை விரும்பித் தலைவனின் நெஞ்சம் சென்றது என்பதை,

அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்தோள் பெறநசைஇச் சென்றவென் னெஞ்சே *(அகம்.9:25-26)*

எனச் சுட்டுவதிலிருந்து அறியமுடிகின்றது.இதன்வழி, தலைவியின் தோள்கள் தலைவனுக்கு இன்பம் பயப்பதாக அமைவதை அறியமுடிகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தொய்யில் எழுதுதல்

சங்ககாலத்தில் மகளிரின் தோளிலும், மார்பிலும் தொய்யில் எழுதும் வழக்கம் இருந்தது. உடம்பின் மேற்பாகத்தில் சந்தனம் குங்குமம் முதலியவற்றைக் குழம்பாகப் பூசி அதன் மேலே இலை, பூ முதலிய சித்திரங்களை வரைவர். இச்சித்திரம் தொய்யில் எனப்படும். தலைவன் தலைவியின் தோளிலே காமனது வில்லாகிய கரும்பின் உருவத்தைக் குங்குமக் குழம்பால் தோளில் எழுதும் வழக்கம் இருந்தது என்பர். தலைவன் தலைவியரின் தோளில் தொய்யில் எழுதி இன்புற்று இருந்த நிலையினை,

உழுந்துடைக் கழுந்திற் கரும்புடைப் பணைத்தோள் *(குறுந்.384:1)*

என்றும்,

பெருந்தோட் டொய்யில் வரித்துஞ் சிறுபரட்டு *(அகம்.389:6)*

என்றும் சங்கப் பாடல்கள் சுட்டுகின்றன. களவுக்காலத் தலைவன் தம் காமக்கடலைக் கடக்க உதவும் தெப்பம் தலைவியின் இனிய தோள்களே என்று குறிப்பிடுகின்றான். இதனை,

நுணங்கமைத் திரளென நுண்ணிழை யணையென முழங்குநீர்ப்
புணையென அமைந்தநின் தடமென்றோள் *(கலி.56:19-20)*

என்று சுட்டுவதன் வாயிலாக அறியமுடிகின்றது.

விருந்தை வரவேற்றல்

விருந்தினரை வரவேற்று உபசரித்தல் சங்ககாலத்தில் கற்பு வாழ்வின் அங்கமாகக் கருதப்பட்டது. விருந்தை ஊடல் தீர்க்கும் வாயில்களும் ஒன்றாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். இதனை,

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப (தொல்.பொருள்.கற்பு.இளம்.*52)*

என்ற நூற்பா வாயிலாக அறியலாம்.தலைவி விருந்தினரை வரவேற்கும் பெரிய தோளை உடையவள் என்பது.

விருந்து விருப்புறாஉம் பெருந்தோட் குறுமகள் (நற்.*221:8)*

என்பதன் வழி வெளிப்படுத்தப்படுகின்றது.தலைவி விருந்தினரை வரவேற்கும் விருப்பமுடையவள் என்று கூறுவதிலிருந்து அவளின் மனமகிழ்ச்சி மறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

தலைவனின் பிரிவு

தலைவனின் பிரிவுத்துயர் தலைவியின் தோள்கள் நெகிழ்தல் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றது. தலைவனைச் சார்ந்திருப்பதே தலைவியின் மகிழ்ச்சிக்கும், உலகினரின் புகழ்ச்சிக்கும் உரிய செயலாகும். அங்ஙனமின்றி அவளைப் பிரிந்திருப்பதால் அவளுக்கு வாட்டமும், இகழ்ச்சியும் உண்டாகும் என்பர். தலைவியின் பிரிவை தலைவி ஆற்றியிருக்க முற்பட்டாலும் தோள்கள் நெகிழ்ந்து பிரிவை வெளிப்படுத்துகின்றன. இதனை,

தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் தடமென் றோளே *(குறுந்.121:5-6)*

என்றும்,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வீங்கிறைப் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டு *(அகம்.59:16)*

என்றும்,

நன்றோள் நெகிழ மறத்தல் நுமக்கே *(நற்.131:9)*

என்றும்,

நேரிறைப் பணைத்தோள் ஞெகிழ *(ஐங்.239:4)*

என்றும் சுட்டுவதிலிருந்து அறியமுடிகின்றது.

வளை கழலுதல்

தலைவனது பிரிவால் தலைவியரின் அணிகலன்கள் நெகிழ்ந்து கீழே விழுதல் இயல்பு. தலைவியின் தோளில் அணிந்திருந்த வளைகள் தலைவனது செலவினால் கழன்று விழுந்ததை.

வாடுபு வனப்போடி வயக்குறா மணிபோன்றாள்
நீடிறை நெடுமென் றோள் நிரைவளை நெகிழ்ந்ததை *(கலி.132:14-15)*

எனக் கலித்தொகை குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகின்றது.

தொய்யில் வாடுதல்

தலைவியின் தோளில் தலைவன் வரைந்த தொய்யில் அவனது பிரிவினால் மிகவும் வாடிய நிலைமையினை,

அன்றுதான் ஈர்த்த கரும்பணி வாடவென்
மென்றோள் ஞெகிழ்த்தான் துறை *(கலி.131:29-30)*

எனக் கூறுவதன் வழி அறியமுடிகின்றது.

ஆற்றுவித்தல்

தலைவனது செலவினால் துயரமடைந்த தலைவியைத் தோழி ஆற்றுவித்தல் தோழியின் பண்புகளில் இன்றியமை யாதது ஆகும். தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவியிடம் தோழி. உன் நெகிழ்ந்த தோளுக்கு விருந்தாகத் தலைவன் இன்றே வருவான் எனக் கூறி ஆற்றுவிக்கிறாள். இதனை,

நேரிறைப் பணைத்தோட் கார்விருந்தாக (ஐங்.468:3)

என்று கூறுவதன் வாயிலாக அறிய முடிகின்றது.

செலவைத் தடுத்தல்

தலைவன் செலவு மேற்கொள்ளும் போது தலைவி துன்பமடைகின்றாள். தலைவியின் அழகுமிக்க தோள்களோ அவனது செலவைத் தடுப்பதாக அமைந்திருந்தலை.

நலங்கிளர் பணைத்தோள் விலங்கின செலவே *(ஐங்.421:4)*

எனக் குறிப்பிடுவதன் வாயிலாக அறியமுடிகின்றது.

தலைவியின் விருப்பம்

பிரியலுற்ற தலைவன் பசலை தீரத் தன்பெரிய தோள்களைத் தழுவுவானோ எனத் தலைவி வருந்துவதை

மெல்லிறைப் பணைத்தோள் பசலைதீரப்
புல்லவும் இயைவது கொல்லோ *(ஐங்.459.5)*

எனச் சுட்டுவதன் வாயிலாக அறியமுடிகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வினை மீளுதல்

தலைவியை வினையின் காரணமாகப் பிரிந்த தலைவன் வினை முற்றியதும் அவளுடைய நினைவால் விரைவாக அவளிடம் திரும்புகின்றான். தலைவன் வினை மீண்டதும் தலைவியின் மனதில் இன்பம் எழுகின்றது. அவ்வின்ப உணர்வின் விளைவாகத் தலைவியின் உடலில் ஏற்பட்ட பசலை நீங்கிப் புத்தொளி பெறுகின்றது. தலைவன் வினைமுற்றி மீண்டும் தலைவியை அடைந்ததும், பசலையால் நெகிழ்ந்த அவள் தோள்கள் புதிய அழகைப் பெறுகின்றன. இதனை,

நல்ல வாயின வளியமென் றோளே *(ஐங்.120:2)*

என்று குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகின்றது.

தலைவியின் தோள்களில் தொய்யில் எழுதி தலைவன் தானும் மகிழ்ந்து, தலைவியையும் மகிழ்விப்பது சங்கப் பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பதையும், தலைவியின் தோள்கள் பருத்துக் காணப்படுவது அழகு பயப்பதாக அமைவதுடன், தலைவன் அருகில் இருப்பதால் எழும் இன்ப உணர்வினால் அவை பூரிப்படைதலால் பணைத்தோள், பெருந்தோள், தடமென்தோள் என்று வழங்கப்பெற்றன என்பதையும், பூரிப்படைந்து காணப்படும் தோள்கள் தலைவியின் இன்ப உணர்வினையும், தலைவன் பிரிவின்றி அருகிலிருக்கும் தன்மையையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன என்பதையும் அறியமுடிகின்றது.மேலும், வினையின் காரணமாகச் செலவு மேற்கொள்ளும் தலைவனால், தலைவியின் உடல் உறுப்புக்களின் நலனழிதல்இயல்பு, தலைவனின் பிரிவால் ஏற்படும் துன்ப உணர்வினால் தலைவி தன்னைப் பேணாத தன்மையே காணப்படுகின்றது. இதனால் தலைவியின் தோள்கள் பசலை பாய்ந்து நெகிழ்ச்சி அடைகின்றன. இதன் விளைவாகத் தோள்களில் அணிந்திருக்கும் அணிகலன்களும் கழன்று விழுகின்றன. தலைவன் தலைவியின் தோளில் எழுதிய தொய்யிற் கோலமும் அவனது பிரிவினால் அழகு குன்றிக் காணப்படுகின்றது.தலைவன் செலவு மீளும்போது தலைவியின் தோள்கள் மீண்டும் பழைய அழகைத் திரும்பப் பெறுகின்றன தலைவியின் தோள்களில் ஏற்படும் மாற்றங்கள் அவளது வேறுபட்ட மன உணர்வுகளை வெளிக்காட்டுவனவாக அமைகின்றன எனலாம்.

துணைமை நின்றவை:

1. பத்துப்பாட்டு(மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,, அம்பத்தூர், மெட்ராஸ், அம்பத்தூர், சென்னை.
2. கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், மெட்ராஸ், அம்பத்தூர், சென்னை.
3. நற்றிணை(மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,, அம்பத்தூர், சென்னை.
4. புறநானூறு(மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,, அம்பத்தூர், சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

26. செம்மூதாய் சதாசிவத்தின் புதினங்களில் பெண்ணியச்சிந்தனை

திருமதி செ.பிரியதர்ஷினி,
பதிவு எண் **MKU24PFOL11417,**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
6369061225 - priyaselvaraj1799@gmail.com

முனைவர் பா.பொன்னி,
இணைப்பேராசிரியர் & நெறியாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறைத்தலைவர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.

DOI 10.5281/zenodo.17212791.

Abstract

Society is fundamentally shaped by the relationship between men and women. However, throughout history, men have exercised control over women in various forms. Since ancient times, women subjected to oppression have voiced their resistance, a struggle often reflected in literature. Discussions on feminism have been present from the Sangam period to the present day. This article seeks to explore the portrayal of feminism in society by examining themes such as female slavery, women's education, marriage, remarriage, and the psychological dimensions of women's experiences. The study draws on novels including Bidilnel, Senkadambu, Thakadoor Yathirai, Mauna Yathirai, Palankayiru, Ilavu Kadha Kiligal, Thirupam, Baingooz, and Ponmaram by Semmudai Sadasivam.

Key Words: Bidilnel, Senkadambu, Thakadoor Yathirai, Mauna Yathirai, Palankayiru, Ilavu Kadha Kiligal, Thirupam, Baingooz, and Ponmaram

ஆய்வுச் சுருக்கம்

சமூகம் என்பது ஆண், பெண் உறவின் மீது கட்டமைக்கப்பட்டதாகும். ஆனால் பெண்ணை ஆணினம் பலவிதங்களில் கட்டுப்படுத்தியே வந்துள்ளது. தொடக்க காலம் முதலே அடிமைப்பட்டிருந்த பெண்கள் தங்களின் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தியே வந்துள்ளனர். அதனை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. சங்க காலம் முதல் தற்காலம் வரை பெண்ணியம் பேசப்படும் பொருளாகவே கருதப்படுகிறது. அவ்வகையில் செம்மூதாய் சதாசிவம் இயற்றியுள்ள விதைநெல், செங்கடம்பு, தகடூர் யாத்திரை, மௌன யாத்திரை, பழங்கயிறு, இலவு காத்த கிளிகள், திருப்பம், பைங்கூழ், பொன்மரம் போன்ற புதினங்களில் பயின்று வந்துள்ள பெண் அடிமை முறை, பெண் கல்வி, பெண் திருமணம், மறுமணம், உளவியல் சார்ந்த பெண்ணின் மனநிலை போன்றவற்றின் வாயிலாக அவர் வெளிப்படுத்தியுள்ள பெண்ணியச்சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

முன்னுரை

காலம் என்ற ஒன்று மாறிக் கொண்டே இருக்கும். கால மாற்றத்தினால் குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு இவற்றிற்கு இடையே பெருத்த வேறுபாடு ஏற்படுகிறது. இத்தகு பொருத்தப்பாடில்லாத வாழ்வில் மனிதர்கள் வாழ பழகிக் கொண்டாலும் ஆண்மையவர்க்கம் எதிர்பாலின வர்க்கத்திற்கான உரிமைகளையும் உணர்வுகளையும் அறவே வெறுக்கிறது அல்லது தரமறுக்கிறது. இத்தகைய சூழலில் பெண்கள் தன் வாழ்க்கையில் குடும்பத்தையும் சமூகத்தையும் எதிர்கொண்டு வாழும் தன்மையை செம்முதாய் சதாசிவத்தின் புதினம் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஆசிரியர் படைத்துள்ள பெண் பாத்திரங்கள்

Feminism என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேர் தமிழ்ச்சொல்லாகப் பெண்விடுதலை இயக்கங்கள் 'பெண்நிலைவாதம்' என்ற சொல்லை பயன்படுத்தி வந்தனர். இச்சொல் சமூகவியல் நோக்கில் எடுத்தாளப்பட்ட சொல்லாகும்.

'பெண்நிலை வாதம்' - பெண்ணை விவாத நிலையில் பார்க்கும்

'பெண்ணியம்' - பெண்ணை ஆய்வு நோக்கில் பார்க்கும்

பெண்ணியம் என்பது பெண்கள் மீதான வரலாறு, மதம், பொருளாதாரம், பண்பாட்டு ரீதியிலான ஒடுக்கு முறையின் பல்வேறு பரிணாமங்கள், அதற்கானத் தீர்வுகள், அதை அடைவதற்கான வழிமுறைகள் இவற்றை ஆராய்வதாகும். பெண்மையின் குணநலன்களை

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்க்கு உரிய என்ப"[1]

என்றும்

'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அறுமையும் பெண்பாலன"[2]

என்றும் உரைக்கிறது தொல்காப்பியம். இத்தகைய பெண்களைப் பாடாத புலவர்களும் இல்லை, படைப்பாளர்களும் இல்லை, படைப்புகளும் இல்லை எனலாம். கவிதையையும் கற்பனையையும் பிரிக்க முடியாதது போல பெண்களையும் படைப்புகளையும் பிரிப்பது என்பது அரிது. அவ்வகையில் செம்மூதாய் சதாசிவத்தின் படைப்புகளில் குறிப்பிடத்தக்க பெண் கதாப்பாத்திரங்களைக் காணமுடிகிறது. அலமேலு (விதைநெல்), சிங்காரம் (தகடூர் யாத்திரை), பச்சியம்மா (மௌனயாத்திரை), பரிமளம், கற்பகம் (செங்கடம்பு), பூங்கொடி (பழங்கயிறு),கொப்பி (பொன்மரம்), செல்லம்மாள் (திருப்பம்) , லட்சுமி, சின்னம்மாள் (இலவு காத்த கிளிகள்), மஞ்சுளா (பைங்கூழ்) போன்ற பாத்திரங்கள் யாவும் பெண்ணியம் பேசும் கதாப்பாத்திரங்களாக அவரது புதினங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

பெண் கல்வி (கிராமப்புறம், நகரப்புறம்)

கல்வி ஒரு சமுதாயப்பணி. அப்பணியினை கிராமப்புற பெண்கள் மேற்கொள்ளும் வாய்ப்பானது அரிதான ஒன்றாகக் கருதப்படுகிறது. பெண்களுக்கு படிப்பின் மீது ஆர்வம் இருந்தும் அவர்கள் தொடக்கக் கல்வியோடு நிறுத்தப்பட்டுள்ள நிலையை,

'மகள் பூங்கொடி உள்ளூரில் இருந்த தொடக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு முடித்ததோடு நிறுத்தப்பட்டாள்" (பழங்கயிறு, பக்.9) என்ற பகுதியால் அறியலாகிறது. மேலும் பெற்றோரே ஆண்குழந்தை படித்தால் போதும் பெண் குழந்தைக்கு கல்வி அவசியம் இல்லை என்று கூறி படிப்பதற்கு ஆசைகள் இருந்தும் முளையிலேயே கிள்ளி எறியப்படுகின்ற நிலையை,

"அண்ணன் மட்டும் படிக்கட்டும் நீ வேற என்னத்துக்குப் படிச்சிக்கிட்டு, வேற ஒருத்தன் வூட்டுக்குப் போறவதானே" (மௌனயாத்திரை, பக்.5)

'மகள் தான் பெரியவள். அடுத்தவர் வீட்டுக்குப் போகிறவள். அவளுக்குப் படிப்பு தேவையில்லை. வீட்டு வேலைகள் ஒழுங்காக கற்றுக் கொண்டு போனால் போதும் என்று நினைத்து படிப்பைப் பற்றி கவலைப்படவில்லை" (விதைநெல், பக்.13) போன்ற பகுதிகள் வெளிப்படுத்துகின்றன. ஆசிரியர் கிராமப்புறங்களில் பெண்கல்வியின் இழிநிலைகளை ஒருபுறம் படம் படித்துக் காட்டினாலும் மறுபுறம் நாகரீகம் நிறைந்த நகர்ப்புறங்களில் பெண்கல்வியானது முன்னேற்றத்தை நோக்கி நகர்கிறது என்பதை,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

“சுப்பிரமணியின் மகள் அபிராமி எம்.ஏ., படித்து முடித்து மேற்படிப்பிற்காகச் சென்னை சென்றாள்” (இலவு காத்த கிளிகள், பக்.100)

“தனது மூத்த மகள் பிருந்தா பன்னிரண்டாம் வகுப்பில் பள்ளியில் முதல் மதிப்பெண் எடுத்துப் பெருமை சேர்த்தாள். கோயம்புத்தூர் பொறியியல் கல்லூரியில் செலவில்லாமல் இடம் கிடைத்தது…இளையவள் யாழினி ஈரோட்டிலுள்ள தனியார் மகளிர் கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்தாள்” (இலவு காத்த கிளிகள், பக்.101) எனும் பகுதிகளில் வெளிப்படுத்தவும் தவறவில்லை எனலாம்.

பெண் அடிமைத்தனம்

பெண் ஆண்களின் கட்டுப்பாட்டில் அவர்களுக்கு கீழ் பணிவிடை செய்ய மட்டுமே அவதரித்தவள் என ஆண் சமுதாயம் நம்பிக்கொண்டிருக்கும் வரை பெண்அடிமைத்தனமானது நீண்டு கொண்டே தான் இருக்கும். அடித்தல், உதைத்தல் போன்ற வன்முறை வாயிலாக பெண்ணை அடிமைப்படுத்தும் பாங்கினை,

“அது ஒன்னுமில்ல காடையன் நேத்து ராத்திரி பூதிக்காட்டுக்குப் போயிட்டு திரும்பும் போது வழியில குடிச்சிட்டு வந்து அவன் பெண்டாட்டி கொப்பியப் போட்டு அடிச்சிட்டானாம்” (பொன்மரம், பக்.17) எனும் புதின வரி புலப்படுத்துகிறது.

பெண் திருமணம்

திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் என்பார்கள். அத்திருமணமானது பெண்களுக்குக் கட்டாயத்தின் அடிப்படையிலேயே நிகழக்கூடிய ஒன்றாக இன்றளவும் கிராமப்புறங்களில் பார்க்கப்படுகிறது. வயது வேறுபாடு பார்க்காமல் பழங்காலங்களில் நிகழ்ந்த பொருந்தா மணம் தற்காலத்திலும் புழக்கத்தில் இருந்து வருகிறது என்பதை,

“முத்துசாமிக்கும் சின்னமாளுக்கும் சுமார் பத்து வயதாவது வித்தியாசமிருந்தது. பார்த்தவர்கள் இதைப் பற்றியெல்லாம் பெரிதுபடுத்திக் பேசிக் கொள்ளவில்லை. ஆண்கள் எத்தனை வயதிலும் மணம் செய்துகொள்ளலாம் என்கிற நிலையே பரவலாக இருந்தது” (இலவு காத்த கிளிகள், பக்.43)

“பச்சப்புள்ளய பிடிச்சி கெழவனுக்குக் கட்டி வைக்கிறாங்க” (மௌனயாத்திரை, பக்.92)

எனும் பகுதிகளால் அறியமுடிகிறது. மேலும், இரண்டாம் திருமணம் அதாவது மறுமணம் பணத்தின் பொருட்டு நடைபெறுவதையும் ஆசிரியர் தன்னுடைய புதினங்களில் பதிவு செய்துள்ளார்.

“பணக்காரக் காமுகன் ஒருவனின் வசிய மொழிகளுக்கு மயங்கி இரண்டாந்தாரமாக செம்பவள்ளியை கொடுக்கச் சம்மதித்தனர்” (செங்கடம்பு, பக்.69) அதிலும் பெண்ணின் மன விருப்பம் கேட்டாமலே நிகழப்படுவதை “வாழப்போகிறவளிடம் ஒரு வார்த்தைக் கூட கேட்கப்படாமலேயே பெற்றோரால் எடுக்கப்பட்ட முடிவுக்கு இவள் தலை நீட்ட வேண்டிய நிர்பந்தம்” (செங்கடம்பு, பக்.69) என கிராமம் சார்ந்த பெண்ணின் திருமணமானது பெற்றோர்களின் வற்புறுத்தலால் நிகழப்படும் ஓர் அவலமாக இருப்பதனை காட்சிப்படுத்தியுள்ளார்.

பெண்ணின் மனநிலை

ஆசிரியரின் புதினங்களில் பெண்களின் உளவியல் சார்ந்த மனநிலைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பருவம் அடைந்த பெண்கள் தனது உடல் அளவிலும் மனதளவிலும் பல மாற்றங்களை எதிர்க் கொள்கின்றனர். குழந்தை பருவம் முடிந்து குமரி பருவம் எட்டியதை ஓர் பெண்ணின் மனமானது,

“விளையாட்டுத் தனம் முற்றிலும் குறைந்தது. கல்யாண பருவத்தில் நிற்கும் பருவமங்கையாகவே தன்னைப் பாவித்தாள். எந்த நேரத்திலும் தனக்குக் கல்யாணம் முடிவு செய்யலாம் என்றும் உணர்ந்தாள்” (விதைநெல், பக்.36) என்றும்,

பருவம் அடைந்த அப்பெண்ணின் மனதில் காதல் துளிர்விடும் போதில் அப்பெண்ணின் மணமானது,

“தன்னை அடிக்கடி அலங்காரம் செய்து கண்ணாடிமுன் சென்று ஒத்திகைப் பார்த்துக் கொள்வாள்” (செங்கடம்பு, பக்.34) என்றும்,

திருமணம் நடைப்பெற்று அப்பெண் புகுந்த வீட்டிற்கு சென்ற பின் தனது பிறந்த வீட்டினை நினைவுக்கூரும் போது அப்பெண்ணின் மனமானது,

“பொறந்த வீடு என்பது ஒரு பெண்ணுக்கு எப்போதும் உரிமையும் பெருமையும் உடையது தான். உடன்பிறந்த உறவுகளைப் பொறுத்து அது மாறுபடும்” (திருப்பம், பக்.10) என்றும்,

இல்லற வாழ்வில் அடிஎடுத்து வைத்த அப்பெண் தனது கணவனை இழந்து விதவையாக வாடும் தருணத்தில் மனதளவில் ஏற்படும் காயத்தை அப்பெண்ணின் மனமானது,

“பூச்சூட்டி தன்னை அவ்வளவாக அலங்காரம் செய்து கொள்ளாமலும் சாப்பாட்டில் உப்பு காரத்தைக் குறைத்தும் எத்தனையோ ஏக்கங்களை மனதில் சுமந்து சடங்கு சம்பிரதாயங்களில் எல்லாம் கலந்து கொள்ளாமல் வீட்டிலேயே காலம் கழித்து வந்தாள்” (மௌனயாத்திரை, பக்.107) என்றும் அமைக்கப்பட்டுள்ள பகுதிகள் அனைத்தும் பெண்ணின் உளவியல் சார்ந்த மன நிலையைப் பறைச்சாற்றுகின்றன எனலாம்.

முடிவுரை

பெண் சமூகத்தினர் எத்தகைய சூழல்களுக்குள் அகப்பட்டு ஒடுக்கப்பட்டாலும், தங்களுக்கான வாழ்வாதாரங்களை மீட்டு எடுத்துள்ளனர். அவ்வகையில் செம்மூதாய் சதாசிவத்தின் புதினங்கள் யாவும் பெண்களின் வீழ்ச்சி நிலையையும் அதே சமயத்தில் அவர்களின் எழுச்சி நிலையையும் ஒருசேர வெளிக்காட்டும் ஓர் உணர்வோவியமாகத் திகழ்கிறது என்பதனை அறிய முடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், ப.62
2. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், ப.166

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை 2.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

27. கம்பராமாயணத்தில் தொல்காப்பிய உரிச்சொற்களுள் மெய்ப்பாட்டுகள்

ஆய்வாளர்
திருமதி. N.P.விமலானந்தி
(பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,
கொடைக்கானல்)
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அன்னை வயலட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சென்னை.

நெறியாளர்
முனைவர்.செ.ரெஜினா
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர்
கல்லூரி (தன்னாட்சி),
பெரியகுளம்

DOI 10.5281/zenodo.17212950.

Abstract:

The Tolkappiyam, which is an ancient grammar book in Tamil, has three chapters: letter, word, and meaning. Meippattiyal is the sixth chapter of the Meippattiyal, which divides life into parts and tells it. Special meippattiyal in literature originates from plays. The feelings and events of the characters in Kamparamayanam express meippattiyal. The purpose of this article is to match the number meippattiyal among the adjectives of Tolkappiyar in Kamparamayanam.

Keywords: Tolkappiyam, Tolkappiyar, adjectives, nouns, Kamparamayanam, instruments, feelings, Kambar.

முன்னுரை:

தமிழ் இலக்கியங்களில் தனிச்சிறப்புக்களுள் மெய்ப்பாட்டு கொள்கையும் ஒன்றாகும் நாடகத்தில் தோன்றிய இப்பண்பு அதன் வழி தோன்றிய இலக்கியத்திலும் தானே பதிந்தது என்பது ஏற்புடையதாகும். தமிழில் அக இலக்கியம், புற இலக்கியம் நாடகப் பண்புடையன என்கின்றார் தமிழண்ணல். சமூக உறவுகளின் தாக்கத்தாலும் மாற்றத்தாலும் மனிதர்களுக்கிடையே தோன்றும் உணர்வு வேறுபாடுகள் உலகோர் அறிந்து கொள்ளும் வண்ணம் உடல் உறுப்புக்களால் வெளிப்படுத்திக் காட்டுவது மெய்ப்பாடாகும்.

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடைய மாந்தருக்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே

(**தொல்-மெய்ப்பாடு**. 30)

என்ற நூற்பாவிற்கு விளக்கம் தரும் தமிழண்ணல் சொற்பொருள் மட்டும் அறிந்தாருக்கு மெய்ப்பாடு தோன்றாது கண்ணாலும், செவியாலும் ஏனைய புலன்களாலும் கண்டு, கேட்டு, உண்டு, உற்று, அறிந்த பழக்கம் உடையவர்க்கே இப்பாடலிலுள்ள பொருளும் மெய்ப்பாடாகத் தோன்றும் என்கின்றார்.

மெய்ப்பாடு- சொற்பொருள் விளக்கம்:

மெய்ப்பாடு என்பது மெய்ப்படு என்பதன் திரிந்த வடிவமாகும். படு என்னும் தொழிற்பெயர் பாடு என நீண்டு முதனி லை திரிந்த தொழிற்பெயராகின்றது.

மெய்+ படு - மெய்ப்படு = மெய்ப்பாடு

மெய் (உடல்) படு (தோன்றுதல்)

மெய்யில் படுதல் மெய்ப்பாடு. அதாவது உணர்ச்சியாவது புற உடலில் வெளிப்படுதல் மெய்ப்பாடு எனப்படும்.[1]

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பேச்சு மொழித் தோற்றத்திற்கு முன்பே மனிதன் தன் உள்ளத்து உணர்ச்சிகளை உடலசைவுகளால் வெளிப்படுத்தினான். உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாக உடலின் மேல் தோன்றும் புறக் குறிகள் மெய்ப்பாடுகள் என அழைக்கப்படுகின்றன.[2] மெய்ப்பாட்டின் சிறப்பை, அக்காலத்தே மெய்ப்பாடுகள் செய்யுளுக்கு இன்றியமையாதனவாக இருந்தன என்பதைப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைக்கு எழுதிய உரையினின்றும் காணலாம்.[3] என்னும் கூற்றும் விளக்கும். "மெய்ப்பாடு என்பது வெளிப்படுவது என்று பொருள்படும்" என்பர் ந.சுப்புரெட்டியார்.[4]

மெய்ப்பாடு பற்றி அகராதிகள் தரும் விளக்கம்:

அபிதான சிந்தாமணி பொய்ய்ப்பாடு நகை அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெருளி ஆக எட்டு"[5] என்று பொருள் தருகின்றது

தமிழ் மொழியகராதி மெய்ப்பாடு என்பதற்கு மெய்ப்படு குறிப்பு வெளிப்படுக்குந் தோற்றம்"[6] எனப் பொருள் தருகின்றது.

மதுரை தமிழ்ப் பேரகராதி மெய்ப்பாடு என்பதற்கு, மெய்ப்பாடு குறிப்பு வெளிப்படுத்தும் தோற்றம், புகழ், இயற்கைக்குணம்"[7] என்று விளக்கம் தருகின்றது.

வாழ்வியல் களஞ்சியம் மெய்ப்பாடு என்பதற்கு மெய்ப்பாடுகள் அகம் பற்றிய ஒழுகலாறுகளிலும் புறம் பற்றிய ஒழுகலாறுகளிலும் மக்கள் ஈடுபடச் செயற்படும் பொழுது அவர்கள் உள்ளத்தில் நிகழும் குறிப்புகளுக்கு ஏற்பத் தோன்றுவள மெய்ப்பாடுகள் ஆகும்"[8] என விளக்கம் தருகின்றது.

தமிழிசைப் பேரகராதி மெய்ப்பாடு என்பதற்கு. "உள்ளத்து உணர்வுகளை உடல்மொழியான சைகைகளால் வெளிப்படுத்துவது என்றும் நகை, அழுகை. இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெருளி, உவகை என மெய்ப்பாடு எண்வகையாகும்"[9] என்றும் கூறுகிறது.

உரிச்சொல்- இலக்கணம்

பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு வகை சொற்களுள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வரும் சொற்கள் உரிச்சொற்கள் ஆகும். இது பெயர் சொல்லாகவோ வினைச்சொல்லாகவோ பெயருக்கு அடைமொழியாகவோ பெயருக்கும் வினைக்கும் பொதுவானவையாக அமைவது உரிச்சொற்கள்.

சொல்லின் பொது இலக்கணம்:

"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை,
இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி,
ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்,
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்,
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்"

(தொல் சொல் *-782)*

"எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்"

(தொல்.சொல். *-640)*

கிடைத்தவற்றில் பழமையானதும் முழுமையானதுமாகிய இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இது எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரத்திற்கும் ஒன்பது இயல்கள்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என இருபத்தேழு இயல்களைப் பெற்று விளங்குகிறது. இரண்டாவது அதிகாரமான சொல் அதிகாரத்தில் எட்டாவது இயலாத அமைந்திருப்பது உரியலாகும். அவ்வியலே சொற்பிறப்பு அகராதிக்கும் நிகண்டுகளின் தோற்றத்திற்கும் தோற்றுவாயாக அமைந்திருப்பது என்பர். தொல்காப்பியர் உரிச்சொல்லை விரித்துக் கூறுகின்ற போது அது இசை, குறிப்பு ,பண்பு என்னும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றும். பெயர் போலவும் வினை போலவும் அமைந்து அவ்விரு சொல்லாவதற்கு உரிமையுடையதாய் தம் பகுதிகள் திரிந்து தோன்றும். அத்தகு தன்மை கொண்ட உரிச்சொற்கள் ஒரு சொல் பல பொருளையும் பல சொற்கள் ஒரு பொருளையும் உணர்த்தும் தன்மை கொண்டவையாக அமையும். கேட்பவனால் ஒரு சொல் முன்பு அறியப்படாததாக இருந்தால் அச்சொல்லை அறியப்பட்ட சொல்லோடு சேர்த்து பொருளை உணர்த்துதல் வேண்டும். அவ்வுரிச் சொற்கள் தமக்குரிய இயல்பில் நின்றும் தாம் பொருந்தி நிற்கும் பெயரும் வினையும் ஆகிய நிலைக்கலன்களால் வேறு வேறு பொருளையும் உணர்த்தும்.

எண்வகை மெய்ப்பாடுகளும்- களங்களும்

தொல்காப்பியர் அகம்,புறம் இரண்டிற்கும் பொதுவான மெய்ப்பாடுகளைக் கூறுகின்றார்

"நகையே அழுகை இழிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப"

(**தொல் -மெய்ப்பாடு**. *3)*

எனக் கூறும் எண்வகை மெய்ப்பாடுகள் கம்பராமாயணத்தில் உரிச்சொற்களாக இடம் பெற்றுள்ளன.

எண்வகை மெய்ப்பாடு	நிலைக்களன்கள்
நகை	எள்ளல், இளமை, பேதைமை, மடம்
அழுகை	இளிவு, இழவு, அசைவு, வறுமை
இளிவரல்	மூப்பு, பிணி, வருத்தம், மென்மை
மருட்கை	புதுமை, பெருமை, சிறுமை,
அச்சம்	அணங்கு, விலங்கு, கள்வர், இறை
பெருமிதம்	கல்வி, தறுகண், இசைமை, கொடை
வெகுளி	உறுப்பறை,குடிகோள், அலை,கொலை
உவகை	செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு

நகை:

நகை தோன்றுவதற்குரிய நிலைக்களன்களாக தொல்காப்பியர் "எள்ளல் இளமை பேதமை மடன்" (தொல் -மெய்ப்பாடு-4) எனும் நான்கினைக் கூறுகின்றார். நகை என்பதற்கு "இகழ்ச்சியிற் பிறப்பது"[10] என இளம்பூரணர் பொருள் விளக்கம் தருகிறார். கம்பனில் பேதமை சுவை தோன்றும் நிலைக்களன்கள் தெளிவாகச் சூட்டப்பட்டுள்ளன.

"மழவும் குழவும் இளமைப் பொருள". (**தொல்.உரி**.*14)*

"குழலும் வீணையும் யாழுமென்றினையன குழையும்
மழலை மென்மொழி கிளிக்கிருந் தளிக்கின்ற மகளிர்
சுழலு நன்னெடும் தடமணிச் சுவர்தொறுந் துவன்றும்
நிழலும் தம்மையும் மெய்மை நின்றறி வரு நிலைய"(**கம்ப.சுந்தர**.*101)*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பருவம் அடைந்த பெண்கள் புல்லாங்குழலும், வீணையும், யாழும், இன்னிசை கருவிகள் இசைக்க கிளிப்பிள்ளைகளுக்கு அன்போடு மழலைச் சொற்களைக் கற்றுக் கொடுக்கும் செயலானது பேதமையால் நகை தோன்றகிறது. மழலை மொழி பேதமையைத் தோற்றிவித்து நகைப்பை உருவாக்கிறது.மழ என்னும் உரிச்சொல் இளமை பொருளை உணர்த்தும் குறிப்பு பொருண்மையில் வந்திருந்தாலும் பேதமை உண்டாக்கக்கூடிய நகைப்பென்னும் மெய்ப்பாட்டை உணர்த்துகின்றது.

அழுகை:

"இளிவே இழவே இசைவே வறுமை" **(தொல் -மெய்ப்பாடு-*5)***

என்ற நான்கின் காரணமாக அழுகை தோன்றும் என்கிறார் தொல்காப்பியர். காப்பியத்தில் இளிவு பற்றிய அழுகை உணர்வு மிகுதியாக உள்ளது.

"புலம்பே தனிமை" **(தொல்.உரி.*33)***

"பரிந்து புலம்பும் மகளிர் காணக் கணவர் பிணம் பற்றி
விரிந்த குருதிப் பேராறு ஈர்த்து மனைக டொறும் வீச
இரிந்த திலங்கை யெழுந்த தழுகை யின்றிங்கு இவனாலே
சரிந்ததரக்கர்வலியெனறெண்ணிஅறமுந் தளிர்த்ததால்"

(கம்ப.சுந்தர.*864)*

இலங்காபுரியில் அனுமன் செய்த செயலால் இரத்த பெருக்கானது பரந்து விரிந்து சென்றது. தம் கணவனை இழந்த அரக்க மகளிர் அவரவருடைய கணவரின் பிணங்களைக் கண்டு அழுது புலம்பும் ஒலியானது நகரமெங்கும் கேட்டது.

"வானத்தை நெடும்புகை மாய்த்ததால்
போன தீக்கறி யாது புலம்பினார்
தேன் கத்த மலர்பல சிந்திய
கான கத்து மயிலென்ன காட்சியார்" **(கம்ப.சுந்தர.*1190)***

அனுமன் இலங்கையில் நுழைந்து அரக்கர்களை அழித்து அவரவர் கணவர் பிணங்களை வீட்டில் இழுத்துப் போட்டது கண்டும், அனுமன் வைத்த நெருப்பினால் ஏற்பட்ட நெடும்புகையைக் கண்டு அஞ்சி தப்பி ஓடிய கணவர்கள் எந்த திசையில் சென்றார்கள் என்று தேடி அலைந்து அழும் பெண்களின் புலம்பும் அழுகுரல் ஊரெங்கும் மிக்க ஒலித்தது. இங்கு புலம்பு என்னும் சொல் அழுகை என்னும் பொருளினைக் குறிக்கின்றது. புலம்பு குறிப்பு உரிச்சொற்களாக இருந்தாலும் இளிவு என்னும் பொருளில் வந்து அழுகை என்னும் மெய்ப்பாட்டினை உணர்த்தி நிற்கின்றது

"...கொடுத்தருள் வெறுக்கை வேண்டிற் றொற்கமாம் விழுமங்குன்ற...."

(கம்ப.பால.*684)*

சுனசேபன் தன்னை எடுத்து வளர்த்த தந்தையாகிய ரிசீகனுக்கு அவரின் வறுமை கெடும்படி தன்னை விலையாக ஏற்றுக் கொண்டு அவர் விரும்பும் அளவிற்கு பொருள்களைக் கொடுக்கும்படி அரசனை வேண்டிக் கூறினான். இதில் வரும் ஒற்கம் என்னும் உரிச்சொல் வறுமை என்னும் பொருளில் அழுகை என்னும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

இளிவரல்:

இளிவரல் எனும் மெய்ப்பாடு "மூக்கு பிணி வருத்தம் மென்மை" (மெய்ப்பாடு-*6)* என்ற நான்கு காரணங்களால் தோன்றும் என்கின்றார் தொல்காப்பியர் .

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"பையுளும் சிறுமையும் நோயின் பொருள" (தொல்.உரி. *43)*

திரு நகர் தீர்ந்த வண்ணம் மானவ தெரித்தி என்ன
பருவரல் தம்பி கூற பரிந்தவன் பையுள் எய்தி
இரு கண் நீர் அருவி சோரக் குகனும் ஆண்டு இருந்தான் என்னே
பெருநிலக்கிழத்திநோற்றும்பெற்றிலள்போலும்என்னா

(கம்ப. அயோத்தி.672)

அயோத்தி நகரத்தை விட்டு வெளியேறிய இராமனின் நிலையை அறிந்து, தம்பி சுக்கிரீவன் வருத்தத்துடன் கூற, இராமன் மிகுந்த துயரடைந்து, கண்கள் நீர் ஆறாகப் பெருக,. இந்தப் பெரிய நிலக்கிழத்தியான கைகேயி, இவ்வளவு துன்பத்தையும் பார்த்தும் பார்க்காமல் இருப்பது கண்டு குகன் வருந்துவதாகக் கூறுகிறான். இதில் வரும் பையுள் என்னும் உரிச்சொல் வருத்தம் என்னும் பொருளில் இளிவரல் என்னும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

மருட்கை:

தொல்காப்பியர் மருட்கை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய களங்களாக 'புதுமை பெருமை சிறுமை ஆக்கல்" (தொல்-மெய்ப்பாடு-*7)* என்ற நான்கினைக் கூறுகின்றார்.

"கடி என் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்தேற்று ஆயீர் ஐந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டு ஆகும்மே" (தொல்.உரி.*85)*

'பெருங்களிப் புற்ற மைந்தர் பேரெழிலாகத்தோடு பெருந்துணைக்
கொங்கை யன்ன பொருவில் கோள்கரும்பின் மாடே
மருங்கெனக் குழையுங் கொம்பின் மடப்பெடை வண்டுந் தங்கண்
கருங்குழற் களிக்கும் வண்டுங் கடிமணம் புணர்தல் கண்டார்"

(கம்ப.பால.943)

பாலகாண்டத்தில் வரைக் காட்சி படலத்தில் கோங்கரும்பின் பூங்கொம்பில் வாழ்கின்ற பெண் வண்டுகளும் தமது கருங்குழலில் படிந்த ஆண் வண்டுகளும் புதுமணம் செய்து கொள்வதை அங்கு தங்கியிருந்த மகளிர் கண்டனர்.

இதில் வரும் கடி என்னும் உரிச்சொல் புதுமை என்னும் பொருளில் மருட்கை என்னும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

அச்சம்:

"அணங்கு விலங்கு கள்வர் தம்இறை" (தொல்-மெய்ப்பாடு-*8)* என்ற நான்கினை அச்சம் தோன்றுவதற்குரிய களங்களாகச் சுற்றுகிறார் தொல்காப்பியர். தொல்காப்பியர் சுட்டும் அச்சத்திற்குரிய களங்கள் கம்பராமாயணத்தில் மிகுதியாக இடம்பெறவில்லை என்றாலும் கதை நிகழ்ச்சியின் வாயிலாக தோன்றும் அச்ச உணர்வு இடம்பெற்றிருக்கின்றது.

"பேம் நாம் உரும் என வரூஉம் கிளவி
ஆ முறை மூன்றும் அச்சப் பொருள." (தொல்.உரி. *67)*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"பொரு அரு வேலை தாவும் புந்தியான் புவனம் தாய
பெரு வடிவு உயர்ந்த மாயோன் மேக்கு உறப் பெயர்த்ததான் போல்
உரு அறி வடிவின் உம்பர் ஓங்கினன் உவமையாலும்
திருவடி என்னும் தன்மை யாருக்கும் தெரிய நின்றான்"

(கம்ப.கிட்கி.*1046)*

மூவுலகங்களையும் தாவி அளந்த அஞ்சத்தக்க பெருவடிவம் கொண்டு உயர்ந்த திருமாலின் உருவத்தை போல அனுமன் பெரு வடிவத்துடன் யாவருக்கும் விளங்கும் படி நின்றான். இங்கு உரு என்னும் குறிப்புப் பொருண்மை உரிச்சொல்லாக இடம்பெற்றாலும் அச்சம் என்னும் மெய்ப்பாட்டினை உணர்த்தி நிற்கின்றது.

பெருமிதம்:

கல்வி தறுகண் இசைமை கோடை (தொல்-மெய்ப்பாடு-9) எனத் தொல்காப்பியர் பெருமித மெய்ப்பாடு நான்கு நிலைகளில் தோன்றும் என்கிறார்.

"சீர்த்தி மிகு புகழ்…." **(தொல்..உரி.** *15)*
வேட்டு அவர் வேட்ட பின் வேந்தனும் மேல்_நாள்
கூட்டிய சீர்த்தி கொடுத்திலன் அல்லால்
ஈட்டிய மெய்ப் பொருள் உள்ளன எல்லாம்
வேட்டவர் வேட்டவை வேண்டு அளவு ஈந்தான்

(கம்ப.பால.*1346)*

சனக மன்னன் தனது மகள்கள் விரும்பியபடி இராமன் மற்றும் தம்பிகளுக்கு திருமணம் செய்து கொடுத்ததுடன் மட்டுமல்லாது சேர்த்து வைக்கப்பட்டுள்ள பொன்,மணி, ஆடை ஆபரணம் முதலான பலவகை வடிவம் உடைய பொருட்கள் எல்லாவற்றையும் விரும்பியவர்கள் விரும்பிய வண்ணம் வேண்டுமளவு கொடுத்தான். பிறகு, அம்மன்னன் பல காலமாக சேர்த்து வைத்திருந்த சீர்த்தி என்னும் புகழ் ஒன்றை மட்டும் பெருமிதத்துடன் தானே வைத்துக்கொண்டான் பிறர் யாருக்கும் தரவில்லை இதில் வரும் சீர்த்தி என்னும் உரிச்சொல் மிகுபுகழ் என்னும் பொருளில் பெருமிதம் என்னும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

"கய ரத துரக மாக் கடலன் கல்வியன்
தயரதன் எனும் பெயர் தனிச் செல் நேமியான்
புயல் பொழி தடக் கையான் புதல்வன் பூம் கணை
மயல் விளை மதனற்கும் வடிவு மேன்மையான்"

(கம்ப பால.*806)*

"யானைகள், தேர்கள், குதிரைகள், கடல் போன்ற செல்வங்களை உடையவன், கல்வியில் சிறந்தவன், தயரதன் என்று பெயர் கொண்ட தனிப்பெருமை உடையவன், மேகம் பொழியும் பெரிய கையை உடையவன் ஆகியோரின் மகன்" ஆகும். இது இராமபிரானை குறிக்கும் பாடல் வரி. இதில் வரும் கய என்னும் உரிச்சொல் தறுகண்மை என்னும் பொருளில் பெருமிதம் என்னும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

உவகை:

"செல்வம் புலன் புணர்வு விளையாட்டு" (தொல்-மெய்ப்பாடு-11) என உவகை தோன்றுவதற்குரிய காரணங்களைச் சுட்டுகிறார் தொல்காப்பியர்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"....உவப்பே உவகை" (தொல்.உரி. 8)

ஆரமும் அகிலும் துன்றி அர் பளிக்கு அறை அளாவி
நாரம் நின்றன போல் தோன்றி நவ மணித் தடங்கள் நீடும்
பாரமும் மருங்கும் தெய்வத் தருவும் நீர்ப் பண்ணை ஆடும்
சூர்_அர_மகளிர் ஊசல் துவன்றிய சும்மைத்து அன்றே"

(கம்ப.கிட்கி.112)

சந்தனம் முதலிய சிறந்த மரங்களும் தெய்வப் பெண்கள் தம் உலகத்தை விட்டு இங்கு வந்து தாமரை தடாகத்தின் அருகிலுள்ள மரங்களில் ஊஞ்சல் கட்டி விளையாடப் பெற்ற சிறப்புடையது அச்சோலை. அங்கு வந்த மகளிர் மகிழ்ச்சியாக நீர் விளையாட்டு விளையாடிச் சென்றனர். பண்ணை எனும் உரிச்சொற்கள் விளையாட்டு என்னும் பொருளில் உவகை (மகிழ்ச்சி) என்னும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

வெகுளி:

தொல்காப்பியர் வெகுளி தோன்றுவதற்குரிய காரணங்களாக உறுப்பறை,குறிக்கோள் அலை,கொலை (தொல்-மெய்ப்பாடுகள்-10)

"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள" (தொல்.உரி. 74)

கறுப்பு உறு மனமும் கண்ணில் சிவப்புறு சூட்டும் காட்டி
உறுப்புறு படையின் தாக்கி உறு பகை இன்றிச் சீறி
வெறுப்பு இல களிப்பின் வெம் போர் மதுகைய வீர ஆக்கை
மறுப்பட ஆவி பேணா வாரணம் பொருத்துவாரும் (கம்ப.பால. 48)

எந்தவிதமான பகையும் இல்லாமலேயே ஒன்றன் மீது ஒன்று சீற்றத்தை வெளிப்படுத்தியவாறு கோபம் கொண்ட மனமும் கோபத்தால் சிவந்த கண்ணும் கண்களை விட சிவப்பாக மின்னும் கொண்டையுமாக நிற்கும் சேவல்கள் தம் கால்களே கட்டப்பட்டுள்ள கத்தியை கொண்டு ஒன்றை ஒன்று தாக்கி போர் செய்வதில் வெறுப்போ சலிப்போ அடையாமல் எவ்வளவு காயம் பட்டாலும் தன் உயிரை காத்துக் கொள்வதற்காக ஓடிப் போகாமல் நின்று போரிடுவதுப் போல வீர உடலையும் உயிரைப் பற்றி கவலைப்படாமலும் சண்டையிடும் தன்னலமற்ற போர் வீரர்களை குறிப்பிடுகிறது இங்கு "கருப்புறு மனமும்" என்பது வெகுளியான (கோபமான) மனத்தையும் "சிவப்புறு சூட்டும் காட்டி" என்பது கண்களில் சிவந்த சுடரையும் (சினம்) என்ற பொருளைக் குறிக்கின்றது கறுப்பும் சிவப்பும் நிறம் என்ற ஒருபொருளை உணர்த்தும் பலஉரிச்சொல் பண்புப் பொருண்மையை உணர்த்தினாலும் வெகுளி எனும் மெய்ப்பாட்டை விளக்குவதாக அமைந்துள்ளது.

"நீப்புண்ட உதிரி வாரியம் நெடும் திரைப் புணரி தோன்ற
ஈர்ப்புண்டதற்கு அரிய ஆய பிணக் குவடு இடறிச் செல்வான்
தேய்ப்புண்ட தம்பி யாக்கை சிவப்புண்ட கண்கள் தீயில்
காய்ப்புண்ட செம்பின் தோன்ற கறுப்புண்ட மனத்தன் கண்டான்"

(கம்ப.சுந்தர .1003)

இந்திரஜித் தம்பியான ஆகாசனை இழந்ததைக் கண்டு இந்திரஜித் அடைந்த கோபத்தையும் சோகத்தையும் சினத்தையும் விவரிக்கிறது தியாகமும் தனியாத கோபமும் கொண்டு அவன் கண்கள் தீயில் காய்ந்த செம்பை போல சிவந்து மனதில் கருப்புடன் சினங்கொண்டு போருக்கு எழுந்தான்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"விண் முழுது ஆளி செய்த வினை என வெகுண்டு நீ போய்
மண் மகள் ஆதி என்று மடவரல் -தன்னை ஏவி
கண் மலர் சிவப்ப உள்ளம் கறுப்புறக் கடிதின் ஏகி
எண்மரின் வலியன் ஆய யமன் திசை - தன்னை உற்றான்"

(கம்ப.பால.669)

இது கம்பராமாயணத்தின் கைக்கிளை படலத்தில் வரும் ஒரு பகுதி ஆகும் இது ஒரு மன்னன் சினம் கொண்டு ஒரு எமதூதனை தென்திசை நோக்கி அனுப்புவதாக காட்டுகிறது. இதில் வரும் கறுப்பும்,சிவப்பும் என்னும் உரிச்சொல் நிறத்தை மட்டும் அல்லாது வெகுளி என்னும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

முடிவுரை:

மெய்ப்பாடு என்பது நம் மெய்யின் கண் தோன்றும் தன்மை இதனை தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை ,அச்சம் ,பெருமிதம், வெகுளி ,உவகை என்ற வகையில் அடக்குகிறார். கம்பராமாயணத்தில் தொல்காப்பியரின் எண்வகை மெய்ப்பாட்டுகளை உரிச்சொற்களைக் கொண்டு நேரடியாகவும் நுணுக்கமாகவும் மாந்தர்களின் உணர்வுகளால் உடல் உறுப்புக்களால் வெளிப்படும் தன்மைகளைச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை பற்றி இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. ஜே.ஜி.என்.தாசன், சிலம்பில் மெய்ப்பாடுகள் ப.1
2. மு.பொன்னுசாமி, சங்க இலக்கியத்தில் நாதல் மெய்ப்பாடுகள், ப.14
3. கு.கோதண்டபாணி பிள்ளை, கம்பரும் மெய்ப்பாட்டியலும் ப.6
4. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை ப.260
5. ஆ.சிவலிங்கனார்,தொல்காப்பியம்-மெய்ப்பாட்டியல் உரைவளம் ப.11
6. சிங்காரவேலு முதலியார், அபிதானசிந்தாமணி, ப.1631
7. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழியகராதி ப. 1204
8. சந்தியா நடராஜன் (ப.ஆ) மதுரைத் தமிழ்ப் பேரகராதி ப.469
9. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி.14 ப.85
10. நா.மம்மது, (ப.ஆ) தமிழிசைப் பேரகராதி ப.423

துணை நூற்பட்டியல்

1. அறிஞர். சுப்ரமணியன். சவே -சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி 2, 3 மணிவாசகர் பதிப்பகம், 31,சிங்கர் தெரு, பாரிமுனை சென்னை 600108. 45 முதல் பதிப்பு-21 சூன் 2010
2. இளம்பூரணன். (2007). தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல். சென்னை, கழக வெளியீடு
3. ரா.வே.சேதுப்பிள்ளை. (2004). கம்பர் இன்பம், தொகுதி கவி இராஜபாளையம். 2.
4. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும். புத்தகநிலையம். மதுரை, மீனாட்சி
5. முனைவர் திருஞானசம்பந்தம்.ச தொல்காப்பியம் சொல்லதிகாரம் கதிர்பதிப்பகம் தெற்கு வீதி, திருவையாறு 613204 முதல் பதிப்பு - சூன் 2020.
6. ஆச்சார்யா, பி.எஸ். வால்மீகி இராமாயணம், சென்னை, நர்மதா பதிப்பகம்.
7. வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியர், (1957). கம்பராமாயணம். சென்னை, மூன்றாம் பதிப்பு.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

28. பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்…'

ந. தட்சணாமூர்த்தி *M.A* (தமிழ்),
அஞ்சல்துறை கணக்கு அதிகாரி (ஓய்வு), பட்டுக்கோட்டை - *614602*
மின்னஞ்சல்: *ndmoorthy30@gmail.com ORCHID ID: https://orcid.org/0009-0004-5055-1713*

N. Dakshinamoorthy M.A (Tamil), Accounts Officer (Retired), Dept. of Posts, Pattukottai - 614602

DOI 10.5281/zenodo.17212962.

Abstract:

In the 34rth verse of Purananuru, there is difference of reading in the third line among different texts. While the first word of the third line is, 'Kuravar' in many publications, it is 'Parppar' in the publication made by U. V. Swaminatha Ayyar. Some persons make allegation against U. V. Swaminatha Ayyar that he intentionally changed the word, 'Kuravar' into 'Parppar'. This article examines whether this allegation is true and which reading is correct.

Keywords: Purananuru - U. V.Swaminatha Ayyar - Avvai Duraisamy pillai - Ellis - Thirukkural - Parimelalagar.

முன்னுரை:

பெருமை வாய்ந்த சங்க இலக்கியங்களுள் புறப்பொருள் பற்றிய நூல்களில் சிறந்து விளங்குவது புறநானூறு. தற்காலத்தில் வெளிவந்துள்ள புறநானூற்றுப் பதிப்புகளில் புலியூர்க் கேசிகன் உரை முதலான பல நூல்களில் புறநானூற்றுப் பாடல் *34* இவ்வாறு உள்ளது:

"ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவே
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டின்றே யாயிழை கணவ/
………………………………………..."

இதே பாடல் உ.வே.சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்த புறநானூற்றில் இவ்வாறு உள்ளது:

"ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும் …."

இதனால் சிலர், உ.வே.சா ஒரு பார்ப்பனர் என்பதால் பார்ப்பனருக்குப் பெருமை தரும் விதமாக, குரவர்த் தப்பிய' என்பதை, பார்ப்பார்த் தப்பிய' என்று மாற்றிவிட்டார் என்று அவரைக் குற்றம் கூறுவதை சமூக வலைத்தளங்களில் காணமுடிகிறது. இரண்டில் எது சரியானது, இத்தகைய மாறுபாடுகள் எப்படி ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற கேள்விகள் எழுகின்றன. அவற்றைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

உ.வே.சா வின் புறநானூற்றுப் பதிப்பு:

அச்சு இயந்திரம் வந்து ஓலைச்சுடிகளில் இருந்த தமிழ்நூல்கள் பதிப்பிக்கப்பட்டு அச்சு நூலாக வெளிவரத் தொடங்கிய காலத்தில், அழியும் நிலையில் இருந்த அரிய பல பழந்தமிழ் ஓலைச்சுவடிகளைத் தேடி அலைந்து, அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்து, கடுமையாக உழைத்து அவற்றை நுட்பமாக ஆராய்ந்து பிழைகளை நீக்கி, பாடவேறுபாடுகளை ஒப்பிட்டுச் சரியான பாடங்களுடன் செம்மையாகப் பதிப்பித்தவர் உ.வே.சா. அவர் அப்படிச் செய்திராவிட்டால் இன்று தமிழின் பெருமையை உலகுக்குக் காட்டும் பல பண்டைத் தமிழ் நூல்கள் நமக்குக் கிடைக்காமலே போயிருக்கும். எனவே தமிழ் உலகம் அவருக்கு நன்றிக்கடன்பட்டுள்ளது.

அவர் ஓலைச்சுவடிகளைத் தேடியலைந்தபோது புறநானூற்றுக்கு யாரோ பெயர் தெரியாத ஒருவர் எழுதிய பழையவுரைச் சுவடிகள் சில கிடைத்தன. மேலும் உரையில்லாமல் புறநானூற்று மூலம் மட்டும் கொண்ட சுவடிகள் சிலவும் கிடைத்தன. இந்தப் பழையவுரை முழுமையாகக் கிடைக்கவில்லை. ஒவ்வொரு சுவடியிலும் குறைவான பாடல்களுக்கே உரை இருந்தது. அதிக அளவாக *266* பாடல்களுக்கு உரை கிடைத்தது. புறநானூற்றின் மற்ற பாடல்கள் வேறு சில மூலச்சுவடிகளில் கிடைத்தன. சில சுவடிகளில் சில பாடல்கள் சிதைந்து இருந்தன. அவற்றுள் சில வேறு சில சுவடிகளில் கிடைத்தன. சில பாடல்கள் எந்தச் சுவடியிலும் கிடைக்கவில்லை. இவற்றை எல்லாம் ஆராய்ந்து தொகுத்து அவர் புறநானூறு - மூலமும் உரையும்' என்ற நூலாக *1894*ல் வெளியிட்டார். அதில் முதல் *266* பாடல்களுக்கு மூலத்துடன் கூடிய பழையவுரையைப் பதிப்பித்தும் மற்ற பாடல்களுக்கு கிடைத்த மூலப்பாடல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டார். கிடைத்த சுவடிகள், அவற்றில் இருந்த பாடல்களின் எண்ணிக்கை முதலிய விவரங்களை முன்னுரையில் அவர் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். ஏடுகளைப் பெயர்த்தெழுதுவோரின் தவறுகளாலும் பிற காரணங்களாலும் சுவடிகளில் பல பிழைகள் இருப்பது வழக்கம். நூலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள சொல் வெவ்வேறு சுவடிகளில் வெவ்வேறாக இருப்பது உண்டு. இதை, பாடபேதம்' என்பர். இத்தகைய பாடவேறுபாடுகளை ஆராய்ந்து, சரியானது எது என முடிவு செய்து, எழுத்துப்பிழைகளைத் திருத்தி உ.வே.சா பதிப்பித்தார். அதேசமயம் பாடபேதங்களை அடிக்குறிப்புகளில் சுட்டிக்காட்டுவார். மேலே கூறிய பாடலில், பார்ப்பார்த் தப்பிய' என்று பதிப்பித்துள்ள அவர் அதற்கு வேறு பாடபேதம் எதையும் சுட்டிக்காட்டவில்லை.

பெருஞ்சித்திரனாரின் குற்றச்சாட்டு:

'ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்' என்ற தனது நூலில் அறிஞர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், பதிப்பு வேலையில் திரிப்பு செய்துவிட்டதாக உ.வே.சா மீது பல குற்றச்சாட்டுகளைக் கூறுகிறார். அவற்றுள் முதன்மையான ஒன்று 'அறவோர்த் தப்பிய' என்பதை அவர் பார்ப்பார்த் தப்பிய' என மாற்றிப் பதிப்பித்துவிட்டார் என்பது. யாழ்ப்பாணத்து பழைய வெளியீடு ஒன்றில் மேலே கூறிய பாடலில் 'அறவோர்' என்று உள்ளதாக உரையாசிரியர் சிலர் குறித்துள்ளனர் என்றும் அதை உ.வே.சா பார்ப்பார்' என்று மாற்றிப் பதிப்பித்ததாகவும் பாடபேதத்தில் கூட 'அறவோர்' என்பதை உ.வே.சா காட்டவில்லை என்றும் குற்றம் சாட்டுகிறார்[1]. அந்த யாழ்ப்பாண வெளியீட்டின் விவரத்தையோ, அதைச் சுட்டிக்காட்டிய உரையாசிரியர்களின் விவரத்தையோ அவர் தெரிவிக்கவில்லை.

எல்லிஸ் துரையின் திருக்குறள் உரை:

ஆங்கிலேயர் ஆட்சியில் அரசு அதிகாரியாகப் பணியாற்றிய எல்லிஸ் துரை தமிழ் மீதும் தமிழ் இலக்கியங்கள் மீதும் மிகவும் பற்று கொண்டார். திருக்குறளால் மிகவும் கவரப்பட்ட அவர் திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் விரிவான ஒரு உரையெழுத விரும்பினார்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

13வது அதிகாரத்தின் நான்காம் பாடல் வரை மட்டுமே அவரால் இந்த உரையை எழுத முடிந்தது. அதன்பிறகு அவர் இறந்துவிட்டார். இந்த உரை 1819ல் வெளிவந்துள்ளது. அதில் அவர் ஒவ்வொரு குறளுக்கும் ஆங்கிலத்தில் உரையெழுதி விரிவான விளக்கமும் தருகிறார். மேலும் பற்பல பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்து மிகப்பல பாடல்களை எடுத்துக்கூறி விளக்குகிறார். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' (குறள் - 110) என்ற குறளின் உரையில் அவர் இக்குறளுக்குப் பரிமேலழகர் கூறியுள்ள உரையைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் மேலே கூறிய புறநானூற்றுப் பாடலையும் குறிப்பிட்டு எழுதியுள்ளார். அப்பாடலில் மூன்றாம் வரியில், 'குரவர்த் தப்பிய' என்று உள்ளது. எனவே அவருக்குக் கிடைத்த புறநானூற்று ஓலைச்சுவடியில் 'குரவர்த்தப்பிய' என்று இருந்துள்ளது எனத் தெரிகிறது.

பரிமேலழகர் திருக்குறள் உரை:

திருக்குறள் உரைகளில் சிறந்தது எனப் போற்றப்படும் பரிமேலழகர் உரையின் காலம் ஏறத்தாழ 13 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. பரிமேலழகர், 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்ற குறளுக்கு விளக்கம் கூறும்போது, 'பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்' என்று குறிப்பிட்டுள்ளார்[3]. புறநானூற்றுப் பாடல் 34 ஐ மனதில் கொண்டே இவ்வாறு கூறியுள்ளார் என்பது தெளிவு. ஆறுமுக நாவலர் பதிப்பித்த திருக்குறள் பரிமேலழகர் உரை உட்பட (13 ஆம் பதிப்பு - 1889) பல பதிப்புகளிலும் இவ்வாறே பரிமேலழகரின் உரை உள்ளது. எல்லிஸ் துரையும் இவ்வாறே குறிப்பிட்டுள்ளார். ஆனால் மூதறிஞர் தண்டபாணி தேசிகரின் அரிய தொகுப்புகளான திருக்குறள் உரைவளம்[4], திருக்குறள் உரைக்களஞ்சியம்[5] ஆகியவற்றில் பரிமேலழகர் உரையானது, 'பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், **குரவர்த்** தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு பதிப்புகளிலும் ஓலைச்சுவடிகளிலும் 'பார்ப்பார்த் தபுதலும்' என்றே உள்ளதால் தண்டபாணி தேசிகர் எடுத்துக்கொண்ட பரிமேலழகர் உரை நூலில் இவ்வாறு 'குரவர்' என்ற தவறான பாடம் இருந்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. 'பார்ப்பார்த் தபுதலும்' என்பதே பரிமேலழகர் திருக்குறள் உரையின் சரியான பாடம் என்பது தெளிவு.

இளம்பூரணர் தொல்காப்பிய உரை:

பரிமேலழகருக்குக் காலத்தால் முற்பட்ட இளம்பூரணர் தன் தொல்காப்பிய உரையில் புறத்திணையியலில் உள்ள 'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர் பழித்தலும்' (தொல். 3.2.87:1) என்ற சூத்திரத்தின் உரையில் இந்தப் புறநானூற்றுப் பாடல் 34 ஐ முழுமையாகக் காட்டியுள்ளார்[6]. அதில் 'பார்ப்பார்த் தப்பிய' என்றே உள்ளது.

ஔவை துரைசாமிப் பிள்ளையின் புறநானூற்று உரை:

பொதுவாக, பழந்தமிழ் நூல்களில் உள்ள பாடல்களுக்கு பழைய உரையாசிரியர்கள் எழுதிய உரைகளைக் கொண்டே தற்காலத்தில் பொருள் அறியப்படுகிறது. பழைய உரைகளின் நடையானது பயிற்சி இல்லாதவருக்கு தற்காலத்தில் புரியாது என்பதால் தமிழறிஞர்கள் பழைய உரைகளைத் தற்காலத் தமிழுக்கு மாற்றி எளிமையாக்கி எழுதுகின்றனர். சிலர் புதிய பொருள் கூறுதலும் உண்டு. பழைய உரைகள் கிடைக்காத நூல்களுக்குச் சில தமிழறிஞர்கள் தாமே புதிதாக உரை எழுதி வெளியிட்டுள்ளனர். புறநானூற்றுக்குப் பழைய உரை 266 பாடல்களுக்கு மட்டுமே கிடைத்ததால் மற்ற பாடல்களுக்குப் புதிதாக உரை எழுத வேண்டியிருந்தது. இந்த அரும்பணியைச் செய்தவர் உரைவேந்தர் என்று போற்றப்படும் ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள். 266 பாடல்களுக்குப் பழையவுரையைத் தழுவி எழுதியும் மற்ற பாடல்களுக்குத் தாமே உரை

http://Creativecommons.org//license/by/4.0/. ISBN: 978-93-343-7954-9

எழுதியும் அவர் இந்த அரிய பணியை முடித்தார். இந்த உரையின் முதல் பகுதி முதல் *200* பாடல்களின் உரையாக *1947* ல் வெளிவந்தது. பின் *200* பாடல்களுக்கு உரிய இரண்டாம் பகுதி *1951*ல் வெளிவந்தது.

பழையவுரையில் பாடல் *34*ல் பார்ப்பார்த் தப்பிய' என்றே உள்ளது. உரையாசிரியரும் அதற்குரிய விளக்கத்தையே கொடுத்துள்ளார். பழையவுரை உள்ள பாடல்களுக்கு அதைப் பின்பற்றியே ஔவை துரைசாமிப்பிள்ளை உரை எழுதியிருந்தாலும் இந்தப் பாடலில் பார்ப்பார்த் தப்பிய' என்பதற்குப் பதிலாக 'குரவர்த் தப்பிய' என்று பாடம் கொண்டு அதற்கேற்றவாறு பொருள் கூறியுள்ளார். மேலும் இப்பாடல் விளக்கத்தில், "குரவர்த் தப்பிய என்பது பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்குமெனத் திருத்தப்பட்டிருக்கிறது. இத்திருத்தம் பரிமேலழகர் காலத்தேயே செய்யப்பட்டுளதென்பது திருக்குறளுரையாற் காணப்படுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்[7]. 'குரவர்த் தப்பிய' என்பதே சரியான பாடம் என்றும் பரிமேலழகர் காலத்திலேயே இது திருத்தப்பட்டுள்ளது என்றும் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அவர் முடிவு செய்தார்; அந்தப் பாடத்தைக் கொண்ட ஓலைச்சுவடி எது என்பவை பற்றிய எந்த விவரமும் கூறப்படவில்லை. அவரது முன்னுரையும் அந்நூலில் இல்லை. *1951*ல் வெளிவந்த இந்த உரையின் இரண்டாம் பகுதியில் அவர் முன்னுரை எழுதியுள்ளார். அந்த முன்னுரையில் தஞ்சை மாவட்டம் அரித்துவாரமங்கலம் அருகே உள்ள பள்ளியூரில் வாழ்ந்த கிருட்டிணசாமி சேனைநாட்டார் என்பவரிடம் இருந்த புறநானூற்றுக் கைப்பிரதி பற்றி விவரித்துள்ளார்[8]. அரித்துவாரமங்கலத்தில் வாழ்ந்த புலவர் வா. கோபாலசாமி ரகுநாத ராசாளியாரிடம் புறநானூற்றுச் சுவடி ஒன்று இருந்ததாகவும் அதைத் தாம் திருத்தமாகப் படியெடுத்து வைத்திருப்பதாகவும் கிருட்டிணசாமி சேனைநாட்டார் கூறினார் என்றும் துரைசாமிப்பிள்ளை அதை உ.வே.சா வின் புறநானூற்றுப் பதிப்புடன் ஒப்பிட்டு வேறுபாடுகளைக் குறித்துக் கொண்டார் என்றும் இப்பணி *1927*ல் முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதைக் கொண்டே தனது புறநானூற்று உரையில் அவர் மாற்றங்களைச் செய்துள்ளார் என அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களின் அணிந்துரை மூலம் தெரிகிறது[9]. எனினும் 'குரவர்த் தப்பிய' என்பதே சரியான பாடம் என்று எப்படி அவர் கொண்டார் என்பதற்கு விடை கிடைக்கவில்லை.

திரிப்பு முயற்சிகள்:

பழைய நூல்களில் உள்ள சொற்கள் சிலருக்கு ஏற்புடையதாக இல்லாமல் இருக்கும் சமயங்களில் அவர்கள் அவை பிழையானவை என்று கொண்டு, அவற்றைத் திருத்துவதாக நினைத்து, தாம் விரும்பும் விதத்தில் அவற்றை மாற்றுவது உண்டு. கந்தி என்ற சமணப் பெண் துறவி இவ்வாறு செய்ததையும் பரிமேலழகர் இத்தகைய புன்சொற்களை நீக்கிச் சரியாக்கியதையும் பரிபாடல் பரிமேலழகர் உரையின் உரைச்சிறப்புப்பாயிரம் விளக்குகிறது. தற்காலத்தில் சிலர் திருக்குறளின் குறள்களுக்குப் புதுப்புது பொருள் கூறுவது மட்டுமின்றி அதிகாரத் தலைப்புகளையும் தங்கள் விருப்பம் போல் மாற்றிவருகின்றனர்.

19-ஆம் நூற்றாண்டில் மதுரைக்கு வந்து வாழ்ந்த ஸ்காட் என்ற மேலைநாட்டுப் பாதிரியார் தமிழில் ஆர்வம் கொண்டவர்; தன் பெயரை சுகாத்தியர் என்று தமிழ் வடிவமாக்கிக் கொண்டார்; திருக்குறளுக்கு ஒரு உரை எழுதினார். செய்யுளுக்கு எதுகை, மோனை கட்டாயமானவை என்றும் அப்படி அல்லாதவை பிழையானவை என்றும் அவர் கருதினார். சங்க இலக்கியங்களிலும் திருக்குறளிலும் எதுகை, மோனையைவிட கருத்துக்கும் சொல்லின் பொருத்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும். பிற்கால நூல்களில்தான் எதுகை, மோனையை இன்றியமையாதவையாகக் கொண்டு பொருத்தமற்ற சொற்களைக் கையாளுதல் மிகுதியாகியது. இதை உணராத சுகாத்தியர் எதுகை, மோனை அமையாத குறள்களை எல்லாம் தன் விருப்பம்போல் எதுகை, மோனை அமைத்து

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மாற்றினார். மேலும் தன் மனம் போன போக்கில் பல மாற்றங்களைச் செய்தார். அக்காலத்தில் செல்வாக்கு பெற்றிருந்த பெரும்புலவர் தியாகராசன் செட்டியார் தன் மாற்றங்களை ஏற்றுக் கொண்டால் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என நினைத்து அவரைக் காணச்சென்றார். அவரிடம், "தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" (குறள் - 114) என்ற குறளை, "தக்கார் தகவிலர் என்பது அவரவர் மக்களால் காணப்படும்" என்று திருத்தியதாகத் தெரிவித்தார். கடுங்கோபம் கொண்ட தியாகராசன் செட்டியார் இத்தகையவர் முகத்தில் விழிப்பதே பாவம் எனக் கருதி வீட்டினுள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டார். சுகாத்தியர் ஏமாற்றத்துடன் திரும்பினார். தியாகராச செட்டியார் இறந்த அடுத்த ஆண்டு 1889ல் சுகாத்தியர் தன் உரையை வெளியிட்டார். பின்பு பாண்டித்துரைத் தேவரைச் சந்தித்த சுகாத்தியர் விற்பனையாகாமல் தேங்கியிருக்கும் தன் நூல் படிகளைப்பற்றித் தெரிவித்தார். பாண்டித்துரைத் தேவர் அவை அனைத்தையும் விலை கொடுத்து வாங்கினார்; வாங்கிய அனைத்து நூல் படிகளையும் தீயில் இட்டுக் கொளுத்தினார்[10]. இதுபோல, செய்யுளுக்கு எதுகை, மோனை இன்றியமையாதது எனக் கருதிய யாரோ ஒருவர் பிற்காலத்தில், பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்' என்ற வரியில் மோனை அமையவில்லை என்று 'குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்' என்று மாற்றினாரோ என்ற ஐயம் எழுகிறது.

ஔவை துரைசாமிப் பிள்ளை உரையில் பார்ப்பன எதிர்ப்புத் தாக்கம்:

தனித்தமிழியக்கம் தோன்றி தமிழில் பெரிதும் கலந்திருந்த வடசொற்களை நீக்கி, சீர்குலைந்திருந்த தமிழைத் தூய்மையும் செம்மையும் செய்தபோது தமிழறிஞர்களுக்கு வடமொழி மீது வெறுப்பு ஏற்பட்டது; அதன் தொடர்ச்சியாக வைதிகம் மீதும், பிராமணர்கள் மீதும் வெறுப்பு ஏற்பட்டது. இத்தகைய வெறுப்பின் தாக்கம் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களுக்கும் இருந்துள்ளது என்று அவரது புறநானூற்று உரை மூலம் தெரிகிறது. பழையவுரை உள்ள பாடல்களுக்கு அதைப் பெரும்பாலும் பின்பற்றி உரை எழுதிய அவர் மற்ற பாடல்களுக்கு தன் சொந்தக் கருத்தின் அடிப்படையில் உரை எழுதியுள்ளார். அவற்றில் சில இடங்கள் அவருக்கு ஏற்பட்டிருந்த தாக்கத்தைக் காட்டுகின்றன.

மறைமலையடிகள், கா. சு. பிள்ளை போன்றோர் பழந்தமிழ் நூல்களில் அந்தணர் எனக் கூறப்படுவோர் ஆரிய பிராமணர் அல்லர்; தமிழ் அந்தணர்களே அவர்கள்; நான்மறை என்பது ஆரிய வேதம் அல்ல; தமிழ் நான்மறைதான் அது எனப் புதுமையான பல கருத்துகளைக் கூறிவந்தார்கள். அந்த வழியில் துரைசாமிப் பிள்ளையவர்களும், அந்தணர் என்போர் அறவோர் எனப்படும் முற்றும் துறந்த துறவிகளே என்ற ஒரு புதுமையான கருத்தைக் கூறினார். தன் புறநானூற்று உரையில் பாடல் 367 ன் விளக்கத்தில் இவ்வாறு கூறுகிறார்: 'பார்ப்பார் என்போர் ஓதல், ஓதுவித்தல் முதலிய அறுதொழிலைச் செய்யும் வேதியராவர். அந்தணரென்போர், பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர் எனவரும் பலருள் அருளறம் மேற்கொண்டு முற்றத் துறந்த துறவிகளாவர்"[11]. அதாவது, பார்ப்பார் வேறு, அந்தணர் வேறு; பார்ப்பார் என்போர் அறுதொழில் உடைய பிராமணர். அந்தணர் என்போர் நான்கு வருணத்தையும் சேர்ந்த துறவிகள் என்பது அவர் கருத்து. இக்கருத்திற்கு இசைய, பாடல் 9ன் விளக்கத்தில், "ஆனினதியல்பையுடைய பார்ப்பாரும் என்று ஏட்டில் காணப்படுகிறது. அந்தணரை மாக்களென்று வழங்காராதலால், ஏட்டிற் காணப்பட்டதே ஈண்டுக் கொள்ளப்பட்டது. அச்சுப்படி ஆனினதியல்பையுடைய அந்தணரும் என்று கூறுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்[12]. அதாவது, பாடல் 9ல் உள்ள "ஆனியல் பார்ப்பன மாக்களும்" என்பதற்கு புறநானூற்றுப் பழையவுரையின் உ.வே.சா பதிப்பான அச்சுப்படியில் "ஆனினது இயல்பையுடைய அந்தணரும்" என்று பொருள் உள்ளது. ஆனால் பழையவுரை ஏட்டில் (சேனைநாட்டார் எழுதியது?) "ஆனினது இயல்பையுடைய பார்ப்பாரும்" என்று

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

உள்ளது. மாக்கள் என்பது உயர்ந்தோரைக் குறிக்காமல் தாழ்ந்தோரைக் குறிக்கும் என்பதால் அது அந்தணரைக் குறிக்காமல் பார்ப்பாரைக் குறிக்கும் என்பது அவரது முடிவு. எனவே அவர் தன் உரையில் அந்தணர் என்று கூறாமல் பார்ப்பார் என்று கூறியுள்ளதாகத் தெரிவிக்கிறார் என்பதே அவர் கூற்றின் கருத்து. ஆனால் அவரே வேறு சில இடங்களில் அந்தணர், பார்ப்பனர் இருவரும் ஒருவரே என்ற முறையில் பொருள் கூறியுள்ளார். *93* ஆம் பாடல் உரையில், நான்மறை முதல்வர் திறம்புரி பசும்புல் பரப்பினர்க் கிடப்பி' என்பதற்கு, நான்கு வேதத்தையுமுடைய அந்தணர் பசிய தருப்பைப் புல்லைப் பரப்பினராய்க் கிடப்பி' என்று பழையவுரையைப் பின்பற்றிப் பொருள் எழுதியுள்ளார்[13]. இது வைதிகச் சடங்கு செய்யும் பார்ப்பாரைக் குறிக்குமே தவிர துறவிகளைக் குறிக்காது. இதுபோலவே *122* ஆம் பாடல் உரையில், 'அழல் புறந்தரூஉம் அந்தணரதுவே' என்ற வரிக்கு, 'அது வேள்வித்தீயைப் பாதுகாக்கும் பார்ப்பாருடையது' எனப் பொருள் எழுதியுள்ளார்[14]. வேள்வித்தீ இல்லறத்தார்க்கும், வானப்பிரத்தருக்கும் உரியதே தவிர துறவிகளுக்கு உரியது அல்ல. அந்தணர் என்பது பார்ப்பாரைக் குறிக்கும் சொல் என்பதற்கு மிகப்பல சான்றுகள் சங்க இலக்கியங்களிலும் பிற இலக்கியங்களிலும் உள்ளன. "அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த தீயொடு விளங்கும் நாடன்" (புற-*397*) என்பது மிகத் தெளிவான ஒரு சான்று.

மேலும் பாடல் *367*ன் உரையில், 'ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப் பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து' என்ற வரிகளுக்கு, இரந்து நின்ற பார்ப்பார்க்கு அவருடைய நனைந்த கை நிறையும்படி பொற்பூவும் பொற்காசும் நீர் வார்த்துக் கொடுத்து' என்று உரை கூறியபின், ஈர்ங்கை' என்பதற்கு அவர் கூறும் விளக்கம் பெரிதும் வியப்பைத் தரும். 'பார்ப்பார் கை உண்டல் தொழில் ஒன்றிற்கே பயன்பட்டமை தோன்ற ஈர்ங்கை' என்றார்" என்பது அவர் தரும் விளக்கம்[15]. இது பார்ப்பார் மேல் அவர் கொண்ட மனப்பான்மையை நன்கு காட்டும். இத்தகைய மனப்பான்மையே அவர் பார்ப்பார்த் தப்பிய' என்ற பாடத்தை விடுத்து, குரவர்த் தப்பிய' என்ற பாடத்தை எடுத்துக் கொண்டதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்பதை உணரமுடிகிறது.

உ.வே.சா தவறு செய்தாரா?:

உ.வே.சா தனக்குக் கிடைத்த புறநானூற்றுப் பழையவுரையைப் பதிப்பித்தார். அவருக்குக் கிடைத்த பழையவுரைச் சுவடிகளில் அதிக அளவாக *266* பாடல் வரை மட்டுமே இருந்ததால் அவர் *266* பாடல்களுக்கு பழையவுரையையும் மற்ற பாடல்களுக்கு வேறு சுவடிகளில் கிடைத்த மூலத்தையும் சேர்த்துப் பதிப்பித்து, புறநானூறு மூலமும் உரையும்' என்ற நூலாக வெளியிட்டார். 'ஆன் முலையறுத்த' என்ற *34* ஆம் பாடல் பழையவுரையில் உள்ளது. அதில் பார்ப்பார்த் தப்பிய' என்றே பாடம் உள்ளது. பழையவுரைகாரர் அவ்வாறே விளக்கமும் கொடுத்துள்ளார். ஒரு உரையைப் பதிப்பிக்கும்போது அது எவ்வாறு உள்ளதோ அதை அவ்வாறே பதிப்பிக்க வேண்டும். உரை தவறான பாடம் கொண்டிருந்தால் கூட அதை அப்படியே பதிப்பிக்க வேண்டுமே தவிர அதை மாற்ற பதிப்பாசிரியருக்கு எந்த உரிமையும் இல்லை. அவ்வகையில் உ.வே.சா பதிப்பித்ததில் அணுவளவும் தவறில்லை. அவரிடம் இருந்த எல்லாச் சுவடிகளிலும் பார்ப்பார்த் தப்பிய' என்றே இருந்துள்ளதாகத் தெரிகிறது. வேறு சுவடிகளில் பாடபேதம் இருந்தால் அடிக்குறிப்பில் அதைத் தவறாமல் காட்டுவது உ.வே.சா வின் வழக்கம். இங்கு பாடபேதம் எதுவும் காட்டப்படவில்லை என்பதால் அவருக்குக் கிடைத்த சுவடிகளில் இந்த வரியில் மாறுபாடு இல்லை என்று தெரிகிறது.

எது சரியான பாடம்?:

உ.வே.சா நூலகப் புறநானூற்று ஓலைச்சுவடிகளில் *6* சுவடிகள் தமிழ் இணையக் கல்விக் கழக மின்னூலகத்தில் கிடைக்கின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

1. TVA_PLM_UVSLMS000237 - மூலம்.
2. TVA_PLM_UVSLMS000707 - மூலம்.
3. TVA_PLM_UVSLMS000035 - உரை.
4. TVA_PLM_UVSLMS000096 - உரை.
5. TVA_PLM_UVSLMS000128 - உரை.
6. TVA_PLM_UVSLMS000576 - உரை

இவை அனைத்திலும், பார்ப்பார்த் தப்பிய' என்றே உள்ளது. யார் வேண்டுமானாலும் இணையத்தில் இவற்றைப் பார்வையிட முடியும்.

சைவ சித்தாந்த மகா சமாஜம் சங்க இலக்கியம் முழுவதையும் ஒரே நூலாகத் தொகுக்கும் அரிய முயற்சியை மேற்கொண்டது. சங்க இலக்கிய ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் படிகள் முதலியன சேகரிக்கப்பட்டு அவையும் அச்சு நூல்களும் நன்கு ஒப்பிடப்பட்டு பாடவேறுபாடுகள் ஆராயப்பட்டு வையாபுரிப்பிள்ளை அவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியாகக் கொண்டு இந்த நூல் 1940 ல் வெளியிடப்பட்டது. இந்த நூலிலும் பார்ப்பார்த் தப்பிய' என்றே உள்ளது[16]. இதற்கு ஆதாரமாக ஒரு ஓலைச்சுவடியும் மூன்று கடிதப் படிகளும் உள்ளன[17].

இவ்வாறு, பார்ப்பார்த் தப்பிய' என்பதற்குப் பல ஆதாரங்கள் சரிபார்க்கக்கூடிய வகையில் உள்ளன. 'அறவோர்த் தப்பிய' என்பதற்கு ஆதாரம் எதுவென்றே தெரியவில்லை. 'குரவர்த் தப்பிய' என்பதற்கு கிருட்டிணசாமி சேனைநாட்டாரின் கையெழுத்துப்படி ஒன்றே ஆதாரமாகத் தெரிகிறது. அந்தக் கைப்பிரதியும் அதன் மூல ஏடான கோபாலசாமி ரகுநாத ரசாளியாரின் ஓலைச்சுவடியும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளனவா என்று தெரியவில்லை. இத்தகைய ஒரு சுவடியே எல்லிஸ் துரைக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்பது தெளிவு. ஆறுமுக நாவலருக்கும் இத்தகைய ஒரு சுவடியே கிடைத்துள்ளது என்பது அவர் 1889 ல் வெளியிட்ட திருக்குறள் பரிமேலழகர் உரையில் 110 ஆம் குறள் உரைக்கு அவர் எழுதிய அடிக்குறிப்பால் தெரிகிறது[18]. பல சுவடிகளில் உள்ள பாடம் ஓரிரு சுவடிகளில் மாறுபட்டு இருந்தால் பல சுவடிகளிலும் உள்ளதையே சரியானது என்று எடுத்துக் கொண்டு மாறுபட்டு இருப்பதைத் தவறானது எனத் தள்ளுவதே முறையாகும். மேலும் பழங்காலத்து உரையாசிரியர்களின் உரைகளில் காணப்படும் பாடமே, சரியானது எதுவென முடிவு செய்வதில் பெரிதும் முதன்மையானது.

பார்ப்பார்த் தப்பிய' என்ற பாடத்தையே பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழையவுரைகாரரும், இளம்பூரணரும், பரிமேலழகரும் கொண்டுள்ளனர். தற்போது கிடைக்கும் பல சுவடிகளிலும் அதுவே உள்ளது. எனவே அதுவே சரியான பாடம் என்பது தெளிவு. 'குரவர்த் தப்பிய' என்பது இடைக்காலத்திலோ, அண்மைக் காலத்திலோ யாரோ ஒருவர் மோனையின் பொருட்டாகவோ, வேறு காரணத்திற்காகவோ மாற்றியதாக இருக்க வேண்டும். ஔவை துரைசாமி அவர்கள் தனது சார்புநிலை காரணமாகவே 'குரவர்த் தப்பிய' என்பதே சரியான பாடம் என்று கொண்டார் எனக் கருத வேண்டியுள்ளது. மேலும் அவர் பரிமேலழகர் காலத்திலேயே அது பார்ப்பார்த் தப்பிய' என மாற்றப்பட்டுள்ளது என எந்த ஆதாரமும் கூறாமல் குறிப்பிட்டுள்ளார். பரிமேலழகர் காலத்துக்கு முற்பட்ட இளம்பூரணரும் பார்ப்பார்த் தப்பிய' என்றே குறித்துள்ளார் என்பது கருதத் தக்கது. ஔவை துரைசாமிப் பிள்ளையின் உரையே புறநானூற்றுக்கு முழுமையான உரை என்பதால் பின்வந்தவர்கள் அனைவரும் அவர் நூலைப் பின்பற்றி 'குரவர்த் தப்பிய' என்ற தவறான பாடத்தையே தங்கள் நூல்களில் குறித்துள்ளனர். இனிவரும் நூல்களாவது சரியான பாடத்துடன் வெளிவருதல் தமிழின் செம்மைக்குத் தேவையானது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

முடிவுரை:

மேலே கண்டவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

1. பார்ப்பார்த் தப்பிய' என்பதே சரியான பாடம். 'அறவோர்த் தப்பிய', 'குரவர்த் தப்பிய' என்பவை தவறான பாடங்கள்.
2. உ.வே.சா செய்ததில் அணுவளவும் தவறு இல்லை. தமிழுக்கு ஒப்பற்ற தொண்டு செய்த அந்த மாமனிதர் மேல் தவறான ஒரு பழியைக் கூறுவது அடாதது.
3. ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் 'குரவர்த் தப்பிய' என்ற பாடத்தைக் கொண்டதால் பின்வந்த ஆசிரியர்கள் அந்தத் தவறான பாடத்தைக் கொண்டே தங்கள் நூல்களை வெளியிட்டனர்.
4. இனி வரும் நூல்களாவது சரியான பாடத்துடன் வருதல் தமிழின் செம்மைக்குத் தேவையானது.

மேற்கோள்கள்:

1. பாவலரலேறு பெருஞ்சித்திரனார், ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள், 2005, பக். 44-46.
2. Thirukkural Ellis Commentary, (Ed) R. P. Sethu pillai, 1955, p.p 356 & 361.
3. திருக்குறள் பரிமேலழகர் உரை, (பதி-ர்) ஆறுமுக நாவலர், 1889, பக். 34.
4. திருக்குறள் உரைவளம் - அறத்துப்பால், (பதி-ர்) தண்டபாணி தேசிகர், 1957, பக். 173.
5. திருக்குறள் உரைக்களஞ்சியம் -இல்லறவியல், (பதி-ர்) தண்டபாணி தேசிகர், 1983, பக். 292-293.
6. தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை, பொருளதிகாரம் - 1, 2018, பக். 392.
7. புறநானூறு - ஔவை துரைசாமி உரை - பகுதி-1, 1947, பக். 98-101.
8. புறநானூறு - ஔவை துரைசாமி உரை - பகுதி-2, 1951, பக். v -vi.
9. மேலது பக். xii.
10. சண்முகம் பிள்ளை, மு., திருக்குறள் ஆராய்ச்சி: 1 - யாப்பு அமைதியும் பாட வேறுபாடும், 1971, பக். 160-166.
11. புறநானூறு - ஔவை துரைசாமி உரை - பகுதி-2, 1951, பக். 341.
12. புறநானூறு - ஔவை துரைசாமி உரை - பகுதி-1, 1947, பக். 28.
13. மேலது, பக். 225.
14. மேலது, பக். 271.
15. புறநானூறு - ஔவை துரைசாமி உரை - பகுதி-2, 1951, பக். 341.
16. சங்க இலக்கியம் - பகுதி - 1, (பதி-ர்) எஸ். வையாபுரிப்பிள்ளை, 1967, பக்.73.
17. சங்க இலக்கியம் - பகுதி - 2, (பதி-ர்) எஸ். வையாபுரிப்பிள்ளை, 1967, பக்.1537.
18. திருக்குறள் பரிமேலழகர் உரை, (பதி-ர்) ஆறுமுக நாவலர், 1889, பக். 34.

துணை நூல் பட்டியல்:

1. சங்க இலக்கியம் - பகுதி - 1, (பதி-ர்) எஸ். வையாபுரிப்பிள்ளை, பாரி நிலையம், சென்னை, 1967 (2 ஆம் பதிப்பு).
2. சங்க இலக்கியம் - பகுதி - 2, (பதி-ர்) எஸ். வையாபுரிப்பிள்ளை, பாரி நிலையம், சென்னை, 1967 (2 ஆம் பதிப்பு).

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

3. சண்முகம் பிள்ளை, மு., திருக்குறள் ஆராய்ச்சி: 1 - யாப்பு அமைதியும் பாட வேறுபாடும், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1971.
4. திருக்குறள் உரைக்களஞ்சியம் - இல்லறவியல், (பதி-ர்) தண்டபாணி தேசிகர், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1983.
5. திருக்குறள் உரைவளம் - அறத்துப்பால், (பதி-ர்) தண்டபாணி தேசிகர், தருமபுரம், 1957 (2ஆம் பதிப்பு).
6. திருக்குறள் பரிமேலழகர் உரை, (பதி-ர்) ஆறுமுக நாவலர், வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1889.
7. தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை, பொருளதிகாரம் - 1, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2018 (மீள்பதிப்பு).
8. பாவலரலேறு பெருஞ்சித்திரனார், ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள், தென்மொழி பதிப்பகம், சென்னை, 2005.
9. புறநானூறு - ஔவை துரைசாமி உரை - பகுதி-1, தி. சை. சி. நூ. கழகம், சென்னை, 1947.
10. புறநானூறு - ஔவை துரைசாமி உரை - பகுதி-2, தி. சை. சி. நூ. கழகம், சென்னை, 1951.
11. புறநானூறு - புலியூர்க் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
12. புறநானூறு - மூலமும் உரையும், (பதி-ர்) உ.வே.சாமிநாதையர், வெ. நா. ஜூபிலி அச்சுக்கூடம், சென்னை, 1894.
13. *Thirukkural Ellis Commentary, (Ed) R. P. Sethu pillai, University of Madras, 1955.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

29. விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் - 'அழுக்கு' புதினத்தை முன்வைத்து

த. இரமேஷ்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
(தன்னாட்சி), சிவகாசி.
moorthyramesh25@gmail.com - 9791538011

முனைவர் பா. தமிழரசி,
ஆய்வு நெறியாளர் & உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
(தன்னாட்சி), சிவகாசி.

DOI 10.5281/zenodo.17212984.

Abstract:

Novels occupy a prominent place in contemporary literature. Especially through ethnographic novels, we can know complete information about a particular ethnic group. In this way, the novel 'Azhukku' written by R. Manoharan effectively depicts the life of the Vannar people (washermen community people). This research article examines the origin of the Vannar people and the myths about them. This research article also examines the rituals involved in the lives of the Vannar people, their unique identities and the plight of the Vannar people. This research article also examines how the Vannar people, who are marginalized, have progressed through education.

Key Words : Novel - Contemporary Literature - Azhukku - R.Manoharan - Ethinic Group

முன்னுரை

தற்கால இலக்கியங்களில் புதினங்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. குறிப்பாக இனவரைவியல் சார்ந்த புதினங்களின் மூலமாகப் பல்வேறு இனக்குழு மக்களின் வாழ்வியலை நன்கு அறிய இயலும். தொழிலும் சாதியும் இறுக்கமாகப் பின்னிப்பிணைந்த பின்பு தொழில் என்பது பரம்பரை அடிப்படையில் அமைந்தது. இவ்வகையில் துணி வெளுக்கும் தொழிலானது வண்ணார் சாதிக்குரியதாக ஆக்கப்பட்டது. வண்ணார்கள் விளிம்புநிலை மக்களாவர். இவ்வண்ணார் இனத்தவரின் வாழ்வியலை 'அழுக்கு' என்னும் புதினமானது மிகவும் சிறந்தமுறையில் எடுத்தியம்புகிறது. இரா.மனோகரன் அவர்கள் எழுதிய இப்புதினத்தில் விளிம்புநிலை மக்களுக்கான வரையறைகள், வண்ணார் இனமக்களின் தோற்றம், தொன்மை, தனித்த வாழ்க்கை வட்டச் சடங்குகள், பண்பாட்டு அடையாளங்கள், சமூகத்தின் பார்வையில் வண்ணார்களின் நிலை ஆகியவற்றை ஆராயும் வகையில் இவ் ஆய்வுக் கட்டுரையானது அமைகின்றது.

விளிம்புநிலை மக்கள்

சமுதாயத்தில் மக்களை உயர்ந்தோர் என்றும் தாழ்ந்தோர் என்றும் பிரித்துப் பார்க்கின்ற நிலையானது உள்ளது. மிகவும் குறைவான வருமானம் பெறக்கூடிய தொழில்களைச் செய்யக்கூடிய புறக்கணிக்கப்பட்ட மக்கள் அல்லது ஒடுக்கப்பட்ட மக்களே விளிம்புநிலை மக்களாவர். அம்மக்கள் சமூகத்தில் எந்தவிதமான அங்கீகாரமும் இல்லாமல் தங்களுடைய உரிமைக்காகப் போராடுபவர்களாகவும் உள்ளனர். துணியை வெளுக்கும் தொழில் செய்யக்கூடிய வண்ணார்களும் விளிம்புநிலை மக்களாவர்.

சலவைத் தொழிலின் தோற்றம்

மனிதன் தோன்றிய காலத்தில் உடைகள் எதுவும் அணியாமல் நிர்வாணமாகவே வாழ்ந்து வந்தான். பின்னர் இலை தழைகளையும் மரப்பட்டைகளையும் உடுத்தினான். மேலும், தான் வேட்டையாடிய விலங்குகளின் தோலினையும் உடுத்தினான். விவசாயம் செய்ய ஆரம்பித்த பின்பு துணிகளை நெய்து ஆடையாக அணிந்தான். ஒவ்வொரு நாளும்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

உடையை நீரில் அலசிக் காயவைத்து அணிந்தான். சலவைத் தொழிலானது எந்தக் காலத்தில் தோன்றியது என்பதை உறுதியாக அறுதியிட இயலவில்லை.

சங்க காலத்திலேயே துணிகளை வெளுக்கக்கூடிய வண்ணார்களைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. **"சங்க இலக்கியமான கலித்தொகையில்** *(72: 14)* **புலத்தி என வண்ணார் தொழில் செய்யும் பெண் குறிப்பிடப்படுகிறாள். வண்ணார் உவர்மண் சேகரித்தல் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றது"**[1] என்று ஆ.சிவசுப்பிரமணியன் கூறுவது நோக்கத்தக்கது. சங்க காலத்தில் மக்கள் செய்யும் தொழிலால் வேறுபடுத்தப்படவில்லை. ஆனால் வருணாசிரம தருமப்படி சாதியும் மதமும் தோன்றிய பின்பு மக்கள் தாங்கள் செய்யக்கூடிய தொழிலால் வேறுபடுத்தப்படுகின்றனர்.

பின்னர் காலம் செல்லச் செல்ல தனவந்தர்கள் தங்களுடைய உடைகளைத் துவைத்துக் கொடுப்பதற்குப் பெண்களைத் தயார் செய்தனர். அவர்களுக்குத் துணையாக சில ஆண்களையும் நியமித்தார்கள். இவ்வாறாக, சலவைத் தொழிலானது வளர்ந்து வந்தது.

சலவைத் தொழில் பற்றிய தொன்மங்கள்

சலவைத் தொழில் குறித்த பல்வேறு தொன்மக் கதைகளும் உள்ளன. அம்மனுக்கு மாதவிலக்கு நேரத்தில் தன்னுடைய துணிகளைத் துவைப்பதற்கு ஒருவரை உருவாக்கினார். அவர் மூலமே வண்ணார் சாதி உண்டானதாக ஒரு தொன்மம் உள்ளது.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் திருக்குறிப்புத் தொண்டர் என்ற நாயனாரும் ஒருவர். இவர் வண்ணார் இனத்தைச் சார்ந்தவராவார். இவர் காஞ்சியில் தோன்றியவர். இவர் நாள்தோறும் ஒரு சிவனடியாருக்குத் துணி வெளுத்துக் கொடுத்த பிறகே மற்றவருடைய துணிகளைத் துவைப்பார். ஒரு நாள் சிவனடியார் யாரும் வரவில்லை. மிகுந்த கவலையில் நாயனார் இருந்தபோது சிவபெருமானே அடியார் வேடத்தில் வந்தார். அவருடைய துணியைப் பெற்று அதை வெளுத்துக் காய வைத்தார். அப்போது பெருமழை பெய்து துணி காயவில்லை. சிவனடியாரும் வந்து விட்டார். அவரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாத நாயனார் மனமுடைந்து தன்னுடைய தலையைக் கல்லில் மோதப் போனார். அப்போது சிவபெருமான் தன் சுயரூபம் காட்டி அவரைத் தடுத்தாட்கொண்டார். இத்திருக்குறிப்புத் தொண்ட நாயனாரின் வழிவந்தோரே வண்ணார் இனத்தவர் என்ற தொன்மமும் உள்ளது.

வாழ்க்கை வட்டச் சடங்குகள்

ஒவ்வொரு இனக்குழுவினருக்கும் தனித்த பண்பாடு உண்டு. பல்வேறு இனத்தவர்கள் சேர்ந்து வாழக்கூடிய ஊர்களில் சில குறிப்பிட்ட சடங்குகளைச் சில குறிப்பிட்ட இனத்தவர் தான் செய்ய வேண்டும் என்ற வரையறையானது பன்னெடுங்காலமாக வழக்கத்தில் உள்ளது. இத்தகைய சடங்குகளில் வண்ணார் இனத்தவர் மட்டுமே செய்யக்கூடிய சில சடங்குகளும் உள்ளன.

இறப்புச் சடங்கு

ஊரில் யாராவது இறந்துவிட்டால் மூன்று பேருக்கு முதலில் தகவல் கூறுவார்கள். இதில் வண்ணார், அம்பட்டையன், பறையர் ஆகியோர் அடங்குவர். வண்ணார் இனத்தவர் பிணத்தைக் குளிப்பாட்டி புதிய ஆடை அணிவித்து நாற்காலியில் அமர வைப்பர். இறந்தவர் பயன்படுத்திய துணிகளை மூட்டையாகக் கட்டி ஓரிடத்தில் வைப்பர். பிணத்தை எடுத்துச் செல்லும்போது இறந்தவரின் வீட்டிலிருந்து தெரு முடிவு வரை தூய்மையான சேலைகளை விரித்து வைப்பர். அதன்மீதுதான் பிணத்தைத் தூக்கிக் கொண்டு நடப்பார்கள். எல்லோரும் சென்ற பிறகு அந்த சேலைகளையும் இறந்தவரின் உடைகளையும் அவருடைய வீட்டில்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

உள்ளவரின் உடைகளையும் துவைத்துக் கொடுக்க வேண்டும். இதை மாத்துத் துணி கொடுக்கும் சடங்கு என்று கூறுவர்.

பூப்பெய்தல் சடங்கு

ஊரில் உள்ள பருவப் பெண்கள் யாரேனும் பூப்பெய்தினால் அதை முதலில் வண்ணாத்திக்குத்தான் கூறுவர். தமிழகத்தைப் பொறுத்தவரை பெண்களுக்குப் பூப்புனித நீராட்டுவிழா நடைபெறும் போது தாய்மாமனுக்குத்தான் முன்னுரிமை கொடுப்பர். இது மரபுவழியாகத் தொன்று தொட்டு வரக்கூடியது. ஆனால், தாய்மாமனுக்கு முன்பே வண்ணாத்திக்குத் தகவலைத் தெரிவித்து விடுவர். இதனை,

> **"தாய்மாமனுக்கு சேதி சொல்லும் முன்பாகவே வண்ணாத்திக்கு தகவல் சொல்லி வரச் செய்வர்"** *(அழுக்கு, ப. 342)*

என்று ஆசிரியர் கூறுவதன் மூலம் நாம் அறியலாம். மேலும் **"சிறுமியொருத்தி பூப்பெய்தியதும் அச்செய்தி அவ்வீட்டிற்குத் துணிவெளுக்கும் வண்ணார் வீட்டுக்குத் தெரிவிக்கப்படும். அவ்வண்ணாரின் வீட்டிலிருந்து வரும் பெண் பூப்புக்குருதி படிந்த ஆடையைப் பார்த்து, அச்சிறுமி பூப்படைந்துவிட்டாள் என்று உறுதி செய்த பின்னரே அச்செய்தியை உறவினருக்குத் தெரிவிப்பர்"**[2] என்று ஆ.சிவசுப்பிரமணியன் கூறுவதும் நோக்கத்தக்கது.

பெண் பூப்பெய்தும் போது உடுத்தியிருந்த துணிகளைப் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக மாற்றுத் துணிகளை வண்ணாத்தி கொடுப்பார். இவ்வாறு வண்ணாத்தி கொடுக்கும் துணிகளையே பூப்பெய்திய பெண் முதன் முதலில் அணிய வேண்டும். தீட்டுப்பட்ட துணிகளை வண்ணாத்தி எடுத்துச் சென்று சலவை செய்து கொண்டு வர வேண்டும். இது வண்ணாத்தியின் கடமையாகக் கருதப்படுகிறது.

இதைப் போலவே கல்யாண வீடு, குழந்தைகளுக்குக் காது குத்தும் விழா போன்ற இடங்களிலும் மாத்துத்துணி தரும் சடங்கானது நடைபெறுகிறது.

குழந்தைக்குச் சோறு ஊட்டும் சடங்கு

ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து ஒரு வருடத்திற்குத் தாய்ப்பால் மட்டுமே உணவாகக் கொடுக்கப்படும். அக்குழந்தைக்கு முதன்முதலில் சோறு ஊட்டும் போது வண்ணாத்தியிடமிருந்து பெற்ற ஊர்ச்சோற்றையே ஊட்டுவார்கள். இதை ஊர்மக்கள் அனைவரும் ஒரு சம்பிரதாயமாகவும் சடங்காகவும் கொள்வர். பலவீட்டுச் சோற்றை உண்ணும்போது குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி பெருகும் என்று மக்கள் நம்புகின்றனர். குழந்தைக்கு வண்ணாத்திச் சோறு ஊட்டுவதை,

> **"சிறிய வீடானாலும் கோடீசுவரன் வீடானாலும் அவன் வீட்டுல பிள்ளைக்கு முதல் சோறு வண்ணாத்தி சோறு"**
>
> *(அழுக்கு, ப. 342)*

என்ற வரிகளின் மூலம் நாம் அறியலாம்.

திருமணச் சடங்கு

ஆதிகாலத்தில் திருமணத்தில் தாலி எடுத்துக் கொடுக்கும் பணியையே வண்ணார்கள்தான் செய்து வந்தனர். ஆரியர்களின் வருகைக்குப் பின்னால் இவ்வழக்கம் மாறியது. சுபகாரியங்களைப் பிராமணரும் அசுப காரியங்களை வண்ணார்களும் செய்யும் பழக்கத்தினை அவர்களை ஏற்படுத்தி விட்டனர்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

திருமணச் சடங்குகளில் ஈடுபடும் சமூகங்களும் மக்களும்

கவுண்டர் இன சமூகத்தில் பிற சமூகத்தினரும் திருமணச் சடங்குகளில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றனர். குயவர், வண்ணார், நாவிதர், மாதாரி, பண்டாரம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மணமகன், மணமகள் வீடுகளில் தங்கி பல பணிகளைச் செய்கின்றனர். நாவிதர் மணமகனுக்கு முகச்சவரம் செய்வதற்காக முதல்நாள் இரவே மணமகனின் வீட்டில் வந்து தங்குவார். கவுண்டர் இனத்தவரின் திருமணச் சடங்குகளில் நாவிதர் முக்கியப் பங்காற்றுகிறார். இவர் 'குடிமகன்' எனவும் குறிப்பிடப்படுகிறார். வண்ணார்கள் திருமணம் நடைபெறும் வீட்டையோ அல்லது மண்டபத்தையோ அலங்காரம் செய்வர். மாதாரி இனத்தவர் மணமக்களுக்குப் புதிய காலணிகளைச் செய்து தருவர். வேட்கோவர் என்பவர்கள் புதிய மண்பானைகளைச் செய்து கொடுப்பர்.

மாராயம் சொல்லுதல்

திருமணம் முடிந்து கணவன் வீட்டிற்குச் செல்லும் பெண் கருவுற்ற பிறகு பிள்ளைப் பேற்றிற்காகப் பிறந்த வீட்டிற்கு அழைத்து வரப்படுதல் மரபாகும். குழந்தை பிறந்தவுடன் அச்செய்தியை அவளுடைய புகுந்த வீட்டில் தெரிவிக்க வேண்டும். அதுவே மரபாகும். பெண்ணின் புகுந்த வீட்டில் குழந்தை பிறந்த செய்தியைத் தெரிவிப்பது வண்ணாரின் உரிமையாகும். குழந்தை பிறந்த நேரம் பாலினம் ஆகியவற்றை வண்ணாரிடம் கூறி வழிச்செலவுக்குப் பணமும் கொடுத்து அவரைப் பெண்ணின் புகுந்த வீட்டிற்குப் பெண் வீட்டார் அனுப்புவர். கணவன் ஊருக்குச் செல்லும் வண்ணார் கணவனின் குடும்பத்திற்குத் துணிவெளுக்கும் வண்ணாரின் வீட்டிற்குச் சென்று குழந்தை பிறந்த செய்தியை மட்டும் கூறுவார். அது ஆணா? பெண்ணா? என்பதைக் கூறமாட்டார்.

கணவன் வீட்டிற்குத் துணி வெளுக்கும் வண்ணான் அவனுடைய வீட்டிற்குச் சென்று மருமகளது ஊரிலிருந்து குழந்தை பிறந்த செய்தியை கூற அவ்வூர் வண்ணார் வந்துள்ளதைக் கூறித் திரும்பி விடுவார்.

அவ்வீட்டுக்காரர்கள் வீட்டை அலங்கரித்து வைப்பர். அப்போது உள்ளூர் வண்ணாரும் வெளியூர் வண்ணாரும் வருவர். வீட்டிற்குள் பாயை விரித்து அவரை உபசரித்து அமர வைப்பர். அவர் நல்ல செய்தி' என்று முதலில் கூறிவிட்டு குழந்தை ஆணா? பெண்ணா? என்பதையும் பிறந்த நேரத்தையும் கூறுவார். பின்னர் அவருக்குத் தடபுடலான அசைவ விருந்து அளிக்கப்படும். பின்னர் வெளியூர் வண்ணாருக்குப் புது வேட்டியும் துண்டும் வழங்கி சிறிது பணமும் கொடுப்பர். உள்ளூர் வண்ணாருக்கு உணவு மட்டுமே கிடைக்கும்.

குழந்தை பிறந்த தகவலைச் சொல்லும் இந்நிகழ்வை மாராயம் சொல்லுதல்' என்று கூறுவர். மாராயம் என்பதற்கு நற்செய்தி' என்று பொருள். தொல்காப்பியத்திலும் மாராயம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வண்ணார் பண்பாட்டின் தனித்த அடையாளங்கள்

அனைத்து இனக்குழுவினருக்கும் தனித்தனியான பண்பாடுகள் இருக்கும். **'மக்கள் தலைமுறை தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த தொகுதியே பண்பாடு ஆகும்'**[3] என்று திரு.பக்தவத்சலபாரதி அவர்கள் பண்பாட்டிற்கு விளக்கம் அளிக்கிறார். இப்பண்பாட்டிற்கென்று சில தனித்த அடையாளங்களும் உண்டு.

துணிகளில் குறி போடுதல்

வண்ணார்கள் பல வீடுகளிலிருந்தும் துணிகளை வாங்கி வந்து சலவை செய்து கொடுப்பர். எல்லோருடைய துணிகளையும் மொத்தமாகச் சேர்த்து சலவை செய்வர். எனவே, துணிகளை மாற்றிக் கொடுத்துவிடாமல் இருக்க ஒவ்வொரு வீட்டுத்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

துணிகளுக்கும் தனித்தனியே குறியீடு போடுவர். இதை வண்ணான்குறி என்பர். இக்குறியீடுகளை சோராங் கொட்டையின் சாற்றின் மூலம் போடுவர். இக்குறியீடு பலகாலம் அழியாமல் இருக்கும். எனவே, துணியைப் பிரித்து வைப்பது வண்ணார்களுக்கு எளிமையாக இருந்தது. இக்குறியீடுகள் *UºYºTºSº* என்று அமையும்.

கொலை, கொள்ளை போன்ற அசம்பாவிதங்கள் நடந்து யாரேனும் இறந்துவிட்டால் ஆள் யாரென்று தெரியாவிட்டால் வண்ணானை அழைத்து வந்து சட்டையில் உள்ள குறியைக் காட்டுவர். குறியின் மூலம் இறந்தவரை வண்ணான் அடையாளம் காட்டுவர்.

வண்ணாரின் துணி வெளுக்கும் தொழில்நுட்பம்

துணிகளைத் துவைக்க உவர்மண் மிகவும் முக்கியமானது ஆகும். உவர் மண்ணை எடுத்து வாளியில் போட்டு நன்கு கரைப்பர். பின்னர் அழுக்குத் துணிகளை அதில் நன்கு ஊற வைப்பர். இதிலேயே பாதி அழுக்குக் கரைந்துவிடும். பின்னர் அத்துணிகளை வெள்ளாவிப் பானையில் போட்டு வேக வைப்பர். அப்போது துணிகளில் உள்ள மொத்த அழுக்கும் போய்விடும். சாயம் போகும் துணிகளை மட்டும் வெள்ளாவிப் பானையில் வைக்காமல் தனியே துவைத்து வைப்பர்.

துணிகளை மொறமொறப்பாக்க சோறு வடித்த கஞ்சியைப் பயன்படுத்துவர். சில சமயங்களில் ஸ்டார்ச் என்னும் பசையைத் தண்ணீரில் கரைத்து அதன் மூலம் துணிகளை மொறமொறப்பாக்குவர்.

துணிகளைத் தேய்ப்பதற்கு மரத்தாலான மேசையின் மீது நான்கைந்து போர்வைகளை விரித்து அதன்மேல் காட்டன் சேலையை விரித்து வைப்பர். அதன் மேல் துவைத்த துணிகளை வைத்துத் தேய்ப்புப் பெட்டியால் தேய்ப்பர். தேய்ப்புப் பெட்டிகள் இரும்பு அல்லது வெண்கலத்தால் செய்யப்படும். துணிகளின் ரகத்திற்கேற்ப தேய்ப்புப் பெட்டியில் சூடு ஏற்படுத்த வேண்டும். சில துணிகளுக்குக் குறைவான சூடும் சில துணிகளுக்கு அதிகமான சூடும் தேவைப்படும். மேலும், தேய்க்கும் போது கவனம் சிதறக் கூடாது.

வண்ணார்களின் வாழ்வில் கழுதைகள்

உழவர்களின் வாழ்வில் காளை மாடுகள் எந்தளவிற்கு முக்கியமானதோ அதைப்போல வண்ணார்களின் வாழ்வில் கழுதைகள் பெரும்பங்காற்றுகின்றன. வண்ணார்கள் அழுக்குத் துணிகளை வீடுவீடாகச் சென்று சேகரிக்கவும் அழுக்குப் பொதிகளை ஆற்றிற்குக் கொண்டு செல்லவும் துவைத்த துணிகளை வீட்டிற்குக் கொண்டு செல்லவும் கழுதைகளைப் பயன்படுத்துவர்.

வண்ணார்கள் பெண்கழுதைகளை மட்டுமே வளர்ப்பர். ஆண் கழுதைகளை வளர்க்க மாட்டார்கள். பெண் கழுதைகள் ஆண்குட்டிகளை ஈன்றாலும் அவற்றை சலுப்பச் செட்டியிடம் விற்று விடுவர். வண்ணார்கள் கழுதைகளைத் தங்களின் செல்வமாகக் கருதினர். ஒருவரிடம் உள்ள கழுதைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே அவர் வண்ணார் சாதியில் பெரிய மனிதராகவோ அல்லது சிறிய மனிதராகவோ கருதப்படுவர். குழந்தைகளுக்குச் சீரடித்துவிட்டால் அவர்களைக் கழுதையின் முகத்திற்கு நேரே காட்டுவர். இதனால் குழந்தைகளுக்கு உடல்நிலை சரியாகிவிடும். குழந்தைகளுக்குச் சில நேரங்களில் கழுதைப்பாலைக் குடிக்கக் கொடுப்பர்.

ஒரு நல்ல செயலைச் செய்ய எண்ணும்போது கழுதை கத்தினால் அதை நல்ல சகுனமாகக் கருதுவர். கழுதையின் பின்னால் நடந்து சென்றால் நம்மைத் தீய சக்திகள் அண்டாது என்றும் கழுதையின் முகத்தில் விழித்தால் நன்மை நிகழும் என்றும் மக்கள்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எண்ணுகின்றனர். ஒரு வேலைக்காக வெளியில் செல்லும்போது எதிரே வண்ணானைக் கண்டால் செயலில் வெற்றி உண்டாகும் என்ற நம்பிக்கையும் மக்களிடம் உண்டு.

ஊர்ச்சோறு வாங்குதல்

வண்ணார்கள் யாருடைய வீட்டிலிருந்து அழுக்குத் துணிகளைப் பெற்று சலவை செய்து கொடுக்கிறார்களோ அவர்கள் வீட்டிற்குத் தினமும் சென்று அவர்கள் கொடுக்கும் உணவினை வாங்கி வரவேண்டும். இதுவே ஊர்ச்சோறு வாங்குதல்' ஆகும். வண்ணார்கள் இதைக் கட்டாயம் செய்தாக வேண்டும். ஒருநாள் ஊர்ச்சோறு வாங்காவிட்டால் கூட ஊர்மக்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக வேண்டும்.

வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் படித்து ஒரு வங்கியில் காவலாளியாகச் சேர்ந்தான். அவன் தன் பெற்றோரிடம் சென்று நான் வேலைக்குச் சென்று பணம் சம்பாதிக்கிறேன். நாம் பிறரிடம் சென்று உணவு வாங்கும் நிலையில் இல்லை. எனவே, இனிமேல் நீங்கள் ஊர்ச்சோறு வாங்கக் கூடாது என்று தன் பெற்றோரிடம் கூறுகிறான். அவன் பெற்றோரும் இரண்டு, மூன்று நாட்களாக ஊர்ச்சோறு வாங்கச் செல்லவில்லை. இதனால் கோபம் கொண்ட ஊர்மக்கள் வண்ணார் குடும்பத்தை ஊரைவிட்டுத் தள்ளிவைத்தனர். இதனால் பயந்துபோன அக்குடும்பத்தினர் மீண்டும் ஊர்ச்சோறு வாங்க வந்துவிட்டனர். இவ்வாறாக ஊர்ச்சோறு வாங்குவதில் ஒரு சாதிய அடக்குமுறையும் உள்ளது. ஊர்ச்சோறு வாங்கச் செல்லும் வண்ணார்களை சிலர் வேண்டுமென்றே காத்திருக்க வைக்கும் நிலையும் இருந்தது.

வண்ணார்கள் ஒவ்வொரு வீட்டிலும் கொடுக்கும் உணவைத் தனித்தனிப் பாத்திரங்களில் வாங்க முடியாது. ஒரு பெரிய பாத்திரமும் இரண்டு சிறிய பாத்திரமும் மட்டுமே கொண்டுபோக வேண்டும். பெரிய பாத்திரத்தில் சோற்றையும் சிறிய பாத்திரங்களில் குழம்பையும் கூட்டையும் வாங்கிக் கொள்ள வேண்டும். இதை,

> **"ஒத்தச் சட்டியில ஒரு வீட்டுல கம்பஞ்சோறு இருக்கும் அதயும் வாங்கிக்குவாங்க. அடுத்த வீட்டுல கேப்பக்களி போடுவாங்க அதையும் வாங்கனும். ஒரு வீட்டுல சோளக்கூழு கொடுப்பாங்க அதயும் அதே சட்டியில வாங்கனும்"** ***(அழுக்கு, ப.314)***

என்று வைரச்சிலையின் அத்தை கூறுவதன் மூலம் நாம் அறியலாம்.

சில நேரங்களில் ஊர்மக்கள் கெட்டுப்போன உணவுப் பொருள்களையும் கொடுப்பர். தீபாவளி, பொங்கல் போன்ற நன்னாட்களில் மட்டும் ஊர்மக்கள் கொடுக்கும் உணவினைத் தனித்தனியாக வண்ணார்கள் வாங்கிக் கொள்ளலாம்.

சமூகத்தின் பார்வையில் வண்ணார்கள்

வண்ணார் இனத்தவர் தாழ்த்தப்பட்ட விளிம்புநிலை மாந்தர்களாகவே கருதப்படுகின்றனர். வண்ணார்களைப் பிற சாதியினர் தங்களுடைய வீடுகளுக்குள் நுழைய அனுமதிப்பதில்லை. பிற சாதியினர் வண்ணாரின் வீடுகளுக்குள் நுழைவதுமில்லை. வண்ணார்கள் பின்வாசலின் வெளியே நின்றுதான் அழுக்குத் துணிகளைப் பெறமுடியும். மேலும், வண்ணார் வீடுகளில் நடக்கின்ற சுபநிகழ்ச்சிகளில் பிற சாதியினர் கலந்து கொள்வதில்லை. சில சமயங்களில் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலும் அவர்கள் வீட்டில் உணவ உண்பதில்லை. இவ்வாறான தீண்டாமையை வண்ணாரிடம் பிற இனத்தவர் பின்பற்றினர்.

தமிழக அரசானது தீண்டாமை ஒரு பாவச்செயல் என்று மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தாலும் இன்றும் பல இடங்களிலும் தீண்டாமை நிலவி வருவது கசப்பான உண்மையாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பிற சாதியைச் சேர்ந்த ஒருவன் வண்ணார் இனத்துப் பெண்ணை விரும்பினால் அவனுடைய உறவினர்களே அவனைக் கொலை செய்துவிடும் நிகழ்வும் நடந்தது. ராமு என்பவன் வண்ணார் இனத்துப் பெண்ணான வைரச்சிலையை விரும்புகிறான். இதையறிந்த அவனுடைய தாய்மாமன்கள் அவனை கௌரவக் கொலை செய்து விடுகின்றனர். இந்தளவிற்கு சமூகத்தில் சாதி ஏற்றத்தாழ்வுகள் இருந்து வருகிறது.

பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள்

வண்ணார் இனப் பெண்கள் பிற சாதியினரால் பாலியல் சீண்டலுக்கும் ஆளாகின்றனர். வைரச்சிலை ஒரு பெரிய மனிதனின் வீட்டிற்குச் சென்று அழுக்குத் துணியை எடுக்கும்போது அப்பெரிய மனிதர் அவளிடம் தவறாக நடக்க முயல்கிறார். வைரச்சிலை அவரைக் கீழே தள்ளிவிட்டு வேகமாக ஓடிவிடுகிறாள். மற்றொரு நாள் வைரச்சிலை ஆற்றில் துணிதுவைத்துக் கொண்டிருந்தபோது ஒருவன் அவளிடம் தவறாக நடக்க முயல்கிறான். உடனே வைரச்சிலை அங்கிருந்து சுதாரித்துத் தப்பி விடுகிறாள்.

'மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்'[4]

என்று முண்டாசுக்கவி பாரதி பாடுகிறான். ஆனால் இன்றுவரை விளிம்புநிலையில் உள்ள பெண்கள் அனைவரும் இழிவுபடுத்தப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றனர்.

இவ்வாறாக வண்ணார்களின் வாழ்வானது எண்ணற்ற அவலங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

வண்ணாரின் பிரிவுகள்

வண்ணார் இனத்திற்குள் பல்வேறு பிரிவினர் உள்ளனர். வண்ணார் இனத்தில் புதரை வண்ணான் என்றொரு பிரிவினர் உள்ளனர். இவர்களைப் பற வண்ணான், அரிசன வண்ணான், புரத வண்ணான், கீழ்சாதி வண்ணான், சேரிநேசன், இரவாலி, பற ஏகாலி, மலோடு என்றும் அழைப்பர். மேலும் இவர்களுக்குத் துரும்பர் என்ற பெயரும் உண்டு. இவர்கள் வண்ணார் இனத்தவரில் மிகவும் தாழ்ந்தவர்கள் ஆவர். இவர்கள் பள்ளர் மற்றும் பறையருக்குத் துணி வெளுத்துக் கொடுப்பவர்களாக உள்ளனர். வண்ணார் இனத்தினரைப் பிற இனத்தினர் தாழ்ந்தவராகக் கருதுகின்றனர். இவ்வண்ணார் இனத்தினர் தங்களின் ஒரு பிரிவினரான புதரை *(அ)* துரும்ப வண்ணார்களைத் தங்களைவிடத் தாழ்ந்தவராகக் கருதுகின்றனர்.

இவ்வாறு ஒரே இனத்தவருக்குள்ளே ஏற்றத்தாழ்வு இருப்பது மிகவும் விந்தையாக உள்ளது. புதிரை வண்ணார்களை இதர வண்ணாரிடமிருந்து வேறுபடுத்துவது அவர்களின் சாதி மட்டுமல்ல. அவர்களின் பணியும் கூட அவர்களை வேறுபடுத்திக் காட்டுகிறது. தலித்துகளின் சலவைத் தொழிலாளியாக மட்டும் இவர்கள் விளங்கவில்லை. அவர்களின் நாவிதராகவும், வெட்டியானாகவும், வண்ணாராகவும் விளங்குகின்றனர். எனவே இவர்களிடம் மக்கள் மிகக் கடுமையாகத் தீண்டாமையைக் கடைபிடிக்கின்றனர். பிற வண்ணார்கள் தொட்டால் தீட்டு, புதிரை வண்ணார்களைப் பார்த்தாலே தீட்டு என்று மக்கள் எண்ணுகின்றனர்.

வண்ணார்களின் தனித்துவம்

அந்தக் காலத்தில் கொலைக் குற்றவாளிகள், கொலை செய்யப்பட்டவர்கள், விபத்தில் இறந்தவர்கள் போன்றவர்களை அடையாளம் காண அவர்கள் அணிந்திருக்கும் துணிகளில் இருந்த 'வண்ணான் குறி' பயன்பட்டது. வீட்டில் நிகழக்கூடிய சுப மற்றும் துக்க நிகழ்ச்சிகளில் முதலில் பங்கெடுப்பது நம் வண்ணார்கள்தான். சில நேரங்களில் திருமணங்கள் கூட இவர்கள் பார்த்துத்தான் முடிந்திருக்கும்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எப்பேர்ப்பட்ட பணக்காரக் குழந்தைக்கும் முதலில் ஊட்டப்படும் சோறு வண்ணாத்திச் சோறு தான். ஓர் ஊரில் உள்ள பெரிய மனிதர் நல்ல காரியத்திற்காக வண்டி பூட்டி வெளியே செல்லும் போது அவ்வீட்டின் வண்ணான்தான் அவருக்குத் துண்டை எடுத்துக் கொடுப்பான். வெளுக்க வைத்து வெளுக்க வைத்து வெள்ளை மனம் படைத்த மனிதரான அவரிடம் துண்டு வாங்கிச் சென்றால் செல்லும் காரியம் வெற்றி அடையும் என்பது ஏட்டில் எழுதா நம்பிக்கையாகும்.

கல்வி என்னும் ஆயுதம்

வண்ணார்களின் வாழ்வில் பல இன்னல்கள் இருந்தாலும் அவர்கள் தங்கள் குழந்தைகளை நன்கு படிக்க வைக்கின்றனர். கல்வியின் மூலமேதங்களால் உயரமுடியும் என்று எண்ணுகின்றனர். அழுக்குப் புதினத்தின் முக்கியக் கதைமாந்தர்களான குணசீலன் மற்றும் வைரச்சிலையின் குழந்தைகளான மாறனும் தேன்மொழியும் நன்கு படித்து உயர்ந்த நிலைக்குச் செல்கின்றனர். மற்றொரு பாத்திரமான தங்கமணியின் இளையமகன் மணி நன்கு படித்து மருத்துவராகிறான். கல்வியால்; வண்ணார்களின் வாழ்வில் சிறந்தமாற்றங்கள் உருவாகின்றன. இது

"கேடில் விழுச்செல்வம் கல்விஒருவற்கு
மாடல்லமற்றையவை"[5]

என்ற வள்ளுவரின் கூற்றை மெய்ப்பிப்பதாகஉள்ளது.

கல்வியால் உயர்ந்த வண்ணார்களோடு பிறசாதியினர் திருமணபந்தத்தை ஏற்படு;த்திக் கொண்டனர். வண்ணார் இனத்தைச் சேர்ந்த தேன்மொழி பிள்ளைமார் சமூகத்தைச் சேர்ந்த எழிலைக் காதலித்துத் திருமணம் செய்துகொள்கிறாள். இவ்வாறு கல்வியால் சிறந்த சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன.

நிறைவாக

இரா. மனோகரன் அவர்கள் எழுதிய 'அழுக்கு' என்ற புதினத்தில் விளிம்புநிலை மக்களான வண்ணார்களின் வாழ்வியலானது இயல்பு நவிற்சி அணியைப்போல மிகவும் இயல்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக் கட்டுரையின் மூலம் விளிம்புநிலை மக்கள் என்பவர்கள் யாரென்பதையும் சலவைத் தொழிலின் தோற்றம் மற்றும் தொன்மம் குறித்தும் அறியலாம். வண்ணார் இனத்தவருக்கான தனித்த வாழ்க்கை வட்டச் சடங்குகளையும் அறியலாம். சமூகத்தின் பார்வையில் வண்ணார்களின் நிலைஎவ்வாறு உள்ளதென்பதையும் வண்ணார் இனத்திற்குள்ளும் ஏற்றத் தாழ்வுகள் உள்ளதுஎன்பதையும் அறியலாம்.மேலும் கல்வியால் மட்டுமே விளிம்புநிலையில் உள்ளமக்கள் உயரமுடியும் என்பதையும் உணரலாம்.

சான்றெண் விளக்கம்

1. சிவசுப்பிரமணியன், ஆ.,தமிழகவண்ணார் வரலாறும் வழக்காறுகளும், ப.2.
2. மேலது, ப.46.
3. பக்தவத்சலபாரதி,பண்பாட்டுமானிடவியல், ப.151.
4. பாரதியார்,பாரதியார் கவிதைகள், ப.165.
5. சிவசுப்பிரமணியன்,எம்.(உ.ஆ.),திருக்குறள் குறளும் விளக்கவுரையும், ப.97.

முதன்மை ஆதாரம்

1. மனோகரன், இரா.,அழுக்கு,காவ்யாவெளியீடு,கோடம்பாக்கம்,சென்னை, 2023.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

துணைமை ஆதாரங்கள்

1. சிவசுப்பிரமணியன், ஆ.,தமிழகவண்ணார் வரலாறும் வழக்காறும்,நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்,அம்பத்தூர்,சென்னை, 2014.
2. சிவசுப்பிரமணியன், எம்.(உ.ஆ.), திருக்குறள் குறளும் விளக்கவுரையும், கமர்சியல் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி, 2020.
3. பக்தவத்சலபாரதி,பண்பாட்டுமானிடவியல்,மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம், 2016.
4. பாரதியார்,பாரதியார் கவிதைகள்,உமாபதிப்பகம்,மண்ணடி,சென்னை, 2014.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

30. சங்க இலக்கியத் தொழில்முறையில் நெசவுப்பயன்பாடு

க.கவிதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,சேலம் -5
kkavithavasudevan@gmail.com - 8778407485 / 9698737910
DOI 10.5281/zenodo.17213012.

Abstract

Literature, as a sublime creation, helps us achieve a higher life, reflects that life, and serves as a mirror to society. It proclaims the high living of the Tamils. Professions that arose out of human needs evolved into an art form. The proverb says, "An unclad person is half a person; half of a person is their clothes, the other half is the person themselves." Before the discovery of cotton clothing, humans wore leaves, bark, and other natural materials. Based on this, we can understand the stages of development of the weaving industry.

Keywords: sword, tukil, flower industry, udukkai, kotuyar.

முன்னுரை

பறந்து விரிந்த இந்த பூமி இயற்கை வளங்களால் சூழப்பட்டுள்ளது. இயற்கை என்பது கடவுள் நமக்கு கொடுத்த மிகப்பெரிய கொடை ஆகும். நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என பஞ்சபூதங்களும் இயற்கை வளமாகும். மனிதன் இயற்கை சூழ்ந்தே படைக்கப்பட்டுள்ளான். இந்த பூமியானது இயற்கையின் கொடைகளால் நிறைந்துள்ளது. இவ்வியற்கையை மையமாக கொண்டு ஆடை தாயாரித்துள்ளான். ஆவ்வாடைக்கு வண்ணங்களையும், கலை நுட்பங்களையும் பயன்படுத்தியுள்ளான். சங்க கால குடிமக்களில் ஆடவர் இடையில் ஓர் ஆடையும் மேலே ஒரு துண்டும் அணிந்தனர். உடையிலும் பார்க்க இழைகளே சிறப்புப் பெற்றனவெனினும் தமிழ்ப்பெண்கள் அணிந்த ஆடைகளைப் பற்றியும் சங்கநூல்களில் குறிப்புகள் உண்டு. வேறுவேறு பண்புகளையுடைய நூற்சீலைகளையும் பட்டுச்சீலைகளையும் அக்காலப் பெண்கள் அணிந்துள்ளனர் பற்றி இக்கட்ரையில் இடம்பெறுகின்றது.

யவனர்களின் ஆடை

சங்க காலத்தில் மக்கள் தங்கள் தொழில்முறைக்கு தகுந்தவாறு உடை அணிந்துள்ளனர். தங்கள் அணியும் உடைக்கு மெய்ப்பை என்ற பெயர் வழங்கியுள்ளது. காவல் தொழில் செய்பவருக்கு ஏற்றவாறு உடைவாளை இடுப்பில் சேர்த்துக் கட்டியுள்ளனர்.

> **“கண் பொருபு உகூஉம் ஒண்பூங் கலிங்கம்**
> **பொன் புனை வாளொடு பொலியக் கட்டி**
> **திண் தேர்ப் பிரம்பின் புரளும் தானை”** (மது.*433-435)*

என்ற மதுரைக்காஞ்சி பாடல்வரிகள் வெளிப்படுத்துகின்றது. ஒள்ளிய பூத்தொழில் உடைய சோலைகளைப் பொன்னிட்ட உடைவாளொடு அழகு பெறக் கட்டியவர். தோளில் கிடந்து அசையும் மேலாடையை உடையவர் என்கிறது. யவனர் ஆடைப் பற்றி குறிப்பிடுகையில்,

> **‘மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து**
> **வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்”** (முல்லை.*60-61)*

என்கிறது முல்லைப்பாட்டு. மிலேசர்கள் சட்டை அணிந்திருக்கின்றனர். சங்ககால குடிமக்களிடம் மேலாடையும் கச்சும் அணியும் வழக்கம் இருந்திருக்கின்றது. இதனை “அன்று, இன்று போல் அனைவரும் மேற்சட்டை அணிந்திலர், சிலரே அணிந்தனர். அது

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கஞ்சுகம் எனப்பட்டது" என்கிறார். மிலேச்சர் பாதுகாப்பிற்காக நிற்கின்றனர். அதுபோல அரண்மனை பொற்கொல்லன் சட்டை அணிந்திருந்தான் என்ற செய்தி,

"மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவின்

கைக்கோற் கொல்லனைக் கண்டன னாகி" **(சிலம்பு.கொலை.*107-108)***

என்ற சிலம்பின் வரிகள் மெய்ப்பிக்கின்றன. இங்ஙனம் பாண்டியன் அரண்மனையில் பணிபுரிந்த அயல்நாட்டவரான யவனரும் சட்டையணிந்திருந்தனர்.

இடையர்களின் ஆடை

முல்லை நில மக்களை ஆயர், ஆய்ச்சியர், இடையர் என்று குறிப்பிடுவர். இவர்களின் தொழில் ஆநிரை மேய்த்தல் ஆகும். பல்வேறு நிலங்களுக்கு இடம்பெயர்பவர் ஆவர்.

"சஞ்சயன் போனபின் கஞ்சுக மாக்கள்

எஞ்சா நாவினர் ஈரை நூற்றுவர்" **(சிலம்பு.கால்கோட்.*167-168)***

என்ற சிலம்பின் வரிகள் புலப்படுத்துகிறது. இடையர் போன்றோர் மிக எளிய ஆடையணிந்தனர் என்பதனை,

"ஒன்றுஅமர் உடுக்கை கூழ்ஆர் இடையன்" **(பெரும்.*175)***

என்ற பெரும்பாணாற்றுப்படை அடி உணர்த்துகிறது. நூலால் நெய்யப்பட்ட ஆடை பெரும்பாலும் அணிந்துள்ளனர். வேறுபட்ட பல நூல்கள் கொண்டு தைக்கப் பெற்று நைந்து போயிருந்த என ஆடையை அகற்றிப் புத்தாடை கொண்டுவரச் செய்து என்னிடம் தந்தான் என்று பாணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"ஒண்பூங் கலிங்கம் உடீஇ நுண்பூண்

வசிந்து வாங்கு நுசப்பின் அவ்வாங்கு உந்தி" **(புறம்.*183:11-12)***

என்ற புறப்பாட்டு வழி அறியப்பெறுகிறது. மூங்கிலின் உட்புறத்தே உள்ள பெயர்த்தெடுக்கப்படும் வெள்ளியதோல் போல நெய்யப்பட்டுள்ள இழைகளின் வரிசை கண்ணுக்குப் புலப்படாத ஒள்ளிய பூவாலே நெய்யப்பட்ட ஆடையை உடுத்தச் செய்தப் பாங்கினை,

"பாசி அன்ன சிதர்வை நீக்கி

ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்" **(பெரும்.*468-469)***

பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் எடுத்தோதுகிறது. கந்தலாடையை அகற்றித் தன் அரசவை சுற்றத்தோடு நீயும் நின் சுற்றமும் வேற்றுமையன்றித் தோன்றும்படி உடலுக்கியைந்த பாலாவியை ஒத்த நூலால் செய்த துகில்களை உடுக்கச் செய்வான் என்பதை,

"ஐய பிதிர்ந்த சுணங்கு அணி மென் முலைமேல்

தொய்யில் எழுதுகோ" **(முல்லைக்கலி.*111:16-17)***

என்று முல்லைக்கலி பாடுகிறது. பெண்டிர் இடையில் மட்டும் புடவையுடுத்தனர். சந்தனத்தால் தொய்யில் எழுதியும் மலர்களை இட்டும் உள்ளனர் என்பது,

"பிறங்கிய முத்தரை முப்பத்திருகாழ்

நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ" **(சிலம்பு.கடலாடு.*87-88)***

என்ற சிலம்பின் வரிகளால் உணரப்பெறுகிறது. இடையில் மேகலையணிந்து அதன்மேல் பூந்துகிலைச் சுற்றிக்கொண்டனர் என்ற செய்தியும் கிடைக்கப்பெறுகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மன்னனின் பரிசுப்பொருட்கள்

மன்னர்களின் ஆட்சி முறையில் புலவர்களுக்கும், பாணர்களுக்கும், விறலியர்களுக்கும், பொருநர்களுக்கும் முதலில் கொடுப்பது சிறப்பான உடைகளையும், அணிகலன்களையும், சுவைமிகுந்த உணவுகளையும் மனம் மகிழும்படி வழங்குவான்.

"போதுவரி பகன்றைப் புதுமலர் அன்ன
அகன்றுமடி கலிங்கம் உடீஇ செல்வமும்
கேடுஇன்று நல்குமதி பெரும மாசுஇல்" *(புறம்.393:17-19)*

புறநானூறால் அறியப்பெறுகிறது. அரும்பு மலர்ந்த பகன்றையின் புதுப்பூப் போன்ற அகல மடிக்கப்பட்ட ஆடையைக் கொடுத்து உடுப்பித்து செல்வத்தையும் குறையா அளவில் கொடுப்பாயாக என்று மன்னன் பரிசளித்தமை,

"ஆள் இல் பெண்டிர் தாளின் செய்த
நுணங்கு நுண் பனுவல் போல கணம் கொள" *(நற்.353:1-2)*

என்ற நற்றிணை வரிகளால் தெரியவருகிறது. மன்னர்கள் அனைவரிடம் அன்போடும், பண்போடும் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

ஆடை தயாரிப்பில் இடம்பெற்றவை

சங்க காலத்தில் கைம்பெண் தம் தனிமைத் துயரினின்றும் நீங்கவும், பிழைப்பின் பொருட்டும் ஆடைநெய்ய நூல் நூற்பர். அவர்தம் வினைக்குக் கொண்ட பஞ்சுபோல வெண்முகில் படர்ந்த கோடுஉயர் நெடுவரைக்கண் விளைந்தத பலாபழத்தால்,

"நூலாக் கலிங்கம் வால் அரைக் கொளீஇ
வணர் இருங் கதுப்பின் வாங்கு அமை மென்தோள்
வசை இல் மகளிர் வயங்கு இழை அணிய" *(பதிற்.12:21-23)*

என ஆடைகள் மழையில் நனைந்த பருந்தின் சிறகைப்போலவும் மண்ணால் அரிக்கப்பட்ட கந்தையாகவும் இருந்தன. அவற்றை மாற்றி மனிதனால் நூற்கப்படாத நூலாகிய பட்டு நூலான ஆடையை தம் வெள்ளிய அரையில் உடுத்திக்கொண்டனர். அக்காலத்தில் பட்டு, பருத்தி பஞ்சு, விலங்கு மயிர் ஆகிய மூவகை கருவியாலும் ஆடை நெய்துவந்தனர். இது,

"நூலினு மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்" *(சிலம்பு. 14:205-207)*

என்னும் சிலப்பதிகார அடிகளால் அறியபெறுகிறது. இதில் மயிரினும்' என்பதற்கு எலி மயிரினாலும்' என்று உரை வரைந்துள்ளார் அடியார்க்கு நல்லார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மயிர் நிறைந்த ஒருவகை மலையெலி சங்ககாலத்திலிருந்தது என்பதும் அதன் மயிரால் சிறந்த கம்பளம் நெய்யப்பட்டது என்பதனை,

"புகழ்வரைச் சென்னிமேற் பூசையிற் பெரியன்
பவழமே யனையன பன்மயிர்ப் பேரோலி" *(சீவக 1898)*

"செந்நெ ருப்புணுஞ் செவ்வே லிம்மயி
ரந்நெ ருப்பள வாய்பொற் கம்பலம்" *(சீவக.2686)*

என்ற சீவகசிந்தாமணி பாடல் வரிகள் மூலம் தெரிந்துக்கொள்ளப்படுகிறது. ஆயினும் எலிமயிரால் மட்டுமன்றி ஆட்டுமயிராலும் ஆடை நெய்யதுள்ளனர் என்பது

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"எலிப்பூம் போர்வையொடு மயிர்ப்படமம் விரித்து" (பெருங் .உஞ்சை. *47:179)*

என்ற பெருங்கதை அடிகளால் அறியமுடிகின்றது. கூத்தாட்டு அயர்கின்ற விழாவின் ஓசைமிக்க மூதூரின் கண் பலரும் வாழ்வதால், ஆடைகளை துவைக்கும் செய்கையிலியருந்து கை ஓய்வு கொள்ளாத, வறுமையுற்ற புலத்தி இரவிலே தோய்த்த சோற்றின் கஞ்சியிட்டுப் புலர்த்திய சிறிய பூந்தொழிலை உடைய ஆடையும் பொன்னி மாலையம் அசைந்தாடும் என்கிறது.

தூய்மையான ஆடை

பழங்காலத்தில் மக்கள் துணிகளை சுத்தாக பயன்படுத்தியுள்ளனர்.

"நலத்தகைப் புலத்தி பசைதோய்த்து எடுத்துக்
தலைப்புடைப் போக்கித் தண் கயத்து இட்ட
நீரின் பிரியாப் பரூஉத் திரி கடுக்கும்" **(குறுந்**.*330:1-3)*

என்ற குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது. அழுக்கினை அகற்றித் தூயதாக்கும் நன்மையுடைய கைகளைக் கொண்ட ஆடை வெளுப்பவள். ஆடையை கஞ்சியில் தோய்த்து எடுத்து முதலில் நிளப் புடைத்துப்பின் முறுக்கி அவ்வாடையைக் குளிர்ந்த நீரில் இடுவாள். நீரில் நனைந்த அவ்வாடையையின் முற்றிலும் அவிழாத முறுக்குப் போல பெரிய இலைகளையுடைய பகன்றை கொடியில் அவிலும் நிலையில் உள்ள வெள்ளிய பூக்கள் தோற்றமளிக்கும். இதனை,

"பசை கொல் மெல் விரல் பெருந் தோள் புலைத்தி
துறை விட்டன்ன தூமயிர் எகினம்" **(அகம்**.*34:11-12)*

என்ற அகநானூறு பாடலடியில் குறிக்கப்படுகிறது. ஆடைகளிலே ஓட்டப்பட்ட சஞ்சிப் பசையினைக் கரைத்து விடும் மெல்லிய விரல்களையும் பெரிய தோள்களையும் உடைய ஆடை வெளுப்பவள். அக்கஞ்சிப் பசையினை நீர்த் துறையின்கண் அலசிவிட்டால் போன்ற தூய மயிரினையுடைய அன்னங்கள் காவல் பொரந்திய மனையகத்தே களிப்புடன் விளையாடி மகிழும் என்றச் செய்தி சங்க இலக்கியப் பாடலடிகள் படம் பிடித்துக்காட்டுகின்றது. வெண்கொற்றக் குடையின் கீழ் ஆட்சி செய்யும் அரசருக்கும் இடையாமத்து நண்பகலும் துயிலாது, விரைந்த வேகம் கொண்ட விலங்குகளை வேட்டையாடித் திரியும் கல்வியில்லாத ஒருவனுக்கும் உண்ணப்படும் பொருள் நாழி தனியமே. உடுக்கப்படுபவை அரை ஆடை, மேலாடை என இரண்டே ஆகும் என்பது பொது. மனிதனிடம் கலைபண்பு அதிகம் என்பதற்கு சாட்சி இந்த நெசவுத்தொழில் ஒரு முன்னோடி.

முடிவுரை

நமது நாட்டில் பருத்தி தொன்றுதொட்டு விளைந்து வருகின்றது அதனைக் கொண்டு மூதாட்டியும் கைம்பெண்டிரும் நூல் நூற்றல் தொழிலையே அதிகமாக செய்துவந்துள்ளனர். பருத்தியால் நெய்யப்பட்ட ஆடைகள் அணிவதை வழக்கமாக கொண்டுள்ளனர். சங்க கால குடிமக்கள் தாங்கள் வாழும் தட்பவெப்ப நிலைக்கேற்ப உடலைப் பாதுகாக்கும் உடைகளை அவர்களாகவே நெய்து அணிந்தனர். அவர்களது ஆடைகள் எளிமையானவைகளாக மட்டுமல்லாமல் பிரத்யோகமானவையாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் ஆடை தயாரித்தலை தொழிலாகவும் கொண்டிருந்தனர் என்ற செய்தியும் அறியப்பெறுகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

துணை நூற்பட்டியல்

1. மோகன். இரா (உ.ஆ), சங்க இலக்கியம் பத்துப்பாட்டு,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2004
2. கு.வே.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியம் புறநானூறு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
3. கு.வே.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியம் நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
4. செயபால். இரா(உ.ஆ) சங்க இலக்கியம் அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
5. நாகராசன்.வி(உ.ஆ) சங்க இலக்கியம் குறுந்தொகை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004
6. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும்,யாழ் வெளியீடு, சென்னை,2004
7. மாணிக்கவாசகம்.ஞா. சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை,2013
8. ந.ஆனந்தி, பெருங்கதை மூலமும் உரையும், சாந்தி சாதனா, சென்னை, 2010
9. துரை இராசாராம், சீவன சிந்தாமணி, சாரதா பதிப்பகம், சென்னை 2012
10. ஔவை துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004 சங்க இலக்கியத் தொழில்முறையில் நெசவுப்பயன்பாடு

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

31. கே.எஸ். மணியம் சிறுகதைகளில் புலம் பெயர்ந்த தமிழர்களின் அவலங்கள் - ஓர் வரலாற்றியல் ஆய்வு

ஞா.விஜயலட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்)
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
(தன்னாட்சி), சிவகாசி.
vijikarthi23511@gmail.com

முனைவர் பா.தமிழரசி,
(ஆய்வு நெறியாளர்)
உதவிப்பேராசிரியர், (தமிழ்த்துறை)
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
(தன்னாட்சி),சிவகாசி.

DOI 10.5281/zenodo.17214469.

Abstract

In Malaysia, It can be observed on many occasions that Tamil writers who have been actively contributing to literature for a long period, possess a strong tendency toward self - reflection. Most often their short stories tend to revolve around very limited theme such as family, the plantation, childhood and sexuality. Instead if Expressing dissent against authority, resistance to political oppression or resistance to racial discrimination their writings often emerge as hesitant and subdued reflecting a deep internalized fcar as through confined with in an invisible prison of the mind. This lends a sense of anguish to the reading experience. Additionally certain writers channel their discontent into literary expression focusing on the internal struggles with in the Indian community and the historical episodes of violence that have left a lasting impact.

Yet, only a small number of Malaysian Tamil writers have genuinely contemplated and articulated the deeper struggles faced by migrant Indians residing in a nation shaped by diverse ethnicities and cultures. Owing to the overtly propagandist tone adopted by some writers, a limited psychological insight into the deeper social crises and the absence of a wide ranging political and literary vision many fictional works fail to achieve depth and are expressed in a Language that remains flat and unengaging. In such a context, K.S.Maniam is a distinguished figure who bravely choose to write about the sorrow and hardships faced by the lenience after congenial rule and the efforts they made to gain recreation and assert their identity in those circumstances.

Key words

Self censorship, political repression, Racial discrimination, Diversity, Indian Diaspora, real tragedy, colonial rule, Identification of presence, Arriving persons, creating a national Identity, Creating a new cultural environment, Accepting the new cultural environment

மலேசியாவில் பன்னெடுங்காலமாக இலக்கியத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் எழுத்தாளர்களிடையே சுயத்தணிக்கை மனப்பான்மை அதிகமாக இருப்பதை பல தருணங்களில் அவதானிக்கலாம். பெரும்பாலும் குடும்பம், தோட்டம், பாலியம், காமம் என மிகச் சுருங்கிய களங்களில் அவர்கள் சிறுகதைகள் உருவாவதைப் பார்த்திருக்கலாம்.

அதிகாரத்துக்கு எதிராகவே அரசியல் ஒடுக்குமுறைகளின் எதிர்ப்புக்குரலாகவோ இனரீதியான பாராபட்சங்களுக்கு எதிர்வினையாகவோ இல்லாமல் தங்கள் மனதுக்குள் இருக்கும் ஒரு படுபயங்கர மாயச் சிறையில் எப்போதோ கைது செய்யப்பட்டு முடங்கிக் கிடப்பது போல அவர்கள் எழுத்துக்கள் அஞ்சி நடுங்கி வெளிப்படுவதைச் சங்கடத்துடன் வாசிக்க இயலும். மேலும் சிலர் இந்தியர்களுக்குள் இருக்கும் சிக்கல்களுக்கும் வரலாற்றில் எப்போதோ நிகழ்ந்து விட்ட வன்முறைக்கும் தங்கள் ஆதங்கத்தை எழுத்தாக மாற்றுகிறார்கள் ஆனால் பல்வேறு இனம், கலாச்சாரம் அடங்கிய ஒரு தேசத்தில் வாழும் புலம்பெயர் இந்தியர்களின் உண்மையான அவலம் என்ன என்று சிந்தித்தவர்களும் எழுதியவர்களும் மலேசியத் தமிழ் எழுத்தாளர்களில் மிகச் சிலரே ஆவர்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அப்படி எழுத வருபவர்களின் பிரசாரத் தொனியாலும் சமூகத்தில் நிலவும் ஒரு அவலத்தில் உளவியலை ஆழமாக அறியாததாலும் பரந்த அரசியல் இலக்கியப் பார்வை இல்லாததாலும் பல புனைவுகள் தட்டையான மொழியில் ஆழமின்றி மீந்து விடுகின்றன. இத்தகைய சூழலில் தமிழரின் வரலாற்றில் காலனித்துவ ஆட்சிக்குப் பின்னர் அவர்கள் அடைந்த துயரங்களையும் இன்னல்களையும் தங்கள் இருப்பை அடையாளப்படுத்திக் கொள்ள அங்கீகாரம் பெற அவர்கள் எடுத்த முயற்சிகளைப் பற்றி அப்போதுள்ள சூழலில் எழுதத் துணிந்த பெருமைக்குரியவர் கே.எஸ.மணியம் ஆவார்.

திறவுச் சொற்கள்

சுயதணிக்கை, அரசியல் ஒடுக்குமுறை, இனரீதியான பாரபட்சங்கள், பல்லினம், புலம் பெயர் இந்தியர்கள், உண்மையான அவலம், காலனித்துவ ஆட்சி, இருப்பை அடையாளப்படுத்துதல், வந்தேறிகள்

கே.எஸ்.மணியம்

1916 ஆம் ஆண்டு இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து ஒப்பந்த கூலியாக இந்நாட்டுக்குப் புலம் பெயர்ந்த தமிழ் குடும்பத்தின், இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர். கே.எஸ்.மணியம் ஓரளவு வசதியான வாழ்வை ஏற்படுத்திக் கொள்ள துணி சலவை செய்யும் தொழிலுடன் ரப்பர் மரம் சீவும் வேலையும் பார்த்து வந்த தந்தைக்கு எடுபிடியாகச் செல்லும் மணியம் சிறுவயதிலிருந்தே தோட்டப்புற வாழ்வையும் தோட்டத் தொழிலாளர்களையும் அறிந்திருந்தவர். அதுவரையில் இந்திய சமூகத்தினருடனே வாழ்ந்து கொண்டிருந்த மணியம் தொடக்கக் கல்வியை தமிழ்ப் பள்ளியிலும் தொடர்ந்து ஆங்கில வழிக்கல்வியை சுங்கைப்பட்டாணி இப்ராஹிம் ஆங்கிலப் பள்ளியிலும் தொடர்ந்தார். இங்கிருந்தே மணியத்தின் அடையாள நெருக்கடி, அடையாள மீட்டுணர்தலின் தேடல் தொடங்கியதாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. தமிழ்நாட்டிலிருந்து பிரத்தியோகமாகத் தருவிக்கப்படும் புத்தகங்களைப் பாடநூல்களைக் கொண்டு தமிழ்நாட்டைச் சார்ந்த தமிழ்க் கல்வியையும் அதனூடே தமிழ் கலாச்சாரத்தையும் பற்றி அறியத் தொடங்கியத் தருணம் சற்றும் பரிச்சயம் இல்லாத ஆங்கில வழிக்கல்வியும் காலனித்துவ கலாச்சாரமும் வழுக்கட்டாயமாக மணியத்தின் மூளைக்குள் புகுத்தப்பட்டது அக்காலத்தில்தான்.

கே.எஸ். மணியத்தின் வாழ்வியல் அனுபவமும் கதைத் தேடலும்

கே.எஸ். மணியத்தின் படைப்புகள் குறித்து அதிக அளவில் புலம்பெயர்வு தெடர்பாக ஆய்வுகளே *(Diaspora studies)* மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அவரது படைப்பின் நோக்கமும் அதுவாகவே இருந்துள்ளது. இவற்றை மேலும் அவருடைய கதைகளில் மிக நுட்பமாக விவாதிக்கப்பட்டுள்ள தனி மனித சமூக விழுமியங்களும் அவரது கதைகளை உயர்த்திப் பிடித்து நிற்கின்றன.

கே.எஸ்.மணியம் *(1994)* 'புலம்பெயர்வை வெறுமனே ஒரு நாட்டை விட்டு மற்றொரு நாட்டுக்குச் செல்லும் சாதாரணச் செயல்பாடக பார்த்துவிட முடியாது. இதுவரை தான் வாழ்ந்திருந்த தன்னோடு ஒன்றிவிட்ட குடும்பம், உறவுகள், பழகிப் போன சமூகச் சூழல், பண்பாடு என அனைத்திலிருந்தும் உணர்வு ரீதியாக பெயர்த்தெடுத்து வேறொன்றோடு இணைத்தவிடும் தன்மை கொண்டதாக புலம்பெயர்வு அமைகின்றது என்கிறார்.

இதனை மணியம் *'The Return'* எனும் தன் வரலாற்று நாவலில் ரவி எனும் கதாப்பாத்திரத்தின் வழியாகச் சொல்கிறார்.

'என்னதான் முருகேசு வாத்தியார் தன் வாழ்நாள் அனுபவங்களையும் பல தமிழ் நூல்களையும் பயன்படுத்தி இந்து தமிழ் பையன்களுக்குப் பாடம் போதித்தாலும் மிஸ்

http://Creativecommons.org//license/by/4.0/. ISBN: 978-93-343-7954-9

நான்சி மிகக் கெட்டிக்காரத்தனமாக வெறும் தேவதைக் கதைகளை வைத்தே இந்து மதத்தின், சமூகத்தின் நடைமுறைகளைக் கிண்டல் செய்து புறக்கணித்து விடுவார். மேலும் அவர் இச்சிறுவர்களின் பண்பாடு, கலாச்சாரத்திற்கு முற்றிலும் முரண்பட்ட நெறிகளை அறிமுகப்படுத்திக் கொண்டே இருப்பார்" *(K.S. Maniam, 1993)*என்பதாக அமையும் இந்நாவலின் பகுதி சிறுவயது தொட்டே இப்படியான அடையாள மோதல்கள் அவருக்குள் நிகழ்ந்திருப்பதன் விளைவாகவும் சமூகத்தின் மீதான தொடர் அவதானிப்புகளும் தொடர்ந்து பன்மை கலாச்சாரவாதத்தின் மேலிருந்த ஈர்ப்பும்தான் நான் யார்?' என்கிற கேள்வியைக் கதைகளில் தொடர்ந்து அவரை கேட்க வைத்தக் கொண்டே இருந்தள்ளதாகக் காட்டுகிறது அவரது கதைகள் காலனியத்துவ ஆட்சிகால அல்லது அதற்கு பின்பான காலவெளியில் வாழ்ந்த (புலம்பெயர்) சமூகத்தைக் காட்டுபவையாக மட்டும் இல்லாமல் இக்காலத்திற்கும் பொருந்தி நிற்பவையாக இருக்கின்றன.

மலேசியாவின் வந்தேறிகள்

குடியேறிகள் *(Arriving)* என்கிற சிறுகதையில் இந்தியாவைத் தனது தாய்நாடகவும் அதையே தனது அடையாளமாகவும் காட்டிக்கொண்டிருக்கும் தனது தந்தையின் குரலை முற்றிலும் நிராகரித்து விட்டு வரும் கிருஷ்ணன் தான் மலேசியாவில் பிறந்த காரணத்தினாலேயே தனது நாடாக உறுதியுடன் நம்புபவராக இருக்கின்றார். கூலித் தொழிலாளியாக வந்த தனது தந்தையின் பயண அனுபவங்கள், நினைவுகள், தாய்நாட்டைப் பற்றிய ஏக்கங்கள் என எதுவும் தன்னைத் துளியும் பாதிக்காத வண்ணம் தன் இருப்பை நிலைநிறுத்திக் கொள்கிறார்.கிருஷ்ணன் பிறந்தது முதல் வளர்ந்தது, படித்தது, வேலை செய்தது, திருமணம் செய்தது, குழந்தைகள் ஈன்றது சொத்துக்கள் வாங்கிச் சேர்த்தது, பணி ஓய்வு பெற்றது என அனைத்தும் தன்னுடைய வீடாக நினைக்கும் மலேசியாவில் தான்.

இதற்கிடையில் வரும் மாட் *(Mat)* கிருஷ்ணனைத் திட்ட வந்தேறி *(Pendatang)*என்ற சொல்லை வசை மொழியாகப் பயன்படுத்துகிறான். அந்தச் சொல்லுக்குள் சிக்கிக் கொள்ளும் கிருஷ்ணன் பிறகு எப்படி குழம்பி மனம் நொந்து இறுதியில் அதிலிருந்து விடுதலை பெறுகிறான் என்பதாகக் கதை முடிகிறது.

இக்கதையின் நாயகனாக கிருஷ்ணன் மலேசியாவிலேயே பிறந்து முக்கால்வாசி வாழ்வையும் கடந்துவிட்டார். ஆனால் இந்நாட்டின் மண்ணின் மைந்தனாக *(Son of the soil)* கருதப்படும் மலாய்க்காரர் எனும் ஒருவர் கிருஷ்ணனை 'வந்தேறி' என்று பழிப்பது மிகப்பெரிய அடையாள நெருக்கடியை அவருக்குள் விட்டுச் செல்கிறது. *'What did it mean Pendatang? Arrivals? Illegals* என்கிற குழப்பத்தை அவருக்குள் ஏற்படுத்தி விடுகின்றது.

கிருஷ்ணனைப் போல புலம் பெயர்ந்த சந்ததியினருக்கு தான் மட்டும் தான் இந்தியாவிலிருந்து வந்த வந்தேறியா? என்ற கேள்வி எழுகிறது இம்மண்ணிலேயே பிறந்து வளர்ந்து இந்நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உழைத்துக் கொண்டிருக்கும் இந்திய சீன சமூகத்தினரின் மனதில் எழும் இன அடிப்படையிலான கேள்வி வந்தேறிகள் *(Pendatang)*அல்லது அதற்கு ஈடான இதர அடையாளங்களே தங்களுக்கு மிஞ்சுமா? என்பதாகும். அடிப்படையில் இந்திய, சீன சமூகத்தினரைப் போலவே மலாய் இனத்தவர்களும் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தங்களது பொருளாதார தேவைக்காக இந்த நாட்டிற்கு வந்தது மலேசிய சரித்திரத்தில் தெரிந்தே நழுவப்பட்ட உண்மையாகும் அவர்களின் பூர்வீகம் சுமத்ரா மற்றும் ஜாவா என்பதாக பல வரலாற்றாசிரியர்களும் ஆதாரம் காட்டுகின்றனர். *'Pendatang'* எனும் சொல் வேறொரு நாட்டை பூர்வீகமாக கொண்டிருப்பவர்களை குறிக்குமெனில் இச்சமூகமும் அதற்குள் அடங்கும். *(The Nut graph , 2010)*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

நிலைமை இப்படியிருக்க மலேசியா அரசியலமைப்புச் சட்டம் *Article 153*மிகத் தெளிவாக மலாய் சமூகத்தினரை இம்மண்ணில் மைந்தர்களாக அங்கீகரித்து அவர்களின் உரிமைகளை மட்டும் பாதுகாப்பதாக இருக்கிறது. *Andrew H.2012* மிகுந்த சர்ச்சைக்குரியதாக கருதப்படும் இவ்விடயம் மணியத்தின் *Arriving* குடியேறிகள் எனும் சிறுகதையில் பூடகமாகச் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கவையாகும். கிருஷ்ணனைக் குறித்து மாட் எனும் மலாய் இனத்தவன் கூறிய 'வந்தேறி' எனும் பழிச்சொல்லை நேர்மறாக ஏற்றுக்கொண்ட அவன் ஓரிடத்தில்

'தெங் சிரித்தான், மற்றவர்களும் கிண்டலாய் நகைத்தனர் அவர்களது அவ நம்பிக்கையின் சிற்றலைகளைக் கிருஷ்ணன் அவதானித்தான் சோர்ந்து போகவில்லை. வெளிச்சங்களாலும் நிழல்களாலும் நிரப்பப்பட்ட பல பகல்களை அவன் கண்டிருக்கிறான். மாறாத அதே ஒளி அதே நிழல் மாட் கூறலாம் பெண்டாத்தாங்"! (வந்தேறி) அப்போது கிருஷ்ணனும் கூறுவான் "ஆம் நான் எப்போதும் வந்த கொண்டிருப்பவன் தான் வந்துகொண்டே இருக்கின்றேன் ஆனால் வந்தடையப் போவதில்லை வந்தடைதல் என்பது மரணம் வந்தடைந்து விட்டால் பிராயாணப்படுதல் இல்லை எங்கே வந்தடைவது எனக்குத் தெரியவில்லை ஆகவே நான் எப்போதும் வந்து கொண்டிருப்பவன் தான் அடைவை வந்தடையாதவன் வந்து கொண்டிருப்பவன்" (கே.எஸ்.மணியம் சிறுகதைகள் ப.எண் 52)

இக்கதையின் ஊடாக தமிழர் மட்டும் வந்தேறிகள் அல்ல தற்போது பொருளாதாரத் தேவைக்காக கடல் கடந்து புலம் பெயர்ந்து வாழும் எல்லா நாட்டு மக்களும் 'வந்தேறிகள்' தான் வந்து கொண்டே இருப்பவர்கள்தான். மக்கள் ஒரு குழுமமாய் ஓரிடத்தில் வசித்து பண்பாட்டை காக்க நினைப்பது தங்களது கலாச்சாரத்தை கைவிடாத நிலையிலேயே தான். ஆயினும் வரும் மாற்றங்களும் அனுசரிக்கப்படுமாயின் அது உலகளாவிய நிலையிலே நின்று சிந்திக்கத்தக்ககது. ஏனெனில் அதில் ஜாதி, மதம், இனம், பகுப்பு, பிரிவு எனும் பாகுபாடுகள் இருக்காது என்பதை இக்கதை வாயிலாக அறிய இயலுகிறது. மேலும் இந்நாட்டைத் தனது தாய்நாடாக கருதும் ஒருவன் வந்தெறி என ஒதுக்கப்படுவதால் அவன் தொடர்ந்து தனக்கான அடையாளத்தை மட்டும் கட்டமைக்கவும் தக்கவைத்துக் கொள்ளவும் முற்படுவான் என்பதை இக்கதையின் முடிவிலிருந்து அறிய முடிகின்றது.

தேசிய அடையாளத்தை புதிய பண்பாட்டுச் சூழலை ஏற்றும் ஏற்காமலும் ஆன நிலை:

புலிவேட்டை *(Haunting the tiger)* கதை புலம் பெயர் சமூகமாக வாழ்பவர்களுக்கு தங்களது அடையாளத் தேடலுக்குரிய நுட்பமான அணுகுமுறையைச் சொல்வதாக அமைகின்றது. மரண நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் கிழவனின் எண்ண வோட்டங்களாகவும் மன அலைக்கழிப்புகளையும் தொடக்கும் இக்கதை சுல்கிப்லி *(Zulkifili)* மற்றும் முத்து ஆகிய இருவரின் வனவேட்டை அனுபவங்களைச் சொல்வதாக உருவக *(Metaphor)* பாணியிலேயே நகர்கிறது. தொடக்கத்தில் வேட்டைக்குத் தனியாச் செல்லும்போது முத்து பிறகு சுல்கிப்லியுடன் சேர்ந்து புலி வேட்டைக்குச் செல்கிறான். வேட்டையின் போது அவர்களுக்கிடையில் நடைபெறும் உரையாடல்கள் *(Culture assimilation)* மற்றும் *(Culture immersion)* அதாவது கலாச்சார ஒருங்கிணைப்பு மற்றும் கலாச்சார மூழ்குதல் ஆகிய இரு பெரும் விடயங்களை எளிமையான மொழியில் உணர்த்திக் கொண்டே தேசிய அடையாள உருவகத்தின் சாத்தியங்களைப் புரிய வைக்கின்றது.

"இதில் என்ன சிக்கலென்று எனக்குத் தெரிந்து விட்டது. ஏதோ ஓர் அந்நிய வாடையை புலி கண்டு கொண்டது. அந்த வாடை போகும் வரை புலி வெளியே வராது" என சுல்கிப்லி கூற முத்து மிகுந்த பதற்றமடைகிறான்.

"என்ன வாடை?" எனக் கேட்கிறான் மனத்திலிருந்தும் உடலிலிருந்தும் வெளியாகும் வாடை உன் உடை, உன் எண்ணம் இதெல்லாம் எங்கிருந்து வந்தது? இப்படியிருந்து

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கொண்டு மனிதர்களை நெருங்குவது போல் நீ இதனுடன் நெருங்க முடியாது உன் மனமும் உடையும் புலி வாழும் இடத்திற்கு ஒத்திருக்,க வேண்டும்.

"ஏன் ஒத்திருக்க வேண்டும்? நான் என் தந்தையின் பிடியிருந்து உடைபட்டு வரவேண்டும் அது போதும்

'பிறகெப்படி நீ புலியாகி அதை பிடிக்க முடியும்?

பச்சோந்தியை மனதில் நினைத்தவாறே 'நான் மாறுவேன்" என்கிறான் முத்து (கே.எஸ். மணியம்; சிறுகதைகள் ப.எண் 149)

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இம்மண்ணில் வந்த தனது மூதாதையர்கள் இந்நாட்டின் கலாச்சாரத்துடன் ஒன்றியவர்கள் எனும் அடிப்படையில் அதே உத்தியை முத்தவிற்கும் சுல்கிப்லி சொல்கிறான். இதனை குறியீடாக உரையாடலின் வழி புலியாக மாறுவது என்பதை இந்நாட்டின் பண்பாட்டு கலாச்சாரத்துடன் ஒன்றிவிடும் செயலாக புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் முத்து கடைசிவரை அவ்வாறு செய்யாமல் தன்னை பச்சோந்தியாகவே மாற்றிக் கொள்ள முயற்சிக்கிறான் என்பதாகக் காட்டுவது அவன் தனது மரபுகளைத் தக்கவைத்துக் கொண்டு புதியதையும் ஏற்க முற்படுகிறான் என்பதை உணர முடிகிறது.

இக்கதையில் முத்துவைப் போலவே பலர் தமிழ்ச் சமூகத்தில் தமது பண்பாடு, கலாச்சாரம், மரபுகள் என தங்களுக்கே உரிய அடையாளங்களுடன் தாங்கள் இந்நாட்டில் ஓர் அங்கமாக அறியப்பட தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருப்பதை இன்றளவும் காண முடிகின்றது. மூவின மக்களையும் ஒன்றுபட்ட ஒற்றைச் சமூகமாக மாற்ற மலேசிய அரசாங்கம் *(Satu Malaysia)* சத்து மலேசியா அதாவது ஒரே மலேசியா என்று அறிவிப்பதாலும் இந்நாட்டு அரசாங்கம் *Wawasan 2020, sekolah wawasan,* என்பன போன்ற திட்டங்கள் மூலமாக தொலைநோக்கு அடிப்படையில் ஒரே நாடாக மக்களை மாற்றும் விதத்தில் இந்திய சமூகத்தினரிடையே பெரிய அளவில் இத்திட்டம் ஆதரவைப் பெறாமல் போனது.

நிறைவுரை

புலம் பெயர்ந்து சமூகத்தினருக்கு எப்போதுமே அந்நாட்டின் பண்பாடு, கலாச்சார மரபுகளுடன் ஓரளவு சமரசம் செய்து கொண்டு அம்மண்ணை முழுவதும் ஏற்கவும் முன்னோர்களின் தாய்நாட்டு மோகத்திலிருந்து விடுவடவும் உள்ளழுத்தங்கள் ஏற்படுவது நிதர்சனமாகும். புலம்பெயர்ந்தவர்கள் தாங்கள் வாழ்கின்ற நாட்டின் தொடர்ச்சியான மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு அதனூடே தங்களது அடையாளங்ளையும் வழுவாகப் பிடித்துக் கொள்பவர்களைக் காலத்திற்கேற்க வாழும் *'New Diasporic man'* என மணியம் ஆங்கிலத்தில் வர்ணிக்கிறார். இவ்விரண்டு கதைகளிலும் புலம் பெயர்ந்த கிருஷ்ணன் தன்னை முழுவதுமாக புலம்பெயர்ந்த நாட்டில் விரும்பியயே ஏற்க தலைப்படுகிறார். முத்து அவ்வாறு அல்லாமல் தேவைக்கேற்ப சில மாற்றங்ளையும் அது போல தனது பண்பாட்டு விழுமியங்களில் இருந்து மாறாத கட்டுப்பாடுகளோடு ஒரு பச்சோந்தியை போன்றதொரு வாழ்வை மேற்கொள்ள முடிவு செய்கிறார் இவ்வாறு புலம் பெயர்ந்த சமூகத்தில் ஒரு மனிதன் ஏற்றுக்கொண்டும் ஏற்றுக்கொள்ளாத ஒரு நிலைகளையும் இச்சிறுகதையின் ஊடாகவும், கே.எஸ்.மணியம் சிறுகதைகள் புனைவிலக்கியம் எனினும் அதில் வரலாற்றில் அக்காலச் சமூகத்தினர் எதிர்கொண்ட சில சமூக சிக்கல்களையும் அறிய இயலுகின்றது.

துணை நூற்பட்டியல்

1. கே.எஸ்.மணியம் சிறுகதைகள் மொழிபெயர்ப்பு, விஜயலட்சுமி, முதற்பதிப்பு அக்டோபர் 2018, யாவரும் பதிப்பகம்.
2. புலம்பெயர் தமிழ்ச் சிறுகதைகளின் நோக்கும் போக்கும் - உலகத்தமிழ்ச் சங்கம், மதுரை முதற்பதிப்பு 2018

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

32. ஹேலோகிராமின் பல்துறைசார் பயன்பாடுகள்

திருமதி பா. மோகனப்பிரியா,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம
மகளிர் கல்லூரி, சிவகாசி.
thejasepriya5@gmail.com & 8778732162

முனைவர் வி. அன்னபாக்கியம்,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி, சிவகாசி - *626 123,*
ORCID ID: 0009-0002-5911-7134

DOI 10.5281/zenodo.17214508.

Abstract

Augmented Reality, a virtual reality that is currently growing in popularity with the three-dimensional structure of the hologram, has gained great popularity among the public. This study aims to explain how augmented reality works in many fields through artificial technology. Virtual reality allows people to create accounts through their mobile phones and travel through them through artificially creating their own environment. Augmented reality allows them to do rare things there that they cannot do in real life. It helps them complete their work quickly and achieve accurate performance.

Keywords: Halogram, Metaverse, Augmented Reality, Artificial Intelligence (AI)

முன்னுரை

ஹேலோகிராம் என்னும் முப்பரிமாண தொழில்நுட்பம் *3D* காட்சிகளாக நம் கண்முன்னே தோன்றும். மெட்டாவெர்ஸ் ஹேலோகிராம் இரண்டும் ஒன்றாக இணைந்து வெர்சுவல் ரியாலிட்டியாக செயல்படுகின்றது. இவை மருத்துவம், கல்வி என பலதுறைகளில் செயல்படுகின்றன. பல்துறைசார் நவீன ஆய்வுகளில் இன்றைய சூழலில் ஹோராலோகிராம் மற்றும் செயற்கை நுண்ணறிவின் வழி மெட்டாவெர்ஸ் உதவியுடன் எதிர்காலத்தை நோக்கி பயணம் செய்யும் மனித மூளையின் இன்றைய நவீன செயல்பாடுகளைக் குறித்து விரிவாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஹேலோகிராம்

ஹேலோகிராம் என்பது முப்பரிமாண காட்சிபடுத்தும் முறைமையாகும்.இதனை,

“The cross technique has led to holograms where the subject can be seen moving his head, shifting his person are changing his facial expression Suck motion is perceived by viewing different parts of the holograms in sequence either by having the viewing walk past the hologram or by rotating the hologram” [1]

(White light hologram., scientific American., October 7)

‘ஒரு லேஸர் சாதனத்திலிருந்து கோஹிரண்ட் ஒளிக்கற்றையை முதல்ல ரெண்டாப் பிரிக்கணும், பிரிச்ச ஒளிக்கற்றையில் ஒண்ணு ஆப்ஜெக்ட் மேல… அதாவது அந்தப் பெண் சொன்னிங்களே, அவமேல பிரதிபலிச்சி ஒரு ஃபோட்டோ ப்ளேட்ல படணும். ரெண்டாவது ஒளிக்கற்றை நேரா அந்த ப்ளேட்ல படணும். அப்படி செய்யறபோது இரண்டு கற்றைகளும் சேர்ந்து ஒரு சிக்கலான இண்டர்ஃபெரண்ட் பாட்டர்ன் உருவாகுது. இப்ப அந்த போட்டோ ப்ளேட்டை டெவலப் செய்யணும். அதுக்குப் பேர்தான் ஹோராலோகிராம். இந்தமாதிரி டெவலப் பண்ண ப்ளேட்டை மறுபடி ஒரு லேஸர் ஒளிக்கற்றையினால் ஒளிரும்படி செய்தா அந்த ப்ளேட்டுக்கு முன்னாடி அந்த முப்பரிமாண உருவம் தெரியும்.’ [2]

(சுஜாதா., கொ.கா., *300*)

சுஜாதா தன்னுடைய புத்தகத்தில் ஹோராலாகிராம் எவ்வாறு செயல்படும் என்ற முறைமையை விளக்கியுள்ளார். தன்னுடைய புத்தகத்தில், இடத்தினை விற்பனை

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

செய்யாமல் இருக்கவும், சொத்தினை முழுவதுமாக அபகரிக்க நினைக்கும் மனிதன், இல்லாத ஒரு பெண்ணை பேய் என ஊர்மக்களை கட்டுகதைகளைக் கூறி நம்ப வைத்துள்ளார். இதனை அறிவியல்பூர்வமாக விளக்குவதாக தன் கதாபாத்திரங்களின் வழி சுஜாதா எடுத்துரைத்துள்ளார்.

மெட்டாவெர்ஸ்

மெட்டாவெர்ஸ் என்பது நிஜ வாழ்வில் நிகழ வாய்ப்பில்லாத தருணங்களை எல்லாம் இணைய உலகில் தன்னை ஈடுபடுத்தி கொள்வதன் வழியாக ஆனந்தம் அடைந்து கொள்வது. இதனை,

நிஜத்தில் சாத்தியமில்லாதவற்றைக் கூட அங்கு அரங்கேற்றிக் கொள்ளலாம். உதாரணத்துக்கு இறந்துபோன நம் உறவினர்களை காண வேண்டும் என நினைத்தால் அதற்கும் அங்கு சாத்தியக் கூறுகள் உண்டு[3]

(இனி எ மெ., கா பு., ப.எண்., *12)*

நாம் வாழும் சூழலுக்கு தகுந்தாற்போல் நம் எண்ணங்களும் விரிவடைகின்றன. எண்ணங்களின் வளர்ச்சியே படைப்புகளுக்கு முன்னொடியாக திகழ்கின்றன. மக்கள் தம் அன்றாட வாழ்வில் பல கனவுகளை சுமந்து கொண்டுதான் பயணிக்கின்றன. வாழ்வில் தம் படைப்புகளுக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கும் அடித்தளமாக அமைகின்றன. பிறரின் அக புற வலிகளை போக்குவதற்காகவே புதிய முயற்சிகள் தோன்றலாகின்றன.

ஆக்மென்டட் ரியாலிட்டி

ஆக்மென்டட் ரியாலிட்டி என்பது நிஜ உலகத்தையும், வெர்ச்சுவல் உலகத்தையும் இணைத்து வெளிப்படுத்தக் கூடியது. அதாவது, நிஜ வாழ்வையும் டிஜிட்டல் வாழ்வையும் வெர்ச்சுவல் உலகினை தொழில்நுட்ப ரீதியில் நம்மை உணர வைக்கின்றது.

'மூக்குக் கண்ணாடியாக இருக்கலாம், நகையாக இருக்கலாம். அவற்றை ஆப்கள் மூலமாகவே போட்டுப் பார்த்து நம் உடல்வாகிற்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து வாங்கக் கூடிய நுட்பங்கள் எல்லாம் வந்துவிட்டன.[4]

(இனி எ மெ., கா பு.,ப.எண்., *35)*

இன்று ஆப்களின் வழி தனக்கு தானே போட்டுக்கொள்ளும் வசதி உள்ளது. ஆகவே மக்களிடையே ஆக்மென்டட் ரியாலிட்டி வழக்கத்தில் உள்ளதை இவை எடுத்துரைக்கின்றது.

கல்வித் துறையில் ஆக்மென்டட் ரியாலிட்டி

ஆக்மென்டட் தொழில்நுட்பம் உண்மையும் டிஜிட்டலும் இணைந்து செயல்படுகிறது. இந்நுட்பம் கல்வியில் எவ்வாறு செயல்படுகிறது என்றால் நாம் கற்கும் செயல்முறைகளை அனிமேசன் வாயிலாக எடுத்துரைப்பது ஆகும். இதனை,

நாம் சாப்பிடும் சாப்பாடு எவ்வாறு செரிமானம் ஆகிறது என்பதை வெறும் விளக்கங்களால் படிப்பதைவிட, நம் உள்ளுறுப்புகள் எப்படி செயல்பட்டு நாம் சாப்பிடுவதை செரிமானம் ஆக்குகிறது என்பதை முப்பரிமாண கோணத்தில் வீடியோவாக விளக்கினால் எந்த அளவுக்கு புரியும்[5]

(இனி எ மெ., கா பு.,ப.எண்., *41)*

அதன்வழி காணொளியாக நாம் பார்த்து கற்கும் கல்வி முறையானது எளிதில் காட்சி வடிவமாக நம் மனதில் பதிகின்றது. அதிலும், நாம் தயக்கம் இல்லாமல் எத்தனை முறை வேண்டுமானாலும் பாடம் சார்ந்த சந்தேகங்களை பதிவுகளை மீண்டும் மீண்டும் புரியும் வரை பார்த்துக் கொள்ளும் வசதிகளும் உண்டு.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மருத்துவத் துறையில் ஆக்மென்டட் ரியாலிட்டி

மனித உடலின் உள் உறுப்புகளில் ஏற்படும் பிரச்சனைகளை தெரிந்துகொள்ள எக்ஸ்ரே, ஸ்கேன், ஈசிஜி, எகோ எடுத்துப் பார்த்து பின் சிகிச்சை செய்வதற்கு மாற்றாக ஆக்மென்டட் ரியாலிட்டி வாயிலாக உள் உறுப்புகளை முப்பரிமாணத் தோற்றத்தினை திரையில் தோன்றச் செய்து உடலில் ஏற்படும் பிரச்சனைகளை விரைவில் கண்டறிய முடியும் என்பதனை,

' உடற்கூறியல் என்பது மருத்துவ அறிவியலின் மிகவும் சிக்கலான பிரிவுகளில் ஒன்றாகும். உடற்கூறியல் பற்றிய பட்டப்படிப்பு மட்டுமே ஒரு நோயாளிக்கு சிகிச்சையளிக்க போதுமானதாக இல்லை. எனவே, செயல்முறை கற்றல் மற்றும் ஹாலோகிராம் அடிப்படையிலான உருவகப்படுத்துதல்கள் போன்றவை மருத்துவர்களுக்கு பேருதவியாக இருக்கின்றன.[6]

(இனி எ மெ., கா பு.,ப.எண்., *44* **)**

மருத்துவர்கள் ஹோலோகிராம் வசதியினை பயன்படுத்தி நோயாளிகளுக்கு அளிக்கும் சிகிச்சை முறையினால் திரையின் வழி உடலில் ஏற்பட்ட பிரச்சனைகளைக் குறித்து விரிவாக அறிந்து கொள்ளமுடிகின்றது. சிகிச்சை குறித்தான பயத்தினை இத்தொழில்நுட்பம் அறவே நீக்குவதாக உள்ளது.

ஓட்டல்களில் ஆக்மென்டட் ரியாலிட்டி

ஓட்டல்களில் மெனுக்களுக்கு பதிலாக *QR Code* ன் செயல்பாடுகள் புலக்கத்தில் வரும் நிலையில் தொழில்நுட்பம் பெருகி உள்ளது. *QR Code* ஐ *Scan* செய்து தனக்கு தேவையான மெனுக்களை தேர்வு செய்து அதில் நமக்கு விருப்பமான சுவைகளை புகுத்தவும், காரம் முதலாக தனக்கு விருப்பமான முறையில் சமைக்க அறிவுறுத்தலாம். இதனை,

டிஜிட்டல் கார்டுகள் வெளிநாடுகளில் புழக்கத்துக்கு வந்துவிட்டன. நாம் ஆர்டர் செய்யும் உணவு வருவதற்கு முன்பே அதில் என்னென்ன இன்கிரெடியன்ஸ் உள்ளது என்பதையும் அந்த உணவை கண்முன் கொண்டுவந்து மொபைல் காமிரா மூலம் ஸ்கேன் செய்து தெரிந்துகொள்ள முடியும் "[7]

(இனி எ மெ., கா பு.,ப.எண்., *47)*

ஆர்டர் செய்த உணவு தம்முன் வந்த உடன் உணவினை காமிராவால் ஸ்கேன் செய்தால் உணவில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அனைத்தையும் பட்டியலிடும் அளவிற்கு இன்றைய தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது.

ஆய்வின் பயன்

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் ஹோலோகிராம் பயன்பாடு பெரும் வரவேற்பினை பெற்றுள்ளது. நாமும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தன்னை அதனோடு இணைத்துக் கொள்வதே ஆகச் சிறந்தது தன்னை முன்னேற்றிக் கொள்ள இவை பெரும் உதவியாக இருக்கும்

1. ஹோலோகிராம் எனும் முப்பரிமாணம் கொண்டு விர்ச்சுவல் ரியலிட்டியில் இறந்தவர்களையோ அல்லது தன்க்கு விருப்பமானவர்களை தன்னுடன் இருப்பதாக உணர வைக்க இத்தொழில்நுட்பம் பேருதவி புரிகின்றது.
2. கல்வியில் தனக்கு ஏற்படும் ஐயங்களை காணொளி காட்சிகளின் வாயிலாக விளக்குவதால் எளிதில் மனதில் பதிந்துகொள்ள உதவியாக உள்ளது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

3. மருத்துவ துறையில் உடற்கூறாய்வு பிரிவு சிகிச்சைக்கு ஆக்மென்டட் ரியாலிட்டி உதவுகிறது.
4. ஹேலோகிராம் உதவியுடன் உடலில் ஏற்படும் பிரச்சனைகளை கண்டறிய பயன்படுகிறது.
5. ஆக்மென்டட் உதவியுடன் இணையத்தில் தனக்கான ஒரு உலகத்தினை உருவாக்கம் செய்யலாம். அங்கே தனக்கு விருப்பமான சூழலில் நிகழ்ச்சிகளை உருவாக்கலாம், வழக்காடலாம், சிரித்து மகிழலாம், இறந்தவர்களை வரசெய்து விருந்து படைக்கலாம், வான வேடிக்கைகளை நிகழ்த்தலாம். இவ்வாறு தனக்கு தோன்றியதை உடனுக்குடனே தன்னுடைய பக்கத்தில் உருவாக்கி அவ்வுலகில் மனமகிழ்வுடன் சிறிது நேரம் வாழ்ந்து கொள்ளலாம்.

முடிவுரை

மக்களின் தேவைகளைத் தீர்க்கவே தொழில்நுட்பங்கள் பல்கி பெருகி காணப்படுகின்றன. ஒரு செயலை விரைந்து எளிதாக முடிக்கவும் நேரத்தினையும் உடல்வலிமையை குறைக்காது இருக்கவே தொழில்நுட்பங்கள் உருவாக அடிப்படை காரணங்களாக உள்ளன. இவ்வாறாக, ஹேலோகிராம் வழி ஆக்மென்டட் ரியாலிட்டி விர்ச்சுவல் ரியாலிட்டியாக செயல்பட்டு பல துறைகளில் மிகத் துல்லியமாக செயல்படுகின்றது என்பதனை இக்கட்டுரை விரிவுற விளக்கியுள்ளது.

முதன்மை ஆதாரங்கள்

1. **சுஜாதா,கொலையுதிர் காலம்**,விசா பப்ளிகேஷன், தி. நகர், சென்னை - *600017*.ஏப்ரல் *2019*.
2. **காம்கேர் கே. புவனேஸ்வரி, இனி எல்லாம் மெட்டாவெர்ஸ் அசத்தும்** *(AI) Part - 2*, சூரியன் பதிப்பகம், சென்னை *- 600004*, ஜனவரி *2024*.
3. http://www.lamasatech.com/blog/hologram-technology-becoming-viral/

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

33. மகாபாரத மறுவாசிப்பில் உபபாண்டவம்

சிவசங்கரி.வி.
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு - *638004*
sivakrishna2524@gmail.com - 82202 10252

DOI 10.5281/zenodo.17214547.

Abstract

Ramayana and Mahabharata are the great Indian epics. As the epics have unearthly matters and mythological figures, they have paved the way for criticism. In the second half of the twentieth century, criticism is not only made through essays. They were also made in the form of modern literary works. Preferably, novels redefined the epics through unique lenses. Though the translatory and adapted versions made the epics propagate into people, the interpretation works gave people another dimension of these epics. In that way here this essay illustrates writer S.Ramakrishnan's Uba pandavam novel's role in reconceptualising Mahabharata

Key Words : Rereading, Upapandava, Mahabharata.

முன்னுரை

இந்தியத் துணைக்கண்டத்தின் இருபெரும் இதிகாசங்களான இராமாயணமும் மகாபாரதமும் இறையியல் மற்றும் வாழ்வியல் தத்துவங்களைக் கதை வடிவில் கூறுவனவாக அமையப்பெற்றுள்ளன. இதிகாசத் தொன்மங்கள், அறத்தை முன்னிலைப்படுத்துகின்றன. இதிகாசங்களில் உள்ள இயற்கை இறந்த நிகழ்வுகள், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செய்கைகள் முதலியன இவற்றைக் குறித்த ஆய்வுக் களங்களை விரிவாக்கியுள்ளன எனலாம். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவற்றின் மீதான விமர்சனங்கள், கட்டுரைகளாக மட்டுமல்லாது நவீன இலக்கியப் படைப்புகளாகவும் முன்வைக்கப்பட்டன. இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்ட மொழிபெயர்ப்பு பனுவல்களும், தழுவல்களும் இதிகாசக் கதைகளின் நிலவியல் மற்றும் பண்பாட்டுப் பரவலுக்கான முக்கியக் காரணங்களாக அமைந்தன. இருப்பினும் மறுவாசிப்புப் படைப்புகளே இதிகாசம் குறித்த மாறுபட்ட கோணத்திலான சிந்தனைகளை மக்களிடையே ஏற்படுத்தின. அந்த வகையில் எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனின் உபபாண்டவம் புதினம் வாயிலாக மகாபாரத மறுவாசிப்புக் களங்களை ஆராய இக்கட்டுரை முற்படுகிறது.

மறுவாசிப்பு

நவீன ஆய்வுலகப் போக்குகளில் இலக்கியங்களை மறுவாசிப்பு செய்தல் என்பது முதன்மை பெற்றுவருகிறது. கைலாசபதி முதலாக எஸ்.ராமகிருஷ்ணன் வரை மறுவாசிப்பு என்பதற்கு மறுஅவதாரம், மறுபடைப்பு, மறுஆக்கம், மறுபுனைவு, மீள்புனைவு, மறுவாசிப்பு ஆகிய கலைச்சொற்களைப் பயன்படுத்தி உள்ளனர் (வெங்கடேசன், *2022*, ப.*17*). ஏற்கனவே வாசிக்கப்பட்ட இலக்கியத்தை மறுபடியும் வாசித்தல் என்பது மறுவாசிப்பு எனும் கலைச்சொல்லுக்குரிய பொருளன்று. பன்னெடுங்காலமாக வாசிக்கப்பட்ட மரபில் இருந்து விலகி, புதிய கண்ணோட்டத்தோடு இலக்கியத்தை அணுகுதலே மறுவாசிப்பாகும்.

உளவியல், அமைப்பியல், நவீனத்துவம், தொன்மவியல், மானிடவியல் முதலிய கோட்பாடுகள் இலக்கியத்தின் ஒரு கூறினைப் பல்வேறு கோணங்களில் பார்ப்பதற்கான வெளியை ஏற்படுத்தித் தருகின்றன. மரபார்ந்த வாசிப்பினைக் கோட்பாடுகள் கேள்விக்குட்படுத்துவதோடு புதிய தரிசனங்களையும் தருகின்றன. இதிகாசங்கள்,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

புராணங்கள், காப்பியங்கள் தொடங்கி சமகாலப் படைப்புகள் வரை மறுவாசிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றன. தொடக்கத்தில் விமர்சனக் கட்டுரைகளாக மறுவாசிப்புகள் வெளியாயின. தொடர்ந்து இலக்கியப் புனைவுகளிலும் மறுவாசிப்பின் நிழல் படரத் தொடங்கியது.

எதிர்வாதப் படைப்புகளும் ஒரு வகையில் மறுவாசிப்பின் தாக்கத்திற்கு உட்பட்டவை என்று சொல்லலாம். இராவணனைத் தலைவனாகக் கொண்ட இராவண காவியம், கலைவாணர் மேடையேற்றிய கிந்தனார் கதாகாலட்சேபம், பொய் மட்டுமே பேசும் ஒருவனைக் கதைத் தலைவனாகக் கொண்ட சந்திரஹரி நாடகம் முதலியவற்றைச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

மறுவாசிப்பிற்கான தேவைகளுள் இரண்டு காரணங்களை அடிப்படையானவை என்று சொல்லலாம். ஒன்று, வழிவழியாக வழங்கப்பட்டு வருகிற விளக்கங்களின் போதாமை. மற்றொன்று, சமகால இலக்கிய உலகம் படைப்பினை உருவாக்குவதற்கும், வாசகர் தன்னுடைய கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் தந்துள்ள சுதந்திரம் ஆகும். மறுவாசிப்பானது மூலத்தின் சாரத்தைச் சிதைக்கும் பணி என்கிற விமர்சனமும் உண்டு. ஆனால், முறையான தரவுகளுடன் வெளிப்படும் மறுவாசிப்பு புனைவிலக்கியமாக பரிணமிக்கிறபோது வாசகர் உள்ளத்தில் ஒரு புதிய கோணத்தை ஏற்படுத்தி மூலப்பனுவலை நிலைநிறுத்துகிறது என்பதில் ஐயமில்லை.

பாரதக் கதையின் பரிணாமங்கள்

இந்து சமயத்தவரின் பெருங்காப்பியம் எனும் உயர்ந்த நிலையை எட்டியிருக்கிறது மகாபாரதம். எந்தவொரு நிகழ்விற்கும் இவ்வுலகில் தோற்றுவாய் என்பது உண்டு. அவை வளர்ச்சியுற்று, பின்னரே உயர்நிலையை அடைகின்றன. அப்படியாக, தொன்று தொட்டு பேசுபொருளாக வழக்கில் உள்ள பாரதக்கதையின் பரிணாமங்களைக் காண்பது பயனுடையதாக அமையும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கினையும் பற்றிய உபதேசத்தோடு கூடியதாய் பூர்வத்தே நிகழ்ந்த கதையாகச் சொல்லப்படுவதாய் உள்ளதனை இதிகாசம் என்று கொண்டனர், வடமொழி ஆசிரியர்கள் (வையாபுரிப் பிள்ளை, *1962,* பக்.*260-261).* வாய்மொழியாக வழங்கப்பட்டதொரு பண்டைய கதை வடிவமே பின்னாளில் இதிகாசம் என வளர்ச்சி பெற்றுள்ளது என்பது இதன்வழி புலனாகிறது.

மகாபாரதத்தின் ஆதி பருவத்தில் வரும் கதாபாத்திரமான உக்கிரசிரவனின் கூற்று, பாரதக்கதை வாய்மொழியாக பரவியதைக் காட்டுகிறது. வியாசரிடமிருந்து அவரது சீடரான வைசம்பாயனருக்கும், வைசம்பாயனர் மூலம் நாகவேள்வி (சர்ப்ப யாகம்) நடத்திய ஜனமேஜயன், அதில் கலந்து கொண்ட உக்கிரசிரவன் உள்ளிட்ட முனிவர்களுக்கும், உக்கிரசிரவன் மூலம் நைமிஷவன ரிஷிகளுக்கும் இக்கதை வாய்மொழியாகக் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாய்மொழிப் பரவலுக்கு அக்கால குருகுல முறை காரணமாக அமைந்திருக்க வாய்ப்புகளுண்டு.

இந்தியப் பண்பாட்டில் மாபெரும் இதிகாசமாகத் திகழ்கின்ற மகாபாரதக் கதையின் பதிவுகள், தமிழின் பழம்இலக்கியங்களாக கருதப்படும் சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை காணப்படுகின்றன. பாரதக்கதை மாந்தர்களும் நிகழ்வுகளும் சங்க இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் உவமையாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். சின்னமனூர் சிறிய செப்பேட்டின் மூலம் பாரதம் தமிழ்ப்படுத்தப்பட்ட செய்தியை அறிய முடிகிறது. நல்லாப்பிள்ளை பாரதம், வில்லிபுத்தூராரின் வில்லிபாரதம் ஆகியன தமிழில் இயற்றப்பட்ட பாரத ஆக்கங்களாகும். ஆயினும் இவையெல்லாம் மூலத்தைத் தழுவியனவாகவும் சில பகுதிகளைச் சுருங்கச்

http://Creativecommons.org//license/by/4.0/. ISBN: 978-93-343-7954-9

சொல்வனவாகவும் (சான்றாக, கீதை உபதேசம்) எழுதப்பெற்றவை. ஸ்ரீ ராமானுஜாச்சாரியார் சமஸ்கிருதத்திலிருந்து முழுமையாக 14,000 பக்கங்கள் மொழியாக்கம் செய்த மகாபாரதத் தொகுதி தமிழில் வெளிவந்த மிகச்சிறந்த நூலாக அறிஞர்களால் கருதப்படுகிறது. இத்தொகுதிகள் கும்பகோணம் பதிப்பு என்றும் வழங்கப் பெறுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க பாரதக் கதையை ஒட்டிய தமிழ்ப் படைப்பாக பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தைக் கருதுவர். விடுதலைப் போராட்டச் சூழலோடு பொருத்தி வாசகர்களால் இக்கவிதை உள்வாங்கப்பட்டது. இவ்வாறான காவியப்படைப்புகள் மட்டுமின்றி புனைகதைகளிலும் பாரதக் கதைக்கூறுகள் மையம் பெற்றன. தற்காலப் படைப்பாளிகள், தங்களுடைய கண்ணோட்டத்திலும் நடையிலும் பாரதக்கதைக்குப் புது வடிவம் தந்துள்ளனர். ஜெயமோகனின் வெண்முரசு, பிரபஞ்சனின் மகாபாரதம், ராஜாஜியின் வியாசர் விருந்து, சோ.ராமசாமியின் மகாபாரதம் பேசுகிறது போன்றவற்றை இவ்வகைக்குள் அடக்கலாம். நாட்டார் மரபில் தெருக்கூத்துகளாகவும் வழிபாட்டின் ஒரு அங்கமான பிரசங்கமாகவும் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் சொலவடைகளாகவும் பழமொழிகளாகவும் வாழ்வியலில் பலவகையாக பாரதக்கதை விரிந்து கிடப்பதைக் காணலாம்.

மகாபாரத மறுவாசிப்பு

பாரதக் கதையை முதன்முறை வாசிக்கின்றபோது அதன் கூறுகள் குறித்த புரிதல் முழுமையாகக் கிடைப்பதில்லை. சில கேள்விகள் உதித்தவண்ணமே இருக்கின்றன. வேதாந்த விளக்கங்களைக் கடந்து இயல்பான மனித வாழ்க்கையைப் பற்றிய புரிதலைப் பெறுவதற்கும், கேள்விகளுக்கு ஏற்ற சரியான பதில்களைக் கண்டுபிடிப்பதற்கும் அக்கதையைப் புதிய கோணத்தில் வாசிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் களங்களும் அப்பனுவலின் உள்ளேயே இருக்கின்றன. பனுவல் தரும் களங்களில் சில இங்கே இபட்டியலிடப்படுகின்றன.

- குருஷேத்திரப் போர் என்பது பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடையிலான போர் மட்டுமன்று. தனிநபரின் பகைமை உணர்வும் இப்போரின் அடிப்படைத் தூண்டுதலாக அமைகின்றது. சான்றாக, துரோணர் × துருபதன், கர்ணன் × அர்ஜுனன், பீஷ்மர் × சிகண்டி ஆகியோரின் எதிர்நிலைகளைக் குறிப்பிடலாம்.
- மகாபாரதத்தில் பெண் கதை மாந்தர்கள் கூறப்பட்டுள்ள விதத்தையும் அதில் தொக்கி நிற்கும் உளவியல் கூறுகளையும் கண்டறிய வேண்டிய தேவை உள்ளது.
- துரியோதனன், கர்ணன் முதலானோர் தங்கள் தரப்பில் முன்னிறுத்தும் நியாயங்களையும் விவாதிக்க வேண்டியுள்ளது.

மகாபாரதத்தின் உட்கூறுகள் மறுவாசிப்பிற்கான வாய்ப்புகளை வழங்குகின்ற அதே வேளையில், தமிழாய்வுகளில் தமது தாக்கத்தைத் தொடர்ந்து பதிவு செய்து கொண்டிருக்கிற நவீன கோட்பாடுகளையும் அதனுள் பொருத்திக்காண இடமுண்டு. மகாபாரதக் கதைக் கூறுகளைக் கேள்விக்குட்படுத்துவதோடு மறுவாசிப்பிற்கான களங்களையும் கோட்பாடுகளைக் கொண்டு விரிவுபடுத்தலாம். கோட்பாடுகளின்வழி முன்னிறுத்தப்படும் சில ஆய்வுக் கோணங்கள் பின்வருமாறு:

- வேதகாலத்திற்கு முன் (புராண அடிப்படையில் திரேதாயுகம்) நிகழ்ந்த ஒரு குறிப்பிட்ட இனத்தவரின் வாழ்வியலில் இருந்து இன்றைய வாழ்வியல் பெரிதும் மாற்றங்களைச் சந்தித்திருக்கிறது. இருப்பினும் மரபார்ந்து இக்கதை கடத்தப்படுவதன் நோக்கம், அது சமுதாயத்தில் இன்றளவும் சொல்லப்படவேண்டிய ஒன்றைத் தன்னுள் பொதிந்து வைத்துள்ளது என்று கருதுதல்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

- சமய மரபிற்குள் இதிகாசம் எனும் கட்டிற்குள் வைக்கப்பட்டிருக்கும் பாரதக்கதையைச் சமுதாய மரபிற்குள் இலக்கியம் எனும் வெளியின் மூலம் மக்களிடம் கொண்டு சேர்ப்பித்தல்.
- கதைமாந்தர்கள் மற்றும் நிகழ்வுகளை உளவியல் நோக்கில் அணுகுவதன் மூலம் வழிவழியாகச் சொல்லப்பட்டு வரும் கட்டமைப்புகளைப் புதிய புரிதலை நோக்கி நகர்த்துதல்.

இவைபோன்ற மாறுபட்ட சிந்தனைகளின் வெளிப்பாடாகப் புனைகதைகளில் எண்ணற்ற படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தொ.மு.சி. ரகுநாதனின் **வென்றிலன் என்ற போதும்**, கரிச்சான் குஞ்சுவின் **பானுமதி**, ஜா.தீபாவின் **திரை**, சுப்பிரமணி ரமேஷின் **பத்மவியூகம்**, ஜெயமோகனின் **பத்மவியூகம்** முதலான சிறுகதைகள், பூமணியின் **கொம்மை**, இந்திரா பார்த்தசாரதியின் **கிருஷ்ணா கிருஷ்ணா**, எஸ்.ராமகிருஷ்ணனின் **உபபாண்டவம்** முதலான புதினங்களும் புனைவுகளோடு கூடிய எதார்த்த காரணிகளை முன்னிறுத்துகின்றன. இவற்றுள் எல்லோர் தரப்பிலும் உள்ள நல்லனவும் தீயனவும் சுட்டப்பெறுகின்றன. சில புனைவுகள் வேதாந்த சாரத்தை விளக்கும் நிலையிலும் சில புனைவுகள் வாழ்வியலோடு தொடர்புடைய எதார்த்த நிலையிலும் அமையப் பெற்றுள்ளன.

மறுவாசிப்பில் உபபாண்டவம்

எஸ். ராமகிருஷ்ணன், மகாபாரதப் பின்னணியோடு தனது கற்பனைகொண்டு உபபாண்டவத்தை எழுதியிருக்கிறார். மகாபாரத நிகழ்வுகள் நடந்த காலத்தில் அந்நிகழ்வுகள் நடைபெற்ற இடங்களுக்குப் பயணித்த ஒரு பயணியின் குறிப்புகளாக விரிகிறது இந்நாவல். வியாச பாரதத்தின் பருவங்களின் எண்ணிக்கையை ஒத்ததாக இந்நாவல் பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயமும் ஒவ்வொரு கருத்தாக்கத்தை முன்னிறுத்துகிறது.

எஸ். ராமகிருஷ்ணன் பின்வரும் படைப்பாக்க நுட்பங்களின்வழி உபபாண்டவத்தை மகாபாரத மறுவாசிப்புச் சித்திரமாக வரைந்திருக்கிறார்.

- **பயண இலக்கிய நடையில் புதினத்தை எடுத்துரைத்தல்:**

இப்புதினம் பெரும்பான்மையான மகாபாரத மறுபுனைவுகள் போல் ஒரு குறிப்பிட்ட கதைமாந்தரை முன்னிறுத்தி எழுதப்படவில்லை. மகாபாரதத்தின் கதையை ஆற்றொழுக்காக ஒரு கதைமாந்தரின் கோணத்தில் வரிசைப்படுத்தவும் இல்லை. கதையில் எழும் ஒவ்வொரு நிகழ்வு குறித்த கேள்விகளுமாய் பதில்களுமாய் கதையின் கூறுகள் வகைப்படுத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. சூதர்கள் (பாணர்கள்/கதை சொல்லிகள்) மூலமாக, அதாவது நடந்த நிகழ்வுகளில் இருபக்கச் சார்பற்றவர்களின் மூலமாக இப்புனைவு வழிநடத்தப்படுகிறது. பல்வேறு நிகழ்வுகளைக் காரணங்களோடு விளக்கி இருக்கிறது இப்புதினம். சில இடங்களில் நிகழ்வுகளைத் தன்னுடைய பாணியில் எஸ்.ராமகிருஷ்ணன் விவரித்துச் செல்கிறார். அஸ்தினாபுரம், குருஷேத்திரம், துவாரகை, விராட நாடு முதலிய நாடுகளையெல்லாம் நாம் நேரில் பார்ப்பதைப் போன்ற பிம்பத்தை ஆசிரியரின் எழுத்து ஏற்படுத்தியுள்ளது.

- **நிகழ்வுகளைக் கருத்துக்களின் அடிப்படையில் வகைப்படுத்தியிருத்தல்:**

சூல் (பிறப்பு), பால்ய விருட்சம் (இளமைப் பருவம்), நகரங்களின் உரையாடல் (நகரங்கள்), கதா ஸ்தீரிகள் (பெண் கதை மாந்தர்கள்), யுத்த துவக்கம் (போர்) முதலிய அத்தியாயங்கள், கருத்து அடிப்படையில் எஸ். ராமகிருஷ்ணன் இப்புனைவை நகர்த்தி இருக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சூல், பால்யவிருட்சம் என்னும் இரண்டு அத்தியாயங்கள் கதை மாந்தர்களின் பிறப்பு மற்றும் இளமைப்பருவ நிகழ்வுகளைப் பற்றி பேசுகின்றன. போருக்குப் பிந்தைய நிகழ்வுகளைப் பேசும் சப்திக்கும் நீரூற்று, முதுபர்வம் ஆகிய அத்தியாயங்களில் கதை மாந்தர்களின் முதுமை, தனிமை, எண்ண அலைகள் முதலானவை பேசப்படுகின்றன. மகாபாரதக் கதைமாந்தர்கள் தெய்வீகநிலையில் காட்டப்படாமல் இயல்பான உலக மாந்தர்களாக இப்புதினத்தில் படைக்கப்பட்டிருக்கின்றனர்.

- **உளவியல் கோணத்தில் வகைமாதிரிகளின் கட்டமைப்புகளைக் கட்டுடைத்தல்:**

பஞ்சபாண்டவரின் மனைவி என்பதைத் தாண்டி தனது பிள்ளைகளை அருகில் இருந்து வளர்க்க இயலாத தாயாக, பாண்டவரின் உள்ளங்களிலே பழியுணர்ச்சியைக் குறைய விடாது காத்திடும் பெண்ணாகப் பாஞ்சாலியின் பரிமாணங்கள் சித்திரிக்கப்படுகின்றன. மாத்ரியின் பிள்ளைகள் அரியணை பெற்று விடக் கூடாது என மந்திரங்களை மறந்திடச் செய்பவளாக, அர்ஜுனன் வென்றாலும் தர்மன் ஒருவனுக்காகத் திரௌபதியை ஐவருக்கும் மனைவியாக்கியவளாக குந்தி இப்புதினத்தின்வழி காட்டப்படுகிறாள். போரில் பிள்ளைகளை இழந்து, அவர்களைக் கொன்ற பாண்டவர்களுடன் வாழும் திருதராஷ்டிரன் மற்றும் காந்தாரியின் மனநிலை; கணவனை இழந்த பெண்களும் தந்தையை இழந்த குழந்தைகளும் உள்ள நாட்டில் யாருக்காக ஆட்சி செய்கிறாய்?' என்று சார்வாகன் என்ற பண்டிதன் எழுப்பிய கேள்வியால் மனம் தளர்ந்த தர்மனின் நிலை ஆகியன ஆழ்மன வெளிப்பாடாக அமையப் பெற்றிருக்கின்றன.

- **துணைமாந்தர்களின் உணர்வுகளை முன்னிறுத்துதல்:**

மகாபாரதத்தில் அதிகம் அறியப்படாத கதைமாந்தர்களான துச்சலை, விகர்ணன், ஜராசந்தன், பாண்டவர்களின் மகன்கள் முதலானவரின் பக்கம் உள்ள நியாய விவாதங்களும் இடம்பெறுகின்றன.

மேலும், மகாபாரதம் முழுவதும் உணர்ந்திட முடியாத பனுவல்; ஒவ்வொரு முறை வாசிக்கும் போதும் அது புதிய அனுபவத்தையே தருகிறது; எவ்வளவு முறை வாசித்தாலும் மீண்டும் அதன் தொடக்கத்திற்கே வந்து விடும் நிலைதான் ஏற்படுகிறது என்பதைச் சொல்வதாக புதினத்தின் நிறைவுப் பகுதியை அமைத்திருக்கிறார் எஸ்.ராமகிருஷ்ணன். வாழ்க்கை என்பது முதலும் முடிவும் அற்றது; இயல்பான நதியைப் போல சென்று கொண்டிருக்கிறது; நாம் தான் அதனைப் பல கோணங்களில் பார்க்கிறோம் என்பதைப் பின்வரும் பகுதி வாயிலாக அறியலாம்.

> 'எதன் துவக்கத்திற்கு என்றோ எங்கிருந்து என்றோ அவன் சொல்லவோ நான் கேட்கவோ இல்லை நதி செல்லும் திசையிலே படகு போய்க் கொண்டே இருந்தது. கரைகளைப் பற்றிய கவனம் எதுவும் இன்றி தொலைவில் எப்போதும் போல பசுக்கள் மேய்ந்தபடி இருந்தன. ' (ராமகிருஷ்ணன், 2013, ப.384)

முடிவுரை

மறுவாசிப்பு என்பது பனுவலை மாறுபட்ட கோணத்தில் வாசிப்பதற்குரிய களமாக அமைகிறது. புராணங்கள், இதிகாசங்கள், பண்டைய வரலாறு முதலான வாசிப்புகளினூடே மரபிலக்கிய வாசிப்பும் இருபதாம் நூற்றாண்டில் முதன்மை பெறத்தொடங்கியது (பார்த்திபராஜா, 2012). தொன்மங்களின் பின்னணி, உளவியல் நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் ஆராயப்படுகின்றன. அந்த வரிசையில் பாரதம், பல்வேறு மறு ஆக்கங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. எஸ். ராமகிருஷ்ணன் தனது நாவலான உப பாண்டவத்தில் பாரதக்கதை நிகழ்வுகளைப் பயணி ஒருவனின் பார்வையில் இருந்து விவரித்துள்ளார்; உளவியல் நோக்கில் நிகழ்வுகளின் வேரை வெளிப்படுத்த முயன்றிருக்கிறார்;

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மறுவாசிப்பின்வழி பாரதக்கதை மக்களிடம் பரவி நிற்பதை முன்மொழிந்திருக்கிறார்; பாரதக் கதையை நிலவியல் அடிப்படையில் அணுகி இருக்கிறார் என்பதை நாவலின் விவரணைகள் வெளிப்படுத்துகின்றன. உபபாண்டவம் போன்ற புதினங்கள் மகாபாரதத்தைப் புதிய கோணத்தில் சிந்திப்பதற்கான தூண்டுதல்களாக அமைகின்றன.

துணை நின்ற நூல்கள்

1. அருட்செல்வப் பேரரசன், செ. (மொழிபெயர்ப்பு), மூலம்: கிசாரி மோகன் கங்குலி, *The Mahabharata*, முழுமஹாபாரதம் ஆதிபருவம், *retrieved from http://mahabaharatham.arasan.info.*
2. சீனிவாசன், இரா. (ப. ஆ), தமிழகத்தில் பாரதம் வரலாறு - கதையாடல், மாற்று வெளியீடு, சென்னை, டிசம்பர் *2011.*
3. ராமகிருஷ்ணன், எஸ்., உபபாண்டவம், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், ஜனவரி *2013.*
4. வெங்கடேசன், இரா., தொன்ம மறுவாசிப்புகளின் ஆழமும் விரிவும், உலகத்இஇs தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *2022 .*
5. வையாபுரிப் பிள்ளை, எஸ்., தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மார்ச் *1962.*

கட்டுரைகள்

1. பார்த்திபராஜா, கி., மணிமேகலை மறுவாசிப்பும் எஸ். எம். ஏ. ராமின் ஆபுத்திரனின் கதை நாடகக் கட்டமைப்பும், டிசம்பர் *2012, retrieved from http://maatrunatakam.blogspot.com/2012/12/blog-post_223.html?m=1.*
2. ஜெயமோகன்., இதிகாச நவீனத்துவம் எஸ். ராமகிருஷ்ணனின் உபபாண்டவம், டிசம்பர் *2009, retrieved from https://www.jeyamohan.in/5508/.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

34. சக்தி ஜோதியின் கவிதைத் தொகுப்புகளில் சூழலியற் பெண்ணியக் கோட்பாடு

வெ.வளர்மதி
(MKU23PFOL11214)
பகுதிநேரமுனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலைத்தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி,சிவகாசி

ஆய்வு நெறியாளர்
முனைவர் ச. தனலட்சுமி
உதவிப்பேராசிரியர்
முதுகலைத்தமிழாய்வுத்துறை
திஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி, சிவகாசி

DOI 10.5281/zenodo.17214579.

Abstract :

Ecofeminism regards nature and woman as equal. Just like nature, a woman's life too is subjected to oppression and exploitation; at the same time, both the earth and woman are seen as symbols of spirituality, motherhood, and vitality.The core principles of ecofeminist theory include: a spiritual perspective, the interconnection between nature and woman, the revival of matrilineal society, and resistance against modern developments.PoetSakthiJothi compares a woman's resilience to the waves of the sea, affirming that however much suffering a woman may endure, she must remain mentally strong. From the very origin of humankind, the authority to lead the clan was held only by the mother. In the matrilineal society, women carried out all essential tasks–farming, sharing resources, weaving clothes, and building shelters.Nature and woman are not separate; they are one. The subjugation of both is the cause of every form of destruction. The poet equates the sufferings of the land with the toils of women.In agriculture, the use of chemical pesticides disrupts the natural cycle. With the destruction of insects, the birds that depend on them–particularly sparrows–lose their livelihood. This shows that human-created technological development destroys ecological balance.TamilachiThangapandian also asserts that ecofeminism entirely rejects technological determinism. The exploitation of land, water, and mineral resources and the destruction of nature are being systematized and institutionalized through new projects promoted by banks and corporate capitalists.

முன்னுரை:

சூழலியற் பெண்ணியம் என்பது பெண்கள் மற்றும் இயற்கை ஆகிய இரண்டும் ஒரே சமயத்தில் ஆணாதிக்கச் சமூகத்தாலும் தொழில்மயமாக்கலாலும் அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளாகின்றன என்பதை வலியுறுத்தும் கோட்பாடாகும். *"Ecofeminism"* என்ற சொல் *1974*-இல் "திபோனே" என்பவரால்அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் *Women and Life on Earth* என்ற நூலின் மூலம் சிந்தனைக் களத்தில் வலுப்பெற்றது. இயற்கையைப் போலவே பெண்ணின் வாழ்வும்அடக்குமுறைக்கும்சுரண்டலுக்கும் உள்ளாகின்றது; அதே சமயம் புவியும் பெண்ணும் ஆன்மீக, தாய்மை, உயிர்ப் பின் அடையாளமாகக் காணப்படுகின்றன. வாண்டானா சிவா, காயத்ரிவைபக், அருந்ததி ராய் போன்றோரின் சிந்தனைகள் இந்தக்கோட்பாட்டை மேலும் விரிவுபடுத்துகின்றன. இக்கட்டுரையானதுதிறனாய்வு கோட்பாடுகளும் பனுவல் வாசிப்புகளும்என்ற நூலினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.தமிழில் சக்தி ஜோதி, தமிழச்சி தங்கபாண்டியன், தாமரை ஆகிய கவிஞர்களின் படைப்புகள் சூழலியற் பெண்ணியகோட்பாடுகளை அழுத்தமாக வெளிப்படுத்துகின்றன.

சூழலியற்பெண்ணியத்தின்கோட்பாடு:

'புவிக்கும் பெண்ணுக்குமான விடுதலை என்பது ஆண்களிடமிருந்து தொடங்க வேண்டும், ஆண்கள் கைப்பற்றிக் கொண்ட புவிக்கு விடுதலை அளிக்க வேண்டுமானால்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வனங்கள், ஆறுகள், மலைகள் பறவைகள், விலங்குகள் என அனைத்தையும் அவனிடமிருந்து விடுவிக்க வேண்டும் இவை சாத்தியப்பட சூழலியற் பெண்ணியத்தை அரசியல் கருவியாக பயன்படுத்தி வருகின்றனர்." (ந.ரத்தினகுமார், திறனாய்வு கோட்பாடுகளும் பன்முகவாசிப்புகளும், ப.29) காயத்ரிவைபக், அருந்ததிராய், மகாஸ்வேதா தேவி, வந்தனா சிவா போன்றவர்களின் பார்வை இந்திய சூழலில் முக்கியமாக இருக்கின்றனவின் கொள்கைகளில் பல்வேறு பட்டபுலன்கள் இயக்கங்கள் போக்குகள் இருக்கின்றன. ஆன்மீகப் பார்வை ,தாய் வழி சமூகத்தை மீளாக்கம் செய்தல், இயற்கையின் பெண்ணையும், நவீன வளர்ச்சிகளை எதிர்த்தல், பெண்களின் இயக்கங்களை வளர்த்தல் பண்பாட்டு பெண்ணியத்தை உருவாக்குதல் ஆகியன சூழலியற் பெண்ணியத்தின் கோட்பாடுகளாக இருக்கின்றன.

ஆன்மீகப் பார்வை:

Spiritual visions என்று அழைக்கப்படும் இக்கொள்கை புதிய கடவுளாக பார்க்கிறது புவி யாரையும் அழிக்க நினைப்பதில்லை புனித தன்மை வாய்ந்தது தொடர்ந்து இறை தன்மையில் இயங்குகிறது அனைத்து உயிர்களின் தோற்றுவித்தல் வளர்த்தல் பாதுகாத்தல் என்று செயல்களை புவிக்கோளுமே செய்கிறது ஆகையால் புவிய அடிப்படையில் கண்களுக்கு தெரிந்த கடவுள் அவற்றை வணங்குவதும்கடவுளுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை அதற்கு கொடுப்பது மானுடத்தின் கடமை என்கின்றனர். அதனால் சூழலில்பெண்ணியத்தில்இயற்கையைஆன்மீகத்துடன் இணைந்து தத்துவார்த்த நிலையில் உரையாடி வருகின்றனர்.

"அருவாய் வந்து
பேரருவாய்எழுந்து
மனிதச் சட்டையை உரிந்து
தெய்விகம் என்ன காண்கிறாய்?
தெய்வதம்என்றா சொல்கிறாய்?"

(இரா.மீனாட்சி,மீனாட்சி கவிதைகள்,ப.47)

என்ற கவிதை வரிகளில்ஒரு சிறிய நீர்த்துளி அருவியாய், அதன் பின் பேரருவியாய் பாய்வதைப் போல, மனிதனும் பிறப்பிலிருந்துமுதிர்ச்சிவரை இயற்கையின் விதிப்படி பாய்கிறதுஎன்கிறார் மீனாட்சி.இந்தக் கவிதை மனிதன் இயற்கையைவிட்டுவிட்டுசமூகச் சட்டை, மதம், பாசாங்கு ஆகியவற்றை அணிந்து கொண்டால் உண்மையான தெய்வீகத்தை காண முடியாது என்பதைச்சுட்டிக்காட்டுகிறது. இயற்கை மற்றும் மனிதனின் இயல்பே உண்மையான தெய்வம்; புனைவு தெய்வங்கள் அல்ல

"உரத்து அழும் குரல்களைத்
தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கின்றசுவரில்
வேண்டுதலை எழுதி
சுவரில் இடுக்கில் வைத்து
மன்றாட்டுதலை நிறைவேற்ற
தாவீதுவரவேண்டுமென கண்ணீர் வடிக்கின்றேன்"

(சக்தி ஜோதி காற்றில் மிதக்கும்நீலம், ப.16)

இந்தக் கவிதை சாலமோன் கோவிலின் மேற்குச் சுவர் *(Western Wall)* பற்றிக்கூறுகிறது. அது யூதர்கள்புனிதமாகக் கருதும் "அழுகைக் கோட்டை" *(Wailing Wall).*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

அங்கே அவர்கள் தமது வேண்டுதல்களை சிறு காகிதங்களில் எழுதி சுவரின்இடுக்குகளில் வைக்கிறார்கள். கவிஞர் தன்னுடைய கண்ணீர், வேண்டுதல், வரலாற்று வலி, மரித்தோரின்நினைவுகளைச் சுவரில்இணைக்கிறார். கவிஞர் புவியையும், வரலாற்றையும், நினைவுகளையும் ஒன்றிணைத்து புனிதமாக உணர்கிறார். புவி தானே ஒரு கோவில்; சுவர் தானே தாயின் மார்பாகி மனித துயரைஏற்றுக்கொள்கிறது.இந்த கவிதையைப் போன்றே தமிழச்சி தங்கபாண்டியனின் கவிதையும்,

"அங்கீகாரம் வேண்டாத
ஒரு யாத்ரீகனாய்
எத்தனை பருவங்களை
இந்த ஊரில்கடந்திருக்கிறாய்
ஒரு பருக்கைகூடத்தராத
இந்த வாசல்களுக்கு
உன் கவிழ்ந்த இமைகள்
கருணையைப்போதிக்கின்றன"

(தமிழச்சி தங்கபாண்டியன் வனபேச்சி, ப.87)

வாழ்க்கையை ஒரு யாத்திரையாகக் காட்டுகிறது. மனிதன் உலகில் வரும் பயணி; புகழோபாராட்டோ தேடாமல் தனது பாதையைத் தொடர்கிறான். குளிர், வெயில், மழை என பருவங்கள் மாறினாலும், யாத்ரீகன் தனது பாதையை நிறுத்துவதில்லை. அதுபோல ஆன்மீக பயணத்தில் பல சோதனைகள், துன்பங்கள், மாற்றங்கள் வந்தாலும், பயணி தனது உள்ளார்ந்த தேடலைத் தள்ளிவைக்க மாட்டான்.இமைமூடுவதுதியானத்தின் அடையாளம். உலகின் வாசல்கள் மூடப்பட்டாலும், உள்ளார்ந்த பார்வை திறந்தால் கருணை வெளிப்படும். இந்தக் கவிதை வாழ்க்கை என்பது ஒரு யாத்திரை; அங்கீகாரம், புகழ், செல்வம் என எதையும் நாடாமல், ஆன்மீகக்கருணையை உலகிற்கு வழங்குவதே உயர்ந்த நிலை என்பதை உணர்த்துகிறது.

தாய் வழி சமூகத்தைமீளாக்கம் செய்தல்:

மனிதன் தோன்றிய தொடக்க காலத்தில் இனக்குழுவாழ்கையில்தாயும் உங்களிடம் வகுத்தால் குழுவை நடத்திச் செல்லும் அதிகாரம் அவரிடமே இருந்தது ஏனென்றால் ஒரு குழுவிற்கு தந்தை யார் என்று தெரியாது. தாய் மட்டுமே சந்ததியினர்உறுதியாக தெரியும். உயிர்ச் சங்கிலியின் அடிப்படைகள் அனைத்தும் உணவு தயாரித்தல்,பங்கில், விவசாயம், உடை தயாரித்தல், குடில் அமைத்தல், இயற்கை மதிப்பிடல் அனைத்தும் பெண்கள்தான் நீண்டகாலம் வேளாண்மை செய்து வந்தனர்.

"உலகின்
உயிர்கள் மொத்தமும்
அச்சிறுவெண்கிழங்காய்
திரண்டு
தன் கைகளில் தவழ்வதாக
உளம் நிக்கிற
அவள்
கண்களில் திரண்டு வழிந்தது
வேறு கண்ணீர்"

(சக்தி ஜோதி, கனவின் முற்றத்தில் தரையிறங்கும் தாரைகள், ப.10)

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற வரிகளிலிருந்து பெண் மனிதன் தனக்கு மட்டும் அல்லாதுசுற்றியுள்ள இயற்கை மற்றும் உயிர்களுக்கெல்லாம் தாயாக நிற்பதைவெளிப்படுத்துகிறது.சக்தி ஜோதியைப் போன்றே தமிழச்சி தங்க பாண்டியனும் தன்னுடைய விதை நெல் என்ற கவிதையில்,

"ஒரு இரக்கபொழுதில்
எனக்காய் இரைக்கப்பட்ட தானியங்களை
விடியும் வரை
எப்படியேனும் பத்திரப்படுத்த வேண்டும்
விதை நெல்லாய் தான் ஒளித்து வைத்திருக்கும் உன் நினைவு .
உன் நினைவைமட்டுமாயினும்"

(தமிழச்சி தங்கபாண்டியன் வனப்பேச்சி, ப.33)

இந்த கவிதைமனித வாழ்வின் அடிப்படை ஆதாரமாகத் தானியம் அமைகிறது என்பதை மட்டுமின்றி, பெண்ணின் வாழ்வில் மிகச் சிறிய அன்பும் இரக்கமும் அவளுக்கு பெரும் உயிர்நாடியாக இருப்பதைக் குறிக்கின்றன. ஆனால் அந்தத் தானியங்கள் போன்று அந்த இரக்கமும், அன்பும் ஒரு நாள் முழுவதும் போதாததாகவும், காலவரையறையுடனும் இருப்பதை கவிதை உணர்த்துகிறது.

இயற்கையும் பெண்மையும்:

இயற்கையும் பெண்ணும் வேறு வேறு இல்லை இரண்டும் ஒன்று இரண்டையும் அடிமைப்படுத்துவதால் தான் அனைத்து விளைவுகளும் ஏற்படுகின்றன. ஆண்களிடமிருந்து இரண்டையும் மீட்டெடுக்க வேண்டும்.

பெண் உடலின் அமைப்பு பஞ்ச பூதங்களின் பேரமைப்போடு இயல்பாகப் பொருந்துவது மண் மரம் மழை காற்று நீர் என இயற்கை வழிகளோடு பெண்ணின் உடலில் கூறுகளை ஒப்பிட்டு விவாதித்து வருகின்றனர்.

"கொந்தளிக்கும்குமிழிகள்
"ஓரப்பாறைகளில்மோதிச்சிதறும் உரசலில்
தன்னைக் காத்துக்கொள்கிறாள்
காற்றின் பேரலைவில்
எல்லையற்றுவிரிகிறது
உடலுக்குள் கடல்"

(சக்தி ஜோதி, மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்,ப.11)

ஒரு பெண்ணிற்கு எவ்வளவு பெரிய துன்பங்கள் வந்தாலும்மன வலிமையுடன் இருக்க வேண்டும்.பெண் எதிர்கொள்ளும் போராட்டங்கள் கடல் அலைகள் போல் கொந்தளிக்கின்றன; ஆனால் அவள் அந்த அலைகளின் நடுவே தன்னைத்தற்காத்து, எல்லையற்ற சுதந்திரமும்உயிர்ப்பும் கொண்ட கடலாகவிரிகிறாள்.அலைகளின் மோதலில் சிதறும்குமிழிகளைப் போல பெண்ணின் உணர்வுகளும்வலியும்சிதறுகின்றன.காற்றின் பேரலைபோன்று பெண்ணின் உள்ளார்ந்த உணர்வுகள், சுதந்திரக்கனவுகள், வாழ்வாதார ஆற்றல்கள் எல்லையற்றதாகவிரிகின்றன என்பதைக் குறிக்கிறது. கடல் என்பது ஆழமிக்கதும்முடிவில்லாததுமாக இருப்பது போல, பெண்ணின் உடலும்மனதும்அளவற்ற சக்தி, உயிர்ப்பு, ஆகியவற்றின் அடையாளமாகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

“கட்டுவிரியன் தோலெனக் கரிசல் மண்
வெடிக்கத் துவங்கி விட்டது
கண்மாயோசெங்கற்சூளைப்
பணிப்பெண்ணின் குதிகால் வெடிப்பாய்
குறுகிக்கடுத்துக்கிடக்கின்றது
நெடுங்கால்கொக்குகளும்சிற்றலகுமைனாவும்
நீர். அருந்தும் அம்மாத்தூரணியும்
அயலூர் விருந்து முடித்தஅடுப்பைப்போலச்
சோம்பிச்சுருண்டிருக்கிறது”

(தமிழச்சிதங்கபாண்டியன், அவளுக்கு வெயில் என்று பெயர்,ப.93)

தமிழச்சிதங்கபாண்டியன் தன்னுடைய செலவும் செல்லையும் என்ற கவிதையில் ,மண்ணோவளமற்று வெடிக்கத் தொடங்கிவிட்டது கண்மாயில் நீர் வளம் இல்லாமல் கிடக்கின்றது. ஊரணியில் நீர் அருந்தும் கொக்குகளும்மைனாவும்நீரில்லாமல் சோம்பி கிடக்கின்றன. நிலத்தின்துன்பத்தையும் பெண்ணின் உழைப்புத்துன்பத்தையும் ஒரே சமவெளியில் நிறுத்துகிறது. இயற்கை வறட்சியால் பிளந்தால், பெண்ணும் உழைப்பால் பிளகிறாள் இந்தக் கவிதை சூழலியல் பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையில் பெண்ணும் இயற்கையும் ஒரே அனுபவத்தில் துன்பத்தையும் சுமையையும் பகிர்கின்றன என்பதை வலியுறுத்துகிறது

“என் காலடி சுவடுகள்
சில இடங்களில்
அழுத்தமாய்ப்பதிகிறது
நிலவை மறந்துவிட்டு
பூமியின் சில
புகை மண்டலங்களை
நோக்கி திரும்பும் போது
என் கால்களின் ஈரம்
உலர்ந்து போகிறது”

(தாமரை, ஒரு கதவும் கொஞ்சம் கள்ளி பாலும்,ப.55)

தாமரையின் இந்த கவிதையில் ஒரு பெண்ணின் பாதச்சுவடுஅழுத்தமாய்பதிகிறது. நிலவை ரசிக்கும் அமைதியான மனதிலிருந்துபூமியை நோக்கிசில புகை மண்டலங்கள் இயற்கையை மாசுபடுத்துவதால் பெண்ணின் நம்பிக்கை மெல்ல மெல்ல வற்றி போவதை குறிக்கிறது.பெண்ணின் அனுபவங்களும் இயற்கையின் நிலையும் ஒன்றோடொன்று இணைந்துபோய், இரண்டும்தொழில் மயமாக்கலாலும் ஆணாதிக்கத்தாலும் சுரண்டப்படுகின்றன.

நவீன வளர்ச்சிகளை எதிர்த்தல்:

தொழில்நுட்பவாதத்தை முற்றிலும் மறுக்கிறதுசூழலியற் பெண்ணியம் நிலம், நீர் ,கனிம வளங்கள் இவற்றை சுரண்டியும் இயற்கை சீரழித்தும் புதிய புதிய திட்டங்களை வங்கிகள், குழும முதலாளியும் நடைபெறுமுறைப்படுத்தி வருகின்றன பெரும் அணைக்கட்டுகள், அணு ஆயுதத்தயாரிப்புகள், பெரும் தொழிற்சாலைகள், நான்குவழிச்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சாலைகள், வணிக வளாகங்கள் போன்றவற்றை சூழலியற் பெண்ணிய வாதிகள் எதிர்க்கின்றனர்.

"இப்போது அவள்
மோட்டார் வாகனப்பந்தயத்திற்குமாறிவிட்டாள்
என்சல்ப்பான் பூச்சி மருந்திற்கு
காலிபிளவர் உள்ள புழுக்கள்செத்துவிடுகின்றன
பாவம் சிட்டுக்குருவிகள் என்ன செய்தன"

(சக்தி ஜோதி காற்றில் மிதக்கும்நீலம்,ப.70)

இந்த கவிதையானது விவசாயத்தை கம்ப்யூட்டர் கேமில் கற்றுக்கொண்டு பின்பு அதிலிருந்து மோட்டார் வாகன பந்தயத்திற்கு மாறிவிட்டாள் காவியா. வேளாண்மையில் இரசாயனபூச்சி மருந்துகளின் பயன்பாடு இயற்கைச்சுழற்சியைசீர்குலைக்கிறது. புழுக்கள் அழிந்ததால், அவை உணவாகக்கொண்டிருக்கும் பறவைகள், குறிப்பாக சிட்டுக்குருவிகள், வாழ்வாதாரத்தை இழக்கின்றன. இது மனிதன் உருவாக்கிய தொழில்நுட்ப வளர்ச்சி, உயிரியல் சமநிலையை அழிக்கிறது என்பதைக் காட்டுகிறது. அலைபேசியின் வருகையினால் சிட்டுக்குருவி இனங்கள் அழிகின்றன. இந்தக் கவிதை நவீன வளர்ச்சி சூழலியல் சீரழிவு என்ற முரண்பாட்டைவலியுறுத்துகிறது.

"பந்தயத்திற்கு தயாரான கருங்குதிரையென
உயிரூட்டப்பட்டு இருக்கிறது
உன் செல்பேசி
இணைய சேடிகள் இத்தனை பேர்
தலைமாட்டில்தவமிருந்தும்
இன்னும் உறங்கியோ
மென்பொருள் மின்பாவாய்!"

(தமிழச்சிதங்கபாண்டியன், அவளுக்கு வெயில் என்று பெயர், ப.43)

இந்த கவிதையில் தமிழச்சி தங்கபாண்டியன் அலைபேசியானது அனைவரின் கையிலும் கருங்குதுரை போல் ஓடிக்கொண்டிருக்கின்றது. இணையம் மனிதர்களை ஆட்கொண்டு விட்டது. இயற்கையிலிருந்து விலகிபெண் தொழில்நுட்பபந்தயத்தில் சிக்கி இருக்கிறார். செயற்கை இணைய உலகம் உண்மையான உறவை வழங்காமல், தனிமையை மட்டுமே அதிகரிக்கிறது.பெண் ஒரு மின்பாவாய் போல, மென்பொருள் கட்டுப்பாட்டில் வாழ்கிறாள்.

முடிவுரை:

சூழலியற் பெண்ணியம் பெண்களின் அனுபவங்களையும் இயற்கையின் வலியையும் ஒரே சமவெளியில்வெளிப்படுத்துகிறது. பெண்ணின் உடலும்மனமும் இயற்கையின் பஞ்சபூதங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை என்பதால், பெண்ணின் துன்பம் இயற்கையின் துன்பத்துடன் ஒட்டியிருக்கிறது. இயற்கை மாசுபடும் போதும் பெண் உழைப்பாலும் ஆணாதிக்கத்தாலும் சுரண்டப்படும் போதும், இரண்டின் அனுபவங்கள் ஒன்றோடொன்று கலந்துவிடுகின்றன. தமிழச்சிதங்கபாண்டியனின் வறண்ட நிலப் படிமங்களும், சக்தி ஜோதியின் ஆன்மீக இயற்கை உணர்வுகளும், தாமரையின் பாதச்சுவடு குறிக்கும் வாழ்க்கை அனுபவங்களும்ஆகியவை ஒன்று சேர்ந்து சூழலியற்பெண்ணியக்கோட்பாட்டைஉறுதிப்படுத்துகின்றன. எனவே, பெண்களின்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

விடுதலையும் புவியின் விடுதலையும் ஒன்றாகவே சிந்திக்க வேண்டியுள்ளது. சூழலியற் பெண்ணியம் நிலம், நீர் ,கனிம வளங்கள் இவற்றை சுரண்டியும் இயற்கை சீரழித்தும் புதிய புதிய திட்டங்களை வங்கிகள், குழும முதலாளியும் நடைபெறுமுறைப்படுத்தி வருகின்றன.

துணை நூற்பட்டியல்

1. ந.இரத்தினகுமார், திறனாய்வு கோட்பாடுகளும்பன்முகவாசிப்புகளும், குறிஞ்சி தமிழ் பண்பாட்டு ஆய்வு மையம், மதுரை-625019
2. இரா. மீனாட்சி, மீனாட்சி கவிதைகள்,காவ்யா வெளியீடு,14, முதல் குறுக்க தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை -600024
3. சக்தி ஜோதி, காற்றின் மிதக்கும்நீலம்,வம்சி புக்ஸ், 19 ,டி.எம்.சாரோன், திருவண்ணாமலை-606 077
4. தமிழச்சிதங்கபாண்டியன்,வனப்பேச்சி,உயிர்மைபதிப்பகம், 11/29, சுப்ரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை- 600018
5. சக்தி ஜோதி,கனவின் முற்றத்தில் தரையிறங்கும் தாரைகள், டிஸ்கவரி புக்பேலஸ்,கேகே நகர் ,சென்னை -600078
6. சக்தி ஜோதி ,மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்,டிஸ்கவரிபுக்பேலஸ், கேகே நகர் ,சென்னை -600078
7. தாமரை, ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும், குமரன் பதிப்பகம், 19,கண்ணதாசன் சாலை, தி.நகர் சென்னை -600 017.
8. தமிழச்சிதங்கபாண்டியன், அவளுக்கு வெயில் என்று பெயர்,உயிர்மைபதிப்பகம், 11/29, சுப்ரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை- 600018

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

35. ஆண்டாள் பிரியதர்ஷினியின் "தகனம்" காட்டும் பெண் சமூகம்

திருமதி.மோ.பத்மப்பிரியா
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.
padmapriya@vvvcollege.org - 7094962911
DOI 10.5281/zenodo.17216926.

Abstract:

Summary of the study of the female community that shows the cremation. The aim of the study is to study the lifestyle of the people belonging to the society that is backward in terms of social recognition and economy in the contemporary novel, the cremation The novel is designed to show the courage of a woman, which is the specialty of the novel, the cremation.

Key Words : Novel - Andal piriyadharsini - Female Community - Femenism.

முன்னுரை:

ஆண்டாள் பிரியதர்ஷினியின் 'தகனம்' காட்டும் பெண் சமூகம் என்பதை ஆய்வுப் பொருளாகக் கொண்டு இந்த புதினம் பெண்ணியம் குறித்த கட்டுரையாக இடம் பெறவுள்ளது என்பதை பின்வரும் தலைப்பின் கீழ் காண்போம்.

பெண்ணியம் - விளக்கம்:

சமூகம் என்பது மானுட இனத்தின் கூட்டிணைவைக் குறிப்பதாகும். பெண் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தத் தாய்வழிச் சமுதாயத்திலிருந்து, தந்தை வழிச் சமுதாயத்திற்கு மாற்றம் பெறத் தொடங்கியது முதல் இன்று வரை சமூகத்தில் பெண்களின் நிலை ஒரு கேள்விக் குறியாகவும், வியப்பிற்கு உரியதாகவுமே இருந்து வருகின்றது. பெண்களைப் பற்றிய சமூகத்தின் எதிர்பார்ப்பு ஒரு வரையறைக்குள் உட்படாததாக உள்ளது. அதனால் பெண் குறித்த சமூக மதிப்பு கால மாற்றத்திற்கேற்ப உருமாறிக் கொண்டே இருக்கிறது. இருப்பினும் பெண் ஒரு முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறாள். ஆண்களுக்குச் சமூகப் பொறுப்புக்களும், பெண்களுக்குக் கணவனும் அவனைச் சார்ந்த இல்லறப் பொறுப்புக்களும் உரியவையாகப் பழந்தமிழ்ச் சமூகம் வரையறுத்து வைத்திருந்ததை,

> **"வினையே ஆடவர்க்கு உயிரே**
> **மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே"[1]**

என்ற குறுந்தொகைப் பாடல்வழி அறியலாம். இதனாலே ஆண் சமூகத்தில் முதன்மைப்படுத்தப் பட்டிருக்கிறான். பெண் ஆணைச் சார்ந்து வாழும் ஓர் ஒட்டுண்ணியாக மாற்றப்பட்டிருக்கிறாள். சமுதாயம் என்ற நிறுவனத்திற்கு அடிப்படையாக விளங்குவது குடும்பமாகும். எனவே குடும்பம் என்ற சிறு வட்டத்திற்குள்ளும் சமூகம் என்ற பரந்த பரப்பிற்குள்ளும் பெண்ணின் வாழ்க்கை முறை எங்ஙனம் உள்ளது என்பதையும் அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களை எங்ஙனம் எதிர்கொள்கிறார்கள் என்பதையும் ஆய்வதாய் இவ்வியல் அமைகிறது.

பெண்சிசு:

இன்றைய சமூகத்தில் குழந்தை பிறப்பு என்பது பெற்றோர் மற்றும் சமூகத்தின் மத்தியில் ஒரே மனநிலையை ஏற்படுத்தக் கூடியதாக இல்லை. ஆண் குழந்தையை

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மனநிறைவுடன் ஏற்கும் மனம் பெண் குழந்தையை ஏற்கச் சற்று தயங்கும் நிலையிலேயே உள்ளது.

> **“ஒரு குடும்பத்தில் எத்தனைப் பெண் குழந்தைகள் இருந்தாலும் ஓர் ஆண் குழந்தை இல்லாவிட்டால் அதைப் பிள்ளையில்லாத குடும்பம் என்று சொல்வது வழக்கம்”** [2]

என்று ஜெரி, ‘கண் சிவந்தால் புதினத்தில் கூறியிருப்பது பொருத்தமானதே எனலாம். இதனாலேயே ஒரு வீட்டில் பெண் குழந்தை பிறந்தால் அது அவ்வீட்டுக்கு மன அதிர்வைத் தரத் தக்கதாகவே கருதப்படுகின்றது.

பெண் குழந்தை பிறந்தது முதல் வளர்ந்து திருமணம் முடிக்கும் வரை பெற்றோர்களுக்குப் பொருளாதார அடிப்படையில் சுமையாக இருப்பதாகவே கருதப்படுகிறது. இப்பொருளாதார சுமை நீண்ட காலத்திற்கு மனச்சுமையே விளைவிப்பதே பெண் சிசுக் கொலைக்கு அடிப்படைக் காரணமாக உள்ளது.

குடும்பநிலையில் பெண்கள்:

“கணவனே கண் கண்ட தெய்வம்; கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் போன்ற சொல்லடைகள் பெண்ணடிமைத் தனத்தின் தீவிரத்தைக் காட்டுவதாய் உள்ளன. மேலும் இளம் தலைமுறையினரின் மனத்தில் பெண் தாழ்ந்தவள். ஆண் மேலானவன் என்ற எண்ணம் ஆழப் பதியச் செய்கிறது. இத்தகைய எண்ணங்கள் அடுத்தத் தலைமுறையினரையும் பாதிக்கக் கூடியதாகும்.

பெண்ணடிமைத்தனம் வெளி உலகிற்குப் பரவலாகத் தெரியா வண்ணம் ஆண் வர்க்கத்தால் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது. மேம்போக்காக பார்த்தோமேயானால் குடும்பம் என்ற நிறுவனத்தில் பெண் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருப்பது போன்று இருக்கும். ஆனால் அவள் அடிமை நிலையிலேயே இருக்கின்றாள். நாளும் சந்தேகம் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

பெண்களும் - சமுதாயமும்:

சமுதாயம் என்பது மக்கள் பலர் சேர்ந்த கூட்டமைப்பாகும். இக்கூட்டமைப்பில் பெண்களின் பங்கு மிக இன்றியமையாததாகும். தனி மனிதர்கள் பலர் சேர்ந்து வாழும் போது அது சமுதாயமாகிறது.

> **“சமூகத்தில் தனிமனிதன் ஓர் அங்கம் ஆவான். ஆதலால் சமூக உறவுகளில் தனிமனிதரது. பங்கையும், சமூக அமைப்பையும் கலைஞன் நுணுக்கமாக அணுகுதல் வேண்டும்.”** [3]

என்று கனகசுந்தரம், ஜெக சிற்பியின் சமூக புதினங்கள் என்ற நூலில் குறிப்பிட்டிருப்பது நோக்கத் தக்கதாகும்.

நகரவாழ்வில் மகளிர் படும் துன்பங்கள் தாய்மையின் நிலை, வரதட்சணைக் கொடுமை மற்றும் கைம்பெண்களின் நிலையைக் கொண்டு பெண்களின் நிலை இன்றளவும் அறுதாபத்திற்குரியதாகவே இருக்கின்றது என்பதை அறியலாம்.

இன்றைய நிலையில் பெண்களின் நிலை:

பெண்கள் சமுதாயத்தில் உயிர்நாடி ஆவர். அவர்கள் எங்கும் நீக்கமற நிறைந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு ஏற்றம் கொடுப்பதும் சிறப்பு கொடுப்பதும் சமுதாய மரபாகும் என்பதை பெண் மிகவும் மென்மையானவள். மிக எளிதில் உணர்ச்சி வயப்பட்டு விடுபவளாக படைப்பிலக்கிய ஆசிரியர்களால் காட்டப்படும் பெண்கள் அந்த

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

உணர்ச்சியிலிருந்து வெளிப்பட்டு விரைவில் விடுபட்டு அறிவின் துணை கொண்டு வாழ்கின்றனர்.

பெண்களின் அடிமைத்தனம்:

பெண், குடும்பம் என்ற அமைப்பினுள் ஆணிற்கு அடிபணிந்து அவனது விருப்பப்படி நடக்க வேண்டியுள்ளது. பெண்ணடிமைத்தனம் இன்றைய நாகரீக சமுதாயத்திலும் கூட மிக கொடுமையாக நிலை கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

> **"காலம் காலமாகப் பெண்களைப் பெண்களாகப் பார்க்கும் பார்வை சமுதாயத்தில் இல்லாமல் போயிற்று. அவர்களை அடிமைகளாக பார்க்கும் பார்வை ஏற்பட்டு விட்டது"[4]**

என்று இரா. பிரேமா கூறுவது பொருத்தமானதே எனலாம். இதனாலேயே,

> **"பெண்ணடிமை தீரும்மட்டும் பேசுந்திரு நாட்டு**
> **மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற் கொம்பே"[5]**

என்று பாரதிதாசன் அன்றே குறிப்பிட்டுள்ளார். ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள புதினத்தில் பெண், தான் எதிர்கொள்ளும் இடர்பாட்டையும் மீறி துணிந்த மனத்துடன் நிகழும் அவளது மனப்போராட்டம் குறித்தும் பெண் சமூகத்தின் அவலத்திற்கானத் தீர்வுகள் குறித்தும் இக்கட்டுரையானது இடம் பெற்றுள்ளது.

பெண் சமூகம்:

மனிதர்கள் இன்றைய உலகில் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் கட்டாயச் சூழலில் உள்ளனர். புதினத்தின் கதை களமாகத் தாழாங்குப்பம் உள்ளது. அதில் கோவிந்தமாள் மற்றும் முனியம்மாளின் குடும்பத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவ்விருவரது குடும்பத்திற்கு உறவுக்காரப் பெண் மாரியம்மாள் என்பவரும் இக்குப்பத்திலேயே வசித்து வருகின்றாள். இவர்களைச் சூழ்ந்த கதைக்களத்தில் மக்கள் பலர் அங்கே வாழ்ந்து வருகின்றனர்.

கோவிந்தம்மாளின் வாழ்க்கைச் சூழல்:

கோவிந்தம்மாளின் குடும்பமானது ஆண் துணையில்லா குடும்பம் ஆகும். இருப்பினும் அவ்வீட்டிற்குச் சிறந்த ஆண்மகனைப் போல, மூத்தப் பெண் சின்னப் பொண்ணு குடும்பத்தின் ஆணிவேராய் இருந்து குடும்பச் சுமையைத் தாங்குகிறாள். சரசு சின்னப்பொண்ணுவின் இளைய தங்கையாவின் இவள் வீட்டில் தாய்க்கு உறுதுணையாக இருந்து வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்ளக் கூடியவள் ஆவாள்.

தாய் கோவிந்தாம்மாளால் எவ்வித வேலையும் மேற்கொள்ள இயலாததால் சரசுவே கவனித்துக் கொள்ள வேண்டிய கட்டாயமாகும். சின்னப்பொண்ணு அக்குடும்ப நலனுக்காக வேலைக்குச் சென்று விடுவாள். வேலையென்பது இவள் செய்யும் தொழிலுக்கு பெரிதான ஒன்றாகும். அப்படி என்ன வேலைக்குச் செல்கிறாள் என்று பிறர் நினைக்கலாம். அவள் மேற்கொண்டிப்பது சடலங்களை எரிக்கும் வெட்டியான் தொழிலாகும். பொதுவாக ஆண் மட்டுமே கவனித்து வந்த பணியாகவே வெட்டியான் பணி இருந்தது. ஆனால் குடும்பத்தின் பொருளாதாரச் சூழலை மனத்திற் கொண்டு உடலாலும், மனத்தாலும் இறுக்கம் கொண்டே இருப்பது இப்பணியை மேற்கொண்டு இருந்தார். தந்தை இல்லாததால் குடும்பப் பொறுப்பு சின்னப் பொண்ணுவின் கரங்களில் இருக்கிறது. உடல் மற்றும் தங்கைகளின் அன்பிற்காகவும் ஊரார் தன் குடும்பத்தை ஏளனமாகக் காணாது வியந்து காண வேண்டும் என்ற எண்ணம் கொண்டவளாகவும் உள்ளாள். அதற்கு அவளது துணிவான எண்ணமும், சமயோகிதே சிந்தனையுமே பக்கபலமாகவும் உறுதுணையாகவும் உள்ளது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சின்னப் பொண்ணுவின் வாழ்க்கைப் போராட்டம்:

தந்தை இல்லாத தாய் மற்றும் இரண்டு தங்கைகளுடன் போதுமான வருவாயுமின்றி ஏழ்மைச் சூழலியே சின்னப் பொண்ணுவின் வாழ்க்கை கழிந்தது. ஆண் துணையின்றி வாழ்வாதார நிலையும் சரிவர இல்லாத நிலையில் சின்னப் பொண்ணுவின் மன தைரியமும், உறுதியான எண்ணமுமே அக்குடும்பத்தை இயங்கச் செய்கிறது. தந்தையின்மையும் வறுமைச் சூழலும் சின்னப் பொண்ணுக்குப் பல பொறுப்புகளை வாரி வழங்கியது. குடும்பச் சூழலை கருதியே வெட்டியான் தொழிலை செய்யத் துணிந்தாள். சின்னப் பொண்ணு, இத்தொழில் இழிவானது என்றோ, சமூக அவமரியாதையாக கருதுமோ என்றெல்லாம் யோசிக்கக் கூட நேரம் இல்லை. பெண்களின் ஆதிக்கமே இல்லாத தொழிலான வெட்டியான் தொழிலில் ஆணுக்கு இணையாக ஈடுபடத் தொடங்கினாள்.

மனத்தளர்ச்சியின்மை, வாய்தூநாற்றம் பிண எரிப்புகள் மற்றும் அதன் கோரத் தோற்றம் என அனைத்தையும் சகித்துக் கொள்ளும் பண்பையும் கொண்டவளாய் தன்னை சின்னப் பொண்ணு மாற்றிக் கொண்டாள்.

சின்னப் பொண்ணுவின் மதி நுட்பம்:

சின்னப் பொண்ணு, தன் குடும்பச் சூழ்நிலையை மனத்தில் எண்ணிக் கொண்டவளாய் தொழிலில் முழு ஈடுபாட்டுடன் செயல்படுகிறாள். கல்வி வளர்ச்சியும், பொருளாதார சுதந்திரமும் நிலவும் சமூகத்தில் கூட இன்னும் பெண் சுதந்திரம் காணப்படவில்லை.

போட்டியும், பொறாமையும் நிறைந்த இன்றைய கலைச் சூழலில் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொருவரது வாழ்விலும் போராட்டம் என்பது தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. வாழ்க்கையைச் சுகமானதாகவும் சோகமானதாகவும் பரிணமிக்கச் செய்கிறது.

> **“விடுதலைக்கு மகளிரெல் லோரும்**
> **வேட்கை கொண்டனம் வெல்லுவமென்றே”**[6]

என்ற பாரதியாரின் கவிதையின் கூற்றுப்படி, பெண்கள் தங்கள் அடிமைத் தளையிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும்.

பெண்களின் இளமைப் பருவம்:

சின்னப் பொண்ணு பொண்ணினத்திற்கு ஒரு முன்மாதிரியாக உள்ளாள். அதற்கு நேர் எதிராக இராணியின் வாழ்க்கை முறை உள்ளது. அவள் தனது குடும்பப் பொருளாதார நிலை சமூக அங்கீகாரம் போன்றவற்றைச் சற்றும் சிந்திக்காது. மனம் போன போக்கில் போகக் கூடியவளாக உள்ளாள்.

சமூகத்தில் பெண்ணின் துணிவு:

சின்னப் பொண்ணு சுடுகாட்டில் வெட்டியான் தொழில் செய்பவள் ஆவாள். யாருக்கும் இல்லா துணிவாள எண்ணத்துடன் சின்னப் பொண்ணு இத்தொழிலை சாதாரணமாக செய்கிறாள். பெண்களைச் சுடுகாட்டிற்குள் வர அனுமதித்தில்லை. இதைக் கண்ணதாசரின்,

> **“வீடுவரை உறவு**
> **வீதிவரை மனைவி**
> **காடு வரை பிள்ளை**
> **கடைசி வரை யாரோ”** [7]

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இறுதி மரியாதை செய்வதற்கே பெண்கள் அனுமதிக்கப்படாத இடத்தில் இறுதிவரை பிணத்தை எரிக்கும் தொழிலைச் சின்னப்பொண்ணு செய்கிறாள்.

பெண்ணின் வீரம்:

சங்க காலத்தில் இருந்து இன்று மனித வாழ்க்கையே, அகம், புறம் என்ற வகைகளுக்குள்ளே அடக்கி விடலாம். ஆனால் அக வாழ்க்கையில் பெண்கள் ஈடுபட்ட அளவிற்கு புறவாழ்க்கையில் அவர்களின் பங்கு பெரிதாகப் படைப்புகளில் பேசப்படவில்லை. ஆனால் தகனம் பெண்ணை ஒரு கதைக்களத்தில் வெட்டியனாகக் காட்டுகின்றது. ஒரு பெண் இத்தொழிலை துணிந்து செய்கிறாள் என்பது அவளின் வீரமாகும்.

முடிவுரை:

மனித இனத்தின் சரிபாதியாய் இருக்கும். பெண் குடும்பத்தில் முக்கியத்துவம் பெற்றவளாய் உள்ளாள். சமூகக் கட்டமைப்பு மற்றும் சமய கட்டுமானத்தின் காரணமாக பெண்ணினம் பொருளாதார நோக்கில் சுமையாக உள்ளது. பிறருக்காகவும், பகட்டுக்காகவும் மனிதன் தன் வாழ்க்கைச் சூழலை மாற்றியமைத்து, அவனது அழிவை நிர்ணயிக்கும். இன்றைய வாழ்க்கைச் சூழலில் இவ்வேலை ஆண்கள் பார்க்க வேண்டியது. இவ்வேலை பெண்கள் பார்க்க வேண்டியது என்ற பாகுபாடு உடைத்தெறியப்பட்டு விட்டது என்பதை சின்னப் பொண்ணு கதாப்பாத்திரத்தின் வழி அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்:

1. குறுந்தொகை பக், *135*
2. ஜெரி, கண் சிவந்தால் நாவல், ப. *28*
3. வெ.கனகசுந்தரம், ஜெக. சிற்பியனின் சமூக புதினங்கள் ப.*133.*
4. இரா. பிரேமா, கற்பு கலாச்சாரம் ப.*84.*
5. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப.*54.*
6. பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.*138.*
7. கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள் ப.*87.*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

36. உளவியல் பார்வையில் நா. முத்துக்குமார் கவிதைகள்

முனைவர் அ. நஸ்ரின் *MA.,M.Phil.,P.hD.,NET.,SET*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் -05
DOI 10.5281/zenodo.17216966.

Abstract:

We are the ones who can work with both mind and knowledge. Only the good of us will be mindful. Knowledge will make us a permanent benefit. That is why we refer to the man who listens to the mind and the Siddhartha is the man who listens to the knowledge of the paranoia. Psychology is the basis for the functioning of mind or knowledge. In such a psychological purpose. The study article is that Muthukumar examines how they are running.

Key Words : Psychology, God, Love, Good Train, Saloon Mirror.

முன்னுரை

மனம் மற்றும் அறிவு இவை இரண்டால் இயங்கக்கூடியவர்களே நாம். நமக்கான அப்போதைய நன்மையை மட்டுமே மனம் செய்யும். அறிவோ நமக்கான நிரந்தரமான நன்மையைச் செய்யும். அதனால்தான் மனதினைக் கேட்டுப் பயணிப்பவனை மனிதன் என்றும் சித்தாகிய அறிவினைக் கேட்டுப் பயணிப்பவர்களைச் சித்தர் என்றும் குறிப்பிடுகின்றோம். மனமாக இருந்தாலும் அறிவாக இருந்தாலும் இவை இயங்குவதற்கு உளவியல் என்ற ஒன்றே அடிப்படையாக அமைகின்றது. இத்தகைய உளவியல் நோக்கில்

நா. முத்துக்குமார் அவர்கள் எவ்வாறு இயங்குகிறார் என்பதை ஆராய்வதாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

நா. முத்துக்குமார்

பிறந்தது 1975ல். காஞ்சிபுரம் அருகில் உள்ள கன்னிகாபுரம் சொந்த ஊர். காஞ்சி பச்சையப்பனில் இளங்கலை இயற்பியல் பட்டமும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை தமிழ் இலக்கியப் பட்டமும். சென்னைப் பல்கலைக் கழகத்தில் திரைப்பாடல் ஆய்விற்காக முனைவர் பட்டமும் பெற்றவர். "தூசிகள், பட்டாம்பூச்சி விற்பவன், நியூட்டனின் மூன்றாம் விதி, குழந்தைகள் நிறைந்த வீடு, பச்சையப்பனில் இருந்து ஒரு தமிழ் வணக்கம், கிராமம் நகரம் மாநகரம், கண்பேசும் வார்த்தைகள், பாலகாண்டம், அனா ஆவன்னா, என்னை சந்திக்க கனவில் வராதே, அணிலாடும் மூன்றில், வேடிக்கை பார்ப்பவன்" ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது கவிதைகள் ஆங்கிலம், மலையாளம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இலயோலா கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக் கழகம். பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், இந்திராகாந்தி பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பாடத்திட்டமாக வைக்கப்பட்டுள்ளன. பட்டாம்பூச்சி விற்பவன் தொகுப்பிற்காக 1997ம் ஆண்டின் ஸ்டேட் பேங்க் விருது பெற்றுள்ளார். திரை இசை பாடல்களுக்காக இந்திய அரசின் தேசியவிருதுகளை இரண்டு முறை பெற்றிருக்கிறார். பிலிம் ஃபேர் விருதும், தமிழக அரசின் கலைமாமணி, சிறந்த பாடலாசிரியர் விருதுகளும் பெற்றுள்ளார்.

உளவியல்

பூகோளவியல் எப்படி பூமி பற்றிய சாஸ்திரம் சொல்லித் தருகிறதோ, அப்படித்தான் உளவியல் என்பது நம் மனம், ஆன்மா பற்றிச் சொல்லித் தருகின்றது. மனதின்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

செயல்களை நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் முறைதான் உளவியல் என்றாகின்றது. பொதுவாக உளவியலைப் படைப்பாக்க உளவியல், படைப்பாளியில் உளவியல், படைப்பின் உளவியல் படிப்பாளியின் உளவியல் என்று நான்கு வகையாகப் பிறிப்பார். இந்த நான்குக் கூறுகளும் பல்வேறு பரிமாணங்ளில் இலக்கியங்களில் வெளிப்படும். நா. முத்துக்குமார் கவிதைகளிலும் இவை எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதை ஆராய்வதாகக் கட்டுரை அமைகின்றது. மனிதனின் மனத்தினை எது வருத்துகின்றதோ அதனை அறிவதுதான் உளவியல் என்று உளவியல் அறிஞர் போட்கோ குறிப்பிடுவதை,

> **"உள நலம் குன்றினால் மனிதன் மனநோயாளியாகி விடுகின்றான். இங்கே வருவதுதான் உளவியல். அவன் மனதை எது வருத்துகின்றது என்ற மூலம் அறியப்படும் வரை, இந்த மன நோயாளி வாழ்வு நரகந்தான்!" போட்கோ- உளவியல் நெறிகள் ப-*24*

என்ற வரிகளில் மூலம் உணர முடிகின்றது.

நா. முத்துக்குமார் கவிதைகளில் உளவியல்

கடவுள் சார்ந்த உளவியல்

கடவுளும் மனிதனும் எவ்வளவுக்கு எவ்வளவு நெருக்கமாக இருந்தாலும் நாம் சார்ந்த கணக்குகளைக் கடவுள் போடும்போது மட்டும் ஒவ்வொரு முறையும் நம்மை விஞ்சுபவராகவே கடவுள் இருக்கிறார் என்ற கடவுள் சார்ந்த உளவியல் கூறுகளை மிகவும் அழகாகப் பதிவு செய்கின்றார் ஆசிரியர். நாம் நினைப்பது ஒன்று. கடவுள் நமக்கு வழங்குவது வேறொன்று. இன்னும் குறிப்பாக கூறவேண்டுமானால் நாம் நினைப்பதையெல்லாம் கடவுள் நமக்குத் தரமாட்டார். ஆனால் நமக்குத் தேவையானவற்றை நிச்சயம் தருவார் என்ற அடிப்படையில் கடவுளை நாம் அணுக வேண்டும் என்பதே உண்மை. ஒவ்வொரு முறையும் கடவுளிடம் நாம் தோற்றுப்போகும் இத்தகைய உண்மையை,

> **"கடவுளுடன் சீட்டாடுவது**
> **கொஞ்சம் கடினமானது**
> **எவ்வளவு கவனமாக இருந்தாலும்**
> **பார்க்காமலே அறிந்துக்கொள்கிறார்"**
>
> **நா. முத்துக்குமார் - துளிப்பாக்கள் ப-***22*

என்ற கவிதை வரிகளில் விளக்குகின்றார்.

காதல் சார்ந்த உளவியல்

காதல் என்பது உலக உயிரினங்கள் அனைத்திற்கும் பொதுவானது. அதற்கு தனியாக யாரொருவரும் சொந்தம் கொண்டாடக் கூடாது என்பதற்காகத்தான் அகம் சார்ந்த உணர்வுகளுக்கு ஒருவர் சுட்டிப் பெயர்கொள்ளக் கூடாது என்று,

> **"மக்கள் நுதலிய அகனைந் திணையும், சுட்டி ஒருவர்ப்**
> **பெயர்கொளப் பெறாஅர் "**
>
> **(தொல்.பொருள்.அகத்.** *54)*

என்ற வரிகளைக் கொண்டு தொல்காப்பியரும் விளக்குகிறார்.

காதல் உன்பது உள்ளம் சார்ந்தது. ஒருவர் உள்ளம் மட்டும் அல்ல. இருவர் உள்ளமும் சார்ந்ததே காதல். இந்தக் காதல்வயப்பட்டால் ஒருவன் என்னென்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதைப் பட்டாம்பூச்சி விற்பவன் என்ற தன்னுடைய கவிதை நூலில்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மிகவும் அழகாக எடுத்ததுரைத்துள்ளார். நாம் நாமாகவும் இயங்கமுடியாமல், நம்மை இயக்குபவர் யார் என்பதையும் புரிந்துகொள்ள முடியாமல் மூளையைக் கழற்றி வைத்துவிட்டு முட்டாளாய்த்தான் வாழவேண்டும் என்னும் காதல் சார்ந்த உளவியலை,

"காதலித்து கெட்டு போ.
அதிகம் பேசு
ஆதி ஆப்பிள் தேடு
மூளை கழற்றி வை
முட்டாளாய் பிறப்பெடு
கடிகாரம் உடை
காத்திருந்து காண்
நாய்க்குட்டி கொஞ்சு
நண்பனாலும் நகர்ந்து செல்
கடிதமெழுத கற்றுக்கொள்
வித,விதமாய் பொய் சொல்
விழி ஆற்றில் விழு
பூப்பறித்து கொடு
மேகமென கலை
மோகம் வளர்த்து மித
மதி கெட்டு மாய்
கவிதைகள் கிறுக்கு
கால்கொலுசில் இசை உணர்
தாடி வளர்த்து தவி
எடை குறைந்து சிதை
உளறல் வரும் குடி
ஊர் எதிர்த்தால் உதை
ஆராய்ந்து அழிந்து போ
மெல்ல செத்து மீண்டு வா"

நா. முத்துக்குமார் - துளிப்பாக்கள் ப-*53*

என்ற நீண்ட வரிகளைக் கொண்டு படம்பிடித்துக் காட்டுகின்றார்.

வாழ்வியல் சார்ந்த உளவியல்

நாம் எவ்வளவுதான் உயரத்திற்குச் சென்றாலும் நம்முள் இருக்கின்ற குழந்தைத் தனமே நம்மை இன்னும் வாழவைத்துக்கொண்டிருக்கின்றது. இந்தக் குழந்தைத்தனம்தான் இறைமையோடு நம்மை இணைப்பது. ஏனெனில் எல்லா மதங்களிலும் உள்ள இறைமையும் இதைத்தான் விரும்புகிறது. நாம் அன்றாடம் தொடர்ந்து செய்கின்ற நம்முடைய தொழிலைக் கூட குழந்தைத்தனம் நிறைந்ததாக மாற்றிக்கொள்ளும்போது அதில் உள்ள பளு தெரியாது. சில நேரங்களில் நம்முடைய செயல்களுக்குப் பதில் வரலாம். பலநேரங்கள் நம்முடைய செயல்கள் மதிக்கப்படாமல் கூடப் போகலாம். இதற்காக நாம் சோர்வடைந்து விடக்கூடாது என்ற வாழ்வியல் சார்ந்த உளவியலை,

"குழந்தைகள்
கை காட்டாத
கூட்ஸ் ரயிலில் இருந்து
கொடியசைத்துப் போகிறான்
கடைசிப் பெட்டியில் கார்டு." **நா. முத்துக்குமார் கவிதைகள் -ப *55*ப**

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற வரிகளைக்கொண்டு படம்பிடித்துக்காட்டும் கவிஞரின் சொல்லாற்றல் இன்புறத்தக்கது.

இந்தப் பிரபஞ்சம் நாம் இருந்தால்தான் இயங்கும் என்றும் நம்மால்தான் இயங்குகிறது என்றும் வரட்டுப் பிடிவாதம் பிடித்துக்கொண்டு இருப்பவர்களுக்கு மிகவும் அருமையான புரிதலை உண்டாக்கியுள்ளார். ஆசிரியர்.நாம் இருந்தாலும் இந்த உலகம் இயங்கும், நாம் இல்லை என்றாலும் இயங்கும்,வேண்டுமானால் நம்மையுமே இயக்கும் என்ற உலக உண்மையை,

பிம்பங்களற்ற தனிமையில்
ஒன்றிலொன்று முகம் பார்த்தன
சலூன் கண்ணடிகள்."

நா. முத்துக்குமார்- பட்டாம்பூச்சு விற்பவன் - ப*34*

என்ற வரிகளில் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

மரணம் என்ற ஒன்று ஒருமுறைதான் வரும். அதுவும் நமக்குத் தெரிந்ததாக இருக்க வேண்டும் என்று நம் மனம் விரும்பும் உளவியல் சார்ந்த செய்தியைக் குழந்தைகள் நிறைந்த வீடு என்னும் தன்னுடைய கவிதைத் தொகுப்பில் மிகவும் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர். மரணம் குறித்து ஒவ்வொரு கவிஞரும் ஒவ்வொரு முறையில் விளக்கும் வேலையில் கவிஞர் நா. முத்துக்குமார் அவர்களோ,

"இறந்துபோனதை
அறிந்த பிறகுதான்
இறக்க வேண்டும் நான்!"

நா. முத்துக்குமார்- குழந்தைகள் நிறைந்த வீடு- ப*72*

என்ற கவிதை வரிகளில் விளக்குகிறார் கவிஞர்.

நிறைவுரை

உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளே படைப்பாக உருவாக்கம் பெறுகின்றது. அத்தகைய படைப்புகளில் கவிஞர் தன்னுடைய உள்ளம் சார்ந்த பல்வேறு உளவியல் கூறுகளையும் வெளிப்படுத்துவார். படைப்பாளியின் இத்தகைய உளவியல் கூறுகள் தன்னைச் சுற்றி தனக்கு இன்பம் தந்த அல்லது துன்பம் தந்த எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.இதன் அடிப்படையில் கவிஞர் நா. முமத்துக்குமார் அவர்களின் கவிதைத்தொகுப்புகளிலும் கடவுள் சார்ந்த உளவியல், காதல் சார்ந்த உளவியல் மற்றும் வாழ்வியல் சார்ந்த பல்வேறு உளவியல் செய்திகளைக் கட்டுரை ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளது.

துணைநூட்பட்டியல்

1. போட்கோ- உளவியல் நெறிகள் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், வி.ஓ.சி. பார்க். கோயம்புத்தூர்
2. முத்துக்குமார்.நா - துளிப்பாக்கள் - டிஸ்கவரி புக் பேலஸ் சென்னை
3. முத்துக்குமார்.நா -நா. முத்துக்குமார் கவிதைகள்- விகடன் பிரசுரம் சென்னை - இரண்டாம் பதிப்பு - *2008*
4. முத்துக்குமார்.நா -பட்டாம்பூச்சு விற்பவன் - டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை
5. முத்துக்குமார்.நா -குழந்தைகள் நிறைந்த வீடு -விகடன் பிரசுரம், சென்னை - முதல் பதிப்பு - *2006*
6. தொல்.பொருள்.அகத் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்இ வி.ஓ.சி. பார்க். கோயம்புத்தூர்

37. வைரமுத்துவின் தண்ணீர்தேசம் நாவலில் உயிரியல் சிந்தனைகள்

முனைவர் இரா.உஷாராணி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,சேலம் - 636 005 தமிழ்நாடு,இந்தியா.
மின்னஞ்சல்: ushaarivu24@gmail.com

DOI 10.5281/zenodo.17217005.

Abstract

Biology is the scientific study of the benefits and physical properties of humans, plants, and animals. The purpose of this article is to examine the biological concepts in the novel Tandoori Desam, such as the need for water in the human body, the amount of blood in the human body, the origin of life, the origin of man, the nature of the earlobe, and the Anichka flower.

Key Words: Water, Blood, Vairamuthu, Biology, Human, Plant, Animal

முன்னுரை

அறிவியல் என்பது அணுவு எனப் பொருள்படும். *scientia* என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். அறிவியல் என்பது, அறிவின் வழி ஆராய்ந்து சோதனைக்கு உட்படுத்தி அதன் மூலம் பெறப்படுகின்ற உண்மை தன்மைகளைக் கொண்ட, கற்பனை அல்லாத ஒரு துறையாகும். ஒரு பொருளின் ஆக்கம் எவ்வாறு நிகழ்ந்தது அதன் தன்மை போன்ற பல கூறுகளைச் சோதித்து உண்மை தன்மை அடிப்படையில் வெளியிடுவது அறிவியல் ஆகும். அறிவியல் இன்றி ஓர் அணுவும் அசையாது என்பதற்கேற்ப இன்று அறிவியல் வளர்ந்து கொண்டே செல்கிறது. இத்தகைய அறிவியலில் நிலவியல், வானியல், கணிதவியல், மருத்துவவியல், இயற்பியல், வேதியியல், புவியியல் போன்ற பல பிரிவுகள் காணப்படுகின்றன. அவ்வகையில் தண்ணீர் தேசம் நாவலில் இடம்பெற்றுள்ள உயிரியல் செய்திகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மனித உடலில் நீரின் அவசியம்

நீரின்றி மனித வாழ்வு மட்டுமல்ல உலகத்தின் செயல்பாடும் நடைபெறாது. நீரே உலக இயக்கத்தின் வேர் எனலாம். நீரில் ஒரு ஆக்ஸிஜன் இரண்டு நைட்ரஜன் மூலக்கூறுகள் உள்ளன. நம் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றும் நீரைச் சார்ந்தே உள்ளன. நம் உடலில் *60* சதவிகிதம் நீர் தான் உள்ளது. உடலில் நீரின் அளவு மாறுபடும் போது அது பாதிப்பை ஏற்படுத்துகிறது. மூளையில் *80* சதவிகிதம் நீர் உள்ளது. சுவாசம், வியர்வை, சிறுநீர், செரிமானம் போன்ற பல செயல்பாடுகளால் எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் தடுக்க அன்றாட இரண்டு முதல் அதற்கு மேற்பட்ட லிட்டர் தண்ணீர் அருந்துவது அவசியம்.

உணவு செரிமானமாக செரிமானத்திலிருந்து ஊட்டச்சத்துக்கள் உடல் கிரகித்துக் கொள்ள, வளர்சிதை மாற்றம் ஏற்படுத்த உடலின் வெப்பநிலையைத் தக்க வைத்துக் கொள்ள சீரான இரத்த ஓட்டம் செயல்பட, செல்களுக்கு ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச் சத்துகள் போதுமான அளவு சென்று திசுக்களில் உருவாகும் மனித உடலுக்கு நீர் மிகவும் அவசியமாகிறது. மனித உடலில் நீரின் அளவு குறையும் போது நீரிழிவு நோய், மூட்டுவலி போன்ற நோய்களுக்கு ஆளாக நேரிடுகிறது. நீரே மனித உடலின் சமச்சீர் நிலைக்கு அடிப்படையாக அமைகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"நமது உடலில் தண்ணீரைத் தவிர மற்ற பொருள்கள் 30 சதவீதம் உள்ளன. நமது உடலிலுள்ள தண்ணீரில் 10 சதவீதம் குறைந்தாலே போதும் இறந்துவிடுவோம். ஏனெனில் நமது உடலிலுள்ள செல்கள் தண்ணீர் பற்றாக்குறையால் செயலற்றுச் சிதைந்து விடும். அதன் விளைவாக மரணம் ஏற்படும்."

(டி. எம். சௌந்தரராஜன், மனித உடலின் அமைப்பும் இயக்கமும் ப. 25)

என்ற கருத்து மனித உடலுக்கு மற்றும் செயல்பாடுகளுக்கு நீரின் இன்றியமையார்மயை உணர்த்தியுள்ளது.

"வாழும் உயிர்களை வடிவமைத்தது தண்ணீர்
70சதம் தண்ணீர்-யானை
65சதம் தண்ணீர்- மனிதன் " (வைரமுத்து, தண்ணீர் தேசம்,ப.13)

என்ற நாவலின் கருத்து மனித உடலுக்கு மட்டுமின்றி பிற உயிரினங்களுக்கும் தண்ணீரின் அவசியத்தையும் இருக்க வேண்டிய அளவினையும் குறிப்பிட்டுள்ளது. அது மட்டுமல்லாது நீரின்றி மனிதனால் வாழ முடியாது என்பதை,

"நீ உணவில்லாமல் ஒரு மாதம் வாழலாம்
நீரில்லாமல் ஒரு வாரம் வாழ முடியாது
தண்ணீர் தான் உயிர்." (வைரமுத்து, தண்ணீர் தேசம்,ப. 16)

என்ற கருத்தானது குறிப்பிட்டுள்ளது. மனிதன் நீரின்றி வாழமுடியாது என்ற அறிவியல் சிந்தனையை நாவல் வெளிபடுத்தியுள்ளது.

மனித உடலில் இரத்தத்தின் அளவு

இரத்தம் மனித உடலுறுப்புகளின் செயல்பாடுகளுக்கு அடிப்படையாக அமைகிறது. உடலில் ஆக்ஸிகரணம் நிகழ்வதற்கு வேண்டிய ஆக்ஸிஜனை திசுக்களுக்கு இவைதான் எடுத்துச் செல்கின்றன. திசுக்களில் உண்டாகும் கார்பன்டை ஆக்ஸைடு, உப்பு போன்ற கழிவுப் பொருட்களை அங்கிருந்து அகற்றி கழிவு மண்டலங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதும், இரத்தத்தின் வேலையாகும். உடலில் உள்ள பல்வேறு சுரப்பிகளும் தமக்கு வேண்டிய மூலப்பொருள்களை இரத்தத்திலிருந்து பெற்றுக்கொள்கின்றன. நாளமில்லாச் சுரப்பிகள் உற்பத்தி செய்யும் ஹார்மோன்களை அவை தேவைப்படும் இடத்திற்கு எடுத்துச் செல்கிறது. இரத்தத்திற்குச் சிவப்பு நிறத்தை அளிப்பது ஹீமோகுளோபின் என்னும் பொருளாகும். இரத்தத்தில் சிவப்பு வெள்ளை அணுக்களும் பிளாஸ்மா என்ற தட்டும் உண்டு. மனித உடல் எடையில் 6 முதல் 8 வரை இரத்தம் காணப்படும் என்றும் சராசரியாக 5-6 லிட்டர் இரத்தம் உள்ளது என்றும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றர்.

"ஆண் உடம்பில் இரத்தம் -51/2 லிட்டர் பெண் உடம்பில் 5லிட்டர் என்ற பேதமிருந்தாலும் செல்களின் செயல்கள் ஒன்றுதான்,

(வைரமுத்து, தண்ணீர் தேசம்,ப. 34)

என்ற நாவலின் கருத்து மனித உடலில் ஆணுக்கும் பெண்ணுக்குமான இரத்த மாதிரியான அளவுகளையும் செல்கள் ஒரே அனைவருக்கும் இயக்கத்தைத்தான் செய்ய வல்லது என்பதையும் குறிப்பிட்டுள்ளது.

உயிரினத்தின் தோற்றம்

முதன் முதலில் ஒரு செல் உயிரினமே தோன்றியது என்றும் அதுவும் கடலில்தான் தோன்றியது என்றும் அந்த ஒரு செல் உயிரின் பரிணாம வளர்ச்சியே மனிதன் என்றும்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். சூரியன் தோன்றி பத்து கோடி ஆண்டுகளுக்குப் பின்னர் புவி தோன்றியது. புவி தோன்றி பல கோடி ஆண்டுகள் கழித்து புவியின் பாறைகளின் அனல்களாலும் விண்கற்களாலும் பூமிக்குத் தண்ணீர் கிடைத்தன. அத்தண்ணீர் பள்ளங்களில் தேங்கி கடல்களாக உருவெடுத்தது. அந்தக் கடலில் தான் முதல் உயிரினம், ஒரு செல் உயிரினம் தோன்றியது. ஒரு உயிரினத்தின் தோற்றக் காரணியாக கார்பன், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் அணுக்களால் ஆன மூலக்கூறு என்பது அறிவியல் அறிஞர்களின் கருத்து.

கடலில் தான் முதல் உயிரினம் தோன்றியது என்பதை வைரமுத்து தண்ணீர் தேச நாவலில்,

"முதல் உயில் பிறந்தது கடல்நீர் (வைரமுத்து, தண்ணீர் தேசம்,ப. 14)

என்ற கருத்தும், பல கோடி ஆண்டுகள் கழித்துதான் இவ்வுயிரினம் தோன்றியது என்பதை,

"இதில் முதல் உயிர் முளைத்தது.
மூன்றரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்புதானாம்.
196 1/2 கோடி ஆண்டுகள் இந்தப்பூமி
வெறுமையில் வெறுமையில்……. (வைரமுத்து, தண்ணீர் தேசம்,ப. 107)

என்ற கருத்தும் வெளிப்படுத்தியுள்ளன. புவி தோன்றிய 500 கோடி ஆண்டுகளில் முதல் உயிரினம் மூன்றரை கோடி ஆண்டுகளுக்கு முன் என்ற அறிவியல் சிந்தனையையும், முதல் உயிரினம் கடலில் தோன்றியதையும் அறிய முடிகிறது.

மனிதனின் தோற்றம்

மனிதன் பரிணாம வளர்ச்சியில் குரங்கிலிருந்து தோன்றியதாக உயிரியலாளர்கள் கூறுவர். ஒரு செல் உயிரி முதலில் தோன்றியது. 60-70 கோடி ஆண்டுகளுக்கு முன் கடற்பாசிகள், பாக்டீரியாக்கள், சில வகைப்புழுக்கள்உண்டாயின. 40-45 கோடி ஆண்டுகளுக்கு முன் நிலத்தில் வாழும் உயிர்கள் தோன்றின. அவற்றுள் சில மேல்நிலைத் தாவரங்களும் முதுகெலும்புள்ளனவும் அடங்கும். நீர் நில வாழ்விகள், கணுக்காலிகள் முதலியனவும் தோன்றின. இதைத் தொடர்ந்து நிலத்தில் ஊர்ந்து செல்லும் பல்லி, பாம்பு, ஆமை, முதலை வகைகளும் தோன்றின. விலங்குகளும் தாவரங்களும் ஏராளமாகப் பெருகின.

ஊர்வனவற்றிலிருந்து இரண்டு கிளைகளாக விலங்குகள் உண்டாயின. சிலவற்றிற்குச் சிறகுகள் முளைத்துப் பறவைகள் உண்டாயின. சிலவற்றிற்குத் தோலில் மயிர்கள் உண்டாகிப் பாலூட்டிகள் தோன்றின. ஆகவே குளிர் இரத்த விலங்குகளான ஊர்வன, வெப்ப இரத்த விலங்குகளான பறவைகளும், பாலூட்டிகளும் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தன. பாலூட்டிகளில் யானை, காண்டாமிருகம் போன்றவற்றின் முன்னோடிகள் தோன்றின. பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வாலில்லாக் குரங்குகளும், மனிதனைப் போலவே இருந்த குரங்குகளும் தோன்றினன 60லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாலில்லாக் குரங்கினத்தை மனித இனமாக வகைப்படுத்தப்பட்டது. இவ்வாறு மனிதனின் பரிணாமவளர்ச்சி அமைந்தது.

"குரங்கிலிருந்து தோன்றியதுதான் இன்றைய மனித இனம். ஒற்றைச் செல்லுயிரிகளிலிருந்து சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்பட்டுப் பல செல்லுயிரிகளுண்டாகிப் பின்னர் பல்வேறு வகை உயிரினங்களும், தாவர வகைகளும் உண்டாயின. இவ்வாறு எளிய உயிரினங்களிலிருந்து மேல்நிலை உயிரினங்களும், மனிதனும் இனமும் தோன்றின."

(கூகு. அருணாச்சலம், அறிவியல் ஆயிரம் தொகுதி-5 ப. 85)

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற கருத்து மனித இனத் தோற்றத்தின் நன்மையைச் சுருக்கமாகத் தெரிவித்துள்ளது.

"குரங்கிலிருந்து மனிதன் குதித்திருக்க முடியுமா?"

(வைரமுத்து, தண்ணீர் தேசம்,ப. 54)

என்ற நாவலின் கருத்தும் அவ்வறிவியல் கருத்தை மெய்ப்பிக்கின்றன.

காது மடலின் தன்மை

காது மடல் என்பது வெளிக்காதின் பகுதி ஆகும். காது மடல் ஒலியைச் சேகரித்து வெளிக்காது குழாயினுள் அனுப்புகிறது. அதன் வழியே செல்லும் ஒலி அலைகள் காது குழலின் கடைசியில் உள்ள செவிப்பறையில் மோதுகின்றன. இவ்வாறு காது மடல், ஒலியை உட்காதுகளுக்கு அனுப்பும் பணியைச் செய்கின்றது. இந்தக் காதுமடல் மிக மென்மையான பகுதியாகும். குருத்தெலும்புகளால் ஆனது. காதுமடலின் இத்தகைய தன்மையை நாவலானது,

"இந்தக் காதுமடல் இருக்கிறதே இது உடம்பின் ஓர் உணர்ச்சிமயமான பிரதேசம் மெல்லிய குருத்தெலும்புகளாலான மென்மையான பாகம் "

(வைரமுத்து, தண்ணீர் தேசம்,ப. 199)

என்ற பதிவில் வெளியிட்டுள்ளது.

அனிச்ச மலர்

அனிச்சம் மலர் வரிசையைச் சார்ந்த தாவரமாகும். அனிச்சம் நல்ல நீருள்ள பகுதியில் வளரக்கூடியவை. இதன் இதழ்கள் மென்மையானவை. இந்தப்பூக்களின் நிறம், மென் செம்மஞ்சள் மற்றும் நீலநிறம் கொண்டதாகக் காணப்படும். அனிச்சம் மிகவும் மென்மையான மலராகையில் செடியில் இருந்து பிடுங்கியதும் வாடிவிடக்கூடியது. என்பதை,

"அனிச்ச மலர் பறித்தவுடன் வாடும் என்பதற்கு வெளிவெப்பத்தால் வாடும் என்பதைப் பொருளாக எடுத்துக் கொள்ளலாம். முகரும் போது மூச்சுக் காற்றின் வெப்பத்தால் வாடும் தன்மை கொண்டது எனவும் எடுத்துக் கொண்டு அதனை மிகைப்படுத்தி முகர்ந்தால் வாடுவது எனக் கூறப்பட்டிருக்கலாம்" (அரிமா நோக்கு, மாத இதழ், சனவரி 2013, ப.52)

என்ற கருத்தானது பதிவு செய்துள்ளது. அனிச்சம் மிகவும் மென்மையானவை என்பதை,

"இவன் எவ்வளவு மெல்லியவன்,
அனிச்சப்பூ மனசு கொண்டவன்" (வைரமுத்து, தண்ணீர் தேசம்,ப. 170)

என்ற பதிவில் வைரமுத்து சுட்டி தாவரவியல் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார். வள்ளுவரும்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"(குறள் - 90)

என்ற குறளில் மென்மையான அனிச்சமலர் முகர்ந்தால் அதன் வெப்பக் காற்றால் வாடி விடுவதை அன்றே குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வின் பயன்

- மனித உடலுக்கு மட்டுமின்றி பிற உயிரினங்களுக்கு தண்ணீரின் அவசியத்தையும் இருக்க வேண்டிய அளவினையும் குறிப்பிட்டுள்ளது.

- புவி தோன்றிய *500* கோடி ஆண்டுகளில் முதல் உயிரினம் மூன்றரை கோடி ஆண்டுகளுக்கு முன் என்ற அறிவியல் சிந்தனையையும், முதல் உயிரினம் கடலில் தோன்றியதையும் அறியமுடிகிறது.
- மனித உடலில் ஆணுக்கும் பெண்ணுக்குமான இரத்த அளவுகளையும் செல்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான இயக்கத்தைத்தான் செய்ய வல்லது என்பதை நாவல் உணர்த்துகிறது.

முடிவுரை

மனித உடலின் செயல்பாட்டிற்கு நீர், இரத்தம் அவசியம், உயிரினங்கள் தோற்றம், எப்போது மனித இனம் தோன்றியது என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

துணைமை நின்றவை :

1. மு.வரதராசனார்(உ.ஆ), திருக்குறள், முல்லை நிலையம், சென்னை.
2. அரிமா நோக்கு, மாத இதழ், சனவரி *2013*
3. வைரமுத்து, தண்ணீர் தேசம், சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட்.சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

38. கடந்தைக்கூடும் கேயாஸ் தியரியும் - ஒரு பார்வை

முனைவர் சி.தேவி,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
9442436396 - Devi-tam@sfrcollege.edu.in
DOI 10.5281/zenodo.17217025.

Abstract:

Literature, an art form, operates on both levels: art for art's sake and art for life. Works that fit the principle of art for life have become compatible with the principles and theories of many scholars. In this way, chaos theory is an intermediate part of scientific research and a branch of mathematics.Chaos theory is called disordered dynamics. The fractal structure of mathematics is cited as an example of this. Small differences in the initial state of any process, errors in measurements, or errors in numerical calculations are included in this theory. It is also known as the butterfly theory or confusion theory. Chaos theory is used in fields such as meteorology, anthropology, sociology, environmental science, computer science, engineering, economics, and crisis management such as epidemiology. The pioneer of this theory is Edward Lorenz. For example, during the coronavirus pandemic, this approach was very helpful in estimating how many people would be infected on the last day of the month (the thirtieth day) if there were 1,000 infections in the first ten days of this month.

Key Words: Literature - Edward Lorenz - Anthropology - Chaos Theory

முன்னுரை

இலக்கியம் என்ற கலைவடிவம், கலை கலைக்காகவே, கலை வாழ்க்கைக்காகவே என்ற இரு நிலைகளிலும் செயல்படுவதுண்டு. கலை வாழ்க்கைக்காவே என்ற கொள்கையோடு பொருந்தும் படைப்புகள், பல அறிஞர்களின் கொள்கைகளோடும் கோட்பாடுகளோடும் பொருத்திப்பார்க்கும் தன்மை படைத்தன. அவ்வகையில் அறிவியல் ஆய்வு மற்றும் கணிதத்தின் ஒரு கிளையின் இடைநிலைப்பகுதியாக கேயாஸ் கோட்பாடு விளங்குகிறது.

கேயாஸ் கோட்பாடு என்பது ஒழுங்கற்ற இயங்குநிலை எனப்படுகிறது. இதற்குச் சான்றாக கணிதத்தின் பின்ன அமைப்பு கூறப்படுகிறது. எந்தவொரு செயல்பாட்டிலும் ஆரம்பநிலையில் உள்ள சிறிய வேறுபாடுகள், அளவீடுகளில் ஏற்படும் பிழைகள் அல்லது எண் கணக்கீட்டில் ஏற்படும் பிழைகள் போன்றவை இக்கோட்பாட்டிற்குள் அடங்கும். இது பட்டாம்பூச்சிக் கோட்பாடு அல்லது குழப்பக்கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. கேயாஸ் கோட்பாடு வானிலை, மானுடவியல், சமூகவியல், சூற்றுச்சூழல் அறிவியல், கணினி அறிவியல், பொறியியல், பொருளாதாரம் மற்றம் தொற்றுநோய் போன்ற நெருக்கடி மேலாண்மை நிறைந்த துறைகளில் பயன்படுகிறது. இந்தக் கோட்பாட்டின் முன்னோடியாக எட்வர்ட் லோரென்ஸ் திகழ்கின்றார்.

சான்றான கொரோனா தொற்றுக் காலத்தில் இந்த மாதம் முதல் தேதியிலிருந்து பத்து நாட்களில் ஆயிரம் பேருக்குத் தொற்று இருந்தது என்றால் இந்த மாத இறுதி நாளன்று(முப்பதாம் நாள்) எத்தனை பேருக்குத் தொற்று இருக்கும் என்பது போன்ற கணக்கெடுப்பில் இந்த அணுகுமுறை மிகவும் உதவிகரமாக இருந்தது.

இந்தக்கோட்பாடு மிகச் சிறிய மாற்றம் பெரிய விளைவை ஏற்படுத்தும் என்பதை விளக்குகிறது. இது உறுதியான விதிகளால் நிர்வகிக்கப்படும் அமைப்புகளில் ஏற்படும் எதிர்மாறாத மாற்றங்களை ஆராய்கிறது,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

குழப்பக் கோட்பாடு, கொள்கையளவில், நடத்தையை கணிக்கக்கூடிய நிர்ணயிக்கும் அமைப்புகளைப் பற்றியது. குழப்பமான அமைப்புகள் சிறிது காலத்திற்கு கணிக்கக்கூடியதாக அமையும், பின்னர் சீரற்றதாக தோன்றுகின்றன.

ஒரு குழப்பமான அமைப்பின் நடத்தையை திறம்பட கணிக்கக்கூடிய நேரத்தின் அளவு மூன்று விஷயங்களைப் பொறுத்தது:

1. முன்னறிவிப்பில் எவ்வளவு நிச்சயமற்ற தன்மையை பொறுத்துக்கொள்ள முடியும்,
2. அதன் தற்போதைய நிலையை எவ்வளவு துல்லியமாக அளவிட முடியும்,
3. அமைப்பின் இயக்கவியலைப் பொறுத்து ஒரு நேர அளவுகோல், இது லியாபுனோவ் நேரம் என்று அழைக்கப்படுகிறது .

ரோபாட்டிக்ஸ் என்பது கேயாஸ் கோட்பாட்டின் விளைவு என்று கூறப்படுகிறது. ”AI இயக்கப்படும் பெரிய மொழி மாதிரிகளில், வடிவமைப்பு மாற்றங்கள் மற்றும் தூண்டுதல்களில் உள்ள மாறுபாடுகள் போன்ற காரணிகளுக்கு பதில்கள் உணர்திறனை வெளிப்படுத்தலாம். இந்த உணர்திறன்கள் பட்டாம்பூச்சி விளைவுகளுக்கு ஒத்தவை” 1

குழப்பமான இயக்கவியல்

சீரற்ற இயக்கம் எனப்படும் இக்கோட்பாடு விளக்கப்படும் பொழுது,” பொதுவான பயன்பாட்டில், குழப்பம் என்பது “ஒரு ஒழுங்கின்மை நிலை“ என்று பொருள்படும்”2குழப்பக் கோட்பாட்டில், இந்த சொல் மிகவும் துல்லியமாக வரையறுக்கப்படுகிறது. குழப்பத்திற்கு உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணித வரையறை எதுவும் இல்லை என்றாலும், ராபர்ட் எல். டெவானேவால் முதலில் உருவாக்கப்பட்ட ஒரு பொதுவாகப் பயன்படுத்தப்படும் வரையறை, ஒரு இயக்கவியல் அமைப்பை குழப்பமானதாக வகைப்படுத்த, அது சில பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறது. அவை,

”1. **அது ஆரம்ப நிலைமைகளுக்கு உணர்திறன் கொண்டதாக இருக்க வேண்டும்,**
2. **அது இடவியல் ரீதியாக நிலையற்றதாக இருக்க வேண்டும்,**
3. **அது அடர்த்தியான காலமுறை சுற்றுப்பாதைகளைக் கொண்டிருக்க வேண்டும்**” 3

சில சந்தர்ப்பங்களில், மேலே உள்ள கடைசி இரண்டு பண்புகள் உண்மையில் ஆரம்ப நிலைகளுக்கு உணர்திறனைக் குறிப்பதாகக் காட்டப்பட்டுள்ளன. ஹென்றி பாய்காரே என்பவர் குழப்பக் கோட்பாட்டின் முன்னோடி என்றழைக்கப்படுகிறார்.



கேயாஸ் கோட்பாடு கையாளப்பட்டுள்ள படைப்பிற்குச் சான்று

தசாவதாரம் கேயாஸ் கோட்பாட்டிற்கு தக்க சான்று ஆகும். பக்தியுள்ள வைணவன் சார் கதையாக தொடங்குகிறது திரைப்படம். கொடூரமான உயிரி ஆயுதம் கொண்ட குப்பியை பயங்கரவாத கும்பல் கையில் இருந்து அபகரிக்க ஒரு குழுவினர் பயணிக்கின்றனர். கதை முழுவதும் 2004 இந்தியப் பெருங்கடல் சுனாமிக்குப்பிறகு இணைக்கப்படுகின்றது. இந்தப் படம் தெய்வீகம், கடவுளின் இருப்பு, சாதியம் போன்ற ஏராளமான தத்துவங்கள் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

உப்பு அந்த உயிரிக்கிருமியை அழிக்கும் என்று அறிகிறார் கதைத்தலைவன். சுனாமி வந்து அழிக்கிறது. சிலர் உயிர் பிழைக்கின்றனர். சுனாமி ஒரு தெய்வீகத் தலையீடு என்று ஆண்டாள் என்ற பாத்திரம் நம்புகிறது. ஆனால் கோவிந்த் ஒரு பகுத்தறிவு பார்வையில் பார்க்கிறார். அத்தகைய பேரழிவை இரட்சிப்பின் வழிமுறையாகக் கூறுகிறார். கடவுள் நம்பிக்கை மிக்க நம்பியின் கதையோடு தொடங்கி, அறிவியலாக வளர்ந்து நிறைவில் இயற்கைப்பேரழிவு தீயவர்களை அழித்து நல்லவர்களை விட்டுவிடுவது தெய்வ கைங்கர்யம் என்று பொருத்திப்பார்க்கப்பட்டுள்ளது.

சிவசங்கரின் கதைக்களம்

சிவசங்கர் அவர்கள் எழுதியுள்ள “கடந்தைக்கூடும் கேயாஸ்தியரியும்” எனும் சிறுகதையில் பட்டாம்பூச்சிக் கோட்பாடு அமைந்துள்ளது.

இக்கதையில் இடம்பெறும் தலைமைப்பாத்திரம் பேசுவதாக இக்கதை அமைந்துள்ளது. உதடு பிளவு என்ற குறைபாடோடு குழந்தை பிறப்பது அறிவியல் பிழை. ஆனால் மக்கள் அதற்கு குடும்பசாபம், பிறவிக்குறைபாடு என்று காரணம் கற்பிக்கின்றனர். தற்பொழுது அவர் படித்து முடிந்து நல்ல பதவியில் இருக்கிறார். அவரது மனைவி இரண்டாவது குழந்தையை கருவுற்றிருந்தாள். அப்பொழுதும் ரலிக்கு சென்று தென்னம்பிள்ளை நட்டு வைக்கும் நேர்த்திக்கடன் செய்ய சென்றிருந்தனர். அப்பொழுது அங்கு ஒரு பெண் வீட்டில் கடந்தைகூடு பார்த்தீர்களா? என்று பேச்சைத் தொடங்கியவள், கடந்தை கூடு ஏழு அறை கொண்டதாக இருக்கும். ஏழு லோக மண்ணால் கட்டப்படும். குறைவான அறைகள் இருந்தால் குழந்தை குறைபாடுடையதாக இருக்கும். அதிக அறைகள் இருந்தால் ஆறு விரல் கொண்டது போன்ற அதிக அங்கம் படைத்ததாக பிறக்கும் என்று பேசினாள். இதைக்கேட்டு தலைமைப்பாத்திரம் மனக்குழப்பம் அடைந்தார்.அன்று மாலை அமைச்சர் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் மக்களுக்கு இன்றைய அறிவியல் துயர்களையும் ஆயுதம் என்றார். அறிவியல் தான் பெரிதென எண்ணி இந்தச்சிந்தனையிலிருந்து விடுபட்டேன். மனைவிக்கு குழந்தை பிறந்தது ஆறு விரலோடு. வீட்டில் கடந்தை கூடு இருக்கிறதா என்று தேடிச்சென்று பார்த்தேன். எட்டு அறைகள் இருந்தன. கையில் ஒரு தென்னம்பிள்ளையோடு பேருந்து நிறுத்தத்தில் நின்றேன் என்று கதை முடிந்துள்ளது.

கடந்தை கூடும் கேயாஸ் தியரியும்

கடந்தைகூடும் கேயாஸ் தியரியும் என்ற சிறுகதையில் இடம்பெறும் பாத்திரம், தனது உதடு பிளவு என்பது சாபம் என்று பிறர் கூறியதால் இளம்வயதில் நம்பினார். ” நான் பிறந்தபோது என் இடப்பக்க உதடு சற்று பிளவுபட்டிருந்த்து. பள்ளியில் அங்க இடையாள கேள்விகளில் என்னை கலந்தாலோசிக்காமலே இந்த அடையாளத்தை எழுதிவிடுவார்கள். குடும்ப சாபம், பிறவி குறைபாடு, இன்னும் புரிந்து கொள்ள முடியாத பல்வேறு விளக்கங்களால் நான் வெகுவாக அலைக்கழிக்கப்படிருந்தேன்”(க.கூ.கே.தி. ப. 33) என்று தனது குடும்பம் மற்றும் ஊர் சார்ந்த மக்களிடம் நிலைத்து இருந்த பழக்கவழக்கம் மற்றும் நம்பிக்கைகள் அனைத்தும் தன்னை துன்பத்திற்கு உள்ளாக்குவதாக இருக்கிறது என்றுவருந்தினார். இருப்பினும் அது உண்மை தானோ என்று நம்பினார்.

நன்கு படித்து முன்னேறி, அறிவியல் தொடர்புடை அனுமின் நிலையத்தில் பணிபுரியத் தொடங்கினார். உடலில் ஏற்படும் குறைபாடு அறிவியல் இயல்புடையது என்று துணிந்தார். இறுதியாக, அவரது மனைவி இரண்டாவது குழந்தையை ஈன்றெடுத்தாள் அக்குழந்தை ஆறு விரலுடையதாகப் பிறந்தது. இவர் வீட்டில் கட்டப்பட்டிருந்த கடந்தைக்கூடு எட்டு அறைகள் உடையதாக இருந்தது என்று நிதர்சனமாக நடக்கும் பொழுது அதுவே நம்பிக்கையாக மாறியது. கடந்தைக்கூடு என்பது தெய்வம் நமக்கு தரும் முன்னறிவிப்பு என்ற நம்பிக்கையாக வளர்ந்தது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

" நம்பிக்கை அறிவியல் பேரழிவு அச்சம் இவை நான்கும் சந்திக்கும் தங்க நாற்கர சாலையின் பேருந்து நிறுத்தத்தில் நான் காத்திருந்தேன் கையில் ஒரு தென்னம்பிள்ளையோடு"(க.கூ.கே. தி. ப. 34) அதுவரை அறிவியலே அனைத்தும் என்று நம்பி வாழ்ந்த மனிதன் இல்லை தெய்வம், மனித சக்திக்கு மேலான ஆறுறல் ஒன்று உலகத்தில் உண்டு. அது தான் நம்மை இயக்குகின்றது. என்ற நம்பிக்கை அவருக்கு வருவதற்கு கடந்தைகூடு என்ற சிறிய விசயம் காரணமாக அமைந்தது. இதுவே பட்டாம்பூச்சி விளைவு ஆகும். நம்பிக்கை - அறிவியல் - நம்பிக்கை என்று மாறி மாறி இயங்கும் ஒழுங்கற்ற மனநிலை இங்கே விளக்கப்பட்டுள்ளது. கடந்தைகூடு என்பதன் அடிப்படையில் நம்பிக்கையும் அறிவியலும் முன்வைக்கப்பட்டதால் கடந்தைக்கூடு அடிப்படையில் கண்டறியப்பட்ட கேயாஸ் கோட்பாடு இது என்று கூறலாம்.

இயக்கவியல் அமைப்பு முறையும் சிவசங்கர் கதைக்களமும்

கேயாஸ் கோட்பாட்டின் முதல் பண்பு, அது ஆரம்ப நிலைமைகளுக்கு உணர்திறன் கொண்டதாக இருக்க வேண்டும். சிவசங்கரின் மாந்தர் குழந்தைப்பருவத்திலேயே தனது உடற்குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருந்தார். தனக்கான தனது பாட்டி நேர்த்திக்கடனாக தென்னம்பிள்ளையை நட்டு வைத்திருந்தார் என்ற நிகழ்வை இப்பண்பிற்கு தொடர்புபடுத்தலாம்.

கேயாஸ் கோட்பாட்டின், இரண்டாம் பண்பு, அது இடவியல் ரீதியாக நிலையற்றதாக இருக்க வேண்டும். குழந்தைப்பருவத்தில் தனக்குரிய உடங்குறைபாடு சாபத்தால் ஏற்பட்டது என்று நம்பியவர் வளர்ந்து படித்து முதிர்ந்த மனம் பெற்றவுடன் அனைத்தும் அறிவியல் என்று எண்ணினார். என்பது இதற்குச் சான்று.

கேயாஸ் கோட்பாட்டின் மூன்றாவது பண்பு, அது அடர்த்தியான காலமுறை சுற்றுப்பாதைகளைக் கொண்டிருக்க வேண்டும். உண்மை என்ன, வாழ்க்கையின் இயங்குதன்மை என்ன என்பதை புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் அடைய எடுத்துக்கொண்ட காலஅளவே மூன்றாம் பண்பிற்கான விளக்கம்.

தொகுப்புரை

இதுவா? அதுவா? என்று குழம்பிய மனநிலை - சீரற்ற இயக்கம். எனவே இதனை கேயாஸ் கோட்பாடு என்று கூறலாம். மேலும் ஒரு சிறிய இயக்கம் மிகப்பெரிய மாற்றத்திற்கு அடிப்படையாக அமையும் என்ற தன்மை இங்கே நிருபிக்கப்பட்டுள்ளனது. அறிவியல் தான் அனைத்தும் என்று நம்பி வாழ்ந்த மனிதர், அறிவியல் உலகில், அறிவியல் மேதையாக வாழும் நபர் ஒரு சிறிய கடந்தை கூட்டின் காரணமாக மனம் மாறி நம்பிக்கையை ஏற்றுக்கொண்டார். தெய்வஅருள் நம்மைக் காக்கும் என நம்ப ஆரம்பித்துவிட்டார். இப்படி திடீரென ஏற்பட்ட மன மாற்றம் கேயாஸ் கோட்பாட்டுக்குச் சான்று ஆகும். இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் பங்குச்சந்தை உள்ளிட்ட சமூக நடவடிக்கைகள் கண்ணுறப்படுகின்றன. இதன் மூலம் எதிர்காலத்திட்டங்கள் பல செயல்படுத்தப்படுகின்றன.

குறிப்புகள்

1. https://en.wikipedia.org/wiki/Chaos_theory
2. விக்சனரியில் குழப்பத்தின் வரையறை;
3. ஹாசல்பிளாட், போரிஸ்; அனடோல் கட்டோக் (2003). இயக்கவியலில் ஒரு முதல் பாடநெறி: சமீபத்திய முன்னேற்றங்களின் பனோரமாவுடன் .
4. கடந்தைகூடும் கேயாஸ் தியரியும் , சிவசங்கர் எஸ்.ஜே.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

39. மானிடவியல் பார்வையில் யுகபாரதி கவிதைகள்

முனைவர் ப. கற்பகராமன் *MA.,MA.,MA.,M.Phil.,P.hD.,NET*
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்- *05*
DOI 10.5281/zenodo.17217048.

Abstract

Time creates poets. But the article is about how the poet Yukabarathi has revealed to the man in their poetry, according to the claim that a poet is creating a time. In this article, the value of the human being is explored to be the deer, which is expressed in the life of man, to the deer, the deer, the man who is exposed by the biology, and the deer.

Key Words: Human- Spouse- Tongue-Scar - Love

முன்னுரை

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் அங்கு மானிடம் மதிக்கப்பட வேண்டும். மனிதர்களோடு பழகும் விலங்குகள்கூட சமயத்தில் மாறுகின்றன. ஆனால் மனிதர்களோடு பழகும் மனிதர்களே நஞ்சினையே வெளிப்படுத்துகின்றனர். எப்போதெல்லாம் மனிதம் மிதிக்கப்படுகின்றதோ அப்போதெல்லாம் பல்வேறு கவிஞர்கள் தங்களுடைய படைப்பின் மூலம் மனிதத்தை வெளிப்படுத்தத்தவறியதே இல்லை. இதன் அடிப்படையில் கவிஞர் யுகபாரதி அவர்கள் தன்னுடைய படைப்புகளின்மூலம் தான் வாழ்ந்த சமுதாயத்திற்கு எவ்வாறு மானிடத்தை வெளிப்படுத்துகின்றார் என்பதை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

யுகபாரதி

இவரின் இயற்பெயர் பிரேம்குமாராகும். சுப்பிரமணிய பாரதியின் நினைவாக 'யுகபாரதி" என்ற புனைப்பெயரைப் பயன்படுத்தத் தொடங்கினார். கணையாழி இதழில் பொறுப்பாசிரியராகவும், ராஜரிஷி இதழில் உதவியாசிரியராகவும் இருந்துள்ளார். ஆனந்தம் திரைப்படத்தில் 'பல்லாங்குழியின் வட்டம் பார்த்தேன்" என்ற பாடலை எழுதியதில் பாடலாசிரியராக அறிமுகமானார். இவர் ஏறத்தாழ இரண்டாயிரம் திரைப் பாடல்களை எழுதியுள்ளார். இவர் *1976* ஆம் ஆண்டு தஞ்சாவூரில் பிறந்தார். இவர் தஞ்சாவூரில் உள்ள மேக்ஸ்வெல் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வியைப் பயின்றார். அறந்தாங்கி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல் பட்டயப் படிப்பு படித்தார். மனப்பத்தாயம் பஞ்சாரம், தெப்பக்கட்டை,நொண்டிக்காவடி, தெருவாசகம், அந்நியர்கள் உள்ளே வரலாம், மராமத்து, முனியாண்டிவிலாஸ், பாதாளக்கொலுசு ஆகிய கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

கண்ணாடி முன், நேற்றைய காற்று, ஒன்று, நடுக்கடல் தனிக்கப்பல், வீட்டுக்கு வெளியே வெவ்வேறு சுவர்கள், அதாவது, நானொருவன் மட்டிலும், நன்மை தத்தகாரம், இடம்பொருள் இசை ,பின்பாட்டு, அகத்திரை, நல்லார் ஒருவர், ஒருபாட்டு கொஞ்சம் பின்னணி, நிழல் பொம்மை, ஊஞ்சல் தேநீர், முன்னிருக்கைக்காரர்கள், ஒன்று, நடுக்கடல் தனிக்கப்பல், ஒரு மரத்துக் கள் ஆகிய கட்டுரைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இரண்டு முறை கவிதைக்காக தமிழக அரசின் பரிசை வென்றுள்ளார். சிறந்த பாடலாசிரியருக்கான விருதையும் கலைமாமணி விருதையும் பெற்றுள்ளார். இவருடைய படைப்புகளைப் பாராட்டி கோவை பாரதியார் பல்கலைக்கழகம் ஐந்தமிழ் விருதை' வழங்கியுள்ளது. திருப்பூர் தமிழ்ச்சங்க விருது, பிலிம்பேர் விருது, ஸ்டேட்பேங்க் விருது,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

காசியூர் ரங்கம்மாள் விருது, பெரியார் விருது ஆகியனவும் பெற்றுள்ளார். ஐந்துமுறை ஆனந்தவிகடன் விருதும், எட்டுமுறை மிர்ச்சி விருதும் பெற்றுள்ளார்.

மானிடவியல்

மானிடவியல் அல்லது மாந்தவியல் என்பது மனித இனம் பற்றிய ஆய்வறிதல் ஆகும். இது மனித குலத்தைச் சமூக நிலை, பண்பாட்டு நிலை, உயிரியல் நிலை போன்ற வேறுபட்ட நிலைகளில் கடந்த கால மக்களையும், சமகால மக்களையும் (அதாவது எல்லாக் காலத்து மக்களையும் எல்லா இடங்களின் மக்களையும்) ஆராயும் பரந்து விரிந்த இலக்குடையதாக உள்ளது. இந்த மானிடவியலை,

> **"உடல்சார் மானிடவியல் ,சமூக பண்பாட்டு மானிடவியல், மொழிசார் மானிடவியல், தொல்பொருள்சார் மானிடவியல் என்று நான்குவகையாக இதனைப் பகுத்துள்ளனர்"**

கோபாலகிருஷ்ணன்- மானிடவியல்-ப-23

என்று மானிடவியல் என்னும் ,நூலின் ஆசிரியர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

மானிடவியலின் வளர்ச்சியில் பல காரணிகள் பங்கு பெற்றுள்ளன. இருப்பினும் மேற்கத்தியத் தத்துவமும் மேற்கத்திய வரலாற்று நிகழ்ச்சிகளுமே அடித்தளமாய் அமைந்துள்ளன. மனிதனின் தோற்றம் தன்மை அவர்களுக்குள் உள்ள வேறுபாடுகள் முதலானவை குறித்துப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுப்பப்பட்ட வினாக்களே இன்றைய மானிடவியலின் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தன. இதன் அடிப்படையில் யுகபாரதி அவர்களின் கவிதைகளை மானிடவியல் நோக்கில் இக்கட்டுரை ஆராய்கின்றது.

மனைவி

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்கள். ஆனால் வாழ்க்கையின் பிற்பகுதி நிகழ்வுகள்தான்; மனைவியாக வந்தது இறைவனே என்ற உண்மையை உணர்த்தும். தாய்க்குப்பின் தாரம் என்ற நிலை மாறி தனக்கு மட்டுமின்றித் தன்னுடைய தாய்க்கும் தாயாகும் ஒரே உயிரினம் மனைவி ஒன்றுதான் என்பதை யாராலும் மறுக்க இயலாது. மானிடம் ஒவ்வொரு நாளும் சிறந்து விளங்குவதற்கு வாழ்க்கைத்துணையும் ஓர் முக்கிய காரணம். இத்தகைய வாழ்க்கைத்துணையைத் தன்னுடைய கவிதை வரிகளால் அழகுப்படுத்தும் கவிஞரின் கவித்துவம் இன்புறத்தக்கது. கணவன் மனைவியின் மானிடவியலை,

> **"தேவதை தேவையில்லை**
> **தெளிந்தநல் வதனம் போதும்**
> **வைர நகை எதற்கு?**
> **வழித்துணையாதல் இன்பம்!**
> **பாதியாய் இருக்க வேண்டாம்**
> **முழுவதும் நீயே ஆகு!**
> **இம்சைகள் இருக்கும் கொஞ்சம்**
> **இனிமைதான் ஏற்றுக்கொள்!**
> **வருமானம் பரவாயில்லை**
> **வாழ்வதற்குக் கைவசம் கவிதைகள்**
> **வாய்க்கப்பெற்றேன்!**

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

காதலில் விழுந்தேனில்லை
எனவே பிறக்கின்ற பிள்ளைக்கான
பெயரையும் நீயே இடலாம்/
சந்தேகம் துளியும் இல்லை
அந்தரங்கம் உனக்கும் உண்டு
சமயத்தில் நிலவு என்பேன்
சமையலில் உதவி செய்வேன்
எழுதிடும் பாட்டுக்குள்ளே
எங்கேனும் உன்னை வைப்பேன்/
ஒரேயொரு கோரிக்கைதான்
உன்னிடம் வைப்பதற்கு
வேளைக்குக் கிளம்பும்போது
அழுவதைத் தவிர்க்க வேண்டும்…
வெறுங்கையோடு திரும்பி வந்தால்
வெகுளியாய்ச் சிரிக்க வேண்டும்…”

யுகபாரதி கவிதைகள் - ப - *33*

என்ற வரிகளைக் கொண்டு பதிவு செய்கின்றார்.

நாவினால் சுட்ட வடு

பேசுவது என்பது ஒரு கலை. அதுவும் கேட்பவர்கள் மகிழும்படியாக பேசுவது என்பது எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. ஒருசிலர் திட்டுவதையும்கூட மகிழ்ச்சியாக கேட்டுக்கொண்டிருக்கலாம். இத்தகைய நபர்கள் வாய்க்கப்பெற்றால் அதுவே மானிடப் பிறவியின் வரம். தீயினால் சுடுவதுக்கூட ஆறிவிடும். ஆனால் நாவினால் சுடுவது வடுவாக மாறி என்றுமே ஆறாது என்பதைத் திருவள்ளுவரும்,

“தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு”

அடக்கமுடைமை - *129*

என்ற குறள்வழி விளக்குகின்றார். இத்தகைய சிறப்புவாய்ந்த சொற்கள் பல நேரங்களில் எவ்வாறு அமைந்துவிடுகின்றது என்பதை,

“தொலைப்பேசியைத் துண்டிக்க
நீ உதிர்த்த கடைசிச் சொல்லுக்குப் பின்
நான் உறங்கவே இல்லை…
எல்லோருக்கும் வாய்ப்பதில்லை
சொற்களைக் கையாளும்
தேர்ந்த ஆற்றல்…
வீசியதே திரும்ப வருமென்றும்
நம்புவதற்கில்லை…
எதிர்பாராத தருணத்தில்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

நம்மை வீழ்த்திவிடும்
சொற்களும் உண்டு…
சொற்களின் கணத்தைத்
தாங்க முடியாமல்
நம்மில் பலர்
சுயசாவைத் தேடிக்கொண்டனர்…
சொற்களின் வீரியத்தில்
நம்முடைய கற்பு
சூறையாடப்பட்டிருக்கிறது…”

யுகபாரதி கவிதைகள் - ப - 52

என்ற கவிதை வரிகளில் படம்பிடித்துக்காட்டுகின்றார்.

இன்றைய வாழ்வியல்

உயிரினங்களோடு வாழ்ந்த வாழ்வியல் மாறி, தற்போது இயந்திரங்களோடு வாழ்கின்ற இயந்திரமயமான வாழ்க்கைக்கு நாம் தள்ளப்பட்டுவிட்டோம். பசித்தபின் சாப்பிடும் நிலை மாறி, பசிக்கும்போது சாப்பிட நேரமிருக்காது என்பதற்காக முன்னமே சாப்பிட்டுவிட்டு, பசியைத் தேடுகின்ற காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்ந்தாலே கூட்டுக்குடும்பம் என்ற உன்னத வாழ்வு நம்முடைய வாழ்வாகிவிட்டது. மூச்சு விடவும் இடமில்லாத அடுக்குமாடி குடியிருப்பில் இன்று வாழ்கின்ற இன்றைய இயந்திர வாழ்வியலை,

“விடிவதற்குள் விழித்தெழுந்து
கோலமிட வேண்யதில்லை…
செடிகளுக்கு நீர்பாய்ச்சி
பராமரிக்கும் வேலையை யாருக்காவது
தந்துவிடலாம்…
பக்கத்து வீட்டு
அக்காக்களின்
பரிதாபக் கதைகளால்
செவிகள் காயப்படாது…
அம்மா… என கேட்கும்
பிச்சைக்காரர்களுக்கு
பழைய சோற்றையோ
சில்லறைக் காசுகளையோ
தானம் இடுவதிலிருந்து
தப்பிக்கலாம்…
மனித வாடையைத் தவிர்க்கலாம்
தனித்திருக்கலாம்
அழைப்பு மணிக்கு மட்டும்
கதவைத் திறந்தால் போதும்…

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கால் நகங்கள் அழுக்கேறாத
சவத்திற்கு ஒப்பான
ஓர் வாழ்வை மேற்கொள்ள
அடுக்கக வாழ்க்கை
அற்புத வாழ்க்கை"

யுகபாரதி - முனியாண்டி விலாஸ் - ப- *72*

என்ற கவிதை வரிகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

அன்பு

உலகில் உயிரினங்கள் உயிர்ப்புடன் வாழ்வதற்கு அன்பு ஒன்றே அடிப்படைக் காரணமாக விளங்குகின்றது. அன்பைப் பொருத்தவரை பெருவதைவிடக் கொடுப்பதில்தான் இன்பம் அதிகம் இருக்கின்றது. இத்தகைய அன்புகலந்த வாழ்க்கை கொஞ்சம் கொஞ்சமாக நம் கண்முன்னே குறைந்துகொண்டே செல்கின்றது. மனிதர்களிடமிருக்கும் விலங்கின குணம், விலங்குகளிடமிருக்கும் விலங்கினகுணத்தைவிட அதிகமாகிக்கொண்டே செல்வதே இதற்குக் காரணம். அன்பு குறைந்துகொண்டே செல்கின்ற இத்தகைய வாழ்வியலை,

"ஊட்டச்சத்து பற்றாக்குறையுடன்
குழந்தைகள் பிறக்கின்றன
உபரி வருமானத்திற்காக தங்கள்
ஓய்வு நேரங்களிலும் குடும்பஸ்தர்கள்
உழைக்கிறார்கள்
பெருநகரங்களில் நெருக்கடிகள்
மிகுந்துவிட்டன
சுத்தகரிக்கப்பட்ட தண்ணீருக்கு
மக்கள் அல்லாடுகிறார்கள்
நிமிடத்திற்கு லட்சம்பேர்
சாலைவிபத்தில் சமாதியாகிறார்கள்.
மக்களை யோசிக்கும் தலைவர்கள்
அருகிவிட்டார்கள்
அறம் செத்துவிட்டது
அன்பு குறைந்துவிட்டது
சனங்கள் தொகையாக மட்டுமே
பார்க்கப்படுகிறார்கள்…"

யுகபாரதி - முனியாண்டி விலாஸ் - ப- *82*

என்ற வரிகளில் விளக்கி; கூறுகிறார்

முடிவுரை

இலக்கியம் என்பது அந்தந்த காலத்தின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடி. தான் சார்ந்த சமூகத்தை விட்டுவிட்டு எந்தவொரு கவிஞனாலும் எந்தவொரு படைப்பையும் படைக்க இயலாது. தான் சார்ந்த சமூக வெளிப்பாடுகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தன்னுடைய படைப்பில் தன்னை

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

அறியாமலேயே படைத்துவிடுவான் கவிஞன். இதன் அடிப்படையில் தான் வாழ்ந்த சம காலத்திய தன்னுடை சமூக மானிடவியலை மிகவும் அழகாகவும், துள்ளியமாகவும் தன்னுடைய படைப்புகளில் படைத்துள்ள கவிஞர் யுகபாரதி அவர்களின் கவித்துவம் இன்புறத்தக்கது.

துணைநூற்பட்டியல்

1. கோபாலகிருஷ்ணன் - மானிடவியல் - சென்னைத் தமிழ் வெளியீட்டுக் கழகம் - *1930*
2. திருவள்ளுவர் திருக்குறள் - நியூசெஞ்ரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை.
3. யுகபாரதி கவிதைகள் - வாசவி பதிப்பகம் - மதுரை
4. யுகபாரதி - முனியாண்டி விலாஸ் - நேர் நிரை பதிப்பகம் - சென்னை

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

40. பளியர் இன பழங்குடி மக்களின் வாழ்வியல்

(குறிஞ்சாம்பூ புதினத்தை முன்வைத்து)

முனைவர் பா.தமிழரசி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

DOI 10.5281/zenodo.17217076.

Abstract:

There are 37 types of tribal communities living in Tamil Nadu. Due to various reasons like forest conservation, mineral resources, industrialization, the lives of these tribes are now facing great hardship. They have lost their culture, industry, land, and livelihood, and are unable to connect with other people and live their ancient lives. The tradition of tribes, which have rituals and worship methods connected with nature from birth to death, is gradually disappearing. This article aims to examine the life of the tribal Paliyars by presenting the novel 'Kurinjambu' (a novel about the Paliyars living in Mahalinga Hills) written by Ko.Ma.Kothandam.

Key Words: Kurinjambu - Novel - Tribes - Community

நம் இந்திய நாட்டில் நானூறுக்கும் அதிகமான பழங்குடி இன மக்கள் மலைகளில் வாழ்கிறார்கள். தமிழ்நாட்டில் பளியர், படகர், தோடர், மன்னான் போன்ற பழங்குடி இன மக்கள் மலைகளில் வாழ்கிறார்கள்.

மிகப் பழமையான காலத்தில் வாழ்ந்த மக்களே பழங்குடி மக்கள் எனப்படுவர். ஒரு நாட்டில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்ற பழமையான மக்களைக் குறிப்பது பழங்குடி' எனும் சொல்லாகும். ஒரு மொழியைப் பேசுபவராகவும், ஒரே இடத்தில் வசிப்பவராகவும் ஒரே தொழிலில் ஈடுபடுபவராகவும், திருமணத் தொடர்புகளைத் தம் இனத்திற்குள்ளேயே வைத்துக் கொள்பவராகவும் இருக்கும் இனத்தைப் பழங்குடி இனம் என்பர்.

'Tribes' என்ற சொல் பழங்குடி மக்களையே குறிக்கிறது. தமிழ் அறிஞர் இச்சொல்லுக்கு இனக்குழு மக்கள்' என்று பொருள் கூறுவர். 'பழங்குடி, முதுகுடி, ஆதிக்குடி, தொன்மைச் சமுதாயம், சிறு குழுக்கள், குழுக்கள், கால்வழி, பெருங்கால்வழி, சிற்றூர்கள் முதலிய வட்டாரக் குழுக்களை உள்ளடக்கியதும் பொதுவான மொழி (அல்லது) கிளை மொழியையும் பொதுவான பண்பாட்டையும் கொண்டதுமான ஓர் அமைப்பு பழங்குடி" என்று மானிடவியல் விளக்கம் தருகின்றது. (க.அழகர்., விருதுநகர் மாவட்டம் பளியர்களின் வாழ்வியல், ப.7)

தமிழகத்தில் 37 வகையான பழங்குடி சமூகங்கள் வாழ்கின்றன. வனப்பாதுகாப்பு, கனிம வளங்கள், தொழில்மயமாக்கம் எனப் பல்வேறு காரணங்களால் இப்போது இந்தப் பழங்குடிகளின் வாழ்க்கை பெரும் இன்னலுக்கு உள்ளாகியிருக்கிறது. தங்கள் பண்பாட்டை, தொழில், நிலத்தை, வாழ்வாதாரத்தை இழந்து பிற மக்களோடும் இணைய முடியாமல் தங்களின் தொன்ம வாழ்க்கையையும் வாழ முடியாமல் தவிக்கிறார்கள். பிறப்பு முதல் இறப்பு வரை இயற்கையோடு இணைந்த சடங்குகள், வழிபாட்டு முறைகளைக் கொண்ட பழங்குடிகளின் மரபு படிப்படியாக மறைந்து வருகிறது. பழங்குடி இனமான பளியர்களின் வாழ்வியலை கொ.மா.கோதண்டம் எழுதிய 'குறிஞ்சாம்பு'(மகாலிங்க மலையில் வாழும் பளியர்களைக் குறித்த புதினம்) புதினத்தை முன்வைத்து ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பளியர்கள்:

பளியர்கள் பழையோர்' (ஆதிமக்கள்) என்றே பெயர் பெற்றிருந்தனர். கால ஓட்டத்தில் பழையோர், பழியர் , பளியர் என்றாகி விட்டது. பழையர் பற்றிய குறிப்புகள் அகநானூற்றிலும் (பா.எ.201.6, 331.5) காணப்படுகின்றன. பழனி மலைக்குரிய பழனியன் பளியன்' என்று மருவி வந்து விட்டது என்பது இன்னொரு கருத்தாகும். இன்று பழியர்கள் என்றழைக்கப்படும் மக்கள் இரண்டு பிரிவினராகக் காணப்படுகின்றனர்.

1. கீழ்மலைப்பளியர்
2. மேல்நிலைப்பளியர்

பழனிமலையின் மேல் பகுதிகளில் வாழும் பளியர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். இவர்கள் கீழ்மலைப் பளியர்கள் வீட்டில் சாப்பிட மாட்டார்கள். கீழ்மலைப் பளியர் இவர்களிடம் வந்தால் பச்சைப்படியைத் தான் (சமைக்காத பொருள்) கொடுப்பார்கள்.

பளியர்களின் உட்பிரிவுகள்:

பளியர்கள் பழனிமலை, ஏலக்காய் மலை, வருசநாடு மலை முதலான மலைகளில் வாழ்ந்தாலும் கீழ்ப்பழனி மலையில் தான் எண்ணிக்கையில் அதிகம் உள்ளனர். மேல் பழனிமலையில் வாழ்பவர்கள் மலைப்பளியர்' என்றும், கீழ்ப் பழனிமலையில் வாழ்பவர்கள் 'கல்லுப்பளியர்' அல்லது 'கல் நாட்டுப் பளியர்' என்றும் புடைப் பளியர்' என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பல உட்பிரிவுகளைக் கொண்டிருக்கின்றனர். அவை அமணப் பளியர், ஊசியிலைப் பளியர், காட்டுப் பளியர், கிழங்குப் பளியர், நீர் பளியர், சருகுப் பளியர், கருப்பளியர், தாளப் பளியர், தெய்வப் பளியர், தேக்கிலைப் பளியர், தேன் பளியர், வெள்ளைப் பளியர். (பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், ப.88)

மொழியும் அடையாளமும்:

இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது பழங்குடிகளின் அடையாளமும் ஒருங்கிணைப்பும் பண்பாடும் சிதையத் தொடங்கின. மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது பழங்குடிகளின் மொழிகளோ, பண்பாடோ கவனத்தில் கொள்ளப்படவில்லை. பளியர்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ள கார்ட்னர் கூறும் போது, இவர்களிடம் பச்சை நிறத்தைக் குறிக்கும் சொல் இல்லை என்பது வியப்பாக உள்ளது என்கிறார். திராவிட மொழிக் குடும்பத்தின் அனைத்து மொழிகளிலும் காணக்கூடிய பச்சை' என்னும் சொல் பளியர்களிடம் இல்லாமலிருப்பது இவர்களின் தொன்மையை நுட்பமாக ஆராய வேண்டியிருக்கிறது என்பார் காப். பளியர்கள் ஆதியில் தமிழோடு தொடர்புடைய மொழியைப் பேசாமல் இருந்திருக்க வாய்ப்புள்ளதையே மேற்கூறிய விவரம் மூலம் ஊகிக்க வேண்டியுள்ளது என்கிறார் காப். (பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், ப.99)

பழையோர்' என்னும் வழக்கே பளியர் என மருவியுள்ளதால் மேற்கூறிய கூற்று பொருத்தமானதாக இல்லை. இன்று பழங்குடி மக்களின் மொழிகள் அழிந்து கொண்டும் மாற்றம் பெற்றும் வருகின்றன. இவர்கள் வெளி உலகத்தோடு வேகமாகத் தொடர்பு கொண்டு வருகின்றனர். அவரவர் கிளைமொழிகளை விடுத்துத் தமிழின் தரமொழியில் கல்வி கற்கத் தொடங்கி விட்டனர். இவர்கள் பேசும் மொழி தமிழ்மொழியாக இருந்தாலும் வார்த்தைகளின் முடிவில் ங்' எனும் ஈனசுரத்தில் முடித்துப் பேசுகின்றனர். அவற்றைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கும். "**சரி அப்பனூங் அவள் மானைப் போல திரும்பி ஓடினாள் (குறிஞ்சாம்பூ**, ப.8) என்ற புதினத்தின் வரிகள் பளியர் இன மக்கள் மொழியை உச்சரிக்கும் முறையைப் புலப்படுத்துகின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பளிப்பாட்டம்: (பளியர்களுக்கே சொந்தமான தொழில்)

பளியர்களின் வேட்டை முறை பலவகையானது. அதில் ஒன்று தண்ணீர் வைத்துப் பிடிப்பது. இது ஓர் எளிய முறையாகும். வேட்டைக்குச் செல்லும் பளியர்கள் தலையில் சட்டி நிறையத் தண்ணீரைச் சுமந்து செல்வார்கள். கோடைக் காலத்தில் தண்ணீரைப் பள்ளத்தில் ஊற்றி விட்டு அருகில் உள்ள புதரில் மறைந்து கொள்வார்கள். தண்ணீரைக் குடிக்க வரும் மான், காட்டுப்பன்றி, மயில் போன்ற எதுவாயினும் பிடித்து விடுவார்கள். தற்போது இவ்வாறு பிடிப்பதில்லை. குறிஞ்சிப்பூ எடுப்பது, தேன் எடுப்பது ஆகியவை அவர்களின் தொழில்களில் தனித்துவமானது.

கடுக்காய், பூந்திக்கொட்டை, குங்குலியம் முதலானவற்றையும் சேகரித்துக் கொடுப்பர். பெருந்தேன், சிறுதேன், கொசுவந் தேன், பொந்துத் தேன் ஆகிய நான்கு வகையான தேன்களைச் சேகரிக்கின்றனர். தை மாதம் முதல் சித்திரை மாதம் வரை கிழங்குகள் சேகரிப்பர். ஒத்தைக்கண் ஏணி கொண்டு மிளகு பறிக்கிறார்கள். இந்தப் பணியைப் பளிப்பாட்டம்' என்பார்கள். காலை ஏழு மணி முதல் மாலை ஐந்து மணி வரை காட்டில் இந்த வேலைகளைச் செய்வார்கள். பளிப்பாட்டம் இல்லாத காலங்களில் கிழங்கு தேடித் தோண்டுவதே தொழிலாகும். மலைபடு பொருள்கள் சேகரிப்பது இப்போது அரசால் தனியாருக்கு ஏலம் விடப்படுகிறது. ஏலம் எடுக்கும் ஒப்பந்தக்காரர்களிடம் பளியர்கள் கூலிகளாகச் சேர்ந்து வேலை செய்கிறார்கள். வேட்டையாடுதல், தினை, சாமை ஆகியவற்றைப் பயிர் செய்வது, மலைகளில் கிடைக்கும் பழங்களைச் சேகரிப்பது ஆகியவையே இன்று பளியர்களின் தொழிலாகும். கானகப் பொருள்கள் சேகரிப்பு, முதலாளிகளின் காப்பி, தேயிலைத் தோட்டங்களில் ஆரஞ்சு, பழ மரங்கள் தோட்டங்களில் வேலை செய்வது, மரம் வெட்டுவது, கொத்துவது ஆகிய வேலைகள் செய்கின்றனர். குத்தகை பிடித்து வேலையும் செய்கிறார்கள். நூற்றில் ஒரு பங்கு தான் இன்று தினை, சாமை, கேழ்வரகு ஆகிய பயிர்கள் வேளாண்மை செய்யப்படுகின்றன. இப்பொழுது சிறிதுகாலமாக ஆடுமாடுகளும் வளர்த்து வருகிறார்கள்.

பளியர்களுக்கும் குறிஞ்சிக்கும் உள்ள தொடர்பு:

முருகனின் மனைவியாகிய வள்ளி தங்கள் சமூகத்தவர் என்று பெருமிதத்துடன் கூறுகிறார்கள். தேன் எடுப்பதற்கு முன் ஒரு சடங்கு செய்வர். அச்சடங்கின் பெயர் பூவாட்டு'. பூவாட்டை நடத்துகின்றவர் வெறியாட்டினையும் மேற்கொள்வார். இன்றும் பழனி மலைப்பகுதிக்குச் சென்றால் வெறியாட்டு' என்ற சொல்லைக் கேட்கலாம். மேல்மலைப் பளியர்கள் வெறியாட்டு' என்றே இன்றும் சொல்கின்றனர். வேலன் வெறியயர்ந்து செயல்படும் வெறியாட்டம் பளியர் வாழ்வில் இன்றும் தொடர்வது வியப்பாக உள்ளது. சங்ககால நிகழ்வின் தொடர்ச்சி பளியர் வாழ்வியலில் காண முடிகிறது. சங்க இலக்கியத்தில் வெறியாட்டு என்ற சொல் கிடையாது. **வெறிஅயர்களம்**' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் **வெறியாட்டு அயர்ந்த காந்தளும்**;' (தொல்.பொருள். புறம்.நூற்.63) என்று கூறுகிறது. சங்க இலக்கியத்தில் குறிஞ்சி பாடிய கபிலர் பூவாட்டு' பற்றி எதுவும் கூறவில்லை.

இராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் காணப்படும் குறிஞ்சி மலர்கள் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறைப் பூக்கும் தன்மை வாய்ந்தது. அவ்வாறு குறிஞ்சி மலர் பூக்கும் போது அதனை வரவேற்றுக் கொண்டாடி மகிழும் விழாவே சாமி கும்புடு விழா' ஆகும். சாமி கும்புடு விழாவிற்கு முன்னர் ஆண்களும் பெண்களும் கைகளைக் கோர்த்துக் கொண்டு ஹோ ஹோ' என ஓசைகளை எழுப்பி குதித்து ஆடி அருவிக் கேணியில் குளிப்பர். அதனை,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"**அருவிக்கேணியில் ஆண்களும் பெண்களுமாக கைகளைக் கோர்த்து ஹோ ஹோ என ஓசைகளை எழுப்பிக் கொண்டும் குதித்து ஆடி கொண்டும் குளித்தனர்**". (**குறிஞ்சாம்பூ**, **ப**.*10)* என்ற புதின வரிகள் புலப்படுத்துகின்றன. சாமிகும்புடு விழாவில் பச்சைப் பந்தல் போட்டுத் தேனைப் படையலாக இட்டுக் குங்குலியத்தைச் சாம்பிராணியாகக் காட்டி சாமிக்குப் பூஜை செய்வர். பின் வயதான கிழவி அருளாடி ஓய்வாள். அனைவரும் அவளிடம் விபூதி பெற்று ஆளுக்கொரு குறிஞ்சி மாலைகளை அணிந்து கொள்வர். பின் சுற்றி நின்று கைகோர்த்துக் கொண்டு வரையாட்டுத் தோலால் செய்த தப்பை வைத்து இசை எழுப்பி குதித்துக் களியாட்டம் போடுவர். உடன் குழலும் வாசிப்பர். அப்போது,

குறிஞ்சானும் பூத்திரிச்சி
குன்னெல்லாம் பரவிடுச்சி
சாமி பூச போட்டா
நாம சங்கடம் தீரும். (**குறிஞ்சாம்பூ**., **ப**.*11)*

என்று பாடல் பாடி ஆடுவர். ஆடி முடித்ததும் வட்டமாக அமர்ந்து தொன்னைத் தேனும் அவித்த கிழங்குகளையும் உண்பர். இவ்வாறு குறிஞ்சிப் பூத்ததற்காகச் சாமி கும்புடு விழாவினைக் கொண்டாடுவர். குறிஞ்சி மலரின் அழகினையும் அதன் தேனின் சுவையையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன.

"**கருங்காற் குறிஞ்சி மதன்இல் வான்பூ**
ஓவுக்கண்டன்ன இல்வரை இழைத்த. (**நற்றிணை, பா.எ**.*268)*

என்ற பாடல் அடிகள் வாயிலாக குறிஞ்சி மலர் மற்றும் குறிஞ்சித் தேனின் இனிமையைத் தெரிந்து கொள்ளலாம். குறிஞ்சி பூக்கும் காலத்தில் அதிகபடியான தேன் மக்களுக்கு கிடைக்கும். எனவே தான் குறிஞ்சி பூப்பதனை வரவேற்று சாமிகும்புடு விழாவினைக் கொண்டாடுகின்றனர்.

மலைப்பகுதியில் குறிஞ்சி மலர் பூத்து, காய்த்து குறிஞ்சி அரிசி வெளிப்படும். அந்த அரிசியைச் சேகரித்து வைப்பர். அதை மாவாக்கி குழந்தைகளுக்கு சத்துமாவாகத் தயாரித்துக் கொடுப்பர். 'கட்டை நோன்பு' எனும் சடங்கை செய்து குறிஞ்சி காலத்தை வழி அனுப்புவர். பளியர்களின் வாழ்வியலில் குறிஞ்சி நிலத்தின் செயல்பாடுகள் பற்றி அறியமுடிகிறது. அதனால் இவர்கள் வந்தேறிகள் அல்ல. பூர்வகுடிகளே என்பதையும் நம்மால் உணர முடிகிறது.

பளியர்களின் குடியிருப்பும் நம்பிக்கையும்:

குடியிருப்பு முறையும் வீடுகளின் அமைப்பும் ஒரு சமூகத்தின் அகவயமான பண்பாட்டின் குறியீடுகள் என்பதில் ஐயமில்லை. அவை அச்சமூகத்தின் சுற்றுச்சூழல் தகவமைப்பையும் பொருளாதார நிலையையும் சார்ந்துள்ளன. பழனி மலையின் மேற்பள்ளத்தாக்கிலும் வருச நாட்டுப் பள்ளத்தாக்கிலும் ஏலக்காய் மலையிலும் காடுகளிடையே வாழ்கிறார்கள். ஈத்தைப் புல்லால் வேயப்பட்ட குடிசைகளைத் தவிர மரங்களின் மேல் மேடை அமைத்தும், குகைகள், பாறைகளின் அடிப்பகுதி ஆகிய இடங்களில் தற்காலிகமாகத் தங்கியும் வாழ்வார்கள்.

பளியர்களின் முன்னோர்கள் வாழ்ந்த இடம் **பேத்து**' என்று அழைக்கப்படும். பேத்து பகுதியில் அவர்கள் வாழ்ந்த எச்சங்களைப் பார்க்க முடியும். உயரமான குன்றுகளில் வீடு கட்டி தங்கியுள்ளனர். ஒரு குன்றின் ஒலி மற்ற குன்றுகளுக்கும் கேட்கும் விதமாக தகவல்தொடர்பு கொண்டிருப்பர். பளியர்களின் ஈமச்சடங்கில் இம்முறையினைக் காணலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பளியர்கள் அவர்களின் குழுவில் இறந்தவர்களை வெட்டவெளியில் சரிவு பாதையில் குகையின் வழியாகக் கொண்டு செல்வர். குகையின் உட்புறத்தில் உள்ள பள்ளத்தில் பிணத்தைப் போடுவர். பிணத்தைப் போட்டு விட்டு வரும் வழியில் தரகுப் புல்லை அறுத்து மூன்று இடங்களில் குவித்து தீ வைத்து அது ஆறியதும் அதனை அவர்கள் தாண்டி வருவர். பின் ஆற்றில் கைகால்கள், முகம் கழுவி விட்டு அவரவர் குச்சில்களுக்குச் செல்வர். பின் அவர்கள் கவலைகளை மறக்க கஞ்சா இலைகள், ஜாதிக்காய், நெக்கட்டாங்காய்களைக் கொண்டு தயாரித்த மதுவை அருந்துவர். அன்றிரவு மலை உச்சியில் நின்று குழல் ஊதுவர். பிற திசைகளில் இருக்கும் பளியர்கள் இசை ஒலியின் குறிப்பால் சாவு செய்தியை அறிந்து அங்கே மறுநாள் வருவர். மாலையில் அனைவரும் இணைந்து மாமிசம், கிழங்கு, தேன், காட்டுப் பழங்கள் முதலியவற்றைப் பிணத்தைப் போட்ட குகையில் போடுவர். இறந்தவன் மற்றும் அவன் கூட்டாளிகளும் அதை சாப்பிட்டு இவர்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்பது பளியர்களின் நம்பிக்கை ஆகும். இறப்பு நிகழ்வில் கலந்து கொள்ள வரும் பளிய மக்கள் அரிசி, காய்கறிகளைக் கொண்டு வருவர். அதை அனைவரும் சமைத்து சாமிக்கு முன் படையலாகப் போட்டு,

இடஞ்சாரி வலஞ்சாரி வராதீங்க
எங்க சின்னஞ்சிறுசுகளைப் பாராதீங்க
கல்லுல கட்டியில ஒண்டாதீங்க
முள்ளுல மரத்துல அண்டாதீங்க ***(குறிஞ்சாம்பூ, ப.32)***

என்ற பாடல் பாடி உணவினை உட்கொள்வர் என்ற செய்தியைப் புதினம் சுட்டுகிறது. மலைப்பகுதியில் உள்ள பேத்துகளைத் தோண்டி எடுத்தால் பழங்கால மக்களின் பணிபாடுகளைக் காணலாம். இன்றுங்கூட பேத்துப்பகுதிக்கு அருகில் பளியர்கள் இருப்பதைக் காணலாம்.

திருமணமுறை:

பளியர்களின் திருமணமுறை உடன்போக்கு முறையிலும் அமைந்துள்ளது. திருமணத்தில் ஒரு கட்டுப்பாடு உண்டு. எல்லோரையும் முறையாக அழைத்து வந்து திருமணம் செய்தால் தாலி கட்டுவர். இல்லையெனில், உடன்போக்கு சென்றவர்களை அழைத்து வந்து கருகமணி மட்டும் போடுவர்.

குறிஞ்சாம்பூ புதினத்தில் பளியர் குலப்பெண் பூப்பெய்தி விட்டால் காட்டிற்குள் பெரிய மரத்தில் பரண் அமைத்து அதில் தங்க வைப்பர். உணவு, தண்ணீர் போன்றவற்றை உறியில் வைத்து மேலே அனுப்புவர். பதினாறு நாட்கள் அவள் யாரையும் பார்க்காமல் தனிமையில் இருக்க வேண்டும். பதினாறு கழிந்ததும் ஊர்ப்பெண்கள் அவளை ஆற்றங்கரைக்கு அழைத்துச் செல்வர். சடங்கு முதலியவற்றைச் செய்து குளிப்பாட்டி, மலர்கள் சூட்டி கோயிலுக்கு அழைத்துச் செல்வர். கோயிலில் இருந்து வரும் போது முறைப்பையன் எதிரில் வர வேண்டும். அன்றிரவு அவர்களைத் தனி குச்சிலுக்குள் அனுப்புவர். அவர்களின் மனம் ஒன்றினால் மறுநாள் அவர்களுக்குத் திருமணம் நடைபெறும். மனம் ஒன்றவில்லை என்றாலும், பெண்ணுக்கு விருப்பம் இல்லை என்றாலும் ஆண் குச்சிலை விட்டு உடனே வெளியேறி விட வேண்டும். மறுநாள் அடுத்த இளைஞனை குச்சிலுக்குள் அனுப்புவர். முதல் நாள் ஏமாற்றம் அடைந்து வந்தவனுக்கு வேறு பெண்ணை மணம் முடித்து வைப்பர். பெண்கள் ஆளாகும் போது முறைப்பையன் இல்லையென்றால் இச்சடங்கு நடத்தப்படுவதில்லை. அப்பெண்களுக்கு அயலூர்காரனை மணம் முடித்து வைக்கும் வழக்கமும் இருந்துள்ளது. இதனை,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"உனக்கு தெரியாதாக்கும் நான் ஆளான சமயத்துல இங்கன யாரும் மொறப்பய்யன் இல்ல. அதனால என்கண்ணாலம் விட்டுப்போச்சி. செண்பகத்தோப்புக்காரனோ, சேத்தூருக்காரனோ தான் பார்த்து முடிக்கணும்." (**குறிஞ்சாம்பூ**, ப.*30)* என்ற புதின வரிகளின் மூலம் அறியமுடிகிறது. மேலும் தான் விரும்பிய பெண்ணை ஆண் கவர்ந்து சென்று காட்டுக்குள் இரவு முழுவதும் வைத்திருந்து பின் ஊருக்குள் திரும்பி வருவதும், ஊரார் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் பழக்கம் இருந்துள்ளதையும் புதினம் வாயிலாக அறியமுடிகிறது.

மருத்துவமுறைகள்:

இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த பளியர்கள் தங்களுக்கு உண்டாகும் நோய்களுக்கும் இயற்கையையே நம்புகின்றனர். பளியர்களைச் சித்த வைத்திய மருத்துவர்கள் எனலாம். தம் உடம்பில் எந்த நோய் வந்தாலும் மூலிகைகளைப் பயன்படுத்துகிறார்கள். பளியர்கள் மகப்பேறு வலி கண்ட பெண்ணை வேங்கை மரத்தில் நிற்க வைத்தவாறு கட்டி விடுவர். பச்சிலையை அரைத்து உட்கொள்ளச் செய்வர். ஆடைகளை அகற்றி உடலிலும் தேய்த்து வயிற்றைக் கைகளால் அமுக்கி குழந்தையைப் பெற்றெடுக்க வைப்பர். பின் தொப்புள் கொடியைச் சீப்புக் கல்லால் அறுத்து விடுவர். மூங்கில் குவளையில் வைத்திருக்கும் கால்படித் தேனைப் பிரசவித்த பெண்ணுக்கு அருந்தக் கொடுப்பர். சிறிது நேரத்திற்குப் பின் பாலிலைச் சாற்றினைக் கொடுத்து கட்டுகளை அவிழ்த்து விட்டுப் பத்து நாள் தனி வீட்டில் வைத்திருப்பர்.

> **"மூங்கில் குவளையில் வைத்திருந்த கால் படித் தேனைப் பெற்றவளுக்கு அருந்தக் கொடுத்தனர்."** (**குறிஞ்சாம்பூ**, ப.*59).*

தொடக்க காலத்தில் கர்ப்பவதிப் பெண்ணின் வயிற்றை அமுக்கிக் குழந்தையை எடுத்த வழக்கம் இப்பொழுது மறைந்து விட்டது. இப்பொழுது பளியப் பெண்களே பிரசவம் பார்க்கின்றனர். எளிதாகக் குழந்தை பிறக்க நார்த்தம் பட்டையை இடித்து, அத்துடன் விளக்கெண்ணெய் கலந்து கொடுத்த வழக்கம் இப்பொழுது மறைந்து விட்டது. இப்பொழுது கர்ப்பவதியின் வயிற்றின் மீது எண்ணெய் மட்டும் தடவுகிறார்கள். தற்காலத்தில் இவர்கள் பிரசவத்திற்காக மருத்துவமனைக்குச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும். இதனை, **"ஆனால் இன்று நரசிம்மன் வந்தால் ஜீப்பில் டாக்டரிடம் அழைத்துச் செல்லும் நிலை வந்ததை எண்ணி பெருமைப்பட்டாள்"** (**குறிஞ்சாம்பூ**, ப.*59)* என்ற வரிகள் சுட்டுகின்றன.

மேலும், வயிற்று உழைச்சலுக்கு கடுக்காப்பூவைப் பயன்படுத்துவர். உடலில் உள்ள சூட்டைப் போக்கிக் குளிர்ச்சியை உண்டாக்க கல்தாமரை, கல்பிசின், வேப்பிலை போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். முழங்கால் வாதத்திற்கு ஆட்டுக்கால் கிழங்கு, மயில்கால் பச்சிலையினைப் பயன்படுத்துவர். வாயில் புண் வந்தால் மொழி முருங்கையினை அரைத்துப் போடுவர். வேங்கைப்பால் மரத்தின் பால் காய்ந்த பின்பு கறுப்பாக மாறுகிறது. இது பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் நெற்றிப் பொட்டாக வைக்கப் பயன்படுகிறது.

தெய்வ வழிபாடுகள்:

பளியர்கள் தங்களுக்கு நன்மை செய்யும் பொருட்டு மலையிலுள்ள பல தெய்வங்களை வணங்குகின்றனர். பளியர்கள் முற்காலத்தில் பளிச்சி' என்ற பெண் தெய்வத்தை வணங்கியிருக்கிறார்கள். இதையே பால்க்ஸ் என்ற அறிஞர், "*1981* இந்திய மக்கள் கணக்கீட்டின்படி பளிச்சியம்மாளைத் தவிர மற்றொரு கடவுளைப் பற்றி இவர்கள் அறிந்து இருக்கவில்லை" என்று கூறுகிறார். *(Ethnographic Notes and Scheduled Tribes Census of India, p.201)* பளிச்சிக் கோயிலில் பாறையில் சிறிய கருங்கல் நடப்பட்டு பாறையைச்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சுற்றிலும் மண் திட்டுப் போட்டு முழங்காலளவு சுவர் எழுப்பி வழிபடுவர். அதனையே அவர்கள் பளிச்சிக் கோயிலாக வழிபடுகின்றனர். இதனை, "**சாமி அதோ பாருங்க அதுதான் பளிச்சி கோயிலு**" (**குறிஞ்சாம்பூ**, **ப**.77) என்ற உரையாடல் புலப்படுத்துகிறது.

பளியர்களுக்கு நிரந்தரக் கோயில்கள் கிடையாது. குத்துக்கல், பாறை போன்றவற்றை முருகனாக நினைத்து வழிபடுவர். விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் அருகில் உள்ள அய்யனார் கோயிலுள்ள பளியர்கள், மஞ்சனைப் பேச்சயம்மாள், வள்ளி, காளி, முருகன், மாவரசியம்மன், பொம்மக்கா, ஏழுகன்னிமார், இராக்காச்சி, கருப்பசாமி, பளிச்சி போன்ற தெய்வங்களை வணங்குகின்றனர். திருவில்லிபுத்தூர் செண்பகத் தோப்பிலுள்ள பளியர்கள் கோட்டமலையான், பொங்காட்டான், பட்டானி, மேமலையாள், செண்பகவள்ளி, காலாடி, இராக்காச்சி, கருமலையாள், மஞ்சனைப் பேச்சியம்மாள், அய்யனார், இராகமணி, கருப்பசாமி போன்ற தெய்வங்களையும், பிளவக்கல், மகாலிங்கம் கோயிலில் உள்ள பளியர்கள் சந்தன மகாலிங்கம், சுந்தர மகாலிங்கம் போன்ற தெய்வங்களையும் வணங்குகின்றனர்.

உயரமான பாறையிலுள்ள தேனை எடுப்பதற்கு மரங்களின் மீது படர்ந்த கருங்கொடியின் வழியே ஏறிச் செல்லுகின்றனர். அப்பொழுது தமக்குப் பெண் கொடுத்த மைத்துனனைக் கீழே நிற்க வைக்கின்றனர். அடுத்தவனை நிற்க வைத்தால் பொறாமையின் காரணமாக அரிவாளைக் கொண்டு கொடியை வெட்டி, மேலே கொடியில் உள்ளவனைச் சாகடிப்பான் என எண்ணுகின்றனர். ஆனால், மைத்துனன் தனது தங்கையின் வாழ்வுக்காக இச்செயலைச் செய்ய மாட்டான் என்று கருதுகின்றனர். **மலை ஏறப் போனாலும் மச்சினன் துணை வேண்டும்**' எனும் பழமொழி இந்நிகழ்வில் இருந்துதான் வந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நாகபீடத்துக்கு முன்னால் பூசை செய்வது, தாரை தப்பட்டைகள் முழங்குவது, குறிஞ்சிப்பண் பாடுவது, புல்லாங்குழல் வாசிப்பது, சுற்றி நின்று ஆணும் பெண்ணும் கைகோர்த்து ஆடுவது போன்றவற்றை மேற்கொள்வர். பளியர்கள் புல்லாங்குழல் இன்றி தெய்வங்களை வழிபடுவதில்லை. ஒவ்வொரு தெய்வத்திறகும் ஓர் இசை உண்டு. எ.கா. நாகம்மாள் என்ற தெய்வத்திற்கு இசை வாசித்தால் அந்தப்பெண் நாகம் போன்று ஆடி வருவாள்.

புழங்குபொருட்கள்:

அன்றாட வாழ்வில் மக்கள் தங்கள் தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்ற பொருட்களைப் புழங்குபொருள் என்கிறோம். முதன் முதலாகப் புழங்கு பொருளைக் கண்டறிந்தவர்கள் கோத்தர் இனப் பழங்குடிகளே. இவர்கள் நீலகிரி மாவட்டத்தில் வாழ்ந்து வருகிறார்கள். தங்களுக்குத் தேவையான பொருளைத் தாங்களே தயார் செய்து கொள்வார்கள்.

பளியர்கள் தங்களுக்கு உணவு சமைப்பதற்கு மண்பானைகள், அலுமினியச் சட்டிகள், சிறிய மண்சட்டிகள் போன்றவற்றைப் பயன்படுத்துகிறார்கள். அகப்பை, தேக்கு இலைகள், உலைமூடி, சாணக்கு போன்ற பொருள்களைப் பயன்படுத்துகிறார்கள். '**மற்றவர்கள் தரையில் தான் சமையலுக்குச் சில மண் பாத்திரங்கள். மூன்று கூடைகள், சில அழுக்குத் துணிகள், கம்பளிகள், கிழங்கு தோண்டுவதற்கு சிறிய கடப்பாறை போன்ற மரக்கம்புகள் அரிவாள் இவையே ஒரு குடும்பத்தின் உடமைப் பொருட்கள்**" (**குறிஞ்சாம்பூ**, **ப**.3) என்ற வரிகள் சுட்டிக்காட்டுகிறது. அய்யனார் கோயில், விரியன் கோயில், மகாலிங்கம் கோயில், பிளவக்கல் போன்ற இடங்களில் வாழும் பளியர்களைத் தவிர செண்பகத் தோப்பில் வாழும் பளியர்கள் இப்பொழுது எவர்சில்வர் குடம், அண்டா, பித்தளைக்குடம், கும்பா போன்ற பாத்திரங்களை வைத்துள்ளனர். உரல், உலக்கை, உழக்கு, நாழி போன்றவையும் அவர்களின் புழங்குபொருட்களாக உள்ளன. தொடக்கத்தில் கேழ்வரகு,

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

கம்பு போன்ற தானியங்களைப் பாறையில் போட்டுக் கல்லின் மூலம் அரைத்துக் கூழ் காய்ச்சிய இவர்கள் இப்பொழுது தானியங்களை உரலில் போட்டு இடித்துக் கூழாக்கி உண்ணுகின்றனர். காட்டிலுள்ள கிழங்குகளைத் தோண்டி எடுப்பதற்கு கூர்மையான நீண்ட கம்பி வைத்திருக்கிறார்கள். விறகுகளை வெட்டி எடுப்பதற்கு அரிவாள், கோடரி போன்ற கருவிகளை வைத்துள்ளனர்.

முடிவுரை:

தமிழகத்தில் இன்று பழங்குடிகள் பல்வேறு நிலைகளில் மாற்றம் அடைந்து வருகின்றனர். அடிப்படை, அரசியல், வளர்ச்சிசார் பாதுகாப்பு, நிதி ஒதுக்கீடு ஆகிய வகைகளில் பழங்குடி மக்களுக்கு வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், பளியர் இன மக்கள் தங்களுக்கான தனித்த அடையாளத்தோடு மட்டுமே வாழ விரும்புகின்றனர். அரசு தரக்கூடிய அடிப்படை வசதிகளை ஏற்க மறுக்கின்றனர். இயற்கையாக வாழ்ந்து பழகிய அவர்கள் இயற்கையோடு இருக்கவே எண்ணுகின்றனர். இயற்கையைப் பாதுகாக்கவும் செய்கின்றனர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. பளியர் இன மக்களுக்கான தனித்துவமான நிலவியல் பண்புகள், சமூகச் கூறுகள், சமயக் கூறுகள், பண்பாட்டுக்கூறுகள், மொழி வழக்காறுகள் போன்றவற்றை மானிடவியலில் துணையோடு அணுகினால் பழங்குடிகளின் வாழ்வியலை அடையாளம் காண இயலும்.

துணைநூல்கள்:

1. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், அடையாளம் வெளியீடு, திருச்சி, 2017.
2. அழகர், விருதுநகர் மாவட்டம் பளியர்களின் வாழ்வியல், வெண்ணிலா வெளியீடு, இராஜபாளையம், 2004.
3. கோ.மா.கோதண்டம், குறிஞ்சாம்பூ, காவ்யா பதிப்பகம், சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

41. யாத்திரை’ நாவல் காட்டும் தலித்துகளின் வாழ்வியல் போராட்டங்கள்

முனைவர் ஜே.மார்க்ரெட்,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
சாராள் தக்கர் கல்லூரி,திருநெல்வேலி.
9944387306 - margaretsuresh1978@gmail.com
DOI 10.5281/zenodo.17217091.

Abstract:

The Dalit people who were in slavery converted to Christianity, feeling that they were not respected as a people. The lower caste people had the idea that the solution to caste oppression was to convert to Christianity. But they were saddened by the practice of untouchability even in Christianity. Mark's novel 'Yathrai' highlights the caste discrimination prevailing in Christianity. This article attempts to examine the life struggles of Dalits.

Key Words: Dalit - Literature - Untouchability - Novel - Struggles.

முன்னுரை

அடிமைத்தனத்தில் இருந்த தலித் மக்கள் தங்களை மக்களாக மதிக்காததை எண்ணி, கிறித்தவச் சமயத்திற்கு மாறினார்கள். சாதிக் கொடுமைக்குத் தீர்வு கிறித்தவச் சமயத்திற்கு மாறுவது தான் என்ற எண்ணம் அடித்தட்டு மக்களிடத்தில் இருந்தது. ஆனால் கிறித்தவச் சமயத்திலும் தீண்டாமை கடைப்பிடிப்பதை எண்ணி மனம் நொந்தார்கள். கிறித்தவச் சமயத்தில் நிலவும் சாதிப்பாகுபாட்டினை மாற்குவின் யாத்திரை’ நாவல் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. தலித்துகளின் வாழ்வியல் போராட்டங்களை ஆராய இக்கட்டுரை முற்படுகிறது.

விடுதலை தரும் மதம் கிறித்தவம்

இயேசு உலகத்தில் வாழ்ந்த காலத்தில், சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களை நாடிச்சென்று அவர்களது உயர்வுக்காகப் பாடுபட்டார். இழிகுலமாக கருதப்பட்ட சமாரியப் பெண்ணிடம் உரையாடி நீர் அருந்தி யூதர்களிடையே இருந்த கடுமையான சாதிக்கோட்பாட்டினை உடைத்தார். கிறித்தவத்திலும் தீண்டாமை நிலவுகிறது. கிறித்தவத்திற்கு மாறிய பார்ப்பன வெள்ளாளர்களே சாதி கிறித்தவர்களாக மீண்டும் இந்துப் பண்பாட்டையே ஏற்படுத்திக் கொண்டார்கள். தேவாலய காரியங்களில் தங்களுக்கு முதலிடமும் மரியாதையும் கிடைக்கும் நிலையை அமைத்துக் கொண்டார்கள். தலித் கிறித்தவர்களுக்கு இங்கும் தீண்டாமை அமலாக்கப்பட்டது.

படைப்பாளி மாற்குவின் கொள்கையும் படைப்பும்

கிறித்தவச் சமயம் கூறும் சமத்துவம் சகோதரத்துவம் எல்லா மக்கள் மத்தியிலும் வேரூன்ற வேண்டும். செயலாக்கம் பெற வேண்டும் அதற்குத் திருச்சபை துணை நிற்க வேண்டும் என்று தீவிரமாக விரும்புவர். அதற்கென அயராது உழைப்பவர். வருவான் ஒருநாள்’, சுவர்கள்’, கத்தியின்றி இரத்தமின்றி’ முதலிய நூல்களையும் படைத்தவர்.

நாவல் நவிலும் கருத்துகள்

யாத்திரை’ நாவல் தலித் மக்களின் விடுதலைப் பயணத்தைச் சித்தரித்துக் காட்டுகிறது. தலித் கிறித்தவர்களுக்கு எதிராகப் பல ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் சாதிய ஒடுக்குமுறைகளை வெளிச்சமிடுகிறது. சாதிய கிறித்தவர்களின் அதிகார ஆணவம், தலித்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கிறித்தவர்களின் பிளவுப்பட்ட தன்மை எளிதாக பிறரை நம்பி ஏமாந்து போகும் வெகுளித்தனம், பொருளாதார நலிவு, மதத்தலைவர்கள் மீது மதிப்பு, கலகப் பண்பாடு, தலித் அல்லாத குருக்களது கபட நாடகம், சாதிய வளர்ப்பு முயற்சிகள், மதமும் புரோகித அமைப்பும், தலித்துகளுக்கு எதிராக இருப்பது, கிறித்தவ புரோகிதர்களையும், ஆயர்களையும், பூசைகளையும் நம்பிக் கொண்டிருக்கும் வரை தலித் கிறித்தவர்களுக்கு விடிவு ஏற்படாது என்ற எண்ணம், தலித் பெண்களது விழிப்புணர்வு போன்றவை நாவல் வெளிப்படுத்தும் கருத்துகளாகும்.

கிறித்தவ சாதிப் பாகுபாடு

தீண்டாமைக் கொடுமையை எதிர்த்துத் தலித் கிறித்தவர்கள் நாவல்கள் படைத்திருக்கிறார்கள். பாமா என்னும் தலித் கிறித்தவ பெண் எழுதிய 'கருக்கு' நாவலில், பல ஆண்டுகள் திருச்சபையின் கன்னியர் மடத்தில் துறவியாக இருந்து அங்கு நிலவும் தீண்டாமையை வெளிப்படுத்துகிறார். கிறித்தவ வட்டாரத்தில் நிலவும் சாதிப் பாகுபாட்டினை, தீண்டாமைக் கொடுமையை உணர்ந்து எழுதியவர் மாற்கு. யாத்திரை' நாவல் தலித் கிறித்தவ வட்டாரத்தில் குறிப்பிடத்தகுந்த தலித் நாவலாகப் பேசப்படுகிறது.

சாதிய ஆதிக்கம்

> **'நாங்களும் திருநாளுல கலந்துக்கிடுவோம்னு ஏன் நீங்க கேட்கக்கூடாது என்று கேட்டார் பாதர் ராஜா. அம்புட்டு திமிரான்னு வெட்டிக் கொன்னுப் போடுவாங்க" (யாத்திரை, ப.*46)***

பாதர் ராஜா, தலித் விடுதலைக்குப் பாடுபடுபவர். அந்தோணி மூலம் பிச்சூரில் நிலவும் தீண்டாமையைக் கேள்விப்பட்டு பிச்சூருக்கு வருகிறார். அங்கு தலித் ஒருவர் அவரோடு பேசும் உரையாடலில் அவ்வூரில் நிலவும் சாதிய ஆதிக்கத்தைக் காண முடிகிறது.

திருச்சபையில் நடக்கும் தலித் பிரச்சனைகள்

இயேசுவை வழிபடும் திருச்சபையிலும் சாதி வேற்றுமை காணப்படுகிறது. பாதர் ராஜாவிடம் அந்தோணி சொல்லுகிறபோது,

"சாமி, எங்க ஊருல ரெட்டியார் கிறித்தவங்க இருக்காறாங்க, பறக் கிறித்தவங்களும் இருக்கிறாங்க. இங்கு பறக் கிறித்தவர்களாகிய எங்களுக்குக் கோயில்ல தனி இடம் நாங்க பூசைக்கு உதவி செய்ய முடியாது. வாசகம் வாசிக்க முடியாது. பாதம் கழுவுற சடங்குல பங்கு கொள்ள முடியாது" (யாத்திரை, ப.*39)* திருச்சபை உயர்சாதி மக்களுக்ளுக்குரியதாக இருந்து வருகிறது. திருச்சபையைத் தலித்துகளுக்குரியதாக மாற்ற வேண்டும் என்று பாதர் ராஜா விரும்புகிறார்.

'பாதிக்கப்பட்ட தலித் கிறித்தவ மக்கள் எண்ணிக்கை திருச்சபையில் அதிகம். இவுங்களை ஒருங்கிணைச்சு ஒரு சக்தியாக உருவாக்கனும்" (யாத்திரை ப.*102)* என்கிறார் பாதர் ராஜா.

தலித் மக்களின் விடுதலை உணர்வு

சாதி ஒழிப்பு ஒன்றுதான் சமூகத்தின் விடுதலை என்பதை, **"இவுக சொல்றது பேமானியத் தனமாவுல இருக்கு அவுக தெருக்கள்ள இருக்கிற கோயிலுக்கு வானம் தோண்டியது நாம, கட்டடம் கொஞ்சம் கொஞ்சமா உசந்ததப் பார்த்து சந்தோசப்பட்டது நாம. கொடம் கொடமா வயக்காட்டுகள்ள இருந்து தண்ணி கொண்டு வந்து கொட்டுனது நாம, கல்லு, மண்ணு, செங்கல் சுமந்து கொண்டு வந்து போட்டது நாம. சித்தாரு வேல பூராம் செய்தது நாம, ஒரு காசு யாருட்டயும் வாங்காம வீட்டுக்கு ஒரு ஆளுன்னு தெனமும் வேலைக்கு வந்தது நாம. அவுங்க குடுத்த பணத்தையும், நம்ம செஞ்ச வேலயயும் வஞ்சிப் பாத்தா நம்மதான் கோயிலுக்கு அதிகமாக செஞ்சிருப்போம்.**

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அப்படி இருக்க கோயிலு அவுங்கதுன்னு எப்படிச் சொல்லலாம். இத சும்மா விடக்கூடாது. நமக்குக் கோயில்ல உரிம இருக்குன்னு காட்ட ஒரு போராட்டம் நடத்தனும்" (யாத்திரை ப.*81)* என்று கூறுகிறார்.

தலித் மக்கள் சாதிய, சமய, அரசியல், பொருளாதாரக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறுதல், பிறரைப் போல் மனிதர்களாக மாண்போடு வாழுதல் என்ற குறிக்கோள் நோக்கி இம்மக்களை வழிநடத்திச் செல்லத் தேவையான மதிப்பீடுகளை ஏற்படுத்தி அவற்றை அடைவதற்கான வழிவகைகளைத் தரும் கருத்துத் தொகுப்பே தலித்துகளின் விடுதலைக்கான கருத்தியலாகும்.

"நல்லா கேளுங்க நாம இந்த மறைமாவட்டத்தில் எண்பது சதவிகிதம் இருக்கோம். கேவலம் இருபது சதவிகிதம் இருக்கிற கொஞ்சப் பேரு நம்மள தீண்டத்தகாதவனா நடத்துகிறான். இனியும் பொறுக்கக் கூடாது"(யாத்திரை ப.*223)* ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் தன்மானத்தோடு வாழமுடியும். விடுதலையும் பெற முடியும் என்ற எண்ணம் தலித் கிறித்தவர்களிடத்தில் காண முடிகிறது.

பாத யாத்திரை- விவிலியக் கருத்துகள்

"இப்ப இந்த யாத்திர தொடங்கப் போகுது. இந்த யாத்திர மாதிரி பைபிள்ளையும் ஒரு யாத்திர இருக்கு. யாத்திராகமத்தில நாம அத வாசிக்கோம். எகிப்தியரின் அடிமைத்தனத்துல இருந்து இஸ்ராயால் மக்கள் விடுபட்டு பாலும் தேனும் ஓடுகிற கானான் நாட்டுக்கு யாத்திரைய ஆரம்பிக்கிறதுக்கு முன்னாலயும், ஆரம்பிச்ச பெறகும் எம்புட்டோ பிரச்சனைக இருந்துச்சு, ஆனா அந்த யாத்திரைக்கு கடவுள் துணையிருந்ததுனால வெற்றியா முடிஞ்சிச்சு அது மாதிரி, நம்ம யாத்திரை ஆரம்பிக்கவும் எம்புட்டோ பிரச்சனைக வந்துச்சு உங்க எல்லாருக்கும் அது நல்லா தெரியும். ஆனா கடவுள் நம்மகிட்ட இருந்ததுனால அந்த பிரச்சனை எல்லாம் மறைய, இப்ப யாத்திரைய ஆரம்பிக்கப் போறோம். நிச்சயமா கடவுள் நம்மோட கடசிவர இருப்பாரு. இஸ்ராயேல் மக்க அடிமைத்தனம் இருந்த எகிப்து நாட்டுலயிருந்து விடுதலை பெற்று யாத்திரையா வேற நாட்டுக்குப் போனாங்க. ஆனா நாம அடிமைத்தனம் இருக்கிற நாட்டுலயே விடுதலை தேடி யாத்திரையா போறேம்."(யாத்திரை ப. *264)*

ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் அடிமை முறைக்கு எதிராக விடுதலையைப் பெற பாத யாத்திரைக்குத் தயாராக வேண்டும் என்ற செய்தி நாவலின் இறுதியில் தரப்படுகிறது.

முடிவுரை

சாதியம் என்பது திருச்சபைக்கு எதிரானது. இயேசுவின் மதிப்பீடுகளுக்குப் புறம்பானது. திருச்சபைக்குப் பிடித்திருக்கும் ஒரு தொற்றுநோய். சாதியம் ஒழிக்கப்பட வேண்டும். தலித் இளைஞர்களிடம் காணப்படும் கலக உணர்வு, விடுதலை வேட்கை, சாதி எதிர்ப்பு, தலித் பெண்களின் எழுச்சி, திருச்சபைக்குள் நிலவும் சாதிபாகுபாடு, ஆதிக்க சாதியினரின் சாதிவெறி போன்றவை இந்நாவலில் காணக்கிடக்கின்றன.

துணைநூற் பட்டியல்

1. மாற்கு, யாத்திரை நாவல், பாவை பதிப்பகம், முதற்பதிப்பு ஜூலை *2011*
2. ராஜ்கௌதமன், தலித் பண்பாடு, நியூ செஞ்சுரி, முதற்பதிப்பு ஜனவரி *2018*

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

42. கைவிலங்கு (சாமுண்டி) - ஓர் உளவியல் பார்வை

திருமதி பா.செண்பகா,
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறைத்தலைவர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.

முனைவர் பா.பொன்னி,
இணைப்பேராசிரியர் & நெறியாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறைத்தலைவர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.

DOI 10.5281/zenodo.17217159.

Abstract:

Each human being is a separate world. The needs and expectations of each human being are different. This is the reason why something that seems right to one person may seem wrong to another. Every human being always has a thought about something in their mind. Their actions are based on those thoughts. When human thoughts often turn into problems, their personality is built on the basis of their ability to handle obstacles. In this way, in one of Jayakanthan's short stories, the story of Chamundi in the Handcuffs, we can see a problem developing in the mind of the man. As a result of obstacles, Chamundi undergoes a perversion. This article compares the reasons for the perversion with the elements mentioned by psychologists and thereby examines Chamundi's personality.

Key Words : Chamundi - Human being - Personality

முன்னுரை

மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி உலகம் எனலாம். ஒவ்வொரு மனிதர்களுடைய தேவைகளும், அவர்களின் எதிர்பார்ப்புகளும் வேறு வேறாகவே அமைகின்றன. ஒருவருடைய பார்வையில் சரி என்று தோன்றுகின்ற ஒன்று மற்றொருவருடைய பார்வையில் தவறு என்று தோன்றுவதன் காரணம் இதுவே எனலாம். ஒவ்வொரு மனிதர்களுடைய உள்ளத்திலும் எப்பொழுதும் ஏதோ ஒன்றைப் பற்றிய சிந்தனை இருந்து கொண்டே இருக்கும். அந்த எண்ணங்களின் அடிப்படையிலேயே அவர்களுடைய செயல்கள் அமைகின்றன. மனித எண்ணங்கள் பலநேரங்களில் சிக்கல்களாக மாறும் போது அச்சிக்கல்களை அவர்கள் கையாளும் திறனின் அடிப்படையிலேயே அவர்களின் ஆளுமை கட்டமைக்கப்படுகிறது.

அவ்வகையில் ஜெயகாந்தனின் குறும் புதினங்களில் ஒன்றான கைவிலங்கில் சாமுண்டி என்ற கதை மாந்தரின் மனதினுள் சிக்கல் உருவாவதைக் காணமுடிகிறது. அச்சிக்கலின் விளைவால் சாமுண்டியிடம் பிறழ்வு நடவடிக்கை ஏற்படுகின்றது. பிறழ்வு நடவடிக்கைக்கான காரணங்களை உளவியலார் குறிப்பிடும் கூறுகளோடு ஒப்பிட்டு அதன் வழி சாமுண்டியின் ஆளுமைத் தன்மையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

சாமுண்டி

சிறைச்சாலையில் கொட்டடியில் இருக்கும் கைதி. கைகளில் விலங்கு பூட்டப்பட்டிருக்கும்.

> **“இவன் யாரையும் மதிக்காமல் கால்மேல் கால் போட்டுச் சுவரின் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு பாட்டுப் பாடிக் கொண்டிருப்பான். பலதடவை அடித்து உதைத்து அவனை எழுந்து நிற்க வைத்திருக்கிறார்கள். அடிக்க அடிக்க வாய்க்கு வந்தபடி எல்லோரையும் திட்டுவான். அடங்காப் பிடாரி குணம். அவனை யாரும் கவனிப்பதே இல்லை. ஆனால் அவன் உதைபடாத நாட்களே கிடையாது.” (கை விலங்கு ப.25)**

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற பகுதி வழி சிறைச்சாலைக்கு வந்தால் வெளியே போக் கூடாது என்ற எண்ணம் அவன் மனதில் ஆழ்ந்து பதிந்துவிட்டதால் தன்னைக் கெட்டவனாகக் காட்டிக் கொள்ளும் பாத்திரமாக ஆசிரியர் படைத்துள்ளார் எனலாம்.

தாக்குதல் உணர்ச்சி

தனக்கு மறுக்கப்பட்ட வாழ்க்கையின் மீது பழிவாங்கும் செயலே சாடிச வன்முறை. இதனைக் குறித்து 'இன்னொருவர் மீது முழுமையான ஆதிக்கம் செலுத்தும் விழைவே சாடிசம் என்று கூறும் எரிக்ஃபிராம் இந்த ஆதிக்க உணர்வு பிறிதொருவர் மீது செலுத்தும் கட்டுப்பாடற்ற வெறியாக மாறும் போது அந்த பிறிதொருவர் மீது (அது ஆணாக, பெண்ணாக, குழந்தையாக, விலங்காக - எந்த உயிராகவும் இருக்கக்கூடும்) செலுத்தும் ஆதிக்கச் சக்தியின் மூலம் ஒருவன் இன்பம் பெறுகிறான் எனவும், நிறைவு பெறுகிறான் எனவும் இது பாலியல் ஆதிக்கமாகவும், பிறர் பெறும் துன்பத்தையும், குற்றத்தையும் கண்டு இன்பம் பெறும் குரூர வெளிப்பாடாகவும் மாறுகிறது எனவும் கூறுகிறார்'[1] என்று குறிப்பிடுவர்.இத்தகைய தாக்குதல் உணர்ச்சியினை கைவிலங்கு புதினத்தில் இடம்பெறும் சாமுண்டியிடம் காணமுடிகிறது.

வதைத்துறுநிலை

பிறரைத் தாக்குகின்ற மனோபாவம் ஏமாற்றம் அல்லது வெறுப்பின் உச்சநிலையில் அமைவது எனலாம். இத்தகைய மனோபாவம் கொண்டவரின் செயல்பாடுகள், 'மற்றவர்களைப் பார்த்து அவதூறாகப் பேசுதல், குத்தலாகப் பேசுதல், வெளிப்படையாகத் தகராறு செய்து கொள்ளுதல், சண்டை போடுதல், சாவாயாக என்று சபித்தல், சாகமாட்டார்களா என்று ஏங்குதல், கொலை செய்யும் எண்ணம் இம்மாதிரி பலவிதங்களில் வெளிப்படும்'[2] என்பர்.

கைவிலங்கு புதினத்தில் இடம்பெறும் சாமுண்டி பாத்திரம் தன் மனைவி செய்த தவறுக்காக மனைவியையும் அவனோடு தொடர்பில் இருந்த மற்றொரு ஆணையும் கொலை செய்து விடுகிறான்.

'உசிருக்கு உசிரான பெண்டாட்டியை எங்கையாலேயே பாளை சீவுற கத்தியாலே ஒரே சீவு.. அந்தப் பக்கம் தலை உருண்டது. ஒரு ஆள் உயரத்திற்கு ரத்தம் பீறிக்கிட்டு அடிச்சிதே... அவனையும் அப்பிடித்தான். ஒரே வீச்சு. ரெண்டு முண்டமும் ரெண்டு தலையும் தனித்தனியாகக் கிடந்தது. எனக்குக் கொஞ்சம்கூடப் பதஷ்டமோ வெறியோ இல்லை.. அவ எனக்குத் துரோகம் பண்ணா; தீத்துப்பிட்டேன்" (ஜெய.குறு.,தொ.,1.கை.வி.ப. 48)

என்ற பகுதி சாமுண்டியின் கொலையுணர்வினை வெளிக்காட்டுகிறது.

வெளிப்படையாகச் சண்டையிடல்

தங்களுடைய விருப்பம் நிறைவேறாத நிலையில் ஏமாற்றமாக வெளிப்படுகின்ற சொற்கள் பின்னர் வெளிப்படையாகச் சண்டையிடுவதாகவும் அமைகின்றன. வெளிப்படையாகச் சண்டையிடல் என்பதை மற்றவரோடு போரிடுதல், வாய்ச்சண்டையிடுதல் என இருவகையில் காணலாம்.

சாமுண்டி வெளிப்படையாகவே அங்குள்ள அதிகாரிகளுடன் சண்டையிடுவதைக் காணமுடிகிறது. "அடிபட்டுக் கண்ணும் முகமும் வீங்கிப் போய்ச் சாமுண்டியின் உதடுகளில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. உடம்பெல்லாம் வீறு வீறாய்க் காயங்கள். அவன் தன்னை சூப்பிரண்டென்டின் ரூமுக்கு அழைத்துச் செல்ல வந்த வார்டரை அடித்தான். வார்டருக்கு நெற்றியில் காயம் பட்டது. அவனை அடக்குவதற்கு வேறுவழி"(ஜெய.குறு.,தொ.,1.கை.வி.ப. 47) என்ற பகுதி சாமுண்டியின் மூர்க்க குணத்தை விளக்குகிறது.

வதைந்துறுநிலை

தாக்குதல் உணர்ச்சியின் மற்றொரு வகையாக அமைவது தன்னைத் தானே தாக்கிக் கொள்ளும் மனோபாவம். "தன் உடை, தோற்றம், முதலியவற்றில் அலட்சியம், பேச்சு, நடைஉடை பாவனைகளில் அக்கறையின்மை, படிப்பு, வேலை முதலியவற்றில் ஏற்படும் தோல்வி குறித்துத் தன்னைத் தானே ஓயாமல் கடிந்து கொள்ளும் மனோபாவம், தன்னைத் தானே தண்டித்துக் கொள்ளுவதற்காக நோய்வாய்ப்படல்"[3] ஆகியவை தன்னைத் தானே தாக்கிக் கொள்ளும் மனோபாவத்தின் வெளிப்பாடாகும்.

மேலும், "ஒருவரிடம் தான் தண்டிக்கப்பட வேண்டும் என்கிற எண்ணம் உருவாவதற்கும் பின்னணியாகக் குற்றவுணர்வு அமைகிறது. அகநிலையில் குற்றவுணர்வே தண்டிப்பதை எதிர்பார்க்கிறது. நனவிலிக்குள் பொதிந்துள்ள உணர்வுகளில் குற்றவுணர்வு ஒன்று என ஃப்ராய்ட் கூறுகிறார்"[4] என்று குறிப்பிடுவர்.

"கையிலே வெலங்கு போட்டுக்கினு ஜெயிலிலுக்குப் போனான் பாவாடைக் கிராமணி மவன் சாமுண்டின்னு பேரெடுக்கிறதா, சீ! அப்பிடி ஒரு ஜென்மமான்னு கத்தியைத் தூக்கி வீசிக்கினேன், கழுத்து மேலே... தோ பாரு..." என்று வலதுபுறம் தலையைச் சாய்த்துக் கழுத்தின் இடதுபுறத்தை நிமிர்த்திக் காண்பித்தான். பருத்த நரம்புகள் புடைத்த உறுதியான அந்தக் கழுத்தில் அரையடி நீளத்திற்குத் தழும்பு இருந்தது...

'பாவி உசிரு போகலே... கத்தி பாதியிலே நின்னுக்கிச்சு... என்ன வேகமா ரெண்டு தலையைச் சீவி எறிஞ்சேன்... எங் கழுத்தை வெட்டிக்க எனக்குப் பலம் பத்தலே... குத்துயிரும் கொலை உயிருமா துடிக்கிறேன்... மனசு என்னவோ, கழுத்திலே சிக்கிக்கிட்டு இருக்கிற கத்தியெப் புடுங்கி இன்னொரு வெட்டுப் போட்டுக்கோ தீந்துப்புடும்னுதான் சொல்லுது. நானும் என்னாலே ஆனவரைக்கும் பார்க்கறேன், கத்தியை எடுக்க வரலே" (ஜெய.குறு.,தொ.,1.கை.வி.பக்.48-49)

என்ற பகுதி சாமுண்டியின் வதைந்துறு மனநிலையை விளக்குவதாக அமைகிறது.

இத்தகைய தனிமனித சாடிசமனநிலையின் விளைவாக மனிதர்கள் தன்னையும் தன்னைச் சுற்றி உள்ளவர்களுக்கும் சிக்கல்களை உருவாக்கும் தன்மையினைக் காணமுடிகிறது.

உளப்போராட்டங்கள் *(Mental Conflicts)*

உளப்போராட்டம் என்பதனை, "ஒரே நேரத்தில் ஒன்றிக்கும் மேற்பட்ட விருப்பங்கள் தோன்றும் போது எதை ஏற்பது? எதை விடுப்பது? என்ற நிலைக்கு மனம் தள்ளப்படும். இதனடிப்படையில் முடிவெடுக்க இயலாதநிலையும், செயல்பட முடியாத சூழ்நிலையும் தோன்றும். இத்தகைய நிலையே உளப் போராட்டம் எனப்படும்"[5]

மனித மனதில் ஏதேனும் ஒன்றைப் பற்றிய போராட்டங்கள் எப்போதும் இருந்து கொண்டே இருக்கின்றன. அவற்றில் இருந்து விடுபடவேண்டுமென்று அவன் விரும்பினாலும் அவனால் அஃது இயலுவதில்லை. "ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான தேவைகள் *(Needs)*, ஆசைகள் *(Desires)*, உள்துடிப்புகள் *(Inpulses)* ஆகியன ஒன்றோடொன்று மோதுவதால் உளப்போராட்டங்கள் *(Mental Conflicts)* உண்டாகின்றன. அவை ஒவ்வொரு மனிதனிடமும் அவனுக்கு உள்ளே நடைபெறும் போராட்டங்களாகும். ஆகையால், அவற்றை உளப்போராட்டங்கள் என்றும் பொருள் கூறலாம்"[6] என்பர்.

உளப்போராட்டங்களின் வகைகள்

உளப்போராட்டங்களை உளவியலார் பொதுவாக நான்கு வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

1. **ஈர்ப்பு - ஈர்ப்பு உளப்போராட்டம்***(Approach - Approach Conflicts)*
2. **தவிர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டம்***(Avoidence - Avoidence Conflicts)*
3. **ஈர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டம்***(Approach - Avoidence Conflicts)*
4. **இரட்டை ஈர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டம்***(Double Approach - Approach Conflicts)*

மேற்கூறிய இவ்வுளப் போராட்டங்களில் ஜெயகாந்தன் கைவிலங்கு புதினத்தில் சாமுண்டியைத் தவிர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டம் கொண்ட பாத்திரமாக படைத்துள்ளார்.

தவிர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டம்

வாழ்வின் பிடிமானங்களை இழந்து வாழ்வினையே வெறுத்துத் தற்கொலை செய்துகொள்ள நினைப்பவர்களின் உளப்போராட்டங்களை இது குறிக்கிறது. 'இப்போராட்ட நிலையில் இருக்கும் மனிதன் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வழிகளில் ஏதேனும் ஒன்றை எதிர்கொண்டே ஆக வேண்டும். ஆனால், அவன் அனைத்து வழிகளையும் வெறுத்துத் தவிர்க்க நினைத்தாலும் ஒன்றை அவன் கட்டாயமாகத் தேர்ந்தெடுத்து ஆக வேண்டும்" என்று தவிர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டம் குறித்து உளவியலார் சுட்டுவர்.

சாமுண்டி தனக்குத் துரோகம் செய்த தன்னுடைய மனைவியையும், அவளுடன் இருந்தவனையும் வெட்டிக் கொன்று விடுகிறான். அதன் விளைவாக சிறைக்கு செல்கிறான். அவனுக்கு ஏழு வருடங்கள் சிறை தண்டனை கிடைக்கிறது. ஆனால் சிறைக்கு சென்று வந்த ஒருவனாக அவன் தன்னுடைய வாழ்க்கையினைத் தொடர விரும்பவில்லை. தனக்கு மரண தண்டைனை வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். அதன் விளைவாக அங்கு இருக்கும் காலவாளிகளிடம் அடிக்கடி சண்டையிடுகிறான். அதனால் அவனுடைய தண்டனைக் காலம் பதினொரு வருடங்களாக மாறிவிடுகிறது. சிறையை விடுத்து வெளியில் செல்லக் கூடாது, தான் சிறையிலேயே இறந்துபட வேண்டும் உயிர் வாழக் கூடாது என்ற மனப்போராட்டத்தின் விளைவாலேயே அவன் மற்றவர்களிடம் வன்மையாக நடக்கின்றான்.

"அடிபட்டே உசிர் போவட்டுமே... இல்லேன்னா நானா தூக்குப் போட்டுக்கிட்டுச் சாகவும் விடமாட்டேங்கிறான்.." திடீரென்று அவன் பேச்சு நின்றது. அவன் மௌனமாகத் தலை குனிந்து உட்கார்ந்திருந்தான்.-'டேய் தம்பி, உனக்கு ஒண்ணு சொல்றேன் -ஜெயிலுக்கு வந்தா அப்புறம் வெளியே போகக் கூடாது... தூ.. அது என்னா மானங்கெட்ட பொழப்பு?... அவன்தான், ஜெயிலுக் குப் போயிட்டு வந்தானே கொலைகாரன், திருடன்னுதான் சனங்க பேசும். நியாயந்தானே? போகவேகூடாது... ஜெயிலுக்கு வரக்கூடாது. வந்தா திரும்பிப் போகக்கூடாது வெளியே... நீ என்னா சொல்றே?... மானம் கெட்டது கெட்டுப் போச்சு!... அப்படியே போவட்டுமே!... திரும்பவும் போயி மானங்கெட்ட பொழப்பு நடத்தறதாவது!... சீ! ஒரு மொழம் கயித்திலே தொங்கலாம்!" (ஜெய.குறு.,தொ.,1.கை.வி.ப. 49)

என்ற பகுதி உயிர்வாழ அவன் விரும்பாவிட்டாலும் அவன் சிறைவாசம் செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவதால் இஃது அவனது தவிர்ப்பு தவிர்ப்பு மனப்போராட்டத்தினை விளக்குவதாக அமைகிறது எனலாம்.

புறத்தேற்றம் ***(Projection)***

மனதில் தோன்றுகின்ற ஒரு வகையான உணர்வை மற்றொரு வகை உணர்வாக அடுத்தவர் மேல் காட்டுவதே புறத்தெறிதல் ஆகும். 'புறத்தெறிதல் ஒருவகையான தற்காப்புச் செயல் ஆகும். இதில் ஒருவருடைய மன முரண்பாடு அடங்கியுள்ளது எனலாம். ஒருவர் தமக்கு ஏக்கத்தைத் தூண்டுகின்ற ஊக்கிகளை மற்றொருவரின் மீது ஏற்றிக் கூறி

தம்முடைய முரண்பாட்டை ஈடுசெய்து கொள்ளுகிறார்;. புறத்தெறிதல் *(Projection)* என்பதற்கு மற்றொரு பொருளாக, மற்றவர்களைக் குறை கூறல் என்பதும், கூறப்படுகிறது. உள்ளார்ந்த மன முரண்பாட்டிலிருந்து எழுகின்ற கவலை அல்லது ஏக்கத்தைப் புறத்தெறிதல் மூலம் குறைத்துக் கொள்ள முடியும்"[8] என்று உளவியலார் குறிப்பிடுகின்றார்.

கைவிலங்கு புதினத்தில் இடம்பெறும் சாமுண்டியின் செயல்பாடுகளுக்கு அவனை மனநல மருத்துவரை அழைத்து அவனுக்கு சிகிச்சை அளிக்கின்றனர். "இவனைச் சித்தசுவாதீனமுள்ளவன் தானா என்று சோதிக்கச் சொன்னார் சூப்பிரண்டெண்ட். எல்லாம் ஒழுங்காகத்தான் இருக்கிறது. அவன் வேண்டுமென்றே ஏதோ மறைமுகமான கோபத்தை யார் மீது ஏற்பட்டதையோ இப்படித் தீர்த்துக் கொள்கிறான் என்று சொல்லி விட்டார் டாக்டர்" (ஜெய.குறு.,தொ.,1.கை.வி.ப.46)

என்ற பகுதியால் புறத்தேற்றம் வழி செயல்படும் அவனது மனநிலையை அறிந்து கொள்ள முடிகிறது.

உளவியல் மனித மனங்களை அறிகின்ற அறிவியல் ஆதலால் ஜெயகாந்தனின் கைவிலங்கு குறும்புதினத்தில் சாமுண்டியிடம் உளவியல் தன்மையின் பல்வேறு கூறுகளைக் காணமுடிவதனை அறியலாகிறது.

அடிக் குறிப்புகள்

- இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும், ப.17
- சந்திரமோகன்,மு.நூ, ப.146
- மேலது.,
- தி.கு. இரவிச்சந்திரன், சிக்மணட் ஃபிராய்டு உளப்பகுப்பாய்வு அறிவியல், ப.150
- மு.அறம், குமர உள்ளம், ப.17
- வாழ்வியற் களஞ்சியம், தொகுதி5.ப.431
- மேலது.,ப.432
- தி.இரவிச்சந்திரன், சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல் ப.343

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal, Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

43. சமூக நோக்கில் பாண்மகளிர் வாழ்வியல்

ஜெ.ஆனந்தி
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), தமிழாய்வுத்துறை
திரு.ஆ.கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி, திண்டிவனம் - 604 307.
9080949806 - ananthi1172001@gmail.com
DOI 10.5281/zenodo.17217179.

Abstract:

The Sangam period was a golden age for Tamil music and drama. During that period, women had a special place. The women (Viraliyar) of the tribal Pankudi had diverse skills in art, politics, and social service. The purpose of this article is to examine the lives of the Viraliyars who had such special talents from a social perspective.

Key Words: Sangam Period - Paanar - Life style - Pankudi

முன்னுரை:

இசைத்தமிழிலும் நாடகத்தமிழிலும் சிறந்து விளங்கி பொற்காலமாக திகழ்ந்தது சங்க காலமே. அச்சங்க காலத்தில் மகளிர்க்கென்று தனித்த இடமுண்டு. தொல்குடியான பாண்குடியில் உள்ள பாண்மகளிர் (விறலியர்) கலை, அரசியல், சமூகத் தொண்டு எனப் பன்முகத் திறன்களைப் பெற்றிருந்தனர். இத்தகைய சிறப்புகளைப் பெற்ற விறலியர்களின் வாழ்க்கையை சமூக நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாணர் குடியினர்:

பாணர் என்பார் பாடுவார்' என்ற அளவில், பொருள் சொல்லக்கூடிய சுருங்கிய கலை வல்லார் அல்லர். பாடுவாரும் ஆடுவாரும் இசைக்கருவி இசைபாரும் கருவி செய்வாரும் அவர் தம் பெண்டிரும் கூடிய ஒரு பெருந்தொகுதியினரே பாணர்' என்கிறார் புலவர் **இரா.இளங்குமரன்**.

பாணர் குடியினர் இருபெரும் பிரிவினராக வெளிப்பட விளங்குகின்றனர். அவர் பெரும்பாணர், சிறுபாணர் என்பார். பெரும்பாணர் பேரியாழ்ப்பாணர்' என்றும், சிறுபாணர் சீறியாழ்ப்பாணர்' என்றும் வழங்கப்படுவதால், அவர்கள் பயன்படுத்திய யாழைக் கொண்டே அப்பெயர் பெற்றனர் எனலாம். யாழ்ப்பாணர் இருவகைரேனும் அவர்கள் பாணர் என்னும் ஒரே குடியினரே. இப்பாணர்களுள் இசைப்பாணர் என்பாரும் மண்டைப்பாணர் என்பாரும் இருந்தனர் என்பதை கீழ்கண்ட நச்சினார்க்கினியர் குறிப்பால் தெரிகிறது. (தொல். புறத். 36)

இசைப்பாணர் என்பார், வாய்ப்பாட்டு இசைப்பார்
யாழ்ப்பாணர் என்பார், நரம்புக்கருவி இசைப்பார்
மண்டைப்பாணர் என்பார், தோற்கருவி இசைப்பார்.

என்ற உரை மூலம் அறியமுடிகிறது.

பாண்மகளிரின் குடிப்பெயர்கள்:

அகவன் மகள், ஆடன் மகள், கிணை மகள், கூத்தியர், பாடினி, பாட்டி, பாணிச்சி, மதங்கி, விறலி எனப்படுவாரும் இப்பெயர்களில் திரிபாக வழங்கப்படுவாரும் பாண்குடிப் பெண்டிராவர். அழைத்துப் பாடல், ஆடல், கிணைக்கொட்டல், தாளமிடல், வேடமிட்டாடல், மெய்ப்பாடு தோன்ற நடம்பிடித்தல் முதலிய செயல் வகைகளால் இவர்களுக்கு பலப்பெயர்கள் இருப்பினும் ஒரே குடியினரே. 'பாணன் என்னும் ஆண்பாலொடு பெரிதும் பொருந்தும் பெண்பாற்பெயர் பாடினி' என்பதே. பாட்டியர் என்பதும் அரிதாக வழங்குகின்றது. விறலி என்பதும் பாணரொடு இணைந்து வரும் பெயரே. கூத்தரொடு இணைந்து வருவதும் உண்டு. அக்கூத்தர் பாணரே" என்கிறார் இரா.இளங்குமரன்.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பாணர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றதையே சங்கச் சான்றோர் சாற்றுகின்றனர். தொல்பழங்கலைத் துறைகள் பெரும்பாலும் உருமாறியும் மறைந்தும் போய்விட்டன. இந்நாளிலும் பாவைக்கூத்து, கழைக்கூத்து,குடமாடல்,வளைய ஆட்டம் *(Circus),* நாடகம் என குழுவாக செல்லும் வழக்கம் இருப்பதை கண்கூடாக காண முடிகிறது.

பாணர் பெற்ற பரிசில்:

வள்ளல் தன்மையும் பேருள்ளமும் உடையவர்கள் வழியே பாணர்கள் பரிசில் மிகப் பெற்ற செய்திகள் உள்ளன. புரவலர் உள்ளம் எத்தகையது என்பதை அறிந்துள்ள நாம் அவ்வுள்ளத்தவர் அருளிய கொடைச் சிறப்பைக் குறிப்பால் அறியப்படுகிறது. எனினும் சங்கப் புலவர்கள் சொற்களாலே பாணர் பாடினியர் பெற்ற பரிசுகளை அறிகையில், பாணர் பெற்ற பரிசுகளைப் பற்றிக் குறிக்கும் இடங்களில் பலவும் அவர்கள் தாமரைப்பூ' பெற்றதையே குறிக்கப்படுகின்றன. பாடினியர் பெற்றதாயின் பெரிதும் மாலை' என்றே குறிக்கப்படுகின்றன.

"வாடா மாலை பாடினி யணிய"

(புறம், *364:1)*

இப்புறப்பாடலடியைச் சான்றாகக் கூறலாம். பாணன் தனிப்பூவும், பாடினியர் மாலையையும் பரிசிலாகப் பெறுதல் வழக்கம் என்பதை பொதுநோக்கில் அறியப்படுகிறது.

அகத்துறையில் பாணர் :

அகத்துறையில் பாணர் தொண்டு தலைவனையும் தலைவியையும் ஊடல் நீக்கிக் கூடல் வகுக்கும் வாயில்களாக சமூகப்பணியில் இருந்தனர் என்பது சிறப்பிற்குரியதே!

தலைவனையும் தலைவியும் இடைநின்று கூட்டும் தூது வாயில்' எனப்படும். அவ்வாயிலாவார் பன்னிருவரைக் குறிப்பிடுவார் தொல்காப்பியர்.

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"

(தொ.பொ. *19)*

அகத்துறையில் ஊடல் தீர்க்கும் வாயிலானப் பாணர் பிற்காலத்தில் 'விறலிவிடுதூது' போன்ற சிற்றிலக்கியங்கள் தோன்ற காரணமாக விளங்கினர்.

தூது சென்ற விறலியர்:

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தலைவியை காணாது நிற்கும் காலத்தில் தலைவனிடம் தூது செல்லும் வாயில்களாகப் பாணர்கள் இருந்துள்ளனர். பரத்தையிற் பிரிந்த தலைவன் பாணரை தூது அனுப்புவதும், பாசறையில் தங்கிருக்கும் தலைவனிடம் சென்று அவனை விரைந்து வினை முடித்து திரும்புமாறு தலைவி பாணரை தூது அனுப்புவதும், மேலும் (தொல்.*115)* தொல்காப்பியர் விதிப்படி விறலியும் தூது சென்றதை அறிய முடிகிறது.

பாணர்கள் தூது போதல் மட்டுமின்றிப் செல்வக்குடியில் பிறந்த இளைஞர்களைப் பரத்தையிடம் அழைத்துச் சென்று இன்பம் காட்டுவதிலும் ஈடுபட்டுள்ளனர். இதனால் குடும்பப் பெண்கள் பாணர்களை விரும்பாமல் வெறுப்பதாக ஒதுக்கிய வருணனைகள் கூடச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பாண் சமூகம்:

பாண் சமூகத்தார்கள் ஐவகை நிலங்களையும் கடந்து வள்ளல்களை நாடி சென்றுள்ளனர். இதற்கு சான்றாக,

"ஆனினங் கலித்த அதர்பல கடந்து
மானினங் கலித்த மலையி னொழிய
மீனினங் கலித்த துறைபல நீந்தி
உள்ளிவந்த வள்ளுயிர்ச் சீறியாழ்
சிதாஅர் உக்கை முதாஅரிப் பாண" **(புறம்** *138:1-5)*

பாணர்களின் ஊர் சுற்றும் வழிப்பயணம் பல தேசங்களைக் கடந்து சென்றதை ஆற்றுப்படை நூல்கள் மட்டுமே கூறவில்லை. அக, புற இலக்கியங்கள் பலவும் கூறுகின்றன. பாணர்கள் பாடுவதற்காகப் பயணம் செய்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

"பாணர்கள் பாடுவதற்காகப் பயணம் செய்தார்கள். இவர்கள் வள்ளல்களைப் பற்றிப் போற்றிப் பாடல்கள்' அல்லது புகழ்மாலைப் பாடல்கள்' *(encomiastic poems)* பாடிப் பரிசில் பெற்றார்கள்" என்று பக்தவத்சல பாரதி தம் **"பாணர் இனவரைவியல்"** நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பாணர்கள் பிற்கால ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்று கடவுள்களைப் பாடவில்லை. கடவுள்களைப் பாடியதாக குறிப்புகள் கிடைக்கவில்லை. அவர்கள் மன்னர்களையும் வள்ளல்களையும் கிழார்களையுமே பாடி பரிசுப் பெற்றனர் போன்ற செய்திகள் அறிய முடிகிறது. மேலும் புலவர்களைப் போன்று தனியாக செயல்படவில்லை. பாணர்கள் எப்போதுமே தம் சுற்றத்தாருடன் குழுவாகச் சென்றார்கள் என அறிய முடிகிறது.

பாண் சமூகத்தினர் மூவேந்தர்களை காட்டிலும் குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள், சிற்றூர்த் தலைவர்கள், ஊர் கீழார்களையுமே மிகுதியாக நாடியும் பாடியும் சிறப்பு பெற்றுள்ளனர். பாண் சமுகத்தார் சங்க காலத்தில் திணைக் குடிகளின் மரபுகளுக்கேற்ப வெவ்வேறு விதமான கலைகளை மக்களுக்குக் கொண்டுச் சேர்த்து மகிழ்வித்தார்கள். இவர்கள் மற்ற திணைக் குடியினருடன் பல்வேறு நிலைகளில் உறவாடி வாழ்ந்துள்ளதை அறிய முடிகிறது. பாணர்கள் இயல்பாகவே கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள். சிவன், திருமால் உள்ளிட்ட மற்ற திணைத் தெய்வங்கள் மட்டுமின்றித் தம் இசைக் கருவிகளையும் வழிபடும் இயல்புடையவர்கள். இவ்வாறு பாண் சமூகத்தினர் கடவுளை வழிப்பட்டாலும் கடவுளை வாழ்த்தி பாடியதாக சங்க இலக்கியங்களில் எந்த ஒரு குறிப்புகளும் காணப்படவில்லை.

பாண் மரபின் பெயர்கள்:

சங்க இலக்கியத்தில் பாண் மரப்பினரைக் குறிப்பதற்கு பல்வேறு பெயர்கள் இருந்தன. "பக்தவத்சல பாரதி" குறிப்பிடும் பாண் மரபு பெயர்கள்:

அகவர், அகவன் மகள், அகவலன், அகவுநர், அம்பணவர், ஆடன் மகள், ஆடற்கூத்தியர், ஆடுநர், ஆடுமகள், இயவர், இயவன், இன்னிசைக்காரர், ஓவர், கடம்பன், கண்ணுளர், கண்ணுளார், கலப்பையர், கிணைஞன், கிணைமகள், கிணைமகன், கிணைவர், கிணைவள், கிணைவன்,குயிலுவர், கூத்தர், கூத்தன், கோடியர், சாந்திக்கூத்தர், சூதர், செயிரியர், சென்னி, துடியன், பண்டர், பண்ணவன், பரிசிலர், பறையன், பாடல் மகடூஉ, பாடினி, பாட்டியர், பாடுமகள், பாணன், பாணிச்சி, பாணிச்சியர், பாண்மகள், பொருநர், மதங்கர், மதங்கி, மாகதர், முழவர், முழவன், யாழோர், வந்திகர், வயிரியர், வாயிலோர், விறலி, வேதாளிகர் ஆகியவையாகும். இப்பெயர்கள் மூலம் பாண் சமூகத்தின் பல்வேறுப் பண்புகளைக் காண முடிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

விறலியர்:

இவர்கள் பாண்மகள்' ஆவார்கள். பாண் சமூகத்தில் பெண்டிர்கள் பாடினி, விறலி, பாட்டி, மதங்கி, பாடல் மகடுஉ, பாண்மகள் என பலவாறு அழைக்கப்பெற்றனர். **"செல்ல மோதில் பாண்மகள்" (பதிற்.** *60)* என்பது பொதுவாக விறலியைக் குறிப்பதாகும். விறலியர் ஆடுதல், பாடுதல், கிணை கொட்டுதல், தாளமிடல், வேடமிட்டு ஆடுதல், மெய்ப்பாடு தோன்ற நடித்தல் ஆகியவற்றில் கைதேர்ந்தவர்கள். இவற்றின் போது முழவு, யாழ், தூம்பு, எல்லரி, ஆகுளி, பதலை முதலான அனைத்து இசைக்கருவிகளையும் இசைக்கவல்ல ஆற்றல் படைத்தவர்கள் என்பதை வன்பரணர் பாடிய புறப்பாடல் (புறம்.*152)* மூலம் அறியலாம்.

"கூத்தர், பொருநர் ஆகியோரின் பெண்பால் மக்களே விறலியர் என்றும் விறலியார் போன்று பாடினி, பாட்டியார், பாடும் மகள், ஆடு மகள், கிணை மகள், பாட்டி, பாணிச்சி எனும் பெயர்களிலும் பெண்பாற் கலைஞர்கள்" காணப்பட்டனர் என்று **பக்தவச்சல பாரதி** தம் பாணர் இனவரைவியல் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சங்கம் மருவிய காலம் தொடங்கி குறுநில மன்னர்களையும் வள்ளல்களையும் நம்பிருந்த நிலை மாறியது நிலக்கிழார்களை மையமிட்ட கிராம சமூகம் என்னும் வடிவமும் வலுப்பெற்ற நிலையில் இருந்ததால் மன்னர்களை மட்டும் சார்ந்து வாழ்ந்த பாண் சமூகத்தினர் கிராமங்களின் கிழார்களை சார்ந்து வாழ முற்பட்டனர். இவர்களை நவீன சமூக அறிவியலிலும் இனவரைவியல் துறைகளிலும் **"ஆயர் வாழ்வு சாராத நாடோடிகள்"** என்று வரையறையை "பாணர் இனவரைவியல்" நூல் குறிப்பிடுகிறது.

இக்கருத்தையே, "விறலியர் என்பார் பெண்பால் கூத்தரும், பாடகரும் ஆவர். இச்சொல் கூத்தர், பொருநர் என்பனவற்றியின் பெண்பாற் சொல்லாகவே எப்போதும் விளக்கப்பட்டுள்ளது. இவ்விறலியர் கூத்தர்கள், புலவர்களின் மனைவியர் என்பதில் ஐயமில்லை" என்று **க.கைலாசபதி** அவர்தம் நூலில் (தமிழ் வீரநிலைக்கவிதை) குறிப்பிட்டுள்ளார்.

"தலைவனது புதுப்புதுப் பரத்தை உறவிற்குத் துணையாக ஒரு விறலி இருந்தாள்" என்று **வ.சுப.மாணிக்கம்** (தமிழ்க் காதல்) நூலில் குறிபிட்டுள்ளார். இவ்வாறே விறலியர் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கிருந்ததை அறிய முடிகிறது.

முடிவுரை:

சமூக நோக்கில் ஆராய்ந்தோமேனால் விறலியர் அகம், புறம் என இரு துறைகளிலும் சிறப்பு பெற்று விளங்கினர். விறலியர்கள் கலைப்பணி, சமூகப் பணி என பங்காற்றியுள்ளனர். கலைப் பணியில் ஆடல், பாடல், இசைத்தல், உரை நிகழ்த்துதல் என்றும் சமூகப் பணியில் போர்க்களத்தில் வீரர்களுக்கு எழுச்சி ஊட்டுதல், போரில் காயமுற்ற வீரர்களுக்கு உதவி செய்தல், தலைவன் தலைவிக்கு வாயில்களாக உதவி செய்தல் ஆகியவனவாகவும் அமைகின்றன. இதுவே கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

துணை நூற்பட்டியல்:

1. **இரா.இளங்குமரன்** - பாணர் *(1987),* மாணிக்கவாசகர் பதிப்பகம் சிதம்பரம்,கற்பகம் அச்சகம், சென்னை - *600 002.*
2. **பக்தவச்சல பாரதி** - பாணர் இனவரைவியல் *(2012),* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - *600 133.*
3. **முனைவர். ந. அறிவரசன்** - பெண்மொழி புனைவும் நீக்கமும் *(2017),* மணி ஆப்செட், சென்னை - *600 077.*
4. **எம். எஸ். ரவிச்சந்திரன்** - சங்க இலக்கியம் ஒர் அறிமுகம், கல்வி அணி பதிப்பகம் சென்னை - *603 033.*
5. **முனைவர்.பூ.வே பாலசுப்பிரமணியன்** - சங்க இலக்கியத்தில் கலையும் கலையும் கோட்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.லிட்) சென்னை - *600 098)*

SPL.EDITION : VI VOLUME : I
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

44. தமிழ் இலக்கியங்களில் பெண்களின் நிலைப்பாடு

முனைவர் த. பிரபாகரன்,
தமிழ்த்துறைத் தலைவர்/நெறியாளர்,
தூய பீட்டர் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,ஆவடி, சென்னை - 54
99437 66642 - மின்னஞ்சல்: dr.prabakarant.tamil@spiher.ac.in
DOI 10.5281/zenodo.17217199.

Abstract

A woman is the key to a community and the foundation of a valuable community. Tamil literature has recorded this woman in various stages. Since the time of the creation of the human race, men and women have lived together. From the Sangam period to the present day, men have lived with women in a secondary position. Even today, just as men and women are different, many crimes are committed in many places. Such crimes must be eliminated. The status of women must be elevated. The article will be a study on the status of women in Tamil literature over time and the need for the status of women to be elevated.

Keywords : Woman, feminism, women in Sangam literature, women's progress, the nature of women, femininity.

முன்னுரை

இயற்கை அமைப்பில் மனிதன் ஒரு குமூக விலங்கு. மனிதன் தனித்து வாழ முடியாது. குமுகத்தில் பிறரோடு இணைந்தே வாழ பழகியவன். அத்தகைய குமுகாயத்ததில் வாழ்கின்ற ஆண், பெண் இருவருக்கும் நிகரான உரிமை உண்டு. ஆனால், சங்க காலம் முதல் இக்காலம் வரை அது நிகரான ஒன்றாக இல்லை என்பதையே தமிழ் இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அன்று முதல் இன்றுவரை பெண்களுக்கான உரிமை மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் இருந்துவருகிறது. இவ்வாறு மறைக்கப்பட்டதையும் மறுக்கபட்டதையும் தமிழ் இலக்கியங்களில் பெண்களின் நிலைப்பாடு என்ற கோணத்தில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பெண்ணியம்

பெண்ணியம் என்பது உலகளாவியது. பெண் என்பவள் வாழ்வில் ஆடவர்க்கு மகளாய், உடன் பிறந்தவளாய், மனைவியாய், தோழியாய், தாயாய் இணைந்து வாழ்பவள். மனித சமூகத்தைத் தன் கருவில் ஏற்று சுமந்து தன் குருதியால் பத்து மாதம் வளர்த்தெடுப்பவள். பெண்ணியம் என்றாலே ஆண்களுக்கு நிகராக இருப்பது மட்டுமின்றி காலங்காலமாக அடிமைப்பட்டு வதைபட்டு வாழும் பெண்களை அந்நிலையில் இருந்து மீட்டெடுத்து கல்வியும், சுதந்திரமும், சமத்துவமும் பெற செய்து அறியாமையை அகற்றுவது பெண்ணியத்தின் குறிக்கோளாகும்.

பெண்ணியம் என்ற சொல் பெண் நிலைவாதம், பெண்ணுரிமை ஏற்பு, பெண்ணுரிமை, பெண் விடுதலை போன்ற பொருட்களை உள்ளடக்கியதாக விளங்குகிறது. அனைத்து அடிமைத்தனத்திலிருந்து சமூகத்தை மீட்க பெண் விடுதலை உதவுகிறது. 18-ஆம் நூற்றாண்டில் பெண்ணியம் குறித்துக் கூர்மையான சிந்தனையை முன்வைக்கப்பட்டாலும் 19-ஆம் நூற்றாண்டில்தான் தனித்தன்மை பெற்ற பெண்ணியம் என்னும் துறை வலுப்பெற்றது.

பெண்மை என்ற தமிழ்ச்சொல் பெண்ணியம்' என்ற சொல்லின் பொருளிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது. பண்பாடு' மரபு' இவற்றின் அடிப்படையில் பேணப் பட்டு வந்த பெண்ணின் இலக்கணங்களைக் குறிக்கவே பெண்மை' என்ற சொல் பயன்படுத்தப்பட்டு

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வருகிறது. ஆனால், பெண்ணியம் என்ற சொல்லோ பெண்ணின் உரிமைகளையும், சிக்கல்களையும் முன்னிலைப்படுத்தும் அமைப்பின் பெயராக விளங்குகிற

பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்

பெண்ணியம் என்ற சொல் *Fiminism* என்று ஆங்கிலத்தில் கூறுவர். ஃபெமினா *(Femina)* என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். ஃபெமினா ***Femina*** என்ற சொல்லுக்கு பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள *(Have the Qualities of Female)* என்பதன் பொருள். இச்சொல் முதன் முதலில் பெண்ணின் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிட வழங்கப்பட்டது. பின்னர் அதன் அடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்த பயன்படுத்தப்பட்டது. *1890* ஆம் ஆண்டு ***Womanism*** என்ற சொல்லினிடத்தை பெமினிசம் *(Feminism)* என்ற சொல் பெற்றது. *1894* ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் எச்சொல் முதன் முதலில் எடுத்தாளப்பட்டது.

பெண்ணியம் தோன்ற காரணம்

பெண்களுக்கு அறிவு, அழகு, ஆற்றல், அன்பு, கருணை, பொறுமை என எல்லாப் பண்புகளும் அமைந்திருந்தும் அவளுடைய சிந்தனையின் வெளிப்பாடான சொல், செயலுக்கு ஆணினம் மதிக்கப்படுவதில்லை, மதிப்பளிக்கவில்லை அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படி ஒதுக்கப்பட்டு, அடிமைப்பட்டு இதுதான் வாழ்க்கை இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்ந்த அடிமைச் சிந்தனை உயிர்பெற்று மீட்படைவதை பெண்ணியம் என்ற சொல்லால் அழைக்கின்றனர்.

மக்கள் தொகையில் சரிபாதியாகத் திகழும் பெண்ணினம் காலந்தோறும் கண்டுவந்த அவலங்கள் மிகுதி. பிறக்கும்போதே நெல் விதைக்கும் கள்ளிப்பாலுக்கும் இரையான பெண் குழந்தைகள் பல. பிறரைச் சார்ந்து வாழும் தன்மையில் நாம் தள்ளப்பட்டு இருக்கிறோம் என்பதை உணர்ந்து போதுதான் பெண்ணியம்' தோன்றியது இதன் தோற்றம் மேலை நாடுகளில் உதயம் ஆயிற்று.

சங்க இலக்கியத்தில் பெண்

குமுகாயத்தைப் பதிவு செய்வது படைப்புகளாயினும், படைப்பின் வழி குமுகாய மாற்றத்தை ஏற்படுத்துவதில் தமிழ் இலக்கியங்கள் முனைப்புடன் செயல்பட்டுள்ளன. தமிழ் இலக்கியத்திற்கு பொற்காலம் சங்க இலக்கிய காலம் என்று கூறலாம். காரணம், தமிழர்கள் அறத்தோடு வாழ்ந்த வரலாற்றுப் பதிவினை அவை செம்மையாக்கி உள்ளன. மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்க்கையினை வரைமுறைப்படுத்தி வாழ்ந்தனர். சங்க இலக்கிய காலத்தில் பெண்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றினர்.

ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே; .. (புறநானூறு *- 312)*

என்ற பொன்முடியார் பாடல், பெண் என்பவள் குழந்தையை ஈன்று புறந்தருதலை மட்டுமே கடமையாக இருந்துள்ளதையும் அவளுக்கு இது தலையாய கடமையாக இருந்துள்ளதையும் காட்டுகிறது.

நோய் அலைக் கலங்கிய மதன் அழி பொழுதில்
காம ம் செப்பல் ஆண்மகற்கு அமையும்;
யானே, பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கி... (நற்றிணை *- 94)*

பெண் படும் துயரைக் காமநோய் கலக்கித் தாங்கும் வலிமை இழந்த காலத்தில் தன் காம உணர்வை வெளிப்படையாக எடுத்துரைத்தல் ஆண்மகனுக்கு முடியும். நானோ பெண்மைத் தன்மைத் தடுப்பதால் நுட்பமாகப் பொறுத்துக்கொண்டிருக்கிறேன் என்று

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

காமநோயால் வருந்தும் தலைவி, தன் தோழியிடம் கூறும் சொற்களாக நற்றிணைப் பாடல் கூறுகிறது. இதில், தலைவியும் பெண் தோழியும் பெண் இருவரும் தலைவி படும் துயரை தோழியிடமும் தோழி கூறும்மொழிகள் தலைவியிடமே நிகழ்ந்துள்ளன. பெண்படும் துயர் மட்டுமே அதிகமாக க் காணப்படுகிறது.

யானே ஈண்டையேனே, என் நலனே
ஆனா நோயொடு கானலஃதே
துறைவன் தம் ஊரானே,
மறை அலர் ஆகி மன்றத்தஃதே. (**குறுந்தொகை** *-97)*

நான் இங்குத் தனிமையில் உள்ளேன், என் பெண்மை நலம் நீங்காத காதல் நோயுடன் கடற்கரைச் சோலையில் உள்ளது. தலைவன் தன்னுடைய ஊரில் இருக்கின்றான். களவுச் செய்தியை பலரும் அறிந்து விட்டனர். அது பழிமொழி ஆகி ஊர் மன்றத்தில் பரவியுள்ளது. தலைவிக்கு மட்டுமே இதில் துயர் இருப்பதாகப் பாடல் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியத்தில் பெண்கள் மட்டுமே துயர்பல பெற்றிருப்பதைப் பலபாடல்கள் காட்டுகின்றன.

இலக்கண நூல்களில் பெண்கள்

தமிழர் தம் வாழ்வில் சிறப்பை நிலை நிறுத்தும் வகையில் எழுந்தவை, தொல்காப்பிய பொருளியல், நாற்கரவிச நம்பியக பொருள் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை ஆகும். இவை, தமிழர்களின் அகம் மற்றும் புற வாழ்க்கை பற்றி மிகச் சிறப்பாகப் பேசுகின்றன. இல்வாழ்க்கையில் கூடி வாழும் இருவரையும் முதுமை நெருங்கும்போது அறம் புரியும் நல்லியல்பை இல்லறத்தின் மணிமொழியாகக் கொள்வர். இதனையே,

காமம் சான்ற கடை கோட்ஸ் காலை
ஏமன்ச் சான்ற மக்களோடு துவண்டி
அறம்புரி சுற்றமோடு கிழவனும் கிழத்தையும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

என தொல்காப்பியரும்

கிழவும் மகிழ்ச்சி கிளத்தி மகிழ்ச்சி
வாங்கி செவிலி மகிழ்ச்சி என்று
இங்கு நான்கு வகைத்து இல்வாழ்க்கையே

என்று நாற்கவிராச நம்பியும் விளக்கம் தந்துள்ளன. அறம் புரிதல் நலம் இல்லறத்தைச் சிறப்பாக்கும் என்று விளக்குகிறது.

பெண்களின் இயல்பு

சங்க காலம் முதல் இன்றுவரை பெண்கள் என்றாலே மென்மையானவர்கள் என்று சிலர் எகின்றனர். இதனைத் தொல்காப்பிய நூற்பா மூலமே விளக்கம் தர முயலுகின்றனர்.

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும்பெண்பாற்கு உரிய என்ப (**தொல். பொருள்** *- 96)*

இதில் பெண்களுக்கு அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற குணநலன்கள் இருக்க வேண்டும் என்பதனை முன்வைக்கின்றனர். இதில் எக்காலத்திற்கும் பொருந்தும் என்றும் நம்புகின்றனர். ஆனால், இவை மாற்றமடைந்து காலம்முன்னேறிவிட்டது.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல். பொருள். *150)*

என்ற நூற்பாவில் கற்பு, காமம், நல்லொழுக்கம், மென்மை, பொறுமை, விருந்து, வரவேற்றுப்பேணுதல், சுற்றத்தினரை ஓம்புதல் இவை தவிர பிறவும் திருமணமான பெண்ணுக்குரிய குணநலன்களாகச் சொல்லப்படுகின்றன. பிற பண்புகள் என்பதற்கு நச்சினார்கினியர் சமைத்தல், கணவனின் பிற மனைவியரிடம் அன்பு பாராட்டி அவர்களை மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுதல், கணவனின் காமக்கிழத்தியருக்கு நல்லது செய்து அவர்களால் மதிப்படுபவளாக இருப்பது மனைவியின் பண்பாகும் என்றுரைக்கிறார்.

மனைவியிடத்துச் சமூகம் எதிர்நோக்கும் பண்புகளை அறிவதுடன் ஆண்களுக்கு ஒழுக்கவரையறை வற்புறுத்தப்படுவதில்லை என்பதை நன்கு உணரலாம். மற்றொரு நூற்பாவில் தலைவன் பரத்தையரிடம் சென்று வரும்போது

அவன் சோர்வு காத்தல் கடன் (தொல். பொருள். *171)*

என்பதால் அவனது புறவொழுக்கத்தினைப் பொருட்படுத்தாமல் தன்னிடத்தில் அவன் வரும்போது அவனைக் காப்பது தலைவையின் கடமை என எடுத்துரைக்கப்படுகின்றது. மேலும், அவன் காதல் கொண்ட பரத்தையைத் தலைவி தாய்போல் குற்றம் பொறுத்து அன்பாகப் பேசி, அவளைத் தழுவிக் கொள்ளுதல் வேண்டும் என்பதை *171,172* தொல்காப்பிய நூற்பாக்கள் உணர்த்துகின்றன. அப்படி இருத்தலே அறம் என்று உரையாசிரியர்கள் விளக்குகின்றனர். தற்காலத்தில் அவ்வாறு இருப்பது ஏற்புடையதன்று.

சங்கம் மருவிய கால இலக்கியத்தில் பெண்

புறமுதுகிட்டோடி மாய்ந்துப் போகும் கோழை மகனைப் பெறுவதை விட இறப்பதே மேல் என அக்கால பெண்டிர் நினைத்தனர். போருக்காகத் தன்னுடைய ஒரே மகனையும், தியாகம் செய்யத் துணியும் வீரமிக்க பெண்கள் அக்காலத்தில் வாழ்ந்தனர். இதனையே வள்ளுவரும்,

மங்களம் என்ப மனைமாட்சி மற்றஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (திருக்குறள் *- 60)*

என்று குறிப்பிட்டுள்ளார்.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (திருக்குறள் *- 51)*

எனவும்,

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின் (திருக்குறள் *- 54)*

என்றும் வள்ளுவர் கூறுவதிலிருந்து குடும்பம், கற்பு இரண்டும் பெண்ணிற்கு மிக முக்கியம் என வலியுறுத்தப்படுவதை அறியமுடிகிறது.

காப்பியங்களில் பெண்

காப்பியங்களில் அறவழி நின்று வாழ்க்கை நடத்துதல், இல்லறத்தைப் பேணிக் காத்தல், கணவனைத் தெய்வமாக வழிபடல் ஆகின பெண்ணின் கடமைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. குடும்ப வளத்தைக் காக்கக் கூடிய கற்புடைய பெண்கள்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தெய்வமாகக் கருதப்பட்டனர். சிலப்பதிகாரத்தில் கண்ணகியும், மணிமேகலையில் மணிமேகலையும் அவ்வாறு தெய்வமாகப் போற்றி இன்றளவும் வணங்கிவருகின்றனர்.

பக்தி இலக்கிய காலத்தில் பெண்

இடைக்காலத்தில் பக்தி இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றின. சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலான சான்றோர்கள் எண்ணற்ற பக்திப் பாடல்களை இயற்றினர். இதில் பக்தி இலக்கிய காலத்தில் சமயங்களின் எழுச்சியையும், சாதிக் கட்டுக்களையும் மீறி பல பெண்கள் கோயில் வழிபாடு, விருந்தோம்பல், சமூகப் பணிகள் போன்றவற்றில் கலந்து கொண்டுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது. நாயன்மார்களின் ஆண்களுக்கு இணையாகத் திலகவதியார், இசைஞானியார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசி போன்ற பெண்களும் சிறந்து விளங்கியிருந்தனர். காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் பக்திசுவை நனி சொட்டச் சொட்ட அமைந்தவை எனலாம். எனவே, பக்திப் பாடல்களைப் பாடுவதிலும் ஆணுக்கு நிகராகப் பெண்கள் இருந்துள்ளனர் என நாம் இதனைவழி பெண்களின் படைப்பாற்றலை அறிந்து கொள்ளமுடிகிறது.

தற்காலத்தில் பெண்

மென்மை, இறக்கம், அன்பு, அனுசரிப்பு, சகிப்புத்தன்மை போன்றவற்றை பண்பாகக் கொண்டு திகழ்பவள் பெண். பெண்கள் காலந்தோறும் தாய்மை கொண்டே நிகழ்கின்றது எனவேதான் கவிமணி அவர்கள்,

மங்கையராக பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா

என்று குறிப்பிடுகிறார். மேலும், ரஷ்ய எழுத்தாளரான மார்க்சிம் கார்க்கி தாய்களைப் பற்றி முடிவில்லாமல் பேசலாம்' என்று குறிப்பிடுவது பெண்மையின் உயர்வை அறிய முடிகிறது.

காலம் மாற மாற கருத்துகளும் மதிப்பீடுகளும் மாறும். காலம் மாற்றத்தால் பெண்ணின் சமூக உணர்வும் மாறி வருகிறது. சங்ககால பெண் பரத்தமை கொடுமையை, பெறுவது அம்மா இக்குடி பிறத்தலே' என்ற குறுந்தொகை பாடல் வழி விளக்குகின்றது. இது பெண்ணினத்தின் பிறப்பது துன்பம் ஆனது என்ற கூற்றை விளக்குகிறது.

இன்றைய சூழலில் விளிம்பு நிலையில் பார்க்கப்பட்ட மக்கள் மையம் நோக்கி நகர ஆரம்பிக்கிறார்கள். பெண்ணுரிமை இயக்கத்தினர் இதனையே கூறுகின்றனர். வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் குடும்பம் என்ற அமைப்பு உருவான காலகட்டத்திலிருந்து சிறிது சிறிதாகப் பெண் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டதை அறிய முடிகிறது. எனவே, ஒடுக்கப்பட்டவர்களின் வரிசையில் பெண்ணும் சேர்த்து இன்றைய பெண்ணின் நிலையை ஆராய்வோமானால் மிகவும் கொடுமையானதாக இருக்கிறது. பெண் கல்வி என வர்ணித்தாலும் பணியிடங்களில் பெண் என்பதற்காகவே அவள் பல சிக்கலை சந்திக்க வேண்டியிருக்கிறது. கல்வியறிவற்ற கிராமப்புற பெண்களின் நிலை இன்னும் கவலைக்கிடமானது. பெண் என்பதற்காகவே அவள் ஊதியம் குறைத்துப் பெற வேண்டிய சூழல் இருக்கிறது. இது அனைத்து இடங்களுக்கும் பொருத்தமான ஒன்றாகும். இந்த நிலை மாறிட வேண்டும். அதற்கு அனைவரும் பெண்களுக்கான உரிமையை சரிநிகர் வழங்கிட முழங்கிடவேண்டும்.

நிறைவாக…

பெண்கள்தான் குமுகாயத்தின் அடிப்படை அங்கம். அவர்களைப் பாதுகாப்பது குமுகாயத்தின் கடமை. பெண்கள் குறித்து சங்க காலம் முதல் இக் காலம் வரை எத்தகைய ஆளுமைப் பெற்றிருந்தாலும் நாம் உயர்வாக பேசினாலும் உயர்ந்த பதவிகளில்

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வகித்தாலும் அவர்களை இன்னும் பல இடங்களில் இரண்டாம் நிலை பச்சமாகவே வைத்திருக்கிறார்கள் இந்நிலை மாறிட இக்கட்டுரை வழிவகுக்கும் என்று எண்ணப்படுகிறது.

பார்வை நூல்கள்

1. தொல்காப்பியம், புலியூர்கேசிகன் உரை, பாரி நிலையம், சென்னை.
2. திருக்குறள், புலவர் குழந்தை உரை,
3. குறுந்தொகை, சங்க இலக்கியம் முழுவதும், ச.வே. சுப்பிரமணியன்
4. நற்றிணை சங்க இலக்கியம் முழுவதும், ச.வே. சுப்பிரமணியன்
5. சிலப்பதிகாரம், புலியூர்கேசிகன் உரை, பாரி நிலையம், சென்னை.
6. மணிமேகலை, புலியூர்கேசிகன் உரை, பாரி நிலையம், சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9